தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் ; 358.

# அரிச்சந்திரன் அம்மானை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

## சரசுவதி மகால் நூலகம்

**தஞ்சாவூர்.**

1995 ] [ விலை ரூ. **75—00**

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண்: 358.

# அரிச்சந்திரன் அம்மானை

பதிப்பாசிரியர்

**ய. மணிகண்டன்,** எம். ஏ., எம். ஃபில்.,
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

## சரசுவதி மகால் நூலகம்

**தஞ்சாவூர்.**

1995 ] [ விலை ரூ. 75—00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | அரிச்சந்திரன் அம்மானை |
| பதிப்பாசிரியர் | : | ய. மணிகண்டன். எம். ஏ., எம். ஃபில்., |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம். |
| வெளியீட்டு எண் | : | 358 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | ஏப்ரல், 1995 |
| தாள் | : | 10. 9 கி. கி. சேஷசாயி |
| நூல் அளவு | : | 25 × 19 செ. மீ. |
| பக்கங்கள் | : | 482 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் அச்சகம் |
| புத்தகக்கட்டு | : | முழு காலிகோ |
| பொருள் | : | அம்மானை இலக்கியம் |
| விலை | : | ரூ. 75—00 |

# வெளியீட்டாளர் முகவுரை

மொழிகளின் வளர்ச்சிக்கும் கலைகளின் வளர்ச்சிக்கும் தொடர்ந்து அரும் பணியாற்றித் துலங்கி வருகின்ற ஒப்பற்ற நிறுவனமான மாமன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் பலமொழிகளிலும் வெளியிட்டு வருகின்ற நூல்கள், கற்றோராலும் மற்றோராலும் போற்றிக் கொண்டாடப்பெறும் விழுமிய செல்வங்களாகும்.

தமிழ், சமற்கிருதம், மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த ஓலைச்சுவடிகளிலும் காகிதச்சுவடிகளிலும் இடம்பெற்றுள்ள பனுவல்கள் இந் நூலகத்தால் பாங்குறப் பதிப்பிக்கப் பெற்றுத் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வரிய பணியின் தொடர்ச்சியாக இப்பொழுது இங்கு "அரிச்சந்திரன் அம்மானை" எனுந் தலைப்பில் உள்ள தமிழ் ஓலைச்சுவடி அழகிய முறையில் நூலாகப் பதிப்பிக்கப் பெற்று வெளிவருகின்றது.

சத்திய நெறியில் மக்கள் வாழ வலியுறுத்தும் பாத்திரமான அரிச்சந் திரனைக் குறித்த இலக்கியங்கள் இந்திய மொழிகள் பலவற்றிலும் எழுந்துள் ளன. தமிழிலும் அரிச்சந்திரன் கதை கூறும் இலக்கியங்கள் பல எழுந்துள்ளன. அவற்றில் சிறந்தனவான அரிச்சந்திர வெண்பா, அரிச்சந்திர புராணம் ஆகிய வற்றைப் பின்பற்றி அம்மானை இலக்கிய வடிவத்தில் புனையப்பெற்ற பொற்பு வாய்ந்த நூலே இவ்"வரிச்சந்திரன் அம்மானை" ஆகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றதான இலக்கியச்சுவை மிகுந்த இந்நூல், இப்பொழுது சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள நான்கு 'அரிச்சந்திரன் அம்மானை' ஓலைச்சுவடிகளை முறைப்படி ஒப்பிட்டு, ஆய்ந்து, ஆய்வுப்பதிப்பு நூலாக உருவாக்கப் பெற்றுள்ளது.

ஆய்வு முகவுரைகள், பாடபேதக் குறிப்புகள், அரிச்சந்திரன் கதைகூறும் முதனூல்களின் ஒப்புமைப் பகுதிகள், தேவையான பிற்சேர்க்கைகள் முதலியன

அமைய இந்நூல், இந்நூலகத்தின் தமிழ்ப்பண்டிதர் திரு. ய. மணிகண்டன் அவர்களால் சிறப்பாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந்நூலை அரிதின் முயன்று சிறப்புறப்பதிப்பித்துள்ள அவருக்கு என் பாராட்டுகள்.

இந்நூலுக்கான அடிப்படைச் சுவடியினைச் (சுவடி எண்:1386) சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுதவிய மத்தகிரி முன்னாள் கர்ணம் திரு. கோ. இராமசாமிப்பிள்ளை அவர்களுக்கும், இப்பதிப்பு நூலிற்குப் பதிப்பாசிரியரால் உருவாக்கப்பெற்ற அச்சகப்பிரதியினை நுண்ணாய்வு செய்து உதவிய பெரும்புலவர் முனைவர் திரு. அ. மா. பரிமணம் அவர்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவியினை நல்கியுள்ள நடுவண் அரசிற்கு என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள இந்நூலகத்தின் நூலகர் மற்றும் பதிப்பு மேலாளர், நிருவாக அலுவலர் (பொ.) திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், இந்நூலினைச் செம்மையுற அச்சிட்டு அளித்துள்ள சரசுவதி மகால் நூலக அச்சகப்பணியாளர்களுக்கும், இந்நூல் நன்முறையில் வெளிவர உதவிய ஏனையோருக்கும் எனது பாராட்டுகள்.

சிறந்த ஆய்வுப் பதிப்புக்குரிய தகுதிகளோடு பல அரிய குறிப்புகள் அமையச் சிறப்பாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ள "அரிச்சந்திரன் அம்மானை" எனும் இவ்விலக்கியப் பனுவல் தமிழ்கூறுநல்லுலகத்தின் பெருவரவேற்பைப் பெறுதல் திண்ணம்.

தஞ்சாவூர்,
24—4—95.

**தேவ. ஜோதி ஜெகராஜன்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# பதிப்புரையும் நன்றியுரையும்

மூன்றரையாண்டுகளுக்கு முன் சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த் துறையில் தமிழ்ப்பண்டிதராகப் பொறுப்பேற்றுப் பணிபுரியும் நல்வாய்ப்பினை நான் பெற்றேன். சுவடியியல், பதிப்பியல் வினைப்பாடுகளோடு கூடிய இந்தப் பணிக்காலத்தில், தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள ஓலைச்சுவடிகளை நான் ஆராய்கையில், "அரிச்சந்திரன் அம்மானை" என்னுந் தலைப்பிலிருந்த நான்கு அருஞ்சுவடிகளைக் கண்ணுற்றேன். அரிச்சந்திரன் அம்மானை இலக்கியத்தைச் சுவடியிலிருந்து நானே படியெடுத்தேன்; ஈடிணையற்ற அதன் இலக்கிய வனப்பில் ஆழ்ந்தேன்.

சுவடிகளை ஒப்பிட்டு ஆய்வுப் பதிப்பு நூலாக உருவாக்க ஏற்ற வகையில் நான்கு சுவடிகள் இருப்பதை எண்ணி மகிழ்ந்து பதிப்பிக்கும் பணியில் ஈடு பட்டேன். பதிப்பு, 'திங்கள் வலித்த காலா'க அமையவேண்டுமென்னும் ஆசை பற்றி உழைக்கலுற்றேன். ஆசை எந்த அளவுக்கு ஈடேறியுள்ளது என்பதை அறிஞருலகின் மதிப்பீட்டிற்கு உரித்தாக்குகின்றேன்.

*                *                *                *

அம்மானை இலக்கிய வடிவில் பாடப்பெற்றுள்ள அரிச்சந்திரன் கதை நூல் இது. இந்நூல், காவிய நயங்களையும் நாட்டுப்புற இலக்கிய நடை நலத்தையும் கொண்டு திகழும் விழுமிய படைப்பாகும்.

*                *                *                *

இப்பதிப்பு நூல், முப்பகுதிகளைக் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் ஆய்வு முகவுரைகள், நூற் கதைச்சுருக்கம் ஆகியனவும், இரண்டாம் பகுதியில் பாடபேதங்கள், ஒப்புமைப் பகுதிகள் ஆகியவற்றுடன் கூடிய அரிச்சந்திரன் அம்மானை நூலும், மூன்றாம் பகுதியில் பிற்சேர்க்கைகள், அருஞ்சொல் அகரவரிசை, துணை நூற்பட்டியல் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

இப்பதிப்பு நூலின் முதற்பகுதியில் அரிச்சந்திரன் குறித்து வழங்கும் கதைகளை, அரிய குறிப்புகளை வடமொழி வேதநூல் தொடங்கிப் பல நூல்களி லிருந்தும் தேடித் திரட்டியளித்துள்ளேன். அச்செய்திகளில் பல பலராலும் அறியப்படாதவை. அரிச்சந்திரன் வருணனுக்குக் கொடுத்த வாக்கிலிருந்து பிள்ளைப் பாசத்தால் நழுவுகின்ற கதை பலராலும் அறியப்படாதது. அக் கதையை ரிக்வேதத்தின் ஐதரேய பிராமணம் முதலான நூல்களிலிருந்து எடுத்துக்காட்டியுள்ளேன். தமிழ்மொழியிலுள்ள அரிச்சந்திரன் கதைகளில் வெறுப்புக்குரியவராய்ச் சித்திரிக்கப்படும் விசுவாமித்திரர் அக்கதையில் உயர்ந்தவராகக் காட்சியளிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரி -

இந்நூல் அச்சாகி இப்பதிப்புரை எழுதுந் தருணத்தில் அரிச்சந்திரன் குறித்துக் கிடைத்த மேலும் மூன்று குறிப்புகளை இங்குப் பதிவு செய்து இப்பதிப்புரையை நிறைவுசெய்ய விழைகின்றேன்.

**ஒன்று :** தமிழ் நாட்டின் ஊர்ப்பெயர்களுள் அரிச்சந்திரனைத் தொடர்பு படுத்தி மூன்று ஊர்களின் பெயர்கள் அமைந்துள்ளன எனத் தெரிகின்றது. திருத்தணி அருகில் 'ஹரிச்சந்திரபுரம்' என்னும் ஊரும், ஆரணி அருகில் 'ஹரிச்சந்திர பிள்ளைத்தாங்கல்' என்னும் ஊரும், மன்னார்குடி அருகில் 'ஹரிச்சந்திரபுரம்' என்னும் ஊரும் உள்ளமை கருதத்தக்கது.

(ஆதாரம் : **Alphabetical List of Villages in the Taluks and Districts of the Madras Presidency,** ***1906.***)

**இரண்டு :** ரிக்வேதத்தின் ஐதரேய பிராமணத்திலுள்ள, வருணனுக்குக் கொடுத்த வாக்கிலிருந்து அரிச்சந்திரன் நழுவுகின்ற கதை (சிறுமாற்றத்துடன்) பதினெண்புராணத்தில் ஒன்றான **'ஸ்ரீப்ரஹ்ம புராணத்'திலும்** காணப்படு கின்றது. அப்பகுதி வருமாறு :

"இக்ஷ்வாகு வம்சத்திலே ஹரிச்சந்த்ரன் என்றோர் அரசனிருந்தான். அவன் மநுநீதி தவறாது அவனியை ஆண்டுவந்தான். ஓர்நாள் நாரதரும் பர்வதரும் அவன் அரண்மனைக்குச் சென்றனர். மன்னன் விதிப்படி முநிவர்களைப் பூஜித்து, புத்ரனில்லாவிடில் நரனுக்கு நற்கதி இல்லை என்னும் சொல் உண்மைதானோ? என்று வினவினான். முநிவர்கள், புத்ரனால் இம்மை மறுமைச் சுகங்கள் உண்டாம். புத்ரன் பிறந்தான் எனக்கேட்டவுடன் ஸ்னானம் செய்தால் அச்வமேத யாகத்தின் பயனைப் பெறுவர் என்றும் கூறினார்கள். அதைக்கேட்ட அரசன் தனக்குப் புத்ரபாக்யம் உண்டாகத்தக்க உபாயத்தைக் கூறும்படி அவர்களையே வேண்டினான். அவர்கள் வேந்தனைக் கங்காதீரம் சென்று வருணனைத் துதித்து மகனைப் பெறும்படி கூறிச்சென்றனர். ஹரிச்சந்த்ரன் மனைவியுடன் வாராணஸி சென்று வருணனை வேண்டினான். வேந்தன்முன்னே வருணன் தோன்றி, மன்னா! இப்பிறவியில் உனக்கு மக்கட்பேறு கிடையாது. பிறந்த புதல்வனைப் பசுவாக்கி என்னை நாடி ஓர் வேள்வி புரிவதாயின் புத்ரன் உனக்குப் பிறப்பான் என்றார். மலடாக இறப்பதைவிட இறந்த குழந்தைக்கேனும் தந்தையாகி இறப்பது சிறந்ததென்று மன்னன் கருதி அங்ஙனமே ஆகட்டுமென்றான். சில நாட்கள் சென்றபின் ரோஹிதன் எனும் மகனும் பிறந்தான். வருணனும் வந்தான். சிசுவைக்கொண்டு வேள்வியைச் செய் என்றான். அரசனோ குழந்தையைப் பலியிட மனமில்லாமல் தீட்டுச்சென்றபின் ஆகட்டுமென்றான். தீட்டுச்சென்றபின் தவறாது வருணன் வந்துகேட்கப் பல் முளைக்கட்டு மென்றான். பார்த்திவன் பல்முளைத்தபின் அது விழுந்து மறுபடியும் முளைத்த பின் ஆகட்டுமென்றான். விழுந்த பல் முளைத்தபின் வருணன் வந்துகேட்க

உபநயநமாகட்டும் என்றான். அதன்பின் வருணன் வந்து கேட்க வேறுவகையில்லாமல் வேந்தன் மைந்தனை அழைத்து அவனைப் பசுவாக்கி வேள்வி செய்வதாகக் கூறினான். அதைக்கேட்ட மகன் இவ்வருணனைப் பசுவாக்கி விஷ்ணுவை நாடித் தான் ஓர் வேள்வி முதலில் செய்யப்போவதாகக் கூறினான். இதைக்கேட்டுச் சினந்த வருணன், மன்னனுக்கு நீர்ரோகம் வரும்படி செய்து சென்றார். ரோஹிதனும் தந்தையைவிட்டு வனம் சென்றான். ஐந்தாண்டுகள் கழிந்தபின் ரோஹிதன் காசிமாநகரம் சென்று தன் தந்தை நோய்வாய்ப்பட்டுத் தவிப்பதைக் கேட்டு வருந்தினான்.

அதை அகற்ற வழி யாதென அவன் யோசித்துக்கொண்டிருக்கும்போது அஜிகர்த்தரெனும் எளிய வேதியர் அவன் கண்முன் தோன்றினார். அவர் மூன்று புதல்வர்களுடனும் மனைவியுடனும் கூடி உணவிற்கு வழியின்றி வருந்தினார். ரோஹிதன் தந்த்ரமாக அவருடன் பேசி அவர் வாக்கிலிருந்தே ஓர் புதல்வனை விற்பதாகக் கூறும்படி செய்தான். எண்ணிறந்த பொருட்களை அளித்துச் சுநச்சேபனெனும் மத்யம புத்ரனை வாங்கிவந்தான். தனக்குப் பதிலாக இவனைக்கொண்டு வருணயாகம் செய்யும்படி ரோஹிதன் தந்தையிடம் கூறினான். ஹரிச்சந்த்ரன் வியாதியால் தானிறப்பதே சிறந்தது என்றும் விஷ்ணுவைத் துதிக்கும் வேதியனைக்கொண்டு வேள்வி செய்வது பாபமென்றும் கூறி அங்ஙனம் செய்ய மறுத்தான். அச்சமயத்தில் ஆகாசத்திலிருந்து ஓர் சொல் கிளம்பிற்று. அது அரசனைக் கங்காதீரம் சென்று ரோஹிதனைக் கொல்லாமல் வேள்வியைப் பூர்த்தி செய்யும்படி ஆணையிட்டது. அரசனும் அங்ஙனமே சென்று யாகத்தைத் துவக்கினான். ஆங்கு யூப மரத்தில் பசுவாகக் கட்டப்பட்டிருக்கும் சுநச்சேபனைக்கண்ட விச்வாமித்ரரது மனம் இளகியது. முனிவர்களைக் கங்கா நதியில் மூழ்கித் தேவதைகளைத் துதித்து அவர்களருளால் இவனை உயிருடன் விடும்படி வேண்டினார். அங்ஙனமே முனிவர்கள் துதிக்கத் தேவர்கள் ஸந்தோஷமடைந்து சுநச்சேபனைக் கொல்லாமலே தாங்கள் த்ருப்தியடைந்ததாகவும் யாகம் பூர்த்தியானதாகவும் கூறிச்சென்றனர். அந்த இடம் ஹரிச்சந்த்ரன் ரோஹிதன் சுநச்சேபன் வருணன் விச்வாமித்ரர் ஆகியவர்கள் பெயரால் அழைக்கப்படுகிறது.''

**—ஸ்ரீ ப்ரஹ்ம புராணம், ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோமதேவசர்மா,**
**ஸ்ரீ அமரகலாவிலாஸினீ ஸபை, சென்னை, 1935.**

**மூன்று:** எதையும் வித்தியாசமாகவும் கூர்மையாகவும் கவித்துவ அழகுடன் விமர்சிக்கும் புதுக்கவிதையாளர்களின் பார்வைக்கும் இலக்காகியிருக்கின்றான் அரிச்சந்திரன். தற்காலத்தில் சத்தியம் படும் பாட்டைப் பேசும் ஒரு புதுக்கவிதையில், **''எனது பெருமையை எதிர்மறையில் உணர்த்தியவன் அரிச்சந்திரன்''** என்று, பொய் அபிப்பிராயம் தெரிவிக்கும் பகுதி குறிப்பிடத்தக்கது. **('சத்தியப் பரிமாணம்' ''அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்'', கவிஞர் ஈரோடு தமிழன்பன், 1982)**

**நன்றியுரை:**

இந்நூற்பதிப்புக்காக ஓலைச்சுவடியிலிருந்து படியெடுக்கப்பெற்ற கையெழுத்துப் பிரதியினை முழுமையாகப் பார்வையிட்டும், ஐயங்களை அகற்றியும் உதவிய சுவடியியல் அறிஞர், உயர்திரு. ப. வெ. **நாகராசன்** அவர்களுக்கும்,

பதிப்பிற்கு அணியம்செய்த கையெழுத்துப்பிரதியினை நுண்ணாய்வு செய்து நூலாக வெளியிடப் பரிந்துரைசெய்த பெரும்புலவர், முனைவர், உயர்திரு. **அ. மா. பரிமணம்** அவர்களுக்கும்,

இந்நூல் அரிய குறிப்புகளைத் தாங்கிய ஆய்வுப் பதிப்பு நூலாக அமையத் தேவைப்பட்ட பல நூல்களைத் தமது நூற்களஞ்சியத்திலிருந்து தேடித்தந்தும், சோர்வுபடாது இப்பணி நிறைவுபெற ஊக்கமளித்து வாழ்த்தியும் அருள்செய்த பேரறிஞர், சேக்கிழார் அடிப்பொடி உயர்திரு. **தி. ந. இராமச்சந்திரன்** அவர்களுக்கும்,

இந்நூலுக்கு வெளியீட்டாளர் முகவுரை வழங்கியுள்ள தஞ்சை மாவட்ட ஆட்சியர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர், பெருமதிப்பிற்கு உரிய உயர்திரு. **தேவ. ஜோதி ஜெகராஜன்**, இ. ஆ. ப., அவர்களுக்கும்,

இப்பதிப்புநூல் வெளியீட்டின் பல்வேறு நிலைகளிலும் தேவையான உதவிகளை அக்கறையுடன் செய்துதந்த சரசுவதி மகால் நூலகத்தின் நூலகர் மற்றும் பதிப்பு மேலாளர், நிருவாக அலுவலர் (பொ.) மதிப்பிற்குரிய உயர்திரு. **அ. பஞ்சநாதன்** அவர்களுக்கும்,

இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணைநின்ற அச்சகப் பணியாளர்களுக்கும், உடன் பணியாற்றும் மொழிப்பண்டிதர்களுக்கும், நூலக ஊழியர்களுக்கும்,

என் நெஞ்சார்ந்த நன்றியினை இங்குப் பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

* * * *

இப்பதிப்பு நூல் சுவடியியல், பதிப்பியல், நாட்டுப்புறவியல் முதலிய துறைகளில் ஆர்வங்கொண்டோர்க்கு நல்லதொரு விருந்தாக அமையுமென்றும் அறிஞருலகம் இம்முயற்சியின் குறைபொறுத்து நிறைபோற்றி வரவேற்கு மென்றும் நம்புகின்றேன்.

*தஞ்சாவூர்*
*20—4—1995*

**ய. மணிகண்டன்,**
*தமிழ்ப் பண்டிதர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

# அரிச்சந்திரன் அம்மானை

# உள்ளுறை


**முதற்பகுதி** பக்கம்

அரிச்சந்திரன், அரிச்சந்திரன் கதைநூல்கள்
— சில அரிய குறிப்புகள் 1—14

அரிச்சந்திரன் அம்மானை—நூலாராய்ச்சி i—xvi

அரிச்சந்திரன் அம்மானையின் கதைச்சுருக்கம் xvii—xxiv

**இரண்டாம் பகுதி**

அரிச்சந்திரன் அம்மானை—நூல்
(பாடபேதக் குறிப்புகளுடனும்
ஒத்த அரிச்சந்திர புராணப்
பாடற் பகுதிகளுடனும்) 1—306

**மூன்றாம் பகுதி**

பிற்சேர்க்கை—1

ஒப்புமைப் பகுதிகள்
அரிச்சந்திரன் அம்மானை—அரிச்சந்திர வெண்பா 307—324

ஒத்த உவமைகள்
அரிச்சந்திரன் அம்மானை—அரிச்சந்திர வெண்பா 325, 326

குறிப்பிடத்தக்க வேறுபாடுகள்
அரிச்சந்திரன் அம்மானை—அரிச்சந்திர வெண்பா 327—335

பிற்சேர்க்கை—2

ஒத்த உவமைகள்
அரிச்சந்திரன் அம்மானை—அரிச்சந்திர புராணம் 336—338

பக்கம்

குறிப்பிடத்தக்க வேறுபாடுகள்
அரிச்சந்திரன் அம்மானை—அரிச்சந்திர புராணம் 339—357

பிற்சேர்க்கை—3

ஸ்ரீதேவி பாகவதத்தில் இடம்பெற்றுள்ள
அரிச்சந்திரன் கதை 358—378

பிற்சேர்க்கை—4

தமிழிலக்கியங்கள் சிலவற்றில் இடம்பெற்றுள்ள
அரிச்சந்திரன் கதைக்குறிப்புகள் 379—384

பிற்சேர்க்கை—5

அரிச்சந்திரன் கதைகூறும் நூல்களின் பட்டியல் 385—388

அம்மானையில் இடம்பெற்றுள்ள விருத்தங்களின்
செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை 389—392

அருஞ்சொல் அகராதி 393—420

துணை நூற் பட்டியல் 421—426

முதற்பகுதி :

## அரிச்சந்திரன், அரிச்சந்திரன் கதைநூல்கள் - சில அரிய குறிப்புகள்

## அரிச்சந்திரன் அம்மானை - நூலாராய்ச்சி

## அரிச்சந்திரன் அம்மானையின் கதைச்சுருக்கம்

# அரிச்சந்திரன், அரிச்சந்திரன் கதைநூல்கள்

## — சில அரிய குறிப்புகள்

வடமொழியில் உள்ள அரிச்சந்திரன் கதை இருபகுதிகளைக் கொண்டதாக உள்ளது. அரிச்சந்திரன் வாழ்வின் முற்பகுதி, பிற்பகுதிக் கதைகளாக அப்பகுதிகள் அமைந்துள்ளன. முதற்பகுதிக் கதையில், அவன் பிள்ளைப் பாசத்தால் வருணனுக்குக் கொடுத்த வாக்கிலிருந்து தவறுபவனாகக் காட்சி அளிக்கின்றான். இரண்டாம் பகுதிக் கதையில், அவன், விசுவாமித்திர முனிவர் பல துன்பங்களைத் தந்து சோதித்தபோதிலும் சத்தியம் தவறாமல் வாழ்பவனாகக் காட்சியளிக்கின்றான்.

ரிக்வேதத்தின் ஐதரேய பிராமணத்தில், அரிச்சந்திரன் பிள்ளைப் பாசத்தால் வருணனுக்குக் கொடுத்த வாக்கிலிருந்து தவறுகின்ற கதை மட்டும் இடம் பெற்றுள்ளது. ஸ்ரீதேவீபாகவதத்தில் அரிச்சந்திரன் வருணனுக்குக் கொடுத்த வாக்கிலிருந்து தவறுகின்ற கதையும் (முதற்பகுதி), விசுவாமித்திரரால் பல துன்பங்கள் ஏற்பட்டு மனைவி மகனை விற்றுத் தானும் அடிமையாகியும் கூடச் சத்தியம் தவறாதிருந்த கதையும் (இரண்டாம் பகுதி) இணைந்து இடம் பெற்றுள்ளது.

இரண்டாம் பகுதிக் கதை மட்டுமே தமிழில் உள்ள அரிச்சந்திரன் கதை கூறும் நூல்களில் இடம் பெற்றுள்ளது.

வடமொழியில் இரண்டாம் பகுதிக் கதையின் தொடக்கத்திலும், தமிழில் உள்ள அரிச்சந்திரன் கதைநூல்களின் தொடக்கத்திலும், அரிச்சந்திரனைப் பொய்யன், சத்தியந்தவறுபவன் என விசுவாமித்திரர் கூறுவதற்குக் காரணம் முன்பு வருணனுக்குக் கொடுத்த வாக்கிலிருந்து அரிச்சந்திரன் தவறியமையே என்பது ஐதரேய பிராமணம், ஸ்ரீ தேவீபாகவதம் முதலிய வடமொழி நூல்கள் காட்டும் முற்பகுதிக் கதையால் புலனாகின்றது.

மகாத்மா காந்தியடிகளை அவரது இளம் பருவத்தில் ஈர்த்து, அவரைச் சத்திய நெறியையே இலட்சியமாகக்கொண்டு வாழத்தூண்டிய கதாபாத்திரம் அரிச்சந்திரன். வடமொழியிலும் தமிழிலும் இடம் பெற்றுள்ள, அரிச்சந்திரனைக்குறித்தும், அவன் கதையினைக் கூறும் நூல்கள் குறித்தும் சில அரிய குறிப்புகள் இங்கு இடம்பெறுகின்றன.

# வடமொழியில் இடம்பெற்றுள்ளவை

**ரிக் வேதத்தின் ஐதரேய பிராமணம் :**

அரிச்சந்திர அரசனுக்கு நூறு மனைவியர். நூறு மனைவியர் இருந்தும் பிள்ளையில்லாக்குறை அவனை வாட்டப் பிள்ளைவரம் வேண்டி வருணனை வழிபட்டான். பிறக்கும் பிள்ளையை வருணனுக்கே யாகப் பசுவாகப் பலி தருவதாக வாக்குக் கொடுத்து வருணனிடம் வரம் பெற்றான். குழந்தை பிறந்தது. 'ரோஹிதன்' எனப் பெயரிட்டான்.

வருணன் குழந்தையை யாகப்பசுவாய்க் கருதித் தன்னிடம் முன்பு சொல்லியிருந்தபடி அளிக்கக் கேட்டுவந்தார். கேட்டுவரும் சமயங்களிலெல்லாம் ஏவ்வொரு சமாதானம் சொல்லி அடுத்தமுறை வரும்படி செய்தான். வருணன் பலமுறை வந்து கேட்டும் அரிச்சந்திரன் பிள்ளைப் பாசத்தால் சொன்னபடி செய்வதைத் தள்ளிப்போட்டு வந்தான். வருணன் வந்து போவதன் காரணமறிந்த ரோஹிதன் காட்டிற்கு ஓடிச்சென்றுவிட்டான். வருணன் தான் ஏமாற்றப்பட்டதை எண்ணி அரிச்சந்திரனுக்கு வயிற்றில் நோய் ஏற்படும்படி சாபமளித்தார். நோயால் அரிச்சந்திரன் வருந்துவதைக் காட்டிலிருந்த ரோஹிதன் கேள்விப்பட்டுத் தந்தையைக் காணப் புறப்பட்ட வேளைகளில் இந்திரன் பிராமண வடிவில் வந்து, நாட்டிற்குச் சென்றால் அவனுக்குத் தீங்கு நேரும் என உரைத்துத் தடுத்துச் சென்றான்.

சில ஆண்டுகள் காட்டில் திரிந்துகொண்டிருந்த ரோஹிதன் அங்கு அஜிகர்த்த சாயுவாசி எனும் ஏழைப் பிராமணனைக் கண்டு அவனுடைய நடுமகனான சுனச்சேபன் என்பவனைத் தனக்குப் பதிலாகப் பலிகொடுப்பதற்காக நூறு பசுக்களைக் கொடுத்து விலைக்கு வாங்கிக்கொண்டு நாட்டிற்கு வந்து தந்தையைக் கண்டான். அரிச்சந்திரனும் தன் மகனுக்குப் பதிலாகச் சுனச்சேபனை வருணனுக்குப் பலிகொடுக்க ஏற்பாடுகளைச் செய்தான். (இந்த இடத்தில் "ஸ்ரீதேவீ பாகவதத்"தில் ரோஹிதன் அஜிகர்த்தனைக் கண்டு அவன் மகன் சுனச்சேபனை விலைக்கு வாங்குவதாக இல்லாமல் அரிச்சந்திரனே அஜிகர்த்தனைக் கண்டு அவன் மகன் சுனச்சேபனை விலைக்கு வாங்குவதாக உள்ளது.)

யூபஸ்தம்பத்தில் கட்டப்பெற்று வருந்தியிருந்த சுனச்சேபன் வருணனையும் தெய்வங்களையும் நோக்கி வேண்டி மந்திரங்களை உச்சரித்து ("ஸ்ரீதேவீ பாகவதத்"தில் விசுவாமித்திரரின் உதவியால் வருணமந்திரத்தை அறிந்து அதனை உச்சரித்து" என உள்ளது) தெய்வங்களின் அருளால் ஆபத்திலிருந்து விடுபட்டான். அரிச்சந்திரனின் நோயும் நீங்கியது. சுனச்சேபன் 'தேவராடன்' எனும் பெயருடன் விசுவாமித்திரரால் மகனாக ஏற்றுக்கொள்ளப்பட்டான்.

இதுவே ஐதரேய பிராமணத்தில் காணப்படும் அரிச்சந்திரன் கதையாகும். இக்கதை "சாங்காயன ச்ரௌத சூத்திரத்"திலும் உள்ளது. ரிக்வேதத்தில் சுனச்சேபன் கூறியனவாகச் சில ரிக்குகள் உள்ளன.

**மகாபாரதம்**

அரிச்சந்திரனைப் பற்றிய குறிப்புகள் ஸபா பர்வத்திலும் வன பர்வத்திலும் இடம்பெற்றுள்ளன.

ஸபா பர்வத்தில் தர்மபுத்திரர் அரிச்சந்திரனைக் குறித்துக் கேட்க நாரதர் அரிச்சந்திரன் இராசசூய யாகம் செய்து மேலான இந்திர சபையில் இருக்கும் பேறு பெற்றான் எனக் கூறுவதாக உள்ளது.

வன பர்வத்தில், "இக்ஷ்வாகு குலத்தில் உதித்த திரிசங்கு அரசனின் மகன் அரிச்சந்திரன்; அவன் ஸத்யத்துடன் வாழ்ந்தவன்; உசீன ராஜரிஷியின் மகளைச் சுயம்வரத்தில் மணந்தான்: அவளிடத்தில் அவனுக்கு லோகிதாச்வனென்னும் பெயர்பெற்ற மகன் பிறந்தான்; வசிஷ்டருடைய சீடனான அரிச்சந்திரன் பெரிய யாகங்களைச் செய்தான். இதே காலத்தில் இந்திர சபையில் ஸத்யவாதிகளான அரசர்கள் சொல்லப்படுகையில் அரிச்சந்திரன் வேள்வி, கொடை, தவம், ஒழுக்கம், மெய் பேசுதல், உறுதியான விரதம் ஆகிய இவற்றால் எல்லாரையுங்காட்டிலும் புகழப்பெற்றான். அதுகேட்டு வசிஷ்டர் மகிழ்ந்தார். விசுவாமித்திரரோ அரிச்சந்திரன் ஸத்யத்தால் அலங்கரிக்கப் பெற்றதைப் பொறுக்காமல் எழ, அவருக்கும், வசிஷ்டருக்கும் அரிச்சந்திரனைக் குறித்துப் பந்தயம் ஏற்பட்டது. அதன் பிறகு அரிச்சந்திரன் விசுவாமித்திரரால் ராஜ்யத்தினின்றும் சுகத்தினின்றும் விரைவில் நீக்கப்பெற்று மரணத்தை விடக் கெடுதலான மிக்க துக்கத்தை அடைந்தான். பின் நன்னிலை அடைந்தான்." எனப் பிருஹதச்வர் பாண்டவரிடம் கூறியதாக உள்ளது.

'நளோபாக்கியான பர்வம்'<br>
மகாபாரதம்—வனபர்வம்—பக். 279, 280<br>
தமிழ்மொழிபெயர்ப்பு

[மகாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்த மகாவித்வான் திரு உ. வே. தட்டை V. ஸ்ரீநிவாஸாசார்யர் "இந்த ஹரிச்சந்திரன் சரித்திரம் நீலகண்ட வியாக்யான பாடத்திலும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்புகளிலும் இல்லை. மஹாபாரதத்தில் உள்ளதென ஒன்றும், ஸ்காந்தத்திலுள்ளதென ஒன்றும், இடங்குறிக்கப்படாமல் ஒன்றும் ஆக மூன்று நூல்கள் உள்ளன.

அவற்றை ஆராய்ந்துகொண்டிருக்கிறேன். பின்னர் வெளியிடுவேன்'' என அடிக்குறிப்பில் தெரிவித்துள்ளார், பின்னர் வெளிவந்ததா எனத் தெரியவில்லை.]

**இராமாயணம்**

அரிச்சந்திரனைக் குறித்து ஐதரேய பிராமணத்தில் காணப்படும் கதை அரிச்சந்திரனுக்குப் பதிலாக அம்பரீடன் எனக் குறிப்பிடப்பெற்றுக் கதையிலும் சில மாறுதல்களுடன் வால்மீகி இராமாயணத்தில் (பாலகாண்டம்—அறுபத்தோராவது ஸர்கம், சுனச்சேபனின் வரலாறு) இடம்பெற்றுள்ளது.

**சிவ புராணம்**

"திரிசங்குவிற்கும் சத்யரதையிற்கும் மகனாகப் பிறந்த அரிச்சந்திரன் இராஜசூய யாகம் செய்து புகழ்பெற்ற சக்கரவர்த்தியாவான். அவன் த்ரைசங்கவா எனும் பெயராலும் அறியப்பட்டவன். அரிச்சந்திரனின் மகன் 'ரோஹித'னும் புகழ்பெற்றிருந்தான்.''

என்னும் செய்திகள் சிவபுராணத்தில் காணப்படுகின்றன.

**Sivapurana — Vol. 4. Page No. 1608**

**விஷ்ணு புராணம்**

'திரிசங்குவின் குமாரன் ஹரிச்சந்திர மகாராஜன். அவன் மகன் லோகிதாசுவன்.'

'புருகுச்ச, சகர மகாராஜாக்களுடைய சரித்திரம்'— ப. 235

'அந்த விசுவாமித்திரருக்குப் பிருகு வமிசஸ்தனான சுனச்சேபனே தேவதைகளினாலே மகனாகக் கொடுக்கப்பட்டான். அவன் தேவரால் கொடுக்கப்பட்டதனால் தேவராதன் என்னும் பெயரை அடைந்தான்.'

'கவுசிக வமிசத்தின் வரலாறு'—ப. 254

**ஸ்காந்த புராணம்**

ஸ்காந்த புராணத்தில் அரிச்சந்திரோபாக்கியானம் இடம் பெற்றுள்ளது. ஆனால் ஸ்காந்த புராணத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலோ தமிழ் மொழிபெயர்ப்பு நூலோ பதிப்பாசிரியனுக்குக் கிடைக்கவில்லை.

ஸ்காந்த புராணத்தில் அரிச்சந்திரன் கதை எவ்வாறு அமைந்துள்ளது என அறியும் வாய்ப்பு உருவானால், இன்னும் பல அரிய செய்திகள் அரிச்சந்திரன் குறித்துத் தெரியக்கூடும்.

**ஸ்ரீதேவிபாகவதம்**

பிள்ளைப் பாசத்தால் வருணனுக்குக் கொடுத்திருந்த வாக்கை நிறைவேற்றாமல் ஏமாற்றுபவனாக அரிச்சந்திரனைச் சித்திரிக்கும் கதையும் விசுவாமித்திரர் பல துன்பங்களைத் தந்து சோதித்தபோது மனைவி மகனை விற்றுத் தானும் அடிமையாகிய நிலையிலும் அரிச்சந்திரன் சத்தியந் தவறாதவனாகத் திகழ்ந்ததைக் கூறும் கதையும் இணைந்த அரிச்சந்திரன் கதை ஸ்ரீதேவிபாகவதத்தில் இடம்பெற்றுள்ளது. (காண்க, பிற்சேர்க்கை—3)

**மார்க்கண்டேய புராணம்**

தருமப்பறவை முனிவர், சைமினிக்கு அரிச்சந்திரன் கதையைக் கூறுவதாக மார்க்கண்டேய புராணத்தில் உள்ளது.

"அரிச்சந்திரன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். அங்கு விசுவாமித்திரரின் தவத்தால் அஞ்சிக் கலைகள் பெண்வடிவில் அழுதிருந்தன. விக்கினத்தலைவர் அரிச்சந்திரனுள்ளத்திற் புகுந்துகொண்டதால், அரிச்சந்திரன் விசுவாமித்திரரை நோக்கிச் சில கடுமொழி கூற, அதுகேட்டு விசுவாமித்திரர் சினங்கொண்டார். அரிச்சந்திரனை நோக்கி மூன்று கேள்விகள் கேட்டார். அவனும் விடை கூறினான்.

அதன் தொடர்ச்சியாக, விசுவாமித்திரர் முதலில் யாகத்திற்குப் பொருள் கேட்டு, அவன் கொடுக்க வருகையில் பிறகு வாங்கிக்கொள்வதாகச் சொல்லிவிட்டு, நாட்டையே தானமாகப் பெற்றுக்கொண்டார். அரிச்சந்திரன் அவன் மனைவி சைப்யா, மகன் ரோகிதாச்வன் மூவரையும் நாட்டைவிட்டு வெளியேற்றினார். அவர்கள் வெளியேறுகையில் யாகப்பொருள்—தட்சணையைக் கேட்டு விசுவாமித்திரர் நிறுத்த, அரிச்சந்திரன் ஒரு மாதத் தவணையில் தருவதாகச் சொல்லிக் காசிக்குச் சென்றான்.

காசியில் ஒரு கிழ அந்தணரிடம் மனைவியையும், மகனையும் விற்றுவிட்டு, தன்னையும் மயானங்காக்கும் புலையனுக்கு அடிமையாக்கி அவற்றால் பெற்ற பணத்தை விசுவாமித்திரரிடம் அரிச்சந்திரன் கொடுத்தான். பின்னர் அரிச்சந்திரன் மயானங் காத்திருக்கையில், பாம்பு கடித்து இறந்த மகனுடன் மனைவி சைப்யா மயானம் வர, அரிச்சந்திரன் அவர்களைக் கண்டான், அழுது

துடித்த இருவரும் மனை எரிக்கும் சிதையிலேயே விழுந்து சாகத் துணிய அப்போது அங்கு விசுவாமித்திரர் முதலான தேவர்களனைவரும் வந்து அவர்களைக் காப்பாற்றிப் பழைய நிலையை அடையச் செய்தனர்" என்பதே அக்கதையின் சுருக்கமாகும்.

### பத்ம, வாயு புராணங்கள்

"விச்வாமித்திரர் ஹரிச்சந்திரனுக்கு யாகம் செய்வித்ததற்குத் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டிய தனம் போதாமல் தன்னையும் பெண்டு பிள்ளைகளையும் ராஜ்யத்தையும் அவருக்கு விற்றான். தேவர்கள் ஸந்தோஷித்து அவனையும் அவனுடைய குடிகளையும் ஸ்வர்க்கத்திற்கு அழைத்துக்கொண்டார்கள். நாரதர் அவனைக் கண்டு அவன் செய்த புண்ணியத்தை அவனையே வர்ணிக்கச் செய்தார். அதனால் அவன் கீழே தள்ளப்பட்டான். நடுவில் மிகவும் பச்சாத்தாபமடைந்ததால் அவர்கள் அங்கேயே தங்கினார்கள். அவனுடைய நகரம் சில ஸமயங்களில் ஆகாசத்தில் காணப்படுகிறது. இப்படி அவனை வருத்தப்படுத்தியதை வஸிஷ்டர் கேட்டு இருவரும் (விசுவாமித்திரரும், வசிஷ்டரும்) பக்ஷிரூபம் கொண்டு வெகுகாலம் வரையில் சண்டையிட்டார்கள். லோகங்கள் அழிவதைக் கண்டு பிரஹ்மா வைராக்யமுண்டாகும் ஆத்மஞானத்தை அவர்களுக்கு உபதேசித்து, ஸமாதானம் செய்வித்தார்."

—'மார்க்கண்டேய, பத்ம, வாயு புராணங்கள்'
ஸ்ரீ ராமாயண தத்வார்த்த தீபிகை
பக்கம்—97

### சண்ட கௌசிகம்

க்ஷேமீச்வரன் இயற்றிய நாடகநூல் 'சண்டகௌசிகம்' ஆகும். அரிச்சந்திரன் விசுவாமித்திரரின் சினத்திற்கு ஆளாகி அவனும் அவன் மனைவியும் மகனும் அடைந்த துன்பத்தை இந்நூல் கூறுகின்றது. இந்நூல் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும்.

—வடமொழி நூல் வரலாறு—ப. 620

### ஸத்ய ஹரிச்சந்திரம்

ராமசந்த்ரஸூரி இயற்றிய நாடகநூல் 'ஸத்யஹரிச்சந்திரம்' ஆகும். அரிச்சந்திரன் கதையைச் சிறப்பான முறையில் எடுத்துரைக்கும் இந்நூல் கி. பி. 12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும்.

சண்ட கௌசிகத்தைக் காட்டிலும் சிறந்த நூல் இதுவென்றும், இரண்டு மூன்றாவது அங்கங்களைப் படிக்கும்போது கண்ணில் நீரில்லாதிருத்தல் இயலாதென்றும், சண்டகௌசிகத்திற்கும் இதற்கும் சில வேறுபாடுகள் உள்ளன வென்றும் (விசுவாமித்திரரது கோபத்திற்குக் காரணம் இரண்டிலும் வேறு வகையாய் உள்ளது. இந்நூலிலுள்ள 5 ஆம் அங்கத்தின் வரலாறு அங்கு இல்லை.) அறிஞர் திரு. பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி குறிப்பிட்டுள்ளார்.

வடமொழி நூல் வரலாறு—ப. 637

### அரிச்சந்திரனின் மனைவி, மகன் பெயர்கள்

அரிச்சந்திரனின் மனைவி பெயர் சந்திரமதி, மாதவி, சைப்யா என்றும் மகன் பெயர் ரோஹிதன் (ரோஹிதா), லோகிதன், ரோஹிதாச்வன், லோகிதாசுவன், லோகிதாசன் என்றும் வடமொழிநூல்களில் காணப்படுகின்றன.

## தமிழில் இடம்பெற்றுள்ளவை

### அரிச்சந்திரன் கதைகூறும் இலக்கியங்கள்

தமிழில் உள்ள அரிச்சந்திரன் கதை கூறும் இலக்கியங்கள் அனைத்தும், விசுவாமித்திரர் பல துன்பங்களை ஏற்படுத்தி அரிச்சந்திரனைச் சத்தியந் தவறச் செய்ய முயன்றதையும் அரிச்சந்திரனோ நாட்டையிழந்தும், மனைவி மக்களை விற்றும், தான் அடிமையாகியும் கூடச் சத்தியந் தவறாதிருந்து இறுதியில் மேன்மையுற்றதையும் மட்டுமே அரிச்சந்திரன் கதையாகக் கூறுகின்றன.

வெண்பாவால் இயற்றப்பட்ட அரிச்சந்திர வெண்பா, விருத்தத்தால் இயற்றப்பட்ட அரிச்சந்திர புராணம், அம்மானைப் பாவடிவில் இயற்றப்பட்ட அரிச்சந்திரன் அம்மானை, வண்ணப்பா வடிவில் இயற்றப்பட்ட அரிச்சந்திர வண்ணம், கும்மிச் செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட அரிச்சந்திரன் கும்மி, இசைப்பாடல் (கீர்த்தனம்) வடிவில் இயற்றப்பட்ட அரிச்சந்திர மகாராஜா கீர்த்தனம், காவடிச்சிந்து வடிவில் இயற்றப்பட்ட அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து எனப்பல்வகைச் செய்யுள் வடிவங்களில் அரிச்சந்திரன் கதை கூறும் இலக்கியங்கள் தமிழில் மலர்ந்து மணம் பரப்பியுள்ளன; மணம் பரப்புகின்றன.

அவற்றுள் அரிச்சந்திர வெண்பா, அரிச்சந்திர புராணம், அரிச்சந்திரன் அம்மானை ஆகியன பற்றிச் சில குறிப்புகள் :

**அரிச்சந்திர வெண்பா**

தமிழில் இயற்றப்பட்ட அரிச்சந்திரன் கதை கூறும் முதல் தனிநூல்— இலக்கியம் " அரிச்சந்திர வெண்பா " ஆகும்.

தமிழில் அரிச்சந்திரன் கதைகூறும் புகழ்வாய்ந்த சிறந்த இலக்கியமான " அரிச்சந்திர புராணத்"திற்கு முதல் நூலும் இந்நூலேயாகும்.

"அரிச்சந்திர வெண்பா" பதினைந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகலாம். (" தமிழ் இலக்கிய வரலாறு—பதினைந்தாம் நூற்றாண்டு " திரு மு. அருணாசலம், ப. 82) (13, 14 ஆம் நூற்றாண்டாகக் கொள்ளலாம் என்பார் திரு மு. இராகவய்யங்கார்) இந்நூல், நூலின் முற்பகுதியும் இறுதிப் பகுதியும் இன்றிக் கிடைக்கப்பெற்ற சுவடியினைக்கொண்டு தமிழறிஞர் திரு மு. இராகவையங்காரால் நூலாகப் பதிப்பிக்கப்பெற்றதாகும். நூல் வெண்பாக்களாலும் உரைப்பாட்டாலும் செய்யப்பெற்றதாகத் திகழ்கின்றது.

இந்நூற் பெயரிலேயே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதுகுளத்தூர் ஆறுமுகம்பிள்ளை இயற்றிய நூலொன்றும் (அரிச்சந்திர வெண்பா) அச்சாகி வெளிவந்துள்ளது.

**அரிச்சந்திர புராணம்**

வீரகவிராயர் இயற்றிய " அரிச்சந்திர புராணமே " (பதினாறாம் நூற்றாண்டு) தமிழில் அரிச்சந்திரன் கதை கூறும் சிறந்த, புகழ்வாய்ந்த, பெருவழக்குப்பெற்ற இலக்கியமாகும்.

இங்குப் பதிப்பிக்கப்பெற்றுள்ள "அரிச்சந்திரன் அம்மானை"க்கு முதனூலும் இப்புராணமே.

**அரிச்சந்திரன் அம்மானைகள்**

அரிச்சந்திர புராணத்தை முதனூலாகக் கொண்டு அம்மானை இலக்கிய வடிவில் இயற்றப்பட்ட நூலே இங்குப் பதிப்பிக்கப்பெற்றுள்ள " அரிச்சந்திரன் அம்மானை" யாகும்.

"அரிச்சந்திரன் அம்மானை" என்னும் இத்தலைப்பிலேயே வேறு சில நூல்கள் சில புலவர்களால் இயற்றப்பட்டுள்ளன எனத் தெரிகின்றது.

"மதுரை மாவட்டம் சிவகங்கைச்சீமை மிதிலைப்பட்டியில் வசித்த சிவமதம் சைவாகமம் குமாரசாமி கவிராஜர் அவர்களின் குமாரர் சண்முக கவிராஜர்" என்பவரால் அரிச்சந்திர புராணத்தைப் பின்பற்றி "அரிச்சந்திரன் அம்மானை" எனும் தலைப்பில் ஒரு நூல் இயற்றப்பட்டு 1912ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

இந்த நூல் மொத்தம் 72 பக்கங்களில் அச்சாகியுள்ளது.

நூலின் தொடக்க அடிகள் :

" சத்ரபதி யானஅரிச் சந்திரன் கதைபாட
அத்தி முகத்தாயே அய்யனே முன்னடவாய்! "

(இந்நூல் கோட்டையூர் ரோஜா முத்தையா செட்டியார் நூலகத்தில் பார்வைக்குக் கிடைத்தது)

## அம்பரீடன் கதையாக அரிச்சந்திரன் கதை

ரிக் வேதத்தின் ஐதரேய பிராமணத்திலும் தேவீபாகவதத்திலும் இடம்பெற்றுள்ள, அரிச்சந்திரன் வாழ்வின் முதற்பகுதியின எனத்தக்க கதை, சில மாற்றங்களுடன் அரிச்சந்திரன் என்னும் பெயருக்குப் பதிலாக "அம்பரீடன்" எனக் குறிப்பிடப்பெற்றுக் (வால்மீகி இராமாயணத்தைப் போலவே) கம்பராமாயணத்தில் (பால காண்டம், மிதிலைக் காட்சிப் படலம்) இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

## அரிச்சந்திரனின் மனைவி, மகன் பெயர்

தமிழில் உள்ள அரிச்சந்திரன் கதை கூறும் நூல்களில் அரிச்சந்திரனின் மனைவி பெயர் சந்திரவதி, சந்திரமதி என்றும், அரிச்சந்திரனின் மகன் பெயர் தேவதாசன், லோகிதாசன், லோகிதாக்ஷன், லோகதாட்சன் லோகதாட்சணன் என்றும் காணப்படுகின்றன.

## சக்கரவர்த்திகள் அறுவருள் ஒருவன்

சக்கரவர்த்திகள் அறுவருள் ஒருவனாக அரிச்சந்திரனைத் திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, ஆசிரிய நிகண்டு, பொதிகை நிகண்டு, நாமதீப நிகண்டு ஆகிய நிகண்டுகள் குறிப்பிடுகின்றன.

சக்கரவர்த்திகள் அறுவர் :— அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புரூரவன், சகரன், கார்த்தவீரியன்.

## இடையெழு வள்ளல்களில் ஒருவன்

இடையெழு வள்ளல்களில் ஒருவனாக அரிச்சந்திரனைச் சில அகராதிகள் (வீரமாமுனிவரின் 'சதுரகராதி', நா. கதிரைவேற்பிள்ளையின் 'தமிழ்ப் பேரகராதி' முதலியன) குறிப்பிடுகின்றன.

## வாரியாரின் சொற்பொழிவில் இடம்பெற்ற புதிய கதைப்பகுதி

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் 'அரிச்சந்திரா' எனுந் தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் (ஒலிப்பதிவு செய்யப்பெற்ற பொழிவு, ஒலிநாடா வெளியீடு: ஆனந்தா கேஸட்ஸ், சென்னை) அரிச்சந்திரன் குறித்துத் தெரிவித்துள்ள சில செய்திகள் கதையமைப்பில் காரணகாரியத் தொடர்புக்கு மிகப்பொருத்தமானவையாகவும் சிறந்தனவாகவும் புதியனவாகவும் காணப்படுகின்றன. ஆயினும் இச்செய்திகள் எந்த நூலில் இடம்பெற்றுள்ளன என்பதைப் பொழிவில் அவர் எடுத்துரைக்கவில்லை. ('ஸ்காந்த புராணத்'தில் இருக்கலாமோ என்பது இவ்வம்மானைப் பதிப்பாசிரியனின் ஐயம்.)

காசி மன்னனின் மகள் மதிவாணியின் சுயம்வரத்தில் கலந்து கொண்ட திரிலோசனன் என்னும் அரசன், நிபந்தனைப்படி கண்டி லிருந்த சிங்கத்தை அடக்கி மதிவாணியை மணந்தான். மணம்புரிந்து கொண்ட அன்றே மாலையில் கங்கையில் நீராடி அரண்மனை திரும்புகையில் அவன் கொடியோன் ஒருவனால் கொல்லப்பட்டான். மணந்த அன்றே கணவன் கொல்லப்பட்டதை அறிந்த மதிவாணி ஆற்றொணாத் துயருடன் அன்று நள்ளிரவில் கங்கையில் சென்று விழுந்துவிட்டாள்.

தண்ணீர் அவளை அடித்துக்கொண்டு சென்றது. செல்லும் வழியில், அதனைக்கண்ட கௌதமர், "யாரோ ஒரு பெண் நீரில் அடித்துச் செல்லப்படுகிறாளே!" என்று நீரில் இறங்கிக் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கரைசேர்த்துக் காப்பாற்றினார்.

மதிவாணி அன்றுதான் தாலி கட்டப்பெற்ற பெண் என்பதை உணர்ந்த கௌதமர், "தீர்க்க சுமங்கலியாகத் திகழ்க!" என அவளை வாழ்த்த, அவள் அழுதபடியே, "என் கணவர் இறந்துவிட்டார். நான் எவ்வாறு தீர்க்க சுமங்கலியாய் வாழ்வது?" என்று சொல்ல, கௌதமர் அதனைக்கேட்டு வருந்திப் பின், "இந்தத் தாலி அப்படியே இருக்கட்டும். நான் உனக்கு ஓர் உபதேசம் செய்கிறேன். அதன்படி நீ தவம் செய். மறுபிறப்பில் நீ இந்தத் தாலியோடே பிறப்பாய். இப்பிறப்பில் உன் கணவனாக இருந்த திரிலோசனன் அடுத்த பிறப்பில் அரிச்சந்திரனாகப்

பிறப்பான். இந்தத்தாலி பிறர் எவருக்கும் காட்சியளிக்காது. அரிச்சந்திரனின் கண்ணுக்கு மட்டும்தான் தெரியும். அவன் உன்னை மணப்பான். மங்கலம் பொலியும்" என்றுரைத்து உபதேசம் செய்தார்.

மதிவாணி தவம்செய்து மறுபிறப்பில் மதிநயனுக்கு மகளாக — சந்திரமதியாகப் பிறந்தாள். திரிலோசனன் அரிச்சந்திரனாகப் பிறந்தான். இருவரும் மறுபிறப்பிலும் கணவன் மனைவி ஆயினர்.

* * *

திரிலோசனன் விசுவாமித்திரரிடம், தொடரும் தன் வினைச் சுமைகளைத் தொலைத்துப் பிறவாமையை வேண்ட, அவரும் பல பிறவிகளில் நீங்கவேண்டிய வினைச்சுமைகளை ஒரே பிறப்பில் நீங்கச் செய்யவே அரிச்சந்திரனாகப் பிறந்ததும் பல துன்பங்களை ஏற்படுத்தினார்.

இவை வாரியார் அவர்கள் மொழிவில் குறிப்பிட்டுள்ள புதிய செய்திகள்; கதைப் பகுதிகள்.

சந்திரமதி கழுத்தில் தாலியுடனேயே பிறந்தாள் என்பதற்கும், அவள் கழுத்தின் தாலி அரிச்சந்திரன் கண்ணுக்கு மட்டுமே தெரியும் என்பதற்கும் பொருத்தமான காரணத்தைப் புகலுவதாக இக்கதைப் பகுதி சிறப்பாக அமைந்து உள்ளது.

அரிச்சந்திரன் கதை கூறும் நூல்கள் சிவனருளால் சந்திரமதி தாலியுடனேயே பிறந்தாள் எனக் கூறுகின்றனவேயொழிய அவ்வாறு பிறந்ததற்கான காரணத்தை விளக்கவில்லை.

விசுவாமித்திரர் காரணமின்றி ஏன் அரிச்சந்திரனுக்கு அளவற்ற துன்பங்களைத் தந்தார், பொய்யன் எனச்சொன்னார் என்பதற்கும் விடை இக்கதைப் பகுதியில் காணப்படுதல் நோக்கத்தக்கது.

## பிற தமிழ் இலக்கியங்களில் அரிச்சந்திரன் கதைக்குறிப்புகள்

வடமொழியிலும் தமிழிலும் பொதுவாகப் பெருவழக்குப் பெற்றுள்ள அரிச்சந்திரன் கதையின் இன்றியமையாச் சில கூறுகளை மட்டும் எடுத்துரைப்பனவாகக் "குமரேச சதகம், திருவேங்கட சதகம், பஞ்சதந்திரப் பாடல், இரங்கேச வெண்பா, ஆத்திசூடி வெண்பா, செயங்கொண்டார் வழக்கம்" முதலிய நூல்களின் ஓரிரு பாடல்கள் அமைந்துள்ளன. (காண்க. பிற்சேர்க்கை-4)

பொதுவான அரிச்சந்திரன் கதையில் காணப்படாத புதிய கதைப் பகுதிகளைத் திருவாரூர்ப்புராணமும் திருவாப்பனூர்ப்புராணமும் எடுத்துரைத்தல் குறிப்பிடத்தக்கது. (தல புராணங்களுக்கே உரிய தன்மையால் இப்பகுதிகள் உருவாகியிருக்கலாம்.) (காண்க. பிற்சேர்க்கை-4)

அரிச்சந்திரன் திருவாரூர் சென்று பிள்ளை வரம் வேண்டிச் சிவனை நோக்கித் தவம் செய்ய, சிவனும் பார்வதியும் காட்சிதர, சிவன் அரிச்சந்திரனுக்குப் பிள்ளை வரம் நல்க, பார்வதியோ தன்னை அரிச்சந்திரன் பரவி வழிபடாத பாவத்தால் சிவனருளால் பிறக்கும் பிள்ளை பாம்பு கடித்து இறப்பான் எனச் சாபங்கொடுத்து மறைந்துவிட, அரிச்சந்திரன் வருந்திப் பார்வதியைப் போற்றி வேண்டி வணங்கி நிற்க, பார்வதி மீண்டும் காட்சிதந்து அருள்செய்து, "பாம்பு கடித்து இறந்தாலும் மீண்டும் உயிர்பெற்று எழுவான்" எனக் கூறுவதாகத் திருவாரூர்ப்புராணம் எடுத்துரைத்தல், பொதுவாக வழங்கும் அரிச்சந்திரன் கதையில் (விசுவாமித்திரர் ஏவலால்) அரிச்சந்திரனின் மகன் பாம்பு கடித்து இறந்து பின் உயிர்பிழைக்கும் செயலுக்கு ஒரு காரண காரியத் தொடர்பு கற்பித்துக் கூறுவதுபோல உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரிச்சந்திரன் அயோத்தியிலிருந்து புறப்பட்டுப் பல திருத்தலங்களையும் தரிசித்துத் திருவாப்பனூர் வந்து இறைவனை வணங்கிப் பின் அயோத்தி சென்று "சத்திய தோடத்தின் உறாது" அரசியற்றி வாழ்ந்தான் எனத் திருவாப்பனூர்ப்புராணம் எடுத்துரைத்தலும் குறிப்பிடத்தக்கது.

ஒட்டக்கூத்தர் இயற்றிய இராமாயணம்—உத்தரகாண்டம் நூலின் சீதை வனம்புகு படலத்தில் ஒரு பாடல் (எண்: 764) அரிச்சந்திரனின் வாழ்க்கையை எடுத்துரைப்பதாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**அரிச்சந்திரன் குறித்து வழங்கும் பழமொழிகளுள் சில :**

"அரிச்சந்திரன் அவன்வீட்டுக் கொல்லை வழியாகப் போனானாம்."

"அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீடு."

"சத்தியத்துக்கு அரிச்சந்திரன்; சாந்தத்திற்குத் தருமராஜன்."

## நாடகங்களில் அரிச்சந்திரன்

தமிழகமெங்கும் திருவிழாக்காலங்களில் இன்றும் நடிக்கப்பட்டு வருகின்ற புகழ்வாய்ந்த நாடகமாக அரிச்சந்திரன் நாடகம் விளங்குகின்றது.

செய்யுள் வடிவிலும் உரைநடை வடிவிலும் அரிச்சந்திரனின் கதைகூறும் நாடகங்கள் தமிழில் மிகப்பல இயற்றப்பெற்றுள்ளன.

பழவேற்காடு இரங்கப்பிள்ளை கவிராயர் இயற்றிய "அரிச்சந்திர விலாசம்" மிகப்புகழ்பெற்ற இசை நாடகமாகும். இசைப்பாடல்கள், வெண் பாக்கள், அகவல்கள், விருத்தங்கள், வசனம், தருக்கள் ஆகியவற்றாலான இந்நாடக நூல் ஆங்கிலத்திலும் **(Arichandra. The Martyr of Truth. A Tamil Drama. Translated into English by Mut'u Cooma'ra Swa'my Mudelia'r)** மொழிபெயர்க்கப்பட்டு இலண்டனில் வெளியிடப்பெற்ற சிறப்பு உடையது. இவ்வரிச்சந்திர விலாசம் விக்டோரியா மகாராணியின் முன்னிலை யில் நடிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

பம்மல் சம்பந்த முதலியார் தாம் எழுதிய அரிச்சந்திர நாடகத்தைப் பன்முறை மேடையேற்றியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அரிச்சந்திரன் நாடகத்தை எழுதி வெளியிட்டுள்ளார். மேலும் அவர் அரிச்சந்திரன் கதையை நேர்மாறாக மாற்றியமைத்து, சந்திரஹரி (ஹரிச்சந்திரன்—சந்திரஹரி) எனும் அரசனை ஓர் உண்மைகூடச் சொல்லாதவனாகவும் அவனை ஓர் உண்மை சொல்லவைக்க முனிவர் சிஷ்டவாசி (வசிஷ்டர்) முயன்று தோற்பதாகவும் புனைந்த "சந்திரஹரி" நாடகம், அரிச்சந்திரன் கதைச் செல்வாக்கைப் பயன் படுத்திச் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க நாடக ஆக்கமாகும்.

உரைநடையில் பவானந்தர் எழுதிய அரிச்சந்திரன் நாடகம், சிறப்பான கதைப்போக்கைக் கொண்டதாகத் திகழ்கின்றது. அந்நாடகத்தில் அரிச்சந்திரனின் தாய்பற்றிக் கூறப்படுதல் குறிப்பிடத்தக்கது. "நாட்டை விசுவாமித்திரருக்குக் கொடுத்துவிட்டு நாடு நீங்கிச் செல்லுகையில், வழியில் அரிச்சந்திரனிடம் விசுவாமித்திரரின் ஆட்கள், 'நாட்டிலேயே தங்கிவிட்ட அவனுடைய தாயார் புத்திரசோகத்தால் தவிக்கிறாள்; ஒரு பொய்யுரைத்தால் நாடு சென்று தாயாரைச் சந்திக்கலாம்' என்கின்ற போதிலும், 'தாயார் இறந்து விட்டார்; ஒரு பொய்யுரைத்தால் நாடு சென்று இறுதிக்கடன்களை ஆற்றலாம்' என்கின்ற போதிலும் அரிச்சந்திரன் வருந்தித் துடித்தாலும் தாயாருக்குச் செய்யவேண்டிய கர்மாக்களைவிடச் சத்தியமே பெரிதென்று பயணத்தைத் தொடர்ந்தான்" எனப் பவானந்தர் அமைத்துள்ள நாடகப் பகுதிகள் அரிச்சந்திர நாடகத்தின் நோக்கத்திற்கு வலிவும் பொலிவும் வழங்குகின்றன.

o o o

தெலுங்கு மொழி நாடகமென்றாலும், தமிழகத்தில் தொடர்ந்து நடிக்கப் பெற்றுவரும் "பாகவத மேளா" ஹரிச்சந்திர நாடகம் குறிப்பிடத்தக்கது.

"அரிச்சந்திரன் யக்ஷகான"மும் இயற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

* * *

## திரைப்படங்களில் அரிச்சந்திரன் கதை

இந்தியாவின் முதல் பேசாப்படம் 1913இல் தாதா சாகேப் பால்கே இயக்கிய "ஹரிச்சந்திரா" என்பதும், தமிழில் அரிச்சந்திரன் கதையைக் காட்டுகின்ற ஐந்து திரைப்படங்கள் வெளிவந்துள்ளன (ஒன்றுமட்டும் மொழிமாற்றுத் திரைப்படம்) என்பதும், அரிச்சந்திரன் கதையை நேர்மாறாக மாற்றிப் பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய "சந்திரஹரி" நாடகம் (இன்னொரு நாடகத்துடன் இணைந்து) திரைப்பட வடிவம் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும். (ஆதாரம் : 'தமிழ் சினிமாவின் கதை'-அறந்தை நாராயணன்.)

## திரைப்படப்பாடல்களில் அரிச்சந்திரன் கதைக்குறிப்பு

பல திரைப்படப்பாடல்களில் உதாரணங்காட்டலாக அரிச்சந்திரன் கதைக்குறிப்பு ஓரிரு வரிகளில் இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

சான்றுக்கு ஒரு பாடல் :

"தந்தை நான் இங்கே நீதிதேவன் அங்கே
நானெழுதும் தீர்ப்பு நாயகனின் வாக்கு
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
நீதியின்முன் நீ யார் நான் யார் சொல்
அன்று அரிச்சந்திரன் பிள்ளை விலைபோனதும்
சுடலை அவன்காக்கவே துன்பம் நிலையானதும்
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
உண்மையைப் போற்றவே — சத்தியம் காக்கவே
அல்லவோ சொல்லுங்கள்"

படம் : நீதிபதி
பாடியவர் : சௌந்தர்ராஜன்
பாடலாசிரியர் : கண்ணதாசன்

# அரிச்சந்திரன் அம்மானை - நூலாராய்ச்சி

தமிழில் அரிச்சந்திரன் கதையை எடுத்துரைக்கின்ற மூன்று சிறந்த இலக்கியங்களுள் இவ்வரிச்சந்திரன் அம்மானையும் ஒன்றாகும். மற்றை இரண்டு சிறந்த இலக்கியங்கள் அரிச்சந்திர வெண்பாவும் அரிச்சந்திர புராணமும் ஆகும்.

இம்மூன்று இலக்கியங்களுக்கும் இடையே உள்ள உறவும் ஒற்றுமையும் குறிப்பிடத்தக்கவையாகும். அரிச்சந்திரன் கதைகூறும் வடமொழி நூல்களை யும் அரிச்சந்திர வெண்பாவையும் பின்பற்றி அரிச்சந்திர புராணமும் அரிச்சந்திர புராணத்தைப் பின்பற்றி அரிச்சந்திரன் அம்மானையும் இயற்றப் பெற்றுள்ளன. (அவ்வந் நூல்களை இயற்றிய புலவர்களே இதனைக் குறிப்பிட்டுள்ளனர்) இம்மூன்று இலக்கியங்களும் அடிப்படைக் கதையமைப் பில் ஒன்றுபட்டும், கொண்டுசெல்லும் கதைப்போக்கில் சிறிது சிறிது மாறு பட்டும் காணப்படுகின்றன. ஒன்றின் தாக்கம் ஒன்றிலாக, மூன்று நூல்களி லும் பல உவமைகள், தொடர்கள் ஒத்தமைந்துள்ளன.

இவ்வரிச்சந்திரன் அம்மானை "கதைகூறும் அம்மானை இலக்கிய வகையைச்" சார்ந்தது எனினும் ஒரு சிறந்த காவியத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் அழகுறப் பெற்றுத் திகழுகின்றது.

வாய்மைக்கு ஒருவனாய் இவ்வையத்தில் போற்றப்படுகின்ற அரிச்சந்திர னின் கதையினை இவ்வம்மானை, அழகிய உவமைகளாலும் ஆற்றல்வாய்ந்த தொடர்களாலும் சொக்கவைக்கும் சொல்லாட்சியாலும் கவினார்ந்த காப்பிய உத்திகளாலும் இணையற்ற வனப்போடு புனைந்து பேசுகின்றது. பேச்சு வழக்குச் சொற்களை ஆங்காங்கு கொண்டு இவ்வம்மானை, இந்நூலைக் கேட்டு மகிழும் பாமர மக்களின் நெஞ்சங்களிலும் கதையைப் பசுமரத்தாணி யாகப் பதியவைக்கின்றது. எத்தனை இடர்கள் எதிர்படினும் சத்தியநெறி யில் மாந்தர் நித்தியம் வாழும்வண்டும் என்னும் விழுமிய உணர்வைக் கற்போர் நெஞ்சில் இவ்வம்மானை எழிலுற விதைக்கின்றது.

சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள 'அரிச்சந்திரன் அம்மானை'யின் நான்கு ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்தி 'யானை பிழைத்த வேலேந்தல் இனிது' என்னும் நோக்கத்தில், ஆர்வத்தில் 'அரிச்சந்திரன் அம்மானை'யினை ஆய்வுப் பதிப்பாகப் பதிப்பித்து வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பெற்று இங்கு இந்த ஆய்வுப்பதிப்புநூல் மலர்கின்றது.

அரி-a

இலக்கியச் சுவைநுகரும் நோக்கத்திலும் ஆய்வுக்கண்ணோட்டத்தி லும் இவ்வரிச்சந்திரன் அம்மானையின் சில சிறப்புகளை, தனித்தன்மைகளை, குறிப்பிடத்தக்க செய்திகளை இனிக் காணலாம்.

## அம்மானை இலக்கியங்கள்

மகளிர் விளையாடும்போது பாடும் பாடலாகவும் (சிலப்பதிகாரம்)' இறைவனைப் போற்றி வணங்கும் பாடலாகவும் (திருவாசகத்தின் திருவம்மானை), பிள்ளைத்தமிழின் பருவப்பாடல்களாகவும் (பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள்), கதைகூறும் நெடிய செய்யுள் இலக்கியமாகவும் (மார்க்கண்டேயன் அம்மானை, கஞ்சனம்மானை முதலியன) பல்வேறு தோற்றங்காட்டுவன அம்மானைப் பாடல்கள்.

நாலுரள். ஆங்காங்கு அம்மானை எனும் ஈற்றுச்சீர்கொண்டு முடியும் அடிகளாலானவை பிற்கால வடிவமாகப் பிறங்கும் நெடிய அம்மானைக் கதைப்பாடல்கள். இவைபுராண, இதிகாசக் கதைப்பகுதிகளை விரிவுபடுத்தி மாற்றங்களுடன் மொழிவனவாகவும் வரலாற்று நாயகர்களின், புராண, காவிய புருஷர்களின் வீர தீரங்கள் அடங்கிய கதைகளைக் கூறுவனவாகவும் அமைந்தவை. இவ்வகை அம்மானை இலக்கிய நூல்களில் ஒன்றே இங்குப் பதிப்பிக்கப்படுகின்ற 'அரிச்சந்திரன் அம்மானை' ஆகும்.

## அரிச்சந்திரன் அம்மானை - நூலமைப்பு

இவ்வம்மானை காப்பு, கடவுள் வணக்கம், அவையடக்கம், நாட்டு வளம், நகரவளம், நூற்பயன் முதலியவற்றைக் காப்பியங்களைப் போலவே எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. மேலும் இருசுடர்த்தோற்றம், மறைவு, கேசாதிபாத வருணனைகள், கனாக்காட்சி முதலியவற்றையும் அழகுறக் கொண்டு அமைந்துள்ளது.

## மூலக்கதை—மூலநூல் பற்றிய குறிப்பு

அரிச்சந்திரன் கதை, வடமொழியில் பல நூல்களில் இடம்பெற்று இருப்பதையும், அவற்றையெல்லாம் ஆய்ந்து வீரகவிராயர் 'அரிச்சந்திர புராணம்' இயற்றியதையும், 'அரிச்சந்திர புராணத்தை' அடியொற்றிப் பல அம்மானைகளைப் புலவர்கள் இயற்றியதையும் கூறும் ஓர் அரிச்சந்திரன் கதைகூறும் அம்மானையை இயற்றியதையும் இவ்வம்மானையை இயற்றிய புலவர் நூலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதி இந்நூலின் முதனூல், முன்னூல்கள் பற்றிய செய்தியினைத் தெளிவாக்குகின்றது. (அடி எண்: 10—24)

## நூல்தோன்றிய இடமும் காலமும்

இந்நூல், "திருமங்கையூர்" எனும் ஊரில் இயற்றப்பெற்றது அல்லது அரங்கேற்றப்பெற்றது என்பதனையும் (அடி எண் 56)

கி. பி. 1737 ஆம் ஆண்டில் (கலியுகம் 4838 ஆம் ஆண்டில் [நளவருடம் கும்பமகம்] இயற்றப்பெற்றது என்பதனையும் (அடி எண் 52—54)

இந்நூலில் இடம்பெற்றுள்ள குறிப்புகள் எடுத்துமொழிகின்றன.

## நூலாசிரியர்

இவ்வம்மானையை இயற்றிய புலவர், நூலின் தொடக்கத்தில் தன்னைப்பற்றிக் கூறுகின்ற

"பூவுலகில் வாழும் புலவோர் இடந்தொழுது
மேவு புகழ்அயோத்தி வேந்தன் கதையுரைத்தோன்
வித்திய தரமுனிவன் மேலிஇதங் கொண்டவன்நான்
சத்தகன்னி மார்வயத்தில் தாரணியில் வந்துதித்தோன்
ஆதிபத்திர காளிக் கனவரத புத்திரன்காண்
நீதியுத்த ஏனாதி நீளுங் கனகுலத்தோன்
நண்ணுங் குலத்துதித்த ராக்கன் தருஞ்சுதன்காண்
எண்ணும் புகழ்கொண் டிலங்கிச் சிறந்திலங்கும்
துய்ய குமார சுவாமியருள் பெத்தவன்காண்
செய்யக் கமலத் திருவுறையுந் தென்மலையில்
மாணிக்க வாசகர்க்கு வாய்த்த தொருசீஷன்" (37—47)

என்னும் பகுதியால், நூலாசிரியர் ஏனாதிகுலத்தவர், ராக்கன் என்பவரின் மகன், தென்மலை மாணிக்கவாசகரின் சீடர் என்கின்ற செய்திகளை அறிய முடிகின்றது. ஆயினும் நூலாசிரியரின் பெயரினை அறியக்கூடவில்லை.

## காப்பு, கடவுள் வணக்கப் பாடல்கள்

'அரிச்சந்திரன் கதையை எல்லோரும் கேட்கும்வண்ணம் அம்மானை வடிவில் பாட விநாயகக் கடவுளே காப்பு' எனும் காப்புப் பாடலாக நேரிசை வெண்பா ஒன்று நூலின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

காப்பு வெண்பாவை அடுத்து விநாயகரை வணங்கும் அழகிய அறுசீர் ஆசிரிய விருத்தப் பாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதன்பின் நூலுள், நூல் சிறப்பாக அமையச் சிவபெருமான், பார்வதி திருமால், முருகன், இலக்குமி, சரசுவதி ஆகியோரைப் பரவும் அம்மானை இலக்கிய அடிகள் இடம்பெற்றுள்ளன. கடவுளரைப் பரவும் இவ்வம்மானை இலக்கிய அடிகளைப்போன்ற அடிகள், அம்மானை இலக்கியங்கள் பலவற்றிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வடிகள், அம்மானை நூல்களுக்கே உரிய பொது இயல்புகளுடன் கடவுளரை 'வந்துதவாய்', 'காத்தருள்வாய்', 'முன்னடவாய்' என முன்னிலைப்படுத்திக் கூறுவனவாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அடி எண்: 23—36)

### அவையடக்கம்

அரிச்சந்திரன் அம்மானையை இயற்றிய புலவர், தமிழ்ப்பெருங் கவிஞர்களின், புலவர்களின் முன்னர்த் தான் கவிதை பாடுவதானது அந்தணர்க்குப் புல்லர் புத்திசொல்வது போலவும், கவிவாணர்கள் வாழும் இடத்தில் வீணன் ஒருவன் வாழ்வது போலவும், குயில் கூவும் கானகத்தில் கூகை உளறியிருத்தல் போலவும், கற்புடைய பெண்கள் இருக்குமிடத்தில் அவர்களுடன் கற்புக் குறைபாடுடைய பெண் வாழ்வது போலவும் தாமரைப் பொய்கையில் கொட்டி பூத்திருப்பது போலவும் ஆகும் என்று கற்பனைநயம் மிளிர அவையடக்கம் பாடியிருத்தல் குறிப்பிடத்தக்கது. (அடி எண் 57—72)

### கோசல நாட்டு வளமும் அயோத்தி நகர வளமும்

பெருங்காவியங்களை ஒப்ப இவ்வம்மானையிலும் கதைத்தலைவனான அரிச்சந்திரனின் கோசலநாட்டு வளமும் அயோத்தி நகரவளமும் கற்பனை நயத்துடன் சிறப்பாகப் புனையப்பெற்றுள்ளன.

நாட்டுவளங் கூறுகையில் அந்நாட்டில் வாழும் விலங்குகளிடத்தும் பகைமை சிறிதுமில்லை என்பதை மானும் புலியும் ஒருதுறையில் நீரருந்தும், பூனையும் எலியும் ஒன்றாய் விளையாடும், கிளியும் பருந்தும் ஒன்றாக உறையும் எனக்கூறுதல் இலக்கிய மரபு. அம்மரபைப் பின்பற்றி இவ்வம்மானையிலும் 'கலைமான் புலி, ஆனை சிங்கம், பூனை எலி, பசுக்கன்று புலிக்குட்டி ஆகியன ஒன்றுபட்டு வாழ்ந்தன' என்று கூறப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அடி எண்: 73—78)

மேலும் மேகங்கள் மழைபொழிதல், நீர்வளம், உழவர்கள் பயிர்த் தொழிலில் ஈடுபடல், நெல்விளைச்சல் முதலியன நாட்டுவளங் கூறும் பகுதியில் சிறப்பாகக் கற்பனை எழில் ததும்பப் புனையப்பெற்றுள்ளன.

நாட்டுவளம் அழகுறப் புனையப்பெற்றது போலவே நகரவளமும் இவ்வம்மானையில் அழகுறப் புனையப்பெற்றுள்ளது. அயோத்திநகர மக்களிடையே எந்தக்குறையும் இல்லை என்பதை, முன்னை இலக்கியங்களின் நகரவளங்கூறும் மரபை அடியொற்றி அழகுறப் பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அடி எண்: 215—230)

## அரிச்சந்திரன் அம்மானையின் உவமைநலம்

அணிகளுள் தலைமையானதான உவமையணி, இலக்கியங்களைக் கவின்பெறச்செய்யும் சிறப்புடையது. சொல்லுகின்ற பொருளை அழகுறவும் அழுத்தமுறவும் கற்போர் நெஞ்சில் பதியச்செய்ய உவமைகள் பயன்படுகின்றன. இவ்வம்மானை நூலில், கதைப்போக்குக்கும் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான, பொலிவுமிக்க, தனித்தன்மை வாய்ந்த உவமைகள் பல இடம்பெற்று இந்நூலை எழில்பெறச்செய்துள்ளன. சிறப்பான அத்தகைய உவமைகளில் ஒருசிலவற்றைமட்டும் இங்குக் காணலாம்.

1. "காலிழந்த மானெனவே கண்ணிழந்த கண்ணெனவே,
மாலிழந்த வேளெனவே, வாலறுந்த மாஎனவே,
கொம்பிழந்த மந்திகள்போல், கோலிழந்த மந்திரிபோல்,
அம்பிழந்த வில்லியைப்போல், அப்பிழந்த சேல்களைப்போல்,
கையிழந்த யானையைப்போல், கட்டிழந்த தொட்டிலைப்போல்,
பையிழந்த செட்டியைப்போல், பட்சிசிற கற்றதுபோல்,
நாடிழந்தும் ஊரிழந்தும் நன்னிதியம் உள்ளதெல்லாம்
ஈடிழந்தும் வாடி இருகாலு மேவருந்தக்
கானகத்தை நாடிநெடுங் காவலனும் செல்லலுற்றான்."
(3025—3033)

2. "கன்னியரும் பாலகனுங் கண்ணான மந்திரியும்
பன்னரிய மாலைமுடிப் பார்வேந்த னுங்கலங்கித்
தாமரையில் நீரெனவே தத்தளித்து மெத்தநொந்து
பூமலரை வெந்தழலில் போட்டுவிட்ட வாறெனவுங்
காஞ்சநெடுங் கொப்பரையில் காட்டிவிட்ட நீரெனவும்,
சாஞ்சுபட்டு வெய்யிலுறுந் தார்வாழைத் தண்டெனவும்,
நாக்கோடி தழ்வறண்டு, நன்மேனி யுங்கருகித்
தாக்குடைய மன்னவனார் தாம்நடந்து செல்லுகையில்."
(3215—3222)

3. "பத்தியத்த காகம் பலகூடித் தானுமொரு
சுத்தியுள்ள அன்னமதைச் சூழ்ந்துகொண்ட வாறெனவே,
அங்கலர்கள் எல்லாம் அரிவையரைச் சூழ்ந்துகொண்டு."
(4511—4513)

4. "மன்னவனைக் கண்டவுடன் வாய்த்தமனு உள்ளதெல்லாம்
பல்லிக் கிருபை பலவாகி, அந்நேரம்
வாடும் பயிரு மழைகண்ட சீரெனவே,
தேடுங் குழலி சிறந்தஅன்னை கண்டதுபோல்,
ஆதுலர்கள் செம்பொன் அதியமுடன் கண்டதுபோல்,
ஓதுங் கமலம் உறுங்கதிரைக் கண்டதுபோல்,
மெத்தமெத்தச் சிந்தை மிகுந்த களிகூர்ந்து,
சித்திரங்களாகச் சிறந்துகண்டார் அம்மானை!" (5383—5390)

## தற்குறிப்பேற்ற அணிநலம்

சூரியோதயமும் சூரியனின் மறைவும், சரயுநதியின் வருகையும், இவ்வம்மானையில் கதை நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமாகத் தற்குறிப்பேற்ற அணி அமையப் பாடப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்குறிப்பேற்ற அணி அமையப்பெற்ற சில பாடற்பகுதிகளின் அடி எண்கள் :

560—568
975, 976
1027—1029
2447—2452
3110—3115
4884—4888
5351—5370

## இலக்கிய அழகு மிகுந்த சில பகுதிகள்

சோலையைச் சந்திரமதியாகவே அரிச்சந்திரன் எண்ணி மயங்குகின்ற பகுதி. அடி எண்: 573-596.

சுயம்வரத்திற்குச் செல்லும் அரிச்சந்திரனும் படையினரும் வழியில் ஆற்றைக் கடக்கின்றபோது தண்ணீர்மட்டத்தைப் படிப்படியாக முடியளவு, நெற்றியளவு, வாயளவு, கழுத்தளவு, இடுப்பளவு, தொடையளவு, முழங்காலளவு, கணைக்காலளவு, பாதத்தளவு எனக்காட்டுகின்ற பகுதி. அடி எண்: 725—734.

சந்திரமதி கருவுற்றதையும் உடல் மாறுபாடுகள் எய்தியதையும் குழந்தை பெற்றதையும் கூறுகின்ற பகுதி. அடி எண்: 1439—1457.

விசுவாமித்திரர் அரிச்சந்திரனைக் கெடுக்க வருவதை உணர்ந்து அஃறிணை உயிர்கள் நடுங்கியதாகக் கற்பித்துக் கூறுகின்ற பகுதி. அடி எண்: *1676—1704*.

வேட்டைக்கு அரிச்சந்திரனுடன் செல்லும் வேடர்கள் அழைத்து வருகின்ற நாய்களின் வகைகளை எடுத்துரைக்கின்ற பகுதி. அடி எண்: *1905—1933*

காசிநகரில் சந்திரமதியை அரிச்சந்திரன் விலைகூறி விற்கும்போது, கூடியிருந்த மக்கள் சந்திரமதியின் உருவ அழகைக் கேசாதிபாதமாக ஒவ்வோர் உறுப்பாக எடுத்துரைத்து 'இதனை விலைமதிப்பிடல் அரிது', 'இதனை விலைமதிப்பிடினும் இதனை விலைமதிப்பிடல் அரிது' எனக் கூறுகின்ற பகுதி. அடி எண்: *3608—3645*.

## கேசாதிபாத வருணனைகள்

முனிவர்கள் அரிச்சந்திரனிடம் சந்திரமதியின் உறுப்பழகுகளைக் கேசாதிபாதமாக எடுத்துரைத்தல்.........அடி எண்: *361—478*.

காளிதேவி கேசாதிபாதமாக வருணிக்கப்பட்டிருத்தல்.........அடி எண்: *815—834*.

ஓவியத்தில் கண்ட அரிச்சந்திரனின் உருவத்தைச் சந்திரமதி நினைத்துப் பார்த்து மகிழும் இடத்தில் அரிச்சந்திரன் கேசாதிபாதமாக வருணிக்கப்பட்டிருத்தல்.........அடி எண்: *919—930*.

சுயம்வர மண்டபத்திற்கு அழைத்து வருவதற்காக அலங்கரிக்கப் பெற்ற சந்திரமதி கேசாதிபாதமாக வருணிக்கப்பட்டிருத்தல்... அடி எண்: *1070-1105*.

அரிச்சந்திரன் சந்திரமதியை விலைகூறி விற்கும்போது, கூடியிருந்த மக்கள் சந்திரமதியின் உறுப்பழகைக் கேசாதிபாதமாக எடுத்துரைத்தல்......... அடி எண்: *3608—3645*

## கனவு காணுதல்

காப்பியத் தலைவனோ தலைவியோ இருவருமோ பின்னர் வருவதை முன்கூட்டியே உணர்த்தும் வகையில் கனவு காண்பதாகப் படைத்தல் காப்பிய மரபுகளுள், உத்திகளுள் ஒன்றாகும். சிலப்பதிகாரக் கனாக்காட்சி யாவரும் அறிந்த ஒன்றே. இம்மரபினை, உத்தியினை உளங்கொண்டு இந்நூலை இயற்றிய புலவர்பெருமகனார், பின்னர் அரிச்சந்திரனுக்கு நேரப்போகின்ற துன்பத்தை முன்கூட்டியே உணர்த்தும் வகையில், சந்திரமதி கனவு காண்பதாகப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அடி எண்: *2433—2448*)

அரிச்சந்திரன் அம்மானையில் காணப்படுகின்ற சில
அரிய ஆட்சிகள், குறிப்புகள்.

1. மோனைக்காகச் சொல்வடிவம் மாறல்.
'புல்லோர்கள் செய்யும் புளைபொறுத்துக் கொள்ளுவது'
(2533)

2. மோனைக்காகப் பெயர்வடிவம் இடையில் மாறல்.
'மூதறிவு சேர்விசுவா முத்திரனும் அந்நேரம்'
(2869)

3. 'பயந்த' (பெற்றெடுத்த) எனும் பொருளில் 'பயின்ற' எனும்சொல் இடம்பெற்றுள்ளமை.

"மன்னவனே நீபயின்ற மாதுசந்திர மாமதியாள்
தன்னிகருக் கொப்பான தார்வேந்தைக் கண்டுவந்தோம்"
(605, 606)

'புத்தியத்த மன்னா! புகழ்பெறவே நான்பயின்ற
பத்தியுள்ள மாதிருவர் பாடிவந்த பேர்தமக்கு'
(2517, 2518)

4. கவிக்கூற்றாக அமைந்த அடிகள் :
'பேரான பாலைப் பெருமைதனைப் பேசலுத்தேன்!'
(798)

'மண்டலமெல் லாந்துதிக்க வானவர்கோன் வீத்திருக்கும்
அண்டர் பதிவளங்கள் யானுரைப்பேன் அம்மானை!'
(1499, 1500)

' இப்படிக்கு மன்னன் இயல்பாய் இருக்குகையில்
மைப்படியுங் கண்ணி வளஞ்சொல்வேன் அம்மானை!'
(3875, 3876)

5. "கூடல் இழைத்தல்" என்னுங் குறிப்பு இடம்பெற்றுள்ள பகுதி: அடி எண் 117—119

6. "எழுபருவ மகளிர்" பெயர்க்குறியீடு இடம்பெற்றுள்ள பகுதி: அடி எண் 135—137

7. "காமதேனு" பற்றிய செய்தி இடம்பெற்றுள்ள பகுதி: அடி எண் 783—792

8. "மன்மதனின் ஐந்துமலர் அம்பு, மன்மதனின் பவனி" பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ள பகுதி: அடி எண் 935—944

9. சந்திரனைப் பாம்பு விழுங்கிப்பின் விடுகிறது எனும் குறிப்பு இடம்பெற்றுள்ள பகுதி: அடி எண் 993, 994

10. கம்பராமாயணத்தின் 'தோள்கண்டார் தோளேகண்டார்' என்னும் பாடலின் சாயலில் அமைந்த அடிகள்: அடி எண்: 1143—1146

11. புறாவுக்காகத் தன் தசையரிந்து கொடுத்த (சிபிச்) சக்கரவர்த்தியின் கதைக்குறிப்பு இடம்பெற்றுள்ள பகுதி: விருத்தம் 44, அடி எண் 1164—1166

12. "பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியத்தின் பருவப்பெயர்கள்" இடம்பெற்றுள்ள பகுதி: அடி எண் 1484—1492

13. திரிசங்கு அரசன் உடம்போடு சுவர்க்கம்புக முயன்ற கதை இடம் பெற்றுள்ள பகுதி: அடி எண் 2623—2691

14. "பாம்பின் நான்கு பற்களின் பெயர்கள்" இடம் பெற்றுள்ள பகுதி: அடி எண் 3951, 3952

15. நீதிநூற் கருத்துகள் இடம்பெற்றுள்ள பகுதிகளுள் சில:

| | | |
|---|---|---|
| அடி எண்கள் | 2417—2419 | 3405—3411 |
| | 2635, 2636 | 3578—3583 |
| | 2981 | 4731—4734 |
| | 3319—3326 | |

[சந்திரமதியின் கூற்றாக இடம்பெற்றுள்ள நீதிநூற் கருத்துகளே அம்மானையில் உள்ள நீதிநூற் கருத்துகளில் அதிகமானவையாகும்]

16. மதுரையில் சிவபெருமான் அருளால் நரி பரியான குறிப்பு: விருத்தம் 133

17. "சிவன் பிள்ளைக்கறிக்கு ஆசைகொண்டான்" எனும் குறிப்பு இடம்பெற்றுள்ள பகுதி: விருத்தம் 136

## நூலை இயற்றிய புலவரின் தமிழன்பு

இந்நூலை இயற்றிய தமிழன்பு மிகுந்த புலவர், பொருத்தம் பொருத்தமின்மை பற்றியெல்லாம் கவலைப்படாமல், கதை மாந்தர்களையெல்லாம் தமிழ் மக்களாக, தமிழ் அன்பர்களாக, தமிழர்களாகவே கண்டு பாடியிருக்கின்றார். சில இடங்களில் பொருத்தமுறவும் சில இடங்களில் பொருத்தம் பற்றிக் கவலைப்படாமலும் தமிழோடு இணைத்துப் பாடியிருக்கின்றார்.

அயோத்தி மக்களைத் தமிழ்க்கலை பயில்பவர்களாகவும், அரிச்சந்திரனைத் தண்டமிழ்நூல் ஆராயும் மன்னனாகவும், தெள்ளுதமிழ்ச் சீரும் சிறப்பும் மிகவுடைய வள்ளலாகவும், அரிய தமிழ்க்குதவுபவனாகவும், தெள்ளுதமிழ்சேரும் செகமன்னர் போரேறாகவும், சந்திரமதியைத் தெள்ளுதமிழ் போன்றவளாகவும், அரிச்சந்திரனின் மகனைத் தெள்ளுதமிழ் சேருகின்ற செம்மலாகவும், அரிச்சந்திரன் மகனுடன் விறகு பொறுக்கச்சென்ற சிறுவர்களைத் தெள்ளுதமிழ்ப் பாலராகவும், அரிச்சந்திரனை விலைக்கு வாங்கி அடிமைகொள்ள வந்த புலையனைத் தெள்ளுதமிழ் வல்ல செழும்புலை வீரனாகவும், காசி நகரத்தைத் தெள்ளுதமிழ்க் காசியெனும் சீர்ப்பதியாகவும் விசுவாமித்திர முனிவரைத் தெள்ளுதமிழ்க் கோசிகனாகவும் தண்டமிழ்சேர் மாமுனியாகவும், விசுவாமித்திரர் தன் சினத்தில் உதித்த பெண்களுக்குப் பயிற்றிய மொழியைத் தமிழாகவும், காசி நகர மன்னனைத் தெள்ளுதமிழ்க் காவலனாகவும் காணுகின்ற உள்ளமாக நூலினை இயற்றிய புலவரின் உள்ளம் திகழ்வதை நூலின் பல அடிகள் நன்கு புலப்படுத்துகின்றன. இத தொடர்கள் நூலினை இயற்றிய புலவரின் தமிழுணர்வை எடுத்துமொழிகின்றன என்பதுடன் அரிச்சந்திரன் கதை தமிழ் மண்ணோடு தமிழர்களின் மனத்தோடு எந்த அளவுக்கு இரண்டற ஒன்றிக் கலந்துள்ளது என்பதையும் எடுத்து மொழிகின்றன எனலாம்.

'தமிழ்' எனும் அடையோடு கூடிய தொடர்களில் சான்றுக்குச் சில:

'தண்டமிழ்நூல் ஆராயும் தார்வேந்த னானவன்காண்'
(அரிச்சந்திரன் பற்றி) *(610)*

'தெள்ளுதமிழ்க் கோசிகன்பால்' *(2428)*

'தெள்ளுதமிழ்க் காசிஎனும்' *(3512)*

'தெள்ளுதமிழ் வல்ல செழும்புலைவீ ரா!'
(வீரவாகு பற்றி) *(3782)*

'தெள்ளுதமிழ்க் காவலனார்'
(காசிமன்னன் பற்றி) *(4509)*

*[தமிழைத் 'தெள்ளுதமிழ்' எனக் குறிப்பதில்தான் நூலாசிரியருக்கு ஆசை அதிகம்.]*

'தமிழ்' என்னும் அடையோடு கூடிய பிற தொடர்களின் அடி எண்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| *17* | விருத்தம் 1 | வி 43 | *1428* | *3836* |
| *29, 30* | *233* | *1162* | *2277* | *3976* |
| *36* | *246* | *1172* | *2373, 2374* | *4205* |
| *57, 58* | *443, 444* | *1227, 1228* | *2588* | வி *136* |

ஈற்றுச்சீர் 'அம்மானை' என அமைந்து முடிந்த அடிகளின் எண்கள்:

56, 82, 131, 148, 260, 276, 309, 508, 568, 600, 648 653, 658, 670, 734, 772, 792, 834, 849, 887, 906, 1108 1168, 1178, 1190, 1208, 1230, 1276, 1284, 1350, 1408, 1422 1438, 1478, 1500, 1527, 1592, 1614, 1621, 1624, 1675, 1704 1712, 1780, 1814, 1821, 1830, 1880, 1982, 2060, 2085, 2106 2136, 2226, 2247, 2257, 2274, 2332, 2352, 2398, 2448, 2452 2472, 2487, 2544, 2578, 2608, 2617, 2642, 2828, 2878, 2893 2902, 3001, 3021, 3062, 3166, 3181, 3271, 3330, 3360, 3392 3419, 3462, 3514, 3753, 3768, 3774, 3796, 3802, 3808, 3830 3876, 3942, 3946, 4120, 4271, 4302, 4406, 4483, 4536, 4630 4639, 4664, 4714, 4848, 4879, 4922, 4952, 4974, 4981, 4998 5028, 5054, 5066, 5080, 5090, 5120, 5158, 5162, 5253, 5265 5269, 5272, 5274, 5281, 5296, 5390, 5411, 5414, 5446, 5454

'அரிச்சந்திரன் அம்மானை' நூலுள் அம்மானை என்னும் சொல்லை ஈற்றுச்சீரில் கொண்டமைந்த அடிகள் மொத்தம் 132 ஆகும்.

### அம்மானை என முடியும் அடிக்கு அடுத்த அடி அந்தாதி அமைப்பில் தொடங்குதல்

சில இடங்களில் 'அம்மானை' எனுஞ்சொல்லை ஈற்றுச்சீராகக்கொண்டு முடிகின்ற அடிகளை அடுத்த அடிகள், 'அம்மானை' என முடியும் அடிகளின் சீர்களைக்கொண்டு அந்தாதி அமைப்பில் தொடங்குகின்றன.

"செய்ய மதிதயன்பால் சென்றுரைத்தார் அம்மானை!
செய்ய மதிதயனுந் தேவியருங் கொண்டாடி" (1350, 1351)

"செயலான பூவுலகில் சென்றுவந்தார் அம்மானை!
சென்றுவந்த கோசிகனும் சிந்தைதனில் எண்ணலுத்தான்;"
(1624, 1625)

"ஆண்டாறு மட்டும் அலைவுத்தார் அம்மானை!
ஆண்டாறு மட்டும் அலைந்தகுடி யானவர்கள்" (1821, 1822)

இவ்வாறு அமைந்துள்ள பிற இடங்களின் அடி எண்கள்:

| | | |
|---|---|---|
| 1830, 1831 | 2257, 2258 | 3946, 3947 |
| 1982, 1983 | 2274, 2275 | 5253, 5254 |
| 2085, 2086 | 2398, 2399 | 5295, 5296 |
| 2226, 2227 | 2487, 2488 | |

## அரிச்சந்திரன் அம்மானையில் இடம்பெற்றுள்ள அடுக்குத் தொடர்கள்

சென்றுசென்று (196), பத்திபத்தி (264), வந்துவந்து (294), கொண்டு கொண்டு (432), எண்ணியெண்ணி (வி 13), எண்ணியெண்ணி (593), யழைக் கழைக்க (594), ஓதியோதி (700), குப்பல்குப்பல் (608), வந்தவந்த (899), அந்தஅந்த (900), கண்டுகண்டு (911), எண்ணியெண்ணி (915), கொண்டு கொண்டு (917), ஏசியேசி (1001), எண்ணியெண்ணி (1022), புலம்பிப்புலம்பி (1131), எண்ணியெண்ணி (1249), மகிழ்ந்தேமகிழ்ந்து (1397), செய்துசெய்து (1418), பத்திபத்தி (1511), எண்ணியெண்ணி (1628), எண்ணியெண்ணி (1679), கண்டுகண்டு (1699), தகுதிதகுதியுடன் (1741), கொண்டுகொண்டு (1944), பந்திபந்தி (1995), சென்றுசென்று (2079), கொன்றுகொன்று (2177), நடந்துநடந்தும் (3035), குப்பல்குப்பலாக (3348), எண்ணியெண்ணி (3883), அழுதழுது (4386) முதலான அடுக்குத்தொடர்கள் செய்யுள் நடைக்கு அழுத்தம் கொடுக்கவும், சொல்லும் கருத்தை அழுத்தமுறச் சொல்லவும், உணர்ச்சி வெளிப்பாட்டிற்குமாக இவ்வம்மானையில் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன.

## அரிச்சந்திரன் அம்மானையில் இடம்பெற்றுள்ள பேச்சு வழக்குச் சொற்கள்

இருக்கலையோ? (62), வாழ்கலையோ? (66) கூண்டபடி (134), கூண்ட மலர் (574), இஞ்சலுடன் (286), கத்தறிந்து (கற்றறிந்து) (355) உத்திலங்கி (356), வெத்தி (வெற்றி) (387), உத்த (உற்ற) (404), சித்தெறும்பு (438), வாறபடை (வருகின்ற படை) (679), கொத்தவன் (684), ஆத்தில் (ஆற்றில்) (725), நெத்தி (728), துடை (730), சுத்தி (சுற்றி) (804), நாத்திசை (நாற்றிசை) (885), அம்பத்தாறு (ஐம்பத்தாறு) (897), சித்திடை (1093), பார்க்கலுத்தான் (1245), பெத்திருக்கும் (1246), பிறா (புறா) (1325), குடுத்து (கொடுத்து) (1328), வீத்திருந்தான் (1337), வயத்தில் (வயிற்றில்) (1440), ஓம்பது (ஒன்பது) (1448), ஏத்த (ஏற்ற) (1563), சாத்து (சாற்று) (1564), விரிச்சதொரு (1594), தாறேன் (1711), வச்சிருந்து (1725), அழைவுத்தார் (1821), விரை (விதை) (1824), லெட சிக்கும் (1841), துடர்ந்து (1998), ஓட்சை (2106), பிலம் (பலம்) (2117) மானம் (வானம்) (2131), பிஞ்சு (பிய்ந்து) (2186), போத்தி (போற்றி) (2289) குத்தம் (குற்றம்) (2332), புழை (பிழை) (2533), இந்தா தெரியுது (3039), பனிக்காத்து (பனிக்காற்று) (3164), வென்னி (வெந்நீர்) (3193), காஞ்ச (காய்ந்த) (3219), சாஞ்சு (சாய்ந்து) (3220). இத்தாள் (மனம் இற்றாள்) (3992) ரோசமுடன் (5116), துகை (5366)

முதலான பல பேச்சுவழக்குச் சொற்களைத் தன்னகத்தே கொண்டு இவ்வம்மானை, நூலைக் கேட்டுமகிழும் பாமரமக்களை ஈர்க்கின்ற திறமுடையதாகத் திகழுதல் குறிப்பிடத்தக்கது.

## அரிச்சந்திரன் அம்மானையின் யாப்பமைதி

அம்மானை இலக்கியங்கள் பலவும், நான்கு சீர்கள் கொண்ட அடிகள் பலவற்றால் ஆக்கப்பெற்றவையாகவே காணப்படுகின்றன. இந்த அடிகள், இரண்டடிக்கு ஓர் எதுகையைப் பெற்றும், பெறாமலும் இயற்றப்பெற்றிருக்கும். அம்மானை நூல்களின் இந்த யாப்பமைதியைக் கண்டு முதன்முதலில் இலக்கணங்கூறிய தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கண நூற்பா ஈண்டு நோக்குதற்குரியது.

"கலிப்பா அரைஅரை ஆகக் கூட்டியும்
எதுகை இன்றித் தனித்தனி சேர்த்தும்
காண்த அம்மானை கழறினர் சிலரே."

அறுவகையிலக்கணம்—யாப்பிலக்கணம்
நூற்பா எண் - 430

இவ்வம்மானையில் நான்கு சீர்களாலான அடிகள் 5464 இடம்பெற்றுள்ளன. இவ்வடிகள் 'இரண்டடிக்கு ஓர் எதுகை' என அமைந்தனவாகும். இந்த அடிகள் ஒவ்வொன்றிலும் இடம்பெற்றுள்ள சீர்களுக்குள் மட்டும் பெரும்பாலும் வெண்டளை பயின்றுள்ளது. இதனால் இந்த அடிகள் ஓசைநயங் கொழிப்பனவாக அமைந்துள்ளன. அடிகளுள் பெரும்பாலும் பொழிப்பு மோனை இடம்பெற்று ஓசைச் சிறப்பை ஏற்படுத்துகின்றன.

நூலுள், இந்த 5464 அடிகளைத் தவிர, ஒரு நேரிசைவெண்பாவும், ஒரு விநாயகர் வணக்க விருத்தமும், இடையிடையே 141 விருத்தங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நூலில் இடம்பெற்றுள்ள விருத்தங்கள் : கலிவிருத்தம் 81, அறுசீர் ஆசிரிய விருத்தம் 36, எழுசீர் ஆசிரிய விருத்தம் 12, சந்த விருத்தம் 13. (மொத்தம் 142)

## இந்நூற்பதிப்புக்கு அடிப்படையாக அமைந்த சுவடி

சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் நான்கு அரிச்சந்திரன் அம்மானைச் சுவடிகள் உள்ளன. அவற்றின் எண்கள் 1386, 1574, 1691, 1749 ஆகும். இச்சுவடிகளுள் செம்மையும் முழுமையும் நல்லநிலையும் கொண்டு விளங்கிய சுவடியான 1386 ஆம் எண் சுவடி இப்பதிப்பிற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பெற்றது.

இப்பதிப்பிற்கு அடிப்படையாகக் கொள்ளப்பெற்ற 1386 ஆம் எண் ஓலைச்சுவடி 248 ஏடுகளைக்கொண்டது. 42×3 செ. மீ. அளவுடைய ஏடுகளால் ஆனது.

சுவடியின் தொடக்கத்தில் 'சகட சக்கரத் தாமரை நாயகன்' என்னும் பாடல் எழுதப்பெற்றுள்ளது. சுவடியின் இறுதியில் 'வேலும் மயிலும் துணை. ஸ்ரீராமஜெயம்' என மட்டுமே எழுதப்பெற்றுள்ளது. சுவடியை எழுதியவர் பற்றிய விவரம் எதுவும் காணப்பெறவில்லை.

இச்சுவடி திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், தோகைமலை வழி, மத்தகிரி அஞ்சல் முன்னாள் கர்ணம் திரு கோ. இராமசாமிப்பிள்ளை அவர்களால் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும்.

## இந்நூலின் பதிப்பு நெறிகள்

பதிப்பில், சுவடி எழுதுவோரால் நிகழும் பிழை எனக் கொள்ளத்தக்க பிழைகள் மட்டும் களையப்பெற்றுள்ளன. பேச்சுவழக்குச்சொற்கள் முதலியவற்றில் எந்த மாற்றமும் திருத்தமும் செய்யப்படவில்லை. 'கேள்க்கலுற்றான்' எனச் சுவடியில் இடம்பெற்றுள்ள வடிவம் 'கேட்கலுற்றான்' எனப் பதிப்பில் மாற்றப்பெற்றுள்ளது. சுவடியில் சந்தி புணர்த்தி எழுதப்பெற்ற சீர்கள், அடிகள் பெரும்பாலும் படிப்போரின் எளிமை கருதிப் பதிப்பில் சந்தி பிரித்துத் தெளிவுறத் தரப்பட்டுள்ளன. சுவடியில் ஓரிடத்தில் 'வீத்திருக்கும்' என்றும் இன்னோரிடத்தில் 'வீற்றிருக்கும்' என்றும் உள்ள ஆட்சிகள் ('மண்டபம், மண்டவம்' எனவெல்லாம்) அவ்வாறேபதிப்பிக்கப்பெற்றுள்ளன. 'அன்னேரம், அன்னாட்டில்' என இருந்தவை 'அந்நேரம், அந்நாட்டில்' எனப் பதிப்பில் மாற்றப்பெற்றுள்ளன.

அடிப்படையாகக் கொள்ளப்பெற்ற சுவடியுடன் பிற மூன்று சுவடிகளும் ஒப்புநோக்கப்பெற்றுப் பெறப்பட்ட பாடவேறுபாடுகள் பக்கங்கள் தோறும் முறையே "அடி எண், சீர் எண், பாடவேறுபாட்டுப்பதம், சுவடி எண்" ஆகியன தந்து தெளிவாகக் குறிப்பிடப்பெற்றுள்ளன.

பக்கங்கள்தோறும் இவ்வம்மானையின் முதனூலான அரிச்சந்திர புராணத்தில் காணப்படும், இந்நூற்பகுதிகளை ஒத்த பகுதிகள் ஒப்புமையாகக் காட்டப்பெற்றுள்ளன ஒப்புமைப் பாடற்பகுதிக்கு முன் பாடற்சூழலும் பொருளும், பதிப்பாசிரியரால் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

நூலுள் இடம்பெற்றுள்ள பல்வகை விருத்தங்களுக்கு யாப்பு வடிவப் பெயர்க்குறியீடுகளும், சந்தவிருத்தங்களுக்குச் சந்தக்குழிப்பும், சில இடங்களில் அடைப்புக்குறிக்குள் தலைப்புகளும் பதிப்பாசிரியரால் தரப்பட்டுள்ளன. அடைப்புக் குறியின்றிக் காணப்படும் தலைப்புகள் சுவடியிலேயே இடம் பெற்றிருந்தவையாகும்.

நூலில், அம்மானை இலக்கியம் நிறைவுபெற்றதும் இவ்வம்மானையுடன் நெருங்கிய உறவும் ஒற்றுமையும் உடைய நூல்களுள் ஒன்றான அரிச்சந்திர வெண்பாவுக்கும் இவ்வம்மானைக்கும் உள்ள ஒற்றுமைப்பகுதிகள், குறிப்பிடத்தக்க வேறுபாடுகள், ஒத்த உவமைகள் ஆகியன பிற்சேர்க்கை-1 எனக் குறிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளன.

அதுபோலவே அரிச்சந்திர புராணத்திற்கும் இவ்வம்மானைக்கும் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடுகள், ஒத்த உவமைகள் ஆகியன பிற்சேர்க்கை-2 எனக் குறிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளன.

சத்தியத்தினின்று சற்றே வழுவும் அரிச்சந்திரன், சற்றும் வழுவாத அரிச்சந்திரன் என இருவேறு நிலைகளிலான கதைகளை இணைத்துக்கூறும் வடமொழி நூலான ஸ்ரீதேவீபாகவதத்தின் அரிச்சந்திரோபாக்யானத்தின் தமிழ்மொழிபெயர்ப்பின் சுருக்கம் (இவ்வம்மானைப் பதிப்பாசிரியரால் சுருக்கி எழுதப்பெற்றுப்) பிற்சேர்க்கை-3 எனக் குறிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழிலக்கியங்கள் சிலவற்றில் இடம்பெற்றுள்ள அரிச்சந்திரன் கதைக் குறிப்புகள், பிற்சேர்க்கை-4 ஆகவும், அரிச்சந்திரன் கதைகூறும் நூல்கள் சிலவற்றின் பட்டியல் பிற்சேர்க்கை-5 ஆகவும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

பிற்சேர்க்கைகளை அடுத்து, அம்மானையில் இடம்பெற்றுள்ள விருத்தங்களுக்கான செய்யுள் முதற்குறிப்பு அகராதியும், அம்மானையில் இடம் பெற்றுள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் தரும் அருஞ்சொல் அகராதியும், இப்பதிப்பினை உருவாக்கப் பயன்பட்ட துணை நூல்களின் பட்டியலும் தரப்பட்டுள்ளன.

அருஞ்சொல் அகராதியில், பொருள் விளங்காச் சொற்களுக்கும் அரிய பெயர்களுக்கும் அவை நூலில் இடம்பெற்றுள்ள அடி எண்கள் மட்டும் சுட்டப் பெற்றுள்ளன.

நூலின் முற்பகுதியில், இந்நூலாராய்ச்சிப் பகுதியும், அரிச்சந்திரன் அம்மானையின் கதைச்சுருக்கமும், வடமொழியிலும் தமிழிலும் காணப்படுகின்ற அரிச்சந்திரன், அரிச்சந்திரன் கதை நூல்கள் குறித்த அரிய செய்திகளைத் தாங்கிய விரிவான கட்டுரையும் எழுதி அமைக்கப்பெற்றுள்ளன.

இப்பதிப்பில் ஆளப்பெற்றுள்ள சுருக்கக் குறியீடுகளுக்கான விளக்கம்:

பா. வே.—பாட வேறுபாடு

ஒப்புமை—ஒப்புமைப் பகுதி

வி—விருத்தம், விருத்தத்தின் எண்.

அரிச். புரா.—அரிச்சந்திர புராணம்

(வி)—வினைச்சொல்

## நிறைவுரை

இங்கு, நூலாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ள "அரிச்சந்திரன் அம்மானை" யின் அமைப்பு, இயல்புகள், சிறப்புகள், தனித்தன்மைகள் முதலியன ஆய்வுக் கண்ணோட்டத்தில் 'நூலாராய்ச்சி' எனுந்தலைப்பில் சுருக்கமாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. இப்பகுதி, இலக்கிய அன்பர்களும் ஆய்வாளர்களும் இவ்வம்மானையின் இயல்புகளை ஓரளவு அறிந்துகொள்ளத் துணைசெய்யும்; ஆழ்ந்து கற்கத் தூண்டும் என்பது பதிப்பாசிரியனின் நம்பிக்கை.

# அரிச்சந்திரன் அம்மானையின்
# கதைச்சுருக்கம்

கோசல நாட்டை அயோத்தியிலிருந்து ஆண்ட அரசன் அரிச்சந்திரன். அவன் திரிசங்குவின் மகன். தன் அவைக்கு வந்த முனிவர் சிலர் எடுத்துரைத்ததால் அவன் கன்னோசி மன்னன் மதிதயனின் மகள் சந்திரமதியை மணக்க விருப்பம் கொண்டான். சந்திரமதியின் திருமணச் சுயம்வரத்தில் கலந்து கொள்ளக் கன்னோசி நாட்டுக்குப் புறப்பட்டுச்சென்றான். செல்லும் வழியில் காளிகோயிலில் வருணன் சபித்து வைத்துப்போன கல்லால் ஆன தேர், வில், அம்பு அவன் கண்ணுக்குப் பொன்னால் ஆனவையாகத் தென்பட, காளிதேவி அவற்றை வருணன் கூறிச்சென்றதற்கேற்ப அவனுக்கே வழங்கினாள். அவற்றைப் பெற்றுக்கொண்ட அரிச்சந்திரன் சுயம்வரத்தில் கலந்துகொண்டான். சுயம்வர மண்டபத்திற்கு அழைத்துவரப்பெற்ற சந்திரமதியின் கழுத்தில் தாலிபிலங்கக் கண்டு ஐயமுற்றான் மதிதய மன்னன், சிவன் வரமளித்த போது கூறிய "சந்திரமதியின் கணவனாகத் தக்கவன் கண்ணுக்கு மட்டுமே அது தோன்றும்" எனும் வாக்கை உரைத்து அரிச்சந்திரனின் ஐயத்தை அகற்றினான். பின் சந்திரமதி வீசிய மாலை அரிச்சந்திரனின் கழுத்தில் விழத் திருமணம் இனிது நடந்தது. உரிய காலத்தில் சந்திரமதி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அரிச்சந்திரனும் சந்திரமதியும் 'லோகதாட்சன்' எனக் குழந்தைக்குப் பெயரிட்டுச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர். குழந்தைக்கு அகவை ஐந்து ஆனது.

அக்காலகட்டத்தில், தேவேந்திரன் தன் அவையிலிருந்த முனிவர்களை நோக்கிப் புவியிலுள்ள மன்னர்களில் சத்தியநெறி தவறாதவன் யாரெனக் கேட்டான். வசிட்ட முனிவர் அரிச்சந்திரனைக் குறிப்பிட்டார். உடன் அதனை விசுவாமித்திரர் மறுத்து அரிச்சந்திரன் சத்தியம் தவறுபவன் என்றார். இருவருக்கும் கடும் வாக்குவாதம் எழுந்தது. நாரதர் இருவரையும் அமைதிப்படுத்தி, இருவரில் எவர் கூற்று தவறென ஆகிறதோ அவர்

எதனை இழப்பது எனப்பந்தயம் கூறவேண்டும் என்றார். வசிட்டர் தான் கூறியது தவறென ஆனால் தன் தவவேடத்தை நீக்கித் தலையில் கட்குடம் தூக்கித் தெற்குத்திசை செல்வதாகவும், விசுவாமித்திரர் தான் கூறியது தவறென ஆனால் தன் தவவலிமையில் பாதியை அரிச்சந்திரனுக்கு அளித்து விடுவதாகவும் கூறினர். நாரதர் அப்போது வசிட்டரை, விசுவாமித்திரர் அரிச்சந்திரனின் சத்தியந் தவறாத தன்மையைச் சோதித்து முடிக்கும்வரை பூமிக்குச் செல்லாமல் தேவலோகத்திலேயே இருக்கவேண்டுமெனக் கூறினார். வசிட்டரும் அதற்கு உடன்பட்டு இருந்தார்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரனைச் சோதிக்கப் பூமிக்குப் புறப்பட்டுச் சென்றார். மண்ணுலகில், முனிவர் நால்வரை அரிச்சந்திரனிடம் அனுப்பித் தான் செய்யும் யாகத்திற்குப் பொன் தரக்கேட்டார். அரிச்சந்திரன் பொன் தர ஒப்பியதை அறிந்து நேரில் சென்று யானைமேல் இருந்து வலியோன் ஒருவன் வீசும் கவண்கல் சென்றுவிழும் தூரம்வரை பொன் வேண்டும் என்றார். அரிச்சந்திரன் அவ்வளவு பொன்னையும் வழங்கும் தருணத்தில் "இப்பொன் உன்னிடமே நான் கொடுத்து வைத்ததாக இருக்கட்டும். யாகந் தொடங்கும் நேரத்தில் வந்து பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறிச்சென்றார்.

அரிச்சந்திரனை எவ்வகையிலாவது துன்புறுத்திச் சத்தியந் தவறச் செய்யவேண்டும் எனும் நோக்கத்தில் விசுவாமித்திரர், காட்டுவிலங்குகள், பறவைகள், ஊர்வனவற்றை அனுப்பி அவன் நாட்டு வயல்கள், தோட்டங்கள், நீர்நிலைகளைப் பாழ்படச்செய்தார். அதனால் வருந்திய குடியானவரின் வேண்டுகோளுக்கு இணங்க அரிச்சந்திரன் படையினரோடும், வேடர்க ளோடும் வனம்புகுந்து அவ்விலங்கு, பறவை. ஊர்வனவற்றை அழித்தான். பெரும்பாலானவை அழியத். தப்பிய ஒன்றிரண்டு விசுவாமித்திரரிடம் சென்று நிகழ்ந்தவற்றைக்கூறி முறையிட்டன.

தான் ஏவிய உயிர்களை அரிச்சந்திரன் அழித்தான் எனக் கேட்டதும் விசுவாமித்திரர், கொடிய பன்றியொன்றைப் படைத்து அரிச்சந்திரனையும் அவனுடன் காட்டிற்கு வந்துள்ள மனைவி, மகன், அமைச்சர் சத்தியகீர்த்தியை யும் தவிரப் படையினர் அனைவரையும் அழித்துவருமாறு அனுப்பினார். பன்றியும் அவ்வாறே அழித்தது. படையினரைப் பன்றி அழிப்பதை அறிந்த அரிச்சந்திரன் காளி வழங்கிய வில்லையும் அம்பையும்கொண்டு பன்றியைக் காயப்படுத்தினான். வலி தாங்கமுடியாமையால் வலிமையிழந்த பன்றி விசுவாமித்திரரிடமே திரும்பிச்சென்று அரிச்சந்திரனின் ஆற்றல்மிகுதியைச் சொல்லி வீழ்ந்தது.

தானனுப்பியவற்றையெல்லாம் இவன் துன்புறுத்தினனே என எண்ணி வெகுண்ட விசுவாமித்திரரின் கோபநெருப்பில் இரு அழகிய கன்னியர் தோன்றினர். சண்டாளமென்னும் கோபத்தால் தோன்றிய அப்பெண்கள் புலைப்பெண்கள் ஆயினர்.

அப்பெண்களுக்குக் கலைகளனைத்தையும் கற்பித்து அரிச்சந்திரனிருக்கு மிடம் சென்று கலைத்திறன்காட்டிப் பரிசாக அவனுடைய மகுடத்தைக் கேட்குமாறும் தரமறுத்தால் தங்களிருவரையும் மணக்கக் கேட்குமாறும் அதனையும் மறுத்தால் தங்களுடன் ஒருநாள் கூடிக்களிக்க வேண்டுமெனக் கேட்குமாறும் அவர்களிடம் விசுவாமித்திரர் சொல்லி அனுப்பிவைத்தார்.

அவ்விரு பெண்களும் அவ்வாறே செய்தனர். அரிச்சந்திரன் அவர்களி டம், கேட்கத்தக்கனவற்றைக் கேட்குமாறு கூற, அவர்கள் தாம் முன் கேட்ட வற்றையே வற்புறுத்த, அவன் காவலரை அழைத்து அப்பெண்களைத் தள்ளித் துரத்தி அனுப்பச்செய்தான். அப்பெண்கள் அழுதுபுலம்பி நடந்த வற்றை முனிவரிடம் உரைத்தனர்.

அன்றிரவு அரிச்சந்திரன், அவன் மனைவி, மகன் முதலியோர், காட்டில் அமைத்திருந்த கூடாரத்தில் உறங்குகையில் எதிர்காலத்தில் நாட்டை இழந்து கணவன் மனைவி மகன் அனைவரும் பிரிந்து துன்புற இருப்பதை முன்கூட்டி உணர்த்தும் ஒரு தீய கனவினைச் சந்திரமதி கண்டாள். அதனை அரிச்சந்திர னிடம் சொன்னாள். அவன் அதனை அமைச்சரிடம் சொல்லக் கனவின் பொருளறிந்து மூவரும் கலங்கினர்.

இருபெண்களும் அரிச்சந்திரனால் தள்ளப்பட்டதை அறிந்து சினங் கொண்ட முனிவர் அவன் இருக்குமிடத்திற்குச் சென்றார். முனிவர் வரவு கண்டு அரிச்சந்திரன் முதலியோர் அவருடைய பாதம் பணிந்தனர். பாதம் பணிந்த அரசனை முனிவர் காலால் உதைத்துத் தான் அனுப்பிய விலங்கு முதலானவற்றையும் பன்றியையும் இருபெண்களையும் துன்பமுறச் செய்த குற்றத்தைப் பொறுக்கமுடியாது எனப் பொங்கி உரைத்தார். அவன் விலங்கு முதலியனவும் பன்றியும் அவர் அனுப்பியவை எனத் தெரிந்திருந்தால் தங்கள் நாட்டவர்க்கும் படையினர்க்கும் துன்பம் நேர்ந்த போதிலும் துன்புறுத்தி யிருக்கப் போவதில்லையென்றும், வந்த பெண்கள் தகாதனவற்றைக் கேட்ட தால் துரத்த நேர்ந்ததென்றும் பணிந்து கூறினான்.

விசுவாமித்திரர் தன் மக்களான இருபெண்களையும் அவன் மணந்து கொண்டால் அவன் செய்த இக்குற்றங்களைப் பொறுத்துக்கொள்வதாகக் கூறினார். சந்திரமதியைத்தவிரப் பிற தாரம் கொள்ளமுடியாதென்றும் இப்புலைப்பெண்களை அதனால் மணக்க இயலாதென்றும் நாட்டையே இழக்கநேரினும் சரியென்றும் அரிச்சந்திரன் அதற்குப்பதில் கூறினான்.

தன் மக்களைப் புலைப்பெண்கள் எனச் சொன்னதால் அரிச்சந்திரன் புலையனுக்கு அடிமையாகும்படி சாபம் தந்து, 'நாட்டை இழக்க நேரினும் சரி' யென்றதால் இப்பெண்களை மணந்துகொள்ள மறுப்பதற்குப் பதிலாக நாட்டைத் தானமாய் அளித்துச் செல்லுமாறு முனிவர் உரைத்தார்.

பிறதாரம் கொள்வதினும் நாட்டையிழத்தல் நன்றென்ற மகிழ்ச்சியுடன் அரிச்சந்திரன் நாட்டைத் தாரைவார்த்து முனிவருக்கு அளித்துப் புறப்பட, விசுவாமித்திரர், அரிச்சந்திரன், அவன் மனைவி, மகன் ஆகியோர் அணிந் திருந்த ஆடை ஆபரணங்களைக் கழற்றி வாங்கிக்கொண்டு அவர்களுக்கு உடுத்த அழுக்கடைந்த காவித் துணியினைக் கிழித்தளித்தார்.

விசுவாமித்திரரிடம் நேரில் நாட்டை ஒப்படைத்து அரிச்சந்திரன் புறப்படுகையில், முன்னர்த் தான் யாகத்திற்காகக் கொடுத்து வைத்திருந்த பொன்னைத் தந்துசெல்லுமாறு முனிவர் கூறினார். நாடு முதலான அனைத்தையும் தாரைவார்த்துத் தந்தபின் தன்னிடம் கொடுப்பதற்குத் தனியே பொன்னில்லையென அவன் சொன்னான்.

அதுகேட்ட முனிவர், தாரைவார்த்துத் தருகையில் 'யாகத்திற்கான பொன் உட்பட' எனச் சொல்லவில்லையே என்றும் முன் பொன் தருவதாகச் சொல்லவில்லையெனச் சொல்லிச் செல்லுமாறும் உரைத்தார். "முன் தருவ தாகச் சொன்னதைச் சொல்லவில்லை எனப் பொய் கூறேன். காசிநகர் சென்று பொன் ஈட்டி முன் கூறிய பொன்னை உமக்கு அளிக்கக் கால அவகாசம் நாற்பதுநாள் நல்குக!" என்று கேட்டுக் கால அவகாசம் பெற்று மனைவி மகனுடன் அவன் காசிக்குப் புறப்பட்டான். அமைச்சர் சத்தியகீர்த்தியும் முனிவரிடம் இசைவு பெற்று அவர்களுடன் சென்றான். நாட்டுமக்கள் நடந்தவற்றையெல்லாம் அறிந்து அழுது துடித்தனர். அரிச்சந்திரன் தர வேண்டிய பொன்னைப் பெற்றுவரச் சுக்கிரன் என்பவரை முனிவர் அவர்க ளுடன் அனுப்பி வைத்தார்.

அரிச்சந்திரன் முதலானோர் காட்டு வழியாகக் காசிக்குச் சென்றனர். நாற்பதுநாள் கால அவகாசத்திற்குள் பொன்னை ஈட்டித்தர இயலாமல் தாமதப்படுத்தி அரிச்சந்திரனைச் சொன்னசொல் தவறியவனாக்க விசுவாமித்திரரும் சுக்கிரனும் வழியில் பல தடைகளை உருவாக்கித் துன்புறுத்தினர். உடன் வருவதற்காகத் தனியே பொன்னைக் கூலியாகத்தரவேண்டுமெனச் சுக்கிரன் கேட்டுத் தொந்தரவுசெய்து அரிச்சந்திரனை ஒப்புக்கொள்ளச் செய்தார். விசுவாமித்திரர் மேகத்தை ஏவி மழைபெய்து வெள்ளம் வரச் செய்தும், தேள், அட்டை முதலியவற்றை அனுப்பியும், அக்கினியை அனுப்பியும், பேய்களை அனுப்பியும், கார்க்கோடகன் எனும் கொடிய பாம்பை அனுப்பியும், பாதையில் கற்கள், இலந்தை முள், நெருஞ்சி முள், காரை முள் முதலியவற்றைப் போட்டுவைத்தும் பல இடையூறுகளை ஏற்படுத்தி அரிச்சந்திரன் முதலானோரின் பயணம் தாமதமாகும்படியும் அவர்கள் மனம் தளரும்படியும் செய்தார்.

ஆயினும் அரிச்சந்திரன், சந்திரமதி, லோகதாட்சன், சத்தியகீர்த்தி ஆகியோர் தங்களின் பொறுமைக் குணத்தாலும் உயர்பண்புகளாலும் தடைகளைக் கடந்து நாற்பதாம் நாள் காலையில் காசி நகரை அடைந்தனர். காசி விசுவநாதரையும் தேவி விசாலாட்சியையும் வணங்கி நின்றனர்.

முனிவருக்குத் தரவேண்டிய பொன்னை எவ்வாறு ஈட்டுவதென அரிச்சந்திரன் எண்ணிநிற்கச் சந்திரமதி தன்னை எவருக்காவது வேலையாளாக விற்றுப் பொன்பெற்று முனிவருக்குக் கொடுக்குமாறு கூறினாள். காசிநகரில் சந்திரமதியை அவன் விலைகூறி நின்றான். அந்தணன் ஒருவனிடம் சந்திரமதியையும் தன் மகனையும் விற்று யானை மேலிருந்து வீசியெறியும் கவண்கல் சென்றுவிழும் தூரம் அளவுக்குப் பொன்பெற்று விசுவாமித்திரருக்குத் தரவேண்டிய பொன்னைத் தந்தும், தன்னைப் புலையன் வீரவாகுவுக்கு அடிமையாகச் சத்தியகீர்த்தியை விற்கச்சொல்லி அதனால் பெற்ற பணத்தைச் சுக்கிரனுக்குக் கொடுத்தும் சொன்னசொல் தவறாதவனானான். புலையனுக்கு அடிமையான அவன் சொல்லொணாத் துன்பத்துடன் மயானங் காவல்காக்கும் பணியைச் செய்துவந்தான்.

அந்தணனுக்கு அடிமையான சந்திரமதியும் அவள் மகனும், அந்தணனும் அவன் மனைவியும் கொடுமையாகத் தங்களை நடத்திய போதிலும் கடுமையாக உழைத்து வேலைசெய்து வந்தனர். ஒருநாள் சிறுவருடன் தர்ப்பை கொய்யச்சென்ற லோகதாட்சனை விசுவாமித்திரர் ஏவிய பாம்பு கடிக்க அவன் அங்கேயே இறந்தான். மகன் இறந்ததை அறிந்து துடித்த

சந்திரமதி அந்தணரிடம் மன்றாடிக்கேட்டு அனுமதிபெற்று மகனிறந்து கிடக்குமிடத்தைத் தேடிச்சென்றாள். கண்டு அழுது துடித்தாள். உடலை எரிக்க மயானத்திற்கு எடுத்துச்சென்றாள். மயானத்தில் இற்றுவெந்த குறைவிறகுக் கட்டைகளை அடுக்கி மகன் உடலை எரிக்கும் தருணத்தில் மயானங்காவல்காக்கும் அரிச்சந்திரன் வந்து தடுத்தான். மயானத்தில் பிணத்தை எரிக்கத் தரவேண்டிய கால்பணம், ஆடை, வாய்க்கரிசியைத்தந்து பின்எரிக்கச் சொன்னான். தன்னிடம் தர எதுவுமில்லை எனச்சொன்ன சந்திரமதியின் கழுத்தில் பொன் மாங்கல்யம் இருக்கக்கண்ட அவன் அதனை எடுத்துரைத்தான்.

தன் கணவன் அரிச்சந்திரன் கண்களுக்கன்றிப் பிறர் கண்களுக்குத் தோன்றாத மாங்கல்யம் இப்போது மயானங் காக்கும் இப்புலையன் காணு மாறு ஆயிற்றே என்று சொல்லிச் சந்திரமதி புலம்பக்கேட்ட அரிச்சந்திரன் புலம்புவது தன் மனைவியென்றும் இறந்து கிடப்பது தன் புதல்வனென்றும் அப்போதுதான் அறிந்தான். அறிந்து அவன் அழுது துடிப்பதைக் கண்டு, அவன் சொல்லியழுவதைக் கேட்டுச் சந்திரமதியும் அவன் தன் கணவனே என உணர்ந்து நடந்தவற்றைக் கூறினாள். அவனும் தான் புலையனுக்கு அடிமை யானதை எடுத்துரைத்தான்.

அரிச்சந்திரன் சந்திரமதியைத் தன் தலைவனான வீரவாகுவுக்குப் பிணஞ்சுடத் தரவேண்டிய கால்பணத்தையும் ஆடையையும் அவள் வேலை பார்க்கும் அந்தணரிடம் வாங்கிவருமாறு கூறியனுப்பினான். சந்திரமதி மயானத்திலேயே மகன் உடலை விட்டுச்சென்றாள்.

அவள் செல்லும் வழியில், விசுவாமித்திரர் ஏவிய மூவர் காசிமன்னனின் மகனைக் கொன்று உடலைப் போட்டுச்சென்றனர். அவ்வுடலைப் பார்த்த சந்திரமதி தன் மகன் உடலைத்தான் பேய்பிசாசுகள் இங்கு கொண்டுவந்து போட்டுவிட்டனவோ என ஒருகணம் மயங்கி உடலைக் கையிலெடுத்துப் பார்த்தாள்.

அப்போது அங்கே காசிமன்னன் மகனைத் தேடிவந்த காவலர்கள் இக்காட்சியைக்கண்டு, சந்திரமதியே அவனைக் கொன்றதாக முடிவுசெய்து கட்டியடித்து இழுத்துச்சென்று மன்னன்முன் நிறுத்தினர். மன்னன் அவள் கொலை செய்திருக்கமாட்டாள் எனப் பலவகையில் எண்ணியும் சொல்லியும் கூடச் சந்தர்ப்ப சூழல்கள், சாட்சிகள் அவளைக் குற்றவாளியாக எண்ணச் செய்தன. விதியின் விளைவால் அவளை வெட்ட ஆணையிட மனத்தில்

எண்ணி அவையிலிருந்த மறையவரை நோக்கி, "இவளுக்கு என்ன தண்டனை அளிப்பது?" எனக்கேட்டான். அப்போதங்கு ஆதிமறை வேதியனாய் விசுவாமித்திரர் வந்துநின்று, "தலையை வெட்டிக் கொல்லவேண்டும்" என்று கூறினார்.

காசிமன்னன், வீரவாகுவை அழைத்து வாள்தந்து சந்திரமதியை வெட்டுமாறு ஆணையிட்டான். ஆணைப்படி சந்திரமதியை அழைத்துச் சென்ற வீரவாகு, அவளையும் வாளையும் அரிச்சந்திரனிடம் ஒப்படைத்துக் கொலைக்களத்திற்குக் கொண்டுசென்று வெட்டுமாறு உத்தரவிட்டான்.

வீரவாகுவின் சொற்படி அரிச்சந்திரன் சந்திரமதியைக் கொண்டு சென்றான். சந்திரமதியும் அரிச்சந்திரனும் ஒருவரையொருவர் உணர்ந்து நடந்தவற்றை அறிந்து வருந்தினர்.

அப்போது விசுவாமித்திரர் அங்குவந்து, "உங்களை இத்துயரினின்று மீட்கிறேன்; இறந்த மகனை உயிர்ப்பிக்கிறேன்; நாட்டைத் திருப்பித் தருகிறேன். என் மக்களை மணந்துகொள் அல்லது நாடு தந்ததை இல்லை என்று சொல்" என்று கூறி அவனைச் சத்திய நெறியினின்று தவறச்செய்ய முயன்றார்.

அரிச்சந்திரனோ உயிர்பெரிதன்று சத்தியமே பெரிதென்று சொல்லிச் சந்திரமதியின் தலையை வெட்ட வாளை வீசினான். வாள் சந்திரமதியின் கழுத்தில் செண்பகப்பூ மாலையாய் விழுந்தது.

சிவன், திருமால், பிரமன் முதலான தெய்வங்களும், தேவேந்திரன், வசிட்டர், விசுவாமித்திரர் முதலியோரும் அங்கே தோன்றினர். மக்கள் நடந்தது கண்டு மகிழ்ந்தனர்; அதிசயித்தனர். தேவலோகத்தில் நடந்தவற்றைச் சிவனின் ஆணைப்படி விசுவாமித்திரர் அரிச்சந்திரனுக்கு எடுத்துரைத்தார்; சத்தியம் தவறாத அரிச்சந்திரனைப் புகழ்ந்துரைத்தார். அரிச்சந்திரன் அனைவரையும் வணங்கிநின்றான். அவனுடைய மகனும் காசி மன்னனுடைய மகனும் உயிர்பெற்று மீண்டனர்.

அந்தணனாகவும் புலையனாகவும் வந்து தாங்களே அவர்களை அடிமைகொண்டதை அக்கினிதேவனும், யமதருமனும் எடுத்துரைத்தனர்.

மறுப்புரைத்த போதிலும் அரிச்சந்திரனுக்கு அவனுடைய நாட்டையும் தன் தவவலிமையில் பாதியையும் விசுவாமித்திரர் அளித்தார். அரிச்சந்திரனும் சந்திரமதியும் அடிமைப்பட்டதை அறிந்து அவர்களை மீட்கப் புறப்பட்ட மதிதயனும் காசிக்கு அப்போது வந்துசேர்ந்தான். யாவும் நலமாய் முடிந்ததை எண்ணி மகிழ்ந்தான்.

கடவுளர் அனைவரும் வாழ்த்த, வசிட்டரும் விசுவாமித்திரரும் வாழ்த்த அரிச்சந்திரனும் சந்திரமதியும் லோகதாட்சனும் அயோத்திக்கு மகிழ்ச்சியுடன் மீண்டனர். நாட்டு மக்கள் நடந்தவற்றை அறிந்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அவர்களை வரவேற்றனர். அமைச்சர் சத்தியகீர்த்தியின் துணையுடன் அரிச்சந்திரன் அயோத்தியைச் சிறப்பாக அரசாட்சி செய்து நெடுங்காலம் நன்கு புகழுடன் வாழ்ந்து வந்தான்.

இரண்டாம் பகுதி :

நூல்

# அரிச்சந்திரன் அம்மானை

[பாட வேறுபாடுகளுடனும் ஒத்த அரிச்சந்திரபுராணப்
பாடப் பகுதிகளுடனும்]

# அரிச்சந்திரன் அம்மானை

## (விநாயகர் காப்பு)

### நேரிசை வெண்பா

ஆராரும் கேட்க அரிச்சந் திரன்கதையைச்
சீராரும் அம்மானை செப்பவே — நீராருந்
தும்பைச் சடைமுடியான் சோதியரன் தந்தருளும்
கம்பக் கடகளிறே காப்பு. ௦௦

## (விநாயகர் வணக்கம்)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

சீர்கொண்ட தவமுனிவன் கவுசிகன்சோ திக்கநிறை
சிதறா வண்ணம்
பேர்கொண்ட சத்தியரிச் சந்திரநா மப்பகுதி
பேச நாளும்
நீர்கொண்ட சடைப்பரமன் இடப்பாகம் அகலாத
நிமலி ஈன்ற
கார்கொண்ட முகத்தானை முகவனிரு தாள்கமலங்
கருத்துள் வைப்பாம். ௦

---

பாட வேறுபாடு : விருத்தம் ௦. 1 : 5 தவறா 1574 4 : 5, 6 கருத்தில் சேர்ப்பாம் 1574

## (நூல்)

### நடை

பூமாது வாழ்க புகழ்கெவுரி வீத்திருக்க
நாமாது வாழ்கஇந்த நானிலமெல் லாந்தழைக்கச்
செங்கமலத் தோனுந் திருமாலும் ஈசுரனும்
ஐங்கரனும் புங்கவனும் அண்டருடன் கொண்டாடிச்
சையோகத் தியாகத் தயவாக வீத்திருக்கும்
அய்யோத்தி என்னும் அணிநகரை ஆண்டமன்னன்
எங்கெங்குங் கீர்த்தி இலங்கித் துலங்கிடவே
சங்கமுன் றுக்கரசு தானாண்ட வண்மையினால்
மறிதங்கு கையான் மகாதேவர் கொண்டருளுந்
திறிசங்கு வேந்தனெனும் சீர்வேந்தன் தந்தமைந்தன்
சத்தியரிச் சந்திரனைத் தாரணிவா னம்புகழ
வெத்தி அரனருளால் மேன்முனிசோ தித்ததினால்
நாடுவிட்டுக் காசிபுக்கி நங்கைமக னும்விலையாய்ப்
பாடுபட்டு நீங்கிப் பலன்பெத் துகந்தகதை
பண்டுவட நூலில் பகர்ந்தார் பெரியோர்கள்
கண்டுமதை வீர கவிராயன் ஆராய்ந்து
சீருந் தமிழால் சிறந்தவிருத் தத்துகையால்
நேருலவு காண்டமென நீளுலகத் தேயுரைத்தார்.
ஆண்டபுவி யில்கவியோர் அப்பொருளைத் தானெடுத்து
வேண்டியசீர் அம்மானை மேதினியி லேயுரைத்தார்.
பெம்மான் அருளால்இப் பேருலகில் ஆசையுடன்
அம்மானை யாகஇந்த அம்புவியில் சொல்லிடவே

---

பா. வே. 5 : 1, 2 சையோகத் தியாகத் 1691, 6 : 3 அணிநகரி 1691
8 : 1 சங்கமுமுன் 1574
9 : 1 மறிதங்குங் 1691 9 : 4 கொண்டாடும் 1574
11 : 3, 4 தாரணியோர் தான்புகழ 1574
12 : 3, 4 மேன்முனிவன் சோதினையால் 1574, 1691
13 : 2 காடுபுக்கி 1574, 14 : 2 முன்னாள் 1574
14 : 3, 4 பலன்பெற் றுகந்தகதை 1574, 1691
17 : 4 தத்தொகையாய் 1691 18 : 4 தேயுரைத்த 1574
19 : 2 யில்கவிஞோர் 1691
19 : ஆண்டபுவி யில்கவிஞர் அப்பொருளை ஆராய்ந்து 1574
22 : 2 யாகஇன்னம் 1691
22 : அம்மானை யாகஇன்ன அம்புவியோர் சொல்லிடவே 1574

## (கடவுளர் வணக்கம்)

எண்ணும் எழுத்தும் இசைபா வளந்தனக்குக்
கண்ணாக வேயிருந்து கற்பகமே காத்தருள்வாய்!
முப்புரத்தைத் தீயெரித்த முக்கண்ண னே! பரனே!
அப்பணியுஞ் செஞ்சடையின் அண்ணலே முன்னடவாய்!
வேலைபொருப் போடுபுவி மிக்கஅண்டப் பல்லுயிரும்
கோலமுட னேபயின்ற கோதையே முன்னடவாய்!
ஆலிலையில் பள்ளிகொள்ளும் அச்சுதனே மாயவனே
ஏலமுட னீதுதமிழ்க் கெந்நாளும் வந்துதவாய்!
வானோர் சிறைதவிர்த்து வல்லசுர ரைக்கடிந்து
மேனா டுறவிளங்கும் வேலவனே முன்னடவாய்!
செய்யகம லத்துறையுஞ் செந்திருவே எந்தாயே
வையகத்தில் உந்தனருள் வண்மையுட னேயருளும்!
வெள்ளைநிறத் தஞ்சுகமே வெண்டரளம் பூண்மயிலே
தெள்ளுதமிழ் தந்தருளும் தேவிசர சோதிஅம்மா!

## (நூலாசிரியன், நூல் தோன்றிய காலம், இடம்)

பூவுலகில் வாழும் புலவோர் இடந்தொழுது
மேவு புகழ்அயோத்தி வேந்தன் கதையுரைத்தோன்
விந்திய தரமுனிவன் மேவிஇதங் கொண்டவன்நான்
சத்தகன்னி மார்வயத்தில் தாரணியில் வந்துதித்தோன்
ஆதிபத்ர காளிக் கனவரத புத்திரன்காண்
நீதியுத்த ஏனாதி நீளுங் கனகுலத்தோன்

---

பா. வே. 23 ; 3 இசைவாய் 1691 இசைவா 1574
25 : 3, 4 முக்கணனே தற்பரனே 1574
28 : 4 காத்தருள்வாய் 1574, 1691
29 : 1 ஆழிதுயில் 1749 30 : 2 னீதிதமிழ்க் 1691
30 : ஏலமுடன் இத்தமிழுக் கெந்நாளும் வந்துதவும்! 1574
31 : 4 ரைச்செகுத்து 1574 33 : 4 என்தாயே 1749
37 : 4 அடிதொழுது 1574, 1691
38 : 4 கதையுரைத்தார் 1691 கதையுரைத்தேன் 1574
39 : 1 வித்தியா 1574
39 : 4 கொண்டவனாம் 1691, கொண்டவன்னாள் 1574, 1749
40 : 2 மார்வயற்றில் 1574 1749 41 : 4 புத்திரர்காண் 1749
42 : 1 நீதியுற்ற 1574 1691 1749

நண்ணுங் குலத்துதித்த றாக்கன் தருஞ்சுதன்காண்
எண்ணும் புகழ்கொண் டிலங்கிச் சிறந்திலங்கும்
துய்ய குமார சுவாமியருள் பெத்தவன்காண்
செய்ய கமலத் திருவுறையுந் தென்மலையில்
மாணிக்க வாசகர்க்கு வாய்த்த தொருசீஷன்
ஆணிப்பொன் நீள்மதுரை ஆதிகயற் கண்ணியெனும்
நாரணிகல் யாணி நளின மலர்ப்பதத்தைப்
பூரணமாய்ப் போத்திப் புகழும் புகழேறி
இன்பரச மாகியக வீசுரர்கள் கொண்டாடும்
நன்பு கலியுகம்நா லாயிரத்தெண் ணூத்துமுப்பத்(து)
எட்டாண் டதனில் இலங்கும் நளவரிசம்
மட்டாருங் கும்ப மகத்தில் இயல்பாகத்
தருமங்கள் தான்பெருகித் தாரணியி லேவிளங்கும்
திருமங்கை யூர்தனிலே செப்பினன்காண் **அம்மானை !**

## (அவையடக்கம்)

வல்லதமிழ் ஓதும் வனிதமுள்ளோர் தங்கள்முன்னே
சொல்லும் பொருளுமதின் சூஷ்த்திரமுந் தானறியேன் !
நேரனைய வேத நெறியுடைய அந்தணர்க்குச்
சீரறியாப் புல்லர் சிறந்துபுத்தி சொன்னதொக்கும் !
கண்டசித்தி சொல்லும் கவிவாணர் சேர்பதியில்
மிண்டுசொல்லும் வீணர் மிகவே யிருக்கலையோ ?

---

பா. வே. 43 : 4 தருசுதன்காண் 1749
45 : 4 பெற்றவன்காண் 1574 1691 1749
50 : 2 போற்றிப் 1574 1691 1749
51 : 2, 3 மாகவுமே யீஷ்பரர்கள் 1574 51 : 4 கொண்டாட 1574
52 : 3, 4 லாயிரத்தெண் ணூற்றுமுப்பத் 1749
லாயிரத்தெண் ணூத்திமுப்பத் 1691
53 : 1, 2 எட்டாண்டு தன்னில் 1691 53 : 4 நளவருஷம் 1749
55 : 1 தருமங்கை 1749
58 : 4 தானறியான் 1691
59 : 3, 4 நெறியுடையோர் தங்கள்முன்னே 1574
60 : 3 சிறந்தபுத்தி 1574
62 : 4 யிருப்பதொக்கும் 1574

வன்னக் குயில்கூவும் வாய்த்தபெருங் கானகத்தில்
உன்னதவிண் கூகை உளறி யிருக்கலையோ ?
வாழுகின்ற கற்புடைய மங்கையர்கள் தங்களுடன்
ஆழும் பலகவனத்(து) ஆயிழைமார் வாழ்கலையோ ?
செய்யாள் இலங்கும் செழுங்கமலப் பொய்கையிலே
வெய்யதொரு கொட்டி மிகப்பூத் திருக்கலையோ ?
குத்தம் பலபிழைகள் கோட்டிமெத்தச் செய்தாலும்
பெத்ததாய் பிள்ளைதனைப் பேரழியச் சொல்வதுண்டோ ?
அப்படியென் றெண்ணி அடர்ந்தபுன்(சொல்) சொன்னாலும்
செப்பமுடன் கொண்டாடிச் சீராக வேமகிழ்ந்து

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

அம்புவி யதனில் வாழும்
அருந்தமிழ்ப் புலவோர் ஆய்ந்து
வம்புறு மொழியீ தென்ன
மனதுற வறிந்துத் தாலும்
கொம்பனை உமையாள் பாதம்
குணமுடன் வணங்கிச் சொன்னேன்
நம்பிக்கை யாலே இந்த
நானிலத் தோர்கொள் வீரே ! 1

---

பாட வேறுபாடு :

நடை 63 : 4 கானகத்தே 1691 1749
64 : 1 உன்னியதோர் 1574
66 : 3 ஆயிழையார் 1749
70 : 4 செய்வதுண்டோ 1749

விருத்தம் 1 2 : 1 வன்புறு 1691
2 : 3 தென்று 1574 1691 1749
2 : 5, 6 வறிந்துற் றாலும் 1749 வறிந்திட் டாலும் 1574
3 : 6 சொன்ன 1574 1691

## (நாட்டு வளம்)

அறிவுடன் பொறுமை ஞானம்
அதிகட முடனே நீதி
நெறிநிறை பெருகும் வேத
நிலைபுவி புரக்கும் வேந்தன்
குறிதிரி சங்கு பாலன்
குணமுட னிருக்கும் அந்தத்
திறமுறு அயோத்தி நாட்டின்
திகழ்வளம் உரைக்க லுற்றேன் !

### நடை

காட்டகத்தில் வாழுங் கலைமான் இனங்களுடன்
தேட்டமுறு பன்றிபுலி சேர்ந்துவிளை யாடிநிற்கும்.
ஆனையுடன் சிங்கம் அதிகஉற வாயிருக்கும் !
பூனையுடன் கிள்ளையெலி போந்துவிளை யாடல்பெறும் !
சுரவிக் குறளையுடன் தோன்றுபுலிக் குட்டிகளும்
விரவு மொருஇடத்தில் மேவிநின்று நீரருந்தும்!
பெம்மான் அருள்பெருகிப் பேருலகி லேமிகுந்து
மும்மாரி மாதம் முறைமையுட னேபொழிந்து

---

பாட வேறுபாடு:

விருத்தம் 2 *1 : 2* பொருள்மெய்ஞ் *1691* *2 : 2* பெருகி *1574* *1691*
*3 : 1* குறிதிரு 1574
*4 : 1* திறமுடன் 1574 4 : 1, 2 திருவுறு மயோற்றி 1691

நடை *74 : 1* தேட்டமுறும் *1574*
*76 : 4* யாடிநிற்கும் *1574* *1691*
*78 : 1, 2* விரவுற் றொருதடத்தில் *1691*
*80 : 3* முறமையுட *1574*

ஒப்புமைப் பகுதி: அடி எண். 73—78. விலங்குகளிடத்தும் பகைமை இல்லை என்பது.

"பொருந்தி மானும் புலியும் புனலுடன்
அருந்தி வாழும் ஒருதுறை அன்பினால்.
பருந்தும் பைங்கிளி யும்ஒரு பஞ்சரத்
திருந்து வாழும் இரவும் பகலுமே."

—அரிச்சந்திர புராணம்-நகரச் சிறப்பு-20

அப்புநிறைந் தேரிகளும் ஆனவய லும்பொழிலும்
செப்பமுட னேசிறந்து சேர்ந்திருக்கும் அம்மானை!

சீலமுள்ள மள்ளர்நெடுஞ் சிங்காரந் தன்னுடனே
கோலமுடன் நீடுவயல் கோலியொழுங் குந்திருத்திக்
கூட்டமிக வேதிரண்டு கூடியுழ வோடிநின்று
நாட்டம் பரம்படித்து நாடிவரும் போதினிலே
வாய்த்தகிடாக் காலழுத்தி வாகுமொருக் கால்நெருங்கிப்
பாத்ததிசை தோறும் பருசங்கு முத்தீனும்!
கன்னலெனுங் கோலால் கடாவை நடத்திமள்ளர்
உன்னிவரக் கன்னல் ஒடிந்துமுத்துச் சாறொழுகும்!
வாலைக் கடைசியர்தம் மண்டுகல விப்புலவிக்
கோலத்தை நெஞ்சிலெண்ணிக் கொண்டுஉழும் மள்ளர்சிலர்
தாமரையைக் கண்டரிவை தன்முகமென் றெண்ணிவந்து
பூமரையீ தென்றுகண்டு போந்துமறுத் தும்உழுவார்.
வளமான சித்திரம் வகுத்தவயல் பக்கமெல்லாம்
நளபாக வர்க்கவிரை நாடியெங்கு மேநிரைப்பார்.
கூத்துவனைக் கொல்லும் குணாலவிழி மள்ளியரும்
ஆத்தகுர வைச்சிறப்போ டானநட வுந்திருத்தி

---

பா. வே. 81 : 4 லும்பெருகிச் 1574
84 : 4 காய்த் திருத்தி 1574
85 : 4 வேயுழுது 1574 86 : 4 வேளைதனில் 1574
87 : 2 காலழுந்தி 1574, 1691
87 : 3 வாகுபெறக் 1691
87 : 3, 4 வாகுபெறச் சேற்கலங்கிப் 1574
89 : 1 கன்னலுறுங் 1574, 1749
89 : 4 நடாத்திமள்ளர் 1691
91 : 4 விப்புதுமைக் 1574
92 : 2 நெஞ்சில்வைத்துக் 1574
98 : 1 ஆர்த்தகுர 1691

ஒப்புமை : அடி எண். 89, 90 கடாவின்மேல் கரும்புச்சாறு ஒழுகல்.

"..........................கார்க்கடா
மேலெ லாம்பொழி வேழத்தின் சாறு......"

—அரிச். புரா. நாட்டுச்சிறப்பு-34

மய்யலுடன் தங்கள்முறை மள்ளர்களுங் கொண்டாடச்
செய்யகளிப் போடுகும்மி சேர்ந்துவிளை யாடிநிற்பார்;
ஏரிவயல் காட்டில் இடைதோறும் பூத்திருக்கும்
சீரியசெந் தாமரையைச் சென்றுசென்று தான்பறித்து
எறிந்துசில மள்ளியர்கள் இன்பமுடன் நின்றிடவே
செறிந்துபல மள்ளரிதைச் சீராகப் பார்த்துநிற்பார்;
எண்ணரிய தேவர்களும் ஈஸ்பரனும் மால்அயனும்
நண்ணியுறை யுங்காவும் நாடு(ம்)மிகு சோலையெங்கும்
பாகுநல்ல சம்பம் பலாவின் கனியுடனே
வாகு கதலி வளமான மாங்கனியும்
வீசுதென்ற லால்உதிர்ந்தும் மிக்கமந்தி யால்விழுந்தும்
பேசுகிளி யால்உடைந்தும் பேறான தேனொழுகும்.
தேனாறு வெள்ளந் திரண்டாளைப் பாலுடனே
மேனான வாரியெங்கும் மிக்கநதி யும்பெருகிச்
சாலி வயல்தடமுந் தங்குமஞ்சள் இஞ்சியிலும்
ஏலித்து வந்தே இசைந்தமுர்த மும்பாயும்.

---

பா. வே. 101 : 2, 3 காட்டின் இடந்தோறும் 1691
103 : 4 நின்றிடுவார் 1574
104 : 2 மள்ளரதைச் 1691
104: 3, 4 சீராக வேபாத்து 1574 1749
105 : 3 ஈசுரனு 1749
106 : 3 நாட்டமிகுஞ் 1691
107 : 2 சம்பு 1574 1691, சம்பும் 1749
109 : 4 யால்விழுந்து 1574 1691
110 : 2 யாலுடைந்து 1574 1691
110 : 4 தேனொழுகி 1574 1691
112 : 2 வாரியெண்ண 1691
114 : 1 ஏலிற்று 1691

ஒப்புமை : அடி எண். 106—114 கனிகளின் சாறு கழனியில் பாய்தல்.

"இறவு பாய இருங்கத லிக்கனி
மறவி பாயவருக் கைக்கனி மாங்கனி
பிறவும் வாய்விண்டு பீறிப் பொழிந்திடு
நறவு பாய்ந்திட நாறு வளர்ந்தவே."

—அரிச். புரா. நாட்டுச்சிறப்பு-39

வேகமுடன் நீளும் மிகுவாளை யுங்கயலும்
வாகுபெறத் துள்ளியிளம் வாழைகன்ன லில்குதிக்கும்;
ஏடவிழுங் கேசகமின் என்றிலங்கும் மள்ளியர்கள்
ஓடை மணலில் ஒழுங்காய் நிலம்பரப்பிக்
கூடல் இழைத்தே குலாவியிருப் போர்மடியில்
நீடுமன்னம் முட்டையிட்டு நேசமுட னேபறக்கும்;
கோலிமன்னன் நீதிக் குணம்போல எந்நாளும்
சாலிப் பயிரோங்கித் தானே கதிர்முதிர்ந்து
கற்பனைய மின்னார் கனிந்துநிற்கும் வாறெனவே
நெற்பயிர்கள் நின்றிலங்கும்; நீதியுள்ள மள்ளர்களும்
கஞ்சமுகம் என்னுங் கடைசியர்க ளும்மெழுந்து
நெஞ்ச மகிழ்ச்சியுடன் நீண்டவய லுட்புகுந்து.

---

பா. வே. 116 : 2 துள்ளியினம் 1574
117 : 4 பள்ளியர்கள் 1574
118 : 4 மணல்பரப்பி 1574
121 : 3 குணம்போலே 1691
123 : 2 மின்னாள் 1574
124 : 2 நின்றிலங்க 1574 1749

ஒப்புமை : அடி எண். 117—120 கூடல் இழைத்திருக்கின்ற பெண்டிர் மடியில் அன்னம் முட்டையிடல்—சங்கு முத்தீனுதல்.

"நெடிய நெய்தலின் நித்தில வண்டலில்
கொடிய காதலிற் கூடல் இழைத்திடும்
கடிய நீலக் கருங்கண் நுளைச்சியர்
மடியி லேறி வளைகண்முத் தீனுமே."

—அரிச். புரா. நாட்டுச்சிறப்பு-57.

அடி எண். 121—124 நெற்கதிர் முதிர்ந்து கற்புடைய மங்கையர்போல் தலைசாய்த்து நிற்றல்.

"சேலி ரும்புனற் கேள்வனைச் சேர்ந்துபின்
சூலி ருந்து துவண்டலைந் தீன்றுமெய்ப்
பாலி ருந்து பசந்து பழுத்தசெஞ்
சாலி கற்பினர் போற்றலை சாய்த்தவே."

அரிச். புரா. நாட்டுச்சிறப்பு-44

## கலிவிருத்தம்

முதிருங் கதிர்கொய் திசைமுறை மையுடன்
விதமும் பெறுசிமை கொடுமெல் லியரும்
கதனம் புகழும் களமீ தினில்வைத்
திதமெங் கதிர்தாம் அடிசெய் திடுவார்! 3

அடிபட் டிடுமங் கதிரா னதுவே
திடமுற் றிடுமுத் துகள்சேர் பிறவும்
பொடியுத் திடுதுணி பதர்போய் விடவும்
வடிவுத் திடும்பொற் குவிவைத் திடுவார்! 4

## நடை

அரிந்துகதி ரோங்கி அடித்துக் குவித்தசென்னல்
பெரியகிரி வெள்ளிமலை பேறான மேருகிரி
அட்ட கிரியெனவும் ஆனபல குன்றெனவும்
திட்டமுட னேகுவித்த சீரான சென்னல்முத்தும்
மன்னர் அகமுழுதும் மாவே தியரகமும்
பொன்னாம் வணிகரகம் போந்தமள்ளர் தம்மகமும்
நீண்ட சகடேத்தி நீள்களஞ்சி யத்தேத்திக்
கூண்டபடி நித்தங் குணமுறுங்காண் **அம்மானை!**

பேதை பெதும்பையுடன் பேரான மங்கையரும்
ஓதும் மடந்தை உரியஅரி வைதெரிவை

---

பாட வேறுபாடு:

விருத்தம் 3 2 : 2 பெறுசுமை 1574 1691
4 1 : 2 டிடுமக் 1691 1 : 4 னதுவைத் 1749
2 : 3 துகள்போற் 1691 3 : 1, 2 பொடியுற் றிடுதூள் 1691

நடை 131 : 3, 4 மாவேதிய ரகமுழுதும் 1574
132 : 1 பொன்னார் 1749
133 : 1, 2 நீண்டசக டத்தேற்றி 1691 நீண்டசக டத்தேத்தி 1574 1749
133 : 4 யத்தேற்றி 1691 யம்நிரைப்பார் 1574

பேரிளம்பெண் ணில்வனிதப் பெண்கள்சிலர் தாமெழுந்து
வாரியுட தல்லமட வன்னங்கள் போல்நடந்து
பூங்கமுகுந் தெங்கும் புகழ்ந்திலங்குஞ் சோலையிடம்
மாங்குயிலின் ஓசைகளும் வண்டிசையுங் கேட்டுகந்து
அன்றில்களும் நாரைகளும் ஆனகுரண் டங்களுடன்
வென்றிலன்னம் புள்ளினமும் வீத்திருக்கும் வாவிநண்ணிக்
காரிகையார் சென்று கனிந்துமிகக் கொண்டாடிச்
சீரியதோர் வீறும் சிறந்துவிளை யாடல்செய்து
நீராடிப் பட்டுடுத்தி நீள்திலத மையுமிட்டுச்
சீராடிப் பூவெடுத்துச் சென்றுகட்டிக் கொண்டுநிற்கும்
தேவர்முதல் யாவர்களும் திக்குள்ளோர் தானறிய
மூவர்புகழ் நாட்டின் முறைமையிது **அம்மானை!**

நற்புறும்*அய் யோத்தி* நகர்வளங்க ளுஞ்சிறப்பும்
சிற்பமுடன் நானும் சிறிதுரைக்கக் கேட்டருளீர்.

## நகர வளம்

பூங்கமலந் தான்அலரப் பூவைஅன்னஞ் சேவல்அன்னம்
ஓங்கிவிளை யாடும்மதில் உத்ததிரை சுத்திநிற்கும்!
தூயபர மன்பதிபோல் தோன்றுமயன் மால்பதிபோல்
நேயநெடு நீளம் நிரைசேர் அகலமுடன்
மேகமண்ட லத்துயரம் மீறுகொம்மை யுஞ்சிகரம்
வாகுகொண்ட வெள்ளைநிறம் மண்டுசிவப் பானநிறம்

---

பா. வே. 137 : 4 தானெழுந்து 1749
140 : 3, 4 வண்டிசைக ளுங்கேட்டு 1691
142 : 1 வென்றியன்னம் 1574' 1691 142 : 4 சோலைநண்ணி 1574
146 : 3 சிண்டுகட்டிக் 1691
146 : 4 கொண்டுநிற்பார் 1574
147 : 3, 4 திக்கிலுள்ளோர் தாமறிய 1691 147 : 4 தாமறிய 1749 1574
150 : 3 சிறந்துரைக்கக் 1691
151 : 2 தான்மலரப் 1691
152 : 3, 4 உற்றதிசை சுற்றிநிற்கும் 1691
155 : 4 யின்சிகரம் 1574

* 'அய்யோற்றி' என அடிப்படைச் சுவடியில் உள்ளது.

மாதுபரை யும்பரனும் வந்துகுடி கொண்டதுபோல்
சாதுவரிக் கல்வயிரந் தானிலங்குங் கோட்டைமதில்
தூசுகொடி மாமகர தோரணங்கள் நின்றிலங்க
வாசலொரு காதம் வழிக்குவழி ரெண்டாக
நாடும் ஒருதிசைக்கு நாலாறு வாசலுடன்
நீடுமொரு நால்திசைக்கும் நீண்டபடி தானிலங்கும்
*சீலமணி மேடைகளும் சிங்கார லாகடமும்
கோலமணி மண்டபமும் கோபுரமும் நீள்மதிலும்*
பத்தியுள்ள மாதுநல்லார் பந்தடிக்கும் மேடைகளும்
சித்திரமின் னார்மகிழ்ந்து சீருலவுங் கோயில்களும்
கொங்காரும் பொற்கனகக் கோதையர்கள் கூட்டமுடன்
சிங்கார மாய்நடனஞ் செய்திருக்குஞ் சாலைகளும்
அரசர் நெடுந்தெருவும் ஆதிமறை யோர்தெருவும்
விரசெரியும் வேந்தர் மிகுத்ததெரு வீதிகளும்
பாவாணர் வீதிகளும் பண்சேவு கர்தெருவும்
மாவாணர் வீதியுடன் வெண்மையுள்ளோர் தன்தெருவும்
தேரோடும் வீதிகளுந் தேங்குநிரை யும்மொழுங்கும்
நீரோ டுலாவுசித்திரம் நீண்டபல வீதிகளும்
உத்தநிரை சேர்வணிகர் உண்மைநெடும் வீதிகளும்
சித்தாந்த மாதவர்கள் சேர்ந்திருக்கும் வீதிகளும்

---

பா. வே. 159 : 1, 2 தூசு கொடிமகரம் 1574
159 : 4 நின்றிலங்கும் 1691, 1749
162 : 2 நாத்திசைக்கும் 1691
162 : 3, 4 நின்றிப் படியிலங்கும் 1574, 1691, 1749
166 : 4 கோவில்களும் 1574, 1691
170 : 1 விரசரியும் 1749
172 : 2 வீதிகளும் 1574
174 : சீரோ டுலாவுசித்திரஞ் செய்தபல வீதிகளும் 1574, 1749
175 : 1 உற்றநிரை 1691

* 1691-ஆம் எண்ணிட்ட சுவடியில் இவ்விரு (163, 164) அடிகளும் பின்வருமாறு மாறியுள்ளன.

"கோலமணி மண்டபமுங் கோபுரமும் நீள்மதிலும்
சீலமணி லாகடமுஞ் சிங்கார மேடைகளும்"

சூத்திரர்கள் தானிருக்குஞ் சுத்தமுள்ள வீதிகளும்
ஆத்த நெடுந்தெருவும் அங்காடி யுஞ்சிறப்பும்
வீதிக்கு வீதி விரைந்துசுத்தி வந்திடவே
சோதிப் பரையருளால் தோன்றுமெட்டுக் காதவழி;
இப்படிக்கு வீதிக்(கு) இரண்டுலட்சங் கோடியென்பார்
செப்பமுடன் இந்தச் செழுங்கனக வீதியெல்லாம்
செண்பகப்பூ மல்லிகையும் சேர்ந்தஇரு வாச்சிபிச்சி
நண்புழுகு சாந்து நறுங்கெந்த வர்க்கமுடன்
சூதாடும் பொற்கனகத் தோகையர்கள் தான்சிலபேர்
நீதமுள்ள வீதி நிரைஆ வணத்திருந்து

## கலிவிருத்தம்

செண்பகம லர்களொடு செங்கமலம் முல்லை
நண்புறுசவ் வாதுபுழு கோடுநல முற்ற
பண்புமணம் மிஞ்சுபொடி யும்பலதும் விக்கப்
பெண்களுடன் ஆடவர்பெ ருக்கமொடு கொள்வார். 5

மல்லிகைம லர்க்குவரு மைந்தர்மட மாதின்
கள்ளவிழி யம்படரக் கடுத்தமத னாலே
சொல்லுளறி அல்லிமலர் தோகையரே உண்டோ
அல்லவோள னத்திரிவர் அன்புகளி கொண்டே. 6

---

பா. வே. 177 : 2 தாமிருக்கும் 1574
178 : 1, 2 ஆர்த்தநெடு வீதிகளும் 1574 1691 ஆர்த்தநெடும் வீதியுடன் 1749
181 : 2 வீதி 1691 1749
183 : 2 மல்லிகைப்பூ 1574
183 : 3, 4 செய்யகமலப்பூவும் 1574 1691 1749
185 : 1 சூதாரும் 1691
186 : 3, 4 நிரையர்க வாழ்ந்திருப்பார் 1574

விருத்தம் 5 2 : 4 முத்த 1749
3 : 4 வீசப் 1691
4 : 1 பெண்களொடு 1574

6 1 : 4 மாதர் 1691
2 : 2 யும்படரக் 1574
2 : 3 கடுக்கமத 1749

## நடை

செண்பகப்பூ விக்குமந்தத் தேனார் கரங்கள்தனைப்
பண்புறுசெந் தாமரைப்பூ பாவையரே தாருமென்று
ஆடவர்கள் கேட்டவுடன் ஆயிழைமா ருந்திகைத்துத்
தேடுமலர் இல்லையென்று செங்கைகொட்டி யேநகைப்பார்.
எங்கெங்கும் உள்ள இனியதெரு வீதியெல்லாம்
மங்கையர்கள் தான்களித்து வாகுபெற வேயெறிந்த
புழுகு சவாதுகளும் போதவெகு சேறடர்ந்து
ஒழுகி மிதிபட் டுகந்துமிக வேகிடக்கும்.
பாவையர்கள் தான்முழுகிப் பாங்குபெற ஓடுபுனல்
மேவுசல தாரைவழி வெள்ளமெனச் சென்றுசென்று
நீடுகட லூடுபுக்கு நின்றமச்ச மீதுபட்டு
நாடும்மச்ச வாசம்அத்து நல்லகெந்த மாயிருக்கும்.
கன்னியிள மாதுநல்லார் காதலுடன் முல்லைகளும்
பன்னிதுள பங்கள்வைத்துப் பாத்திருந்து கொண்டாடி
நித்தங்கல் யாணமுடன் நீண்டமங்க ளஞ்சிறப்பும்
பத்தியுட னேபெருகிப் பண்பகமெல் லாமிருக்கும்.
இந்தமனை தோறும் இருந்திலங்கும் மான்அனையார்
செந்தா மரைமாது செப்புரதி யாம்எனவும்

---

பாட வேறுபாடு:

நடை
*187 : 2* விற்குமந்தத் *1691*
*190 : 4* யேநகைத்தார் *1691*
*191 : 4* வீதியிலே *1574 1749*
*192 : 4* வேயெறிந்து *1691*
*193 : 1, 2* புழுகுசவ் வாதுகளும் *1574*
*198 : 2* வாசமற்று *1574 1691 1749*
*199 : 2* மாதர்தங்கள் *1574*, மாதரகங் *1749*
*200 : 4* கொண்டாடும் *1691 1749*
*201 : 1* நித்தியகல் *1691*
*201 : 4* ளச்சிறப்பும் *1749*
*203 : 3* இயைந்திலங்கும் *1691*
*204 : 2* மரைமாதுஞ் *1749*

திலதஞ் சிறந்திலங்குஞ் செய்யவொரு மாதெனவும்
இலகுமிந்தி ராணியென எந்நாளு மேயிருப்பார்.
மாலோன் பிரமனுடன் மான்மழுக்கை யாளனுடன்
மேலோர் மிகப்புகழ வீத்திருக்கும் ஆடவரும்
வாய்த்த அழகில்அந்த மன்மதவே ளுக்கதியம்.
ஏத்தநிதி தன்னில் இசைகுபே ரர்க்கதியம்.
அறிவில் அதிகமுள்ள ஆதிசே டற்கிணையாம்.
பொறுமைதன்ம ருக்குமிச்சம் பொன்குடை*க்குக் கர்ணனொப்பாம்.
கட்டுபில வானையிலும் காலதிய மாகவுன்னித்
திட்டமுட னேமிகுந்து சென்றுதினம் வீத்திருப்பார்.
மெய்வசனஞ் சொல்லும் விதமறிவ தல்லாது
பொய்வசனம் பேசப் புதல்வர் அறியார்கள்.
வறுமை யுடையவரும் வாய்த்தழகில் லாதவரும்
சிறுமை புரிவோருஞ் சிக்கா தொருநாளும்
அந்நகரில் கொஞ்சம் அரிவைமருங் கல்லாமல்
பின்னையொரு கொஞ்சமில்லை பேறாக எந்நாளும்

---

பா. வே. 205 : 1 திலகஞ் 1691
206 : 3, 4 எந்நாளும் வாழ்ந்திருப்பார் 1574
208 : 1, 2 மேலோர்கள் மிக்கபுகழ் 1574
209 : 4 ளுக்கதிகம் 1691 ளுக்கதனம் 1749
210 : 4 ரர்க்கதிகம் 1691
211 : 2, 3, 4 அதனமுள்ள ஆதிசேஷ னுக்கதிகம் 1574
212 : 2 ருக்கதிகம் 1574
212 : 4 கன்னனொப்பாம் 1749
216 : 2 சொல்லவொரு 1574 பேசவொரு 1749
216 : 3 பூதர் 1749
217 : 3 வாய்ந்தளகில் 1574
218 : 1, 2 சிறுமைபுரி வோரெங்குஞ் 1691, சிறுமைபுரி வோரெவருஞ் 1749
219 : 4 கல்லாது 1691

ஒப்புமை : அடி எண். 219, 220. அயோத்தியில் மகளிர் இடை மட்டுமே சிறிது எனல்.

" ... ... ... மென்முலைப் பேதையர் சிற்றிடைக்
குறையும் அன்றிக் குறைபிறி தில்லையே"

—அரிச்சந்திர புராணம்-நகரச் சிறப்பு-19

* கொடை

ஊறுமது வண்டினங்கள் உண்டலைவ தல்லாது
வேறுமது உண்டறியார் வேந்தன் திருநகரில்
திட்டமுடன் வாழுமவர் சென்றுபகல் போமளவும்
சட்டமுட னேமுழுகித் தாணுவுட பூசைபண்ணிப்
பரிவுபெற அன்னம் பகுந்துவிருந் திட்டருந்தி
விரிவுபெறத் தானிருந்து வீத்திருப்ப தல்லாது
மறுத்துத் தனித்தமுது வண்மையுடன் உண்டறியார்.
கறுத்தவிழி மாதர்களுங் காளையரும் ஆவலுடன்
ஆசைதங்கள் ஆசையல்லால் ஆதியரன் தன்னருளால்
நேசஅயல் ஆசைதங்கள் நெஞ்சகத்தி லும்மறியார்.
தயவுங் கருணைகளுந் தர்மசிந்தை யால்நினைவும்
நியமமுடன் மெத்த நிறைந்துமிக வேயிருந்து
பொங்கு தமிழ்க்கலையும் பூராய நூல்வளமும்
சங்கமிகு ராகமொடு தந்திமிக வேபயின்று
பிஞ்ஞகனார் தாளிணையும் பேரான மாயனையும்
மெஞ்ஞான மாய்வணங்கி மேவியுள்ள முங்களித்து
ஆய்ந்தஇர வில்முழுதும் ஆயிழைதம் மோடிணங்கி
வாய்ந்தகல வித்தொழிலின் வண்மைசிறந் தேயிருப்பார்.
வரிசைப்* பகல்முழுதும் மாதுநல்லாள் இன்பமுடன்
பரிய தொருகனகப் பந்துடன்அம் மானைகளும்

---

பா. வே. 225 : 3 பகிர்ந்துவிருந் 1691
226 : 2 தானருந்தி 1574
230 : 1 நேசமுறும் 1691 நேசமொரு 1574
230 : 2 ஆசைதன்னை 1574
232 : 4 வேயிருப்பார் 1691
233 : 1, 2 பொங்குதமி ழுங்கலையும் 1574 1691 1749
234 : 1 சங்கைமிகு 1749
238 : 3 வாஞ்சைசிறந் 1691
239 : 3 மாதுநல்லார் 1691 1749
239 : 4 இன்பமுற்று 1574

* அடிப்படைச் சுவடியில் 'வருசைப்' என்றுள்ளது.

கோலமணி முத்துக் குறித்தாடும் பாண்டிகளும்
ஏலமணிச் சுண்ணம் இசைந்தேத் திருந்தொழிலும்
நல்லபரை நீள்கதையும் நாரா யணன்கதையும்
வல்லபரை யாள்சிறப்பும் வாகுடமழ மைக்கதையும்
கிள்ளையுட னேயிசைப்புங் கிம்புருவீ ணைத்தொழிலும்
தெள்ளுதமிழ்ப் பாலருக்குச் சீராட்டுந் தாராட்டும்
கொண்டுபக லைக்கழிப்பார் கூண்டபகல் போனவுடன்
மண்டுமிர வில்மண வாளருடன் கொண்டாடிச்
சீரான பள்ளியறை சேர்ந்துபூம் பஞ்சணையில்
பேரான மாரன் பெருத்தகலை நீதிகொண்டு
கொந்தார் குழல்அவிழக் கோலவளை சத்தமிடச்
சிந்தூர முஞ்சிதையச் சேர்ந்ததன மும்மழுந்தக்
கொப்புக் குழையாடக் கோத்தமுத்து மாலைமின்ன
ஒப்பு மணங்கமழ ஓசையுட னேசிறந்து
காலில் சிலம்பலம்பக் காதலுட னேகனிந்து
சீலத் துடன்முயங்கிச் சென்றுபல ஊடல்கொண்டு
மாமோக மாய்இணங்கி மண்டுபுல வியகத்தித்
தாமோக மாயிருந்து தானே தளர்ச்சிகொண்டு
வெய்யோன் எழுந்திடுமுன் மேவியெழுந் தன்புடனே
செய்யவளை மும்பெருகச் சென்றிருப்பார் **அம்மானை!**

---

பா. வே. 241 : 4 பாண்டில்களும் 1691
245 : 4 ணைத்தொனிப்பும் 1574 1749
247 : 4 போனபின்பு 1574
248 : 3 வாளனுடன் 1749
248. மண்டும் இரவில் மணவாளன் கொண்டாடிச் 1574
249 : 3 சேர்ந்தபூம் 1574
252 : 3 சேர்ந்துதன 1691
254 : 1, 2 ஒப்புமண முங்கமழ 1574 1749
254 : 4 னுஞ்சிறந்து 1749
256 : 1, 2 சீலமுட னேமுயங்கிச் 1574
258 : 4 மகிழ்ச்சிபொங்கி 1691 1749
260 : 3, 4 சென்றுதினம் வீத்திருப்பார் 1691

## அரண்மனை வளம்

மேவுசதுர் வேதாந்த மிக்கவேள் விச்சிறப்பும்
பூவுலகி லேவிளங்கிப் பூமிபுரந் தாண்டிருக்கும்
சத்திஅரிச் சந்திரனார் தாமிருக்குங் கோயில்வளம்
பத்திபத்தி யாகப் பவளத்தூண் ஆயிரமும்
வெள்ளித்தூண் ஆயிரமும் மிக்கபொற்றூண் ஆயிரமும்
தெள்ளியபொன் மீதுமுத்து சேர்ந்ததூண் ஆயிரமும்
கோமே தகம்வயிரங் கூறுபச்சை நீலபற்பம்
ஆமெனவே ரத்னம் அழுத்தியதூண் ஆயிரமும்
சிங்கார மாகச் சிறந்தஒன்ப தாயிரந்தூண்
அங்கணங்க ளாய்நிறுத்தி அந்தவர்க்கம் மேல்பரப்பிப்
பார்முழுதும் அந்தப் படியே படிவகுத்துச்
சீரான வாசல்களுஞ் சேர்ந்தபளிங் குச்சுவரும்
சாதுரங்கச் சாவடியும் சக்கரமுத் துக்கொலுவும்
மாதுலவுஞ் சீரடுக்கு மாளிகைமேல் மாளிகையும்
அட்டாங்க வாசல்சுத்தும் ஆடகப்பொற் சாவடியும்
திட்டமுட னேசிறந்து சேர்ந்திருக்கும் **அம்மானை !**

செச்சையுச்சி நீடுயரத் திங்களையும் தொட்டணுகி
மிச்சமுறும் மண்டவத்தில் மேவுமரி யாசனத்தில்

---

பா. வே. 261 : 1 மேவுமுதிர் 1691 263 : 4 கோவில்வளம் 1749
264 : 4, 265 : 2, 265 : 4 266 : 4 ஆயிரமாம் 1691
268 : 1 ஆமெனவும் 1574 268 : 4 ஆயிரமாம் 1691
270 : 2 ளாய்ப்பரப்பி 1574 271 : 3 படியாய் 1691
273 : 3 சக்கரஞ்சுத் 1691
276. திட்ட முடனே சிறந்திருக்கும் ஆசாரம் 1574
276 : 4 ஆசாரம் 1691
277 : 1 செச்சையுட்சை 1574 செச்சையுச்சம் 1691
277 : 2 நீடுபுயல் 1574, நீடுபுயத் 1749
278 : 2 மண்டபத்தில் 1691 1749

ஒப்புமை : அடி எண். 263 - 276. அரண்மனையை அணிசெய்யும் தூண்கள்.

"அத்திரு நகர்க்குணிரை ஆயிரம் மணித்தூண்
பத்திகளும் அத்தொகைய பைம்பொனுறு கோயில்"
—அரிச்சந்திர புராணம்-நகரச் சிறப்பு-22

வண்ணக் கொடித்தேரும் வாரணமுஞ் சீர்ப்பரியும்
எண்ணற் கரியபதி னெட்டா யிரத்தளமும்

## கலிவிருத்தம்

வேதமறை யாளர்கவி வாணர்விரு தோதக்
கீதவிசை மாதுரதி கிம்புருவி சைக்கப்
போதமிகு சாமரைபு கழ்ந்தினிதி ரட்ட
நீதமொழி சீர்முறைநி தானவளை மோத. 7

நம்முலகம் எங்குமுறை நாரிநர ருக்கும்
பொய்மைதிகழ் அண்டருறை பொன்னகர வர்க்கும்
எம்முயிரெ னப்பலுயி ரென்றுநிச மென்றே
மும்முரசொ லித்திடமு றைக்கொலுவி ருந்தான். 8

## நடை

மன்னர்பல கோடியுடன் மந்திரிமார் சூழ்ந்திலங்கத்
துன்னுமறை வேதருடன் சொற்பா வலர்சிறந்து

---

பாட வேறுபாடு:

நடை 280 : 4 யுத்ததளமும் 1574
281 : 4 சூழ்ந்திருக்கத் 1691

விருத்தம் 7. 1574 1691 1749 ஆகிய சுவடிகளில் இப் பாடல் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது.

"வேதமறை யாளர்கவி வாணர்விரு தாக
நீதமொழி சீர்முறைநி தானவளை மோதக்
கீதவிசை மாதரதி கிம்புருவி சைக்கப்
போதமிகு சாமரைபு கழ்ந்தினிதி ரட்ட"

8. 1 : 3 நாரணனி 1574 நாரணரி 1691

நடை 281, 282. அடிகள் முன் பின் மாற்றம்:
'துன்னுமறை வேதருடன் சொற்பா வலர்சிறந்து
மன்னர்பல கோடியுடன் மந்திரிமார் சூழ்ந்திலங்க' 1574

ஒப்புமை: விருத்தம் 7 : 1, நடை அடி எண். 282, 283. கொலுவீற்றிருக்கும் அரிச்சந்திரனை மறையவரும் பாவலரும் போற்றல்.

'துன்னுமறை யோர்கள்பலர் சோதிடம்உ ரைப்ப
மன்னுகவி வாணர்பலர் மங்கலம்இ யம்ப'

—அரிச். புரா. நகரச்சிறப்பு-23.

வேதகீ தம்படிக்க மிக்ககின்ல ரம்மொலிக்கப்
போதமிகுந் தாலாத்தி பூவையர்கள் ஏந்திநிற்க
வெஞ்சா மரையிரட்ட மிக்ககுடை தான்நிழத்த
இஞ்சலுட னேசீர் இயல்பாய் முழக்கமுடன்
எம்முயிர்போல் எவ்வுயிரும் யான்காப்பேன் என்றுசொல்லி
மும்முரசும் மோதி முழங்கிச் சிறந்திடவே
பொங்குமதி தன்னைப் புகர்சூழ்ந் திருப்பதுபோல்
சிங்கா சனத்தில் சிறப்பாக வீத்திருந்தான்.
ஆரியர்கர் நாடருடன் ஆனமலை யாளருடன்
சீரியம ராடருடன் செய்யவிலா டர்துளுவர்
ஒட்டியரோ டுங்கவண்ட ருத்தஅம்பத் தாறுதிசை
மட்டில்லா மன்னவர்கள் வந்துவந்து காத்துநின்று

## கலிவிருத்தம்

ஆனைபரி தேர்களுடன் ஆடகமி குத்த
மேனைநய வர்க்கவரி சைப்பணிகொ ணர்ந்து
தானனைய பண்பொடுத ழைத்திடநி னைந்தே
மானமுடன் நின்றுலவு மன்னரொரு கோடி. 9

---

பாட வேறுபாடு :

நடை 286 : 1, 2 இன்சொலுட னேசீர் 1691
291 : 4 யாளர்களும் 1691
293 : 2, 3 டுங்கவுண்ட ருற்றஅன்பத் 1574

விருத்தம் 9 1 : 1 ஆனைபல 1574 1691
4 : 1 மானமொடு 1691

ஒப்புமை : அடி எண் : 284, 285. கொலுவீற்றிருக்கும் அரிச்சந்திரனுக்குப் பெண்கள் வெண்சாமரை வீசல், பிறபணி செய்தல்.

"சந்திர முகத்தமணி யக்கனத னத்துச்
சுந்தர மடந்தையர் சுழற்றிபணி மாற"

அரிச். புரா. நகரச்சிறப்பு-24

நடை அடி எண் 291—294, விருத்தம் 9. கொலுவீற்றிருக்கும் அரிச்சந்திரன் முன்பு பலதேச மன்னர்களும் திறை செலுத்துதல்.

"என்னதிசை தென்னதிசை தென்றிருகை கூப்பி
மன்னவர் இடுந்திறைகள் வந்தினித ளப்பத்"

—அரிச். புரா. நகரச் சிறப்பு-23

துங்கமுடி பூமியுற வுந்தொழுதி றைஞ்சிச்
சங்கைபெறு மன்னனிரு தாளிணைவ ழுத்தி
எங்கைசமை யங்கள்வரும் என்றுடல்ந டுங்கிப்
பங்குமுறு மன்னர்பல கோடிபல கோடி. 10

### நடை

கருதலர்கள் நெஞ்சங் கடும்பறைக ளாய்க்குமுற
விருதரசர் நெஞ்சம் மிகவும் பயந்தாடத்
துட்டர்தமை நிக்கிரகஞ் சுத்துசக்க ரஞ்செயிக்கச்
சிட்டபரி பாலனமும் செய்துதய வேபுரிந்து
நலியாமல் ஒன்றையொன்று நாடும்பகை கொள்ளாமல்
கலிகள் அணுகாமற் காசினியோர் போத்திசெய்யத்
தாரார் புகழ்படைத்த சத்தியகீர்த் திமுதலாய்ச்
சீராய்ந்த மந்திரிமார் சேர்ந்துபல பேருடனே
அன்னக் கொடியும் அரியதவத் திற்கொடியும்
சொன்னக் கொடியுடனே சொல்வேத மெய்க்கொடியும்
திண்ணமுறு தேசந் திசைமுழுதும் மெச்சிடவே
வண்ணமுடி மன்னன் மகிழ்ந்துபுவி ஆண்டிருந்தான்.

### தபோதனர் வரவு

இந்தப் படிதான் இருக்குமந்த நாளையிலே
சிந்தைகளி கூரச் சிறப்பாய் அருந்தவத்தோர்
வந்தவர்கள் தன்னை மகிழ்ந்துகேள் **அம்மானை!**
அந்தரிமா சூலியுடன் அன்றுபணங் கொண்டாடி

---

பாட வேறுபாடு :

விருத்தம் 10. 2 ; 2, 3, 4 மன்னரொரு கோடியிரு கோடி 1574 1691

நடை 300 ; 4 போற்றிசெய்யத் 1691
303 : 3, 4 அரிய தவக்கொடியும் 1691 307 : 4 வேளையிலே 1574
308, 309. அடிகள் முன் பின் மாற்றம் :
'வந்தவர்கள் தன்னை மகிழ்ந்துகேள் அம்மானை!
சிந்தைகளி கூரச் சிறப்பாய் அருந்தவத்தோர்' 1574

ஒப்புமை : அடி எண். 301, 302. அரிச்சந்திரனை அமைச்சர்கள் சூழ்ந்திருத்தல்.

'முந்தைஇர விக்குல முதற்றலைமை யோரும்
வந்தகுல மந்திரிகள் மண்டலிகர் சூழ'
—அரிச். புரா. நகரச் சிறப்பு-24

ஆண்டபுவி வானகமும் அண்டருட னேதுதிக்கத்
தாண்டவங்கள் ஆடுஞ் சதாசிவனைப் போல்வடிவாய்
நீண்ட பெருஞ்சடையும் நெத்தியிலே வெண்ணீறும்
பூண்டபுலித் தோலுடையும் பூதியணிக் கோவிலுடன்
தெண்டுங் கமண்டலமுஞ் சீரான மாவுரியும்
மண்டுங் கவிகையுடன் மார்பில்மணி நூலிலங்கப்
பவள நிறமுடனே பண்புறுகா விக்கலையும்
கவள முடன்குவளை கண்டசரங் கங்கணமும்
மின்னியபொன் மேனிகளும் மிக்கழகுயில் தன்னுடனே
துன்னுந் தவமுடைய துய்யதொரு மாதவர்கள்
சாவம் இடவுந் தவிர்க்கவுஞ்சீர் செய்திடவும்
மேவுங் கனக மிகுவாக் குடையவர்கள்
உன்னுபுகழ் ஐவ ருடநாட்டை வெத்திகொண்டு
மன்னும் பரம(ன்) வழிநடக்கும் சிந்தையுள்ளோர்

---

பா. வே. 313 : 3 நெத்திதனில் 1691 நெற்றியிலே 1574
314 : 3, 4 பூதிமணிக் கோலுடனே 1691 பூதிமணிக் கோயிலுடன் 1574
315 : 1 தெண்டு 1574 1691
315 : 3, 4 சேர்ந்தமணி மாவுரியும் 1574 சிறந்த மரவுரியும் 1691
316 : 4 நூலுடன் 1691
317 : 2 நிறமுடைய 1691
318 : 2 முடன்குவடங் 1574 1691
319 : 3 மிக்கவெழில் 1574 1691
320 : 4 மாமுனிவர் 1691
322 : 1 மேவு 1574
323 : 1, 2 உன்னியவீ ணைவ 1574 1691
323 : 4 வெற்றிகொண்டு 1574 1691

ஒப்புமை : அடி எண். 312—322. அரிச்சந்திரனைக் காண வருகின்ற தவமுனிவர் தம் திருக்கோலம்.

'சடையும் முண்டமும் சிகையும்நுண் தாதுகத் தோய்ந்த
உடையும் மாமர உரிக்கும் உடுத்தழகி ருந்த
இடையும் தாழ்சிறு பண்டியும் மொய்த்திளைத் தோய்ந்த
நடையும் வாழ்த்தலும் சபித்தலும் முந்துறு நாவும்;'

—அரிச். புரா. விவாக காண்டம்-2

'குண்டிகைக் கரகமும்' —அரிச். புரா. விவாக காண்டம்-3

ஆலித்துக் கூடி அரச நகரணுகி
வீலித்து வீதி மிகுதெருவெல் லாங்கடந்து
மன்னனரிச் சந்திரனார் வாழுமணி மண்டபத்தில்
அன்னவர்கள் சுத்தமுடன் அன்பாக வந்தனர்காண்.
வந்தமறை யோரெதிரே மன்னவனுஞ் சென்றணுகி
எந்தனுட மாதவம்தான் இன்றுவந்த தென்றுசொல்லிப்
பாங்காய் மலர்தூவிப் பாதமல ரைப்பணிந்து
ஆங்கவருக் கெல்லாம்பொன் னாசனமுந் தான்கொடுத்துப்
போற்றி வணங்கிப் புகழ்ந்து பலகாலும்
ஏற்றிமிக வாய்புதைத்து இயல்மன்னன் *கேட்கலுற்றான்.
எத்தேசம் எத்தலங்கள் எந்தநதி ஆடிவந்தீர்
உத்தவகை எந்தனுக்கு ஓதுவீர் என்றவுடன்

---

பா. வே. 328 : 2 சுற்றமுடன் 1574    329 : 2 யோனெதிரே 1574
331 : 1 பாங்கு 1574
333 : 1 போத்தி 1574    333 : 3, 4 புகழ்ந்துபுகழ்ந் தேபலகால் 1691

ஒப்புமை : அடி எண். 329—331. வந்த மாதவரை வரவேற்று, அவர்களின் பாதங்களை அரிச்சந்திரன் தொழுது வணங்குதல்.

'வந்த மாதவர் ஓதையம் மன்னவன் கேட்டுச்
சிநதை யிற்பெரு மகிழ்வரச் சென்றெதிர் கொண்டே
எந்த மாதவம் இன்றுவந் தெய்திய தென்னா
வந்த மாதவர் அடிமலர் முடியுறத் தொழுதான்'
—அரிச். புரா. விவாக காண்டம்—5

அடி எண். 332 — 336 வந்த மாதவர்களுக்கு உரிய இருக்கையளித்து, எங்கெங்கு சென்று வந்தீர் ? புதுமையென்ன ? என அவர்களை அரிச்சந்திரன் வினவல்.

'........................ மண்டப முற்ற
எழுது மாமணி யாதனம் அவ்வவர்க் கீந்து
பழுதி லாமொழி மன்னவன் இருந்திவை பகர்வான்'
—அரிச். புரா. விவாக காண்டம்-6.

'எந்தத் தேயங்கள் கண்டனிர் எத்திசை புகுந்தீர்
எந்தத் தீர்த்தங்கள் ஆடினீர் புதுமைஎன் கண்டீர்
முந்தக் கூறுமின் என்றரிச் சந்திரன் மொழிய'
—அரிச். புரா. விவாக காண்டம்-7.

* 'கேள்க்கலுற்றான்' எனச் சுவடியில் உள்ளது.

தங்கு புகழ்படைத்த சத்தியரிச் சந்திரனே!
துங்க நதியனந்தஞ் சொல்லுந் திசையனந்தம்
நீளும் பதியனந்தம் நீண்டகடல் பூமிசுத்தி
வாழும் பதியனந்தம் மண்டலத்திற் கண்டுவந்தோம்
அந்தப் பதியில் அதிகபதி யொன்றுகண்டோம்.
சிந்தையுறுங் கன்னோசி தேசமெனும் அந்தநகர்
நாட்டின் வளமும் நலஞ்சிறந்த வண்மைகளுந்
தீட்டுபுகழ் ஈசன் திருவுளத்துக் கொத்ததுகாண்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

அந்நகர் ஆளும் வேந்தன்
அதிகவே ளெழிலாய் நீதி
தன்னில்மா நீதி யாளன்
தயவுறுங் கருணைக் கண்ணான்
மன்னர்கே சரியான் வேத
வளமொடு புவியை யாளும்
இன்னிசை மதித யன்பேர்
என்றினி துரைக்க லாமே. 11

---

பா. வே. 339 : 2 புவியனந்தம் 1691 339 : 4 பூமிசுற்றி 1574
341 : 3 அதியபதி 1574
342 : 1 சிந்தைமகிழ் 1691 342 : 4 அந்நகரம் 1691
344 : 4 கேத்ததுகாண் 1574

விருத்தம் 11. 1 : 4 அதியவே 1574 2 : 1 தண்ணமர் 1691
4 : 1 முன்னிய 1691 4 : 6 லாமால் 1574 1749

ஒப்புமை : அடி எண். 341 — 352, விருத்தம் : 11, 12. வந்த மாதவர்கள்' அரிச்சந்திரனிடம் " சிறப்புமிக்க கன்னோசி நாட்டின் அரசன் மதிதயன் பிள்ளைப்பேறு இன்மையால் வருந்திப் பின் சிவபெருமான் அருளால் பெற்ற பெண்ணே சந்திரமதி " என உரைத்தல்.

'அங்கண் மாநிலத் தரியகன் னோசிநாட் டகத்து' (8)

'அந்த நாட்டினில் கன்னமா புரிநக ராள்வோன்
சந்தி ரன்வழிச் சந்திர தயன்தவம் புரிந்து
கந்த வார்சடைக் கடவுள்தன் வரத்தினால் பயந்த
தந்த மாமுலைத் தையல்சந் திரவதி என்பாள்.'

—அரிச். புரா. விவாக காண்டம்-9

புத்திரன் இல்லை யென்று
புவிதனில் ஆசை நீங்கி
மெத்தவே வாடி நொந்து
விடைதனில் ஏறும் அண்ணல்
பத்தியே பத்தி யென்று
பருந்தவ முடித்தான் பின்னே
அத்தனார் அருளிச் செய்தார்
அழகுபெண் குழந்தை யொன்றே! 12

நடை

பொன்னாட் டிலுமதிகம் போந்துலவும் அந்நாடு
அந்நாட்டை ஆளும் அரசன் மதிதயன்காண்!
பூதியணி மார்பனவன் புத்திரனும் இல்லாமல்
சோதியிடப் பாகன் துணையடியைத் தான்வேண்டி
ஆய்ந்த நவமணிபோல் ஆயிழையா ளைப்பயின்று
சூழ்ந்துமணங் கொண்டாடித் துய்யதிரு நாமமது
"சந்திரமதி" யென்றுசொல்லித் தாரணிஎல் லாந்துதிக்கச்
சிந்தைகளி கூர்ந்து சிறந்துகுயில் பேடையென்ன
வாகுகிளி போல வளர்ந்துவய தஞ்சினிலே
பாகு கலைவளமும் பண்புநெறி யின்வளமும்

---

பாட வேறுபாடு:

2 : 4 விடையினில் 1749
விருத்தம் 12 2 : 6 ஈசன் 1574
3 : 3 மெத்தப் 1691 1749
3 : 6 பின்னை 1574 1691 1749
4 : 2, 3 அருளினாலே 1574
4 : 5 குழவி 1574

நடை 345 : 2 டிலுமதியம் 1574 1749
347 : 2 மார்வனவன் 1749
349 : 1, 2 ஆய்ந்தநவ மாமணிபோல் 1574 1749
350 : 4 நன்மாது 1691
351 : 3, 4 தாரணிக ளுந்துதிக்கச்
352 : 3 சிறந்தகுயில் 1749
352 : 4 பேடை அன்னம் 1574
354 : 1 பாகும் 1749

கத்தறிந்து நன்றாய்க் கனிந்தவய தீராறு
உத்திலங்கி வாழ்வுபெறும் ஓவிய மின்னரசைக்
கண்டுவந்தோம் அந்தமடக் கன்னியரைப் போலழகு
மண்டலத்தில் எங்குமில்லை வானகத்தில் அங்குமில்லை
காலழகும் மேலழகுங் கண்டபடி யாருரைப்பார்
சீலமுள்ள மன்னா சிறிதுரைப்போம் என்றுரைத்தார்.
கரிய முகில்எனவுங் காமன்பூங் காஎனவும்
அரிய இருள்எனவும் ஆய்ந்தகரு வண்டெனவும்
நீலக் கிரிஎனவும் நீட்டியகா யாஎனவும்
கோலஞ் சிறந்தமுத்துக் கோர்வைசர மல்லிகையும்
ஏலமுடன் வாசம் இலங்கிச் சிறந்திலங்கும்
சீலமுறும் பிச்சியிரு வாட்சியுடன் செண்பகமும்
பூங்கமலந் தன்னுடனே போந்தநறுந் தக்கோலம்
பாங்கு மருமணமும் பண்புபெற வேபொதிந்து
தீட்டும் புகழ்அனங்கன் சிங்கார மாமலரும்
கூட்டிப் புனைந்திலங்குங் கோதை நெடுங்குழலாள்;

---

பா. வே. 355 : 1 கற்றறிந்து 1691
355 : 3, 4 கழிந்துவய தீராறாய் 1691
355 : 4 தீராறும் 1749
356 : 1 உற்றிலங்கி 1691 உத்திலங்கும் 1574 1749
356 : 2 வீருபெரு 1691 வீருலவு 1574 1749
356 : 3, 4 ஓவியமின் னாளரசை 1574 1691 1749
358 : 4 இங்குமில்லை 1574
360 : 3, 4 சிறிதுரைக்கக் கேட்டருளீர் 1691
363 : 3, 4 நீண்டபல குன்றெனவும் 1691
368: 1, 2 பாங்குமண மும்புகையும் 1574 1691 1749

ஒப்புமை : அடி எண். 357, 358. மண்ணகத்திலும், விண்ணகத்திலும் சந்திரமதிக்கு நிகரான அழகுடையவர் இல்லை என வந்த மாதவர் உரைத்தல்.

'மண்ம டந்தையர் தம்முளும் வாசவன் உறையும்
விண்ம டந்தையர் தம்முளும் நிகரிலா விறல்வேற்
கண்மடந்தை ... ... ... ...
... ... ... இந்திரையினும் எழிலாள்'

—அரிச். புரா. விவாக காண்டம்-10

வட்டமதி யைப்பழித்து வண்மைகொண்டு தானிலங்கித்
திட்டமுறுங் கஸ்த்தூரி சிந்தூரஞ் சேர்நுதலாள்;
விந்தையுறு மோகம்அதன் மெய்க்குநய னக்கடலில்
அந்தமுறுஞ் சீர்க்கரைபோல் ஆனபுரு வத்தரிவை;
வீசும்இரு வாள்எனவும், மிக்ககடல் ஆமெனவும்,
நேசுலவுஞ் சேல்எனவும், நேர்அனங்கன் வாள்எனவும்,
ஆயவிடத் தோடே அமுர்தங் கலந்ததுபோல்
மாயன் பிரமன் மகாதேவர் மூவருடன்
நேமித் திலங்கி, நிலையா மதன்எனவே
காமித் திரண்டு கடைசிவந்துள் ளேகறுத்து,
அன்பும் பெருநலமும் ஆதரவுஞ் சாய்கைகளும்
வன்புங் கடியதொரு வண்மைகளும் உண்மைகளும்
சேர்ந்துகுடி கொண்டு, சிறந்த அரிபரந்து,
கூர்ந்துரண்டு காதளவு கொண்டோங்கி, ஆர்ப்பரித்து,
மன்னாஉன் கைதனிலே வாய்த்தசெய வேல்எனவே
எந்நாளு முள்ள இணைவிழிமா மங்கையர்காண்;
சீராடும் மாமதனைச் சென்றுவெத்தி கொள்ளவென்று
போராடும் வச்சிரமணிப் பொன்தோ டிடுங்குழையாள்;
குமிழ மலர்எனவே கூரியஎட் பூஎனவே
அமிழும் இருநாசி ஆயிழைகாண்; மன்னவனே!
விண்ணுலகும் மண்ணுலகும் மெய்ப்பாகப் பார்க்குமந்தக்
கண்ணாடி போலுங் கபோலமுள்ள கன்னிநல்லாள்
முல்லை முகைபோலும் முத்துமணி யைப்போலும்
நல்லபற்ப ராகம் நயந்தமணிச் சேர்வைசெய்து
ஒப்பமிட்ட வண்ணத் துடனிடையுங் காவியெய்தி
மெய்ப்பிட் டிலங்குமணி மிக்கசிறு பல்லணையாள்;

---

பா. வே. *371 : 4* தானிலங்கும் *1691*
*380 : 1, 2* காமித்து ரெண்டு *1691*
*385 : 3* வைத்தசெய *1691*
*385 : 4* வேலெனவும் *1574*
*386 : 3* இனியவிழி *1691* இசைவிழிமா *1574*
*387 : 3* சென்றுவெற்றி *1691*
*389 : 2* மலரெனவும் *1691*
*394 : 3* நயந்துமணிச் *1574*

தேன்போல் கனிபோல் திகழமுர்த சாரமும்போல்
ஆனதோர் யாழின் அழகிசைகொண் டேசிறந்து
பட்டமர முந்துளுக்கப் பண்போ வியம்நடக்கக்
கெட்டவன்பின் நானணுகிக் கேசகிரி யும்பேச*
மட்பாவை யாட வசனமிடும் மங்கைநல்லாள்;
நட்புலவுந் தொண்டையென நற்றா துளையென
வெத்திமதன் கண்களென்ன மிக்கபவ ளங்களென்ன
உத்தகொவ்வை யின்கனிபோல் ஓங்குமிந்திர கோபமென
மாதளம்பூ வோஎனவும் வண்ணமிக வேசிறந்து
ஏதமுறும் நல்லஇதழ் ஏந்திழைகாண்; மன்னவனே !
எந்நாளும் வாடாமல் ஏத்தமுடன் நின்றிலங்கும்
பொன்னான தாமரையைப் போலுமுகப் பூவையர்காண்;
நன்னிலத்தில் நன்றாய் நயந்தே சிறந்திலங்கும்
கன்னிக் கமுகனைய கந்தரத்தின் பைந்தொடிகாண்;
சேயனைய வேளைச் சிறக்குமன்னை யாமெனவே
வேயனைய தோளுடைய மிக்கதொரு மாதுநல்லாள்

---

பா. வே. 397 : 3, 4 திகழா அமுர்தமும்போல் 1574
398 : 4 டேசிறந்த 1691
399 : 2 முந்தழையப் 1691, முந்தழைக்கப் 1574
400 : 1, 2 கெட்டவனம் பின்னணுகிக் 1691
400 : 3 கேசகரி 1691
401 : 4 மங்கையர்காண் 1574
403 : 2 கண்களென 1574
403 : 4 ளங்களென 1574
404 : 1, 2 உற்றகோ வைக்கனிபோல் 1691
405. மாதளம்பூப் போல்சிறந்து வண்மைமிக வேபெருகி 1574
405 : 3 வண்மைமிக 1691
407 : 3 ஏற்றமுடன் 1691
407 : 4 நின்றலரும் 1574
411 : 3 சிறக்குமனை 1574 1691
411 : 4 யாமெனவும் 1691

* 1574-ஆம் எண்ணிட்ட சுவடியில் 'கெட்டவன்பின்' என்று தொடங்கும் அடிக்கு மாற்றாக " மட்ட விழுங்கோதை மங்கையெனும் பெண்கொடியாள் " என்னும் அடி உள்ளது.

யாழினுக்கு வாய்த்த அழகுசெழுங் கோடெனவே
வாளிதங்கள் வச்சிர மருவுமுன்கை மங்கைநல்லாள்
காந்தள் மலரெனவே கமலமலர் பூவெனவே
சேர்ந்திலங்கி நல்ல செழுங்கொடைமா ரேகையுடன்
சங்குபற்ப ரேகை தமரகம்வெண் சாமரையும்
இங்கிதங்க ளாக இலங்குமந்த ஏந்திழைகாண்;
வென்றியுடன் நல்ல மிகுபயத்தங் காயெனவே
நன்றிமதன் பூட்டை நகட்டுமுத்திரிக் கோலெனவே
சித்திரத்தில் வீறுஞ் சினைக்கெளிறு தானெனவே
பத்தியுடன் செய்ய பனிதழுள்ள சீர்விரலாள்;
தெள்ளமுர்த யேயருந்திச் சென்றுகுரல் ஓதுபச்சைக்
கிள்ளையெனும் அந்தக் கிளிமூக்குப் போலுகிராள்;
மந்திரகிரி தான்எனவும் வாய்த்ததங்கச் செப்பெனவும்,
பந்தெனவுஞ் சீர்கெவுளி பாத்திரங்க ளாம்எனவும்,
அனங்கன் மணிமகுடம் ஆமெனவும், சூதெனவும்,
கனககுப்பந் தான்எனவும், கமலமுகைப் பூஎனவும்,
கோங்கின் அரும்பெனவும், கோவேஉன் வாரணத்தின்
பாங்குமத்த கம்மெனவே, பாளிதமுஞ் சாந்துகளும்

---

பா. வே. 414 : 3 மருவுமங்கை 1574, 414 : 4 மங்கையர்காண் 1574 1749
415 : 2 மலரெனவும் 1691
416 : 3 செழுங்குமத 1691
419 : 1 வெற்றிபெற 1691
419 : 3, 4 மிகுபயற்றின் காயெனவும் 1574 1749
420 : 1 நற்றிமதன் 1691
420 : 3 நகட்டுமுத்தரை 1691
420 : 4 கோலெனவும் 1574 1691 1749
421 : 4 தானெனவும் 1574 1691 1749
424 : 1, 2 கிள்ளையென வந்த 1691
426 : 3, 4 பாத்திரங்கள் தாமெனவும் 1574 1691 1749
428 : 1 கனகுப்பந் 1691
428 : 3 கமலமுகிழ்ப் 1691

வீசுபுழு கோடுகெந்தம் மிக்கமண முந்திமிர்ந்து,
வாசங் கமழ்பொடியும் மண்டுபணங் கொண்டுகொண்டு,
வீலித்துக் கண்கறுத்து, மிக்கழுத்து மாலைசுத்தி,
ஆலித்துக் கச்சணியும் அன்புமுலைப் பைந்தொடிகாண்;
பொன்னால பத்திரமெனப் போந்தமரர் கண்களிக்க
நண்ணும் அமுர்தமுள்ள நாயகிகாண் மன்னவனே!
வடபத்தி ரத்திலந்த மால்இலங்கு கோலமென்னத்
திடமுத்த சித்தெறும்பு செல்லும் ஒழுக்கமென்ன,
கூருமதை யானையின்தன் கோலத் துதிக்கையென *
வீரியமாய் ரோம மிகுமழகு ரேகைமின்னாள்
பிடிபோல் கொடியெனவும் பேசுந் துடிஎனவும்
வடிவு தருஞ்சுருதி வண்மைதனைத் தான்போலும்
மாரன் உருவமென வண்டமிழோர் தாம்உரைத்தல்
நேராம் பொருள்எனவும் நேர்ந்தவர்க்குத் தோணாமல்
மன்னாஉன் பாதம் வணங்காத மன்னரும்
பன்னிச் சிறுத்த படிசிறுத்த பண்பிடையாள்;

---

பா. வே. 431 : 3, 4 மிக்கமணம் வீசிவெகு 1574 1691 1749
432 : 2 கமழ்பொடியின் 1691
435 : 1, 2 பொன்னாலெ பாத்திரமெனப் 1574,
பொன்னால வட்டமென 1691
437 : 3 மால்இலங்குங் 1691 1749
438 : 1, 2 திடமுற்ற சிற்றெறும்பு 1574 1691 1749
439 : 1 கூருமத 1574 கூர்ந்தமதை 1691
கூர்ந்தமுலை 1749
439 : 4 துதிக்கையெனவே 1691
440 : 3 மிகுவளரு 1574 மிகுவழகு 1749
442 : 3, 4 வண்மை தனைப்போலும் 1691
442 : 3 வன்மைதனைத் 1749
443 : 1, 2 மாரனுரு வம்மெனவும் 1691

* இந்த அடியினை அடுத்து 1691 ஆம் எண்ணிட்ட சுவடியில் 'பிடிபோல் கொடியெனவும்' எனத்தொடங்கும் அடிக்கு முன் பின்வருமாறு அடிகள் காணப்படுகின்றன,

'வார்ந்தக மாமதனை மாமோகம் பூட்டிவைக்க
வீரியமா ரோக மிகவழகின் ரேகைமின்னாள்
சீரியபொன் னாட்டைத் திகழ்மணிப்பூ ணும்புனைந்து'

பருதிநெடுந் தேரில் படியும் உருளையென்னக்
கருதியபன் னாகங் கனிந்த படங்களென்னப்
பொன்னால வட்டமெனப் போந்திடும்பொற் றட்டெனவே
உன்னியபொற் றாமரைபோல் ஓதுமணித் தேரெனவே
வீறாம் அழகுடைய மிக்கதிதம் பக்குயிலாள்;
பேரான வெத்திப் பிரதாபங் கொண்டிருக்கும்
மாரன் அரமனைக்கு வாய்த்தரெட்டைக் கம்பமென
ஆரத் தெழுந்த அருங்கதலித் தண்டெனவே
வில்லிமதன் மோக மிகுத்தகடல் தெப்பமெனச்
சொல்லியபொற் பாளமெனத் தோன்றுந் துடைமயிலாள்;
ஒள்ளியசீ ராக உகந்துசிறப் பாயிருக்கும்
நள்ளி முதுகெனவே நன்முழந்தாள் ஒத்தமின்னாள்;
அம்பறாத் தூணியென ஆர்த்திடும்எக் காளமென
விம்புஞ் சினையுடைய மிக்கவரா லாம்எனவே
கண்டனைய சீரின் கணைக்காலின் கன்னியவள்;
எண்டிசைஎல் லாம்மதிக்க இன்பமுட னேசிறந்து
பொற்பாட கஞ்சிலம்பு பொன்னுலவுந் தண்டையுடன்
மெற்பாகத் தாங்கி மிகுத்த தராசெனவே
பாளைமுகி ழாத பசுங்குரும்பை தானெனவே
நாளுஞ் சிறப்புடைய நற்பரட்டின் நங்கையவள்;
வித்தகமாய்ச் சேர்த்து வினவியொப்ப மிட்டிரண்டு
பொத்தகத்தை யொத்த புறவடியின் பொற்பூவை;

---

பா. வே. 447 : 4 உருளையென 1574
448 : 4 படங்களென 1574
449 : 2 பத்திரமென்ன 1691 449 : 4 றட்டெனவும் 1691
450 : 4 தேரெனவும் 1691
452 : 1, 2 பேருடனே வெற்றி 1691
455. வில்லிமத வேள்பணிய வேண்டிவிதி யேபடைத்த 1691
459 : 4 காளமென்ன 1574
460 : 1 விம்பு 1574
460 : 2 செனையுடைய 1749
460 : 4 லாம்எனவும் 1574 1691
467 : 4 மிட்டரெண்டு 1749
468 : 4 பொற்பாவை 1691

வாய்த்தமுத்துப் போலும் வடிவா யொளிசிறந்து
ஏத்த முடன்சிகப்பும் எய்தியியல் பாகநன்றாய்ப்
பத்து விரலும் படர்ந்தபிறை பத்தெனவே
மெய்த்திலங்கும் பாத விரல்உகிரின் மெல்லியவள்;
பொற்கமலம் மல்லிகையின் பூவில்மிதிக் கப்பொறுக்கா
நொற்பமெய்தி யேசிவந்து நொய்யசெய்ய பஞ்செனவும்
மாந்துளிரைப் போலும் வகையாய்ச் சிறந்தொரு
பூந்துளிரின் செஞ்சரணப் பூவையர்காண்; மன்னவனே!
அன்னந் தனக்கும் அரிய பிடிதனக்கும்
இன்னம் பயிற்றும் இனிய நடையுடையாள்;
விண்ணுலகில் மண்ணுலகில் மேனியெங்குங் கிட்டாத
நண்ணும் எழிலுடைய நாரியந்த நன்னுதலாள்;
கற்பில் அருந்ததியைக் காட்டிலெட்டுக் காணுமவள்
பொற்பனைய லட்சணமும் பூண்டநிறப் பூவையர்காண்;
அம்மயிலுக் கேத்த அரசர்வே றில்லையெங்கும்;
செம்மையுள்ள மன்னா சிறந்தஅரிச் சந்திரனே!
உந்தனுக்கு நன்றாய் உகந்தமடப் பாவையென்றும்
அந்தமறை யோர்கள் அரியமொழி கூறினர்காண்.

---

பா. வே. 470 : 2 முடன் சிவப்பு 1691 1749
470 : 3 ஏற்பதியல் 1574
473 : 3, 4 பூவின்மிக் கப்பொறுக்காள் 1691
474 : 4 பஞ்செனவே 1691
476 : 3 பூவைகாண் 1691 1749
483 : 2 கொத்த 1691
485 : 4 பாவையென்று 1691 1749

ஒப்புமை : அடி எண். 479—482. மண்ணகத்திலும், விண்ணகத்திலும் சந்திரமதிக்கு நிகரான அழகுடையவர் இல்லை என்றும் சந்திரமதியின் கற்பு அருந்ததியின் கற்பினும் சிறப்புடையது என்றும் வந்த மாதவர் உரைத்தல்.

'மண்ம டந்தையர் தம்முளும் வாசவன் உறையும்
விண்ம டந்தையர் தம்முளும் நிகரிலா விறல்வேற்
கண்ம டந்தைதன் கருங்குழல் அருந்ததிக் கற்பிற்
கெண்ம டங்குகற் புடையள்இந் திரையினும் எழிலாள்'

—அரிச். புரா. விவாக காண்டம்-10

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

மதிதய வேந்தன் நீதி
　　மங்கைபே ரெழிலும் ஆய்ந்து
இதமுறு மறையோர் கூற
　　இருதயம் மகிழ்ந்து கேட்டுச்
சுதைமதி வதன மான
　　துங்கவேல் அரசன் என்னும்
அதிஅரிச் சந்திர வேந்தன்
　　அகந்தனில் எண்ணி எண்ணி, 13

மாமுனி வோர்பெண் ணாசை
　　மகிழ்நிதி புவிமீ தாசை
தாம்எரித் தகன்றோர் ஈது
　　தையலைப் புகழ்ந்தார்; மற்றும்
ஆம்எனு மவர்தாம் பார்க்கில்
　　அரிவையொப் பனையே வண்ணம்
காமனே யென்று வேந்தன்
　　கடுமயல் கொண்டுற் றானே! 14

### நடை

**(தவமுனிவர் சொல்வழி, சந்திரமதியின்மேல் காதலுற்ற அரிச்சந்திரன், சந்திரமதியைப் பெண்கேட்க அவர்களை அனுப்பல்)**

சொல்லும் மறையவர்கள் சொன்னமொழி கேட்டவுடன்
எல்லையிலா மோகம் எழுந்தரசன் மெய்கலங்கி

---

பா. வே. விருத்தம்: 13. 2 : 4 இதயமே 1574
3 : 1 சுதமதி 1574
4 : 3 வேந்தர் 1691
4 : 4, 5 அகந்தணி யெண்ணி 1691
4 : 5, 6 எண்ணம் எண்ணி 1749
14. 2 : 1 தாம்வெறுத் 1574 தாமறிந் 1691
3 : 5, 6 பனையோ வெண்ணு 1574
4 : 1, 2, 3 காமநோய் மேவ வேந்தன் 1691

வாடிநொந்து தேறி மறையவரைத் தான்நோக்கி
நாடி வணங்கிநின்று நற்றவரே நீர்உரைத்த
கிஞ்சுகத்தை, வர்ணக் கிளிமொழியை, ஓவியத்தை,
அஞ்சுகத்தைக் காம அபிசேக வல்லியரை,
ஆயிழையை, மானை, அழகுமடப் பூவையரைத்
தூயவரே யெந்தனுக்குத் தொல்லுலகி லேவதுவை
சூட்டுதற்கு நீங்கள்சென்று தோகைதந்தை தாய்க்குரைத்து
நாட்டமுத்துப் பாருமென்று நாடிமன்னன் கூறினன்காண்;
அம்மொழியைக் கேட்டு அரியமறை யோர்களெல்லாம்,
"செம்மையுள்ள மன்னவனே! தேவிசந்திர மாமதியைச்

---

பா. வே. 489 : 1 வாடிநின்று 1691
491 : 2 வன்னக் 1749
493 : 4 பாவையரைத் 1691
496 : 2 வாருமென்று 1691
497 : 1 அம்மொழிகள் 1749

ஒப்புமை : அடி எண் : 491 — 505. அரிச்சந்திரன் வந்த மாதவர்களை நோக்கி, சந்திரமதியின் பெற்றோரிடம் சென்றுமணம் பேசி முடித்து வருக எனலும், அம்மாதவர் அவ்வாறே சென்று மணம் பேசி முடித்து வருகிறோம் என உறுதி கூறி எழலும்.

'அல்லியங் குழலாள் தன்னை
அருமணம் அடியேன் சூட்டக்
கல்லியற் சுரமும் காடும்
கடந்துகால் வருந்த நீர்போய்
வல்லியைப் பயந்தோற் கண்டு
மணமொழிந் தந்த வேந்தன்
சொல்லிய நெறிகேட் டென்பால்
வருகவென் றினிது சொன்னான்.' 23

'காதலால் மன்னன் கூற
மாதவர் கருணை வெள்ளம்
மீதெலாம் எழுந்து பொங்க
வேந்தகேண் மீண்டி யாங்கள்
போதலும் செய்வேம் உங்கள்
புதுமணம் காண்பேம் ஆயின்
ஈதலால் உறுதி வேறொன்
றில்லையென் றெழுந்தி ருந்தார்.'

— அரிச். புரா. விவாக காண்டம்-24

சீராக உந்தனுக்குச் செய்யமணம் உண்டுபண்ணிப்
பேறாய்க் கொடுப்பதெங்கள் பேரில்நெடும் பாரம்'' என்று
மாமறையோர் ஈதுரைத்தார்; மன்னவனும் உள்மகிழ்ந்து
நாமறையோ ரைப்பரவி நாடியபின் மாமறையோர்,
'மன்னா இரும்; உனக்கு மாதைமணங் கூட்டிவைக்க
அன்னவள்தன் ஊர்அணுகி யாம்பொருத்தி வாறம்'' என்று
அரசன் தனையிருத்தி அம்முனிவோர் தாமெழுந்து
விரவு பதிகடந்து மிக்கபெருஞ் சோலைகளும்
காடுந் துலையுங் கனமலையுந் தான்கடந்து
நாடுபுகழ் கன்னோசி நாடுபுக்கார் **அம்மானை!**

(அரிச்சந்திரன் காதல் மயக்கம்)

போத்தி மறையவரைப் போகவிட்டு வந்துமன்னன்
நேத்தி யுடனிருந்து நேரிழையை நெஞ்சில்வைத்துப்
பொன்மேவும் பஞ்சணையில் போர்வேந் தனுமிருக்க
மின்னிரவி சென்றான் மிகுஇருள்வந் தெய்தியதே!
அந்திருளி னாலே அரசன்மிக மெய்சோர்ந்து
தன்திரேகந் தோணாமல் தான்தனியே எண்ணலுற்றான்—
''கடிய பலவனமுங் காடுமலை யுங்கடந்து
சடிதியுடன் அந்தணர்கள் தையலுட நாடுநண்ணித்
துய்யமணந் தான்முடிக்கச் சொல்லுவரோ சொல்லாரோ?
பையரவின் அல்குலிளம் பைந்தொடியைக் கண்டிருக்க
ஆதிமறை வேதன் அமைப்போ அமைத்திலையோ?
சோதிமறை யோர்கள்சென்று சொன்னமொழி கேட்டவுடன்

---

பா. வே. **501 : 2 ஈதுரைக்க 1691**
**505 : 3 அம்முனிவர் 1574 1691 1749**
**507 : 2 துலையாக் 1691**
**509 : 1 போற்றி 1691**
**511 : 1 பொன்மேவு 1691**
**512 : 3 மிகும்இருள்வந் 1691**
**516 : 1 சடுதியுடன் 1574 1691**
**518 : 4 கொண்டிருக்க 1691**
**519 : 4 அமைப்பிலையோ 1574 அமைத்திலனோ 1691**

மைக்கொடியைத் தான்பயின்ற மாதாவுந் தாதையரும்
இக்கணமே நல்க இசைவோ? இசையாரோ?
நீலவிழி யாளை நிறைந்தமதி மங்கையரைக்
கோலமணஞ் செய்வதற்குக் கூடுமோ கூடாதோ?"
என்று புலம்பி இருதயமெல் லாங்கலங்கி
வென்றிமன்னன் தான்கிடக்கும் மெய்மதியை வேளறிந்து
இந்தச் சமையம் இனிக்கிடையா தென்றுசொல்லிச்
சுந்த முறுமிருட்டுக் காரானை முன்னைவிட்டு
வீசுதென்றல் தேரை மிகவே பிறகனுப்பி
ஓசைக் கடல்முரசும் ஓங்கிச் சிறந்தார்ப்ப
மெள்ள நடந்தான் மிகுத்தரதி மாதுடனே
தெள்ளும் பலவிருதுஞ் சேரத் துடந்துவந்து
பள்ளிகொண்டு தானிருக்கும் பாரமுடி மன்னனிடம்
கள்ளமதன் சென்றுநின்று காவலவன் சீரறிந்து
மாதுரதி யைப்பார்த்து மன்மதனு மேதுரைப்பான்:
"போதுமலர் அம்புரெண்டு போதா தரசனுக்கு
அஞ்சுமலர் அம்பும் அழுத்துவேன்" என்றுசொல்லித்
தஞ்சம் அணுவளவு தானுமின்றிக் கண்சிவந்து

## கலிவிருத்தம்

கங்குல்மத மாவுமொய கலத்திலிரு கொப்பா
லுங்குடைய வேயதில்உ கந்தஅழல் தென்றல்
அங்கமுத மாமதிய தற்குள்ளரி செய்யப்
பங்கமத வேள்அழலைப் பாணமதில் இட்டான். 19

பா. வே. 521 : 4 தந்தையரும் 1574 1691
526 : 2 தானிருக்கு 1574
530 : 2 கடல்முரசம் 1749
532 : 2 பலவிருது 1691
532 : 3, 4 சேர்ந்து துடந்துவந்து 1749
532 : 4 துடர்ந்துவந்து 1574
535 : 2 யைப்பாத்து 1749
536 : 2 அம்பிரண்டு 1691

விருத்தம் 15. 3 : 1 அங்கமுற 1749

இட்டமொரு மாரனனல் ஏகமொடு தாவ
வட்டவுல காளுமதி மன்னவன்ம யங்கித்
தொட்டவிர லாழியொடு தோகையிட மேயான்
பட்டதுய ரோதுபக ரென்றுபல சொல்வான். 16

### நடை

மாரன்விடும் வாளிபட்டு மன்னவனும் மெய்கலங்கிச்
சாரமொடு சந்திரனைத் தான்பாத்து மேதுரைப்பான்;
"இந்தே!உன் வங்கிசத்தில் ஏத்தமுறு மன்னவரைச்
சிந்தையுற வேவருத்தத் தீவினையான் செய்ததுண்டோ?
ஏதுபகை நான்முடித்தேன் என்மீதில் கோபமுடன்
போதுதழல் நீபொழிந்து பொங்குசினம் மீறுகிறாய்?
உங்கள்குல மாதுநல்லார்க் குற்றஉற வாயிருந்தும்
பங்கமுற என்னைப் பரிதாபஞ் செய்யுகிறாய்!
பூவாளி மாமதனே! பூவைதிரள் வல்லவனே!
மாவாளி யால்இந்த மாநிலத்தை வெத்திகொண்ட
வேளாகும் என்றெவரும் மேதினியில் சொல்வசனம்
தாளாமல் நீயெனக்குத் தானுமொரு தையலினால்
வந்துவந்து மோதி வலுசேட்டை பண்ணுகிறாய்;
சிந்தைமிக வேதெளியச் சென்றுபொறும் என்றிடுவன்.

---

பாட வேறுபாடு:

விருத்தம் 16. 4 : 4 சொல்வார் 1749

நடை 539 : 1 மாரனிரு 1691
539 : 3 மன்னவனே 1691
540 : 4 யேதுரைப்பான் 1574
541 : 3 ஏற்றமுறு 1749
542 : 3 தீவினைகள் 1574 தீவினையாம் 1749
543 : 3 என்மீது 1749
548 : 4 வெற்றிகொண்ட 1691
551 : 4 கொள்ளுகிறாய் 1691 1749
552 : 4 என்றிடுவேன் 1691 என்றிடுவர் 1749

மாமுனிவர் தாமுரைத்த வார்த்தைவழி யாகவந்து
பேய்மதனே ! உன்னிடத்தில் பேதைதன்னைக் காட்டிவிட்டாள்
நன்முனிவர் சொல்லியந்த நாரியரைக் கூட்டிவைத்தால்
உன்னல்அரும் என்னுளத்தில் உத்துறவாய் வந்திடுமோ ?
மாதுநல்லாள் தன்னை மனமுருகப் பண்ணியிப்பக்
காதல்எழ நீமுடித்தால் காமனுன்பேர் என்றிடுவேன்; ''
என்றுபல சொல்லி இசைவாக வேபுலம்பி,
நன்றியுள்ள மன்னன் நயமாக வேகிடந்து,
மாய இருளால் மதிஅனங்கன் தென்றலினால்
ஓயாத் துயரால் உருகுவது இத்தனையும்
உத்தகரிச் சானுரைக்க உண்மையுட னேகேட்டு
வெத்திபெறும் என்குலத்தின் வேந்தனையும் வாட்டிநின்ற
கங்குலையுந் திங்களையும் காமனுடன் மூவரையும்
அங்கண்மா ஞாலம்விட்டு யானகத்து வேனெனவே
செங்கண் சிவந்து சிறந்தரத மீதேறிப்
பொங்குகதி ரோன்எழுந்தான் பூவுலகில் **அம்மானை!**

பானு கதிர்படவே பாரிருளும் வேளிருளும்
தானகன்று நீங்கியபின் தார்வேந் தனுமெழுந்து
சீராம் புனலாடிச் செங்கதிரோ னைத்தொழுது
நேராய் நடந்துமந்த நித்தியகர் மம்முடிப்பான்;

---

பா. வே. 553 : 4 யால்வந்து 1749
554 : 2, 3 உன்னுடைய பேதைமதி 1574
556 : 1, 2, 3 உன்னுளமும் என்னுளமும் உற்றுறவாய் 1691
563 : 1 உற்றகரிச் 1691
564 : 1 வெற்றிபெறும் 1691
566 : 3 யானகற்று 1691
566 : 4 வேனெனவும் 1749
569 : 3 பானிருளும் 1574
571 : 1 சீராய்ப் 1574

ஒப்புமை: அடி எண் 553. அரிச்சந்திரனின் நெஞ்சில் சந்திரமதி வந்து புகுந்த வழி.

'மாதவர் உரைத்த மொழிவழி வந்து'

—அரிச். புரா. விவாக காண்டம்—19

நீண்ட மதிதவழும் நேர்பளிங்கு மண்டபஞ்சூழ்
கூண்டமலர்ப் பொய்கைவளங் கோலவெழிற் சோலைசுத்தி
மன்னவன் முகமலர்ந்து வண்மையுடன் பாத்துநின்றான்;
அன்னதுகள் எல்லாம் அரிவைசந்திர மாமதிபோல்
ஆனபுகழ் வேந்தன் அழகு விழிதனக்கும்
மானமுறும் நல்ல மனந்தனக்கும் ஒப்பியதால்
மஞ்சடர்ந்த சோலைதன்னை வல்லியுட கூந்தலென்றும்
கஞ்சமலர் தன்னையந்தக் கன்னிமுகம் ஆகுமென்றும்
மாவடுவைக் கண்ணெனவும் வாய்இலவு தானெனவும்
மேவும்வள்ளை காதெனவும் மிக்ககுமிழ் மூக்கெனவும்
முல்லைமுகை பல்லெனவும் மூங்கிலிரு தோள்எனவும்
நல்லகமு கானதந்த நாரிகழுத் தாம்எனவும்
கோங்கரும்பைக் கொங்கைஎன்றும் கோலவய றாலெனவும்
தாங்குவஞ்சிக் கொம்பைஇடை தான்எனவுங் காண்எனவும்
இதமுலவும் வாழைதனை ஏற்றகுறங் காமெனவும்
விதமுலவும் நள்ளி மிகுத்தமுழங் காலெனவும்
பங்குஞ் சினைவரால் பாவைகணைக் காலெனவும்
தெங்கினிளம் பாளை சிறந்தபர டாமெனவும்
மாந்துளிரைப் பாதமென்றும் மனதி லுறமகிழ்ந்து
சாந்தணியுங் கொங்கைமின்னாள் தன்னாசை கொண்டுமெத்த
எண்ணியெண்ணி இங்கேவந் தெய்தினாள் என்றுசொல்லி
நண்ணி யழைக்கழைக்க நாரிவரக் காணாமல்

---

பா. வே. *573 : 4 மண்டபத்தில் 1691*
*574 : 2 பொய்கைவனங் 1691*
*574 : 4 சோலைசுற்றி 1749*
*579 : 1 மஞ்சடைந்த 1574*
*580 : 3, 4 கன்னிமுக மாமெனவும் 1691*
*583 : 1 முல்லைநகைப் 1691*
*584 : 2 கானதையும் 1574*
*587 : 3, 4 ஏற்றதுடைக் கம்பமென்றும் 1574*
*591 : 4 லுறநினைந்து 1691*
*592 : 4 தான்மிகுத்து 1574*
*592 : 3, 4 தானிரக்கங் கொண்டுமெத்த 1691 1749*
*594 : 2 யழைக்கவந்த 1691*

சோலைகாண் ஈதுமந்தத் தோகையல்ல என்றறிந்து
மாலைமுடி கொண்டரசன் மய்யலுடன் வீத்திருந்தான்;

### (அரிச்சந்திரனுக்குச் சந்திரமதியை மணம்பேசும் பொருட்டு, மாதவர்கள் கன்னோசி மன்னன் மதிதயனைச் சந்தித்தல்)

சென்றதொரு மாதவர்கள் சீரார் மதிதயன்தன்
நன்றியுடன் வாழும் நகரி தனிற்புகுந்து
வீதி கடந்து விருதுமண்ட பங்குறுகிச்
சேதியுத்த மன்னனிடஞ் சென்றனர்காண் **அம்மானை !**

வந்தமறை யோர்கள் மலரிணையை மன்னவனும்
சிந்தைகளி தான்கூரத் தெண்டனிட்டுக் கேட்கலுத்தான்-
''இங்கிருந்து போனீர்; இனிவர நாள் செல்லுமென்றீர்;
தங்காமல் வந்தவகை தானேது கூறும்'' என்றான்;
''மன்னவனே நீபயின்ற மாதுசந்திர மாமதியாள்
தன்னிகருக் கொப்பான தார்வேந்தைக் கண்டுவந்தோம்;
இந்நிலத்தில் அந்த இயலரசன் நாட்டியல்பும்,
அன்னவன்தன் கீர்த்திகளும், ஆனபுக ழுங்குணமும்
கண்டபடி யாமுரைக்கக் காவலனே! கேட்டருள்வாய்;
''தண்டமிழ்நூல் ஆராயும் தார்வேந்த னானவன்காண்;
வெத்திமிகு நல்வசனம் மீறுவள முள்ளவன்காண்;
புத்திமதி யுள்ள புகழரசர் கெம்பீரன்;
சித்தியுடன் செந்திருவைச் சேர்ந்திலங்கும் மார்வனவன்;
சத்தியரிச் சந்திரன்காண்; தன்னிகரில் லாதவன்காண்;

---

பா. வே. 597 : 3, 4 சீராய் மதிதயனூர் 1691
601 : 3 மலரடியை 1691 மலரிணையில் 1574
602 : 1, 2 சிந்தை களிகூரத் 1691 1749
602 : 4 கேள்க்கலுற்றான் 1574
613 : 4 மார்பனவன் 1574 1749

ஒப்புமை : அடி எண் : 603, 604 விரைவில் மீண்டு வந்த மாதவரை மதிதயன் வினவல்
'போனநீர் உடனே மீண்ட அருத்தியென் புகலும் என்றான்'
—அரிச். புரா. விவாக காண்டம்-38.

மானும் புலியுமொரு வாவியிலே நீரருந்தித்
தானும் உலாவிவளர் தங்குமயோத் திக்கதிபன்;
மாதவருந் தேவர்களும் வந்துவந்து பூசைபண்ணும்
ஏதமுறுஞ் சோலை இலங்கிவளர் நன்னாடன்;
அன்புஞ் சிறப்புகளும் ஆதரவும் நற்புகழும்
இன்பமுடன் மிஞ்சி இருநிதிய மும்பெருகிப்
பேரழகும் வீறழகும் பேசரிய சொல்லழகும்
சீரழகுஞ் சேர்ந்தமனு சேர்ந்திருக்கும் நன்னாடன்;
ஆய்ந்த கருமம் அடர்கருமஞ் செய்கருமம்
வாய்ந்து தெரிந்துரைக்கும் வாளமைச்சர் சிங்கமெனும்
சத்திய கீர்த்திஎனுந் தான்அமைச்சன் உள்ளமன்னன்
புத்தி யுடனறிவும் பூண்ட(நி)றை ஞானமுள்ளான்;
அங்கவனுக் கேற்கஇந்த அம்புவிவிண் ணோர்பதியில்
எங்குமில்லை காண்மனவ! ஏத்தமுடன் உம்முடைய

---

பா. வே. 617 : 3 வந்துநித்தம் 1691
618 : 3 இலங்கிவரும் 1691
621 : 4 மெய்யழகும் 1691
622 : 2 சேர்ந்துமனுச் 1691
628 : 3 ஏற்றமுடன் 1574

ஒப்புமை: அடி எண் 615, 616. விலங்குகளிடத்தும் பகைமை இல்லாத நாட்டிற்கரசன் அரிச்சந்திரன் எனல்

'பொருந்தி மானும் புலியும் புனலுடன்
அருந்தி வாழும் ஒருதுறை அன்பினால்'
—அரிச். புரா. நகரச் சிறப்பு-20

அடி எண். 627-631. மாதவர் மதிதயனை நோக்கி, இவ்வுலகில் 'நின் மகளுக்கு ஏற்ற கணவன் அரிச்சந்திரனே' என்றுரைத்தல்

'புவனமுள் ளளவும் யாங்கள்
புக்கறிந் தனேக கோடி
நவநர பதிகள் தம்மைக்
கண்டனம் நறுந்தார் வேந்தே
சிவன்நல்க நீப யந்த
திருமகள் தனக்குக் கேள்வன்
அவனல தில்லை என்ன
அருந்தவர் எடுத்து ரைத்தார்'
—அரிச். புரா. விவாக காண்டம்-41

கற்பனைய சந்திரமதி கன்னியெனும் மாவரசி
அற்புதமும் வீறும் அவர்க்குகமை காணுதெ"ன்று
மாமறையோர் கூற, மதிதயனுங் கூறலுத்தான்—
"கோமறைசேர் வேதியரே கூறினீர் இவ்வார்த்தை.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

மைந்தனை வேண்டி, ஆதி
மழவிடை அண்ணல் பாதம்
சிந்தையில் இருத்தி யானும்
தேவியும் தவமே செய்தோம்;
முந்தமுப் புரத்தைக் காய்ந்த
முக்கணன் இரங்கித் தோன்றித்
'தந்தனம் மகவை' என்று
தையலை அருளிச் செய்தார். 17

---

பாட வேறுபாடு

நடை: 631 : 4 கூறலுற்றான் 1574 1691

விருத்தம். 17. 3 : 4 முக்கணர் 1574

ஒப்புமை : அடி எண் : 631—653 மற்றும் விருத்தம் 17, 18
மாதவர் உரைக்கக் கேட்டு, மதிதயன் சந்திரமதிக்குச் சுயம்வரம் என மன்னர்களுக்கெல்லாம் ஓலையனுப்ப ஏற்பாடு செய்தல்

'மையலாற் றியகு ணத்து மாதவர் உரைப்பக் கேட்டுப்
பொய்யிலா மொழியால் உள்ளம் பொருந்தியும் பொருந்தா னாகித்
தையலாள் பங்கன் மேனாள் சாற்றிய தகைமைக் கேது
செய்யலாம் நம்மால் என்னத் திகைத்திருந் துரைக்க லுற்றான். 42

மூவரா யவரின் முன்னா மூர்த்தியார் அருளிச் செய்த
தேவரா சியமொன் றுண்டா மன்னது தெரிய வல்லார்
யாவரா யினும்யான் பெற்ற விளங்கொடி தனக்குக் கேள்வர்
ஆவரா லவனிங் கெய்தின் அறியலாம் அழையும் என்றான். 43

அரசையிங் கழையும் என்ன அகமகிழ்ந் துவகை கூர்ந்து
விரைவுட னெழுந்தி ருந்து வேதமா முனிவர் போனார்.
இருநிலத் தரசர்க் கெல்லாம் சுயம்வரம் ஏழு நாளென்
றுரைசெயும் என்று தூது மோலையும் போக விட்டான்.'

— அரிச். புரா. விவாக காண்டம்-44

"அம்மட மயிலுக் கிந்த
அர்புவி யதனி லேயாம்
செம்மையோர் குறிப்புச் சேர்த்தோம்;
செழுங்குறிப் பெவர்க்குந் தோணா(து);
இம்மயில் குறிப்பைக் கண்டான்
இவளுட தலைவ னாகும்;
கொம்மைசேர் முலையி னாளைக்
கொடும்" எனக் கடவுள் சொன்னார். 18

நடை

பண்டெனக்கு முக்கண் பகவான் எழுந்தருளி
மண்டலத்தில் நல்ல மதலைதந்தோம் பெண்ணெனவே
அந்தமட மானுக் கடையாளம் ஈதெனவே
எந்தன் மனத்தில் இருத்தியன்று சென்றனர்காண்;
அம்மொழியைக் காணாமல் யானுங் கொடுப்பதில்லை;
உம்முடைய வாசகமும் ஒப்பா திருப்பதில்லை;"
என்றரசன் சொல்ல இயல்முனிவர் ஏதுரைப்பார்—
"வென்றியுடன் எங்கள்மனம் மேவியே நின்றபடி
அன்றரனார் சொன்ன அதிசயமுந் தோணாதோ!
நன்றியுள்ளாய்!" என்று நவின்றார் மறையோர்கள்;
"வந்தால் அறிவம்" என்று மன்னன் மனத்தில்வைத்(து)
"எந்தையரே நீங்கள் இசைத்தபடி கூடுதற்கு
அந்தமன்னன் வாழும் அணிநகரி சென்றணுகிச்
சிந்தைகளி கூரச் சிறந்தமணம் என்றுரைத்து
இந்நாளில் வாருமெ"ன்று ஏத்தமறை யோரைஎல்லாம்
பொன்னார் மதிதயனும் போகவிட்டார் **அம்மானை!**

வேதமறை யோர்எழுந்து மிக்கபதி தான்கடந்து
போத, மதிதயனும் போந்து,மணங் கொண்டாடிக்,

பாட வேறுபாடு

விருத்தம் 18. 1 : 5, 6 தனிலே யாமுன்
3 : 2, 3 குறிப்புக் கண்டோர்

நடை 635 : 2 மாதுக் 1691
637 : 3 யாமுங் 1574
645 : 3 அணிநகரில் 1691
645 : 4 சென்றுபுக்கி 1574

கன்னிசந்திர மாமதிக்குக் கல்யாணம் என்றுசொல்லி
இந்நிலத்தில் மன்னர்க் கிசைந்தபடி கூறுமென்று
ஓலை மிகவெழுதி ஓடவிட்டார் **அம்மானை !**

சாலமுடன் எண்ணேழ் தலத்தரசர் வந்திருக்க
ஸங்காரம் மின்னுமணி மண்டபங்கள் அத்தனையும்
சிங்காரஞ் செய்து சிறப்பாக வைத்திருந்தார்;
அந்நிலமே சென்று அருமறையோ ரெல்லாரும்
மன்னன் அயோத்திநகர் வந்தடைந்தார் **அம்மானை!**

வந்தவர்கள் சொன்ன வரலாறு கேட்டவுடன்
சிந்தைகளி கூர்ந்து செயவேந்தன் கொண்டாடி
மணக்கோலம் என்றுசொன்ன மாதவரைப் போத்திசெய்து
இணக்கமுடன் கல்யாணம் என்றதினங் கண்டவுடன்
செப்பும் புகழரசன் சேர்ந்தவர்க்கெல் லாமுரைத்து
ஒப்பும் பயணமென்று உள்முரசு சாத்துமென்றான்;

### கன்னோசி நாட்டுக்கேகுதல்

சாத்துமுர சங்கேட்டுத் தானைபடை யுந்திரண்டு
ஏத்தமுட னேவருமுன் னிசைவேந் தனுமெழுந்து.

### கலிவிருத்தம்

அம்பகமி லங்குருளை யானபடை சேனை
விம்புலவும் தெத்துமணி மிக்கவயி ரங்கள்
டண்புகொடி யாடைபவ ளச்சரமி லங்க
நன்பெரிய நீளிரத மீதில்நர பாலன், 19

---

பாட வேறுபாடு

நடை 652 : 4 கூறுமென்றார் 1574
654 : 1 தாலமதின் 1691
656 : 4 வீற்றிருந்தார் 1691
661 : 4 போற்றிசெய்து 1691
662 : 3: 4 என்றதினந் தான்பார்த்து 1691
664. ஒப்பு மணமென்று ஒண்முரசு சாற்றுமென்றார் 1691
664 : 4 சாற்றுமென்றான் 1574
665 : 1 சாற்றுமுர 1691
666 : 1 ஏற்றமுட 1691

விருத்தம் 19. 1 : 3 யானைபடை 1691
2 : 2 தெற்றுமணி 1691
3 : 1 பம்புகொடி
4 : 1 நம்பெரிய 1691
4 : 3 மீதுநர 1691

பல்லியம்இ யம்பவிரு தோதமுர சோத
நல்லமறை யோர்களொடு நான்மறையி யம்பச்
செல்லநகை மின்கவரி சென்றுபலர் வீச
வில்லிமதன் நோற்றுலவும் வீதியிடை சென்றார்.

## நடை

பொன்னுருளை சேர்த்துப் புகழ்மணிச்சிங் காரமுடன்
உன்னியதேர் மீதில் உயர்வேந்தன் சென்றிடவே
குற்றேவல் செய்யுங் குறுமன்னர் தாம்அனந்தம்
பொற்றேரில் ஏறிப் புறப்பட்டார் அம்மானை!

முத்துக் குடைகளுடன் மூண்டபவ ளக்குடையும்
உத்த மணிக்குடையும் ஓங்குவயி ரக்குடையும்
எண்ணரிய கோடி இலங்கியெங்குஞ் சூழ்ந்துவர
மண்ணதிர விண்ணதிர மத்தளங்க ளுங்குமுற
ஆனை ஒழுங்காய் அடர்பரிக ளும்மொழுங்காய்த்
தானை யொழுங்காய்த் தளம்புரத மும்மொழுங்காய்
அணிஅணிக ளாக அடர்ந்து துடர்ந்துவர
வனிதமு றும் வில்காரர் வாள்காரர் தன்னுடனே
வல்லையங்க ளும்பிடித்து வாறபடை தானையுடன்
சொல்லுந் திரள்பெருக்கந் துய்யகடல் வெள்ளமென்ன
வான்பரியில் ஏறிவரும் வல்வீரர் முன்னடக்க
மேன்புபெறும் யானைதனில் மேவுமன்னர் சூழ்ந்துவர
வாலப் பிறைநுதலார் மங்கையர்கள் தானனந்தம்
கோலத் திலகுமணிக் கொத்தவன்தேர் சூழ்ந்துவர

பா. வே. 667 : 2 சேர்த்த 1691
679 : 4 ஆனையுடன் 1574
679 : வல்லயங்கள் தான்பிடித்து வந்தபடை பண்புடனே 1691
680 : 2, 3 படைப்பெருக்கம் துய்யபடை 1691
681 : 3, 4 வல்வீர ரும்நடக்க 1691
683 : 1, 2 வாலைப் பிறைநுதலாள் 1574
684 : 2, 3 திலதமணிக் கொற்றவன்தேர் 1574
திலங்கும்அயில் கொற்றவன்தேர் 1691

வானவர்கள் கொண்டாட மன்னனரிச் சந்திரனார்
ஆனபுகழ் சேரும் அடல்அமைச்சர் தன்னுடனே
மேனனைய சாமரைமி குத்தநவ சித்திரமுடன்
ஆனவிரு தோடுகொடி ஆகமுட னேநடக்க
எத்திசையும் கேட்க* இசைகொண்டு தான்முழங்கிப்
பத்தியுடன் சின்னம் பகருமொழி கேட்டருளி
அன்னதறு வாகனென்றும் ஆதிநெறி யாளனென்றும்
கன்னல்மத வாகனென்றுங் கட்டழகொய் யாரனென்றும்
வெத்திமுடி வீரனென்றும் வேதமொழி யாளனென்றும்
பத்தியுள்ள மன்னனென்றும் பார்அரச சிங்கமென்றும்
நறுதங்கு மார்பனென்றும் ராசாதி ராசனென்றும்
திரிசங்கு மைந்தனென்றுஞ் செங்கைமுகி லாளனென்றும்
சீர்வதிஷ்டர் சீசனென்றுந் தேவர்புக ழாளனென்றும்
பேர்மிகுத்த மெய்யனென்றும் பின்நறபண் பாளனென்றும்
சக்கரபத்தி மன்னனென்றுஞ் சத்தியரிச் சந்திரனென்றும்
உக்கிரமுடன் ஓதுசின்னம் ஓதியோ திச்சிறக்க
மன்னுமுடி வேந்தருடன் வாள்வேந்தர் தேர்வேந்தர்
கன்னியரும் மைந்தர்களுங் காதலுட னேதிரண்டு
தேர்மீதும் மாமீதும் செய்யபரி யின்மீதும்
நேர்சேர் சிவிகையிலும் நேரிழைமார் ஏறிவர
நூபுரத்தின் ஓசைகளும். நோக்குவளைத் தாக்கொலியும்,
கோபுரத்தின் நெத்திக் கொடுங்கைமணி யோசைகளும்,

---

பா. வே, 688 : 1, 2, 3 மானவிரு தோடுகொடி மாகமுட 1749
மானவிரு தோடு மகரமுட 1691
693 : 1 வெற்றிமுடி 1691
697 : 3, 4 தேவர்புகழ் மன்னனென்றும் 1691
700 : 1, 2 உக்கிரமத் தோடுசின்னம் 1691
700 : 3 ஊதியோ 1574 ஊதியூ 1691
701 : 1 மன்னர்முடி 1691
703 : 4 மீதினிலும் 1691 1749
704 : 3 நேரிழையார் 1691 1749
706 : 2, 3 ஒத்ததினங் கூண்டமணி 1691

* சுவடியில் 'கேள்க்க' என உள்ளது.

திண்கரிக ளுக்கணிந்த திண்டுமணி யோசைகளும்,
வெண்பரிக ளுக்கணிந்த வீறுசதங் கைத்தொனியும்,
ஏழுகடல் போல இரைந்து குமுறிவர
வாளுக் கிணைவிழியார் மங்கையரும் ஆடவரும்
வேளுக் கிணையெனவே மெய்யிலங்கப் பூண்டபணி
நீளும் பிரவை நிரையோற் றிடும்பிரவை
ஆய்ந்தகதிர் இந்துவிலும் ஆயிரங்கொண் டேஇலங்க
வாய்ந்தபடை தாம்நடக்க மண்டுதுக ளும்மெழுந்து
மீண்டுவண்ட கோளமட்டும் மீண்டுதுகள் மண்டியதே;
தாண்டுபரி வாய்நுரையும் தந்திமத வெள்ளமதும்
மண்டுதுக ளையடக்கி வெண்மையுட னேயிருக்க,
எண்டிசைகள் போற்றும் இறைவோன் ரதம்நடக்க,
வீரமுட னேபிடித்த மிக்ககுடை யானதெல்லாம்
சீருலவும் பந்தலெனச் செங்கதிரைத் தாங்கிவரக்
கோலப் பெருமையுடன் கோதையரும் ஆடவரும்
சீலத் துடன்நடக்கச் சேடன் முடியதிர
வேளைய மன்னன்மிகு வெள்ளத் திரளுடனே
நீளும் பெரியதொரு நேர்ஆ றணுகிவந்தார்;

## ஆற்றில் நடத்தல்

அந்தமணி யாத்தில் அடர்ந்தபடை முன்னடக்கப்
பந்தமுடன் நீந்திப் படர்ந்தகரை ஏறிநின்றார்.

---

பா. வே. 709 : 2 போலே 1691 1749
712 : 2 பிரபை 1691
712 : 4 றிடும்பிரபை 1691
712 : 3, 4 'நிறையொத் திடும்பிரவை'
714 : 2, 3 மண்டுதுக ளார்ப்பரிக்க 1691
மண்டுதுக ளார்ப்பரித்து 1749
715 : 1 மீண்டஅண்ட 1691 1749
715 : 3 மீண்டுபுகை 1691 1749
724 : 4 றணுகிவர 1691
725 : 2 யாற்றில் 1574 1691 1749

பின்புவரு வோர்க்குப் பெருத்தநிலை தானாகிப்
பொன்பூ முடியளவாய்ப் போந்தநெத்தி வாயளவாய்க்
கண்டத் தளவாய்க் கனிந்தகம லத்தளவாய்
மண்டும் அரையளவாய் வாய்த்த துடையளவாய்
முழங்கால் அளவாகி மூண்ட கணைக் காலளவாய்
விளங்கும்பா தத்தளவாய் மீறியசே னாயுலர்ந்து
தூளாகி யாறு துகளெழுகச் சேனைவெள்ளம்
தாளாம லேநடந்து தான்சென்றார் அம்மானை!

அத்தலத்தில் வந்தளுடன் அரிச்சந் திரவேந்தன்
இத்தலத்தில் சேனை இறங்கென் றருள்புரிந்தான்;
அங்கவர்கள் ஏறிவரும் ஆனைபரி தேரைவிட்டுச்
சிங்கமென வேயிறங்கிச் சீராக வீத்திருந்தார்;
தங்கமணிச் செப்புமுலைத் தையலர்கள் தான்சிலபேர்
பொங்குஞ் சரசுநதி போந்துநதி யாடவென்று
சீராடி நீராடிச் சேர்ந்துவிளை யாடிநின்று
போராடி நீரிறைத்துப் போந்துமணங் கொண்டாடி
மாமலரைக் கொய்து மலர்க்குழலி லேயணிந்து
காமுகர்தம் மார்பினிலுங் கையினிலும் மெய்யினிலும்
தாமெறியத் தம்மையவர் தானெறியத் தாமெறிய
ஏமநெளி பாடகத்தில் எத்திஉடை தட்டிவிழ

---

பா. வே. 727, 728 அடி முன்பின் மாற்றம் :

பொன்பூ முடியளவாய்ப் போந்தநெத்தி வாயளவாய்ப்
பின்புவரு வோர்க்குப் பெருத்தநிலை தானாகி 1691

733 : 3 துகளெழும்பச் 1691
737 : 4 தேர்கள்விட்டு 1574
738 : 1, 2 சிங்க மென இறங்கி 1691
740 : 1, 2 பொங்குதிரை அந்நதியிற் 1749
740 : 3, 4 போந்துநீ ராடவென்றும் 1691
741 : 4 யாடிநின்றார் 1574
743 : 3 மணிக்குழலி 1691
743 : 4 லேசொருகி 1574
744 : 1 காமுகர்தன் 1574 1691
745 : 3, 4 தாமெறியத் தானெறிய 1691

மாதுசிலர் அங்கைகொட்டி வல்முறுவல் செய்திடவே
நீதமுட னேஇலங்கி நின்றமுகை முல்லையுடன்
கண்டமுத்தும் வெட்குதென்று காட்டிவிடுங் கோட்டுமுலை
வண்டலரும் கூந்தல்மட மாதுகளி கூர்ந்திடவே;
வந்தபடை மள்ளியரும் மாவேந்த ரானவரும்
விந்தையுடன் சாகைதனில் மேவியே சென்றிருந்தார்;
ஆனைதனைப் பாகர் அடர்ந்தமரம், சங்கிலியில்
தானணையவும்,பரிகள் தங்குபந்தி கட்டிடவும்
பானு கடல்புகுந்தான்; பாங்கணையச் சேனையெல்லாம்
ஏனமுட னேயமுர்தம் ஏத்தமுடன் தானருந்தி
அன்னவர்கள் சேர அரிவையர்க ளும்மகிழ்ந்து
தன்னவர்க ளோடுந் தழுவிமுயங் கிப்பிணங்கிச்
சேலனைய கண்துயின்றார் சீர்வேந்த னானதொரு
ஏலமுள்ள மன்னன் இருள்மதியை மாமதனை
நொந்துநொந்து கண்டுயிலை நோக்காமல் காத்திருந்தான்;
வந்த இருளகல வானமெங்குந் தானிலங்கிக்
கதிரோன் எழுந்தவுடன் காவலனுஞ் சேனைகளும்
அதிக முடனெழுந்து ஆனைபரி தேருடனே
காதற் சிறக்குமெழிற் காலாட் படையுடனே
நீதியுடன் சென்று நிரைவனமுஞ் சோலைகளும்
தானே கடந்துநெடுஞ் சார்புமலை யுங்கடந்து
மேனாங் குறிஞ்சிவழி வேல்வேந்தன் செல்லலுற்றான்.
அக்குறிஞ்சிப் பாதை அடர்ந்திலங்கும் பாறையெங்கும்
மிக்கரதப் பொன்னுருளை வீறாய் நடந்திடவே

---

பா. வே. 747 : 4 ஆகிடவே 1749
749 : 1 கண்டுமுத்து 1691
750 : 3 மாதர்களி 1691 1749
753 : 3 அடர்ந்தமணிச் 1691
756 : ஏன முடனமுர்தம் ஏற்றமுட னேயருந்தி 1691
761 : 4 தானிருந்தான் 1691
762 : 3 வானமெல்லாந் 1691
763 : 3 காவலவன் 1691
763 : 3, 4 காவலனுந் தானைகளும் 1749

தங்கம் எனப்பரப்பித் தானும்வைத்த வாறெனவே
எங்கும் சிறப்பாய் இலங்கியதே **அம்மானை!**

அத்தலமும் நீங்கி அரியபெருஞ் சேனையுடன்
மெய்த்தவஞ்சே ரும்வதிஷ்டர் வீத்திருக்குஞ் சோலைபுக்கான்.

## வதிஷ்டர் தெரிசனம்

மிக்கபெருஞ் சேனையுடன் வேதமறை யாளருட
வர்க்கமுடன் வீத்திருக்கும் மாவதிஷ்டர் சாகைநண்ணி
அங்கமெல்லாம் பூமியுற அன்பாகத் தெண்டனிட்டுச்
சங்கையுடன் போத்தியிரு தாள்வணங்கி நிற்கலுத்தான்.
நின்றமன்ன னுக்கு நிரையாக வாக்கருளி
நன்றி யுடனிருத்தி நன்முனிவன் ஏதுரைப்பான்;
"மன்னா! உனக்கு மனைக்குரிய மாதுநல்லாள்
பொன்னான சந்திரமதி பூவையர்காண்" என்றுசொல்லி,
வந்த முனிவருக்கும் மாவேந்தர் சேனையர்க்கும்
கந்தமத யானை கடுப்பரிகள் உள்ளதுக்கும்
வெத்தி வதிஷ்டமுனி மெய்விருந்து பண்ணவென்று
சித்தியுள்ள மெய்க்காம தேனுவைவா வென்றழைத்தார்;
சொல்லுரைக்கும் முன்னைவந்து தோன்றிச் சுரவியது
நல்லமுனி வோர்களுக்கும் நல்லபடை வீரருக்கும்

---

பா. வே. 773 : 1 அத்தலத்தை 1691
774 : 4 சோலைபுக்கார் 1574 1691
775 : 2 சிஷருடன் 1749
775 : 4 யாளர்களும் 1691
776 : 3 மாவசிட்டர் 1749
777 : 4 தெண்டனிட்டார் 1574
778 : 2 போற்றியிரு 1691
778 : 4 நிற்கலுற்றான் 1574 நிற்கலுற்றார் 1749
780 : 1, 2 நன்றியுட னேயிருத்தி 1749
782 : 3 பூவையர்தான் 1691
783 : 4 சேனைகட்கும் 1691
784 : 4 உள்ளதற்கும் 1574
785 : 2 வசிட்டமுனி 1749

ஆனை பரிகளுக்கும் அன்பாக வேமகிழ்ந்து
தானவர்க்கு வேண்டுந் தயவாய் அமுதருளி
மாமுனியைப் போற்றிசெய்து வானுலகி லேசுரபி
தாமிருக்குஞ் சாகைத் தலப்புகுந்த (து) **அம்மானை!**

குருவாம் வதிஷ்டருடன் கோலமுனி வோர்களுடன்
திருவனைய சேனையுடன் சேர்ந்த அமைச்சருடன்
பெருமையுறு மன்னன் பிறப்பட் டெழுந்தருளி
மருவனைய பூங்குழலாள் மாகாளி வாழுமந்த
நேரான பாலை நெடுவனத்தில் சென்றுபுக்கார்;
பேரான பாலைப் பெருமைதனைப் பேசலுத்தேன்.

(பாலைநில வண்ணனை)

கலிவிருத்தம்

காரை வீரை கதித்தமுள் பத்திய
சூரை வாகை சுழன்றெழு கள்ளிகள்
ஈர மன்றி எழுஞ்செடி யானது
நேர டர்ந்து நெருங்கிய கானகம் 21

காக மோடு கழுகுப ருந்துகள்
நாகம் நீடு நகப்புலி மான்மரை
வேக மீறு நிலத்திடை வந்துவந்
தேக மோடெ ரிவுத்தெரி கானகம். 22

நடை

காரை யுடனே கதித்தமுள்ளும் பத்திவளர்
சூரையுட னேநெடிய துன்னியமுள் ளிச்செடியும்

---

பா. வே. 790 : 3 தகுந்த 1691
791 : 2 போத்திசெய்து 1749
793 : 2 வசிட்டருடன் 1691
798 : 3 பெருமையுடன் 1749
798 : 4 பேசலுற்றேன் 1574 1691 1749
799 : 4 பற்றிவளர் 1749

கள்ளியுடன் கள்ளி கனகமுடன் சுண்டைகளும்
ஒள்ளியதோர் வாகை யுடனே வளர்கதை
பத்திவரக் காட்டில் பருந்துஅழுங் கோடுமுதல்
சுத்தியதோர் பல்பறவை தோன்றும்அர வெங்கள்முதல்
ஏனமுடன் மான்கரடி ஏத்தபுலி வாய்த்தகரி
தானுமந்தக் கானகத்தில் தங்கநிழல் இல்லாமல்
வெப்படர்ந்த தால்மடிந்து வெள்ளெலும்பு தானாகிக்
குப்பல்குப்பல் என்புமலைக் கூட்டம்மெத்த வேகிடக்கும்.
வானவரும் அவ்வனத்தில் வந்தணுகத் தான்நடுங்கும்;
ஆனகதி ரோன்மதியும் அவ்வனத்தை நோக்காது;

**(அரிச்சந்திரன் காசிகோயிலைக் காணுதலும், அருள்பெறுதலும்)**

இப்பெரிய கானகத்தை ஏத்தமுடன் கொண்டாடிச்
செப்பமுட னேமகிழ்ந்து சென்றுதினம் வீத்திருக்கும்
வீருலவு சிங்கார மேவுபத்திர காளியம்மை
பேருலவுங் களிப் பெருந்தளங்கள் சூழ்ந்துநிற்க,

---

பா. வே. 803 : 1 பற்றிவரக் 1691
803 : 3 பருந்துகழு 1749
804 : 1 சுற்றியதோர் 1749
804 : 1, 2 சுற்றியபோற் றும்பறவை 1691
805 : 3 ஏற்றபுலி 1691
808 : 2 அத்திமலைக் 1574
811 : 3 ஏற்றமுடன் 1691 1749
812 : 4 வீற்றிருக்கும் 1574
814 : 4 காத்துநிற்க 1691

ஒப்புமை : அடி எண். 802—808. பாலை; வெப்பக் கொடுமையால் காட்டு விலங்கெலாம் மடிய, எலும்புமலை காட்சியளித்தல்.

"வெங்கதிர் தெறும்கொடிய விண்டுவனம் வெந்தெரியும்
வெந்தழ லின்வாய்
அங்கதம் இறந்துமத குஞ்சரம் இறந்துட்
லழிந்திட மெலாம்
செங்குருதி அம்கடலின் மண்டமுது வாரிஅலை
சிந்து நுரைபோல்
எங்கணும் விளங்குவன வெண்குவ டெலும்பரி
செலும்பு மலையே."

—அரிச். புரா. விவாக காண்டம்-111

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

கோடிகதி ருக்கதிய முத்தகிர ணப்பிரவை
கோலமுறு மேனிஎழிலும்
நீடிவிரி வுத்தசடி லத்தழகு மாவதன
நீடிலகு வாகுவடிவும்
நாடிநய னப்பரிசும் வாயழகு கண்டமொடு
நாளுமணி யுத்தபணியும்
ஆடியர னைப்பெரிய பித்தனென விட்டபத
மாடியசி லம்பொளிரவே. 23

முத்துமணி யாபரண மாலையொடு கச்சிலகு
முண்டகமு கைக்கனகநேர்
குத்துமுலை, வேயனைய தோளொடும ருங்கொடுகு
லாவுகலை வீசுபரிசுந்
தெத்துமழு வேலதிக தாயுதம்மி குந்திகிரி
சீர்பெறுகோ தண்டமுடனே
பத்தியொடு தேவர்முனி வோர்பரவு தாளிணைகள்
பண்பொடுசி றந்தொளிரவே. 24

## நடை

எண்ணும் அனேக இரவுகளெல் லாந்திரண்டு
நண்ணுங் குழலுடைய நாயகிமா தேவியம்மை
வாலப் பிறைநுதலில் வைத்தகதிர் சிந்துரக்
கோலத் தழகுங் குலாவுகின்ற கொம்பனையாள்;
தாலந் தனைவளர்க்கத் தானளிக்க வாஞ்சைகொண்டு
ஆல மெனவே அமுர்தமது தானெனவே,

---

பாடவேறுபாடு

விருத்தம் 23 1 : 2, 3, 4 ருக்கதிக முற்றகிர ணப்பிரபை 1691
2 : 2 வுற்றசடி 1691 1749
2 : 5 நீடிலத 1691
3 : 6 யுற்றபணியும் 1691

நடை 816 : 4 தேவியம்மா 1574
817 : 4 செந்துரக் 1749

அத்திப் பொரிசிதறி ஆங்கார மாகவுன்னிப்
பத்துத் திசைக்கும் பரந்தவிழி தானிலங்கச்
சித்திரமா முத்துச் சிறந்தமுக் குத்திமின்ன,
வெத்தியுடன் காதில் மிகுத்தமணித் தோடிலங்க,
ஆயிரங் கோடிகதி ரான பிரவையுடன்
ஞாயிறுபோ லொத்த நளின முகமிலங்கச்
செம்பொற் கிரியென்னுஞ் சிங்காரக் கொங்கையுடன்
அம்பொற் பதக்கனுடன் ஆடரவ மாலைமின்ன
நீதப்பொன் னாடை நெருங்குமருங் கில்துலங்கப்
பாதத்தில் வீரப் பரிபுரமுந் தானிலங்கக்
கோதண்ட பாணம் குலாவும் திகிரிசங்கு
மாதண்டு சூலம் மழுஆ யுதத்துடனே
கையில் தமரகமும் கங்கணமும் தானிலங்கச்
செய்யபுகழ்க் காளி சிறந்திருந்தாள் **அம்மானை !**

சேவித்துக் கைகுவித்துச் சென்றுபல பூதகணம்
கோவிற் புறங்கடொறுங் கூட்டமிட்டுக் காத்துநிற்க
மேளமுடன் மத்தளமும் மிக்கபல வாத்தியமும்
தாளமதி தித்தியுரை சத்தம் அடர்ந்திடவே
யாழினிசை பாடி அலகைபல காத்துநிற்க
வாளினிணை சேர்விழிக்கு மைச்சாந் தரைப்பதற்கே
மோகினிக ளும்பெரிய மொய்கணங்க ளுந்திரண்டு
டாகினிக ளும்மிருந்து நற்சாந் தரைத்துநல்கும்
அக்கணத்துக் கெல்லாம் அடர்ந்தேவ லுங்காட்டி
மிக்கதிருக் கோவிலிலே வீத்திருந்தாள் மாகாளி.

---

பா. வே. 825 : 4 பிரபையுடன் 1574
828 : 2 பதக்கமுடன் 1574 1691
829 : 3 நெருங்கிமருங் 1691
830 : 4 தான் துலங்கக் 1691
836 : 4 காத்துநிற்கும் 1574
838 : 2 தித்தியுடன் 1691
838 : 3, 4 சத்தமுற்ற திர்ந்திடவே 1691 1749
840 : 4 தரைப்பதற்கு 1691
842 : 2 ளும்மிகுந்து 1749

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

ஆனையிர தங்குதிரை சேனைபல வுங்கொடிகள்
ஆடைவிரு துந்தெரியவே
தேனைநிக ருஞ்சொல்மட வாரும்மிக வும்பெரிய
சீரொடுசி றந்தகூடல்போல்
கானகநெ டுங்கொடிய பாலைவனம் அங்கவர்கள்
காவுகுடை தங்குநிழலால்
தானணுகி, வந்தனைசெய் வானவர்க ளும்புகழுந்
தானையொலி சங்கமுடனே. 25

வெப்புதழல் மிஞ்சுவனம் என்றுகதிர் இந்துபல
மிக்கமுனி வர்க்கமுடனீள்
உம்பர்களும் வெந்திடந டுங்குவதும் என்றமொழி
உத்தபடி தித்துவனமீ(து)
அம்பிகைசெ யங்கள்திரி சங்குமக னுந்திரளும்
அன்பொடுகு ளிர்ந்தவளிபோல்
நம்பிநடை கொண்டுசிவ சங்கரியி ருந்துலவு
நம்பகம டைந்தனர்களே! 26

### நடை

845 துய்யபடை வீரருடன் துங்கமுடி மன்னவனும்
வெய்யதழ லெல்லாம் விருதுகுடை யால்மறைத்து
அப்படர்ந்த வாவி அரியகரைப் பாதையென்ன
ஒப்பும் படைத்தலைவர் உண்மையுட னேகடந்து

---

பாட வேறுபாடு:

விருத்தம் 26 2 : 5 உற்றபடி 1749
2 : 5, 6 உற்றபடி திற்றுவனமீ 1691

நடை 846 : 1, 2 வெய்யதள மெல்லாம் 1691
847 : 3 அதிககரைப் 1691 1749
847 : 4 பாதையென 1749
848 : 4 னேசிறந்து 1691

தேவிதிருக் கோவிலிடஞ் சென்றுவந்தார் அம்மானை!
மேவியரிச் சந்திரனும் மெல்லிகோட்டஞ் சுத்திவந்து
நேசமுடன் போத்திசெய்து நின்றதொரு மாவேந்தன்
வாசலுக்கு நேராக வைத்திலங்கும் பொற்றேரும்
பொன்னின் சிலைதனையும் போந்துமிகக் கண்டவுடன்
தன்னுளத்தி லேமகிழ்ந்து தான்வணங்கிக் *கேட்கலுத்தான்.

---

பா. வே. 849 : 3 சேர்ந்துவந்தார் 1691
851 : 2 போற்றிசெய்து 1691 1749
854 : 4 கேள்க்கலுற்றான் 1691

* 'கேள்க்கலுத்தான்' எனச் சுவடியில் உள்ளது.

ஒப்புமை: அடி எண். 850—887 & விருத்தம் 27, 28 அரிச்சந்திரன் காளியைப் பணிதல். கற்றேர் பொற்றேராதல். காளி காட்சி கொடுத்துக் காரணங் கூறல், பொற்றேர் முதலியவற்றை அரிச்சந்திரன் பெறல்.

'நற்றேரை விட்டிறங்கி நாயகியைத் தொழுதிறைஞ்சி
நண்ணி ராசன்
முற்றேரை நோக்குதலும் முடிவேந்தன் கருணைவிழி
முனைகள் தாக்கக்
கற்றேரும் கற்பரியும் கற்சிலையும் கற்கணையும்
கன்னி முன்னே
பொற்றேரும் பொற்பரியும் பொற்சிலையும் பொற்கணையும்
பொலிந்த வன்றே. (126)

முன்னாளிற் கல்லான முடித்தேரும் வாம்பரியும்
மூரி வில்லும்
பொன்னாகக் கண்டிறைவன் புந்திமகிழ்ந் துதிசயித்துப்
புளகம் எய்தி
என்னாக வந்ததிது எனக்கருதும் அவ்வளவில்
இருண்ட மேனிப்
பொன்னாரும் களபமுலைப் புரிசடையாள் மணிவாயிற்
புறத்து வந்தாள். (127)

மாதங்கி வந்திடலும் மலர்க்கரங்கள் முடிமீது
வைத்துச் செம்பொற்
பாதங்கள் மிசைவீழ்ந்து பணிந்தெனது தவப்பயன்றான்
பலித்த தென்னாப்
பூதங்கள் விளையாடும் திருவாயிற் கற்றேர்போய்ப்
பொற்றே ரான
திதென்று நீஅருள்வாய் எனக்கேட்கக் குமரிஎடுத்
தியம்பல் உற்றாள். (128)

(தொடர்ச்சி அடுத்த பக்கம் காண்க)

## சந்த விருத்தம்

குறிப்பு :

'தனனதன தத்ததன தனனதன தத்ததன
தனனதன தத்ததனனா'

தகுடதிகு டத்தகுட செகணசெக ணச்செகண
தரிரதிரி தத்தெனவே
மிகுநடன மிட்டுலவும் அறனொடுதெய்த் தெய்யெனவே
விசையநட மிட்டகெவுரி
நகுகனக மொத்தரத மொடுதமணி யச்சிலையும்
நயமுடனி ருக்கும்விதமென்
பகவதியெ னக்கரிய வுரைபகரெ னத்தொழுது
பதமலர்வ ழுத்துபொழுதே! 27

---

பா. வே. விருத்தம் 27 2 : 5 விசைநடன 1691

ஒப்புமை :

(56-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உவராழி மண்ணாசை ஒழித்தகலும் அடல்வருணன்
உலகில் யாரும்
கவராது பொற்றேரைக் கற்றேரா கச்சபித்துக்
கண்முன் காட்டி
எவரானும் இதுநோக்கின் இவ்வுருப்போய்ப் பண்டையுரு
எய்தும் ஆகில்
அவராகும் இதற்குரியோ ரவர்தமக்கே கொடுப்பனென
அளித்துப் போனான். (129)

மன்னாகேள் என்னுடைய மணிவாயில் தனில்வருணன்
வைத்துப் போன
அந்நாடொட் டிந்நெடுநாள் அளவாகக் கல்லாய்நின்
அருட்கண் நோக்கப்
பொன்னான செழுந்தேர்நீ கொடுபோவென் றினிதளிக்கப்
புகழ்ந்த யோத்தி
தன்னாடன் தான்வாங்கி நவமணித்தே ரதில்ஏறி
நடத்தி னானே. (130)

............ ............ ............ ............பல
தாள்செலக் கன்னோசி நாட்டை நண்ணினான்,' (131)

— அரிச். புரா. விவாக காண்டம்

தரணிதொரு முத்தரசர் முடிதடவு பரமசெய
சரணமிகு வெத்தியரசே!
வருணன்முதல் வைத்தசிலை இரதமிது கற்பணிதி
வடிவலவெ னப்பகருவோர்
உரியவர வர்க்குதவு மெனவருளி வைத்தபொருள்
உனதுடைமை நிச்சயமிதாம்
விரைவொடுந டத்துவழி; நிச்சயமு னக்குறுதி
மிகுமெனவு ரைத்தருளியே! 28

## நடை

மாகாளி சூலி வயிரவி நடந்தரியே
ஓங்காளி நீலி உரியதுர்கை மாதேவி
அம்பிகைமா சங்கரியே ஆதிமகா தேவியம்மா
கும்பமுலைப் பெண்ணமுதே கோதண்ட பாணிதங்காய்
சயிலாதி காரவல்லி சாமுண்டி மாவீரி
மயிடா சுரன்தலையில் மண்டுநட நீலிகண்டி
தாயே பலஉயிர்க்குந் தாயகமே உந்தனிடம்
நேயமுடன் பொற்றேரும் நீள்சிலையும் ஏதெனவே
மன்னன் தொழுதிடவே மாகாளி வந்துநின்று,
"பொன்னணியும் மார்பழகா புத்தியரிச் சந்திரனே
இன்னம்வளங் கேளும் இயம்புகிறேன்'' என்றுரைத்தாள்.
"முன்னாள் வருணன் முகிழ்த்தமுடன் கொண்டுவந்து
ஆடகத்தே ருஞ்சிலையும் ஆனமயங் கல்லாக்கி
நீடரிய கோயில் நிறுத்தியென்னைக் காருமென்றான்.

## ரத முதல் தலம்

'எந்நாள் வரையும் இதைக்காப்பேன்?' என்றவுடன்
அந்நாள் வருணன் அழுத்தமுடன் சொன்னமொழி

---

பாட வேறுபாடு

விருத்தம் 28 1 : 2 முற்றரசர் 1691
1 : 6 வெற்றியரசே 1691

நடை 856 : 1 ஓகாளி 1691 1749
859 : 2 கோரவல்லி 1691
865 : 4 என்றுரைப்பாள் 1691
868 : 2 கோவில் 1691 1749

கற்றேருங் கற்சிலையுங் காசினியில் கண்டவர்கள்
பொற்றேரும் பொற்சிலையும் என்றுரைத்த போதவற்குத்
தானுதவும் என்றசொல்லைச் சாத்திவருணன்போனான்;
ஆனபடி மன்னாநீ ஆடகமென் றேயுரைத்தாய்
தாக முடன்வருணன் சாத்தரிய சொல்படியே;
ஆகையால் இத்தேரும் ஆடகமா குஞ்சிலையும்
வாகுமன்னா உன்னுடைமை வந்ததுகாண்'' என்றுசொல்லித்
தோகைமா காளிநெடுஞ் சுந்தரஞ்சேர் மன்னனுக்கு
விரவுபுக ழுந்தேரும் மிக்கதொரு பொற்சிலையும்
அரசனே நீகவர்ந்து ஆனரத மீதேறிச்
செல்வி மணப்புணர்ந்து திக்கறிய வாழ்வுபெற்று
நல்லசெய மும்பெருகி நாளிலத்தில் வாழ்வையென்று
திருவாக்குத் தானுதவிச் சேர்ந்தவரங் காளிநல்க
அருமையுடன் போந்தி அரசனவன் அங்கிருந்து
நாத்திசைகள் போற்றும் நரபாலன் சேனையுடன்
*ஏத்துபுகழ் மன்னன் இசைவாய் எழுந்தருளிக்

---

பா. வே. 871 ; 4 காண்பவர்கள் 1749
873 : 3 சாற்றிவரு 1691
881 : 1; 2 செல்லமண மும்புணர்ந்து 1691
செல்விமண மும்புணர்ந்து 1749
885 : 1 நாற்றிசைகள் 1691, 885 : 3 நரபாலர் 1749
886 : 1 ஏற்றபுகழ் 1691 886 : 2 மன்னர் 1691

அடி எண் 875 முதல் அடி எண் 878 வரையுள்ள அடிகள் 1691 ஆம் எண்ணுள்ள சுவடியில் கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றன.

“ ஆகையினால் இத்தேரும் ஆடகமா குஞ்சிலையும்
வாகுமன்னா உன்னுடைமை வந்ததுகாண் என்றுசொல்லிப்
பாகுமொழிச் சொல்லனையப் பார்பதியு மேதயவாய்த்
தோகைமா காளிநெடுஞ் சுந்தரஞ்சேர் மன்னனுக்கு ”

‘ தாக முடன்வருணன் ’ எனத் தொடங்கும் அடி 1691, 1749 ஆகிய எண்களைக் கொண்ட இரு சுவடிகளிலும் காணப்படவில்லை.

*கன்னோசி நாடுசென்றான் காவலவன் **அம்மானை!**

அன்னம்விளை யாடும் அதிகநதி வாவிகளும்
சென்னல் விளைவரப்புஞ் செந்தா மரைத்தடமும்
*கன்னலுடன் மஞ்சளிஞ்சிக் காட்டின் சிறப்புகளும்
கண்டரசன் கொண்டாடிக் கன்னிநகர் ஈதெனவே
கொண்டாடி உள்மகிழ்ந்து கோலமுடன் சென்றுபுக்கான்;
வந்தமன்னன் தன்னெதிரே வந்தே மதிதயனும்
சந்தோச மும்பெருகித் தானழைத்துக் கொண்டுசென்று
மின்னும் மதிதவழும் மிக்கவள மாய்ச்சமைத்த
பொன்னுலவு மாளிகையில் போந்தங் கிருத்திவைத்தார்
மத்தும்அன்பத் தாறுபதி மாவேந்தர் வந்தவர்க்கும்
வெத்திபெற வஞ்சமைத்த மிக்கதிருக் கோவில்விட்டு

---

பா. வே.

*"ஏத்தபுகழ் மன்னன்" எனத் தொடங்கும் அடியைத் தொடர்ந்து 'கன்னோசி நாடுசென்றான்' எனத் தொடங்கும் அடிக்கு முன்பாக 1691 ஆம் எண்ணுள்ள சுவடியில் இடம்பெற்றுள்ள அடிகள் :

"சேனைத் திரளுஞ் சிறந்தபரி யின்திரளும்
ஆனைத் திரளு மாடுமணித் தேரழகும்
சிங்கார மாகச் சிறந்தவிரு தாடைமின்ன
இங்கிதம தாக இசைவாய் எழுந்தருளிப்
பொன்னா பரணமின்னார் பூவையர்கள் தங்களுடன்"

889 : 2 விளைபரப்பு 1691, 890 : 1 கன்னலிசை 1691 1749

*'கன்னலுடன்' எனத் தொடங்கும் அடியை அடுத்துக் 'கண்டரசன்' எனத் தொடங்கும் அடிக்கு முன்பாக 1691 ஆம் எண்ணுள்ள சுவடியில் இடம்பெற்றுள்ள அடி :

'நன்னயங்க ளாக நயந்திருக்குஞ் சித்திரமும்'

892 : 4 சென்றனர்காண் 1691
894 : 4 கொண்டுவந்து 1749
897 : 1 மற்றும்அன்பத் 1749
897 : மற்றுமன்பத் தாறுதிசை மாவேந்த ரானவர்க்கு 1691

ஒப்புமை : அடி எண். 893 — 900 சந்திரமதியின் சுயம்வரத்திற்காக வந்த அரிச்சந்திரனும் பிற மன்னர்களும் விருந்தினர் மாளிகைகளில் தங்குதல்.

'கைத்தலம் சற்று நீட்டி மதிதயன் கட்டு ரைக்கத்
தத்தமக் களித்த சார்பில் சார்ந்தனர் அரசர் எல்லாம்
உத்தம குணத்தி னானும் ஓங்குமண் டபத்தி னீங்கி
மத்தகக் களிற்றி லேறி மாளிகை இடத்துச் சார்ந்தான்.'

—அரிச். புரா. விவாக காண்டம்-164

வந்தவந்த மன்னர்களும் வாய்த்தபரி சுஞ்சிறந்து
அந்தஅந்த மாளிகையில் அன்பாக வீத்திருந்தார்.

### கலிவிருத்தம்

நீதிபுகழ் மன்னவர்நெ டும்பதியில் வந்த
சேதிவள மானதுசெ ழிப்பமொடு கண்டு
தாதிபதி னாயிரவர் தங்களில்மு தற்பெண்
சோதிவத னக்கனக சுந்தரிஎ ழுந்தே. 29

எண்ணெழுசெ ழும்பதியின் ராசர்வள நீதி
திண்ணமுறு பேர்வலிசி றந்தவடி வங்கள்
நண்ணுபட மீதெழுதி நல்கிமதி யொத்த
வண்ணமதி சந்திரமதி மாணடிது தித்தாள். 30

### நடை

தேசத் தரசர் சிறந்துவந்த சேதிகண்டு
வாசமிகுஞ் சுந்தரியாள் வண்மையுட னேபார்த்து
அங்கவர்தம் ஊரும் அழகும் அவர்வளமும்
சங்கையுட னேஎழுதிச் சந்திரமதி பாலுதவி
ஏற்றி வணங்கி இசைவுடனே சேதிசொல்லிப்
போற்றி வணங்கிப் புகழ்ந்துநின்றாள் அம்மானை!

எழுதும் படத்தினிசை ஏந்திழையாள் தான்பார்த்துப்
பழுது மிகவுரைத்துப் பார்வேந் தரையகத்தி
அய்யோத்தி மன்னன் அழகுதிரி சங்குமைந்தன்
செய்யவள மும்மெழிலுஞ் சீமைவள முஞ்சிறப்பும்
கண்டுகண்டு கொண்டாடிக் காவலவ னைப்புகழ்ந்து
பண்டுமறை வேதியர்கள் பண்பாக வந்தருளி

---

பாட வேறுபாடு :

நடை 900 : 1 அந்தந்த 1574 1691

விருத்தம் 29. 2 : 3 ழிப்பமுடன் 1691
4 : 4 ழுந்தாள் 1574

நடை 907 : 2 படத்தினியல் 1691, 908 : 4 தரையகற்றி 1574

அன்னையிடம் அய்யனிடம் அன்பாக வேஉரைத்து
என்னைமணஞ் செய்ய இசைந்தமன்னன் தானெனவே
எண்ணிஎண்ணி ஆராய்ந்து ஏந்திழையாள் இன்பமுற்று
நண்ணிக் களிகூர்ந்து நாட்டமுடன் ஆசைமிஞ்சிப்

### சந்திரமதி மதன விசாரம்

பூண்ட மயல்கொண்டு பூவையரும் மெய்சோர்ந்து
தாண்டும் பெருமயக்கந் தான்கொண் டகமனையில்
சிகர முடியழகுஞ் சிங்காரப் பொட்டழகும்
மகரகுண்ட லத்தழகும் வாய்த்தபுரு வத்தழகும்
கருணை முகத்தழகுங் கண்ணழகும் மூக்கழகும்
அருமைதிரு வாயழகும் ஆனநகை முத்தழகும்
கன்னப் பரிசுங் கதிர்முறுக்கு மீசையுடன்
மின்னிலங்கு மார்பழகும் மிக்கபுயக் குண்டழகும்
ஆழிவிரல் அங்கை அழகுலவுஞ் சீரழகும்
வாளிலங்கு மங்கை வடிவமுறும் பேரழகும்
போர்வை உடையழகும் பூண்டகச்சைக் கட்டழகும்
வீரமணித் தண்டை விருதுசர ணத்தழகும்
தன்னுளத்தி லேயிருத்தித் தானாற்ற மாட்டாமல்
கன்னியுளம் மெத்தக் கலக்கமுத்து வாடிநின்றாள்;
இவ்வா றனங்கன் இருதயத்தி லேயறிந்து
கவ்வையுடன் கொண்டாடிக் கன்னியிடஞ் செல்லலுற்றான்;

---

பா. வே. 914 : 3 இசைத்தமன்னன் 1691
915 : 4 இன்பமுத்து 1749
917 : 1, 2 பூண்டுமையல் கொண்டுகொண்டு 1691
பூண்டமயல் கொண்டுகொண்டு 1574 1749
921 : 3 கண்ணான 1691 1749
922 : 3 ஆனதந்த 1691 1749
ஆனதிரு 1574
924 : 4 குன்றழகும் 1574
926 : 1 வாளிலகு 1574
929 : 3 தானகத்த 1749
930 : 3 கலக்கமுற்று 1691
930 : 4 வாடிநொந்தாள் 1749
932 : 4 செல்லலுற்றான் 1574 1691 1749

எப்போதென் பாணம் இருக்குமோ வென்றதவம்
இப்போது வந்துதவ ஏற்றனங்க ராயனுந்தான்
வெய்யசின மாய்ச்சினந்து மேதினியில் உண்டான
செய்யகரும் பெல்லாஞ் சிலையாக வேவளைத்துக்
கஞ்சமலர் முல்லை கருநீலஞ் சூதைபிண்டி
அஞ்சுமல ருப்பூட்டி ஆனதொரு கச்சைகட்டித்
தாழம்பூ வாளெடுத்துத் தான்மகிழம் பூவணிந்து
வேழமெனுங் கங்குலுடன் மிக்ககுடைத் திங்களுடன்
கோலமுடன் காளங் குயிலிரைந்து கூறிவர,
ஏலமுடன் தென்றல் இரதமீ தில்நடக்க
நாரியெனுஞ் சேனை நளினமுடன் முன்னடக்க
வீரிய வேள்சென்று மெல்லிதிருக் கோயில்நண்ணி
உக்கிரமங் கொண்டே உரியகணை தானெடுத்து
மைக்கொடிதன் உச்சி மலர்க்கணிரு கொங்கையிலும்
விட்டெறிந்தான் மாரன் மிகுகோபங் கொண்டுகொண்டு
இட்டமுடன் பட்ட இசைமலரம் பத்தனையும்

---

பா. வே 934 : 2 வந்தனுக 1691
937 : 3 கடுநீலஞ் 1574
938 : அஞ்சுமல ரம்பும் அழுத்துவேன் என்றுசொல்லித் 1691
941 : 4 கூவிவர 1691
943 : 3 நலமுடனே 1691
944 : 1, 2 வீரியவேள் சென்றுநின்று 1691
வீரியவேள் சென்றுசென்று 1574
944 : 4 கோவில்நண்ணி 1749
946 : 2, 3 உந்தியிலும் மாமலர்கண் 1691

ஒப்புமை : அடி எண். 935 — 948. மன்மதன் தன் படைகளோடு பவனி வரல்; சந்திரமதியின்மேல் மலரம்புகளை எய்தல்.

"திங்கள்வெண் குடைக்கீழ்த் தென்றற் றேர்மிசை ஏறி வாரி
மங்கல முரசம் ஆர்ப்ப மகரசே தனநின் றோங்கக்
கங்குல்வெங் களிறு சூழக் கடுங்கிளிப் புரவி தூண்டி
அங்கண்மா ஞால மெல்லாம் அனங்கவேள் பவனி வந்தான். 181

கருப்புவார் சிலையை ஊன்றிக் கால்வளைத் திசைகள் பாடும்
சுருப்புநா ணேற்றிக் கஞ்சம் தளவுட னசோகம் சூதம்
அருப்புவார் கணைக டுணி அகத்திடை எடுத்தொன் றொன்றா
விருப்பினால் வருந்து மானை வெவ்வினைப் பூசல் இட்டான்."

— அரிச். புரா. விவாக காண்டம்-182

பட்டுருவி வாடிப் பரவசமுற் றேதியங்கி
மட்டுலவுங் கூந்தலணி மாலைகர மீதுசுத்திக்
கோதறு மாமதனைக் கொல்லுமட மாதுநல்லாள்
பாதப் பரிபுரத்தைப் பண்புகுழல் மீதுசுத்தி,
நெஞ்சம் பலமயங்கி நீண்டமதன் அம்பாலே
கொஞ்சுகிளி யோடே குலாவுதலை யும்மறந்து
அன்னமுஞ்செல் லாமல் அடர்ந்து தடுமாறிக்
கன்ன லமுர்தங் கசக்குதென்று தானுரைத்துத்
தேனைப் புளிக்குதென்றுஞ் சீதளஞ்சூ டாகுதென்றும்
மானனையாள் மெத்த மயக்கம் பலவாகி,
உள்ளமெல்லாம் புண்ணாய் உளைந்தெரியு தென்றுசொல்லித்
தெள்ளுமலர்ப் பூவணையில் சென்றிருகண் துஞ்சாமல்
சூழநிறைந் தேயிருக்குந் தோழியரும் பாங்கியரும்
வாளனைய கண்ணாட்கு வந்தபிணி ஏதெனவே
கண்கள் அறநடுங்கிக் கால்நடுங்கி மேல்நடுங்கித்
தண்கமல (மா)வதனம் தான்வாடிப் பாயல்நண்ணி
யங்கைசந்திர மாமதிதன் மாந்துளிர்மே லைத்தொடவும்
அங்கஞ்சூ டில்லைஎனக் காகஞ்சூ டுள்ளதென்றாள்;
நண்ணுபுகழ்ச் சந்தனமும் நற்களப முங்கொணர்ந்து
பண்ணுமலர்ப் பாயலுறும் பாவையருக் கந்நேரப்
பாங்கியர்கள் தாங்கிப் பருவமுடன் பூசிடவே
ஆங்கதிலே மேனி அறமயங்கி வாடலுத்தாள்;

---

949 : 4 றேகலங்கி 1574
950 : 4 மீதுசுந்றி 1691 1749
952 : 4 மீதுசுந்றி 1691 1749
955 : 3, 4 அதிகமையல் உண்டாகி 1691
958 : 4 பலவுடனே 1749
959 : 3 உழன்றெரியு 1691
960 : 3, 4 சென்றுதயங் கித்தயங்கி 1749
961 : 2 தேயிருந்த 1691
963 : 2 அறமயங்கி 1691 1749
965 : 3 மாந்துளிர்மே 1691
968 : 1 பண்ணமரும் 1691
970 : 4 வாடலுற்றாள் 1574 1691 1749

இந்தவிதம் எல்லாம் இசைந்தவேள் கோரமென்று
சுந்தரியாள் என்றிருக்குந் தோகையுயிர்ப் பாங்கிகண்டு,
வேறுகுறை நம்முடைய மெல்லியட்கு வாராது
தேறியிரும் என்றுசொல்லிச் செப்பியே தானிருந்தாள்;
காமனால் சந்திரமதி கன்னிதுய ராகுமதை
நாமளேன் பார்ப்பதென்று நல்லகதி ரோன்மறைந்தான்;
கதிரோன் மறைந்தவுடன் கங்குல்வந்து தோன்றியபின்
அதியமயல் கொண்டே அரிவையரும் மெய்சோர்ந்து
தோழியரை விட்டுத் தொடும்பாய லில்தனியே
ஆழி யுலகில் அறப்புலம்பிக் கூறலுற்றாள்—
"கங்குலே! ஓசைக் கடலே! கருங்குயிலே!
பொங்குதென்ற லே! எனக்குப் போட்டியோ நீங்களெ"ன்பாள்.
"வட்டமணிச் சந்தனமே! மாதவர்க ளும்புகழும்
கட்டழகன் அய்யோத்திக் காவலவன் மொய்யகலத்(து)
ஒட்டுவையோ ஒட்டாயோ என்றுரையும்" என்றுரைப்பாள்.
விட்டெரியுந் தீமதியை மெல்லிநல்லாள் பார்த்துரைப்பாள்—

## கலிவிருத்தம்

"எங்கும் உன்னை இசைந்திடுஞ் சீதளந்
தங்கும் சோமன் எனவுரை சாத்திடப்
பொங்குந் தீக்கொடு போதவந் தென்னைநீ
திங்க ளேஎரி செய்வது நீதியோ? 31

---

பாடவேறுபாடு

நடை 971 : 3 இசைமதவேள் 1691
976 : 1 நாமளென்ன 1691
976 : 2 பார்ப்பமென்று 1574
978 : 4 மெய்கலங்கி 1749
980 : 4 கூறலுத்தாள் 1749

விருத்தம் 31 2 : 4 சாற்றிடப் 1691 1749
3 : 1 பொங்கு 1749
4 : 2 ளேஅழல் 1691

மட்டி லாத மடந்தைய ருக்கெலாம்
இட்ட மாய்எனை ஏனையென் றெண்ணியே
துட்ட மாகத் துணிந்துவந் தெய்திநீ
கொட்டு றாய்தழல் கூர்மதித் திங்களே ! 32

### நடை

அமுர்த கிரணமென்று அம்புலியில் சொன்னதெல்லாம்
எமதளவும் பொய்யாய் எரிக்குறாய் வெண்ணிலவே !
பொன்னுலகங் கொள்ளப் புகழமுர்த மாயிரங்கி
என்னளவும் நீதான் இரக்கமத்துக் காயுகிறாய் !
நன்னிலத்தில் வாழுமிந்த நாரியர்க்குள் ஏழையென்று
என்னை ஒருத்தியையோ கண்டாய் இளநிலவே !
பாருலக முந்தழைக்கப் பண்ணுமதி யென்றுசொல்லிச்
சாருமுர கம்பிடித்துத் தானுமுன்னை விட்டிருக்க
நீகொடிய னாயிருந்து நெட்டூரஞ் செய்யுகுறாய் !
பேய்மதியே உன்மதிகாண் பேசாய் இளமதியே !

---

பாடவேறுபாடு

விருத்தம் 32 2 : 3 ஏழையென் 1574 1691 1749
2 : 4 றெண்ணியோ 1691

நடை 988 : 3 இறைக்குறாய் 1574
989 : 1, 2 பொன்னுலகுக்கெல்லாம் 1691
989 : 1 பொன்னுலகும் 1749
990 : 1, 2 என்னளவுமேநீ 1749
990 : 3 இரக்கமற்றுக் 1691 1574
991 : 2 வாழுமந்த 1574
993 : 1, 2 பாருலகெல் லாந்தழைக்க 1691
996 : 1 பேய்மதியோ 1691 996 : 3, 4 பேசா இளநிலவே! 1691

ஒப்புமை : அடி எண் : 993 — 996 மதன விசாரமடைந்த சந்திரமதி நிலவை நோக்கிக் கூறுதல்.

'உன்னைக் காய்ந்த பனிக்குற வென்றுகொல்
என்னைக் காய்ந்தனை ஏந்திளந் திங்களே
முன்னைக் காய்ந்திலை என்உயிர் முற்றிய
பின்னைக் காய்ந்து பிழைப்பிக்க வல்லையோ.'

—அரிச். புரா. விவாக காண்டம்—188

செந்திருவி னோடுந் திரைகடலி லேபிறந்தும்
எந்தைகுல மாயிருந்தும் எந்தனுக்குள் பேரிருந்தும்
பெண்ணுக் கிரங்காமல் பேதங்க ளாய்நினைந்தும்
எண்ணுந் தழலாய் எரிக்கிறாய் வெண்ணிலவே!"
என்றுநில வைச்சினந்து ஏசியே சித்துரத்தி,
வென்றிமத னைப்பார்த்து மெல்லியரும் ஏதுரைப்பாள்—

## விருத்தம்

"அண்ணலோ டெதிர்த்தாய், எரித்தான்; ரூபம்
பண்ணி னான்தொழும் பாவையர்க் காசுவே
நண்ணி யேயரி யானதை மாரனே
பெண்ணை எதிர்கொளப் பேதகஞ் செய்குவாய். 33

கொச்சை நீகொடும் பாதக னுன்கணை
எச்சி லாகுமுன் சீறென வெண்ணியே
மெச்சி மாதவர் மெல்லியர் பால்வரக்
கச்ச தென்பது காணுங்கை மாரனே. 34

## நடை

வெந்தமத னையுனது மெய்யுருவம் பொய்யெனவோ
எந்தனெதிர் வந்தே இறைக்குறாய் பூமலரை;

---

பாட வேறுபாடு

நடை 997 : 4 லேபிறந்து 1749
998 : 1 எந்தகுல 1749 998 : 4 பேரிருந்து 1749
999 : 3 பேதகங்க 1574 1691
1000 : 3 இறைக்குறாய் 1574, இருந்ததென்ன 1691

விருத்தம் 33. 2 : 4 காவரன் 1749
4 : 4 செய்குறாய் 1691
34. 3 : 1 மெச்சு 1691 1749

நடை 1003 : 4 பொய்யெனவே 1691

ஒப்புமை: விருத்தம்: 33 & அடி எண். ; 1003 — 1006
மதனவிசாரமடைந்த சந்திரமதி மன்மதனை நோக்கிக் கூறுதல்.
'உன்னைக் கொன்றன் றுருவிலி யாக்கினான்
தன்னைக் கொல்லுவ தாண்மைத் தனம்அலால்
பின்னைக் கொல்வதென் பெண்பிறப் பாகிய
என்னைக் கொல்லுவ தேழைமைப் பாலதே.'
— அரிச். புரா. விவாக காண்டம்-185

கண்ணுதல்முன் னேயெதுத்துக் காயம்மடி யும் அனங்கா
நன்னுதலை நாடிவர ஞாயமில்லை போர்மதனே;
காரடர்ந்த மேனியுள்ள கங்குல்மத யானைவிட்டுச்
சீரடர்ந்த நெஞ்சகத்தில் சென்றுகுத்தம் பண்ணிவைத்தாய்,
அந்தநெடுங் காயத்(து) அழலெரியுந் தென்றல்விட்டாய்;
கொந்தமதித் தீக்குடையைக் கோலிவிட்டு நீஎரித்தாய்;
ஏனடா இவ்வா றெனக்குநீ செய்யுகிறாய்?
நானடா ஏழையொரு நாரிகாண் மாமதனே!
வேண்டாம் எனக்குமலர் மீட்டாதே பூட்டாதே
ஆண்டபுகழ் மாமதனே ஆகாது பெண்பழிகாண்;
நீயே அறக்கொடியன் நின்கரியும் நின்ரதமும்
ஓயாத் திரைமுரசும் ஒண்மலரும் உன்குடையும்
எல்லாம் கொடுமையுன்னை ஏற்பாரோ மாதவர்கள்?
அல்லல்விளை யாதேபோ ஐங்கணைவேள் இங்கிதனே!''
என்பாள்; இருப்பாள்; எழுவாள்; புலம்பிடுவாள்;
''வன்புமத னேயுனக்கு வஞ்சமையல்ல'' என்றுரைப்பாள்;
''எத்தனை கோடியுகம் இந்தஇர வெ''ன்றுரைப்பாள்.
மெத்தமெத்தப் பின்னுமந்த மெல்லியரும் எண்ணிஎண்ணி
''ஈசனையுஞ் சேடனையும் ஏத்தகருங் காக்கையையும்
ரோசமுடன் நோகாமல் நோக்கமுடன் நானுமிப்ப
மாரா உனையுமிந்த மாமதியை யுங்குயிலைப்
பேராக நொந்ததெந்தன் பெண்மதிகாண்'' என்றுசொல்லிச்

---

பா. வே. 1005 : 2 னேயெதிர்த்துக் 1691
1005 : 3, 4 காயம் அனல்மயங்காண் 1691
1019 : 1 என்பள் 1691
1021 : 3 இந்தஇரா 1691

ஒப்புமை: அடி எண். : 1021 மதனவிசாரமடைந்த சந்திரமதி, இரவின் நெடுமை குறித்துத் தோழியிடம் கேட்டல்.

'பூழி சென்று புரண்டபொற் பாவையைத்
தோழி சென்று தெருட்டலும் தோழியை
ஆழி சென்றென் றடைந்தபின் எத்தனை
ஊழி சென்றஎன் றொண்ணுதல் கேட்டனள்.'

—அரிச். புரா. விவாக காண்டம்-194

சொல்லிமெத்தப் பின்னுமந்தத் தோகையரு மேபுலம்பி
வில்லிமத னால்நொந்த வீரியங்கள் பார்க்கவென்றே
சேவல் இனமழைக்கச் செங்கதிரோன் வந்துதித்தான்;
பாவை துயரும் பலவிருளும் நீங்கிடவே
கதிரோன் எழுந்தவுடன் கன்னியருந் தானெழுந்து
மதிசேர் முகமிலங்க வண்டில்தம் நீறுமிட்டு
மங்கையர்கள் சூழ்ந்திருக்க மன்னவனை நெஞ்சில்வைத்துச்
சங்கையுடன் சந்திரமதித் தையலரும் வீத்திருந்தாள்;
இவ்வா றிருக்க இனியதொரு மாவேந்தன்
கொவ்வையிதழ் மங்கையர்க்குக் கோலக் கலியாணம்
நாளையென்று சொல்லி நகரியெங்குந் தானறியத்
தாளம் மிகுமுரசு சாத்துமென்று கூறினன்காண்;
முரசின் ஒலிகேட்டு மூன்றுலகங் கொண்டாட
விரைசெறியும் பட்டணமும் வீதிகளுஞ் செப்பமுடன்

## மணவறைச் சிறப்பு

### கலிவிருத்தம்

கன்னலொடு வாழைகமு குங்கனகம் முத்தும்
சென்னல்மணி யுங்கதிர்சி றப்பொடுநி றைத்தே
மன்னுபல இஞ்சிசில மஞ்சளொவு மிச்சை
துன்னுபல வீதியிடை தோரணம்நி ரைத்தார். 35

---

பா. வே. 1027 : 3, 4 தோகைபுலம் பிப்புலம்பி 1691
1031 : 3, 4 கன்னியரு மேயெழுந்து 1574
1038 : 3 சாற்றுமென்று 1691
1040 : 1 விரைசுலவு 1691 விரசுலவும் 1749

1691ஆம் எண்ணிட்ட சுவடியில். 'சொல்லிமெத்த' எனத் தொடங்கும் அடியை அடுத்துக் 'கதிரோன் எழுந்தவுடன்' எனத் தொடங்கும் அடிக்கு முன் காணப் படுகின்ற அடிகள் :

"வல்லியுள்ளம் மெத்த மயங்கித்தடு மாறலுற்றாள்
வில்லிமத னால்மெலிந்த வீரியங்கள் பார்க்கவென்று
செல்வி மனதுமெலிக்கச் செங்கதிரோன் வந்துதித்தான்
பாவை துயரும் பலவிருளும் நீங்கிடவே
மேவுகதி ரோனுதித்தான் மேதினியில் அம்மானை!"

சித்திரம்மி குத்ததெரு வீதியிரு பாலும்
மொத்தநிலம் எங்கணும்உ சுந்துலவு கோலம்
மெத்தவும்வ டித்தழகு வீரியமி லங்கச்
சுத்தமொடு செய்தனர்சு கந்தநக ருத்தோர். 36

நடை

வாழை யுடன்கமுகு மஞ்சளிஞ்சித் தோடுகளும்
வேழமதன் கன்னலுடன் மிக்கபல தோரணமும்
வீதிக்கு வீதி விளக்கமுடன் சிங்காரம்
நீதியுடன் செய்து நிரைகோல மிட்டுவைத்தார்.
கச்சணியுங் கொங்கையிளங் கன்னிஎனுஞ் சந்திரமதி
மெச்சுங் கனகசித்திரம் மேவுமணப் பந்தலுக்கு
விந்தையுள்ள சிங்காரம் மேவும்அலங் காரமுள்ள
சந்தனக் காலுஞ் சதுரமொத்த காலுகளும்
சித்திரங்கள் செய்தவெள்ளி சேர்ந்தபல தூணுகளும்
சுத்தமுள்ள பொன்னிலங்குந் துங்கமணித் தூணிறுத்தி
ஆகாச மட்டுலவும் ஆனமணிப் பந்தலிட்டு
வாகான முத்து வடம்பவள நீள்சரமும்
கொத்தலரும் முண்டகமுங் கூண்டபல மாலைகளும்
மெத்தஅலங் காரமிட்டு மேவுமன்னந் தாராவும்
அங்கணங்கள் தோறும் அடர்ந்துவிளை யாடிநிற்கக்
குங்குமமுஞ் சந்தனமுங் கூர்ந்தபன்னீ ரில்கரைத்து,
நன்னிலத்தி லேமெழுகி நற்சாந்தின் கோலமிட்டுப்
பன்னுமலர்ப் பூவும் பரப்பியெங்குந் தான்விரித்து,
வானவர்கோன் தேவருடன் வந்திருந்து கொண்டாட,
ஆன திருவிளக்கும் அங்கங்கெல் லாமேத்தி,
இரவியுடன் சந்திரன் இரண்டுலட்சம் வந்திருக்க
விரவுபெறக் காவணத்தில் மிக்கஅலங் காரமுடன்

பாடவேறுபாடு

விருத்தம் 36. 4 : 2, 3, 4 செய்தனர்சு கம்பெறுக ருத்தோர் 1691

நடை 1045 : 3, 4 கன்னிசந்திர மாமதிதான் 1691
1049 : 2, 3 செய்தவெள்ளிச் செம்பொன்மணித் 1691
1062 : 1 விரவுறுபொற் 1691

விச்சித் திரமாக வேந்தன் மதிதயனும்
உச்சிதமாய்ச் சிங்காரம் உண்மையுடன் செய்தனர்காண் !

### சந்திரமதிக்கு ஒப்பனையிடுதல்

காகலவுஞ் சந்திரமதி கன்னியர்க்கும் அந்நேரம்
நேசமுடன் தாதியர்கள் நீண்டகுழல் வேணியெனும்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

மணங்கமழ் தைலஞ் சாத்தி
வடிவுறும் பனிநீ ராட்டிச்
சுணங்குபூத் தொளிருங் கொங்கை
தோகைமெய் துவட்டிக் கூந்தல்
இணங்குசீர் வகுத்துக் கூட்டி
இசைவுடன் கட்டி வாசத்
திணங்குபூ மலருஞ் சார்த்திச்
சிறந்தலங் காரத் தோடே ! 37

அவயவந் தனக்குப் பூண
அடர்ந்திலங் கும்பொற் பூணை
நவநிதி செயமாய்ப் பூட்டி,
நங்கையைச் சிறப்புச் செய்து,
சிவனைமுன் தொழுது போற்றித்
திருவெனும் ஆயி பக்கம்
உவயசா மரைகள் ஆட
உகப்பொடு கொணர்ந்து சேர்த்தார். 38

---

பாடவேறுபாடு
விருத்தம் 37. 1 : 3 சாற்றி 1691
1 : 4 வடிவுறு 1691
2 : 4 தோகைமேல் 1749 2 : 5 புலற்றிக் 1691
3 : 6 வாச 1691
4 : 1 மிணங்குபூ 1691 4 : 4 மிகுந்தலங் 1691
38. 1 அவையவந் தனக்குப் பூணும்
அடர்ந்திலங் குறுபொன் மாலை 1691
2 : 1, 2, 3 நவவதி செயமாய்ப் பூட்டி 1691
1 : 4, 5 அடர்ந்தலங் குறும்பொன் 1749
4 : 3 விச 1691 4 : 4 உவப்பொடு 1691 4 : 6 வைத்தார் 1691

நடை

வாசமெல்லாங் கூட்டி மணைக்குந் தயிலமிட்டு
நேசமுள்ள பன்னீர் நிறைவெந்நீர் தானுமிட்டுப்
பூந்துகிலால் மேவிமுகம் போத்திமிக வேதுடைத்து
வார்ந்தமலர்க் கூந்தல் மயிராத்தித் தான்முடித்து
முத்துச் சரமிலங்க மோக்ரத்தினக் கொப்புமிட்டு
நெத்திப் பிறைநிலவும் நீண்டவச்சிரத் தோடுகளும்
சுட்டிமணிப் பொட்டுந் துலங்கிமிக வேயிலங்க,
வட்ட முகத்தில் மகிழும் பிறைநுதலில்
சிந்தூரப் பொட்டுமிட்டுச் சேல்விழிக்கு மையுமிட்டுக்
கொந்தளப்பொன் னோலைக் குழையிலங்க வேயணிந்து,
தூங்கும் அரசிலையுந் தோன்றிப்கொப் போடுமின்னப்
பாங்கான வச்சிரப் பணிபல்வும் மின்னிடவே
முத்துமூக் குத்தி முகத்துக் கிசைந்திலங்கக்
கொத்தலரும் அட்டிகையும் கூண்டவட்டக் காறைகளும்
வாகுலவு மாலைகளும் வாய்த்தமுத்து மாலைகளும்
மோகன மாலைகளும் மூண்டநவ மாலைகளும்
நீணிலத்தில் வானகத்தில் நேசமுடன் கிட்டாத
ஆணிப்பொன் மாலையுடன் ஆன பதக்கனுடன்
மின்னிப் பலகதிரை வென்றகதிர் போலிலங்கப்
பொன்னின் வரையனைய பூந்தனத்துக் கொத்திருக்கும்

---

பா. வே. 1068 : 1 நேசமுடன் 1691
1069 : 2, 3 மேனிமுகம் போற்றிமெல்ல 1691 1749
1071 : 2 சிறுசரமும் 1691 1749
1071 : 4 கொப்புகளும் 1691 1749
1073 : 4 வேயிணங்க 1691
1074 : 3 வடிவாம் 1691
1080 : 3 கூண்டபட்டைக் 1691
1081 : 2, 3 முத்து வடம்பவள 1691
1082 : 1 மோகனக 1749
1084 : 2, 3, 4 மாலை அணிசேர் பதக்கமுடன் 1691

வச்சிரமணிக் கச்சும் வனிதமுட னேயணிந்து
பச்சைக் கிளிமூக்கின் பண்புகிரின் அங்குலிக்கே
ஆழி பலவணிந்து, ஆனவளை யுஞ்சரியும்
நீளியதோர் வச்சிர நிறைகடகங் கைக்கணிந்து
நாயத்துக் கெண்ணதிக நாகரீக மின்னுடைய
தாயத்து நல்ல தகட்டுவயி ரம்மிலங்கச்
சித்திடைக்கு மொத்த செகமோ கனமென்னும்
உத்தரீ கம்புனைந்து ஓங்கியபொன் னாலரைஞாண்
வைத்திறுகச் சேர்த்து வனிதமுட னேயணிந்து
சத்த மெழுஞ்சதங்கை தண்டைநெளி பாடகமும்
வங்கமுறும் பீலி மயிலடிகா லாழியுடன்
தங்கமய மென்னச் சருவா பரணமிட்டுக்
குங்குமங்கத் தூரியுடன் கோலப் புழுகுமணம்
இங்கிதமாங் கொச்சிமஞ்சள் ஏத்தமணஞ் சேர்த்தமணம்
மெத்தப் பரிமளிக்க மிக்கமலர் மல்லிகையும்
கொத்தலரும் கூந்தலிலே கோலமல ரும்புனைந்து
சிங்கார மாகச் சிறக்க அலங்கரித்து
மங்கைசந்திர மாமதியை வாஞ்சையுள்ள தாதியர்கள்
அன்னையிடங் கொண்டுவந்து அன்பாக வைத்திருந்தார்;
அன்னையுடன் தாதையரும் ஆனபெண்ணைத் தான்பார்த்துத்
தன்னுள்ளே தான்மகிழ்ந்து தாங்கள்மிகக் கொண்டாடி
உன்னும் புளகமுடன் உத்திருந்தார் **அம்மானை !**

வந்திருந்த மன்னர்தமை வாகுபெற வேயழைத்துச்
சுந்தரஞ்சேர் நல்ல சுகந்தமணப் பந்தலிலே
நிரைசே ரொழுங்காக நேர்மையுட னேயிருத்தி
விரைசேர் முகிழ்த்தம் விபரமது கண்டுமன்னன்

---

பா. வே. 1087 : 2, 3, 4 கச்சு வகையாக வேயணிந்து 1691
1091 : 4 மின்னிடவே 1749
1096 : சத்தமொலிக் குஞ்சதங்கை தண்டையுட னேசிலம்பும் 1691
1100 : 4 சேற்கைமணம் 1691
1102 : 4 ரும்மணிந்து 1691 1749
1108 : 3 உற்றிருந்தார் 1691
1109 : 2 முன்னவரை 1691
1111 : 4 னேயிருந்து 1691

மாலையிட வென்று மடக்கொடியைத் தானழைத்துச்
சேலைநிக ரொத்தவிழிச் சேடியர்போம் என்றிடவே
பதினா யிரமடவார் பைந்தொடியார்க் கேவல்செய்யும்
விதமான தாதியர்கள் மேவிவரச் சுந்தரிதன்
வாய்த்த கரம்பிடித்து மாலைகொண்டு சந்திரமதி
ஏத்தமுள்ள பானு இருகோடி போலிலங்கி

### கலிவிருத்தம்

மண்டலம திக்கவரு மன்னவர்வி யக்க
மிண்டிவரு நூபுரஇ சைத்தொனிய றிந்திட்
டண்டரும யங்கிடஅ னங்களெழு கோடி
கொண்டசுரு பங்களொடு கோதையும்ந டந்தாள். 39

வட்டமுக முந்திலத வண்மையுமி லங்கச்
சுட்டியொடு பொட்டிலகு தொய்குழலு மின்னக்
கட்டழகு சேர்குழைக னக்கமுட னாட
அட்டபவி சேறுமட அன்னமின்ந டந்தாள். 40

காதிலிடு தோடொடுக யற்கண்ந(ணி) ஆடச்
சூதினிய மாவரைசு மக்கமுடி யாதென்
றோதியிடை வாடிவர ஓவியமெ னச்சென்
றாதிபுகழ் காவணம தில்தெரிவை வந்தாள். 41

---

பாட வேறுபாடு :

நடை 1114 : 4 என்றவுடன் 1691 1749
1116 : 4 சுந்தரியாள் 1691
1118 : 4 போலிலங்க 1691

விருத்தம் 39. 2 : 4 ருந்திட் 1691

ஒப்புமை: விருத்தம் : 41 : 1 சந்திரமதியின் விழிச் சிறப்பு.
'செங்க யல்கண் திருக்குழை யைப்பொர' 203

41 : 2, 3 சந்திரமதியின் தனபாரஞ் சுமக்க முடியாது இடை இற்றிடும் நிலை.
'வல்ல னப்புடைக் குந்தன வன்பொறைக்
இல்ல னக்கரு தும்மருங் கிற்றிடும்'
—அரிச். புரா. விவாக காண்டம்—204

வந்தமட மானெழிலை மன்னவர்கள் காணச்
சிந்தைமய லேறியவை சீரொளிசெ ழித்திட்
டந்தமிசை ஓர்விரல துக்குமிட மின்றிப்
பந்திகள்நெ ருங்கிவளர் பாவைகுரி வுத்தாள். 42

## நடை

நாத்திசையில் உள்ள நரபாலர் எல்லோரும்
பூத்தமலர்ப் பூவைவரும் பூராயம் பார்க்கலுற்றார்;
பார்க்கும் அரசருடன் பாவையிரு காதோலை
ஏற்குமரிச் சந்திரனே இங்கோடி வாவெனவும்
மத்தமன்னர் எல்லோரும் வந்தவழி போமெனவும்
உத்ததுகள் கூறியுகந் துண்மையுட னாடிவர
வாளனைய கண்ணிரண்டும் வந்தமன்ன ரைத்துரத்தி
வேளனைய அய்யோத்தி வேந்தனைஇப் போதழைப்பேன்
பாருபார் என்றுசொல்லிப் பார்த்ததிசை யுஞ்செயித்துச்
சாருகா தோடுசெய்தி தானுரைத்துக் கொண்டுவர,
காலில் பரிபுரங்கள் காவலரே வந்ததென்ன
கோலியதோர் அய்யோத்திக் கோமானே யாளுமிவண்
என்றுபுலம் பிப்புலம்பி ஏகமுடன் கூறிவர
வென்றிமத வேள்மகுட மென்னமின்னித் தானிலங்கும்

---

பாடவேறுபாடு
விருத்தம்: 42. 2 : 2 லேறியது 1691
4 : 2, 3, 4 ருங்கிமிகு பார்வைகுறி வுற்றார் 1749
நடை 1119 : 1 நாற்றிசையில் 1749
1122 : 2 சந்திரனை 1691
1123 : 1 மற்றமன்னர் 1691 1749 1123 : 4 பாரெனவும் 1691
1124 : 1 உற்றதுகள் 1691 1749 உத்தபுகழ் 1574
1124 : 4 னோடிவர 1574
1127 : 4 யுஞ்செலுத்திச் 1691
1130 : 4 யாளுமவர் 1749

ஒப்புமை: அடி எண்: 1121 — 1131 அரிச்சந்திரனை 'வா' வென்றும் மற்ற மன்னரைப் 'போம்' என்றும் சொல்வது போலச் சந்திரமதியின் காதோலை, கண்கள், காலின் பரிபுரங்கள் ஆகியன அசைதல்—கலாபம் அசைதல்.

'காவென் றெண்ணும் கரத்தரிச் சந்திர
வாவென் றெண்ணரும் மன்னரை அப்புறம்
போவென் றெண்ணிப் புகல்கின்ற போலவே
தாவு சோதிக் கலாபந் தழங்கவே'

—அரிச். புரா. விவாக காண்டம் - 208

கொங்கை மலையிரண்டும் கூண்டபா ரம்பொறுக்க
இங்கெனக்குக் கூடுதில்லை என்றுஇடை வாடிவர,
இட்டமணிப் பச்சை இலங்குமெழில் மாலைகதிர்
பட்டதிசை தோறுமதி பச்சைவெண்ண மூடிவரக்
கண்டதொரு மன்னரெல்லாங் காரிகையைக் கொண்டாடி
மண்டலத்தில் இந்தமட மங்கையரைப் போலழகு
வானுலகில் கேட்டதில்லை வையகத்தில் கண்டதில்லை
ஆனதிரு நாமமிவட் காகுங்காண் சந்திரமதி
என்றரசர் தாம்மகிழ்ந்து ஏந்திழையைப் பார்த்தவர்கள்
நன்றியுடன் ஆசைகொண்டு நாட்டமுட னேமயங்கிக்
கைகண்டார் கையைவிடக் காணார்கள் பின்னையொன்றும்
மெய்கண்டார் மெய்யைவிட மேவார்கள் வேறுதலம்
வட்டமுகங் கண்டவர்கள் மத்துமொன்றுங் கண்டதில்லை
இட்டபணி கண்டவர்கள் ஏதொன்றும் தாமறியார்
கரியகுழல் மாலைகண்ட காவலர்வே றுத்தரியார்
சரிகைவளைப் பூணறிந்த தார்வேந்தர் ஒன்றறியார்
அரியஉடுக் கையறிந்த ஆடவரே தும்மறியார்
தரிசிமணிப் பாடகஞ்சேர் தாளறிந்தார் வேறறியார்
இப்படிக்கித் தானுமிந்த ஏந்திழையைப் பார்த்தவர்கள்
வெப்பரிய மாரனம்பால் மெய்யுருகி நின்றிடவே
ஏடவிழும் பூங்கூந்தல் ஏந்திழைசந் திரமதிக்கு
நீடுகுழல் சுந்தரியாள் நேசமுடன் வந்திருக்கும்
தேசத் தரசருட சீருகளும் பேருகளும்
வாசமிகுஞ் சுந்தரியாள் மங்கையர்க்குச் சொல்லலுற்றாள்.

---

பாடவேறுபாடு

நடை

*1138 : 2, 3* இந்த மடமங்கை *1691*

*1142.* 1691ஆம் எண்ணுள்ள சுவடியில் 'நன்றியுடன்' எனத் தொடங்கும் அடிக்குப் பதிலாக "வென்றிமதன் அம்பாலே மெய்யுருகித் தான்வாடி" என்னும் அடி இடம்பெற்றுள்ளது.

*1145 : 3* மற்றுமொன்றுங் *1574*

*1148 : 1, 2* சரிகை வளையறிந்த *1574*
சரிகைவளைக் கையறிந்த *1691*

*1155 : 3, 4* சீர்சிறப்பும் பேர்சிறப்பும் *1691*

*1156.* வாசமுடன் காட்டலுத்தாள் மங்கையர்க்கே யம்மானை *1691 1749*

## சந்த விருத்தம்

குறிப்பு : தனதத்த தனதத்த தனதத்த
தனதத்த தனதானனா

"குழைதொட்ட விழிவட்ட மதியொத்த
வதனச்செய் குயிலேயிவன்
அளைமிக்க களவிற்கொள் ளரிபற்பன்
அயனுக்கும் அறியாதகை
உழையத்தன் மழுவத்தன் னுடலிற்சில்
லடிவைத்து முறவாடிய
வளைசெப்பு மதுரைப்பொன் நகரிக்குள்
ளெழில்மிக்க தமிழ்மாறனே ! 43

குறிப்பு : தனதத்த தனதத்த தனதத்த
தனதத்த தனதந்தனா

மணிமுத்து நிரைகச்சு வடமிட்ட
கிரிசொக்கர் மடமங்கையே
பணிலத்தில் ஒருபட்சி நிறைகட்டு
தசையிட்ட பதியென்றுபூண்
அணிவுத்து மிகுசத்தி சிவபத்தி
யடர்சக்ர மதிலங்கியே
கணிதச்சொல் லுலகிற்சொல் விசைசெப்பு
மதனொப்பு கதிர்செம்பியோன் ! 44

குறிப்பு : தாந்தான தாந்தான தாந்தான தாந்தான
தாந்தான தானதனனா

பூங்காவ லோங்காமல் நீங்காம லாங்கேச
பூம்பாவை யானஅனமே !
ஆங்கார முன்கோவம் வீண்பாவ மாஞ்சோட
வாண்டாமு நீலிகெவுரி

---

பா. வே .விருத்தம் 43. 2 : 1 அளைவிக்க 1574
44. 3 : 1 அணிவுற்று 1691 1749
45. 1 ; 3 நீங்காவ 1691

ஓங்காரி ரீங்காரி சேண்காமி தான்பாக
மூந்தாயு மீசன்மகிழும்
பாங்கான மாஞ்சோலை சூழ்ந்தாரு மேன்றேவ
பாஞ்சால ராயனிவனே ! 45

நடை

காதளவு தொட்டுவருங் கன்னியிள மாமயிலே !
சீதமதி வட்டமிகச் செய்யிழையீர் ! கேட்டருளும் !
சுந்தரஞ்சே ரும்புயமுந் தோன்றுமெழி லாயிருக்கும்
விந்தையுள்ள மன்னனிவன் மிக்கவள மாமதுரை
ஆண்டபுவிக் காதி அரசர்ரண சிங்கமெனும்
பாண்டிவள நாடாளும் பாங்குதமிழ் மாறனெ''ன்றாள்.
''கச்சிலகு வட்டமுலைக் கன்னியரே ! இவ்வரசன்
மெச்சும் புவியில் மிகவுமொரு புட்காகப்
பண்டு தசையரிந்து பண்புநிறை தான்கொடுத்து
மண்டுபுவி யாளும் மகராச சோழனம்மா !
காரார் குழலணங்கே ! கற்பகமே ! இவ்வரசன்
சீராரும் வல்லபுகழ்ச் சேரன்காண் அம்மானை !

கன்னிக் கமுகையொத்த கந்தரத்தாய் ! இந்தரசன்
உன்னும் புவிகளெல்லா மூரியலங் காரமுடன்
செந்நல் விளையச் செழுங்கமுகு பூச்சொரியப்
பன்னுதமிழ்ச் சீர்பெருகும் பாஞ்சால ராயனெ''ன்றாள்.
''கோவை யிதழனைய கொம்பனையீர் ! கேட்டருள்வாய் !
மாவிற் கவியேற மாங்கனித்தேன் ஆறோடி

பாடவேறுபாடு

விருத்தம் 45. 3 : 4 தாம்பாக 1574
4 : 4 மேன்றேவன் 1574 மேன்றேப 1749

நடை 1160 : 1 விந்தையுறு 1691 1749
1162 : 1, 2 பாண்டிவாழ் நாடனெனும் 1691 1749
1163 : 1 கச்சிலங்கு 1691 1749
1170 : 1, 2 உன்னு புகழெல்லாம் 1691
1170 : 4 காரமுற்று 1691
1170 : 3, 4 மூறியங் காரமுத்துச் 1749
1172 : 1, 2 பன்னுபுகழ்ச் சீர்பெரிய 1691 1749

உத்தநதி யூடுபுக்கி ஓங்கிவிளை வுண்டாகும்
மத்திமதே சத்திலுறை மன்னனிவன் கண்டாயே !
சாந்துமணக் குங்கனகத் தையலே ! இவ்வரசன்
காந்துருவ தேசமுறை காவலன்காண் **அம்மானை !**

கிஞ்சுகமே ! தேனே ! கிளிமொழியே ! இவ்வரசன்
விஞ்சையதே சத்திலுறை வேல்வேந்தன் கண்டாயே !
நயக்குமதி கீத நயமுலவுந் தோகையரே !
இயக்கர்குல வேந்தன் இவன்காணும்'' என்றுரைத்தாள்.
''மோகனக மானதொரு மொய்குழலீர் ! இவ்வரசன்.
நாகரசன் காணும் நாரியரே !'' என்றுரைத்தாள்.
''கற்பகப்பூ வேயனைய கன்னியரே ! இவ்வரசன்
புற்பகத்தீ வில்லுறையும் பூபாலன் காணுமெ''ன்றாள்.
''மைக்கொடியீர் ! இந்த மகாராச செம்பீரன்
சக்கரத்தீ வில்லுறையுந் தார்வேந்தர் ஆகுமெ''ன்றாள்.
''சாம்புநதப் பொன்னனைய தையலே ! இவ்வரசன்
காம்புலி தேசத்தான் காணுமெ''ன்றாள் **அம்மானை !**

''வந்திய நாடனிவன்; மாகெங்கை யாளனிவன்;
சிந்தூர நாடனிவன்; செய்யகுரு நாடனிவன்;
மெச்சுங் கனகமய மெல்லியிளம் பூங்குயிலே !
*குச்சலதே சத்திலுறை கோமான் இவன்காணும் !
* கச்சிலங்கும் வட்டமுலைக் கன்னியர்க்கு மேலான
நச்சுவிழிப் பெண்ணரசே ! நாரியரே ! கேட்டருளும்.

---

பாட வேறுபாடு

1175 : 2 யோடுபுக்கி 1691 1749
1177 : 3 தையலரே 1691
1184 : 3 நாரியே 1691 1749
1185 : 3 கன்னியே 1691
1185 : 4 இவ்வேந்தன் 1749
1188 : 3, 4 தார்வேந்தன் காணுமென்றாள் 1691
1190 : 1, 2 காம்புலிதே சத்தரசன் 1749
1191 : 4 ராயனிவன் 1749

* 1691 ஆம் எண்ணிட்ட சுவடியில் 'குச்சலதே சத்திலுறை' எனத்தொடங்கும் அடியும் 'கச்சிலங்கும்' எனத் தொடங்கும் அடியும் இடம்பெறவில்லை.

அருநடன வஞ்சியர்கள் ஆலித்துக் கொண்டாடுங்
கருநடிய தேசமுறை காவலன்காண் இந்தமன்னன் !
பையரவின் அல்குலிளம் பைந்தொடியீர் ! கேட்டருளும்.
செய்யபுகழ் வீரியமுஞ் சேர்ந்துநிறைந் தேபெருகிக்
காரியபா கங்களுடன் காசினியை ஆண்டருளும்
ஆரியதே சத்தின் அரசனிவன் கண்டாயே !
நேரிழைபோ லொத்தஇடை நேரிழைமீர் ! கேட்டருளும்.
கேரளதே சத்திலுறை கெம்பீர சூரனிவன் !
நெறியுற் றிலங்குமதி நீலவிழி வஞ்சியரே !
திரிகர்த்த ராயனென்னுஞ் சீர்வேந்தன் காணுமிவன் !
மங்கையர்கள் போத்துமெழில் மங்கையே ! இவ்வரசன்
அங்கவள நாட்டுக் கதிபன்காண் அம்மானை !''

இந்தப்படி எண்ணேழ் இயலரசர் கீர்த்திகளும்
அந்தமன்னர் பேரும் அதிய தொருவளமும்
சந்திர மதிதனக்குத் தான்தெரிய வேயுரைத்துச்
சுந்தரியாள் என்றிருக்குந் தோழிசொல்லிக் காட்டிவந்தாள்.
இவ்வரசர்க் கப்பால் இருக்குமரிச் சந்திரனார்
செவ்வையுறும் நீளத் திசையணுகி வந்தவுடன்
''பொன்னே ! மரகதமே ! பொற்குயிலே ! ஓவியமே !
மின்னே ! இரவியென வீத்திருக்கும் மன்னனிவன்

### கலிவிருத்தம்

நீடுலவு சோலையில்நெ ருங்குதரு விற்குள்
ஊடுறும்வ ருக்கையிலே யூகமிக வேறிச்
சாடுகனி வீழவிழு சாரநதி யோடே
ஈடுபெரு கோசலைஎ னுங்கனக நாடன். 46.

---

பாட வேறுபாடு :

நடை 1199 : 3 பைந்தொடியே 1691
1203 : 3 நேரிழையீர் 1749
1206 : 4 காணுமென்றான் 1691
1207 : 2 போற்றுமெழில் 1691
1212 : 3 தோகைசொல்லிக் 1691

விருத்தம் 46. 3 : 2, 3 நீளவரு சாரல்நதி 1691

மின்னிடைம டந்தையர் மிகுத்ததன வெற்பு
தன்னைமிக வஞ்சுமைசு மக்குமதி சீர்கண்(டு)
அன்னமொடு கோகிலம ருங்குயிலி னங்கள்
இன்னமகிழ் கோசலையெ னுங்கனக நாடன். 47

## நடை

மின்னே ! இவனாளும் மிக்கதொரு நாடுதனில்
எந்நாளும் நீதி இசைவாய்ச் சிறந்திருக்கும்;
பழமுதிருஞ் சோலையுடன் பாங்கான வாவிகளும்
நளினமலர்ப் பொய்கையுடன் நாளுஞ் சிறந்திருக்கும்;
எத்தலமும் போத்தும் இயன்றதிரி சங்குமைந்தன்
பத்திசிவ காமியிரு பாதமற வாதபிரான்;
புத்தியுள்ள மன்னன் புவியரசை வென்றசிங்கம்;
சத்தியவாக் குள்ள தயவன் புரையரசன்;
ஆமுனிவர் சொன்ன அழகுமுடி மாவேந்தன்;
மாமயிலே ! யானெழுதி வாகுமுருக் காட்டுமன்னன்;
தெள்ளுதமிழ்ச் சீருஞ் சிறப்பும் மிகவுடைய
வள்ளலெனுஞ் சக்கரபத்தி மன்னனரிச் சந்திரன்காண் !"
என்றுசந்திர மாமதிக்கும் ஏத்தமுள்ள சுந்தரியாள்
வென்றியுடன் கூறி மிகவுரைத்தாள் **அம்மானை !**

இந்துநுதல் மின்னாள் இளங்கொடியாள் சந்திரமதி
சிந்தையுற நோக்கித் திகழுமரிச் சந்திரனார்
ஏத்தமுடி மார்பும் இலங்குபுய மும்முகமும்
வாய்த்தகரம் வாய்கண் வடிவவைய மானதெல்லாம்

---

பா. வே. 1218 : 2 சீர்த்தி 1691, செல்வம் 1749
1218 : 4 சிறந்திலங்கும் 1691
1221 : 2 போற்றும் 1691
1224 : 4 பொறையரசன் 1691 1749
1226 : 2 நானெழுதி 1574
1229 : 3 ஏற்றமுள்ள 1574 ஏத்ததொரு 1749
1233 : 1 ஏற்றமுடி 1691
1233 : 3, 4 இலங்குமுக மும்புயமும் 1691 1749
1234 : 2 கண்வாய் 1691

சித்திரத்தில் கண்டுநெடுஞ் சிந்தையிலே நின்றமன்னன்
உத்தவெளி தன்னில் உகந்துவந்தான் என்றுசொல்லி,
மாமயிலாள் எண்ணி மயங்கித்தடு மாறலுத்தாள்.
காமுகவேள் அய்யோத்திக் காவலவ னும்பார்த்து
வாளனைய கண்ணிரண்டு வாழ்மயிலாள் மெய்யுருகி
ஆளழகன் சத்தி அரிச்சந் திரன்மயங்கி,
வேதமறை யோர்கள்சொன்ன மிக்கமொழி யாளைவந்து
போதலர்கை மாரனெடும் பூசலிலே மூட்டிவிட்ட
கன்னியிவள் என்றுசொல்லிக் காவலவன் மெய்கலங்கி
உன்னி மயல்பெருகி ஒண்டொடிபால் சிந்தையத்துக்
கண்ணிரண்டும் கூரக் கனிந்துமிகப் பார்க்கலுத்தான்.
நண்ணும் புரமெரித்த நாதர்வரம் பெத்திருக்கும்

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

### மங்கிலியம் காணுதல்

கன்னிமா னனையாள் செம்பொற்
கழுத்தினில் சிறந்து வீசி
உன்னுசெங் கதிர்போல் மின்னும்
உரியமங் கலநாண் தன்னை

---

பா. வே. 1235 : 3 சிந்தையுடன் 1574
1237 : 4 மாறலுற்றாள் 1574 1691 1749
1238 : 3, 4 காவலனுந் தான்பார்த்து 1691
1239 : 4 தன்மேலே 1691
1241 : 4 கண்டுவந்து 1691
1244 : 4 சிந்தையுற்றுக் 1574
1244 : 3, 4 ஒண்டொடியாற் சிந்தையுற்றுக் 1749
1245 : 2 கூர்ந்து 1691 1245 : 4 பார்க்கலுற்றான் 1574 1691
1246 : 4 பெற்றிருக்கும் 1574 1691

ஒப்புமை: விருத்தம் 48, 49. & அடி எண் : 1247—1260. சுயம்வரத்தில் அரிச்சந்திரன் சந்திரமதியை நோக்குதல்; சந்திரமதியின் கழுத்தில் மங்கலநாண் இருத்தல் கண்டு திடுக்கிட்டுத் திருமணமான இவட்கு இன்னொரு மணம் முடிக்க முயலுவது சரியோ எனல்; அரிச்சந்திரனின் இம்மொழி கேட்டு மனத்துள் மகிழ்ந்த மதிதயன், சுயம்வரத்திற்கு வந்திருந்த ஏனைய மன்னர்களை நோக்கி அரிச்சந்திரன் இப்பொழுது சொன்ன சொல் உண்மையோ பொய்யோ என வினவல்.

அன்னசத் திரவே ளென்னும்
அரிச்சந்திர வேந்தன் கண்டு
தன்னுள்ளே மயங்கித் தேறித்
தரணிமன் னவர்க்குச் சொல்வான். 48

" மன்னர்மன் னவரே நாமும்
வதுவைசெய் திடவே வந்த
கன்னிமுன் வதுவை செய்த
காரிகை யாகுங் கண்டீர் !
பொன்னணி கழுத்தில் பூண்ட
புகழுமங் கலநாண் பாரும்;
இன்னிசை நிசமென் றெண்ணும்."
என்றனர் அரசர் கோமான். 49

---

பாட வேறுபாடு

விருத்தம்: 49. 1 : 3 சூழும் 1749
2 : 2 மணமே 1574
2 : 4 காரிழை 1691

ஒப்புமை : ( முன்பக்கத் தொடர்ச்சி )

'அங்கைவேல் மன்னனும் ஆசைமீக் கொள
மங்கைதன் பங்கய வதனம் நோக்கினான்.
செங்கயற் கண்ணினாள் திருக்க ழுத்தினில்
மங்கள நாணுறீஇ வயங்கக் கண்டனன். 236

கன்னிஎன் றெண்ணினம் கன்னி யோஅலள்
முன்னரே மங்கலம் பூண்ட மொய்குழல்
இன்னமும் ஒருவருக் கெய்து மோஎனா
மன்னவன் மாதுலற் குரைவ ழங்கினான். 237

பொறுத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத்திரண் டாவது மணம்மு டிப்பரோ
சிறுத்தவர் செய்தொழி றிரைவ ரைப்பிதின்
நிறுத்திளீர் நீரெனா நெடிது கூறினான். 238

வள்ளல்ஈ துரைத்தலும் மதித யன்றன
துள்ளம்விட் டோங்கிய உவகை அம்பெரு
வெள்ளம்உள் ளடக்கியே வேந்தர் காள்இவன்
கள்ளமோ மெய்ம்மையோ கட்டு ரைத்ததே.'

— அரிச். புரா. விவாக காண்டம்-239

### நடை

விந்தையுறு மன்னன் மிகுவாஞ்சை யுத்திருக்குஞ்
சந்திர மதிகழுத்தில் தானிலங்கும் மங்கிலியம்
மன்னவனுங் கண்டே மனத்தில்மிக எண்ணியெண்ணிக்
"கன்னியென்று நாம்வதுவை காணவந்த காரிகைக்கே
மங்கலப்பூண் ஏதோ மறுத்துமணஞ் சூட்டவென்றோ
துங்கமுடி வேந்தன் துணிந்தழைத்தான்!" என்றுசொல்லி
வேந்தர் சபைநடுவே வேல்வேந்தன் சொல்லிடவே,
மாந்தர்புகழ்ந் தேத்தும் மதிதயனும் ஓடிவந்து,
"அன்புலவுந் தேசத் தரசரெல்லாங் கேட்டருளும்;
இன்பமுடன் மெய்யிலங்கும் ஏந்தலரிச் சந்திரனை
மெய்யனென்று வையகமும் விண்ணுலகுஞ் சொன்னதிப்ப
பொய்யனென்று கண்டுகொள்ளும் பூபால ரே! எமது
கன்னியர்க்குத் தாலி கழுத்தில் இருக்குதெ"ன்றார்;
"இன்னதுமெய் பொய்யென் றினிப்பார்த் துரையுமெ"ன்றார்.
அவ்வசனங் கேட்ட அரசர்பார்த் தில்லையென்று
"நவ்வியரிச் சந்திரன்சொல் நாட்டமுத்த பொய்களெ"ன்றார்;

---

பாடவேறுபாடு

நடை 1247 : 3 மிகவாசை 1574
1247 : 4 உற்றிருக்கும் 1574 1691
1248 : 1, 2 சந்திரமதி தன்கழுத்தில் 1691
1248 : 3 தானுமணி 1691 1749
1249 : 3, 4 மனதி லுறமயங்கி 1691
1251 : 4 சூட்டவென்றே 1691 1749
1260 : 1, 2 இன்னதுபொய் மெய்யென் 1574 1691
1260 : 4 துரையுமென் றான் 1691
1262 : 3 நாட்டமுற்றும் 1691

1749ஆம் எண்ணிட்ட சுவடியில் 'நவ்வியரி' எனத்தொடங்கும் அடியை அடுத்து, 'அவ்வாறு வேந்தர்' எனத் தொடங்கும் அடிக்கு முன்பாக கீழ்க்கண்ட இரண்டு அடிகள் காணப்படுகின்றன.

"அய்யோத்தி நாட்டு அரிச்சந் திரவேந்தன்
பொய்வசனஞ் சொல்லப் பொருந்துமோ வென்றுசொல்ல"

ஒப்புமை: அடி எண்: 1261, 1262 மதிதயன் வினவியதற்கு விடையாக மன்னர்கள் அரிச்சந்திரன் சொல்லுதல் பொய் எனல்.

'தையலாள் கழுத்தினில் தாலி உண்டெனில்
கையினால் கண்ணுறக் காட்டு நீரெனச்
செய்யகை அறைந்தணி மூக்கிற் சேர்த்திஇவ்
வையனும் பொய்யனென் றரசர் கூறினார்'.

— அரிச். புரா. விவாக காண்டம்-240

இவ்வாறு வேந்தர் இயம்பியபின் வாஞ்சையுடன்
செவ்வியசீர் மேவுஞ் சிலைவேள் மதிதயனும்,
"மன்னவரே! என்வசனம் வையகத்தில் கேட்டருளீர்.
முன்னைநா ளீசன் முகிழ்த்தமுடன் என்னுடனே
உன்னுந் தவம்முடித்தாய்; உந்தனுக்குப் பாலகனாக்
கன்னியரைத் தந்தமந்தக் கன்னிக் கடையாளம்
கண்டத்தில் மங்கிலியங் காணா தொருவருக்கும்;
ஒண்டொடிதன் கைக்கும் உகந்ததந்தை தாய்விழிக்கும்
ஏவருக்குந் தோணா திவளைமணந் தான்புணருங்
காவலவன் தன்னுடைய கண்ணுக்குத் தோணுமென்று
ஆதிஅரன் சொன்னான்; அரசரே! அப்படியே
நீதிஅரிச் சந்திரனும் நேசமுடன் கண்டனர்காண்;
அம்மயிலாள் கேள்வன் அரிச்சந் திரன்"எனவே
செம்மல் மதிதயனுஞ் செப்பினர்காண் **அம்மானை!**

## மாலை சூட்டுதல்

இம்மொழியைக் கேட்ட இராசாக்க ளுந்தியங்கி
விம்மிஅரிச் சந்திரனை மேவியே பார்க்கலுத்தார்;

---

பா. வே. 1265 : 3 மண்டலத்திற் 1749 வாய்மையுடன் 1691 : 4 கேட்டருளும் 1574
1273 : 2 சொன்னார் 1574 1691
1274 : 4 கண்டனன்காண் 1574
1278 : 1 விம்முமரிச் 1691 1749 : 4 பார்க்கலுற்றார் 1574 1691 1749

* 1691ஆம் எண்ணிட்ட சுவடியில் 'விம்மிஅரிச்' எனத் தொடங்கும் அடியை அடுத்து 'மன்னர்சபைக்' எனத் தொடங்கும் அடிக்கு முன்பாக, கீழ்க்காணும் இரண்டு அடிகள் காணப்படுகின்றன.

"அந்நேரந் தன்னில் அரியதொரு மாலைதனைப்
பொன்னான செங்கைகொண்டு பூண்டுவட்ட மேசுழற்றி"

ஒப்புமை : அடி எண். 1263 — 1276. மதிதயன், சந்திரமதியின் கழுத்தில் (மற்றையோர் கண்ணுக்குத் தோன்றாமல்) திகழும் மாங்கல்யத்தைப்பற்றிக் கூறுதல்.

'மஞ்சனச் சடையினான் வரத்தில் வந்தநாள்
கஞ்சன நீழலிற் காண்ப தன்றியே
அஞ்சனக் கண்ணிக்கு மங்கைக் கெய்திடா
தெஞ்சலில் யாவரும் யானும் கண்டிலேம்.'
—அரிச். புரா. விவாக காண்டம்-243

மன்னர்சபைக் காவணத்தில் மாலைதனைச் சந்திரமதி
கன்னியுமை யைத்தொழுது காசினியில் விட்டெறிந்தாள்.

### கலிவிருத்தம்

எறிந்தகை மாலையும் இதைய வாஞ்சையும்
நறுந்தொடை மாலைசேர் ராசர் பார்வையும்
முறும்புகழ் மதிதயன் முற்ற வங்களுஞ்
செறிந்தரிச் சந்திரன் கழுத்தில் சேரவே. 50

மாதுசந் திரமதி மாது கோசலை
நாதன்மார் பணிந்ததை ஞாலம் வானகம்
மூதுரை முனிவரும் முறைவ திட்டரும்
தாதுறும் மதிதயன் தவமி தென்றனர். 51

### நடை

சந்திரமதி கைமாலை சத்தியரிச் சந்திரனார்
கந்தரத்தில் ஏறியதைக் கண்டரசர் எல்லோரும்

---

பா. வே. விருத்தம்: 50. 1 : 4 வாசையும் 1749
3 : 2, 3, 4 மதிதய னுடத வங்களுஞ் 1691 1749
51. 1. மாதுசந்திர மாமதி கோசலை 1691
1 : 3 மாலை 1749
2 : 3, 4 ஞால வாசகம் 1574
3 : 3, 4 முனிவ திஷ்டரும் 1574 முறைவ சிட்டருந் 1749

ஒப்புமை : விருத்தம் 50. சுயம்வரத்தில் சந்திரமதி மாலையை வீச, மாலையும் சந்திரமதியின் மனமும், சுயம்வரத்திற்காக வந்திருந்த மன்னர்களின் பார்வையும், மதிதயனின் தவப்பயனும் அரிச்சந்திரனைச் சென்று சேர்தல்.

'வார்பயில் பூண்முலை மாலையும் நெஞ்சும்
பார்பயில் மன்னவர் பற்பலர் கண்ணும்
தார்பயில் வேல்அரிச் சந்திரன் என்பான்
மார்பில் அணைந்து மலர்ந்தன மன்னோ' 245

அடி எண்: 1281 — 1284. சந்திரமதியின் கைமாலை, அரிச்சந்திரன் கழுத்தைச் சேர்ந்தது கண்ட மற்றைய மன்னர்களின் முகங்கள் அடைந்த மாறுபாடு.

'வெஞ்சுடர் முன்சசி யாம்என மிக்கோர்
கஞ்ச முகங்கள் கரிந்தன அன்றே'.

—அரிச். புரா. விவாக காண்டம்—246

இந்துகண்ட தாமரைப்பூ வென்னமுக மாகிநின்று
சிந்தையுற வுந்தியங்கிச் சென்றிருந்தார் **அம்மானை !**

மாதவர்க ளுப்பெரிய யன்னருட னேவதிட்டர்
போதமிக வேதான் புகழ்ந்து மதிதயனை
நல்ல தவமுடைய ராசனென்று சொல்லிநின்றார்;
வல்லபுகழ் சேரும் மதிதயனார் பெற்றெடுத்த
செல்வத் திருமகளைச் சிங்காரப் பெண்மயிலைக்
கல்விக் களஞ்சியத்தைக் காமகலா பக்குயிலைச்
சூழ்ந்துமங்க ளவசனத் தோகையர்கள் தான்பாட
ஆய்ந்தபுகழ் மன்னன் அரிச்சந் திரன்தனக்குச்
சீராக வேவதுவை செய்யவென்று கொண்டாடிப்
பேராம் வதிஷ்டர் பெரியமுனி வோர்களுடன்
அரசர் பலர்சூழ அண்டருடன் கொண்டாடி
விரவும் மகிழ்ச்சியுடன் மிக்கபல வேள்விசெய்து,
பன்னு முரசு பறை,திமிலை எக்காளம்
சின்னம், துடிமேளந் திந்து,துந்து மிமுழங்க
நேர்த்திபெறுஞ் சக்கரபத்தி நீடரசர்க் குள்ளமுறை
சாத்திரங்கள் செய்து சகலபடி தான்முடித்து
மங்கைசந்திர மாமதியை மன்னனரிச் சந்திரற்குச்
சங்கை மதிதயனுந் தாரைவார்த் துக்கொடுத்து,

---

பாட வேறுபாடு :

நடை: 1283 : 4 வாடிநின்று 1691 மாயிருந்தார் 1749
1284 : 1, 2 சிந்தை யுறமயங்கிச் 1691
1284 : 1 சிந்தையறி 1749
1285 : 4 னேவசிட்டர் 1749
1287 : 3 ராயனென்று 1749
1288 : 4 பெத்தெடுத்த 1749
1289 : 1 செல்லத் 1691
1290 : 3 காமலா 1691
1298. சின்னந்துடி மேளஞ் சிறந்துதுந்து மிமுழங்க 1691
1299 : 2 சக்கரவர்த்தி 1691
1300 : 4 தாமுடித்து 1749

மங்களங்கள் ஓத மறைவாக் கியம்முழங்க,
இங்கிதமாய் வாழ்த்தி இயங்கர்குலப் பெண்ணரசைக்
கட்டிக் கொடுத்துக் கலியாணஞ் செய்தனர்காண்;
மட்டவிழுங் கோதை மடமயிலும் மன்னவனும்
வாழும் மதிதயனார் வாய்த்தவல மாகிவந்து
நீளுமணப் பந்தலிலே நேசமுடன் வந்திருந்தார்;
அந்நேரந் தன்னில் அழகு மதிதயனும்
கன்னியர்க்கும் மன்னனுக்கும் காதலுட னேசிறந்து

## சீதனம் பெறுதல்

சீதனங்க ளாகச் சிறப்பான நாடுகளும்,
மாதனங்கள் சேரும் மலைப்புறமும், காடுகளும்,
மாஞ்சோலைப் பூங்காவும், வாய்த்தபல வாவிகளும்,
தேன்சேருங் கன்னல்விளை சென்னல்வய லும்முதவித்
தேரும், பலகரியுஞ் சேர்ந்தபல மாவுடனே,
சீரும், கனகமணிச் சிங்காரத் தாவடமும்
பொங்கு நவமணியும் பூசணமும் ஆடைகளும்
வங்காரக் கேடையமும் வாய்த்தசமு தாடுகளும்
மருவும் மணியழுத்தி வைத்திலங்குங் கட்டில்களும்
திருவணைய மெத்தைகளுஞ் சேர்ந்தவொரு கும்பலதும்
இன்னதில்லை என்னாமல் எல்லாங் கொடுத்தருளிப்
பொன்னான சந்திரமதிப் பூவையர்க்குத் தோழியர்கள்
பாங்குலவு மாதர் பதினா யிரமுடனே
பூங்குயிலுங் கோகிலமும் பொன்னிலங்கு மஞ்ஞைகளும்
அன்னமுடன் தாராவும் ஆனபிறாக் குஞ்சுகளும்
பொன்னான பாண்டிகளும் போந்தமணிப் பந்துகளும்

---

பாடவேறுபாடு

1303 : 4 கியமுடனே 1691 1749
1304 : 3 இயனற்குலப் 1691
1309 : 4 மதிதயனார் 1691 1749
1310 : 4 னேமகிழ்ந்து 1693 1749
1326 : 3, 4 போந்துமிகு கந்துகமும் 1749

பண்ணா டிசைசொலியப் பாவையர்அ னேகமுடன்
இன்னதுக ளெல்லாம் இசைவாக வேகுடுத்துத்
தேசம் புகழச் சிறந்துவந்த வேந்தருக்குப்
போசனமும் இட்டுப் புகழ்பூ சணமளித்து
வாச மலரும் மகிழ்செந்த முந்திமிர்ந்து
தூசும் பலவருளித் துய்யமணங் கொண்டாடிப்
பண்ணுமஞ்சள் நீராடிப் பண்புகளுந் தான்நடத்தி
அன்னவருக் கான அழகுரதம் மாவுடனே
செய்யும் படிக்கே சிறப்பாக வுங்கொடுத்து
வையம் புகழவந்த மன்னவரைத் தானனுப்பிக்
கன்னோசி நாடன் கனிந்துமிக வீத்திருந்தான்;
மன்னனரிச் சந்திரனும் மாதுசந்திர மாமதியும்
சிங்கார மாகச் சிறந்தநவ சித்திரமணித்
தங்குஞ் சிகரமணித் தானிலங்கு மண்டபத்தில்
வச்சிரமணிச் சட்டம் வகுத்தரத்தினக் காலுடனே
உச்சிதமாய் மின்னும் உகந்தசப்பர மஞ்சணையில்
எல்லையில்லா மாலை இசைந்தமணந் தன்னுடனே
சொல்லரிய கெந்தஞ் சுகந்த மணங்கமழச்
சல்லாப மாரன் தகுமோ கனகவிதம்
உல்லாச மாக உறவாடி யேமகிழ்ந்து
நாளேழு மாளிகையில் நாகரீக மாயிருந்தார்.
நாளேழு சென்றவுடன் நாதனரிச் சந்திரனார்

---

பாடவேறுபாடு

1327 : 2 டிசைபுகலும் 1691 டிசைசொல்லிப் 1749
1328 : 4 வேகொடுத்துத் 1691 1749
1330 : 4 சணமணிந்து 1691
1333 : 2 நீராடீப் 1749
1335 : 4 வுங்குடுத்து 1749
1340 ; 1 தங்கச் 1691
1342 : 1 உச்சிதமா 1749
1342 : 4 பஞ்சணையில் 1749
1347 ; 4 மாயிருந்து 1691

அய்யோத்தி நாட்டுக் கதியமுடன் செல்கவென்றே
செய்ய மதிதயன்பால் சென்றுரைத்தார் அம்மானை !

செய்ய மதிதயனுந் தேவியருங் கொண்டாடித்
தையல் தனைத்தழுவித் தன்மருக னைவாழ்த்தி
ஈசன் தனைத்தொழுது ஈஸ்பரியை யும்போத்திக்
கேசவனை யும்பணிந்து கேள்வியுடன் பூதிகொண்டு
மங்கையர்க்குப் பூசியந்த மன்னருக்குந் தான்பூசி
இங்கிதமாய்த் தேவர்களை எல்லோரை யும்வாழ்த்தி.
"ஆளும் புவியில் அதியமுடன் வாழ்ந்திருப்பீர் !
நீளும் புவியில் நிறைந்தசெல்வம் பெத்திருப்பீர் !
செந்திருவைப் போலுந் திருமாலும் போலிருப்பீர் !
மைந்தனையும் பெற்று மகிழ்ந்துமிக வேயிருப்பீர் !"
என்றுசொல்லி வாழ்த்தி இயல்பாய் மதிதயனும்
நன்றியுள்ள மாதும் நயம்பெறவே தானிருந்தார்;

---

பாட வேறுபாடு

1349 : 3 கதிகமுடன் 1574
1349 : 3, 4 கதிபன் பயணமென்று 1691
1353 : 4 யும்போற்றிக் 1574 1691 1749

* 1749 ஆம் எண்ணிட்ட சுவடியில் 'கேசவனை' எனத்தொடங்கும் அடியை அடுத்து

"மன்னனுக்கும் பூசியந்த மங்கையர்க்குந் தான்பூசித்
துன்னு மதிதயனும் தோகையரும் அப்போது"

என்னும் இரு அடிகளும்,

'மங்கையர்க்கு' எனத் தொடங்கும் அடிக்கு மாற்றாகச்

"சங்கை மதிதயனுந் தையலருங் கொண்டாடி"

என்னும் அடியும் காணப்படுகின்றன.

1356 : 4 யும்பணிந்து 1691, யும்வழுத்தி 1749
1357 : 3 அதிகமுடன் 1691
1358 : 3 நிறைசெல்வம் 1691
1358 : 4 பெற்றிருப்பீர் 1574 1749
1359 : 3 திருமாலைப் 1691
1360 : 3, 4 மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருப்பீர் 1691
மகிழ்ந்து மிகவிருப்பீர் 1749
1362 : 4 தானெழுந்து 1691

தாயார் அடியிணையுந் தந்தையுட தாளிணையும்
நேயமுள்ள மாது நிரையாகப் போற்றிநின்றாள்;
ஏத்தும் மருகனுக்கும் ஏந்திழைக்குந் தான்வாழ்த்திச்
சாத்து மொழிகள் தனையுமிக வேயுரைத்துப்
"பைந்தொடியார்க் கேற்கப் பணிசெய் தகமகிழ்ந்து
சுந்தரியே நீயுஞ் சுகமா யிருமெ"னவே
தோழியர்க்குச் சேதி சுகமாக வேயுரைத்து
நீளும் புகழாக நேசமுடன் சொல்லிவிட்டார்.

## கலிவிருத்தம்

மங்கையொடு மன்னவனும் மாநகரி எய்தச்
சங்கையுறு மன்னனுட தாளிணைவ ழுத்தித்
துங்கமத யானையொடு துய்யபிடி யேகும்
இங்கிதமெ னும்படிஎ ழுந்தனர்சி றந்தே. 52

எண்ணரிய கன்னியர்இ சைந்துபணி செய்ய
நண்ணுதர ளத்திலகு நண்பரிவு கந்தே
திண்ணமுறு திட்டிகழி வுத்திடல்சி றக்கப்
பண்ணுமிசை யோடிசைப கர்ந்திடவெ ழுந்தே. 53

## நடை

மாதுசந்திர மாமதியும் மன்னவனுந் தேரேறிச்
சாதுரங்கச் சேனையுடன் சத்திய கீர்த்தியுடன்

---

பாடவேறுபாடு

நடை 1363 : 2 அடியிணையைத் 1749
1363 : 3 தாதையுட 1574
1363 : 4 தாளிணையை 1749
1364 : 4 போற்றிநின்றார் 1749
1365 : 1 ஏற்ற 1691, ஏற்று 1749, ஏத்த 1574
1366 : 1 சாற்று 1691, 1749
1366 : 3, 4 தனையுமிகவுரைத்து 1691 1749
1369 : 2 செய்தி 1749
1370 : 4 வீத்திருந்தார் 1691

விருத்தம் 53. 4 : 1, 2 பண்ணுமறை யோரிசைப 1691

மாமுனிவர் சூழ்ந்துவர மன்னவருஞ் சூழ்ந்துவரக்
காமுக வேளிரது கன்னியருஞ் சூழ்ந்துவர
விருது குடைநிழத்த வெஞ்சா மரையிரட்ட
அரச ருடன்சென்(று) அரிச்சந் திரவேந்தன்
மாகாளி கோவிலிலே வந்திறங்கிப் போற்றிசெய்து
வாகான வல்லியுடன் வண்மையுடன் நிற்கலுத்தான்;
சத்தியரிச் சந்திரனைத் தையல்சந்திர மாமதியை
வெத்திமிகுங் காளி மிகப்புகழ்ந்து தான்வாழ்த்தி
நல்லவர முஞ்செயமும் நாகரீக முங்கொடுத்துச்
''செல்லுமெ''ன்றாள்; மன்னவனும் சேனைத் தளத்துடனே
குருவாம் வதிஷ்டமுனி கோலவன முத்தவுடன்
திருவாக் கிசைந்தருளிச் சீர்வதிஷ்டர் அங்கிருந்தார்.
செய்யபடை வீரருடன் சென்றுவந்த மாவேந்தன்
அய்யோத்தி நாட்டுக் கருகாண்மை வந்தனர்காண்;
வாகுநெடுஞ் சோலை வனமிலங்குஞ் சித்திரமும்
கோகிலங்கள் நின்று குரலிசைக்கும் ஓசைகளும்
பாளை விரித்துப் படர்கமுகு நிற்பதுவும்
ஞாள மரத்தில் நயந்தகனி மின்னுவதும்
மரம்பூத் திலங்கும் வளமைகளுஞ் சித்திரமும்
நரப்புடைய வாழை நறுங்குலைவிட் டோங்குவதும்
செங்கமல வாவிதொறுஞ் சேர்ந்தஅன்னஞ் சூழ்ந்திருந்து
பொங்கமுட னேதடத்தில் பூவைஅன்னத் தோடிருந்து
சையோக மீறித் தழுவிமணம் பூணுவதும்
பையரவின் அல்குலிளம் பைந்தொடியாள் சந்திரமதி

---

பாட வேறுபாடு

நடை
1378 : 4 நிற்கலுற்றான் 1691 1749
1380 : 1 வெத்திமிகு 1749
1383 : 2 வசிட்டமுனி 1749
1383 : 3, 4 கூர்ந்தவன முற்றவுடன் 1691, 1749
1384 : 3 சீர்வசிட்டர் 1749
1386 : 3 கருகாக 1691, 1749
1388 : 4 சித்திரமும் 1691 1749
1394 : 2 னித்தடத்திற் 1749
1395 : 2 மண்டித் 1749

கண்டுமகிழ்ந் தேமகிழ்ந்து கன்னியர்க்குந் தோழியர்க்கும்

### கோசலை அணுகுதல்

"மண்டலஞ்சூழ் எந்தைநகர் மாநகரி லும்மதிகம்
இந்தநகர்" என்றே இசைவாகத் தானுரைத்துச்
செந்திருவைப் போலுஞ் சிறப்பாக வேமகிழ்ந்து
மேலான அய்யோத்தி மென்னகரி வந்துபுக்கார்;
சீலான மன்னவனுஞ் செய்யமணந் தான்முடித்து
வாறார் எனமகிழ்ந்து வாய்த்தபணி ஆடைமின்ன
வீறான மங்கையரும் மெய்ப்பான ஆடவரும்
சென்றுவந்து தானணுகிச் சீர்வேந் தனைத்தொழுது
நன்றிபெற வும்வணங்கி நாட்டமுத்து நிற்கலுற்றார்;
ஆதிபுகழ் மன்னவன் அடர்ந்ததெரு வீதியெல்லாம்
வீதிவல யாக மிகவந்தார் **அம்மானை!**

அவ்வீதி தோறும் அடர்ந்தசெழுங் கோலமிட்டுச்
செவ்வையுடன் ஆலாத்தித் தீபமொடு நிற்பாரும்
கொத்தலரும் செண்பகமும் கோகனக மும்நிரைத்துச்
சித்திரங்க ளாகச் சிறந்துமிக நிற்பாரும்
பத்திபத்தி யாகப் பரிவுமயில் அன்னமென்ன
வெத்திமன்ன னைப்புகழ்ந்து மின்னாள் தனைமகிழ்ந்து
சென்னி யுறவணங்கிச் சீர்வசனங் கூறுவதும்
பொன்னிலங்குந் தட்டில் புகழ்வயிர முத்துமணி

---

பா. வே *1398 : 4* லும்மதியம் *1749*
*1402 : 3* சென்றுமணந் *1691*
*1406 : 3* நாட்டமுற்று *1691 1749*
*1411, 1412, 1413, 1414* ஆகிய அடிகள் *1691* ஆம் எண்ணிட்ட சுவடியில் கீழ்வருமாறு உள்ளன.

"கொந்தலரு சண்பகமுங் கோகனக மும்நிரைத்துப்
பந்திபந்தி யாகப் பரிவுமயில் அன்னமென்னச்
சித்திரங்க ளாகச் சிறந்துமிக நிற்பாரும்
வெத்திமன்ன னைப்புகழ்ந்து மின்னாள் தனைவணங்கி"

*1411 : 4* மும்மிறைத்து *1749*
*1416 : 1* பொன்னிலகு *1749*

மின்னும்பல ளக்கோர்வை மெய்ப்பாக வைப்பாரும்
உன்னும் பலவிதங்கள் உண்மையுடன் செய்துசெய்து
இப்படியே நின்றிலங்கும் ஏந்திழையா ரைப்பார்த்து
மெய்ப்புடைய மன்னவனும் மெல்லியருங் கொண்டாடி
மும்முரசும் நின்று முழங்குதிருக் கோவிலிலே
செம்மையுடன் வந்துபுக்கார் சீருடனே **அம்மானை !**

வந்ததொரு மன்னவனும் மாதுசந்திர மாமதியும்
சுந்தரஞ்சேர் பொன்னால் துலங்கச் சமைத்திலங்கும்
நாகமணி மண்டபத்தில் நல்வயிரத் தீபமுடன்
வாகனைய வெள்ளி வனிதவிளக் கும்மிலங்கப்
பள்ளி யறையிலிளம் பஞ்சுமெத்தைப் பூவணையில்
தெள்ளு தமிழனைய தேனா ருடனிருந்து
வாசமுடன் கூடி மணந்து களிகூர்ந்து
ஆசைமத வேளின் அருநடமெல் லாம்புரிந்து

---

பா. வே. 1418 'உன்னும் பலவிதங்கள்' எனத் தொடங்கும் அடிக்கு மாற்றாக, 1691ஆம் எண்ணிட்ட சுவடியில் "சொர்ண மிகவுஞ் சொரிந்துமிக வைப்பாரும்" என்னும் அடி இடம்பெற்றுள்ளது.

1419 : 1 இப்படிக்கு 1749
1419 : 2 வந்துதவும் 1691
1419 : 3 எல்லோரை 1691
1424 : 4 சிறந்திலங்கும் 1691
1426 : 4 கும்மிலங்கும் 1749
1428 : 2 தமிழுடைய 1574 1428 : 4 ருடனிருந்து 1691
1429 : 3 மகிழ்ந்து 1574

ஒப்புமை: அடி எண். 1427—1438. திருமணமானதும், அரிச்சந்திரனும் சந்திரமதியும் காமனும் இரதியும் என இன்பத்தில் திளைத்திருத்தல்.

"முளைத்த வெற்பன கோயிலின்
முதிர்மலர் அணைமேல்
இளைத்த நுண்ணிடை இரதியும்
காமனும் எனத்தாம்
விளைத்தநல் இன்ப வெள்ளத்து
வேந்தனும் மயிலும்
திளைத்தி ளைத்தருள் பொழிந்திடக்
கழிந்தன சிலநாள்."

—அரிச். புரா. விவாக காண்டம் 285

பண்டுபட்ட காமப் பலதுயரெல் லாந்தெளிந்து
ஒண்டொடியும் மன்னவனும் உண்மையுட னேகலந்து
நேரத் தடரும் நிறைமோக மானதொரு
ஆசைக் கடலின் அடர்ந்தபெரும் ஆழமுற்று
1435 உள்ளங் களிகூர்ந்(து) ஊடல்மத நூல்முறையின்
எள்ளளவுந் தப்பா(து) இயல்பெல்லாஞ் செய்திருந்து,
காமன் இரதியெனக் காவலனும் மங்கையரும்
நேமமுடன் வாழ்ந்திருந்தார் நேசமுடன் **அம்மானை !**

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

இப்படி அரசர் கோமான்
இளங்கொடி மடந்தை கூடச்
செப்பருங் கலவி யாடிச்
சிறப்புடன் மகிழ்ச்சி பொங்கி
மெய்ப்புறும் புவியும் போத்த
விருதுசக் கரமே செல்ல
முப்புரம் எரித்த நாதன்
முறைப்படி உலகை ஆண்டான். 54

அந்தநாள் ஈசன் ஈந்த
அருந்தவப் பலன்க ளாலே
சிந்தைசீர் பெருகி வாழுந்
திருவெனும் இனிய மங்கை

---

பாட வேறுபாடு :

நடை *1434 : 2, 3, 4* கடலில் அழுந்திப்பெரு மாசைமுற்றி *1691*
*1436 : 4* செய்திருந்தார் *1691*

விருத்தம் *54. 3 : 1* மெய்ப்புடன் *1749*
*3 : 3* போற்ற *1574 1691 1749*
*55. 1 : 5* பயன்க *1691*

ஒப்புமை : விருத்தம் 54, 55 சந்திரமதியின் வயிற்றில் கருப்பம் திகழ்தல்.
'தருவை ஒத்த கரத்தரிச் சந்திரன்
அரிவை யைப்பிரி யாமல்அ ணைந்தநாள்
மருவை உற்றம லர்க்குழல் வல்லிதன்
திருவ யிற்றில்க ருப்பந்தி கழ்ந்ததே'.
—அரிச். புரா. விவாக காண்டம்—286

சந்திர மதியா ளான
தையல்தன் வயற்றில் கெற்பம்
விந்தைசீ ருடனே வந்து
மிகவிளங் கினிய தம்மா! 55

நடை

## மைந்தனைப் பெறுதல்

அலைசூழ் உலகமெங்கும் ஆளுமரிச் சந்திரனார்
தலைவி திருவயத்தில் தான்கருப்ப முத்ததுவே;
செய்யாள் உருவனைய தேவியர்க்கு மெய்வெளுத்துத்
துய்ய கருப்பமிகத் தோன்றுங் குறிப்புடனே
கண்ணோ டிதழ்வெளுத்துக் கச்சுமுலைக் கண்கருத்து
ஒண்ணான மேனி உடம்புபச்சை வர்ணமிட்டுப்
புளிப்பு விருப்பமுற்றுப் பூவையிரு கால்வெளுத்துக்
களிப்பு மிகுந்தே கனிந்ததிங்க ளொன்றாகி
ரெண்டாகி மூன்றாகி நாலஞ்சா றேழாகி
மண்டுமோர் எட்டாகி வாய்த்ததிங்க ளொம்பதுமாய்ப்

---

பாடவேறுபாடு

நடை. 1440 : 2 திருவயற்றில் 1574 1749
1440 : 3, 4 தான்கெற்ப முற்றதுவே 1574 1691
1441 : 2 எனுமினிய 1691 1749
1442 : 1, 2 துய்யதொரு கெற்பமிகத் 1691
1442 : 3, 4 தோன்று குறியுடனே 1574
1444 : 4 வன்னமிட்டு 1749
1445 : 2 விருப்பமுத்து 1749
1446 : 2 மிகுத்தே 1574
1446 : 3 கனிந்துதிங்க 1749
1448 : 4 ளொன்பதுமாய்ப் 1574 1691 1749

ஒப்புமை : அடி எண். 1441—1446. சந்திரமதி கருப்பம் அடைந்ததும், சந்திரமதியின் உடலில் மாறுபாடுகள் தோன்றுதல்.

'நிலைம யிர்க்கண் குருக்கொண்டு நீள்கரும்
கொலைம தர்க்கண் குழிந்து குளிர்முகம்
கலைநி லாவின்வி ளர்த்துக்க திர்மணி
மூலைமு கங்கள்க றுப்புமு திர்ந்தவே.'

— அரிச். புரா. விவாக காண்டம்-288

பத்தான திங்களிலே பாருலக முந்தழைக்கப்
பெத்தாள் மகனைப் பெருகுமணி ரத்தினமென;
அந்நேரந் தாதியர்கள் ஆனசந்திர மாமதிக்கு
இந்நிலமே செய்யும் இதங்கள்மிகச் செய்துசெய்து,
பாலகனை நன்றாய்ப் பரிவாய்ப் புனலாட்டி,
ஏலமுடன் தொப்புள் இதமாய் முடிந்தறுத்துக்
கோலத் துடனே குலவையிட்டுக் கொண்டாடிச்
சீலத் துடனே செயல்பெருகி ஆசைமிஞ்சிப்
பாங்கியர்கள் ஓடிவந்து, பார்வேந்த னோடுரைத்தார்;
ஆங்கவருக் கேற்க அதியவெகு மானமிட்டு
வரமா முனிவர்களும் வானவருங் கொண்டாடுஞ்
சரசு நதிமூழ்கித் தாணுவுட பூசைசெய்து
ஆயிரங் கோட்டை அமுர்தமணி முத்துடனே
தூய நிதிபலவும் சொர்ண மணிபலவும்

---

பாட வேறுபாடு

1449 : 3, 4 பாருலகெ லாந்துதிக்க 1691    1449 : 4 முந்துதிக்க 1749
1450 : 2 மதலை 1749
1450 : 3 பெருகுமொளி 1691
1451 : 4 மாமதிக்கே 1749
1456 : 4 ஆசைகொண்டு 1749
1458 : 1 ஆங்கவர்கட் 1691
1458 : 3 அதிகவெகு 1574 1691
1459 : 4 கொண்டாடச் 1691
1460 : 2 நதிமுழுகித் 1574 1691 1749
1462 : 3, 4 சொர்ணப் பணிபலவும் 1691 1749
சொர்ணம் பணிபலவும் 1574

ஒப்புமை: அடி எண். 1457—1467. அரிச்சந்திரன், மகன் பிறந்தான் எனும் செய்தியைக் கேட்டவுடன், மகிழ்ந்து, நாட்டிலுள்ள அனைவருக்கும் பல்வகைக் கொடைகள், உதவிகள் அளித்தல்.

'பிள்ளை வந்து பிறந்தனன் என்றலும்
வள்ளல் உள்ளம் மகிழ்ந்திர வோர்க்கெலாம்
அள்ளி நீர்அறை யைத்திறந் தேழுநாள்
கொள்ளை கொண்மின் எனக்கொடுத் தானரோ.'

— அரிச். புரா. விவாக காண்டம்-291

வெள்ளிக் கரகமுடன் மிக்கபல வஸ்திரமும்
ஒள்ளியமாய் வேதியருக் குண்மையுடன் தானமிட்டுப்
பத்தியுள்ள பாலகனைப் பண்பாகப் பார்க்கவென்று
வெத்திமன்னன் வந்தவுடன், மிக்கான தாதியர்கள்
மைந்தன் தனையெடுத்து வந்தேந்திக் காட்டலுத்தார்;
சிந்தை களிகூர்ந்து சீர்வேந்தன் கொண்டாடிப்
போகபோக் கியமதன் பூபால சிங்கமென்றும்
லோகதாட் சன்எனவும் உத்ததிரு நாமமிட்டுத்
தாராட்டுந் தொட்டிலிலே தானுமிக வேகிடத்திச்
சீராட்டி நீராட்டிச் சிந்தைமிகக் கொண்டாடிப்
பட்டணத்தில் வாழும் பரிவுடையோர் எல்லவர்க்கும்
இட்டமுடன் எண்ணெய் இசைஅரப்புத் தன்னுடனே
மஞ்சளுடன் ஆடைகளும் வாய்த்தநல்ல சர்க்கரையும்
இஞ்சலுடன் வீதி இசைமுழுதுந் தானுதவித்
தேசங்கள் தோறும் சிறந்துமிந்த வாறுதவி
நேசமுடன் வாழ்ந்திருந்தார் நீதியுடன் அம்மானை!

---

பாடவேறுபாடு

*1463 : 2* கரகமொடு *1749*
*1463 : 3, 4* மிக்கவஸ்தி ரம்பலவும் *1749*
*1464 : 1* ஒள்ளியமா *1749*
*1467 : 4* காட்டலுற்றார் *1574*
*1470 : 2* சனனெனவே *1691*
*1471 : 1* தாராட்டித் *1749*
*1473 : 2* உள்ள *1574*
*1475 : 2* தாம்பூலம் *1691*
*1476 : 1* இஞ்சொலுடன் *1691*
*1478 : 1, 2, 3* நேச முடனே நிறைந்திருந்தார் *1691 1749*

ஒப்புமை: அடி எண். *1469, 1470.* அரிச்சந்திரன்—சந்திரமதியின் குழந்தைக்கு இடப்பெற்ற பெயர் — முரண்பட்ட குறிப்பு.

'யாவ ரும்நிக ரல்லவற் கேற்றிடத்
தேவ தாசன் எனப்பெயர் செப்பினார்'

— அரிச். புரா. விவாக காண்டம் - *305*

சந்திரமதி யென்னுமந்தத் தையல்நல்லாள் பெத்தெடுத்த
மைந்தனெனுஞ் சின்ன மதகளிறுக் கின்பமுடன்
வாழி யுடன்முருகும் வாய்த்தநெத்திச் சுட்டியுடன்
ஆழி சிறுவிரற்கு அல்பாக வேபுனைந்து.
பொற்காப்புத் தண்டையுடன் போந்தமணிக் கிண்கிணியும்
பற்பல காப்பும் பதக்கமுட னேயணிந்து.
செங்கீரை தாலாட்டு சேர்ந்துகொட்டுஞ் சப்பாணி
பொங்குமுத்தம் வாரானை போந்தம் புலியழைத்தும்
செய்யுஞ் சிறுபறைகள் சித்தில்சிறு தேருடனே
உய்யும் இதமுடனே ஓராண்டாய் ரெண்டாண்டாய்
ஆண்டுமூன் றாகி அதுநாலும் அஞ்சாகி
வேண்டுங் குணம்வசனம் மிக்க அறி வுந்திடமும்
தங்கியசீ ரும்பெருகித் தந்தையுடன் தாய்மகிழப்
பொங்குபுகழ் மைந்தன் புகழாக வீத்திருந்தான்;
எத்திசையும் எண்ணும் எயிலரசர் போத்திசெய்யச்
சத்தியகீர்த்தி என்னும்அத் தாடாளன் மந்திரிசொல்
உத்துநிலை யாக உலகமெல்லாம் தான்புரந்து
சத்திய வாசகமுந் தப்பாத நீதியுடன்
நன்னயங்க ளாகஇந்த நானிலமெல் லாந்தழைக்க
மன்னர் புகழ்அயோத்தி மன்னனுல காண்டிருந்தான்;
மண்டலமெல் லாந்துதிக்க வானவர்கோன் வீத்திருக்கும்
அண்டர் பதிவளங்கள் யானுரைப்பேன் **அம்மானை !**

---

பாட வேறுபாடு

*1479 : 4* பெற்றெடுத்த *1574, 1691, 1749*
*1481 : 1, 2* வாளி முருகுநல்ல *1691*
*1484 : 3* பதக்கனுட *1749*
*1487 : 3* சிற்றில்சிறு *1691*
*1493 : 2, 3, 4* எண்ணேழ் இயலரசர் போற்றிசெய்யச் *1691*
*1493 : 3, 4* இயலரசர் போற்றிசெய்யச் *1574*
*1495 : 1* உத்தநிலை *1691 1749*
*1495 : 4* தான்புகழ்ந்து *1691*
*1497 : 4* லாந்துதிக்க *1691*
*1499 : 4* வீற்றிருக்கும் *1574 1749*

## தேவேந்திரன் பதிவளம்

சுந்தரஞ்சேர் பொன்னால் துலங்குகின்ற நாட்டிலெங்கும்
விந்தைநெடுங் கோபுரமும் விறுலவுங் கோவில்களும்
பொன்னரக்கு மாளிகையும் போந்தநெடுஞ் சாலைகளும்
மின்னுமணி மண்டபமும் மிக்கபல மேடைகளும்
எண்ணரிய சாலைகளும் ஏத்தமணி மண்டபமும்
நன்னுதலார் வீத்திருக்கும் நாதமணி மண்டபமும்
கன்னியிள மாமயிலார் காமநெடு மாளிகையும்
உன்னிதங்க ளாக உயர்ந்திலங்கும் மேடைகளும்
கற்பகப்பூஞ் சோலைகளுங் கண்ணான வாவிகளும்
விற்புருவ மானார் விளையாடும் பொய்கைகளும்

## கலிவிருத்தம்

நேம மாதவர் நின்றிடும் அங்கணம்
சாம வேத சறாளிகை மண்டபம்
நாம மாதர் நடம்புரி சித்திரக்
காம மண்டப முங்கணக் கில்லையே. 56

தெத்தி சைப்பொடு சென்றணங் காரங்கள்
உத்தி லங்கு முயர்மணிச் சாவடி
வெத்திச் சீர்பெறும் மேன்மணி மண்டபஞ்
சுத்துஞ் சாவடி யுந்துகை யில்லையே. 57

---

பாடவேறுபாடு

நடை 1502 : 4 கோயில்களும் 1691
1505 : 3 ஏற்றமணி 1691
1506 : 2 வீற்றிருக்கும் 1749
1506 : 3 நாகமணி 1691

விருத்தம் 57. 1 : 1 தெற்றி 1691
2 : 1 உற்றி 1691
3 : 1 வெற்றிச் 1691
3 : 3 மின்மணி 1691
4 : 3 யுந்தொகை 1691

பத்திபத்தி யாகப் பலகோடி மண்டபமும்
சித்திரங்க ளாகச் சிறந்திலங்கும் பொன்னாட்டில்
மூவேந்த ரும்புகழும் மூண்டமணி யாசனத்தில்
தேவேந் திரனுமந்தத் தேவியிந்தி ராணியுடன்
ஆயிரங் கண்ணிலங்க ஆனசொலு வீத்திருந்தான்;
தூயதொரு வானவர்கள் சுத்தெங்குங் காத்துநிற்க
வீணை பலமுழங்க மிக்கவிரு தும்புகழத்
தானையுட துந்துமங்கள் தானும் மிகக்குமுற
ஏல இரம்பையுடன் ஏற்கும் உருவசியும்
சால முருந்திலகத் தையலருந் தானிருந்து
நாடகவி னோத நளபாக சித்திரமும்
நீடியவொய் யார நிதானநடம் செய்திடவே,
சித்தம் மிகமகிழ்ந்து, தேவர்பிரான் கொண்டாடி
உத்தஅரி யாசனத்தில் உண்மையுடன் வீத்திருந்து
சங்கையுட னேயிவர்கள் தங்களுக்கெல் லாம்வரிசை
அங்கவருக் கேற்க அரியபணி ஆடைநல்கி
வாசவர்கோன் தானும் மகிழ்ந்திருந்தார் **அம்மானை !**

பூசுரர்க ளும்பெரிய புண்ணியமா தேவர்களும்
வேத வியாசருடன் மிக்கசெய மாமுனியும்
சூத முனிவருடன் சொல்லும் பராசரரும்
காசி மகாரிசியுங் கலைக்கோட்டு மாமுனியும்
நேசமக லாத நிறைரோம மாரிசியும்
நாரதருந் தும்புருவும் நல்ல கவுதமரும்
சாரம் புகழ்பெருகுந் தங்குசெயங் கொண்டாரும்

---

பாடவேறுபாடு

நடை *1515 : 4 வீற்றிருந்தான் 1749*
*1516 : 3 சுற்றெங்குங் 1691 1749*
*1516 : 4 காத்திருக்க 1749*
*1524 : 4 வீத்திருந்தார் 1691*
*1526 : 2 கேற்ற 1691*
*1528 : 2 ளும்புகழ 1691*
*1534 : 4 கொண்டருளும் 1691*

துருவாச மாமுனியுந் தோன்றுபுகழ் மாதவரும்
குறுமுனியும் வேதக் கொழுந்தான தேசிகரும்
வசிட்ட முனிவருடன் வாய்த்தசெழுங் கோசிகனும்
சுசிட்டருடன் மாதவருஞ் சூழ்ந்தரிசி தன்னுடனே
ஆதித்தர் பன்னிருவர் அஷ்ட வசுக்களுடன்
சோதி முடியிலங்குந் துய்யதொரு சந்திரனும்
சனகருடன் நால்வர்களும் தங்கியமாப் பூசுரரும்
அனேக முனிவருடன் அன்பாக வீத்திருந்தார்;
அங்கவரை நோக்கி அயிரா வதப்பாகன்,
"சங்கையுள்ள மாதவரே ! சாத்துமொழி கேட்டருளீர்;
பூதலத்தில் வாழும் புகழரசர் தங்களிலே
நீத முடையவனாய் நிச்சயசொல் லுத்தமனாய்ச்
சிந்தையிலும் வாக்கிலும்பொய் செப்பாத வாசகனாய்த்
தந்தார தாரப் பிறர்தார புத்திரனாய்

---

பா. வே. *1536 : 1* குருமுனியாம் *1691*
*1541 : 1* சனகரொடு *1749*
*1542 : 2* முனிவரொடு *1749*
*1542 : 4* வீற்றிருந்தார் *1749*
*1543 : 4* பதப்பாகன் *1749*
*1544 : 3* சாற்றுமொழி *1691 1749*
*1548 : 2* தாரம் *1749*

ஒப்புமை : அடி எண். *1543 — 1550.* தேவேந்திரன் முனிவர்களை நோக்கி, பூவுலகில் வாய்மை முதலான நற்பண்புகளில் சிறந்த அரசர் யார் என வினவல்.

'பாய்மைக்க லோலக் கடல்சூழ்புவிப்
பார்த்தி வர்க்குள்
தீமைக்கும் வேகச் சிலுக்குக்கும்
இடம்கொ டாது
வாய்மைக்கு நன்னூல் வளனுக்கு
மனதி லுற்ற
தூய்மைக்கும் மிக்கார் தமைஆய்ந்துநீர்
சொன்மி னென்றான்'

—அரிச். புரா. இந்திர காண்டம் 31

மண்டலத்தில் உண்டோசொல்; மாதவரே!" என்றுசொல்லி
அண்டர் பிரானும் அருமறையோ ரைக்கேட்டான்.
அந்தமொழி கேட்டவுடன் ஆனதொரு சீர்வதிஷ்டர்
சிந்தை மகிழ்ந்து சிறப்பாகக் கூறலுத்தார்–
"வானாட்டு மன்னவனே! வாசவனே! நீகேளாய்;
மேனாட் டிலும்மதிய மிக்கதொரு மேதினியில்
அய்யோத்தி என்னும் அடர்ந்தபுகழ் நாடாளும்
துய்யவரிச் சந்திரன்காண் சுத்தமிகும் எண்சீஷன்;
மாதிலங்கும் மார்பனவன் வாய்த்ததவம் உள்ளவன்காண்;
நீதியுள்ள வேந்தனவன் நீதிஅனு கூலனுங்காண்;
பத்திமுத்தி உள்ள பரதார புத்திரன்காண்;
புத்திமிக உள்ளவன்காண் பொய்சொல்லா மன்னனவன்."

---

பாட வேறுபாடு :

1551. அந்த மொழிகேட்டு ஆன தொருவசிட்டர் 1749
1552 : 4 கூறலுற்றார் 1691 1749
1554 : 2 டிலும்மதிக 1574 1691 1749
1558 : 2 மன்னனவன் 1691
1558 : 4 கூலனுமாய் 1691
1559 : 1 பத்தியுத்தி 1691
1560 : 1, 2 புத்தியுள்ள மன்னவன்காண் 1574
1560 : 4 வாசகன்காண் 1691

ஒப்புமை: அடி எண். 1551 — 1561. வசிட்ட முனிவர், தேவேந்திரனை நோக்கி, "பூவுலகில், அரிச்சந்திரனே வாய்மை முதலான நற்பண்புகளில் சிறந்த அரசன்" என்று கூறுதல்.

"பாருக் கொருவன் பரதார
சகோத ரன்வெம்
போருக் கொருவன் புகழுக்கு
மறைப்பொ ருட்கு
நேருக்கும் வீடா மனுநூனெறிக்
கும்பொ றைக்கும்
ஆருக்கும் மிக்கான் அரிச்சந்திரன்
ஆகும் என்றான்"

—அரிச். புரா. இந்திர காண்டம்—33

என்று புரந்தரனுக்(கு) இயல்வதிஷ்டர் கூறிடவே
வெற்றியுள்ள கோசிகனும் மேன்மையுட னேகேட்டு
"ஏத்ததவ முள்ள இசைவதிஷ்ட மாமுனியே!
சாத்துதவ முள்ள சசிகொழுநன் சேர்பதியில்
துற்சணங்கள் உள்ளவனைத் துட்டமிகச் செய்பவனை
லட்சணங்கள் கெட்டவனை நாரிமயல் கொண்டவனை,
புலையுங் கொலைகளவும் போதமிகச் செய்துசெய்து
நிலைகெட் டலைந்துழலும் நிர்ப்பாக்ய னானவனை,
'நல்லவன்காண்' என்றுசொல்லி நத்தலத்தோர் தம்சபையில்
வல்லமையாய்ச் சொல்வர்களோ மாதவரே!" என்றுரைத்தான்.

## வதிட்டர் சபதமிடுதல்

அவ்வசனங் கேட்டு அடர்ந்தபெருங் கோபமுடன்
செவ்வையுள்ள மாவதிஷ்டர் சென்றெழுந்து மேதுரைப்பார்-

---

பா. வே. 1562 : 3, 4 மேன்மை யுடன்கேட்டு 1749
1563 : 1 ஏற்றதவ 1691
1563 : 3 இசைவசிட்ட 1749
1564 : 1 சாற்றுதவ 1691
1567 : 3 போதநிதஞ் 1691 போதநித்தஞ் 1749
1568 : 2 உலைநதுழன்று 1749
1571 : 3, 4 அதிகோப முண்டாகி 1691
1572 : 2 மாவசிட்டர் 1749
1572 : 4 தாமுரைப்பார் 1749

ஒப்புமை : அடி எண். 1562 — 1570. அரிச்சந்திரனே சிறந்தவன் என வசிட்டர் கூறக் கேட்ட விசுவாமித்திரர், "நற்பண்புகள் அற்ற ஒருவனை நல்லவன் எனத் தேவேந்திரன் முன் வசிட்டர் கூறக் காரணம் என்ன ?" என வினவுதல்.

"வெய்யன் பதகன் பரதார
விருப்பன் வீணன்
பொய்யன் நிறையும் பொறையும்
சிறிதுமில் புல்லன்
கையன் கபடன் கயவன்றனை
நல்ல னென்றிவ்
வையன் திருமுன் னுரைத்தாயிதென்
னாக வென்றான்"

— அரிச். புரா. இந்திர காண்டம்-35

"சத்தியரிச் சந்திரனைத் தப்பாத வாசகனைப்
பத்தியுள்ள கேசரியைப் பரதார புத்திரனை,
உத்தமனை, வேதத் துகந்தசிந்தை யுற்பனனை,
நத்தவருங் கொண்டாடும் நல்லசிந்தை யுற்பனனைத்
துட்டன் கபடனென்றுஞ் சொல்பிரட்டு வஞ்சனென்றும்
நெட்டாந் திரமாக நீயுரைத்தாய் இச்சபையில்!
பூவுலகில் மன்னவனைப் பொய்யனென்று சொன்னவுந்தன்
நாவுவெந்து போகுமே"ன்று நல்வதிஷ்டர் கூறிடவே,
கோசிகனுந் தானெழுந்து கோபமுடன் சீறிடவே,
வாசவனார் தன்சபையில் மாமுனிவர் எல்லோரும்
பதறி யெழுந்தே பருவமுட னேயிருவர்
விதிருஞ் சினமாத்த மேன்மேலுங் கோபமிஞ்சி
ஆங்கார மாயிருவர் ஆலித்து நிற்கலுத்தார்.
பாங்கான நாரதரும் பண்பாக ஓடிவந்து,
"மாமுனியே நீங்கள் வலுகோபங் கொண்டதெல்லாம்
நாமறியச் சொல்லுகிறோம் நாடியமை யுங்கோபம்

---

பா. வே. 1576 : 1 நற்றவர்கள் 1691
1576 : 3, 4 நல்லதொரு மன்னவனைத் 1749
1580 : 3 நல்வசிட்டர் 1749
1585 : 4 நிற்கலுற்றார் 1574 1691 1749

ஒப்புமை : அடி எண். 1571—1580. அரிச்சந்திரன் நல்லன் அல்லன் என விசுவாமித்திரர் கூறக் கேட்ட வசிட்டர், விசுவாமித்திரரை நோக்கி, "நல்லோனாகி அரிச்சந்திரனை வேண்டுமென்றே நல்லன் அல்லன் என உரைத்த உன் நாக்கு வெந்துபோகும்!" எனச் சினத்துடன் கூறுதல்.

"தீவெந் தொழிலின் றிஜைப்பற்றமெய்ச்
செவ்வி யோனைக்
காய்வெந் திறலா லிவைகூறிய
கௌசி காநின்
வாய்வெந் திலைநின் மனம்வெந்திலை
வம்பு சொன்ன
நீவெந் திலைதெய் வமும்நின்வயிற்
பொய்த்த தென்றான்."

—அரிச். புரா. இந்திர காண்டம்-36

பாவமெ"ன்ற போதே பரமரிசி யோரிருவர்
கோவக் கடலைக் குணக்கரைக்குள் ளேயொடுக்கி
இருந்தார் சினமுடனே எல்லோருந் தாமறியப்
பொருந்துபுகழ் நாரதரும் போந்துரைத்தார் **அம்மானை!**

"அரிச்சந் திரவேந்த னானபுகழ் மெய்யனென்றால்
விரிச்சதொரு பொய்யனென்றால் மிக்கசப தம்பாசை
சொல்லும் புரந்தரன்முன் சொல்முனியே!" என்பளவில்
வல்ல தொருவேத வாதரெனும் மாவதிட்டர்
அப்போ புரந்தரன்முன் னாகஉட னேதுரைப்பார்—
"செப்பியஎன் சீஷன் சிறந்தபொய்யன் என்றுகண்டால்
கெங்கா நதியுங் கிளர்மதியுஞ் சூடுகின்ற
சங்கரனார் தாமறியத் தானுரைக்கக் கேட்டருளும்;
தவசின் நிலைமைகளுந் தானுவுட பூசைகளும்
சிவமுலவும் நீறுந் திருவேட மும்மகத்திக்

---

பாடவேறுபாடு

1589 : 1 பாபமென்ற 1691
1590 : 1 கோபக் 1691
1590 : 4 ளேயடக்கி 1574 1691
1591 : 3 எல்லவருந 1691
1596 : 4 மாவசிட்டர் 1749
1597 : 4 னேதுரைப்பான் 1691
1600 : 3 தாமுரைக்கக் 1574
1601 : 1 தவசு 1574
1602 : 4 மும்மகற்றிக் 1691

ஒப்புமை : அடி எண். 1598 — 1606. வசிட்டர் சினங்கொண்டு, "என் சீடன் அரிச்சந்திரனைப் பொய்யன் என மெய்ப்பித்தால், நான் சிவதவ வேடமகற்றித் தலையில் கட்குடம் தூக்கித் தென்றிசைச் செல்வேன்" எனச் சபதம் உரைத்தல்.

'அன்பாற் கடல்ஆ யவசிட்டன் அழன்று மன்னன்
தன்பாற் றவறுண் டெனக்கௌசிகன் சாய்க்கின் அன்றே
வெண்பாற் றவம்விட் டிழிகள் தலைஓட்டில் ஏந்தித்
தென்பாற் றனிச்செல் குவன்யானிது திண்ணம் என்றான்.'

—அரிச். புரா. இந்திர காண்டம்-42

கள்ளுக் குடமெடுத்துக் காதலுட னேசுமந்து
தள்ளும் படிக்கே தனியே மிகவெழுந்து
தெக்குமுக மாய்நடப்பேன் தேவேந்திரா!"எனவே
மிக்க வதிஷ்டமுனி மீறுசினத் தோடுரைத்தார்.
பக்கமுள்ள கோசிகனும் பாரமுடன் கூறலுத்தார்-
"தக்கபுகழ் சேருமரிச் சந்திரனைப் பொய்யனென்று
பண்ணாமல் விட்டுவிட்டால் பார்பணிவோன் தன்னருளால்
ஒண்ணாக யான்முடித்த ஓங்குதவத் தில்பாதி
மண்ணாளும் வேந்தனுக்கு மாறாமலேகொடுப்பேன்"
என்றுசொல்லிக் கோசிகனும் ஏத்தமுடன் சீருரைத்தார்.
இச்சபதம் பேசி இருவோருந் தானிருக்கச்
சர்ச்சைமொழி நாரதருஞ் சாத்துவார் **அம்மானை!**
"கோசிகனார் தாமணுகிக் கொத்தவனைத் தானுமிந்தக்
காசினியில் சோதனைகள் காணுகின்ற நாள்வரைக்கும்

---

பாட வேறுபாடு :

1604 : 4 மிகநடந்து 1691 1749
1605 : 1 தெற்குமுக 1691
1606 : 2 வசிட்டமுனி 1749
1606 : 3, 4 மீறுசின மோடுரைத்தார் 1574
1607 : 4 கூறலுற்றான் 1574 1691 1749
1611 : 3, 4 மாறாமல் யான்கொடுப்பேன் 1691 1749
1612 : 3, 4 ஏற்றமுட னேயுரைத்தான் 1691
1614 : 3 சாற்றுவான் 1691 சாற்றுவார் 1574
1615 : 3 கொற்றவனைத் 1691

ஒப்புமை : அடி எண். 1608 — 1612. வசிட்டர் கூறியது கேட்ட விசுவாமித்திரர், "அரிச்சந்திரன் பற்றி வசிட்டர் கூறியது உண்மையென ஆனால் நான் என் தவத்திற் பாதியை ஈவேன்" என உரைத்தல்.

"...............................
...............................
வென்றா னெனின்யான் செய்மெய்த்தவந் தன்னிற் பாதி
குன்றாமல் ஈவேன் எனக்கௌசிகன் கூறி னான்ஆல்"

— அரிச். புரா. இந்திர காண்டம்-44

பூவுலகி லேவதிஷ்டர் போகாமல் தானுமிந்தத்
தேவர் பதிதனிலே சென்றிருக்க வேணுமெ"ன்றார்!
"அந்தப்படி யேகருமம் ஆகுகின்ற நாள்வரைக்கும்
இந்தப் பதியில் இருப்போம்" எனமகிழ்ந்து
பொன்னாட்டி லேவதிஷ்டர் போந்திருந்தார் **அம்மானை !**

விண்ணாட்டுக் கோசிகனும் வேந்தனைச்சோ திக்கவென்று
அயிராணி கேள்வன் அறியவுரைத் தேயெழுந்து
செயலான பூவுலகில் சென்றுவந்தார் **அம்மானை !**

சென்றுவந்த கோசிகனும் சிந்தைதனில் எண்ணலுத்தான்;
வென்றியுள்ள மன்னவனை மெய்யனல்ல வென்றுபண்ண
எந்தவகை செய்வோம் எனவே மிகநினைந்து
சுந்தரஞ்சேர் மாமுனிவன் சுற்றமுடன் எண்ணியெண்ணி
மாதவர்கள் சேரும் மலைக்குகையில் வந்துபுக்கான்;
ஏதமுடன் அம்மலையில் இன்பமுள்ள மாமுனிவர்
கோசிகனைக் கண்டு குணமாக வேவணங்கித்
"தேசிகரே" என்றுசொல்லிச் சீராக வீத்திருந்தார்;
வீத்திருந்த மாதவரில் மிக்கதொரு நால்வர்களைப்
பூத்ததவக் கோசிகனும் பூராய மாயழைத்து,

---

பாட வேறுபாடு

1617 : 2 லேவசிட்டர் 1749
1621 : 2 லேவசிட்டர் 1749
1622 : 2 கோசிகனார் 1691
1625 : 4 எண்ணலுற்றான் 1574 1691 1749
1629 : 4 வந்துபுக்கார் 1574 1691 1749

ஒப்புமை : அடி எண். 1625 — 1629. விசுவாமித்திரர், "அரிச்சந்திரனை மெய்யனல்லன் எனக் காட்ட, என்ன செயல்கள் செய்யலாம்" என ஆராய்தல்.

'செவ்வி யன்றனைத் தீயவன் என்றியாம்
வெவ்வி யற்பட விண்ணவர் முன்புகல்
அவ்வி யத்தைமெய் ஆக்கும் அரும்திறம்
எவ்வி யற்றென் றிதயத்தில் எண்ணினான்'.

—அரிச். புரா. வஞ்சனைக் காண்டம்-2

"மாதவரே ! நீங்கள்சென்று வாய்த்தஅயோத் திப்பதியில்
ஆதவோர்கோன் நீதி அரிச்சந் திரனிடம்போய்
யாகம் முடிப்பதற்கு ஆடகங்கள் வேணுமென்று
வாகனைய கோசிகனார் வாசகங்கள் சொல்லிவிட்டார்
என்றுசொல்லிக் கேட்டு இருநிதியந் தாறனென்றால்
நன்றியுடன் கேட்டு நயந்துநீர் கொண்டாடி
இந்நாளில் கோசிகனார் இங்குவரு வார்அவர்பால்
பொன்னான(து) ஈயுமென்று போந்துசொல்லி வந்துவிடும்
மாதவரே" என்றுசொல்லி வார்த்தைமிக வேயுரைத்து
ஏதமுறுங் கோசிகனார் இன்பமுட னேயிருந்தார்.

## கலிவிருத்தம்

கவுசிக மாமுனி கழறு வாசகம்
சிவதவ முனிவர்கள் சிறந்து கேட்டுமே
அவசிய மிப்படி அரசன் பாலெய்தி
நவமுட னறிந்துவந் துரைப்பம் நாமென்றே. 58

---

பாடவேறுபாடு

நடை 1635 : 3, 4 வாய்த்த அயோத்தியிலே 1691
1639 : 2 கேளு 1691 1749
1639 : 4 தாரனென்று 1691 1749, தாரமென்றால் 1574
1640 : 2 சொன்னால் 1691
1644 : 3, 4 இன்பமுடன் வீத்திருந்தார் 1691

ஒப்புமை : அடி எண். 1635—1644. விசுவாமித்திரர், "அரிச்சந்திரனிடம் சென்று வேள்விக்குப் பொன் வழங்குமாறு கேட்டு வருக" என முனிவர்களை அனுப்பிவைத்தல்.

'அருள்அ யோத்தி அரிச்சந் திரனையுற்
றிருள றும்பெரு வேள்விக்கி யான்சொலும்
பொருட ரும்படி இன்று பொருத்திநீர்
வருக என்று மறைமுனி கூறினான்.'

—அரிச். புரா. வஞ்சனைக் காண்டம்-8

இலங்கிய கவிகையும் இசைந்த அக்கதை
துலங்கிய சிவமணிச் சோதி மின்னிட
நலங்கிளர் தவமறை நால்வர் தாமெழுந்
தலங்கல்வே லரசனாட் டகத்தை நோக்கியே! 59

## நடை

செய்யதொரு மாதவர்கள் சீராக வேயெழுந்து
துய்ய மலைத்தடமுஞ் சுத்தமுள்ள கானகமும்
வையகமெல் லாமறிய வந்துகடந் தேகியவர்
அய்யோத்தி நாட்டுக் கருகிருக்குஞ் சோலைநண்ணிச்
சிந்தைகளி கூர்ந்து சிறப்பாக வேயிருந்தார்;
அந்தவனந் தோறும் அடர்ந்தகனி தின்றுகொண்டு
மந்திகுதித் தாடும் வனிதமுள்ள சீரழகும்
நந்துகுயி லோசையிட நல்லமயில் கோழியன்னம்
ஓடிவிளை யாடி உலாவிநிற்குஞ் சித்திரமும்
நீடியவா விச்சிறப்பும் நேசமலர்க் காவுகளும்
மாதவர்கள் கொண்டாடி வாய்த்தநெடுஞ் சோலைவிட்டு
நீதமன்னன் வாழும் நிறைகோவில் சென்றுபுக்கார்;
துன்னுமறை யோர்வரவு துங்கமன்னன் கண்டெழுந்து
என்னுடைய மாதவந்தான் இன்றுவந்து தென்றுசொல்லிப்

---

பாட வேறுபாடு

விருத்தம் 59. 2 : 2 நவமணிச் 1691
4 : 4 நோக்கினார் 1691 நோக்கினான் 1749

நடை 1646 : 4 காடுகளும் 1749 நாடுகளும் 1691
1647 : 3 வந்துநடந் 1691
1649 : 4 வீத்திருந்தார் 1749
1652 : 4 கிள்ளையன்னம் 1691 1749
1656 : 1 நீதிமன்னன் 1574 1691
1656 : 3 நிரைகொலுவில் 1574
1657 : 2 யோர்வரவுந் 1749
1657 : 4 தானெழுந்து 1574

பாதந் தனைவணங்கிப் பண்பா சனங்கொடுத்து,
"மாதவரே! வந்த வகையுரையும்" என்று சொன்னார்;
ஆனபுகழ் சேரும் அருமறையோர் கூறலுத்தார்—
"மானமுள்ள வேந்தே! மருவலர்தங் கேசரியே!
தேசிகனார் என்னுஞ் சிறந்தபுகழ் வல்லதொரு
கோசிகனார் தாமனுப்பக் கொத்தவனே நாங்கள்வந்தோம்;
வாழும் புவியில் மகம்நடத்த வேணுமென்று
ஈழும் உனைக்கேட்டு எம்மைவரச் சொல்லிவிட்டார்"
என்றுமறை யோருரைக்க ஏற்றமன்னன் கூறலுத்தான்-
"நன்றியுள்ள மாதவரே! நாடோறு மேதழைக்கச்
செய்யதொரு யாகஞ் சிறப்பாக நீங்கள்செய்யப்
பொய்யாமல் செம்பொன் புகழ்பெறவே யான்கொடுக்க
உள்ளமுரை யீதென் றுகந்துமன்னன் கொண்டாடித்
தெள்ளுந் திரவியங்கள் சென்றளிப்போம்" என்றுரைத்தார்.
இவ்வார்த்தை கோசிகன்பால் யாம்உரைப்போம் என்றுசொல்லிச்
செவ்வையுள்ள மாதவர்கள் சீர்வேந்த னோடுரைத்துக்
கோசிகனார் தம்மிடத்தில் கூறினார் **அம்மானை!**

வாசிபெரு மாமுனிவன் வன்மையுட னேகேட்டு
எந்தவிதத் தாலும் இசைந்தபொய்ய னாக்கிவைப்போம்
எந்தவழி யாலே இடுக்கண்மிகச் செய்திடுவோம்

---

பா. வே. 1659 : 4 சனங்குடுத்து 1749
1660 : 4 என்றுசொன்னான் 1749
1661 : 4 கூறலுற்றார் 1574 1691 1749
1664 : 2, 3 தானனுப்பக் கொற்றவனே 1574
1664 : 3 கொற்றவனே 1691 கொத்தவரே 1749
1667 : 1, 2 என்றுமுனி வோருரைக்க 1749
1667 : 4 கூறலுற்றான் 1574 1691 1749
1672 : 3, 4 சென்றளிப்பேன் என்றுரைத்தான் 1749
1673 : 1 இவ்வாறு 1749
1674 : 4 னோடுரைத்தார் 1691
1675 : 3 கூறினார்காண் 1691
1677 : 2 தாலே 1574 1691 1749
1678 : 1, 2 எந்தவிதத் தாலே 1574

## கவுசிகர் வரவு

என்றுவஞ்ச கநினைவை எண்ணிஎண்ணி ஆராய்ந்து
நன்றிசிறந் தேஇலங்கும் நாட்டகத்தில் செல்லலுற்றார்;
நாட்டகத்தில் கோசிகனும் நாடிவருஞ் சீரறிந்து
காட்டகத்தில் வாழும் கலைமான் இனம்பிரிந்து
வாட்டமுற்றுச் சோர்ந்து மருகிமரு கிக்கலங்கி,
சோட்டமிட்டு வாடிக் கொடும்பயங்கொண் டோடியதே!
சீரார் வயல்நிறையுஞ் சென்னலெல்லாம் மெய்சோர்ந்து
தாரா யிலங்குந் தலைகருகி நின்றதுவே;

பாடவேறுபாடு

1680 : 3, 4 நாட்டகத்தே செல்லலுற்றான் 1691
1680 : 2 தேஇலங்கு 1749
1683 : 1 வாட்டமுத்துச் 1749
1684 : 1 கூட்டமுற்று 1691
1685 : 1 சீராய் 1691
1686 : 1, 2, 3 தாராவுஞ் சோரத் தலைமயங்கி 1691

ஒப்புமை: அடி எண். 1681 — 1698. அரிச்சந்திரனைத் தீய நோக்கத்துடன் காண, விசுவாமித்திரர் காட்டு வழியாகச் செல்வது கண்டு, தென்றல், மலர்கள், வாவி, சோலை, விலங்குகள், பறவைகள், மீன்கள் முதலியன நடுங்குதல்.

'கெடுக்க வந்தனன் என்று கிலேசியா
விடுக்க லுற்றிளந் தென்றல் இயம்பிட
மடுக்க ளும்மலர் வாவியும் சோலையும்
நடுக்கம் எய்தி அலைந்தன நாடெலாம்'. 21

'கள்ள நீதிக் கவுசிகன் எண்ணிய
துள்ள மார உணர்ந்திள மந்திகட்
டுள்ளி நீங்கின சோலைக டோறுமென்
புள்ளி ருந்தன பொய்கைக டோறுமே'. 22

'அலைகள் சாய்ந்தகல் வாவியின் மீனெலா
நிலைகள் சாய்த்தயல் நீங்கின வாளைகள்
குலைகள் சாய்த்தயல் குப்புற்று நின்றன
தலைகள் சாய்த்தன சாலியின் ஈட்டமே'

— அரிச். புரா. வஞ்சனைக் காண்டம்-23

ஊகம் மிகப்பதறி ஓடியினத் தோடெழுந்து
சோகவனந் தோறுஞ் சுகங்கொண் டரவொளிக்கும்;
செம்மிவிளைந் தெங்குஞ் செழுந்தாழை பாளைவிரித்(து)
அம்மாவென் றாடி அலைந்து மலைந்திடவே
நேசக் கனிபருகி நீரருந்தும் புள்ளினமும்
ஓசைக் கிளியும் உலரிப் பறந்திடவே
ஏரிநெடுங் காலொழுங்கில் ஏறிவருஞ் சேல்கயல்கள்,
"பாரிலிந்தக் கோசிகன்மா பாவிவந்தான்" என்றுசொல்லிப்
பாணிதனை விட்டுப் பருங்கதலி நீளிலையில்
நாணிக் குதித்து நடுநடுங்கி நின்றதுவே;
எண்ணரிய பொய்கைக் கிசைந்ததொரு செங்கமலம்
தண்ணீ ரலையத் தடுமாறி நின்றிடவே,
கண்டுகண்டு கோசிகனும் காதலுட னேநடந்து
மிண்டுங் கதலி மிகுத்தபலா மாவிலுப்பை
சிந்தூரம் நெல்லி சிறந்தபனை சோகுபுன்னை
நந்தூர் வனங்கடந்து நல்லபதி மீதுவந்து
பொன்னார் வனங்கடந்து போந்ததெரு வீதிவிட்டு
மன்னன் திருக்கோவில் வந்தனர்காண் **அம்மானை !**

---

பாட வேறுபாடு

*1687 : 4* தோடுமூன்று *1691*
*1688 : 3, 4* சுகமன்றியேயொளிக்கும் *1691*
*1692.* ஓசைக் கிளிமயிலும் ஒன்றிப் பறந்திடவே *1691*
*1693 : 4* சேல்களுமே *1691*
*1696 : 2* குதித்தே *1691*
*1698 : 4* நின்றதுவே *1691*
*1700 : 3* மிகுபலா *1574 1691 1749*
*1702 : 1* நந்தா *1691*
*1702 : 4* மீதில்வந்து *1574 1691 1749*
*1704 : 2* திருக்கொலுவில் *1574*

## கலிவிருத்தம்

அருமறை கவுசிகன் அதிய சீருடன்
பெருமைசே சரியிடம் பிறங்கும் ஒல்லையில்
திருமகள் இலங்குதோள் செய்ய வேந்தனும்
குருவென எழுந்துகை குவித்து மேத்தியே! 60

பூமுடி தாளுறப் புகழ்ந்து போத்தியே
தாமெதிர் சென்றிடத் தவங்கொள் மாமுனி
நான்மறை மொழிநிறை நாத னைப்புகழ்ந்
தேமசிங் காசனத் திடத்தில் எய்தினார். 61

## நடை

வந்தமுனி பாதம் வணங்கிமகா மன்னவனும்,
"எந்தையரே! வேதம்உரை என்குருவே! தெய்வ(த)மே!

---

பாட வேறுபாடு :

விருத்தம் 60. 3 : 2 இலகுதோள் 1749
4 : 3, 4 குவித்துப் போற்றியே 1691
4 : 4 மேற்றியே 1749

விருத்தம் 61. 1 : 4 போற்றியே 1691 1749
4 : 1, 2 தேமசிம் மாசனத் 1574

ஒப்புமை : அடி எண். 1705 — 1712 அரிச்சந்திரனை விசுவாமித்திரர் சென்று காண, அரிச்சந்திரன் அவரை வணங்கி நிற்றல், வேள்விக்கான பொன் குறித்து விசுவாமித்திரன் வினவ அரிச்சந்திரன் விடை பகர்தல்.

'மந்த ராசல மண்டபத் தெய்தலும்
அந்த மாதவற் கண்டரிச் சந்திரன்
எந்த மாதவ மோஅருள் இங்குநீ
வந்த காரணம் என்று வணங்கினான்' 27

'காவல் மன்ன சுடிமறை வேள்விக்கென்
ஏவல் மாக்கட் கிசைத்த பெரும்பொருள்
தாஎ னச்சொலக் கேட்டரிச் சந்திரன்
ஈவ லெத்துணை வேண்டுமென் றேத்தினான்'

—அரிச். புரா. வஞ்சனைக் காண்டம்-28

நின்சரணம் தஞ்சமெ''ன்று நேசமுட னேவணங்கி
மன்தொழுது நிற்க மகாமுனிவன் கூறலுத்தான்-
''பொன்தருவேன் என்றரசா! போந்தவென்ஆ ளோடுரைத்தாய்
நன்புகழாய் அந்நிதியம் நல்குவையோ?'' என்றனர்காண்
''தாறேன் நிசமாகத் தங்குநிதி மாமுனியே
வீறாக எவ்வளவு வேணு''மென்றார் **அம்மானை!**

### தெரவியம் கேட்டது

அழகுமுனி வோன்பார்த் தரசனையுங் கொண்டாடி,
''வளமையுடன் யாகம் வனிதம்நிறை வேற்றநிதி

---

பாடவேறுபாடு

நடை 1708 : 1, 2 மன்னன் தொழுதுநிற்க 1574
1708 : 4 கூறலுற்றான் 1574 1749
1710 : 3 நல்குதியோ 1749
1713 : 3, 4 தரசனுக்குஞ் செப்பலுற்றான் 1749
1714 : 4 வேத்தநிதி 1749

ஒப்புமை: அடி எண். 1713 — 1726. விசுவாமித்திரர், அரிச்சந்திரனிடம், வேண்டிய பொன்னின் அளவையும் அதனை வேள்வி தொடங்குகையில் பெற்றுக் கொள்வதாகவும் சொல்லிச் செல்லுதல்.

'மான வன்சொல மாமுனி நோக்கியே
யானை மேனின் றெறிந்த கவண்சிலை
போன தூரம் பொருள்குவிப் பாயெனின்
மோன வேள்வி முடித்திட லாமென்றார்' 29

'இறைவன் இவ்வகை ஈகுவன் யானெனா
அறைதி றந்திவண் ஆனையைத் தம்மெனக்
குறைவில் வாதுவ ரோடிக் கொணர்ந்திடப்
பிறையெ யிற்றுப் பெருங்களி றுற்றதே' 30

'ஒத்த தேயமை யும்மென தொண்பொருள்
வைத்த னன்றின் னிடத்நடை மன்னயான்
சுத்த வேள்வி தொடங்கிடு நாளெனக்
குய்த்தி நீயென் றுரைத்தவன் ஏகினான்'

—அரிச். புரா. வஞ்சனைக் காண்டம் — 31

ஆனைமேல் நின்றுகவண் கல்லெறிந்தால் எத்தூரம்
போனதுண்டோ அவ்வளவு பொன்வேணும்'' என்றுரைத்தான்;
நல்லதென்று மன்னன் நயந்துநிதி நல்கவென்று,
வல்லதொரு குஞ்சரத்தை மாவேந் தனுமழைத்து,
மிக்கபொக் கிசந்திறந்து மீறுநிதி தானெடுத்துச்
சிக்கெனவே வாருமென்று சேர்ந்தபல பேரைவிட்டான்;
அப்போ முனிவன் அரசனையுந் தான்பார்த்து,
''மெய்ப்பான யாகம் மிகநடத்தும் வேளையிலே
வருவேன்; தருகாமல் வாகுநிதி யித்தனையும்
தருவாய் அரசே! தமனியமெந் தன்பொருளாய்
வச்சிருந்து நல்கும்''என்று மாமுனிவன் தானெழுந்து,
''இச்சையுள்ள மன்னா இரும்''என்று தான்நடந்தார்;
நடந்துவந்த கோசிகனும் நல்லவனம் மீதுசென்று
விடந்தரித்த நெஞ்சகத்தில் மீறுஞ் சினம்பெருகி,

---

பா. வே. 1715 : 3, 4 கல்லெறிந்த அத்தூரம் 1574
1717 : 4 நல்கவென்றே 1574 1749
1722 : 1 மெய்ப்பாக 1574
1724 : 3, 4 தமனியமென் றன்பொருளாய் 1691
1726 : 1 இச்சையுடன் 1691 1726 : 4 தான்நடந்தான் 1574 1691 1749
1727 : 1 நடந்துவந்து 1749 1727 : 2 கோசிகனார் 1691 1749
1728 : 4 சினமாகி 1749

ஒப்புமை : அடி எண். 1727 — 1743 விசுவாமித்திரர், அரிச்சந்திரனின் தேசத்தைப் பாழ்படுத்தற் பொருட்டு, காட்டிலுள்ள பறவைகள், விலங்குகள் அனைத்தையும் வரவழைத்தல்

'அருவ னம்கடந் தாச்சிர மம்புகுந்
தொருத ருத்தட நீழல் உறைந்துபார்
மிருகம் புள்ளினம் யாவும் விரைந்திவண்
வருக என்று மனந்தனில் உன்னினான்' 32

'அலங்கல் அம்சடை மாமுனி அன்பிலான்
நலங்கு லைந்து நினைத்தவந் நாடனிற்
கலங்கி வாய்களிற் கௌவிய தீன்விட்டு
விலங்கெ லாமுன் விரைந்துவந் துற்றவே'.

— அரிச். புரா. வஞ்சனைக் காண்டம்—33

சீமையைப்பா ழாக்கித் திரவியத்தைப் போக்கடிக்க
நாமேத் தனம்பார்த்து நன்னிதியங் கேட்டிடலாம்
இல்லையென்றால் பொய்யன் எனவுரைக்க லாமெனவே
தில்லையாட் டீசன் திருவடிக்கா மாமுனிவன்
சிந்தைதனி லெண்ணிச் சிறப்பாக வும்மகிழ்ந்து
முந்துந் தவப்பலனால் மூண்ட பெருஞ்சினமாய்
நீண்டபுவி தோறும் நிறைந்தவிலங் கானதையும்
காண்டபுவி தோறுங் கனிந்தபல புட்களையும்

## மிருகம் வந்தது

ஊரும் இனந்தனையும் உண்மையுடன் வாருமென்றார்
பார்முனிய ழைக்கப் பறவைவிலங் கூர்வனகள்
காதல் புணர்ச்சிவிட்டுக் கவ்வியவாய்த் தீனிவிட்டு
நீதமுடன் தாங்கள்கொள்ளும் நித்திரைகள் தன்னைவிட்டுத்
தகுதி தகுதியுடன் தம்மினத்தோ டேதிரண்டு
மிகுதி யுடன்விலங்கும் மெய்ப்பறவை ஊர்வனவும்
வந்துநெடுங் கோசிகனார் மாமலர்த்தா ளைவணங்கி,
"எந்தையரே! மாமுனியே! ஏதுமறி யாதிருக்கும்
எங்கள்தனை வாரும் எனவே மிகவழைத்த
சங்கையென்ன?" என்றுசொல்லித் தான்கூறி நின்றிடவே-
"விலங்கின் குலத்தவரே! மிக்கபற வைக்குலமே!
நிலங்கள்தொறும் ஊர்வனவே! நேசமுடன் இப்பொழுதே
உங்கள்தமை யாமழைத்த உண்மையுள்ள காரியங்கேள்!
எங்கெங்கும் போகாமல் ஏத்தஅரிச் சந்திரனார்
வாழும் பதியில் வளமையுட னேபுகுந்து
பாழு படவே பலாபலனுங் கெட்டிடவே,
சாலி விளையாமல் தங்குபயிர் ஓங்காமல்
நாலு திசைவனமும் நற்காவும் ஏரிகளும்

---

பாடவேறுபாடு

1734 : 3, 4 மூண்டுமிக வேயுளத்தில் 1749
1736 : 1 காண்டபுனல் 1691
1750 : 3 ஏற்றஅரிச் 1574 1691 ஏந்தலரிச் 1749
1752 : 3 பலபலனுங் 1574

1755 அழித்துக் கெடுத்து அறக்கொடுமை தான்படுத்தி
நெளித்துத் திரிந்தலம்பி நேர்மனுவைக் கொல்லு''மென்று
மாமுனிவன் சொன்னவுடன் வல்லவிலங் கூர்பறவை
நேமமுறு மன்னன் நிறைந்திருக்கும் நாட்டகத்தில்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

மானினம் வேங்கை ஓரி
மதகரி முளாக்கள் சிங்கம்
ஏனம்நாய் கோகு கோட்டான்
இலங்கருங் கரடி மேதி

---

பாட வேறுபாடு

1756 : 2 திரிந்துலவி 1691

விருத்தம் 62. 1 : 5 மரைகள் 1691
2 : 4 இலங்குரு 1691

ஒப்புமை : விருத்தம். 62, 63, 64 & அடி எண். 1759 — 1780. விசுவாமித்திரர் அழைத்ததும், வந்து சேர்ந்த பறவைகளும், விலங்குகளும்.

"வானி மிர்ந்து வளைந்துடல் கூனிநீள்
கானி மிர்ந்துவெங் கண்கள் சிவந்துவிண்
மேனி மிர்ந்துவந் துற்றடர் வெங்கடல்
போனி மிர்ந்து வரும்புலி கோடியே. 35

குளிறு மாமுகில் கூடிய வாமெனப்
பிளிறு கன்றும் பிடிகளும் பின்வர
வெளிறு தந்தக் கருநிற வெண்புகர்க்
களிறு கோடி கடிதுவந் துற்றவே. 36

கண்ணெ லாம்கனன் மண்டக் கடுவிட
மண்ணெ லாம்குதி கொள்ள மணிச்சுடர்
விண்ணெ லாம்வெயில் வீசிட வாய்பிளந்
தெண்ணி லாவர வெங்கும்வந் தீண்டின. 37

மான முங்குபுல் வாய்மரை வாங்கலை
ஏன நானம் எலிபெருச் சாளிஎய்
கான மேதி கரடிசெந் நாய்நரி
வான ரம்கட மாஇவை வந்தவே. 38

தோகை பூவை சுகங்குக்கில் சக்கர
வாக நாரை மடஅனம் கோகிலம்
காகம் அன்றில் சிவல்கவு தாரிபூழ்
வேக மோடு பறந்து விரைந்தவே."

— அரிச். புரா. வஞ்சனைக் காண்டம் - 39

கானமர் கடாநீள் மந்தி
கடும்எலி விலாளன் சம்பு
தானெடும் விலங்குஞ் சேர்ந்து
தடநகர் புகுந்த தன்றே. 62

கழுகொடு குரண்டங் காகங்
கரியவாய் குருவி நாரை
ஒழுகுசேர் பிறாக்கள் செம்போத்
துகந்திடும் பருந்து புள்ளும்
தளுதவாய் சிட்டு பட்சி
தங்கிய மயிலுங் கோரு
முழுதுமப் பறவை கூடி
முழங்கிவந் தெழுந்த தன்றே! 63

உண்ணியோ டட்டை செள்ளும்
உரகஞ்செந் தினங்கள் ஓந்தி
நண்ணிய அரணை சில்லான்
நற்பசுப் பிள்ளைப் பூச்சி
எண்ணிய தேளுங் காட்டில்
இசைந்திடுங் காலி பின்னும்
மண்ணில்லாப் புழுக்க ளோடு
மன்னவன் பதியில் சென்றே! 64

## நடை

மானினங்கள் வேங்கையுடன் வாதுசொல்லும் ஓரியுடன்
ஆனை யுடனே அழகுமுளாச் சிங்கமுடன்
பன்றி யுடனே படர்காட்டு நாய்களுடன்
கன்றிக் குளருங் கழுதை யினங்களுடன்

பாடவேறுபாடு

63. 1 : 3 காக்கை 1691
4 : 1 முழுதும்பல் 1691 1749

64. 4 : 1 மண்ணியே 1691

நடை 1759 : 4 ஓரிகளும் 1691

காட்டெருமை யோடுங் கதித்துக் கடாவுடனே
நீட்டியவால் மந்தியுடன் நீண்டமுகக் கோந்தியுடன்
பாரைக் கிழிக்கும் பரிய எலியுடனே
சீரையறி யாத சினமுடைய பூனையுடன்
மற்றும் பலபலதோர் மண்டுவிலங் கானதுவும்
பற்றுங் கழுகுடனே பாங்காங் குரண்டமுடன்
காகங் கருடன் கரிக்குருவி குக்கிலுடன்
ஏகும் பருந்தும் இசைபிறா நாரையுடன்
சிட்டுக் குருவிகளும் சேர்ந்தபல பட்சியுடன்
ஒட்டுப் பறவையுடன் ஓங்குமயில் கோழியுடன்
உண்ணியுட னேசருகாய் ஒட்டுமட்டைச் செள்ளுடனே
கண்ணெறியும் நாகமுடன் கண்டபல வர்க்கமுடன்
ஓந்தி அரணையுடன் உத்தபிள்ளைப் பூச்சியுடன்
சாந்தமில்லாச் சில்லான் சருக்கியதேள் காலியுடன்
அளுங்கோ டுடும்புடனே ஆனபல வர்க்கமுடன்
மளுங்குழுது காமையுடன் மட்டில்லா தூர்வனவும்
ஐந்தருவை யயோத்தி யரசன் திருநாட்டில்
வந்துதிரண் டேபறந்து மண்டியதே **அம்மானை !**

---

பாடவேறுபாடு

1763 : 4 கிடாவுடனே 1574
1764 : 4 கோந்திகளும் 1691
766 : 4 பூனைகளும் 1691 பூனைகளும் 1749
1770 : 2 பறாந்தும் 1691 1749
1771 : 2 குருவியுடன் 1691 1749
1771 : 4 பச்சியுடன் 1749
1772 : 1 ஓட்டும் 1574 1691
1775 : 3 உற்றபிள்ளைப் 1691
1775 : 4 பூச்சிகளும் 1691
1777 : 2 டுடும்புகளும் 1691
1779 : 1, 2 ஐந்தருவா மயோத்தி 1691 ஐந்தருவயோத்தி 1574

வாரணங்கள் உள்ளதெல்லாம் வாய்த்தநெடுஞ் சோலைமரம்
வேரறவே மேபிடுங்கி மிண்டியடித் தேயொடிக்கும்;
நீருலவும் ஏரி நிறைந்தபெருங் குன்றுகரை
சீரழிய வேஉடைத்துச் சேறாக்கி விட்டுவிடும்.
சூழும் பெரிய சுகமுலவும் பூங்காவை
நீளும் மலரை நெடுங்குரங்கு பிச்செறியும்;
வாழைக் கிழங்குகளை வள்ளிகரு ணைக்கிழங்கைக்
கோலத் திருக்கும் கொடுமஞ்ச ளின்கிழங்கைச்
சேமக் கிழங்கினையும் தின்றுகிண்டி யேயுழுது
நாமமறப் பன்றியது நாலுதிக்கு மேதிரியும்;
பூந்தினையோ டுங்கதிரைப் பூட்டையுட னேமுழுதும்
ஆய்ந்துகொய்து தின்றும் அடர்ந்துலவு மானினங்கள்;

---

பா. வே. 1781 : 3 மண்டுநெடுஞ் 1691
1781 : 4 சோலைவனம் 1574
1782 : 4 தேயொடித்து 1749
1785 : 4 பூங்காவில் 1691
1787 : 2 கிழங்குடனே 1691
1787 : 3, 4 வள்ளிக் கிழங்குகளை 1691
1789 : 2 கிழங்குகளைத் 1574
1792 : 1 ஆய்ந்துகொண்டு 1691
1792 : 2 தின்று 1749

ஒப்புமை: அடி எண். 1781 — 1784. யானைகள், சோலை மரங்களை அழித்தல்; நீர் நிறைந்த ஏரியினைப் பாழ்படுத்துதல்.

"..................... சோலைகள் பாழ்படப்
படர்ந்து யர்ந்த பழுமரம் காய்மரம்
இடந்தி ரித்தன யானைகள் எங்குமே" 46
"நீரை மாய்த்தன வாரணம்" 56

அடி எண். 1787 — 1790. பன்றிகள், கிழங்குகளை அகழ்ந்து அழித்தல்.
'கிழங்கு மாய்த்தன கேழற் றிரள்களே' 47

அடி எண். 1791 — 1792. மான்கள், தினைப்புனத்தைப் பாழ்படச் செய்தல்.
"காட்டு வாழ்கலை மான்கட மாமரை
நாட்டு வாழ்புனம் சேர நலிந்திட"
—அரிச். புரா. வஞ்சனைக் காண்டம்-48

முளைக்கும் பயிரையெல்லாம் மூண்டவேர் அத்துவிழக்
கிளைக்கும் புழுவினங்கள் கிண்டியே மண்டிவிடும்;
தாவும் விரல்கள்தனைத் துய்ய குருவிகொத்தி
நீவி யெடுத்து நிதானமுடன் தின்றழிக்கும்;
தப்பி விளைந்தபெருஞ் சாலிஇறுங் கானதெல்லாம்
கப்பயறக் கோகுடனே காட்டெருமை தின்றழிக்கும்;
இப்பயிரைக் கார்க்க இரவில்வரு வோரையெல்லாம்
செப்பமுடனேபாம்புஞ் செள்ளுமட்டை தேளுகளும்
தானுங் கடித்துவிடும் தப்பியொளிந் தேயிருந்து,
மானினத்தைப் பன்றிகளை வன்கொலைகள் செய்யவென்ற
ஞானமற நிற்கும் நரரைஅரி யானைபுலி
ஆனபடி கொன்றும் அறக்கேடு செய்துவிடும்;
உழும்மனுவைப் பன்றிவந்து உற்றிழுத்துக் கொன்றுவிடும்;
வளரும் பயிரடிக்கும் மாந்தர்தமைக் காட்டெருமை
கன்றித் துழக்கிக் கடிந்துவெட்டிக் கொன்றுவிடும்;
நன்றிநடு வில்லாத நாட்டகததில் கற்புடைய
மானார்கள் வாழும் மகிமைதனை யொத்தபடி
தானே உழவர்குலந் தட்டழிந்து கெட்டுநொந்து

---

பாட வேறுபாடு

*1798 : 2* தொக்குடனே *1749*
*1800 : 4* தேளுடனே *1574 1691*
*1801 : 3, 4* தப்பியிருந் தேயொளிந்து *1574*
*1802 : 4* செய்யவென்று *1691 1749*
*1804 : 3* அறக்கொடுமை *1691*
*1808 : 3* நாட்டகத்துக் *1749*

ஒப்புமை : அடி எண். *1799 — 1804.* காவல் காப்பவரையும் அழிக்க வருபவரையும் விலங்குகள் கொன்றழித்தல்.

"இரவு காவல் இருப்பவர் யாரையும்
அரவும் தேளும் அரணையும் கொன்றவால்
கரவில் நின்று புலியும் கரடியும்
வரவ ரக்கொன்று மாக்களை மாய்த்தவே".

— அரிச். புரா. வஞ்சனைக் காண்டம்-*49*

பண்டுவிரை கட்டும் பலகுலுக்கைத் தானியமும்
கண்டுவிரை யாதிருந்த கட்டுவிரைக் கோட்டைகளும்
உண்டழிந்து மெத்த உடமைபணங் காசுகளும்
தின்றழிந்து வாடித் தியக்கமுற்றார் **அம்மானை!**

இந்தப் பெருங்கேடும் இன்றிமிசை யுள்ளதுவும்
தந்த நகர்மனுக்கள் தானிறந்து போனதுவும்
நீதியரிச் சந்திரர்க்கு நேசமறி யாதிருக்க
ஓதுகுடி யானவரும் ஒன்றுமுரை யாதிருக்க
மாமுனிவன் இந்த மதிமயக்கஞ் செய்திடவே
தாமறியா தேதியங்கித் தாமே தளர்ச்சிகொண்டு
ஆண்டாறு மட்டும் அலைவுத்தார் **அம்மானை!**

## குடியானவர் முறையிட்டது

ஆண்டாறு மட்டும் அலைந்தகுடி யானவர்கள்
மன்னவனார் தம்மிடத்தில் வாய்த்தபயிர் போனதுவும்
உண்ணும் விரைகள் ஒழிந்துகெட்டுப் போனதுவும்
வேலிகட்டிக் காத்தமனு வீந்துவிட்ட காரியமும்
ஆலித்து மன்னற் கறிக்கையிட வேணுமென்று
எல்லாருங் கூடி எழுகடல்போ லேதிரண்டு
சல்லாப மன்னன் தடம்பெரிய கோவில்நண்ணி,
"அய்யாகோ! எங்கள் அரசேகோ! யாங்களொந்தோம்!
மெய்யாகோ!" கோவெனவே வீரிட்டார் **அம்மானை!**

வீரிட் டிரைந்து வெடித்தமொழி கேட்டவுடன்
பேரிட் டிலங்கும் பெரும்புகழ்சேர் மன்னர்பிரான்
என்நாட்டில் இந்தமனுக் கேதுகுறை வந்ததென்று,
பொன்னாட ரும்புகழும் போர்வேந்தன் தானெழுந்து

---

பாட வேறுபாடு :

*1821 ; 3* அலைவுற்றார் *1574 1691*
*1828 : 4* கோயில்நண்ணி *1691*
*1834 : 3, 4* போர்வேந் தனுமெழுந்து *1574*

ஏலமுடன் மந்திரிமார் ஏந்தமன்னர் தாம்சூழக்
கோலமணி மேடைக் கொலுமீதில் வந்திருந்து,
''வாய்த்தகுடி யானவரே வாருமென்று தானழைத்து
ஏத்தமுட னுங்கட் கிடரேது சொல்லுமெ''ன்றார்.
மன்னன் தனைவணங்கி வண்மைகுடி யானவர்கள்
''இந்நிலத்தில் வாழும் எவர்தமக்கும் நாயகமே!
எங்கள்தனை யுங்காத்து லெட்சிக்கும் மாவேந்தே!
பங்கமற ஓங்கும் பயிரும் பலாபலனும்
காய்க்குங் கனியுங் கதலிபல தோப்புகளும்
ஊக்கமுடன் நஞ்சைபிஞ்சை உள்ளபயிர் அத்தனையும்
நாற்கால் விலங்குபட்சி நாகமுதல் ஊர்வனவும்
ஏற்கஅழித் திட்டதுவும் ஏரிவயல் போனதுவும்
வாரணங்கள் பன்றி வரிப்புலிசிங் கங்கரடி
காரணமாய் மானிடரைக் கண்டுகொன்று போட்டதுவும்
இவ்வாறி னாலே இளைத்துநொந்தோம் ஆறாண்டு
மெய்வாறி தெ''ன்றுசொல்லி வேந்தனுட னேஉரைத்தார்.

## கலிவிருத்தம்

வாட்டமுத் திடர்முகம் வடிவ மாகியே
நாட்டவர் உரைத்திடும் நல்ல வாசகம்
கேட்டரிச் சந்திரன் கிலேச வாரியில்
போட்டகல் எனமனம் பொங்கி நொங்கியே! 65

---

பாடவேறுபாடு

1836 : 3 கொலுவினிலே 1691
1837 : 2 யானவரை 1574
1837 : 3, 4 வாருமென வேயழைத்து 1749
1840 : 3 எவர்தனக்கும் 1574 1840 : 4 தாயகமாய் 1749
1841 : 3 ரட்சிக்கும் 1691 1841 : 4 நாயகமே 1574
1843 : 3 கதலிபிலாத் 1691
1844 : 1 ஊக்கமுறும் 1691 1844 : 2 பிஞ்சைநஞ்சை 1691 1749

விருத்தம் 65. 1 : 1, 2 வாட்டமுற் றிடர்முகம் 1574
1. வாட்டமுற் றிடமுகம் வடிவு மாறியே 1691

திருமகள் கொழுநனும் திசைமு கத்தனும்
மருமலர்ப் பாதம்மா முடிஅ றிந்திடா
துருவெழுந் திடுமரற் கொத்த சித்திரைப்
பருவமே நடந்திடாப் படிந டந்தமோ. 66

## நடை

அந்த மொழிகேட்(டு) அரிச்சந் திரனுரைப்பான்—
"நொந்தகுடி யானவரே! நுங்களிடம் நான்பிடித்த
ஆறாண்டு கொள்கடமை அத்தனையும் ஈந்திடவோ?
வீறாங் கடமையினி வேண்டாம் எனவிடவோ?
ஏதுமக்கு வேணும்"? எனஅரசன் செப்பலுத்தான்.
"மாதுலவு மன்னவனே! வையகத்தில் எங்களுக்கு
வேண்டியதும் இந்த மிருகந் தனைவதைத்து
நீண்ட பயிர்விளைய நீகருணை செய்திருந்தால்
மன்னவனே யாங்களெல்லாம் வையகத்தி லேபிழைப்போம்;
இந்நிலத்தில் வாழும் இடர்மிருகந் தன்னையெல்லாம்
வேட்டையுட னாடி மிகவொடுக்க வேணுமல்லால்
தேட்டமுடன் எங்களுக்குச் செய்வதென்ன!" என்றுரைத்தார்.
ஆசைமிகும் மன்னன் அரியகுடி யானவர்க்கு
நேசமுடன் நல்ல நிரைவெகுமா னங்களிட்டு
ஆறாண்டிற் பாதி அடர்மூன்றாண் டிற்கடமை
மாறாம லேநீக்கி வைப்பாக வேகொடுத்து,

---

பாட வேறுபாடு

விருத்தம் 66. 4 : 1 பருவமும் 1574
4 : 1, 2 பருவமோ டெழுந்திராப் 1691

நடை 1852 : 3 உங்களிடம் 1574

*1853. 1691 ஆம் சுவடியில் இந்த அடிவரைதான் ஏடுகள் உள்ளன.

1855 : 4 செப்பலுற்றான் 1574
1858 : 2 கதிர்விளைய 1574
1866 : 3 வாய்ப்பாக 1574

“பொங்கும் மனக்கவலை போட்டுவிடுங் காணுமினி
உங்கள் மனந்தனக்கும் ஒத்தபடி செய்திடுவோம்;
போமெ”ன்று தானனுப்பிப் பூபாலன் அந்நேரம்
தாமமணி மார்பிலங்குஞ் சத்தியகீர்த் திக்குரைப்பான்—
“வல்ல மிருகமதை வஞ்சனைக ளாய்வதைத்து
நல்லகுடி தான்தழைக்க நாடியசீர் ஏதெனவே
மந்திரியே சொல்லுமெ”ன்றார்; மன்னனுடன் மந்திரியும்—
“இந்த விதத்துக் கிசைவான காரியங்கள்
மன்னா நமதுகுடி வாழ்வோர்எல் லாந்தழைக்க
இந்நாட்டில் உள்ள இசைவே டரையழைத்துக்
காட்டகத்தில் சென்று கரியமிரு கங்கள்தனை
வேட்டை பறந்தாட வேணு”மென்று தானுரைத்தான்.

---

பாடவேறுபாடு

1868 : 3 உத்தபடி 1574
1870 : 4 திக்குரைப்பார் 1574
1871 : 1, 2 வல்லமிரு கங்கள்தனை 1574
1877 : 3 கடியமிரு 1574

ஒப்புமை: அடி எண். 1869 — 1878. காடு, கழனிகள் விலங்கு, பறவைகளால் பாழ்பட்டதும் குடியானவர்கள் வந்து அரிச்சந்திரனிடம் முறையிடுதல்; அரிச்சந்திரன் அமைச்சருடன் கலந்தாலோசித்தல்; வேடர்தம் துணையுடன் வேட்டையாடி, விலங்கு, பறவைகளை அழிக்க வேண்டும் என அமைச்சர் உரைத்தல்.

“செல்லும் என்னப் பணிந்தவர் சேறலும்
வெல்லும் வெம்படை வேந்தன் அமைச்சர்காள்
கொல்லும் இந்தக் கொடுவினைக் கென்செய்கோ
சொல்லும் என்னத் தொழுதவர் சொல்லுவார். 2

கூட்ட வேடரும் கோலும்வை வேலுநாய்
ஈட்ட மும்கொடு கானகத் தெய்திநீ
வேட்டை ஆடி விலங்கினம் மாய்த்துநந்
நாட்டை ஓம்ப வலனெனக் கூறினார்.”

—அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 3

இவ்வா றமைச்சன் இயம்பஅரிச் சந்திரனும்
அவ்வேட ருக்காள் அனுப்புமென்றார் **அம்மானை!**

மொழிக்கு முதலோடி மூண்டுவந்து சொல்லியகங்
களிக்கும் பெரிய கடினநடை கத்திலங்கும்
வீறுபுகழ் தூதர்களும் மிக்கமலைப் பக்கல்சென்று
கூறுங் குறவர் குலவேட ரானவர்க்கும்
மன்னன்அரு ளிப்பாடு வாருங்காண் என்றுரைத்தார்.
அந்நேரந் தன்னில் அருங்குறவர் வேடரெல்லாம்
திக்கெங்கும் மாமலையில் சேர்ந்திருக்கும் பேர்களுடன்
ஒக்கத் திரண்டார் ஒருகோடி வெள்ளமெனத்
தங்கள் விருதுடனே தார்வேந்தர் பால்வருகப்
பொங்குங் குறவர்களும் போர்வேட ருஞ்சிறந்து

## எழுசீர் ஆசிரிய விருத்தம்

### வேடர் வரவு

கச்சை கட்டிஇ றுக்கி வாரொடு
　　கார்நி றங்கள்இ லங்கவே
குச்சு நீடுரு மாலை யோடுகு
　　லாவு கொக்கிற கொட்டியே

---

ஒப்புமை! அடி எண். 1879 — 1890. அமைச்சர் சொற்படி அரிச்சந்திரன், வேடர்களை அழைத்துவரச் செய்தல்.

"என்ற மைச்சர் இயம்பலும் மன்னவன்
நன்று நன்றென நண்ணி மனக்கொளாக்
குன்ற வாணரைக் கூட்டிக் கொணர்கென
நின்ற தூதர் தொழுதயல் நீங்கினார்.

ஓடி னார்கள் உயர்வரைக் கானக
நாடி னார்கணம் நாயக னுங்களைத்
தேடி னானென்று செப்பலும் சிற்சிலர்
கூடி னார்துடி கொட்டினார் எங்குமே."

—அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 5

சச்சை விற்குதை யம்பு கட்டுத
டித்த தோளுமி லங்கவே
செச்சை மீறுசி னங்கொள் வேடர்சி
றந்து வந்தத னந்தமே. 67

திண்டெ னும்புய மீதில் வெள்ளைசி
வப்பி லங்கிய சித்திரக்
குன்று மாமணி மாலை மின்னல்கு
லாவு மீசைமு றுக்குடன்
வண்டு ருக்கிய வீர துட்டர்வ
லாடர் மிஞ்சிய வல்லமை
கண்டெ னக்கதி கொண்டு வந்தகு
ணத்த வேடர னந்தமே! 68

நீடு சக்கரம் வேல்ம ழுப்படை
நேரி சங்கதை சூல்கவண்
கோடு கைத்தடி சுத்தி வாகுகு
மட்டி வீசுவ வாளரி
தாடு தொட்டெரி சூளு ருண்டைச
ருக்கு பாணம்உ ருக்குடன்
ஓடி வந்துந டந்து வந்தமு
கந்த வேடர னந்தமே. 69

வலப்ப கத்திசை கொண்டை கட்டிய
வாகு சித்திரம் மின்னவே,
நீலக்க ளிற்றுட சீர்ம ருப்புநி
றைந்த மாலைது லங்கவே,
கலக்க மற்றிடு சிந்தை யோடுசு
ருத்த மேனிவெ ளுத்திடும்
துலக்கெ யிற்றுட கான வர்படை
சுத்தி வந்தத னந்தமே. 70

---

பாடவேறுபாடு

விருத்தம் 68. 3 : 4 தத்துவ 1574
70. 4 : 5 சுற்றி 1749

### நடை

மிக்கதொரு மன்னனிடம் மேவியே செல்லவென்று
தக்க முறையுடனே தங்கவில்அம் போடு,கவண்,
கோண வளரியுடன் கோலுங்கரிக் கம்புடனே
பூணி முதுகிறுக்கிப் போந்தநெடுங் கச்சைகட்டி
ஆயுதத்தின் சோடினைகள் அன்பாக வேசேர்த்துத்
தூயசங்கு தன்னைத் துளைத்தவளை கையிலிட்டு
வெங்கரியின் கோட்டில் மிகவே கடைந்தெடுத்துச்
சிங்கார மாகச் சிறந்தவடம் மார்பிலிட்டுப்
பற்கனக மாகப் பதித்தகுன்னி முத்துமணி
வற்க முடன்கழுத்தில் மாராடி தான்அணிந்து,
சீருலவும் வில்லைச் செருப்பிருகா லுக்கணிந்து,
நேருலவும் கொண்டை நெடுகவிட்டுக் கட்டிமிகச்
சொல்லற் கரிய துருவேட ருங்குறவர்
எல்லையிலாக் கூட்டம் எழுந்தவர்கள் தம்முடனே

### ஞமலி வரவு

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

வால்சு ருண்டும ருங்குல் வற்றிவ
லுத்த சிங்கள யிற்றுடன்
கோலம் மின்னவி ரைந்து சங்கிலி
கோல்உ லாவுக முத்துடன்

---

பாடவேறுபாடு

*1893 : 3, 4* கோலுகருங் கொம்புடனே *1749*
*1893 : 4* கொம்புடனே *1574*
*1899 : 3* பதிந்தகுன்னி *1574*
*1903 : 1* சொல்லுக் *1574*

ஒப்புமை : விருத்தம் 71 : 1, 2. வேட்டை நாய்களின் தோற்றம்.

'வால்சு ருண்டுநுனி வாய்வ ளர்ந்துதடி
மார்ப கன்றிடை சிறுத்துவெந்
மேல்உ யர்ந்தணி சிரம்ப ருத்துநெடு
வீர வாளெயி றிலங்கிட'

— அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 14

சால தொங்கல்ந டைப்ப ரிச்சைச
ருக்கி விம்மிஉ ருக்குடன்
ஞாலம் எங்கும்அ திர்ந்தி டப்பெரு
நாய்கள் வந்தத னந்தமே! 71

வெள்ளை போருடல் நீல மேனிமி
குத்த புல்லைவ ரிப்புலி
கொள்ளும் மேனிநி றத்தி லுங்கன
கோடி கோடிநி றத்துடன்
துள்ளு நாவுது டித்து மூளைதொ
னிப்பி ரங்கள்வெ டிக்கவே
மெள்ள வோடிந டந்து வந்தவி
தச்சு ணங்கும்அ னேகமே! 72

## நடை

வால்சுருண்டு வத்தி மருங்கிலங்க வேநடந்து
கோலமுடன் ஓடிவரும் குக்கல் சதகோடி;
வெண்டையங்கள் கட்டி விருதுசக லாத்தணிந்து
விண்டதிர ஓடிவரும் வெண்சுணங்க னும்கோடி;
மீறி வளர்ந்து மிகுத்தசினம் தான்பெருகித்
தூரிவரும் செய்ய சுணங்கன் ஒருகோடி;
தாவிக் கடினமுடன் சங்கிலியைக் கைப்பிடுங்கி
ஆவிச் சினந்துவரும் ஆனகரு நாய்கோடி;
புள்ளி நிறமும் புகர்நிறமுஞ் சேர்ந்திலங்கும்
துள்ளிவரும் வீரச் சுணங்கன் பலகோடி;
இலங்கும் விழியுடனே ஏகிஎழில் தன்னுடனே
நலகிரி தானிருக்கும் நாய்கள் பலகோடி;

---

பாட வேறுபாடு

விருத்தம் 71. 4 : 4 டப்பொரு 1749
72. 1 : 2 நோருடல் 1749

நடை 1905 : 2 வந்து 1749
1912 : 2 சிறந்துவரும் 1749
1915 : 3, 4 ஏகிஎழி லாமுடனே 1749
1916 : 1 நலங்கிரித் 1574

காதில் சிலமுருதம் காலிலணி தண்டையுடன்
மோதிக் குலைத்துவரும் மோட்டுநாய் எண்கோடி;
காமப் புணர்ச்சிதனில் காதல்கொண்டு தாவிநின்று
நேமத் துடனெ,வரும் நெட்டைநாய் எண்கோடி;
பெரியகுரல் ஊளையிட்டுப் பெண்நாய்வா லைச்சருவி
உரிமையுடன் ஓடிவரும் உற்றசுணங் கெண்கோடி;
கட்டிவரும் பாசங் கழுத்திறுக அஞ்சாமல்
ஓட்டிவருஞ் செய்ய உறுஞமலி எண்கோடி;
சோம்பாமல் வாடைதட்டிச் சுத்திமிக வேநடக்கும்
சாம்பல் நிறமுடைய தக்கசுணங் கெண்கோடி;
சோடங்கிக் காதிலங்கத் தொங்குதொங்கென் றோடிவரும்
பாடகங்கள் உள்ள பருஞமலி எண்கோடி;
குந்திவிட்டை யிட்டுக் குலைத்துச் சினமுடனே
பந்திபந்தி யாகவரும் பண்சுணங்கள் எண்கோடி;
நாக்கிளைக்கக் கண்ணிலங்க நாலுகா லும்நடக்கத்
தூக்கமுடன் ஓடிவருந் துய்யசுணங் கெண்கோடி:
இந்தப் படிஞமலி எண்ணரிய வர்க்கமுடன்
முந்திச் சகடம் முதுகிடறச் சேர்த்திழுத்து,
வந்த பலசகடம் வண்மையுட னேநிறைய
மந்தி வலையும் வனிதமுள்ள சீர்வலையும்,
பன்றி வலையும் பருமான் முயல்வலையும்
வென்றிப் பலமிருகம் மீட்டும் கனவலையும்,
காறானை சேர்க்குங் கடிய கொடிக்கயறும்
வீரமுள்ள வேங்கைதனை மீட்டும் கொடிகளுடன்
நாரைகொக்குக் கண்ணியுடன் நாட்டுபல எத்தனமும்
சீர்பிறாக் கண்ணியுடன் சிங்காரக் கண்ணிகளும்

---

பாட வேறுபாடு

1921 : 2 ஊளையிடும் 1749
1925 : 3 சுற்றிமிக 1749
1935 : 1 வந்து 1749
1936 : 3 வனிதமுறுஞ் 1749
1937 : 3 படுமான் 1574
1938 : 3 மீட்டு 1574
1941 : 2 கண்ணிகளும் 1749

பறையினம் ஓட்டும் பசையான பாலுகளும்
குறவர்களும் வேடர்களும் கொண்டுகொண்டு தானேகி
வாயு வெனநடந்து வல்வேடர் சத்தமிட்டுத்
தூயவரிச் சந்திரனார் தோன்றிவளர் நாடுபுக்கார்;
வேடர்வந்தார் என்றுசொல்லி வேந்தனுடன் கூறிடவே
நாடறிய மன்னன் நயந்தகொலு மீதில்வந்தார்;
வந்தமன்னன் தாளிணையை வல்வேட ருங்குறவர்
சிந்தையுட னேவணங்கித் தெண்டனிட்டு நிற்கலுத்தார்;
அந்நேரம் மன்னன் அவர்கள்தமை யும்பார்த்துப்
பொன்னான ஆபரணப் பொட்டிதனை யேதிறந்து
வேடர் குறவர்தனில் மிக்கமுப் பானவரைத்
தேடரிய மன்னன் சிறப்பாய் அருகழைத்துக்
கைவிருது கால்விருது காணரிய பச்சடமும்
மெய்விருது தான்சிறக்க வேந்தன்மிக வேகொடுத்துக்
"கானவரே! வல்ல கணைவேட ரே!உமை,யாம்
ஆனபுகழ் வேட்டைக் கழைத்தோஞ் சிறப்பாக;
உங்கள் திறமறிவோம்; உற்றவலு யாம்அறிவோம்;
சங்கையுடன் இந்தச் சமயந் துணிந்திடுங்காண்;
உம்முடனே நாமும் உரிமையுட னேவருவோம்
செம்மையுடன்" என்றுசொல்லித் தீரர் தமையனுப்பிச்

---

பாட வேறுபாடு

1947 : 3 வேந்தனிடம் 1749
1947 : 4 கூறலுற்றார் 1574
1950 : 1, 2 சிந்தை யுடன்வணங்கித் 1749
1950 : 4 நிற்கலுற்றார் 1574 1749
1951 : 3, 4 அவர்கள் தனைப்பார்த்து 1749
1952 : 3, 4 பொட்டி தனைத்திறந்து 1749
1955 : 4 பச்சிடமும் 1749
1957 : 3 கனவேட 1574

ஒப்புமை : அடி எண். 1961, 1962 அரிச்சந்திரன் வேடர்களை நோக்கி, "உங்களுடன் உங்களுக்கு உதவியாக நானும் வருவேன்" என்று கூறுதல்.

'உங்க ளுக்குதவி யாக யாம்வருத
லுண்டெ னப்பல உணர்த்தினான்'

— அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம்—17

செந்திருமின் வாழுந் திருமா ளிகைபுகுந்து
பைந்தொடியும் பாலகனும் பண்பாக வேயெழுந்து

### வேட்டைக்கு ஏகுதல்

வந்துசிறந் தேயமைச்சர் மன்னருடன் சூழ்ந்துவரச்
சுந்தரியாள் தான்உதவுஞ் சொர்ணரத மீதேறிக்
கோகாரும் மாலைதிகழ் கோலஅரிச் சந்திரனார்
மாகாளி தந்தருளும் வாய்த்தகணை தானெடுத்து
மோகரதி வேள்எனவும் மூண்டசிங்கா ரத்துடனே
வாகாக மின்னும் மணிவயிரக் கச்சைகட்டி
மாமுனிவன் சொல்லாலே வந்தமிரு கங்களுக்கு
ஏமனென மன்னன் இசைந்துநடந் தேகலுத்தான்;
மத்தும் பெரியமகா மண்டலிகர் சூழ்ந்துவரச்
சுத்தும் பலகோடி துங்கமத யானையுடன்,
சேனைத் தளம்அனந்தம் சென்று துடர்ந்துவர,
ஆன கவனத்(து) அரும்பரிகள் கொஞ்சிவர,
வீர முரசதிர, மெய்விருதெக் காளமிடப்
பூரிகைசின் னம்முழங்கப் போத்தரிய தாரையிட

---

பாடவேறுபாடு

*1963 : 4* 'ளிகைபுகுந்தான்' என்று இருப்பதே சரியாகும்.
*1972 : 4* தேகலுற்றான் *1574 1749*
*1973 : 1* மற்றும் *1749*
*1974 : 1* சுற்றும் *1749*

ஒப்புமை : அடி எண். *1967, 1968.* அரிச்சந்திரன், காளி வழங்கிய வில், கணை ஆகிய வற்றை வேட்டைக்குச் செல்லுதற்பொருட்டு எடுத்துக் கொள்ளுதல்

'.............. வயிரவிதரும்
பெரிய பொற்சிலை எடுத்து வாளிபல
பெய்த தூணிமுது கெய்தவே'.

—அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் – 19

வெத்திக் குடைநிழத்த வெண்சாம ரையிரட்டச்
சத்தகடல் போலே தளங்கள் நெருங்கிவர
வேடர்படை முன்னடக்க மிக்கமன்னன் பின்னடக்கத்
தேடரிய கானகத்தில் சென்றுபுக்கார் அம்மானை!

சென்றுபுகும் வேடர் சினக்குறவர் எல்லோரும்
குன்றும் நெடுவனமும் கோலிவெகு தூரமெல்லாம்
கங்கணங்கள் கட்டிக் கடியதிசைக் குந்திசைக்கும்
அங்கணங்க ளாக அடர்ந்துவலை கட்டிவைத்தார்;
வீரமுள்ள கானவர்கள் மிக்ககண்ணி ஒட்டுகளைச்
சாரமுடன் பட்சிவரும் சார்பிலெங்கு மேநிரைத்தார்;
சுற்றும் படைநெருங்கித் தோன்றிவளைத் தேயிறுக்க
மற்றும் புனவேடர் வந்துமிரு கங்கள்தனை
ஆகாகா வென்று அலறிவெகு சத்தமிட்டு
வாகாக வேகலைத்து வாறவழி கட்டிநின்றார்:
ஓசை யிடக்கலங்கி உள்வெருவி மானினமும்
வீசுமுளாப் பன்றி மிகுத்தபுலி யானைசிங்கம்
பச்சிகளும் ஊர்வனவும் பந்திபந்தி யாகவந்து
கொச்சையுட னேதிரண்டு கோலிப் பரந்திடவே,
கோலிப் பரந்த கொடுமிருகந் தன்மேலே
ஆலித்து வேடர் அடர்ந்து துடர்ந்துசென்று,
கையிற் பிடித்த கடுஞ்சுணங்கைக் கைநெகிழ்த்துச்
சைகைசொல்லி, ஏவிவிட்டுத் தண்டுவில்அம் போடுகவண்

---

பாட வேறுபாடு :

1979 : 2 குடைநிழற்ற 1574
1983 : 4 அந்நேரம் 1749
1986 : 4 கட்டிவைத்து 1574
1989 : 1 சுத்தும் 1574
1990 : 1 மத்தும் 1574
1994 : 1 வீசுமுள்ளுப் 1574
1996 : 2 னேகலந்து 1749

பத்தியெடுத் தார்ப்பரித்தார்; பாங்கான வேடரெல்லாம்
சுத்திநெருங் கும்மரசர் துய்யபடை வீரர்களும்
சிக்குமிரு கங்கள்தனைச் செய்யவதை செய்யவென்று
சக்கரமும் அம்பும் தணியாமல் தூவலுத்தார்;
தூவுங் கொடுஞ்சரமும், துங்கசக்க ரங்களுடன்
மேவுசுண்டு வில்லெறியும், மிக்ககவண் கல்லெறியும்,
பட்டுருவி நொந்து பலமிருகம் மாண்டதுவே;
துட்டமுறும் வேடர் துரத்துநா யுங்கடித்துப்
பட்டுவிழும் மான்அனந்தம்; பங்குமுய லும்மனந்தம்;
இட்டசிலை வேடர் எறிந்தகவண் கல்லுருவி
மாண்டுவிழும் மான்அனந்தம்: வந்தமுயல் புள்அனந்தம்;
ஈண்டும் வளரி எறிபடவே ஆவிநொந்து

---

பாட வேறுபாடு

*2004 : 4 தூவலூற்றார் 1574 1749*

*2009 : 3 பங்குமுச 1749*

ஒப்புமை : அடி எண். 2001 — 2013. அரிச்சந்திரனின் படைவீரர்களும் வேடர்களும் எய்த அம்புகள், கவண் கல் முதலியவற்றாலும் வேட்டை நாய்களாலும் விசுவாமித்திரர் ஏவிய விலங்குகள் இறந்து வீழ்தல்.

'வட்ட மாகவரி விற்கு னித்துவய
மன்னர் விட்டபல வன்சரம்
பட்ட மாவினம் விழுந்து மூன்றுடல்
பதைத்தி றந்தனவ னந்தமாற்
றொட்ட வேல்குணி லெறிந்து வேடுவர்
துணித்த மாஇனம் அனந்தமால்
விட்ட ஞாளிகள் கடித்தி முத்திட
விழுந்த மாவினம் அனந்தமால்'.

— அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 24

காலுதலை வேறாகிக் கண்டமுயல் மான்அனந்தம்;
ஏவித்து மன்னர் இனியரதந் தான்நடத்தும்
ஆண்ட சகடமதில் அங்குபட்டுக் கொண்டுசிக்கி,
மாண்டுவிழுந் தேதசுங்கும் மானுமுய லும்மனந்தம்;
துங்கமன்னர் வீசுந் துடியர்(பு) உரம்உருவிச்
சங்கையுடன் பட்டிறந்த தன்றுபன்றி யும்மனந்தம்;
சிங்கமெனச் சீறிச் சிலைவீரர் ஆர்ப்பரித்துப்
பங்கமுற வெட்டிவெட்டிப் பட்டபுலி யும்மளந்தம்;
மாத்தலர்கன் சிங்கம் வலவீர ருந்துடர்ந்து
ஏத்தமுடன் கொன்றபன்றி எண்ணரிய மான்அனந்தம்;
விருதுகட்டி விட்டிருக்கும் வீரர்ஏ வத்துடர்ந்து
கருதுமுரு நாய்போய்க் கடித்தபன்றி தான்அனந்தம்;
மாவேந்தர் ஏறிவரும் வாரணங்கள் தான்சிவந்து
கோவமுறுஞ் சங்கிலியால் கொன்றமுளா மான்அளந்தம்:
ஊழைக் குறவருட ஓட்டுகண்ணி பட்டிறந்த
கூழைக் கிடாவுங் குரண்டம்மயில் தான்அனந்தம்;

---

பாட வேறுபாடு

2013 : 3 கண்டமுசல் 1749
2014 : 1 ஏவிவரும் 1749
2014 : 2 மன்னன் 1574
2014 : 4 தானடக்கும் 1749
2017 : 2 வீசு 1574
2020 : 4 தானனந்தம் 1749
2021 : 1, 2, 3 மாத்தபரி மீதிருக்கும் வல்வீர 1749
2022 : 1 ஏற்றமுடன் 1574
2025 : 4 தான்சீறி 1574
2026 : 3 கொன்றதொரு 1574

ஒப்புமை: அடி எண். 2014 — 2016. விசுவாமித்திரர் ஏவிய விலங்குகள், மன்னர் ஏறி வரும் தேரின் சக்கரத்தில் சிக்கி இறத்தல்.

'..............தேர்க்
கால்கள் பட்டவொரு கோடி'

—அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் — 26

மாயமுற வேமுடித்து வைத்தகண்ணி சிக்கி,உக்கித்
தூய சிறகொடிந்து தூங்குபச்சி யும்மனந்தம்;
ஓங்குபுகழ் மன்னர் ஒருமித்தும் ஆர்ப்பரித்தும்
பாங்குபெற வேபிடித்த பண்புகரி தான்அனந்தம்;
சுத்திமன்னர் தாவிக் கொடுவாளி னாலைவெட்டச்
செத்திறந்து போன செழுங்கரிக ளும்மனந்தம்;
கானக் குறவர் கடும்வேடர் கட்டிவைத்த
ஏனக் கொடியின் இதமான மாஅனந்தம்;
தந்திரங்க ளாகவிசை தங்கமுட் கோலுகொண்டு
மந்திரங்க ளால்பிடித்த வாரணங்க ளும்மனந்தம்;
கட்டிவைத்த நீள்வலையில் காலுதலை சிக்கிஉக்கி
முட்டிக்கிடக் குங்கலையும் மூண்டமுளாப் பன்றிகளும்
ஓடுஞ் சிறுமுயலும் ஓங்கியசெந் நாய்குரங்கும்
நீடுமதி வாடி நெருங்குமிரு கம்மனந்தம்;
இப்படிக்கு வேட்டை இதமாக வேபுரிந்து,
செப்பரிய வேடர் சினக்கொறவர் எல்லோரும்
பட்டமுளா மான்முயலைப் பன்றிதனை யும்மெடுத்துச்
சுட்டகறி தின்று சுனைகள்தொறும் நீரருந்தி,

---

பா. வே. 2032 : 1, 2 பாங்கு பெறப்பிடித்த 1749
2033 : 3 கொடும்வாளி 1749
2036 : 4 மான் அனந்தம் 1574
2041 : 2 சிறுமுசலும் 1749
2044 : 3 சினக்குறவர் 1574 1749
2045 : 2 மான்முசலைப் 1749

ஒப்புமை : அடி எண். 2045 — 2048. வேடர்கள், வேட்டையில் வீழ்ந்த விலங்குகளைச் சுட்டுத் தின்று, சுனைநீர் அருந்தி, அரிச்சந்திரனைத் தொழுது, பின் மீண்டும் வேட்டையாடுதல்.

'பட்ட பட்டவை எடுத்து வேடுவர்
பருத்த கட்டைகள் அடுக்கியே
சுட்ட சுட்டதசை தின்று தின்றுறு
சுணங்கி னம்பல பிணங்கவே
மட்ட றப்பருகி இட்ட ளித்திலர்
மடுக்க ளிற்புன லருந்தியே
இட்ட மாலைபுனை மன்னர் மன்னவன்
இருந்த சூழலிடை எய்தினார்.'

—அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 29

ஆர்ப்பரித்துக் கொக்கரித்திட் டாரவா ரங்களுடன்
ஏப்பமிட்டு நின்று இனியமன்ன னைத்தொழுது ,
பாயும் புலிகளெதிர் பாய்ந்துகட்டிச் சேர்ந்துகுத்தி,
ஆயுப்புலித் தண்டை அறுப்பார் சிலவேடர்;
முத்து வடம்இலங்கும் மூண்டமன்னர் தான்சிலபேர்
உத்தமன்ன னைத்தொழுதிட் டோங்கும்புலி சிங்கமெதிர்
வாளெடுத்து வீசி வலுசிலம்ப மாகிநின்று
தூளியுடன் கொண்டு துடர்ந்துவரு வார்சிலபேர்;
இவ்வாறு எல்லாம் இயல்பகலி லேமுடித்துச்
செவ்வையுள்ள மன்னன் சிறந்திரவு தோன்றியபின்
அங்கவரை எல்லாம் அருகாக வேயிருத்திப்
பொங்குபுகழ்ச் சோலைப் புதுமண் டபந்தனிலே
சிங்கார வல்லியரும் சீர்வேந்தன் பாலகனும்
தங்கி யிருந்தார் தயவுடனே **அம்மானை !**

அல்லெல்லாம் நீங்கிஅந்த ஆதித்தன் தோன்றியபின்
வில்லாளர் வேடருடன் மிக்கமன்ன ரும்மெழுந்து,
கொத்தவனைக் கைதொழுது கொள்கான கம்புகுந்து
சுத்தமுடன் ஆராய்ந்து தோன்றுமிரு கங்கள்தனை
வெட்டிக் குலைபடுத்தி, வீரகுர லும்முழக்கி
மட்டில்லா வேந்தர்களும் மாகுறவர் வேடர்களும்
பார மலைக்குகைகள் பார்த்தொதுங்கும் வேங்கையையும்,
சாருங் கவுருந் தலைக்கரடி யானதையும்.
முட்டிவிழுந் தோடி முரிந்துபன்றி யானதையும்,
குட்டியுட னேபிடியும் கூடிவரும் யானையையும்

---

பாடவேறுபாடு

2047 : 2, 3 கொக்கரித்து ஆரவா 1749
2053 : 4 மேபொருது 1574
2059 : 4 பாலகரும் 1574
2065 : 2 குலவையிட்டு 1574

மானமுளாக் காட்டெருமை வாய்த்தமரை ஆடுமுயல்
ஆனஉடும் போடுமெலி அன்றில்மயில் கோழிகொக்கு
உள்ள மிருகமதை ஓடியோ டிச்செயித்து
எள்ளளவுங் காணோம் எனவிருக்கும் வேளையிலே
துள்ளுபற வைவிலங்கும் தோன்றுகுரல் ஓசைகண்டு
விள்ளாமல் அந்த விதம்அறிந்து சென்றோடிக்
கொண்டு குலைபுரிந்து கொல்மிருகம் இல்லையென்று
மண்டலஞ்சேர் மன்னனிடம் வந்துசில பேரிருந்தார்;
கானகத்தைச் சுத்திக் கடிந்துசிலர் சென்றுசென்று
மானமற வேகிடந்த வன்மிருகத் தைச்செயித்தார்.
தீராத கோபச் சிலைவேட ரில்சிலபேர்;
ஆறாத கோபத் தடர்குறவ ரில்சிலபேர்;

---

பாட வேறுபாடு

*2071 : 3, 4 வந்தமரை யோடுமுசல் 1749*
*2072 : 3 அன்றில்பிறாக் 1749*
*2075 : 1 துள்ளும்பற 1574*
*2079 : 2 சுற்றிக் 1574*

ஒப்புமை: அடி எண். 2082 — 2085. வேடர்கள், அடர்ந்த காட்டுப் பகுதியுள் விசுவாமித்திரர் ஏவிய விலங்குகள் மறைந்திருக்கும் என நெருப்பை மூட்டுதல்

'இரவி னிற்பெரி திருண்டு சூன்மழை
இருண்டு துன்றிஉல கெங்கணும்
பரவி எய்தகணை எதிர்வ ரும்படி
படர்ந்த முண்டக விறும்பினுற்
றரவி னங்கரடி புலிகள் பன்றிக
ளழுங்கு டும்பெலி மடங்கன்மான்
கரவி லுற்றிதனு ளுறையு மென்றெயினர்
காடெ லாம்எரி பரப்பினார்'.

— அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 36

வேணமிரு கம்பறவை மீறுபுழு பாம்பொடுதேள்
காணுதில்லை யென்றுநெடுங் காடுமலைப் பக்கமெங்கும்
அக்கினி யைப்போட்(டு) அடர்ந்தெரித்தார் **அம்மானை !**

அக்கினியள் பத்தி அமரர்பதி தூரமுட்டிப்
பறக்குமந்தப் பட்சியுடன் பதுங்கும் விலங்கினையும்
துறக்களரித் திட்டே தொழும்பூமிக் குள்ளடர்ந்து
உண்ணிசரு கட்டை யுடன்புழுக்க ளும்தேளும்
எண்ணரிய பாம்பும் எலிசிலந்தி பின்னுமண்ணில்
உள்ளதுகள் எல்லாம் ஒருமிக்க வேமடிந்து
கொள்ளையற மாண்டு கொடுஞ்சாம்பல் ஆகியதே;
வந்த விலங்கினமும் மண்டுபுள்ளோ டூர்வனவும்
சந்தை குலைந்தபடி தான்குலைந்து போனதுவே;
நல்லோர்க்கு வந்த துயர்அகன்ற வாறெனவும்,
பொல்லார்க்கு வந்த புகழ்ஒழிந்த சீர்எனவும்
நேசத் தியக்கம் நினையாம லேவெகுண்டு
கோசிகனார் விட்ட கொடுமிருகம் மத்ததுவே;

### கலிவிருத்தம்

தவமுனி கவுசிகன் தானும் ஏவிய
நவமிரு கங்கள்புள் நாட்டி லூர்வன
அவமற அயோத்திமன் அழித்துப் போட்டபின்
கவலையுத் ததில்சில தப்பிக் கண்டதே. 73

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

அய்யரே! நீருஞ் சொன்ன
அடவுடன் நாங்கள் சென்று,
துய்யதோர் மன்னன் நாட்டைச்
சூறையே யாடி நின்றோம்:

---

பாட வேறுபாடு

2087 : 2 பச்சியுடன் 1749
2098 : 4 மற்றதுலே 1574

வெய்யவெஞ் சினவேல் வேந்தன்
வேட்டைவந் தடித்துக் கொன்றான்;
உய்யநாம் பிழைத்தோம்; அத்தா!
உயிர்பிழைத்தார் ஏதும் உண்டோ? 74

நடை

தவமுனிவர் ஏவிவிட்ட தங்குமிரு கங்கள்தனை
அவமறஅய் யோத்தி அரசன் அழித்திடவே,
ஒன்றிரண்டு மிச்சம் உடன்ஒளிந்து தப்பியது;
வென்றியுள்ள மாமுனிபால் மேவியுரை செய்திடுமாம்-
"அய்யா!நீர் சொன்ன அடவுசென்று யாமழித்தோம்;
வெய்யமன்னன் கொன்றுவிட்டான்; மிச்சம்நாம்." என்றுசொல்லிப்
பட்சிகளில் ஒன்றிரண்டு பாரூர்வ ஒன்றிரண்டும்
ஒட்சைவிலங் கொன்றிரண்டும் ஓதியதே **அம்மானை!**

இவ்வாறு கேட்டவுடன் ஏங்கியே தான்வாடி,
நவ்விநின்று கோசிகனும் நாட்டமுற வேநோக்கித்
"தப்பிவந்த புள்ளினமே! தாரணியில் ஊர்வனவே!
செப்புபுகழ் வல்ல செழும்பெரிய தோர்விலங்கே!
உங்கள் இருப்பிடத்துக் கேகுமெ"ன்று தான்அனுப்பித்
திங்கள்முடி யான்அடியான் சிந்தைதனில் எண்ணலுத்தான்;
"ஏது வகையால் இனிஅரசை வெத்திகொள்வோம்?
மாதுபங்கா!" என்று மகாமுனிவன் அந்நேரம்

---

பாடவேறுபாடு

விருத்தம் 74. 4 : 3 மத்த 1749

நடை 2106 : 1 ஓச்சைவிலங் 1749
2107 : 1 இவ்வார்த்தை 1749
2107 : 3, 4 ஏங்கி முகம்வாடி 1574
2111 : 4 தானுரைத்துத் 1574
2112 : 4 எண்ணலுற்றான் 1574 1749
2113 : 4 வெற்றிகொள்வோம் 1574

ஆய்ந்ததவம் தன்னாலே அம்புவிவா ணம்பதறப்
பாய்ந்தெடுக்கும் பன்றியொன்றைப் பாரமுனி வன்படைத்தான்.
அப்பெரிய பன்றி அடர்ந்தநிற மும்பிலமும்
செப்பமுட னேமகிழ்ந்து சீராக வேகேளும்-
பண்டுவிண்டு தான்எடுத்த பன்றியிலும் பத்திரட்டிக்
கொண்டுமண்டும் வீரக் கொடியநெடும் பன்றியது;
கண்கள் பவளநிறம்; காலுவெள்ளை; வாலுவெள்ளை;
பொங்குகுளம் பொன்னிறமாம்; போற்றியமெய் நீலநிறம்;
பச்சைநிறந் தான்முதுகு; பாரமுகம் அப்படியே;
வச்சிரநிறங் கொம்பிலங்கும் வன்மையுள்ள பன்றிகண்டீர்!
மாமேருக் கஞ்சிரட்டி வாய்த்தஉடம் போடுநின்று,
மாமுனிவன் செய்ய மலர்த்தாளைத் தான்வணங்கிச்

---

பாட வேறுபாடு

*2121 : 3, 4 காலுவெள்ளி, வாலுவெள்ளி 1749*
*2124 : 3 வன்னமுள்ள 1749*
*2126 : 3, 4 மலர்த்தாள் தனைவணங்கி 1574*

ஒப்புமை : அடி எண். 2119, 2120. விசுவாமித்திரர் படைத்த பன்றியின் தோற்றம், 'முன் திருமால் எடுத்த பன்றியுருவோ' என எண்ணும்படி மாபெரும் தோற்றத்துடன் திகழ்தல்.

"வானம் ஏழும்மண் ணேழும்முன்
மருப்பினால் எடுத்த
ஏனமோ ?" 58

ஒப்பும் முரணும்: அடி எண். 2121 — 2125 விசுவாமித்திரர் படைத்த பன்றியின் தோற்றம்.

"பொன்னி றத்துமெய் வெண்ணிறத் துகிர் புட்பராகம்
நன்னி றக்கண்ட நாலுகா லும்செழும் பவளம்
செந்நி றத்தகண் செம்மணி செழுமுகம் பச்சை
அன்னி றக்குரம் நீலம்வச் சிரத்தெயி றதற்கே." 44

'மலையினும் பெரிதானதோர் வராகம்'

— அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 59

"சத்தகடல் நீரையெல்லாந் தான்குடித்து வந்திடவோ?
உத்தபுவி அத்தனையும் உண்டுகொண்டு வந்திடவோ?
மேருகிரி யாதிமுதல் மிக்ககிரி அத்தனையும்
வேரும் அறப்பிடுங்கி மிக்கபொடி செய்திடவோ?
மானத்தின் மீனை மதியைப் பகலவனைத்
தானிரண்டு கொம்பாலே தான்கிழித்துப் போட்டிடவோ?
ஏது கருமம் இனிஅடியேன் செய்துவர?
ஓதும்மறை மாமுனியே! உண்மையுடன் உந்தனுக்கு—"
என்றுபன்றி கேட்க இயல்முனிவன் கொண்டாடி
நன்றியுடன் பார்த்து நயந்துரைப்பார் **அம்மானை !**

"வாராய் வராகமே!நீ வாய்த்தநெடுஞ் சோலைசென்று,
சீராரும் அய்யோத்தித் தேர்வேந்தன் பால்அணுகி,
வேந்தனையும் வேந்தனுட மெல்லியையும், மெல்லிதரும்
சாந்தபுதல் வன்றனையும், சத்தியகீர்த் திதனையும்
உத்தமனைச் சேர்ந்த உரியஇனந் தன்னைவிட்டு,
மத்தமத வேடருடன் வாகழிந்த கானவரைக்
கோலமிகுஞ் சேனையையும், கொட்டும்மத்த தேர்பரியும்
ஞாலமதில் வேடர் நடத்திவந்த நாய்தனையும்
ஏமன் பதிதனக்கு ஏத்திவிட்டுப் போட்டும்அரைச்
சாமந் தனில்திரும்பித் தான்ஓடி வா"எனவே
பன்றிதனைப் பார்த்துப் படர்முனிவன் ஏவிவிட்டான்.
சென்று,பன்றி மீறுஞ் சினங்களுட னேபெருகி,

---

பாட வேறுபாடு :

*2134 : 4* எந்தனுக்கு *1749*
*2136 : 3* நயந்துரைப்பான் *1574*
*2139 : 3* மெல்லியரை *1574*
*2140 : 1, 2* சாந்த புதல்வன்றனை *1574*
*2141 : 1* உத்தசனஞ் *1574*

## அறுசீர்ச் சந்த விருத்தம்

குழிப்பு : தந்தன தந்தன தந்தன தந்தன தந்தன தந்தனனா

திங்களு டன்புன லுந்திக ழுங்கன
செஞ்சடை யும்பரனார்
தங்கும்உ ளந்தவன் அன்பொட றைந்திடு
சம்ப்ரம முஞ்செயவே
பொங்குசி னங்கொடு கண்டம ரங்கிரி
புண்டுவி ழுந்திடவே
பங்கமு டன்திசை யும்பத றும்படி
பன்றிந டந்திடவே. 75

மண்டல முஞ்சுமை கொண்டச தந்தலை
வங்கர வஞ்சுறவே
விண்டுல கம்புவி யுந்துகள் மண்டுசு
மிண்டிஎ ழுந்தசைவாய்க்
கொண்டுறு முந்தழல் கண்டுமி ழும்படி
கொஞ்சிய பன்றியும்நீள்
அண்டர்சி யந்திரி சங்கும கன்தளம்
அன்றையில் அண்டினதே. 76

### நடை

அய்யோத்தி மன்னன் அடர்ந்திருக்குங் காட்டகத்தில்
வையகங்க ளும்மதிர மண்ணதிர விண்ணதிரச்
சேடன் முடிஅதிரத் திண்கிரிக ளும்பதற,
நீடரிய கொம்பை நிலைசாய்த்துப் பார்த்துறுமிக்
கானவரும் வேடர்களும் கட்டிநின்ற மாத்திரளில்
ஏனம்மிக வந்து இயல்அழிய மீறியதால்,

---

பாட வேறுபாடு

விருத்தம் 75. 2 : 5 சம்பிர 1749
4 : 6 டந்தனவே 1574 1749
76. 4 : 1 அண்டர்செ 1749

நடை 2151 : 4 ளும்மதிர 1749
2152 : 4 பார்த்துமிகக் 1749

வேடர் குடல்கிழிய, மெய்கிழியக் கைகிழியத்
தாடைஅல குஞ்சரியத் தங்கள்தலை மூளைவிழ,
ஊளையிட்டு நாய்பதறி ஓட்டுவிட்டை யிட்டிறக்கக்
கோழையற்ற பன்றியது கொன்றதொரு கொம்பாலே;
மத்துஞ் சினப்பெருகி வாய்த்தமன்னர் தம்திரளில்
உத்துவந்து பன்றி ஒருமித்துக் கொம்பாலே
தேரொடிந்து தூளாய்ச் சிதறிப் பறந்திடவே
போரடர்ந்து, மிண்டிப் பொருதுகரி மேல்சினந்து,
காலு தலைவெளுக்கக் காய்ந்து,கொம்பி னால்எடுத்துக்
கோலிஎறிந் தேயெறிந்து, கொஞ்சுபரி மீதடர்ந்து
வாகுகுட ருஞ்சரிய வன்சூறை யாடிநின்று,
மோகமன்னர் மேலே முனைகொண்டு தானடர்ந்து
பன்றி விழப்பதறிப் பாரமனுக் கெட்டுலைந்து,
வென்றிப் பரிமேல் விழுந்துசிலர் தாமடிய
ஆனை அலறி அடும்பரிமேல் வீழ்ந்திறக்கச்
சேனை அலறிச் செழும்பரிமேல் வீழ்ந்திறக்கப்
பரிதட் டழிந்து பலகரிமேல் வீழ்ந்திறக்க,
உருவிட் டிறந்தும் உறுஞ்சுணங்க னும்முறங்கப்
பிறசண்ட வாயுவெனப் பேரான மூச்சுவிட்டு
அறமிண்டி ஆர்ப்பரித்து ஆனநெடும் கொம்பாலே
கரிகள் குடல்சரிந்து கைகாலும் அற்றுவிழப்
பரிகள் தலையுருண்டு பாரமனுப் பட்டுவிழக்
கொம்பாலுங் காலாலுங் கொன்றுகொன்று நின்றுறுமி,
வம்பமரும் மூஞ்சியினால் வல்சேனை யைஉழுது,
காலால் அறமிதித்துக் கண்டகுணங் கைச்செயித்துக்
கோலா கலமாகக் கொம்பேனந் தூரிடவே,
பாளை மலர்எனவே பல்லுதிர்ந்து வீழ்வாரும்
கோவைப் பலவுரைத்துக் கொண்டு மடிவாரும்
எண்ணரிய நாய்கள் இசைந்தபரி யானைரதம்
மண்ணில் உருத்தெரியா மாறாட்ட மாய்க்கிடக்க

---

பா. வே. *2159 : 1* மற்றுஞ் *1749*
*2160 : 1* உற்றுவந்து *1749*
*2173 : 4* மூச்சுடனே *1749*

நாய்மேல் பரிகிடக்க, நற்பரிமேல் ஆனைதுஞ்ச,
பேய்போல் சிலவேடர் பிஞ்சுதுண்ட மாய்க்கிடக்க,
வெஞ்சினங்க ளாகி மிகுத்தபன்றி தான்நொடியில்
அஞ்சாமல் இந்த அடவுகுலை செய்திடவே,
குருதி நதிபெருகிக் கோலமத வாரணத்தைக்
கருதியிழுத் தோடக் கதித்த குருதியெங்கும்
மன்னர்குடை யுங்குடரும் வாகுகர முங்கழலும்
உன்னிடும்எக் காள முடன்நாகச் சின்னமுடன்
ஆனைக் குடரும் அடர்ந்தபரி யின்தலையும்
மேனனைய வேடர் விருதுகொம்பும் வேல்மழுவும்
ஒன்றாகி யேநிரம்பி உத்தநதி மீதோடக்
கன்றித் தலருங் கடிநா யினம்மிதக்கக்
கட்டிநின்ற சங்கிலியும் கண்டமணி வெண்டையமும்
திட்டமுடன் அந்தச் செழுங்குருதிக் குள்ளாழ
மாயமுள்ள பன்றி வதைபுரிந்த வாறுதனைத்
தூயமன்னன் வீத்திருக்குஞ் சோலைதனில் ஓடிவந்து,
"தேடுபுகழ் அய்யோத்தித் தேவே பெருமானே!
கேடுவந்து தோஅறியோம் கேளீர் எனதரசே!
காலனோ? அல்லவெனில் காமாக்கினி ருத்திரனோ?
ஏலமுள்ள மாலோ? இயல்பிரம னோ?சிவனோ?
பன்றியுரு வாய்எழுந்து பாரில்உந்தன் சேனையெல்லாங்
கொன்றுகொலை செய்யுதுகாண்; கொத்தவனே! இங்கும்அது
வந்துவிடும் கால்நொடியில் மன்னா!" எனஉரைத்தார்;
அந்தமொழி கேட்டு அரசன்மிக வேயெழுந்து,
"அஞ்சாதே" என்று அனைவருக்குங் கையமர்த்தி
"வெஞ்சினமாய் வந்து வெகுவதைகள் செய்ததொரு

---

பா. வே. 2191 : 2 யுங்குடலும் 1574
2191 : 4 முங்காலும் 1749
2193 : 2 குடலும் 1574
2197 : 1 கட்டுகின்ற 1574
2198 : 4 குள்ளோட 1574
2200 : 2 வீற்றிருக்குஞ் 1574
2201 : 4 பெருமாளே 1574
2206 : 3 கொற்றவனே 1574

மாசணுகும் பன்றி வலிமையோ நம்மிலுந்தான்
நேசம் மயங்காமல் நீங்களிரும்'' என்றுசொல்லி

## அறுசீர்ச் சந்த விருத்தம்

**குழிப்பு :** தந்தன தந்தன தந்தன தந்தன தந்தன சந்தனனா

பந்தமு டன்புலி யும்புக ழும்படி
பண்புசெ யுங்குரிசில்
அந்தரி பிங்கலை அம்பிகை சங்கரி
அண்டர்தொ ழுங்கெவுரி
சுந்தரி விந்தைசு மங்கலி கண்டிகை
துன்றுநெ டுங்குழலாள்
தந்தபெ ருங்கணை தந்திக ளுஞ்செய
தங்கர தந்தனிலே. 77

**குழிப்பு :** தானன தந்தன தானன தந்தன தானன தந்தனனா

மேருமலைந்திட வானம்அ லைந்திட
மேவிய உம்பருடன்
பாரும்அ திர்ந்திட மேகம்உ ளைந்தெழு
பாணிக லங்கிடவும்
ஆரும்அ லைந்திடச் சேடன்நெ ளிந்திட
ஆனநெ டுஞ்சகடத்
தேரும்ந டந்திட வேகமு டன்சினம்
மீறிந டந்தனனே. 78

---

ஒப்புமை : விருத்தம் 77 & அடி எண். 2213, 2214. காளி வழங்கிய கணையைக் கையில் எடுத்துக்கொண்டு காளி வழங்கிய தேரில் ஏறி அரிச்சந்திரன், விசுவாமித்திரர் படைத்த பெரும்பன்றியினை அழிக்கப் புறப்படல்.

'அன்று சவுந்தரி தந்த நெடுஞ்சிலை
அங்கை எடுத்தனனே'. 61

'நாசரி கச்சுட ராடர வப்பணி
நாயகி பொற்சடிலச்
சேகரி பத்திர காளி கொடுத்தரு
டேரை நடத்தினனே'.

— அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 62

## நடை

ஓங்காரக் காளி உதவுதங்கத் தேர்ஏறிப்
பாங்கான வேந்தன் பருவமுடன் ஏகிவந்து,
பன்றிகொன்று போட்ட படுகளத்தைப் பார்த்துருகி
வென்றியுள்ள மன்னன் மிகுவேகந் தானாகிச்
சேடன் முடிஅதிரத் தேருவிசை யாய்நடத்தி,
நீடரிய பன்றியது நிற்குமிடந் தன்னில்வந்தான்;
மன்னன் ரதம்நடத்தி வந்தவகை கண்டு,பன்றி
உன்னியவே கம்பெருகி, ஓங்கார மாகிநின்று,
மோனமுடன் நல்ல முனைகொண்டு நின்றிடவே
ஞானஒளி சேரும் நரபாலன் அந்நேரம்
வானகங்க ளும்பதற மண்டலம்எல் லாம்நடுங்க
ஏனந் தனைப்பார்த் திருகண் சிவந்துபொங்கி,
சூலி கொடுத்தருளும் சொன்னமய வில்ஏந்தி
ஏலிச் சிறுநாண் எறியலுத்தார் **அம்மானை!**

சிறுநாண் ஒலிகேட்டுச் சீறிநெடு மெய்சிலுப்பி
உறுமலுடன் வந்தரசன் உத்தரதந் தன்னையெத்தக்
கொஞ்சி வளைந்தே குறுகிமறித் தார்ப்பரிக்கும்;
மிஞ்சுஞ் சினமாய் மிகுந்துவெட்ட மிட்டுவரும்;
பார்க்க வடதிசையில் பாயுந்தட்ச ணத்தில்நிற்கும்;
ஆர்க்கக் குணக்கில்வரும்; ஆனகுட பால்உலவும்;
இவ்வாறு பன்றி எதுத்துநிற்கும் பக்கமெல்லாம்
செவ்வே ளனையமன்னன் தேருமொக்க ஓடிவரும்;
மெய்ப்புடைய பன்றி வெகுசிலம்ப மாகிநிற்கும்;
அப்படியே மன்னன் அடர்ந்துமறித் தேதுரத்த,
வட்டமுடன் சுத்தி வரும்பன்றி யுந்தியங்க,
இட்டமுள்ள மன்னன் இசைவாய் உலைத்தலைத்தான்;

---

பாட வேறுபாடு

நடை *2223 : 4 லாம்அதிர 1574*
*2225 : 3 சொர்ணமய 1574*
*2228 : 2 வந்தமன்னன் 1749*
*2228 : 4 தன்னையெத்திக் 1574*
*2237 : 2 சுற்றி 1749*

அண்டர் மிகப்பார்த்(து) அரசனையுங் கொண்டாடிக்
கொண்டாடி வெத்தியுள்ள கோமான் எனமகிழ்ந்தார்;
மாபெரிய பன்றி மகாமுனிவ னைநினைந்து,
நேர்பெரிய வேந்தன் நிலையறிந்து கொண்டாடி,
மண்ணும் மலையும் மரமும் பலவெடுத்து,
நண்ணும் அரசன் நய்ந்தபடை மீதெறிந்து,
சக்கரியான் சுத்துமந்தச் சக்கரத்தை யொத்தபடி
திக்கும் படைநடுவே சென்றுசுத்திக் கொன்று, பன்றி
மன்ன னெதிர்சீறி வந்ததுவே **அம்மானை !**

அன்னதுமேல் சீறி அரசன் மிகஎதிர்த்துப்
பூதலங்க ளும்நடுங்கப் பொங்குமெரி யுப்பரக்கக்
கோதைதரண காளி கொடுத்தகணை தொட்டுவிட்டான்:
தொட்டகணை ஓடிச் சுழன்றபன்றி நெத்தியிலே
பட்டுருவிச் சோரி பரிவாய் எழுந்ததுவே;
அம்புபட்டுக் கோபம் அதியமுட னேபெருகி
வம்புடைய பன்றி வல்லுக்கோட்டைக் கீழ்சாய்த்து,
வேந்தன்மணித் தேரை மிகவெடுத்து வீசிடவே
ஆய்ந்த நெடுந்தேர் அம்ரர்பதி தூரமுட்டி,
ஞாலந் தனில்திரும்பி நண்ணியதே **அம்மானை!**

ஞாலந் தனில்திரும்பி நண்ணியபின் பன்றியது
நெத்திதனில் பட்ட நெடுங்காயம் ஆத்தாமல்
சுத்தமுள்ள மாமுனிபால் துங்கபன்றி போய்விழுந்து,
"மன்னன் பிலமுடைய மன்னவன்காண்; மாமுனியே!
உன்னுடைய தஞ்சம் உளதால் திரும்பிவந்தேன்;"
என்றுபன்றி சொல்ல இயல்முனிவன் கோபமுற்று,
"நன்றியுடன் நாம்அனுப்பும் நல்மிருக மும்வதைத்தான்;

---

பா. வே. 2245 : 2 சுற்றுமந்தச் 1749
2248 : 3, 4 அரசன்மிக வேயெதிர்த்துப் 1574
2249 : 3, 4 பொங்கியெரி யும்பிறக்கக் 1749
2253 : 1 அம்புபட்டுக் 1749
2256: ஆய்ந்தநெடுந் தேரும் அமரர்பதி யைமுட்டி 1574
2260 : 1 சுற்றமுள்ள 1749
2264 : 3, 4 நல்லமிரு கம்வதைத்தான் 1749

வென்றியுட னேஇவனும் மிக்கவல்ல னோ?''எனவே,
பன்றி தனையனுப்பிப் பாரமுட னேஉளத்தில்

## புலைமாதர் வரவு

ஆறாத கோபம் அருள்முனிவோ னும்பெருகிச்
சீறினான் கோபமுடன்; சீறுமந்த அக்கினியில்
அந்தரத்தில் வந்துவிழுந்(து) அம்புவிஎல் லாம்கெடுக்கும்
இந்திரதனுப் போலும் இசைதூம கேதுவும்போல்
திருப்பாற் கடலில் சினந்தெழுந்த ஆலமும்போல்
விருப்பாம் மதனுடைய வேதாக மக்குருவாய்ப்
போத்தரிய "கோபப் புலைமாதர்"* தாமிருபேர்
கூத்தனென வேபிறந்தார் கோலமுடன் **அம்மானை!**

---

ஒப்புமை : அடி எண்: 2271. விசுவாமித்திரரின் சினத்தீயில் உருப்பெற்றுத் தோன்றிய கன்னியர் பாற்கடலில் தோன்றிய நஞ்சென விளங்கினர் எனல்.

'செந்திரு அமுதில் தோன்றத்
திரைக்கடல் பிறந்த நஞ்சில்
வந்திரு கருந்தி ருக்கள்
வயங்குவ தென்ன'.

—அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் –5

கோபப் புலைமாதர் :

கோசிகனின் கோபத்தால் தோன்றிய இரு பெண்களையும் இவ்வம்மானை 'புலைச்சியர்', 'புலைமாதர்', 'புலைப்பெண்', 'புலைமாது' என்று பல இடங்களில் குறிப்பிடுகின்றது. இங்கு முதன்முறையாகக் குறிப்பிடும்போது 'கோபப் புலைமாதர்' என்று சுட்டுகின்றது.

அவ்விரு பெண்களும் 'புலைமாதர்' என்று குறிக்கப்படுவதற்கான காரணத்தை அரிச்சந்திர புராணம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் பகுதி இங்கு நோக்கத்தக்கது. இவ்வம்மானையில் அவ்வாறு குறிக்கப்படுவதற்கான விளக்கம் இல்லை.

"தீதிலா மறைகள் நான்கும்
தெளிவுற உணர்ந்த நீர்மைக்
கோதிலாக் குணத்தோர்க் கெல்லாம்
கோபம்சண் டாளம் என்பார்.
ஆதலான் முனிவன் மூக்கி
னாரழற் சீற்றத் தூடே
போதலால் அந்த மாதர்
புலைச்சியர் ஆயி னாரே."

—அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் — 10

கூத்தனென வேஉதித்த கோதையிரு பேர்தனையும்
நேத்தியுள்ள மாமுனிவன் நேசமுடன் கொண்டாடிப்
பன்னு தமிழும், பலகலைநூ லுஞ்சிறப்பும்,
இன்னிசைரா கங்கள் இசைவுநால் எட்டுகளும்
உத்தபல சீரும், உடன்நாட கத்தொழிலும்,
சுத்தமுடன் ஆடும்இந்திர சூத்திரமா சித்திகளும்,
மாமோ கினியுடைய வல்லபமா சித்திகளும்,
காமுகவே ளைப்பிடித்துக் காதலெழச் செய்தொழிலும்,
விண்டுலகம் அண்டம் மிகுத்தபுவி தான்உருக
மிண்டிஇசை வீணை மிகக்கூட்டும் வல்லபமும்,
ஏதொன் றரும்விதங்கள் எத்தனையுண்(டு) அத்தனையும்
போதம் மிகஊட்டிப் போதித்தான் ஓர்நொடியில்;
சித்திரங்கள் கற்ற சிலைப்புலைப்பெண் ணார்இருபேர்
வெத்திமிகு மாமுனிவன் மிக்கபதம் போத்திநின்றார்;

---

பாட வேறுபாடு

2276 ; 2 மாமறையோன் 1749
2277 : 1 பன்னுந் 1749
2278 : 4 எட்டுவகை 1574
2279 : 3 உறுநாட 1749
2280 : 2 நாட்டுமிந்திர 1574
2280 : 4 சித்திரமும் 1749
2281 : 3 வல்லபமாம் 1574
2288 : 4 போற்றிநின்றார் 1574 1749

ஒப்புமை: அடி எண். 2275 — 2286. தன் கோபத்தால் தோன்றிய பெண்களுக்கு விசுவாமித்திரர், கலைகள் அனைத்தையும் கற்பித்தல்.

"மாதரை முனிவன் பார்த்து
வரவழைத் திருத்தி நானா
பேதமும் எழுத்தும் சொல்லும்
பெருங்கலை யிருநா லெட்டும்
கீதமும் நாத யாழும்
கின்னரம் முதல வாய
போதமும் வாரி நீரிற்
கரைத்துடன் புகட்டி னானே".

— அரிச். புரா. சூழ்விணைக் காண்டம் - 11

போத்திநின்ற மங்கையர்க்குப் பொன்னாடை ஆபரணம்
நேத்தியுடன் பூட்டி நிறைந்தசிங்கா ரங்களுடன்
வானகத்தி லுங்கிடையா மாதர் வடிவாக்கிக்
கானக் கருங்குழலார் கன்னிஇரு பேர்தனையும்
வாருமென்று சொல்லி மறைமுனிவன் கூறலுத்தான்—
"நேருலவுங் கானகத்தில் நீண்டநெடுஞ் சோலையிலே
வேட்டைமார்க் கம்முடனே வேந்தனரிச் சந்திரனார்
தேட்டமுடன் வந்து சிறப்பா யிருக்கிறான்;
அங்கவன்பால் நீர்போய் அரியதொரு கூத்தாடி
இங்கிதமாய் ராகம் இசைநா டகம்புரிந்து
ஆவிஉங்கள் மேலே அரசன்ஆ கும்படிக்கே
பாவினைஏ துண்டோ படியும் பலவகையாய்;

---

பாட வேறுபாடு

*2289 : 1* போற்றிநின்ற *1749*
*2291 : 3, 4* மாதர்வடி வாக்கிவைத்துக் *1749*
*2293 : 4* கூறலுற்றான் *1574 1749*
*2294 : 3* நீண்டபெருஞ் *1574*
*2300 : 2* துண்டப் *1749*

ஒப்புமை: அடி எண். 2292 — 2313. விசுவாமித்திரர். தாம் படைத்த இரு கன்னியரையும் நோக்கி, "நீவிர் அரிச்சந்திரனிடம் சென்று அவனை மயக்கிக் கொற்றக் குடை. மகுடம் ஆகியவற்றைக் கேளுங்கள். மறுத்தால் உங்களைத் திருமணமாயினும் செய்துகொள்ளக் கேளுங்கள். அதனையும் மறுத்தால் ஒருபொழுதாவது உங்களுடன் சேர்ந்து சுகித்திருக்கக் கேளுங்கள்" என்று கூறி அனுப்புதல்.

"பெண்டநடை மடவீர் வாவிப்
பெருங்கரை தன்னில் வந்த
படையுடை வேந்தன் பாற்போய்ப்
பாடலால் உருக்கி வெற்றிக்
குடையினைக் கொண்மின் அல்லாற்
கலவியைக் கொண்மின் என்னா
விடைகொடுத் திடலும் மாதர்
விரைவினிற் றொழுது போனார்"

— அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் - 15

ராகத்தால் நாடகத்தால் நாடியகூத் தால்மயக்கி
மோகத்தா னம்பிறக்க மோகவித்தை யாடிநில்லும்;
மன்னன் உமக்கு வரிசைபல வுங்கொடுப்பான்;
அன்னதுவேண் டாம்என்(று) அறவே எடுத்தெறிந்து,
சாமரையும் வீரமிகத் தங்குவெங்க திர்க்குடையும்,
பூமுடியின் மாமகுடம் போந்துமிக வேகேளும்;
ஈதுதவ வேந்தன் இசையா திருந்துவிட்டால்
காதலியு மாகக் கனிந்துமணஞ் சூட்டுமென்றும்;
அந்தவிதத் துக்கும் அரசன்இணங் காதிருந்தால்
விந்தையுடன் ஓர்பொழுது மேவியணை யும்மெனவே
எந்தவித மானாலும் இவ்வாறு தான்முடித்துப்
பைந்தொடியீர்! நீங்களிங்கே பாரமுடன் வாரும்" என்றார்;
வாருமென்று சொன்ன யகாமுனிவ னைத்தொழுது
சேரும் இருகரத்தில் சீர்வீணை தான்எடுத்துக்
காரார் குழல்அசையக் கட்டியபூ முத்திலங்கச்
சீரார் முகமிலங்கச் சிந்தூர இந்துமின்னச்
சுட்டிபட்டைக் காரையுடன் சொர்ணவர்ணக் கொப்பிலங்க,
இட்டபணி கண்டத்(து) இலங்கிமிக வேயிலங்க,
ஒள்ளியபொன் வச்சிரமிட்ட ஓலைகுழைக் காதிலங்கத்
தெள்ளியசிந் தாக்கு,ரத்தினச் சேர்வைமூக் குத்திமின்னக்
கையில் பணியுங் கனவளைக ளும்மிலங்க,
மெய்யில் பணியும் மிகுபணிக ளும்மிலங்கக்
காலில் பரிபுரம்மெய்க் காமவே தம்படிக்க
ஏலித் தனத்தால் இடைதுவண்டு வாடிவரக்
கொந்தலரும் பூமணமும் கூடியசீர் வாடைகளும்
பந்தமுற ஏழுலகும் பாங்காய் மணங்கமழக்

---

பாடவேறுபாடு

*2309 : 1, 2 அந்த விதத்துக்(கு) 1749*
*2311 : 3 எவ்வாறு 1749*
*2316 : 2 முகந்துலங்கச் 1574 1749*
*2316 : 3, 4 சிந்தூரப் பொட்டிலங்கச் 1574*
*2317 : 1 சுட்டிவட்டக் 1749*
*2324 : 3 இடையிடைந்து 1749*

கன்னியிரு பேர்நடக்கக் காமன்அவர் பால்நடக்க
அன்னம் எனவும் அழகுபிடி தான்எனவும்
வேந்தனரிச் சந்திரனார் வீத்திருக்குங் கானகத்தைச்
சாந்தணியுங் கொங்கைமின்னார் தான்தேடி யேநடந்து,
கொத்தவனார் வீத்திருக்குங் கோலநெடுஞ் சோலையிடங்
குத்தம்விளை மாதர் குறுகினர்காண் **அம்மானை!**

### கலிவிருத்தம்

சேனை யென்னும் செழுந்திரை யுங்கடந்(து)
ஆனை யென்னும் அடர்கட லுங்கடந்(து)
ஊன மற்ற உறும்பரி வாரிவிட்(டு)
ஈன மங்கை இருவரும் எய்தியே, 79

வெத்தி மீறும் விருதுரை மன்னவர்
சுத்தி நின்றடித் தோத்திர மும்புகழ்
முத்தி லங்கிய மொய்குழற் கோசலை
அத்தன் பாதத் தரிவையர் எய்தினார். 80

### நடை

வந்தபுலை மாதிருவர் மன்னவன்பால் சென்றணுகி
ஐந்தருவே என்னும் அடியிணையைத் தான்தொழுது,
அய்யா பராக்கு அரிச்சந்திரா பராக்குநிறை
மெய்யா பராக்குரண வீரா பராக்கெமது
சாமி பராக்குஅன்ன சத்திரா பராக்குமத
காமி பராக்கெனவும் கன்னியர்கள் தான்தொழுது

---

பாட வேறுபாடு

விருத்தம் 79. 3 : 2 மத்த 1749
80. 1 : 1 வெற்றி 1749
2 : 1 சுற்றி 1749

நடை 2334 : 1 ஐந்தருவேள் 1574
2334 : 2 யென்றும் 1749

சிங்கார நாடகமுஞ் சித்திரக்கூத் தாடல்களும்
சங்கீத வித்தையுடன் தாண்(டு)அசலத் தம்பமுடன்
ஏறுங் கழைத்தொழிலும் இங்கிதச்சீ ருஞ்சிறப்பும்
வீறுபெற ஆடி மிகுத்த வனிதமுடன்
வாய்த்தநெடும் வீணை மலர்க்கரத்தி லேயெடுத்துக்
கோத்தநரம் போடிறுக்கிக் கூர்மையுடன் கைவிசித்துத்
தொண்டை அறுகாமல் தொய்கழுத்தும் ஆடாமல்
கண்டந் தனில்நரம்பு கண்பகமும் ஓடாமல்
வாசித்தார் மோக மதனகேளி ராகமதை
நேசத் துடன்கேட்டு நின்றதிசை யுங்கிரியும்
கற்சிலையுங் காட்டில் கனிந்த பெருமரமும்
மற்சிலையும் எந்த மரமும் மிகவுருகிப்
பச்சியுடன் வண்டினமும் பந்தலிட்ட வாறெனவே
செச்சையுடன் வான்முட்டச் சேர்ந்திருந்தார் **அம்மானை !**

இந்தப் படிதான் இசைபுரிந்த மாதருக்கே
ஐந்தருவாம் என்னும் அரிச்சந் திரவேந்தன்
பூசணமும் நல்ல புகழ்பதக்கன் ஆடையுடன்
பேசரிய பொன்னும்இரு பேதையர்க்கும் தான்குடுத்தான்;
"ஈதோ உமதிடத்தில் யாங்கள்பெற வந்தோம்காண்!
போதா(து) இதுஎமக்குப் போர்வேந்தே!" என்றுசொல்லி,
மங்கைஇரு பேரும்அந்த மன்னவனைக் கேட்கலுத்தார்—
"துங்க மணிப்புயனே! சொல்லுமரிச் சந்திரனே!
சாமரையும் உன்னுடைய தங்குவெங்க திர்க்குடையும்
பூமுடியில் மேவும் புகழ்சேர் மகுடமதும்

---

பாட வேறுபாடு :

*2343 : 4* னாலெடுத்துக் *1574*
*2346 : 2* தனில்நரம்புங் *1749*
*2351 : 1* பட்சியுடன் *1749*
*2356 : 4* தான்கொடுத்தார் *1574*
*2359 : 4* கேட்கலுற்றார் *1749*
*2361 : 2* நின்னுடைய *1749*
*2362 : 1* பூமுடிமேல் *1574*

தந்தால் எமக்குநலம்; தார்வேந்தே! தாரும்"என்று
பைந்தொடியார் கேட்டவுடன் பார்வேந் தனும்பார்த்து,
"மங்கையரே! எந்த மதியறிந்து நீர்கேட்டீர்?
எங்கள் குலத்தில் இசைவாய் வழிவழியாய்
வந்த குடைமகுடம் வாய்த்தகதிர்ச் சாமரைகாண்!
வந்தகுடை மாமகுடம் மாநிலம்எல் லாம்அறிய
மாதுநல்லீர்! உங்களுக்கு வாறதில்லை;" என்றுசொல்லி
ஓதுமொழி மன்னன் உரைத்தவுடன் மாதுரைப்பாள்—
"வார்ந்தகமாய் உன்னை மனதிலெண்ணி யாங்கள்வந்தோம்
சார்ந்தகுடை யும்முடியும் சாமரையும் நல்கமென்றீர்;
அரிய தமிழ்க்குதவும் ஐந்தருநீ என்றுசொல்லி
உரியபடி கேட்டும் உதவா திருந்துவிட்டீர்;
வாகுபெறும் உந்தன் மணிப்புயத்தை யாம்மருவப்
பாகுபெற எங்கள்தனைப் பண்புமணஞ் சூட்டிஉந்தன்
அங்கைக் கலமணிந்து ஆதரவு செய்யும்"என்று
மங்கை இருபேரும் மையல்கொண் டுரைபகர்ந்தார்;
அந்தமொழி கேட்டவுடன் அங்கைகொண்டு காதுபொத்திச்
"சுந்தரியே! இவ்வசனந் தோசம்;அக லும்"எனவே,
பஞ்சாட் சரம்செவித்துப் பண்புடனே உச்சரித்து,
வெஞ்சினமாய் அந்தமட மெல்லியர்பால் கூறலுத்தார்—
"ஆங்கருமம் ஒன்றும் அறியா மடவியரே!
போங்கடுக; வேறு பொருந்தேன் பிறதாரம்;
ஆடல் புரிந்தீர்; அருநிதியம் நாமளித்தோம்;
நீடரிய வார்த்தை நிலைதவறல் விட்டுவிடும்;"

---

பாட வேறுபாடு

2366 : 3 இசைவாம் 1749
2370 : 4 மாதுரைப்பார் 1749
2373 : 1, 2 அரியதமி ழுக்குதவும் 1574
2374 : 2, 3 கேட்ட துதவா 1749
2377 : 4 சொல்லுமென்று 1749
2381 : 2 சரம்செபித்துப் 1574
2382 : 4 கூறலுற்றார் 1574

என்றுமன்னன் கூற இருபேரும் ஏதுரைப்பார்-
"வென்றியுள்ள மன்னவனே வேறுமணம் பூணஎன்றீர்;
வேறு மணம்பூண்டு மேவா திருந்தாலும்
வீறுமய லாகியுந்தன் மேல்நாடி நாங்கள்வந்தோம்;
வேண்டாமல் நீயும் வெறுத்துவிட லாகாது;
ஆண்டவனே! சத்தி அரிச்சந் திரவேந்தே!
ஆசைமிஞ்சி வாடி அனங்கன்அன லால்மெலிந்தோம்;
நேசமுடன் எங்கள் நிலையறிந்து, நீமுயங்கி,

### கலிவிருத்தம்

எம்மிருத னங்குழைய ஏகமுடன் உந்தன்
விம்முமணி மார்பகலம் மேவிஇதழ் உண்டு
செம்மையொடு வள்ளுகிர்சி றக்கவரை யிட்டுத்
தம்மனநெ டுங்கரண சாதினைபு ரிந்தே. 81

கோலமத னாடற்கு லாவிவித சித்ரச்
சாலவணி தங்களொடு தான்மருவி ஆவிச்
சீலமிக வேதயவு செய்துவரு நம்மை
ஏலவிது தள்ளில்இதம் இல்லைநிசம்" என்றார். 82

### நடை

வாய்த்த தனமழுந்த மாரன்நட னம்புரிந்து
ஏத்தமுடன் ஓர்பொழுதுக்(கு) எம்மைநலஞ் செய்துவிடும்!
இல்லா திருந்தால் இசைந்துவெகு பாவமுண்டு;
சல்லாபா!" என்றிருவர் சாத்தினார் **அம்மானை!**

சாத்துகின்ற மாதிருவர் தங்களைப்பார்த் தேதுரைப்பான்—
"கூத்துவனாய் வந்த கொடும்புலைமா தே! உமக்கு

---

பாடவேறுபாடு

நடை 2390 : 4 யாங்கள்வந்தோம் 1749

2393 : 3, 4 அனங்கனால் நாம்மெலிந்தோம் 1574

விருத்தம் 82. 1 : 3 லாவவித 1749

ஏத்த மொழிவசனம் இப்படியோ கத்தவிதம்?
ஆத்தா மயல்பெருகி ஆலிப்ப தாகாது!
மத்தோர் மனையவளை மண்டழிவு கண்டவனும்
உத்தபிற ஆடவன்மேல் உள்மோகங் கொண்டவளும்
கரவு புரிவோருங் கள்கொலைகள் செய்வோரும்
விரவு பலனழித்து வீணாகச் செய்பவரும்
காலனெனுஞ் செக்கில் கடியகரும் பாலையென்னச்
சேலழிந்து வாடித் தியங்குவதும் உள்ளபடி
இவ்வாறு செய்பவர்கள் என்பதியில் கிட்டாது;
செவ்வையுடன் நீங்களுறை தேசமதில் உண்டெனுமோ?"
என்றுமன்னன் சொல்ல, இருமாத ருந்திரும்பி,
"நன்றியுள்ள வேந்தே! நலமதனே! உந்தனுட
பொன்னணியும் வீரப் புயமீதில் ஆசைகொண்ட
மின்னைமரு வாதிருந்தால் வெத்தியல்ல!" என்றுரைத்தார்;
நெஞ்சகம்புண் ணாகி,நொந்து, நேரிழைமா ரைச்சினந்து,
கஞ்சமுக வேந்தன் கடுங்கோபங் கொண்டமர்ந்து,
பித்தருக்கும் பேதையர்க்கும் பேய்மதஞ்சே ருங்கரிக்கும்
புத்திநிதம் இல்லைஎன்ற போதகம்மெய் ஆகுமென்றே
மன்னனகத் தெண்ணி அந்த மாதுபுலைப் பெண்கள்தனைத்
தன்னகத்தில் நில்லாமல் தான்அகத்தும் என்றுசொன்னான்.
மன்னனுரை சொன்னவுடன் வாசல்கா வல்காரர்
கன்னியர்கள் தன்னைக் கடக்கவே தள்ளிவிட்டார்;
தள்ளிவிட்ட போதே தயங்கி, மிகமயங்கிக்
கள்ளவிழுங் கோதையர்தங் கண்ணீர் மிகவோடக்
கூந்தல் மலர்சரியக் கோலவளை தான்நெரியச்
சாந்தணியுங் கொங்கையிலே தானும்விழி நீர்சொரியத்
தள்ளாடி, மெத்தத் தடுமாறி யேபுலம்பித்
தெள்ளுதமிழ்க் கோசிகன்பால் சென்றுவிழுந் தேயழுதார்;
சென்று விழுந்தழுத தேனார் இருவரையும்
வென்றிமுனி வோன்அமர்த்தி வெம்பியசி ருங்கேட்டு,

---

பா. வே. நடை 2401 : 1 ஏற்ற 1749
2412 : 4 உன்னுடைய 1574
2430 : 3 மேவியசி 1574

மாறாத கோப மனஞ்சினந்து வீத்திருந்தான்!
வீறான செங்கதிரோன் மிக்ககிரி சென்றடைந்தான்;

### கனவு காணுதல்

அவ்விரவு மன்னவனும் ஆயிழையும் பாலகனும்
செவ்விய பூங்காவில் சித்திரமணி மண்டபத்தில்
பள்ளிகொண்டு தானும் பரிவாய்த் துயிலுகையில்
நள்ளிருளின் கூந்தல் நளினமெனுஞ் சந்திரமதி
சொல்லற் கரியதொரு சொப்பனமுங் கண்டனள்காண்;
செல்லமுடி வேந்தன் திருக்கொலுவில் வீத்திருக்க,
மன்னுபுகழ் நாலு மடவியர்கள் சூழ்ந்திருந்தார்;
உன்னுமந்த மாதில் ஒருமா(து) அரசனிடம்
வீத்திருக்க மூவர் மிகுந்தமன்ன னைப்பார்த்துக்
"காத்திருக்க வில்லை; கடக்குறோம் உன்னைவிட்டு"
என்றுநடந் தேகும் இளங்கொடியார் மூவர்களும்
நன்றுபுகழ் வேந்தனுட நன்மகுடம் ஆனதையும்
இட்டபணி உள்ளதையும் ஏந்தியவாள் ஆனதையும்
சட்டமுட னேவாங்கித் தான்நடந்து சென்றிடவே,
வல்லி கனவுகண்டு வாடிநொந்து தானெழுந்து
சொல்லரிய மன்னனிடஞ் சொல்லலுத்தாள் **அம்மானை!**

மன்னன் இதுகேட்டு, "மந்திரிபால் சொல்லிடுவோம்;"
என்னும் அளவில் இனியதொரு செங்கதிரோன்
"ஏதுவினை மன்னவனுக்(கு) எய்துமோ!" என்றுசொல்லி
ஓது மனம்வாடி உத்தெழுந்தான் **அம்மானை!**

போது விடிந்தவுடன் போத்தரிய மந்திரிபால்
மாதுடனும் மன்னவனும் மண்டுகன வும்முரைத்தார்.
அத்தனையுங் கேட்டு அமைச்சன்மிக வாடிநொந்து
மெத்த மனங்கலங்கி மெய்யுருகிச் சொல்லலுத்தான்—

---

பா. வே. 2437 : 4 கண்டாள்காண் 1574
2438 : 4 வீற்றிருக்கும் 1574
2442 : 4 உம்மைவிட்டு 1574
2453 : 3 போற்றிய 1749
2456 : 4 சொல்லலுற்றான் 1574 1749

"அரசர் தொழும்அரசே! ஐந்தருவே! எந்தையரே!
முரசமொழி மாமுனிவன் மூர்க்கமிகுங் கோசிகனால்
தீவினைகள் மெத்தவந்து சீமைதனை யும்மிழந்து
மேவியபொன் னாடைபணி மிக்கரதம் யானைபரி
எல்லாம் இழந்து இசைகா னகம்புகுந்து
பொல்லாங்கும் எய்திப் புதல்வனுடன் நாரியரும்
வேறாகி, வேறாய் மிகுவாதைப் பட்டுலைந்து,
மாறாகி இந்த வகைசிறிது நாளாகித்
தங்கி யிருந்ததொரு தையலுட நன்மையினால்
இங்கிதமாய் நன்மை இசைவுடனே உண்டாகும்;
போன தொருமூன்று பூவையரும் வந்திருப்பார்
ஆன கருமமிது; அய்யா!" எனவுரைத்தார்.
சத்திய கீர்த்திஉரை சாத்துமந்தச் சீர்கேட்டு
"உத்துநமக் கெய்தும் உரிமையெவற்(கு) ஏன்அகலும்?
வந்ததெல்லாம் ஏத்திடுவோம் வையகத்தில்" என்றுசொல்லிச்
சிந்தை மயக்கமுடன் சென்றிருந்தார் **அம்மானை!**

---

பா. வே. 2468 : 4 எனவுரைத்தான் 1574 1749
2470 : 4 கேயகலும் 1574

ஒப்புமை: அடி எண். 2457 — 2468. கதையின் இப்பகுதியில், அம்மானையின் சந்திரமதி கனவு காணுகின்றாள், அரிச்சந்திர புராணத்தில், அரிச்சந்திரன் கனவு காணுகின்றான். இரண்டு கனவுகளும் சற்றே மாறுபட்ட காட்சிகளைக் கொண்டனவாக உள்ளன.

கனவின் பயனை அமைச்சர் சத்தியகீர்த்தி உரைக்கும் பகுதி இது.

"அருவினை விளைத்த தெல்லாம்
கௌசிகன் அவனால் இன்னம்
வருவினை மிகவும் உண்டு
வளநகர் நாடி ழந்து
திருவினை இழந்து சேயும்
செவ்வியும் வேறு வேறாய்
பெருவினை முடிப்பான் தன்னைப்
பின்னையாம் வெல்வோம் என்றான்."

— அரிச். புரா. வேட்டஞ்செய் காண்டம் - 96

மங்கையிரு பேர்உரைத்த வாறுதனைக் கேட்டறிந்து
வெங்கோப மும்பெருகி வேதமுனிக் கோசிகனார்
கண்கள் அனல்பறக்கக் காலாக் கினியுடனே
மண்கள் அதிர்ந்திடவே வானகம்எல் லாம்நடுங்க
நீண்டசடை பூமியிலே நேசமுட னேதுவளப்
பூண்டசின மாய்விரித்துப் பூராயங் கொண்டுவிம்மிக்
கடிய நடையுடனே காவலவன் வீத்திருக்கும்
நெடிய வனந்தனிலே நேசமுடன் வந்துசொன்னான்;

## கலிவிருத்தம்

வளமைசேர் கவுசிகன் வாற சீர்அறிந்(து)
அழகுள மன்னவன் அறிந்து நம்முட
இளவல்அ மைச்சன்இன் றிசைத்த காரணம்
முளவள முடியுமோ வென்று முன்னியே, 83

மைந்தனும், மைந்தனை மகிழ்ந்து தந்திடும்
பைந்தொடி மடந்தையும், பார வேந்தனும்
முந்திவந் திசைமுனி முண்ட சப்பதம்
வந்துநின் றிறைஞ்சியே வழுத்தி ஏத்தினான். 84

## நடை

மாமுனிவன் கோசிகனும் வாறதுகண் டேஎழுந்து
பூமுடிசேர் மன்னவனும் பூவையரும் பாலகனும்

---

பாட வேறுபாடு

2473 : 3 வார்த்தைதனைக் 1574

ஒப்புமை : அடி எண். 2475 — 2477. தாம் அனுப்பிய இரு பெண்களும், சென்ற காரியத்தில் தோல்வியுடன் திரும்பி வந்தது கண்ட விசுவாமித்திரர், அரிச்சந்திரன் இருக்குமிடத்திற்குக் கோபத்துடன் வருகையில், அவருடைய தோற்றம்

'இருகணாலும் கனல்தெறித்து' 43
'பரவுபொற் றடமலர்ச் சடைவிரித்
தகல்பெரும் படியில் நால'.
— அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் - 44

சென்றெதிரே சென்று செயல்முனிவன் தாளிணையை
நின்றுதொழு தேத்தி நிலமீதி லேபடிந்தார்;
நின்று பணியும் நெடியமன்ன னைப்பார்த்து,
நன்றியில்லா மாமுனிவன் நாட்டமுட னேசினந்து,
ஓங்கிநெடுங் காலால் உதைக்கலுத்தார் **அம்மானை !**

ஓங்கிநெடுங் காலால் உதைக்குமுனி யைப்பார்த்துத்
தீங்கில்லா வண்ணஞ் சிவனருளைப் பெத்திருக்கும்
பாங்கனைய வேதப் பருங்கடலைக் கண்டொரு
மாதவனே! வேத வரதாப நாயகமே!
போதனைய பாதம் பொறுக்குமோ? புண்ணியனே!
நோகுமே உந்தனுட நொய்யும்மலர்ச் சீரடிகள்!
வாகுடைய மாமுனியே வஞ்சகம்யான் செய்ததுண்டோ?
ஏது கருமமய்யா என்மீதி லேகோபம்?
ஓதுமறை மாதவனே! உன்பாதம் நோகாமல்;''
நோகாமல் என்றுமன்னன் நோக்கமுடன் வாக்குரைக்க,
வாகான மாமுனிவன் வன்மையுடன் ஏதுரைப்பான்—

---

பாட வேறுபாடு

*2483 : 3* சியல்முனிவன் *1574*
*2486 : 3, 4* நாடிமன்ன னைச்சினந்து *1749*
*2487 : 3* உதைக்கலுற்றார் *1574*
*2489 : 4* பெற்றிருக்கும் *1574*

ஒப்புமை : அடி எண்: 2485 -- 2496. விசுவாமித்திரர் சினத்துடன் அரிச்சந்திரனைக் காலால் உதைக்க, உதைத்த கால் நோகுமே என அரிச்சந்திரன் வருந்திக் கூறுதல்.

'... ... ... உதைத் தனனுதைத் திடலு முன்றன்
பருமலர்க் கழல்சிவப் புறும்எனாக் கைகளால் வருடலுற்றான்'

—அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் -- 48

"வஞ்சகஞ்சேர் மன்னவனே! வையகத்தில் என்னைநம்பி
இஞ்சலுடன் நாட்டகத்தில் எய்திவந்து தானிருந்த
பட்சியுடன் ஊர்வனவும் பாரவிலங் கானதையும்
கொட்சையுடன் நீயுங் கொலைபுரிந்து கேடுபண்ணி,
மாகொடுமை செய்த வகைஏ தடா! அரசா!
நீகடுக ஓதாய் நிலமீதில்;" என்றவுடன்,
"மாமுனியே நீர்அனுப்பி வந்தமிரு கங்களென்றும்,
ஆமினிய பட்சி அடர்ந்தூர் வனகள்என்றும்
எள்ளளவும் நெஞ்சத் திசைந்தடியேன் கண்டிருந்தால்
உள்ளபயிர் ஏரி யுடன்காவும், நீள்வயலும்
ஏதழிந்து போனாலும் எந்தவித மானாலும்
பூதலத்தில் ஓர்மிருகம் பொன்றிவிழக் கொல்வதில்லை;"

---

பா. வே. 2500 : 2 உன்நாட்டில் 1749

ஒப்புமை: அடி எண். 2499 — 2522. விசுவாமித்திரர், அரிச்சந்திரனை நோக்கி, "நான் அனுப்பிய விலங்குகள், பறவைகள், பன்றி முதலியவற்றுக்குத் துன்பம் செய்தாய்; நான் விடுத்த என் இரு பெண் மக்களை இகழ்ந்து விரட்டினாய்" எனக் குற்றஞ்சாட்ட, அரிச்சந்திரன், "நீங்கள் அனுப்பியவை என அறியேன். அறிந்திருந்தால் அவை ஊறு விளைத்தபோதிலும் நான் அவற்றிற்குத் துன்பம் செய்திருக்க மாட்டேன்" எனக் கூறுதல்.

'மாவினைத் துணிசெய்தாய் கேழலுக் கிடர்செய்தாய் வானளாவும்
காவினைப் பொடிசெய்தாய் நீதியா லீன்றவென் காதன்மக்கள்
பாவினைப் பழிசெய்தாய் தீவினைக் குரியதோர் பாவிநீதான்
ஆவினற் றோல்பொதிந் தடுபுலித்தொழில் செய்தா யழகி
தென்றான். 50

நாடழித் திடினும்நன் னகரழித் திடினும்என் னறும லர்ப்பூங்
காடழித் திடினும்கா லறக்கிளை யினைக்களை யினுங்கொன்
றீடழித் திடினும்நீ தான்விடுத் தனைஎனா யானறிந்தாற்
பாடிழைத் திடுவனோ என்றரிச் சந்திரன் பலமொ ழிந்தான்' 51

'வடித்நல ழிசைநினக் கிசைக்கவே
வந்தஎன் மக்கள் தம்மை
அடித்தகா ரணமெலாம் எனக்குநீ
தக்கவா றறைதி யென்றான்'.

— அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் - 53

என்றுமன்னன் போற்ற இயல்முனிவன் ஏதுரைப்பான்—
"நன்றடா! யான்விடுத்த நாகரிகப் பன்றிதனைக்
காயப் படுத்திவிட்ட காரியம்என்? சொல்; அரசா!"
"நேயத் தவமுடைய நித்தனே! நீவிடுத்த
பண்ணிஅது வென்று பலவிதம்நான் கண்டனென்றால்
எண்ணியபல் சேனை இறந்தாலும் ஒன்றுசெயேன்;"
"புத்தியத்த மன்னா! புகழ்பெறவே நான்பயின்ற
பத்தியுள்ள மாதிருவர் பாடிவந்த பேர்தமக்கு
ஆய்ந்து மனங்குளிர ஆங்கவருக் கும்வரிசை
ஈந்தும் அனுப்பாமல் ஏன்டா துரத்திவிட்டாய்!"
என்று முனிவன் எரியெனவே கண்சிவந்து
நின்று பகர்ந்திடவே, நேசமன்னன் ஏதுரைப்பான்—
"ஆடல் இதமும், அரியசித்தி ரத்திதமும்,
பாடல் இதமும் படித்துவந்த பாவையர்க்கே
எண்ணரிய சொர்ணம் இசைந்தபணி ஆடையுடன்
வண்ணமுட னேகொடுத்தேன்; வாங்காம லேஎறிந்து
மகுட முடிக்கவிகை வாளுடன்வெஞ் சாமரையும்-
தகுமோ தியாகம்அவர் தாரும்என்றார்; இல்லைஎன்றேன்;
அவ்வாறு விட்டு அடைந்துதம்மைப் புல்குமென்றார்;
ஒவ்வாது என்றுசொல்லி, உண்மையுடன் தள்ளிவிட்டேன்;
அய்யாஇவ் வா(று)"என்(று) அரசன் உரைத்திடவும்
எய்யாத கோபம் எழும்பிமுனி நிற்கலுற்றான்;
"புல்லோர்கள் செய்யும் புளைபொறுத்துக் கொள்ளுவது
நல்லோர்க ளுக்குமுறை; நாயகமே!" என்றுசொல்லி
ஏற்றிப் பலகால் இறைஞ்சியிறைஞ் சித்தொழுது
போற்றிநிற்கக் கோபம் பொறுத்தவர்போ லேஇருந்து,

---

பாடவேறுபாடு

2511 : 2 போற்ற 1574 1749
2512 : 2 யான்பயின்ற 1574 1749

"மன்னா!உன் போலுமிந்த வையகத்தில் பாசாங்கும்
உன்னிதமும் மாகுழைவும் உண்டெனவும் கண்டறியேன்;
இத்தனைமா குத்தம் இசைந்துநீ செய்ததுவும்,
கத்துமிரு கம்பறவை காயம்படப் போட்டதுவும்,
வன்ன வராகமதை மாவடுக்கள் செய்ததுவும்,
கன்னியரை நீயடித்துக் கண்டுதள்ளி விட்டதுவும்
எல்லாம் பொறுத்திடுவேன் எந்தனுரை கேளும்" என்று
உல்லாச மாமுனிவன் ஓதுவான் **அம்மானை!**

"பாரமுடி வேந்தா! பரியகுடை வல்லாளா!
வீரமுடன் நான்பயின்ற மின்போல் இடையுடைய
வல்லியிரு பேர்தனையும் வாய்த்தமணஞ் செய்துகொண்டு
வில்லிமத வேளெனவே வீத்திருங்காண்" என்றுசொல்லி,
அரிய புகழ்முனிவன் அன்பாக வேயுரைத்தான்;
பெரிய புகழுடைய பேர்வேந்தன் ஏதுரைப்பான்—
"தவத்தில் பெரிய தயாபரம! மாரிசியே!
சிவத்தில் பெரியதொரு சீர்முனியே! கேட்டருளீர்;
அக்கினியுள் ஈசன் அருளால் எமக்குவந்த
மைக்கொடியாள் சந்திரமதி வல்லியா ளானதொரு

---

பாடவேறுபாடு

2542 : 1, 2 கன்னியரையடித்துக் 1574
2551 : 4 மாரிஷியே 1749

ஒப்புமை: அடி எண். 2537 — 2549. விசுவாமித்திரர், அரிச்சந்திரனை நோக்கி, "நான் அனுப்பிய விலங்குகள் பறவைகள், பன்றி ஆகியவற்றை நீ அழித்த குற்றத்தையும் நான் அனுப்பிய என் மக்களான இரு பெண்களை இழிபடுத்தி விரட்டிய குற்றத்தையும் நீ இப்பெண்கள் இருவரையும் மணந்துகொண்டால் பொறுப்பேன்" எனக் கூறுதல்.

கொய்து மாக்களைக் கொன்றதும் பன்றியை
எய்த தும்மிசை கேட்டடித் தீனமாய்
வைததும் என்றன் மக்களை நீமணஞ்
செய்திடிற் பொறுப்பே னென்று செப்பினான்.'

—அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் -60

தாரமன்றி வேறே தரணிதனில் உள்ளமின்னார்
சீரியதாய்ப் பிள்ளை சிறந்தபிறப் பாகும்"என்றான்;
சித்தமுள்ள மாமுனிவன் சிந்தையுற வேகேட்டு,
உத்த வகையுடனே ஓதுவான் பின்னொருசொல்—
"உங்கள்குலத் துள்ளோர் ஒருதார மல்லாமல்
மங்கையிரு பேரை மணங்கள்மிகச் செய்திலையோ?
இந்நிலத்தில் என்சொல் இகழாதே; மன்னவனே!
கன்னியிரு பேர்தனையுங் கைப்பிடித்துக் கொள்ளும்"என்றான்;
"புத்தி அறியாமல் பொல்லாங்கு செய்பவர்க்கே
பத்திநிறை ஓதிப் பதமையுடன் புத்திசொல்லிக்
காற்றும் பெரியவர்கள் காசினியில் பொல்லாங்கை
ஏற்கும் படிக்கே இசைப்பாரோ? மாதவனே!
பூதலத்தில் நாயடியேன் புன்மைசெய்யப் போனாலும்
நீதம் உடையவரே! நீர்விலக்கல் நீதிகண்டீர்;
இவ்வாறில் லாமல் இயம்பினீர்; இவ்வசனம்
ஒவ்வாது போம்"என்(று) உரைத்தான் அரசர்பிரான்;
பின்னும் பெருந்தவத்தோன் பேறாக வேயுரைத்தான்;
உன்னும் அரசன் உகந்துதள்ளித் தானுரைத்தான்;
"நேயமுனி ஆகி நிறைபெருக்கும் வல்லவனே!
பேயனுக்கும் அந்தப் பெரும்புலைப்பெண் ணார்களைத்தான்
எத்தனைக்கு நீர்தாம் எடுத்துரைத்துச் சொன்னாலும்
சித்தமதில் எண்ணேன் செயல்முனியே!" என்றவுடன்,
கோபம் பெருகிக் குறுநகைகொண் டேமுனிந்து
தாபமுடன் கோசிகனுஞ் சாத்துவான் அம்மானை!

விட்டமிரு கத்தைவெட்டி வீறுபன்றி தன்னையெய்தாய்;
கட்டழகு கொண்டஎந்தன் கன்னியரைத் தள்ளிவிட்டாய்!

பாட வேறுபாடு

2559 : 4 மல்லாது 1574
2561 : 3 இகழாமல் 1749
2566 : 3 இசைப்புரோ 1749
2568 : 3 நீவிலக்கல் 1749
2578 : 3 சாற்றுவான் 1574

உய்தமுடன் நீகடுத்து உண்மையன்றி யேமிகுத்துச்
செய்தகுத்தம் அத்தனையும் சென்றுபொறுத் தேயிருந்தேன்;
மின்நேர் இடையுடைய மெல்லியரைக் கொஞ்சமுடன்
துன்னும் புலையர்குலத் தோகையென்று நீயுரைத்தாய்!
அரசா! உனைச்சபித்து ஆவிதனை யேபறித்து
விரசெறியுந் தூளிதமாய் மேதினியில் செய்துவிட்டால்
உண்டோ உனக்குதவி? ஓதடா!'' என்றுரைத்தான்.
''தண்டமிழ்சேர் மாமுனியே! தாதைநீர்; பாலகன்நான்;
ஆயும் பிதாமுனிந்தால் ஆதரவு பாலருக்குத்
தூயபிதா அல்லாது தோன்றுமோ?'' என்றுரைத்தான்;
''நீதியுத்த மன்னவனே! நீள்உலக முப்புகழ
ஆதியுடன் வாழ்வாய் அகலாதே என்வசனம்;''
என்றென்று கோசிகனும் ஏத்தமுடன் கூறிடவே,
நன்றென்று கொள்ளாமல் நல்லமன்னன் ஏதுரைப்பான்—
''சத்த கடல்ஏழுந் தான்சுவறிப் போனாலும்,
மத்துமொரு தெற்கு வடக்கிரவி யானாலும்,
பூமிதனில் என்னைப் பொடிபடுத்திப் போட்டாலும்
மாமுனியே! வேறு மறுதாரங் கொள்ளன்'' என்றான்;

## கவுசிகன் சாவமிட்டது

''குத்தமெல்லாம் நான்பொறுத்துக் கொண்டிருந்தும் சொன்னபடி
சத்துங்கே ளாதபடி தான்இகழ்ந்து, நீதுணிந்து,
இப்படிக்குத் தானே இசைந்தாய்என் வார்த்தைதள்ளி
வெப்படர்ந்த மன்னவனே! மென்றெரித்து விட்டிடுவேன்;

---

பாட வேறுபாடு

2581 : 1, 2 உய்த முடன்கடுத்து 1574
2589 : 4 பாலகர்க்கு 1574
2591 : 1 நீதியுள்ள 1749
2593 : 3 ஏற்றமுடன் 1749
2594 : 4 ஏதுரைத்தான் 1574
2596 : 3, 4 வடக்கிரவித் தானாலும் 1749
2599 : 4 சொன்னசெய்தி 1749

ஏரடா சாபம்"என்று ஏத்தமுனி வோன்சினந்து.
"சீரடர்ந்த மங்கையரைத் தீண்டாப் புலைச்சிஎன்றாய்;
நீயே புலையனுக்கு நீண்டபல தொண்டுபண்ணித்
தூயபுவி மீதலைவாய் சொன்னேன்;" எனச்சபித்தான்.
சாபந் தனைஏத்துத் தார்வேந்த னுங்கலங்கிக்
கோபமுள்ள கோசிகன்பால் கூறலுத்தார் **அம்மானை!**

"பாலமுர்தம் ஊட்டிப் பரிவாய் வளர்த்திடும்தாய்
ஆலமிட்டால் பிள்ளை அறிந்துதள்ளிப் போறதுண்டோ?
வாரி கொதித்தெழுந்தால் வையகத்தில் வாழுமவர்
நேருங்கரை கட்டி நிறுத்திவிடக் கூடுமோதான்?
வானத்(து) இடிவிழுந்தால் மானிடவர் கைக்குடையால்
ஆனபடி தாங்கி அதைவிலக்க வல்லவரோ?
மாமுனியே! எவ்வகைக்கும் வல்லவன்காண்; உள்ளபடி
கோமுனியே! உன்செயல்காண்; கோலமுடன்" என்றுசொல்லி
அரியபுகழ் வேந்தன் அகலநின்றான் **அம்மானை!**

உரியபுகழ் மாமுனிவன் ஓதுவான் பின்னொருசொல்-

---

பாட வேறுபாடு :

2607 : 2 தனையேற்றுத் 1574 1749
2608 : 3 கூறலுற்றார் 1574 கூறலுற்றான் 1749
2612 : 4 கூடுவதோ 1749

ஒப்புமை : அடி எண். 2609 — 2612. விசுவாமித்திரர் சாபமிட்டதும், அரிச்சந்திரன் விசுவாமித்திரரை நோக்கிக் கூறும் மொழிகள்

'கொஞ்சிப் பேசும் குழவிசொற் குற்றத்தான்
வஞ்சித் தன்னை வனமுலைப் பாலினில்
நஞ்சிட் டாலதை நாடிவி லக்குநன்
நெஞ்சத் தாருள ரோஇந் நிலத்திலே.' 71

'வாரி காய்ந்து கொதித்திடின் மாற்றத்தண்
ணீரி யாவர் தருவரந் நீதியிற்
சீரி யாயெனை நீமிகச் சீறிடின்
யாரி யாரஞ்ச லென்பவ ரென்றனன்'.

— அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் - 72

"மன்னா! சபித்தமென்று மாகவலை கொள்ளாதே;
இந்நாளின் சாபம் இனியகத்தி நன்மையுடன்
எப்பரிசு வேணும் இதங்கள்மிக வேகொடுப்போம்;
செப்பமுட னேநடந்த சேதிகேள்;" என்றுரைப்பான்.
'மன்னா!உன் தாதை மகிழ்ந்துசங்கம் மூன்றளவும்
பொன்னான பூவுலகைப் போதமிக ஆண்டிருந்தான்;
அந்நாளில் நீபிறந்து அஞ்சுவய தானவுடன்
இந்நிலத்தில் ஆசை இகழ்ந்துதிரி சங்கரசன்
மகுட முடியுனக்கு வண்மையுட னேசூட்டித்
தருமா குருக்களெனுஞ் சார்ந்த வதிஷ்டரிடம்
நண்ணி அணுகி நமஸ்கரித்துப் போத்திநின்று,
'தண்ணமரும் என்குருவே! தாரணிமேல் ஆசையற்றேன்;
சட்டையுடன் மோட்சந் தரக்கிருபை செய்தருளும்;
இட்ட முனியே!' எனஉரைத்து நிற்கலுத்தான்;
அப்போ வதிட்டர் அரசன் தனைநோக்கி,
'இப்போமண் ணாசை இகழுதற்குக் காலமில்லை;
மன்னா!இம் மேனி மலஞ்சலமு மல்லாது
பொன்னான மேனியல்ல; பொன்னுலகில் செல்வதல்ல;
இந்தச் சடத்தைவிட்(டு) ஏத்தசடந் தந்தினிமேல்
சுந்தரஞ்சேர் சொர்க்கமது துன்பமற நல்கிடுவோம்;'
என்றுமுனி சொல்ல இயலரசன் கேளாமல்,
'நன்றுகதி இவ்வுடலால் நல்குமிப்போ' என்றுநின்றான்;
'மன்னா!இச் சட்டையுடன் வானுலகத் தேயிருத்த
என்னாலே கூடாது;' என்றுரைத்தார் அம்மானை!

---

பாட வேறுபாடு

2622 : 1, 2 செப்பமுடன் முன்னடந்த 1749
2622 : 4 என்றுரைத்தான் 1749
2628 : 4 வசிட்டரிடம் 1749
2629 : 3 நமக்கரித்துப் 1749
2629 : 4 போற்றிநின்று 1574 1749
2632 : 4 நிற்கலுற்றான் 1574 1749
2633 : 2 வசிட்டர் 1749
2640 : 4 தென்றுநின்றான் 1749

‘உம்மாலே கூடாத துண்டோ? உலகுதனில்
பெம்மானே’ என்றுமிகப் பின்னும் பலவுரைத்தான்:
‘எத்தனைசொன் னாலுமிது எம்மால் முடியாது;
புத்தியுள்ளாய்!’ என்று புகழ்ந்துமிகக் கூறிநின்றான்;
‘ஆமெனவே என்னை அமரர்பதி சேர்ப்பதற்கு
மாமுனியே கூடாது வையத்தில் என்றுரைத்தீர்;
எந்தப் படியும் இனியசடந் தன்னுடனே
நந்தாம லேஇனிய நல்லகதி யான்பெறவும்
வேறோர் குருவினை மேதினியி லேதொழுகப்
போறேன்’ எனவுரைத்த போது வதிஷ்டமுனி
கோபமுடன் சீறிக் ‘கொடும்புலையன் ஆவை’என்று
சாபமிட்டார்; அப்போ தயங்கித்(தி)ரி சங்கரசன்
இட்டபணி மேனி இசைமகுட முங்கறுத்துக்
கெட்டபுலை மேனியனாய்க் கேடுபெத்து வாடிநொந்தும்
அச்சாபத் தோடே அவுக்கமென் மேலைஎண்ணி
எச்சோம் இளைச்சோம் எனநடந்து மோடிவந்து,
‘பேருடையாய்! தஞ்சம்’என்று பேதமற வுந்தொழுதான்;
வீருடனே வந்த விபரமெல்லாம் நான்கேட்டு,
‘அஞ்சாதே மன்னா! அரியகுரு நாமுனக்கு;
இஞ்சலுடன் இவ்வுடலோ டேற்றுவோம் சொர்க்கம்’என்று,
வாய்த்தகரு மங்கள் வகையாக வும்முடித்து,
‘ஏத்த புலையகத்தி. இன்பமுடன் சீரழுத்தி,
வானுலகின் தேவர்களை வந்துதிரி சங்கரசைத்
தானுமழைத் தின்பசொர்க்கந் தன்னில்விடும்’ என்றுரைத்தேன்;
ஆன மொழிகேட்(டு) அமரரெல்லாம் பேசாமல்
‘ஈனச் சடமுடனே ஏதுகதி சென்றிடுவான்?’

---

பாடவேறுபாடு

2645 : 3 என்னால் 1574
2646 : 4 கூறிநின்றார் 1749
2651 : 1 வேறே 1574
2664 : 2 புலையகற்றி 1574

என்று மிகவிருந்தார்; இன்பமுட னேநாமும்
நன்றுதவஞ் சொர்க்கம் நயந்தபதிக் கேகுமென்று
பண்ணுந் தவத்தால் படிகட்டி யேத்திவைத்தோம்;
நண்ணும் படியேறி நல்லமன்னன் சேருகையில்,
"நீசன் சடமுடனே நீடுசொர்க்கத் தேகுவனோ?
ஊசெ"னவே தள்ளிவிட்டார் உண்மையுள்ள தேவரெல்லாம்;
தள்ள,விழும் மன்னவனார் 'தஞ்சமெ'ன்ற சொல்லுரைத்தான்:
விள்ளுமொழி நான்கேட்டு, 'வீழாமல் நில்லும்'என்று
துட்டமிகுந் தேவர்களைத் தூளிதங்கள் செய்யவென்று
இட்டமுடன் கோபம் இசைந்துமிக வேபெருகி,
வடபாரி சத்தில் வரும்மீன்கள் அஞ்சுதன்னைத்
திடமாக வேபிடுங்கித் தென்திசையி லேஎறிந்து
மத்தும் புவியில் வகைக்குவகை உண்டுபண்ணிச்
சுத்தும் பரந்திடவே சொல்அமரர் எல்லோரும்
வந்து தொழுதிறைஞ்சி வாடிநொந்து நின்றார்கள்;
அந்தநெடுங் கோபம் அமர்ந்துமிக வேயிருந்தோம்;
தேவர்கள்எல் லோரும் திரிசங்கு வேந்தனுக்கு
மேவுகதி நட்சத் திரபதவி வேணுமென்றார்;
வேந்தனிந்த வாறு மிகவுநல்ல தென்றுரைத்தான்;
ஆய்ந்தபடி நட்சத் திரயருளு வோம்எனவே
நாமுரைத்தோம் அவ்வாறு நல்லமன்ன னுங்கேட்டான்;
ஆமெனவே அவ்வா(று) அருளினோங் கண்டாயே;
இவ்வாறு செய்தோம் இசைந்துனது தாதையர்க்கே;
செவ்வையுடன் என்வசனம் சென்றுதள்ள வேண்டாம்நீ;

---

பாட வேறுபாடு

*2671 : 4* யேற்றிவைத்தோம் 1574
*2672 : 4* செல்லுகையில் 1574
*2676 : 1, 2* விள்ளுமொழிகேட்டு 1749
*2678 : 3, 4* இசைந்து மிகப்பெருகி 1574
*2681 : 1* மற்றும் 1749
*2682 : 1* சுற்றும் 1749
*2682 : 4* எல்லவரும் 1749
*2684 : 3, 4* அமந்து மிகவிருந்தோம் 1749

வாழும் படியே மகாசீர் பெறும்படியே
ஆளும் படியே அரியபுக ழாயிருக்கப்
புலைச்சாப மும்மகத்திப் போதநல முந்தருவேன்;
சிலைக்காமன் ஏற்குமெந்தன் செய்யிழையைக் கொள்ளும்'' என்றான்.
''அய்யா!எவ் வாறு அருளினீர்?'' என்றுசொல்லி
''வையகம்வா னம்பிரமன் மால்பரம னும்மறிவார்;
இப்பால் அடியேனுக்(கு) ஈதுசாப முங்கொடுத்தீர்:
மெய்ப்பாக நீரும் விலக்கினா லுந்தவமாய்;
சொல்லா வசனமொழித் தோகைபுலைப் பெண்கள்தனைப்
புல்லேன்'' எனவும் புகழ்ந்துசொல்லி ஏதுரைப்பான்—
''தெய்வேந் திரனரசைத் தேவரீர் தந்தாலும்
மெய்சேர்ந்த முத்தி மிகுத்தநலம் ஈந்தாலும்
வாழுந் தனம்அழிந்து யாச்சேதம் வந்தாலும்
ஆளும் புவியும் அரசிழந்து போனாலும்
தாண்டவங்க ளாடுஞ் சதாசிவனார் தாமறிய
வேண்டேன் பிறதாரம்; வேதமொழி மாமுனியே!''
என்றரசன் சொல்ல இயல்கவுசி கன்பார்த்து,
''நன்றடா மன்னா!உன் நாடரசுந் தாறன்என்றாய்;
வாடாமல் உள்ளம் மயங்காமல் அன்புடனே
கோடாமல் நீயுங் கொடு;மன்னா!'' என்றிடவே
''விரகப் புலைச்சியரை மேவிநகர் ஆளாமல்
அரசைக் கொடுப்பதிது ஆனசொர்க்கம்'' என்றரசன்,

---

பாட வேறுபாடு

2695 : 2, 3, 4 மும்மகற்றிப் போத நலந்தருவேன் 1574
2698 : வையகம்வா னம்மறிய மால்பிரம னும்மறிவார் 1749

ஒப்புமை : அடி எண். 2709—2712. விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம், ''நீ தருகிறேன் என உரைத்த நாட்டினைத் தருக'' எனல்.

'மருவு நாடும் வளநக ரும்பெருந்
திருவு மீகுவ னென்றனை செவ்வியோய்
தருவ னென்ற மொழிதவ றாமலுன்
அரச ளிக்கின் அமையுமெ னச்சொனான்'.

—அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் — 77

"நல்லதுகாண்! மாமுனியே நானிலம்எல் லாம்உனக்கே
இல்லையென்று சொல்லாமல் ஈந்தேன்;" என உரைத்தான்.
நீட்டிமுனி தன்கையிலே "நீர்வாரும்" என்றுசொன்னான்;
தாட்டிமைசேர் மன்னன் தயவாக நீர்எடுத்து,

## நாடு அருளுதல்

### கலிவிருத்தம்

"ஊரும் நாடும் உயர்மலர்ச் சோலையும்
தேரும் ஆனையும் சீர்பரி தானையும்
தீரு லாவும்நெ டுங்கன வாவியும்
தாரை" என்றரிச் சந்திரன் செப்பியே, 85

"ஆய்ந்த மந்திரி ஆடகஞ் சூடணி
தேய்ந்த நுண்ணிடை சேடியர் தம்முடன்
வாய்ந்த கோவில்சிங் காசனம் வாழ்அர(சு)
ஈந்தம் நாம்"என்(று)இ றைத்தனன் தாரையே. 86

### நடை

"தேசமெல்லாந் தாரை; சிறந்த பதிதாரை;
கோசமத யானை கொடும்பரிதே ரும்தாரை;
சேனைஉடன் தாரை; செழுமன் னருந்தாரை;
ஆன அமைச்சர்களும் அன்பான பாங்கியரும்

---

பாட வேறுபாடு

விருத்தம் 85. 1 : 3 உயர்மலைச் 1574
நடை 2720 : 3, 4 கொடும்பரியுந்தாரை 1574

ஒப்புமை : அடி எண். 2719 — 2726. அரிச்சந்திரன் விசுவாமித்திரர்க்கு நாடு, நகர், யானை, பொன் முதலானவற்றைத் தாரை வார்த்துத் தருதல்.

'வைய நின்னது மாநகர் நின்னது
வெய்ய வாசியும் வேழமும் நின்னபொற்
செய்ய தேர்களும் செல்வமும் சேவிக்கும்
தைய லார்களும் தானையும் நின்னவே'.

— அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் - 80

தேடுந் திரவியமுஞ் சிங்கார வாவிகளும்
நீடுபுகழ் சேர்வனமும் நீண்டபல மண்டபமும்
பேர்ஆரும் மாமுனியே! பேதகங்கள் இல்லாமல்
நீர்ஏரும் ஏரும்; நிறைதாரை தாரை"என்று
சீரையேத் தும்கெடுக்குஞ் சித்தமுனிக் கொத்தபடி
தாரைவார்த் துக்கொடுத்தான் சத்தியரிச் சந்திரனும்;
மன்னன் புனல்வார்க்க வையகத்தை யேத்தமுனி
தன்னரசு என்றே தரணிமுழு தும்மறியப்
பாரியிடச் சொல்லிப் பலசீருந் தான்உரைத்து
வீரியஞ்சேர் மாதவரில் வேண்டியபே ரைக்கூட்டித்
தோரணமுங் கட்டிச் சுருதியுடன் வாருமென்று
காரணஞ்சேர் மாமுனிவன் கட்டளைகள் இட்டுவிட்டு,
வாரணஞ்சேர் மன்னவனை வன்மையுட னேபார்த்து,
"ஆரணஞ்சேர் சிந்தை அரிச்சந் திரவேந்தா!
நீயணிந்த ஆடைபணி நீண்டமகு டங்களுடன்
சேயணிந்த தூசுஞ் சிறந்தமணி மாலையுடன்
வல்லி அணிந்திலங்கும் வாய்த்தமணி ஆபரணம்
சொல்லரிய பட்டாடை தோன்றுமுத்து மேகலையும்
இங்கே எடுத்துவையும்" என்றவுடன் மன்னவனார்
தங்களுடை யல்லாமல் தக்கபணி யுள்ளதெல்லாம்

---

பாட வேறுபாடு

2729 : 4 ஏற்றமுனி 1574
2742 : 4 யானதெல்லாம் 1574

ஒப்புமை : அடி எண். 2735 — 2741. விசுவாமித்திரர் அரிச்சந்திரனை நோக்கி, "உன் ஆடை, அணி முதலானவற்றை எடுத்துக்கொடுத்துவிட்டுச் செல்!" எனக்கூறல்.

'துணியும் தனிநெஞ் சுடையா னினது தோண்மாலை
மணியும் வளையும் வலையங் களுநின் வடிவாளும்
அணியும் முடியும் சேயும் தாயும் அணியும்பொற்
பணியும் கழலும் தந்தே கென்று பலசொன்னான்.'

— அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் - 87

தானே எடுத்துதவித் தார்வேந்தன் நிற்கலுற்றான்;
"ஞானமொழி மன்னவனே! நல்லகலை யத்தனையும்
நேசமுடன் வையும்"என்று நீள்முனிவன் கேட்கலுற்றான்.
"தூசெவரை யாலிரப்பேன் சொல்முனியே!" என்றவுடன்,
"தாறேன் துகிலுனக்குத் தார்வேந்தே!" என்றுசொல்லி
வீறான காவி மிகவடர்ந்த கூறையிலே
எண்ணரிய ஈரும் இசைபே னுடன்சேர்த்துத்
திண்ணமுடன் வாசனைகள் தீண்டாத நாத்தமுள்ள
பீறல் துணியைப் பெருமானுக்(கு) எட்டுமுழம்
வீறு மடந்தையர்க்கு மிக்கமுழம் பத்தாறும்

---

பாட வேறுபாடு :

2747 : 4 என்றவுடன் 1574

ஒப்புமை : அடி எண்: 2744 — 2757. விசுவாமித்திரர் அரிச்சந்திரனை நோக்கி, "நீயும் உன் மனைவியும், மகனும், அணிந்துள்ள ஆடைகளைக் கழற்றிக் கொடுத்தேகுக" என, அரிச்சந்திரன், "நாங்கள் யாரிடம் போய்க் கட்டுவதற்கு ஆடை யாசிப்பது" என வருந்திக் கூற, விசுவாமித்திரர் தான் கட்டும் ஆடையிலிருந்தே துணி கிழித்து மூவருக்கும் கட்டு தற்குத் துணி தருதல்.

"வனையும் கழலாய் மகனும் நீயும் மடவாளும்
புனையும் கிரணக் கலைதந் தகலப் போஎன்றான்". 89

"ஆரை யிரப்போம் ஆடை அளித்தா லரனேஎன்
றூரை அளித்த காவல னின்றே உயிர்சோரும்
தாரை நினைந்தே கௌசிக னாங்குத் தான்மூடும்
சீரை கிழித்தே மூவகை இட்டுச் செலஉய்த்தான்" 90

"நாறற் பாழ்ந்துணி சீலைப் பேனொரு நாண்மாறா
பீறற் சீலையி தாருக் கென்றுரை பேசாமே
மாறற் காலமி தாகிற் செய்வதென் மற்றென்னாக்
கூறற் காமிசை பூணக் கோனது கொண்டானே". 91

"காவிச் சீரை உடுத்துக் கூறை கழித்துச்சென்
றாவிக் காகுல மாகச் சேனை அழுங்கப்போய்ப்
பாவிக் கோசிக னார்முன் னாலொரு பால்வைத்துத்
தாவித் தாளிணை பூசித் தேவிடை தாஎன்றான்".

—அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் – 92

பாலனுக்கு மூன்றுமுழம் பண்பாக வேகிழித்துச்
சீலமுள்ள மாமுனிவன் செப்பமுட னேகொடுத்தான்;
மாமுனிவன் ஈந்த வகைக்கலையைக் கொண்டாடிக்
கோமகனும் பாலகனுங் கோதையருந் தான்புனைந்து
தாமணிந்த பட்டாடை தன்னைமுனி வர்க்களித்தார்;
சாமமறைக் கோசிகனுந் தானுமறுத்(து) ஏதுரைப்பான்—
"கொத்தவனே! எம்மையெவர் கொண்டரசென்(று) ஏத்திடுவார்?
உத்தவள மாக உகமைபெற எந்தனுக்கு
மன்னர் அமைச்சர் வகையுலவும் பாங்கியரை
உன்னியபார் சேனை யுடன்பணியச் சேதிசொல்லி
மாளிகையும் மண்டபமும் வாவிவன முங்காட்டி
ஆழிஉல கறிய அயல்நாட்டுக் கேகுமென்று,

---

பாடவேறுபாடு

2758 : 2, 3, 4 கோசிகனார் தான்மறுத்து மேதுரைப்பான் 1749
2759 : 1 கொற்றவனே 1749
2759 : 4 ஏற்றிடுவார் 1574
2760 : 1 உற்றவள 1749
2762 : 4 செய்திசொல்லி 1749
2764 : 4 கேகுமென்றார் 1574

ஒப்புமை : அடி எண். 2758 — 2766. விசுவாமித்திரர், அரிச்சந்திரனிடம், "நீ நேரில் வந்து நாட்டையும் பிற செல்வங்களையும் என்னிடம் ஒப்புவித்து அமைச்சர் முதலானோரிடம் சொல்லிச் செல். அவ்வாறு நீ செய்யவில்லையேல் என்னை எவர் அரசன் என ஏற்பர்?" என்று கூறுதல்.

"இப்புத் திக்கினி தொத்தனன் ஆள்விடு கென்று
குப்புற் றேகலும் கௌசிகன் மீளவும் கூவித்
தப்புத் தீர்தரத் தந்தவப் பொருளெலாம் பதிவந்
தொப்புத் தந்துபின் போவெனா மன்னனுக் குரைத்தான். 108

பார ளித்தனை புரக்கநின் பதியிடைச் சென்றால்
ஆர ளித்தனர் என்பார்நின் னடியவர் எல்லாம்
ஊர ளித்திட வுடன்வரத் துணிதியீ தொழியின்
நீர ளித்ததே எனக்குமண் ணினக்கெனா மொழிந்தான்".

— அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் - 109

தேர்ஏறி மாமுனிவன் சேனையுட னேநடக்கப்
பார்ஏறி மன்னவனும் பாவைமக ளும்நடந்தார்.
வேட்டைசென்ற காடுவிட்டு மிக்கவன முங்கடந்து
தேட்டமுள்ள சேனையுடன் செய்யபதி மீதுவந்தார்.
கண்டதொரு கன்னியருங் காளையரும் பாலகரும்
மண்டலத்தை ஆளும் மகராச ராசபிரான்.

## கலிவிருத்தம்

கற்பகத் தருவனங் கனிந்தி லங்கிய
அற்புத மெனுமெழில் அயோத்தி மாநகர்
சற்பனை செயுமுனி தனக்கு மன்னவன்
நற்புடன் அருளிய ஞாயம் எதென்றே! 87

எண்ணுவர் கவலைகொண் டேங்கி வாடியே
நண்ணிய கருமமெவ் வாறு நாடுமோ?
திண்ணமுற் றரசனைத் தியக்கும் மாமுனி
மண்ணுல காண்டெமைக் காக்க வல்லனோ? 88

புலியிருந் திடுமிடம் பூனைக் கஞ்சிய
எலியிருந் திடும்படி யிருக்கும் ஈதலால்
வலியசிங் கேறுறை மலைமு ழஞ்சியில்
ஒலியிடு நரிவள ரொத்த தென்பரே. 89

## நடை

"ஏதுவினை வந்துமிக எய்தியதோ மூடியதோ?
சூதுமுனிக்(கு) அம்புவியைச் சொல்வேந்தன் ஈந்துவிட்டான்;
இப்பதியில் நாமும் இருந்தோமே யாமாகில்
எப்படிக்கு நீதி இயம்புமோ? நாமறியோம்?
ஆனை யிருந்து அரசாளும் மண்டபத்தில்
பூனை யிருந்து புலம்புகின்ற வாறதொக்கும்;

---

பாடவேறுபாடு

நடை 2769 : 2, 3 காளையருங் கன்னியரும் 1740

விருத்தம் 87. 1 : 3 கலந்தி 1574

சருகுங் கிழங்குகளும் தானருந்தி யேகாட்டில்
அருகாக வாழும் அடர்ந்தசடை மாமுனிக்கு
அரசின் நிலைவளமை அன்புநல முந்தெரிந்து
பிரசமுடன் ஆதரவாய்ப் பேறு மிகவருளி
ஆண்டகுடி யானவரை ஆதரிக்கப் புத்தியுண்டோ?
பூண்ட வினையிதுவோ? போர்வேந்தன் பொல்லாங்கோ?
கூண்டுநாம் செய்த குறையோ? நிறைபிசகோ?
கண்டீரோ?" என்றெவருங் கண்டுகண்டு தானுரைக்க,
வந்தமுனி மன்னன் மகாசேனை சூழ்ந்துவரச்
செந்திருமின் சேரும்ரத்தினச் சிங்கா சனத்திருந்தார்;
சிங்கா சனத்தில் சிறந்திருக்கும் மாமுனிக்கு
மங்கைவள ரும்புயத்தான் மன்னவனுங் கூறலுற்றான்—

---

பாட வேறுபாடு

2779 : 1, 2 அரசு நிலவளமை 1574
2786 : 1 செந்திருவைச் 1749
2786 : 4 சனத்திருந்தான் 1574

ஒப்புமை: அடி எண். 2787 — 2819. அரிச்சந்திரன், விசுவாமித்திரர்க்குத் தன் நகரில் உள்ளவற்றையும், அரண்மனையில் உள்ளவற்றையும் நேரிற் காட்டி ஒப்படைத்தல்.

'கோசி கன்தனை யுடன்கொடு கோநகர் புகுந்து
வாசி உள்ளவும் மதகரி உள்ளவும் வழங்கிக்
காசி னல்லறை பூசனை அறைஎலாங் காட்டித்
தூசி னல்லறை துயிலறை பாரெனச் சொன்னான். 116

என்னின் முன்னவர் இருபதோ டொருவருண் டந்த
மன்னர் வைத்தசெம் பொன்னறை யீதென வழங்கி
அன்ன சத்திரம் இவைஇவை அடியனேன் வைத்த
பொன்ன றைத்தொகை கொள்கெனக் கொடுத்தனன்
புகழோன். 117

ஆட ரங்குகள் அம்பலம் மடம்அன்ன சாலை
மாட மாளிகை மண்டபம் மஞ்சனச் சாலை
கூட கோபுரம் மடைப்பள்ளி கோயில்செய் குன்றம்
பீடம் ஆதனம் இவைஎனக் கொடுத்தனன் பின்னை. 118

—தொடர்ச்சி: அடுத்த பக்கம்

"அய்யா இம் மேடை அரியா சனங்காணும்;
துய்யா! இம் மேடை சுரக்கால மண்டபங்காண்;
கேளீரிவ் வோலங் கெவுரிவிலா சங்காணும்;
ஆளீரிவ் வோலம் அரியமணச் சாவடிகாண்;
காலைக் கொலுமேடை காணீர் இதுமுனியே;
மாலைக் கொலுமேடை வண்மையிது தான்பாரும்;
ஆசார மேடை அழகுவளம் ஈதுகண்டீர்;
பேசரிய மன்னர் பெருக்கமுட னேதிரண்டு
வந்து பணியுமணி மண்டபம் ஈதுகாணும்;
சுந்தரஞ்சேர் மாமுனியே!" என்றுமிகச் சொல்லியபின்—
"வாருமிந்த மாளிகைதான் மாநிதியம் உள்ளதுகாண்;
பாருமிந்த மாளிகைதான் பாங்குமணிப் பொக்கிசங்காண்;
இந்தநெடு மாளிகையில் எந்தைநிதி வைத்ததுகாண்;
எந்தந்தை தேடிவைத்த ஈழமனை யாமிதுகாண்;
எந்தந்தை தாதைநிதி இம்மனையில் உள்ளதுகாண்;
முந்தியபேர் தேடிவைத்த மூண்டநிதி இம்மனைகாண்;"
என்றென்று மூவே(மு) இராசாக்கள் தேடிவைத்த
வென்றியுள்ள மாநிதியம் மேவுமனை காட்டியபின்,

---

பாட வேறுபாடு

2797. வந்து பணியும் மணிமண்ட பம்மிதுகாண் 1749

2797 : 3, 4 மண்ட பமிதுகாண் 1574

2804. முந்தியபேர் வைத்தநிதி மூண்டமனை யாமிதுகாண் 1749

ஒப்புமை முன்பக்கத் தொடர்ச்சி:

இந்த ஆதனத் திருந்தருள் எனமுனி இருந்தான்
அந்த எல்லையில் அரசனும் அவனடி பணிந்தான்
வந்த மன்னரும் அமைச்சரும் மங்கையர் குழாமும்
சுந்த ரக்கழற் சேனையும் அவனடி தொழுதார் 119

தொழுதெ ழுந்துதம் சுடர்முடி மன்னனை நோக்கி
அழுது நின்றவத் தலைவரை அவன்கையா லமைத்துப்
பழுதி லாதுநீர் எமக்குமுன் செய்தஅப் பரிசே
முழுதும் இந்தமா முனிவற்கு முறைசெயும் என்றான்".

— அரிச். புரா. சூழ்வினைக் காண்டம் - 120

"மாமுனியே! நீராடும் வாவியிது கண்டறியும்
ஆமினிய சோலை அழகிதுகாண்" என்றுசொல்லி,
விந்தையுடன் காட்டி மிகவே இருந்தபின்பு
தந்தனுக்கு முன்பணிசெய் தாதியரை யும்பார்த்து,
"மாமுனிஇ ராசர்சொன்ன வாறுபணி செய்துகொண்டு
தாமிரும்"என் றேயவர்கள் தங்களுக்கெல் லாமுரைத்து,
அமைச்சருடன் மன்னன் அடர்சேனை யாளரையும்
சமைச்சரத பாகரையும் தந்திநல்ல பாகரையும்
பரியாளர் தங்களையும் பண்பாக வேபார்த்து,
"விரிவான சீர்த்தி விளங்குமுனி வோன்மகிழ
எந்தனுக்குச் செய்த இயல்புதனைப் போலதிகம்
தந்தனுக்குச் செய்திருங்காண் தாரணியில்" என்றுசொல்லி
வந்தவர்க்கும் புத்திசொல்லி, மாமுனிவ னைத்தொழுது,
"எந்தையரே! யான்போக ஏற்றவிடை தாரும்"என்று
தார்வேந்தன் ஆனதொரு சத்தியரிச் சந்திரனும்
சீர்வேந்தன் ஆசைத் திருமாதும் பாலகனும்
ராச ரிசிபதத்தை நாட்டமுத்துப் போத்திநின்றான்;
காசலையாய் வந்த கவுசிகனும் ஏதுரைப்பான்—
"என்னா(டு) அயோத்தி இசைந்தபதி ஊர்கள்தொறும்
மன்னா! இருக்காமல் மற்றோர்பதி செல்லும்"என்றான்;
"அய்யா!நன் று"என்றே அரசன் மிகவணங்கிச்
செய்யபதந் தான்நோகச் செல்லலுற்றார் **அம்மானை!**

---

பாட வேறுபாடு

**2814 : 2 பாகருடன் 1749**
**2814 : 3 தந்திவல்ல 1749**
**2815 : 3, 4 பண்பாகத் தான்பார்த்து 1749**
**2817 : 1 எந்தனக்குச் 1749**
**2820 : 3 ஏத்தவிடை 1749**
**2823 : 3 நாட்டமுற்று 1749**
**2823 : 4 மேத்திநின்றார் 1749**
**2823 : 4 போற்றிநின்று 1574**

## கலிவிருத்தம்

செல்லு மன்னவ னைச்செழுங் கோசிகன்
அல்ல லுக்கருங் காரண மாகவே,
"நில்லும்" என்றுநி றுத்திஇ தத்துடன்
சொல்லும் சொல்லொன்று சொல்லத்து டங்கினான். 90

"வாகு கேசரி! வையக மீதில்யாம்
யாக மேசெய வேணுமென் றன்புடன்
மோக மத்ததி ரக்கொடுத் தேனென்ற
தாக மாடை தனைக்கொடுத் தேகெ"ன்றான். 91

## நடை

செல்லுகின்ற மன்னவனைச் சீர்முனிவ னும்பார்த்து,
"நல்லதொரு யாகமது நாம்வளர்க்க வேணுமென்று
வேதியர்முன் கேட்க மிகவும்நா முங்கேட்டோம்;
போதநீ 'தாறன்'என்ற பொன்னருளி ஏகும்"என்றான்;
"மாமுனியே! அன்றுரைத்த மாநிதியம் நான்கொடுக்கச்
சீமைநிதி ஆடை செழுங்கரிதேர் உள்ளதெல்லாம்
தந்துவிட்டேன் உந்தனுக்குத் தானும்நிதி நல்கவென்றால்
எந்தன் கரந்தனிலே ஏதிருக்கு(து)" என்றுரைத்தான்;
"வாருங்காண்! மன்னவனே! மாநிதியம் தாறனென்று
சீருமொழி யும்வசனஞ் செப்பவில்லை யென்றுசொல்லிச்
சொல்லிநடந் தேகும்"என்று சோதிமுனி வோனுரைத்தான்;
வல்லபுகழ் வேந்தன் மனங்கலங்கி மெய்நடுங்கி,
"மாமுனியே! அன்றுரைத்த வார்த்தையில்லை என்பர்களோ?
தாமினிய பொன்னை இன்னந் தாருமென்று நீருரைத்தால்

---

பாட வேறுபாடு

விருத்தம் 91. 1 : 4 மீதில்யான் 1574   4 : 4 தேகென்றார் 1574

நடை 2829 : 4 னும்மழைத்து 1749
2830 : 1, 2 நல்ல தொருயாகம் 1749
2831 : 1 வேதியருங் 1574 1749
2832 : 2 தாறமென்ற 1749
2833 : 4 யான்கொடுக்கச் 1749   தான்கொடுக்கச் 1574

எங்கா கிலுமிரந்து யான்கொடுப்பேன்'' என்றுரைத்தான்;
''நங்காவல் நாட்டகத்தில் நாடாமல் நீநடந்து,
பக்கம்நண்ணிச் சொன்னம் பரிவாய் அருளும்'' என்றான்;
''அக்கணியும் மாமுனியே! அப்படியே நல்குதற்கு
நாளுந் தவணையிட்டு நன்னிதியம் நீர்பெறவே
ஆளனுப்பும்'' என்று அரசன் மிகவுரைத்தான்;
''ஆளனுப்பி வைப்போம் அரசே! அவன்வசத்தில்
நாள்மூன்றில் சொர்ணம் நமக்கருளும்'' என்றனர்காண்;
''ஏதுவகை மாமுனியே இவ்வாறு தானுரைத்தீர்?
மாதுலவும் உந்தன் மணிநகரைத் தான்கடந்து
மேதினியோர் தாமறிய மேல்திசைக்குப் போகவென்றான்
மாதம் இரண்டும் வருசமூ வாண்டுசெல்லும்;
காலில்விதை கொண்டு கனிந்துகிழக் கேகவென்றால்
நாலுதிங்கள் ஆறாண்டு நாயுகமே சென்றுவிடும்;
தூண்டுபுகழ் மாமுனியே சொல்லும்வட பால்ஏக
ஆண்டுபனி ரண்டுகளும் ஆறுதிங்க ளும்முடிவாம்;
காமக்கூ டம்கடந்த காதலுள்ள மாமுனியே!
ஏமக்கூ டங்கடந்தால் இல்லையுமக் கெல்லையுப்பால்;
நின்தேசம் விட்டு நிலைசேர் மறுதேசம்
தென்தேசங் காசிதனில் சென்றுநான் போவதற்கு
நாற்பதுநாள் செல்லுமந்த நாற்பதாம் நாளையிலே
சேர்ப்பேன் உமக்குநிதி; தெய்வநிறை மாமுனியே!''
என்னுமந்த வார்த்தை இசைவாக வேகேட்டு,
''மன்னா! அந் நாளையிலே வாய்த்தநிதி செல்லாமல்
தாமசங்கள் ஆகிவிட்டால் தானுமுன்னைப் பொய்யனென்பேன்;
ஆமெனவே சொல்லும்'' என்றான்; அவ்வரசன் ''நல்லது'' என்றான்.
மூதறிவு சேர்விசுவா முத்திரனும் அந்நேரம்
சூதறிவு வல்லபுகழ்ச் சுக்கிரனைத் தானினைந்தான்;

---

பா. வே. 2849 : 4 அவர்வசத்தில் 1749 அவனிடத்தில் 1574
2853 : 3 மேல்திசைக்கே 1749
2857 : 2 மாதவனே 1749
2863 : 4 நாள்தனிலே 1574

உடுபதியை நீங்கி உலகிலொரு கால்நொடியில்
சடுதியுடன் சுக்கிரனுந் தான்வந்தான் கோசிகன்பால்;
வந்தவனைக் கூட்டி மகாமுன்னன் முன்புவிட்டு,
"விந்தைபெறு மன்னா! மிகவெனக்கு முன்னுரைத்த
ஆடகந்தான் மும்மதங்கொண் டானைமுது(கு) ஆள்ஏறி
நீடிஎறி யுங்கவண்கல் நீண்டவரை யுள்ளதுவும்
மெய்ப்பவதி நாற்பதிலே வேதியர்பால் ஈயும்"என்று
செப்பியும்பின் சேதி சிலதுரைப்பான் அம்மானை!

"மன்னா! இவனும் வழிநடந்து தானறியான்!
சின்னஞ் சிறியான்; சிறந்தபசி யும்பொறுக்கான்:
பேசும் வகையறியான் பேருந்தான் சுக்கிரன்காண்;
நேசமுடன் எப்படியும் நீயிவர்சொல் தட்டாமல்
சென்றிவரைச் சிந்தை சினக்காம லேநடந்து
நன்றிபெறப் பொன்னை நமக்கனுப்பி வையும்"என்று.
மாமுனிவன் தானுமந்த மன்னனுக்குச் சேதிசொல்லி,
நாமறைசேர் வெள்ளியுடன் நல்லமுனி வோனுரைப்பான்—

## கலிவிருத்தம்

"காவல னோடு காட்டகத் தேகையில்
ஆவிச் செல்ல வடாதேநின் றாலெழு;
மேவு பாலன்னம் வேணுமென் றேகுழை;
தூவ லோடு துயரம் எழுப்பியே. 92

---

பாட வேறுபாடு

நடை 2874 : 4 முன்புரைத்த 1749
2885 : 4 செய்திசொல்லி 1749
2886 : 1 நான்மறைசேர் 1574

விருத்தம் 92. 2 : 1 ஆவச் 1574

ஒப்புமை : விருத்தம் 92, 93. விசுவாமித்திரர் பொன்பெற்றுவர அரிச்சந்திரனுடன் செல்லுமாறு தான் அனுப்பி வைக்கின்ற சுக்கிரனிடம், சுகிரன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என எடுத்துரைத்தல்.

'துன்றுபசிக் கடகுகனி தேடும்போ தெனக்கினிய
சோறு வேண்டும்
என்றுமொழி தந்திடினும் ஏலாது வேண்டாவென்
னிவனூண் பெற்றகல்
அன்றுபொரு டருமுன்டனைற் குதலேனில் எழுந்தடு'

— அரிச். புரா. நகர் நீங்கிய காண்டம் - 25

காய்கி ழங்கு கனிநுக ரேனென்றும்,
சாய மெத்தை தழுவணை போடென்றும்,
பாய மாயப் பரிதானமுந் தீஎன்றும்,
நீவ ருத்தம் நெருக்கமுஞ் செய்துவாய். 93

### நடை

மன்னன் மனஞ்சலிக்க மங்கைமக னுந்தவிக்க
என்னவகை செய்யும் இடரெல்லாம் நீவிளைத்து
நாள்தவணை தப்பிவிட நானிலத்தில் உண்டுபண்ணித்
தூத்தனென்ற பேரையிட்டுச் சுக்கிரனே வந்துவிட்டால்
உன்போல் எவரெமக்கும் உண்டோ உதவி"என்று
வன்போடு பின்னும்வெகு வாறுகளெல் லாமுரைத்துப்
"போங்கடுக!" என்று புகழ்ந்துவிட்டார் **அம்மானை!**

பாங்காம் பளிங்கவனும் பார்வேந்தன் பைந்தொடியும்
செல்லத் திருமகனும் சென்றுநடந் தேகலுத்தார்;
நல்லபதி மீதுறையும் நாரியருங் காளையரும்
உண்டான பேரும ஒருமிக்கத் தானெழுந்து
எண்டிசைகள் போத்தும் இஃறயோ னுடன்நடந்தார்;
அங்கவர்தம் மோடே அரசன் மிகநடந்து
பொங்குஞ் சரசுநதி போந்ததொரு மேடைசென்று
மன்னன் மிகவிருந்தான்; வந்தவரெல் லாஞ்சூழ்ந்து
உன்னும் அரசனிடம் ஓதலுத்தார் **அம்மானை !**

### நகர் நீங்குதல்

"மாமுனிவன் என்ன வலுமையோ? மன்னவனே!
ஆமெனவே நாங்கள் அடித்திழுத்துத் தள்ளுகிறோம்;

---

பாடவேறுபாடு

நடை **2891 : 2 எமக்குதவி 1574**
**2891 : 4 உலகுதனில் 1574**
**2895 : 4 தேகலுற்றார் 1574 1749**
**2901 : 3 வந்தோரெல் 1749**

அக்கமவ ருக்குமுண்டோ? ஆதரவு தானுமுண்டோ?
பக்கமுட னேயவர்க்குப் பாரவலு வேதுமுண்டோ?
ஆதிச் சடைமுனிக்கும் ஆரும் உதவியில்லை
மோதிச் சடைபிடித்து மூண்டிழுத்துப் போடுகிறோம்
வந்திருந்து நீருமிந்த வையகத்தை ஆளும்'' என்றார்;
அந்த மொழிகேட்(டு) அரசன்மிக மெய்கலங்கி
வரத சிவநமசி வாயவென்று சொல்லிரெண்டு
கரமிறுகக் காதுபொத்திக் கங்கைநமா என்றரசன்,
"இப்பாவம் பேசுவரோ? எண்ணுவரோ? செய்வர்களோ?
செப்பரிய புத்தி சிறந்திருக்கும் வல்லவரே!"
என்றரசன் சொல்ல இலங்குமிந்த வாறுதனைக்
குன்றாத் தவமுடைய கோமுனிவன் தானொளித்துக்
கேட்டிருந்து வந்தரச கேசரிபால் கூறலுத்தான் —
"நாட்டில் புகழுடைய நல்லமன்னா! நீயுமிப்ப
கூட்டமுடன் இந்தக் குவலயத்தார் தன்னைவிட்டுப்
போட்டி பலவுரைத்துப் போதவைது தள்ளவென்றாய்;
உன்னாடும் உன்னரசும் ஒப்புதில்லை எந்தனுக்கு
மன்னா நீ! தந்ததில்லை என்னுமொரு வார்த்தைசொல்லி
அரசு நிலையிலிரு; யான்போறேன்;'' என்றுமுனி
விரசிச் சினம்பெருகி வேந்தனுடன் கூறினன்காண்;
கூறுமொழி தான்கேட்டுக் கொத்தவனுஞ் சொல்லலுற்றான் —
"பேருடைய மாமுனியே! பேறாய் உனக்களித்த

---

பாட வேறுபாடு

2907 : 3, 4 ஆதரவு ஆருமில்லை 1574
2908 : 3, 4 மூண்டடித்துத் தள்ளுகிறோம் 1574
2916 : 4 தானொளிந்து 1574
2917 : 4 கூறலுற்றான் 1574 1749
2923 : 1 அரசின் 1749

நாடுதந்த தில்லையென்று நானுரைப்ப தென்றுமில்லை:
நீடு நிலையறியா நிர்மோடர் சொன்னதெல்லாம்
தாண்டவங்க ளாடுஞ் சதாசிவனார் தம்மருளை
வேண்டும்பெரி யோர்பொறுக்க வேணுமய்யா;'' என்றுசொல்லிப்
போத்தி மிகவுரைத்துப் பொற்கோ சிகனைவிட்டு
மாத்தலர்கள் சிங்கமெனும் மன்னன் இருக்கலுத்தான்.
இருக்குமந்த வேளை இரைந்துமிக வேயலறி
முருக்கிதழின் சந்திரமதி முன்கூந் தரிமுதலாய்
மங்கையர்கள் வந்து மலரடியைப் போத்திநின்று,
"எங்கள்தனை ஆண்டருளும் இன்பமலர்ச் செந்திருவே!
எல்லாரை யும்மகத்தி ஏத்தபதி யும்மிழந்து
சொல்லரிய மாமுனிவன் சோதினையால் செல்லுகிறீர்;
நாங்கள் இனிப்பிழைத்து நானிலத்தி லேயிருந்து
பாங்குபெற வாழும் பலனெல்லாந் தோத்துவிட்டோம்;''
என்றவர்கள் வாடி இருகண் புனலொழுக
நின்றழுது வாடி நிறைமானைப் பார்த்துரைப்பார்—
"கானகத்தில் சென்றிரண்டு கால்வருந்த வேநடந்து
போன இடத்தில் புதுமையுடன் கண்துயிலப்
பள்ளியறை உண்டோ? படுக்கைமெத்தை தானுமுண்டோ?
ஒள்ளியதோர் பாங்கியரும் உண்மையுள்ள தாதியரும்
ஏவல் பணிவிடைசெய் தேற்றமுடன் காத்திருந்து,
பூவனைய பாதமெனும் பொற்கமலந் தான்பிடித்து,
வெஞ்சா மரைவீசி மிக்கஅலங் காரமிட
வஞ்சமுத்த கானகத்தில் மாதாவே! ஆருளர்காண்?

---

பாட வேறுபாடு :

**2932 : 4** இருக்கலுற்றான் **1574 1749**
**2935 : 3** மலரடியே **1574**
**2935 : 4** போற்றிநின்று **1574 1749**
**2937 : 3** ஏற்றபதி **1749**
**2947 : 3** தேத்தமுடன் **1574 1749**
**2950 : 4** யாருளர்காண் **1749**

சீரான பாலனுக்குச் செய்யபனி நீராட்டிப்
பேராய் அலங்கரித்துப் பேரமுதம் ஊட்டிநிற்க
ஆருளர்காண்? நாயகியே! அக்கான கத்திடையே
சீருளதோ? வீறுளதோ? செந்திருவே! எந்தாயே!
மாமுனிக்குப் பூமிநல்கி மாதாவே நீயுமிப்ப
தாமினிய பூமிதனில் தான்நடக்கக் கத்தனையோ?
வீசுபனிக் காத்தும் வெயிலும் படமேனி
ஓசை யுடன்பொறுத்து ஓவியமே நீநடக்கப்
போதனைய பாதம் பொறுக்குமோ? பூங்குயிலே!
சாதனையாய் முன்புநடை தான்கத் தறியவில்லை;
மாதாவே! எந்த வழிநடப்பீர்?'' என்றுசொல்லிக்
காதலுள்ள கன்னியரும் கண்கலங்கி நிற்கலுத்தார்.
நிற்குமட மாதர்தம்மை நீண்டகுழல் சந்திரமதி,
''மைக்கொடியீர் நீங்கள் மயங்கவந்த காரியம்என்?
மட்டவிழுங் கோதைபங்கன் வையகத்தில் எந்தனக்கு
இட்டபடி அல்லாமல் எள்ளளவும் வேறதிகம்
உண்டோ?'' எனஉரைத்தும் உத்துவந்தோ ரைத்திருத்தி
வண்டார் குழலியரை மாளிகையில் செல்லவிட்டாள்.
பத்தி மிகவுடைய பாரமைச்சர் சிங்கமெனும்
சத்திய கீர்த்திவந்து தார்வேந்த னைத்தொழுது,
''மன்னவனே நீஏகும் மாநிலத்தி லும்மடியேன்
உன்னுடனே கூட உகந்தே வருவன்''என்றான்.
''ஆங்கருமம் செய்கருமம் அடல்கருமம் செல்கருமம்
பாங்கு பெறவுரைத்துப் பார்முனிக்குப் புத்திசொல்லி
நாட்டில் சிறப்பாக நண்ணுவர்க்கெல் லாங்கருணை
கூட்டிப் பெருக்கக் குவலயத்தில் வாழும்என்று
மந்திரியே உன்னையந்த மாமுனிவ னுக்களித்தோம்;
எந்தனுடன் நீயுமிப்பால் ஏகினால் ஆகாது,

---

பாட வேறுபாடு

2956 : 2, 3, 4 பூமி தனில்நடக்க ஒப்பிணையோ 1574
2962 : 4 நிற்கலுற்றார் 1574 1749

மாமுனிவன் ஆளுகின்ற மண்டலம்எல் லாந்தழைக்க
ஆமெனவே புத்தி அருளுதற்கு யாருமில்லை;
மதியமைச்சர் இல்லாத மன்னர்பதி பாழாகும்;
கதியுதவு கீர்த்தியில்லை காசினியில் உள்ளபடி;
சத்திய கீர்த்தியனே! தாடாளா! மாமுனிக்கும்
பத்தியுடன் நாட்டில் பலசீரும் சென்றுசொல்லிக்
காத்திருங்காண்'' என்றுசொல்லிக் காவலவ னுங்கூற,
மாத்தலரை வெல்லும் மதியமைச்சன் கண்கலங்கி-
''உன்னைவிட்டு நானும் ஒருநாள் பிரிந்தறியேன்;
என்னைவிட்டுப் போக எழுந்ததோ காலுமக்கு!
மன்னவனே என்னை மறுத்துநீ செல்லுகையில்
என்னுயிரை விட்டு இறப்பேன்'' எனவுரைத்தான்;
அமைச்சனிந்த வார்த்தை அடர்ந்துசொல்லக் கேட்டரசன்,
''நமக்கும் இதுபழிஏன்? நன்முனிவன் பாலுரைத்து
வந்தால் முனிஆளாய் வந்துவிடும்'' என்றுசொன்னான்;
அந்த மொழிகேட்(டு), அமைச்சன் மிகநடந்து
கோசிகனைக் கண்டு குலாவித்தா ளைப்பணிந்து,
''தேசிகரே! நான்அரசன் செல்லுமிடஞ் செல்லுகிறேன்;
நல்லதென்று எந்தனுக்கு நல்கீர் விடைகள்''என்றான்;
சொல்லரிய மந்திரிசொல் சோதிமுனி வன்கேட்டுப்
''போங்கடிதாய்!'' என்றே புகன்றே விடைகொடுத்தான்;
ஆங்கருமஞ் சொல்லும் அமைச்சன் ஒருநொடியில்
மன்னன் இடந்தனிலே வந்துநின்றான் **அம்மானை!**

துன்னுபுகழ் மந்திரியுஞ் சுக்கிரனுந் தானேக,

---

பாட வேறுபாடு

2985 : 3, 4 காவ லவன்கூற 1749
2996 : 1 தேசிகனே 1574 1749

வேந்தனரிச் சந்திரனும் மெல்லியரும் பாலகனும்
சாந்தமுட னேயெழுந்து தானேக நிற்குகையில்
சூழ்ந்திருந்த காளையருஞ் சோதிமுகப் பூவையரும்,
"ஏந்துபுகழ் மன்னவனே! இந்நாட்டி லேதிரும்பி
வந்திடுநாள் எப்போது? மன்னா! உரையும்."என்று
சிந்தைமிக நொந்துருகிச் சீராகக் கேட்கலுத்தார்;
"முனிக்குக் கொடுத்துவிட்ட மூண்டமணி நாட்டகத்தில்
இனித்திரும்பி யாம்வருகோம்; ஈசன் செயலெதுவோ?"
என்றரசன் சொன்னான்; இசைவாக அந்நேரம்
நின்ற மனுகலங்கி நீண்டபதி வந்தடைந்தார்.
அந்நாள் முதலாய் அயோத்திஎனும் பூமகளாள்
பொன்னாரும் மார்பரசன் போதவெண்ணை விட்டுவிட்டு
வேறுபூ மாதிடத்தில் மேவிநடந் தானெனவே
மாறுகூ றாக மனங்கொதித்தாள் ஆகையினால்,
பெய்யுமழை நீர்வறண்டு பேருலகில் ஏரிகளும்
அய்யமென வேயுலர்ந்து ஆனவிளை வுஞ்சிறுத்துக்

---

பாட வேறுபாடு

3004 : 1, 2 சாந்த முடனெழுந்து 1749
3006 : 4 லேநீரும் 1574
3007 : 2 எப்பொழுது 1749

ஒப்புமை : அடி எண். 3003 — 3011. அரிச்சந்திரன் நாட்டைத் துறந்து ஏகுகையில், அவனது நாட்டு மக்கள், "நீங்கள் இந்நாட்டிற்கு மீண்டும் எக்காலம் திரும்பி வருவீர்கள்?" எனக் கேட்க, அரிச்சந்திரன் விடை கூறுதல்.

'அக்காலத் தமைச்சரெலாம் அடல்வேந்தன் அடிபோற்றி
அரசே நீமீண்
டெக்காலம் எழுந்தருள்வ தென்றுரைக்க ஆங்கவரை
இருகண் நோக்கி
முக்காலங் களும்உணரும் முனிவனுக்கின் றியான்கொடுத்த
மூதூர் தன்னில்
எக்கால மும்வருவ தில்லைஎன்றான் அமைச்சரொலாம்
ஏங்கி வீழ்ந்தார்'.

— அரிச். புரா. நகர் நீங்கிய காண்டம் - 14

காலிகற வுங்குறுகிக் காவுகனி யும்மாறிக்
கோலிமனு உள்ளங் குலாவுதலு மேகுலைந்து;
அவ்வியங்க ளாக அடர்ந்ததுவே அம்மானை!

## கானகம் புகுதல்

கொவ்வையிதழ் மங்கையருங் கோமானும் பாலகனும்
சுக்கிரனும் மந்திரியுந் துய்யநகி ஓடைவிட்டுச்
சிக்கெனவே ஆதி சிவனே யெனவெழுந்து,
காலிழந்த மானெனவே, கண்ணிழந்த கண்ணெனவே,
மாலிழந்த வேளெனவே, வாலறுந்த மானெனவே,
கொம்பிழந்த மந்திகள்போல், கோவிழந்த மந்திரிபோல்,
அம்பிழந்த வில்லியைப்போல், அப்பிழந்த சேல்களைப்போல்,
கையிழந்த யானையைப்போல், கட்டிழந்த தொட்டிலைப்போல்,
பையிழந்த செட்டியைப்போல், பட்சிசிற கத்ததுபோல்,
நாடிழந்தும் ஊரிழந்தும் நன்னிதியம் உள்ளதெல்லாம்
ஈடிழிந்தும் வாடி இருகாலு மேவருந்தக்
கானகத்தை நாடிநெடுங் காவலனும் செல்லலுத்தான்;
தேனையொத்த சொல்லாள் திலதநுதல் சந்திரமதி
நாட்டகத்தைப் பார்த்து நடந்துநடந் தும்தவித்துக்
கோட்டை தெரியுதென்றுங் கோவிற்கால் காணுதென்றும்
மாஞ்சோலை யும்பெரிய வண்காவும் கோபுரமும்
ஆஞ்சமணி மேடை அருந்தோ ரணமுகப்பும்
இந்தா தெரியுதென்றும் ஏந்திழைகண் டேநடந்து
கொந்தாருங் கானகத்தே கோலமுடன் சென்றனர்காண்,
கானகத்தில் செல்லுகையில் காவலவ னைப்பார்த்து
ஆனதொரு சுக்கிரனும் அன்பாக ஏதுரைப்பான்—
"மன்னா!உன் சேனை மதகரிதேர் மாஇருக்கப்
பொன்னான மாளிகையும் பொன்னும் பலவிருக்க
ஈடழிந்த மாமுனிவற்(கு) இல்லையென்று சொல்லாமல்,
நாடிழந்து போறதிது நல்லதல்ல; மன்னவனே!

---

பாடவேறுபாடு

3033 : 4 செல்லலுற்றான் 1574
3045 : 1 ஈடிழிந்த 1749

இல்லையென்னும் ஓர்சொல் இசைத்தால் குறைவருமோ?
அல்லவென்றால் தோசம் அதுக்குண்டோ? மன்னவனே!
என்வார்த்தை கேளும்'' என்று இங்பவெள்ளி கூறியபின்.
பொன்வாய்த்த மார்பன் புகரோனுங் கேதுரைப்பான்—
''சாரமுறும் வேதம் சகலகலை மாபளிங்கே!
ஏரா வசனம் இயம்புவது நீதியல்ல;
ஏத்தமுனி பொன்வாங்கி இன்பமுடன் ஈந்துவிடும்;
வார்த்தை பலவுரைக்க மாமுனிவ னேவேண்டாம்;''
என்றுமன்னன் சொல்ல இலங்குவெள்ளி யானவனும்
ஒன்றும்உரை யாமல் ஒருகடிகை போனவுடன்,
''வேந்தா!இக் கானகத்தில் வீத்திருந்து நாளைவழி
போந்திடுவோம்'' என்றே புகன்றான் புகரோனும்;
''அய்யா! அடிக்கடிநாம் அங்கங்கெல் லாமிருந்தால்
பொய்யாகி மாமுனிக்குப் பொன்சேர் தவணைதப்பும்;''
என்றுநல்ல வார்த்தை இசைவாக வேயுரைத்து
நன்றியுடன் கூடி நடக்கலுற்றார் **அம்மானை!**

மன்னன் பதம்வருந்த மங்கையுள்ளந் தரன்வருந்தக்
கன்னி பதம்வருந்தக் காவலவன் மெய்வருந்த
நீதித் தவமுனிவன் நேசமிகுஞ் சோதினையால்
ஆதித்தன் உச்சத்(து) அடர்ந்துகதிர் வீசிவந்தான்.
வீசுங் கதிர்படவே மிக்கதிரு மேனியெல்லாம்
மாசுபெற வேர்த்து வடுவாய் உடல்கறுத்துத்
தத்தை மொழியணங்குந் தார்வேந்த னும்நடந்தார்;
சத்திய கீர்த்தியிவர் தங்களைப்பார்த் தேயுருகி

---

பாட வேறுபாடு

3063 : 4 தான்மயங்கக் 1574

ஒப்புமை : அடி எண். 3070, 3071. அரிச்சந்திரன் நாட்டைத் துறந்து ஏகுகையில் அரிச்சந்திரனுடைய மகனை எடுத்துக்கொண்டு அமைச்சர் சத்திய கீர்த்தி உடன் செல்லுதல்.

'மைந்தன் றனையெடுத்து மந்திரிமுன் னேநடந்தான்'

— அரிச். புரா. நகர்நீங்கிய காண்டம் - 61

மைந்தன் தனையெடுத்து வாகுபெற வேநடந்தான்;
பிந்துமதிச் சுக்கிரனும் பேறாக வேநடந்தான்;
"காம்பரிந்த பூவின் கனமேடை மேல்நடக்கத்
தாம்பொறுக்கா தேசிவக்குந் தையல்மலர்த் தாளிணையும்
போத்துமண்ட வீகர்முடிப் பொற்கிரீ டங்கள்பட
வேத்துச் சிவந்திருக்கும் வேந்தன்மலர்த் தாளிணையும்
ஆரணியக் காட்டில் அடர்ந்துநடக் கப்பொறுக்கக்
காரணமோ" என்றுதெய்வ கன்னியரும் பார்த்திரங்க

## கலிவிருத்தம்

இவ்வகைவ னத்திடைஏ குமரசன் (பாதம்)
கொவ்வையிதழ் மங்கையுட கோலமிகு பாதம்
மெவ்வுபுகழ் கொப்புளமி கப்பெருகி யோடச்
செவ்வையுற வாவியிசை சென்றனர்வ னத்தே. 94

மங்கையடி கண்டுளம்ம யங்கிமனம் நொந்து
சங்கையர சன்கவலை தங்கியும்ந டக்கக்
குங்குமபு யத்தழகு கொண்கன்நடை கண்டு
நங்கைமனம் நொந்துளம்ந டுங்கியும்ந டந்தாள். 95

## நடை

வெங்கா னகத்தில்வழி மேவுமடி கொப்பளிக்கப்
பொங்கிவெகு சோரி புனல்கசிந்தும் ஓடிடவே
தன்கால் வருத்தமது தன்வருத்தம் எண்ணாமல்
மன்கால் வருத்த மனவருத்தந் தானாகிக்
கண்டுகண்டு சந்திரமதி கன்னியெனும் மின்னுருகி
மண்டலத்தை ஆளும் மகராச கேசரிக்கே

---

பாட வேறுபாடு

நடை: 3075 ; 1 போற்றுமண்ட 1749
3076 ; 1 வேற்றுச் 1749
விருத்தம் 94. 1 : 4 தாள் 1749
3 ; 1 மெவ்வுபுனல் 1749
95. 2 : 3 தயங்கியும்ந 1749
நடை 3080 ; 1 பொங்குவெகு 1574

இவ்வா றலைய இறையோன் அமைத்ததென்றே
கொவ்வையிதழ் மின்னாள் கொடுங்கண்ணீர் ஆறோடக்
கொத்தவனுங் கண்டிளங் கோதைவிகற் பம்மறிந்து
சித்தமிக நொந்துருகித், "தேனே! நின் கால்வருத்தம்
உத்தபூ மேனி உடல்வருத்தம் தன்னுடனே
மெத்தவோ?" என்றரசன் மெய்கலங்கிக் கேட்கலுற்றான்;
"மாநிலத்தில் உந்தன் மலர்த்தாள் வருத்தமன்றி
மேனிகரங் காலெனக்கு வேறோர் வருத்தமில்லை;"
என்றுமின்னாள் சொல்ல இறையோன் மனம்புழுங்கிக்
"கன்றினிய சொல்லமுதின் கன்னியே நீயுமென்னை
அண்டியதால் இந்த அரும்வாதைக் குள்ளாகிக்
கண்டித்த கானகத்தில் கால்வருந்த மேல்வருந்த
வாறாய்" எனவுருகி மன்னவன் பரதவிக்க
வீறான சந்திரமதி மெல்லியரும் ஏதுரைப்பாள்—
"வேறோர் கவலையில்லை; வேந்தே மலங்கல்விட்டுப்
பேறான கானவழி பேதமறச் செல்லும்" என்றாள்;
இவ்வாறு மன்னவனும் ஏந்திழையும் வாறவிதம்
கவ்வையுள்ள மந்திரியுங் கண்டுநொந்து நைந்துவரப்
பாலகனைப் பைந்தொடியைப் பாரமைச்ச னைப்பளிங்கை
ஏலமுட னேவிசைகொண் டேகுமென்று சொல்லிமன்னன்
நாடுதனை எண்ணான் நகரிதனை யும்நினையான்;
பாடுபட்டு வாற பரிதாப முங்குறியான்;
கோலரதம் மாக்களிறுங் கோவில்தன முங்கருதான்;
சீலமுடன் வாவிமிகுஞ் சேர்ந்தபதிக் குழ்முருகான்;
மத்தொருவ னைநினையான்; மாமுனிவ னைநோகான்;
பித்தனெனும் ஈசன் பிணித்தபிணி என்றுசொல்லிச்

---

பாடவேறுபாடு

3094 : 1 கண்டினிய 1749

3098. 'வீறான' எனத் தொடங்கும் அடிக்குப் பதிலாய் 'மாறாத சொல்லுடைய மங்கையரு மேதுரைப்பாள்' எனும் அடி 1749 ஆம் எண்ணிட்ட சுவடியில் காணப்படுகின்றது.

3109 : 1, 2 மற்றொருவ ரைநினையான் 1749

சித்தமுற எண்ணிச் சிவனே சகாயமென்று
வெத்திமுனி பொன்னுதவ வேணுமென வேநடந்தான்.
மந்திரியும் மன்னவனும் மங்கையரும் பாலகனும்
நொந்துவரும் வாறுதன்னை நோக்குவதும் இல்லையென்று
வெய்யகதி ரோன்ஒடுங்கி மிக்கவரை செல்லலுத்தான்;
ஐவர்களும் வந்தோர் அருங்கா னகத்திருந்தார்.
வந்திருந்த போதுமதி மந்திரிசென் றேயெழுந்து
கந்தமூ லங்களுறுங் காட்டினிடைப் பக்கமெல்லாம்
மாங்கனிக ளும்பெரிய மாமலைவா ழைக்கனியும்
பாங்குவருக் கைக்கனியும் பாரமலை சோலைதொறும்
தேடியோ டித்திரிந்து சேர்ந்தமரம் மீதிலெங்கும்
ஓடிஏ றிப்பறித்தும் ஓடைமலை நீர்ச்சுனையில்
தேக்கிலையைச் சேர்த்துச் சிறந்தபுன லும்மொந்துத்
தாக்குடைய மன்னவனார் தன்னிடத்தில் கொண்டுவந்து
சீராக வைத்துச் சிறக்கநின்றான் சீரமைச்சன்;
பேரான மன்னன் பெருமையின்றித் தானெழுந்து

பா வே. 3115 : 4 செல்லலுற்றான் 1749
3119 : 1, 2 மாங்கனியும்பெரிய 1749

ஒப்புமை: அடி எண். 3126 — 3139. அரிச்சந்திரன், நாடு துறந்து காட்டு வழியில் செல்லுகையில், விசுவாமித்திரர் அனுப்பிய சுக்கிரனுக்கு உணவாகச் சில கனிகளை அளித்து ஏற்குமாறு கூற, சுக்கிரன் அவற்றை மறுத்து மொழிதல்.

'அக்கணமெ டுத்திறைவ னக்கனியு ளெல்லாம்
மிக்கனதெ ரிந்துமறை விப்பிரன்முன் வைத்தே
தக்கனஉ ரைத்தெனது சஞ்சலமு ணர்ந்தே
இக்கனிஎ டுத்தினித ருந்தெனஇ சைத்தான். 49

பரிந்துறஇ ரந்திறைப கர்ந்தமொழி கேளா
விரிந்தநெடு வாயின்இதழ் வெண்பலின துக்கி
எரிந்திடுசி னத்தழலி ரண்டுகணி னாலும்
சொரிந்துளம் வெகுண்டுசுடு சொற்கள்சில சொன்னான். 50

நீயும் முனியும் நிகழ்த்துநெறி முன்உணர்ந்து
தோயும் தயிர்நெய்பால் சோற்றோ டருந்தாமற்
காயும் கிழங்கும் கனியும்இலை யும்தின்று
வாயும் வயிறும் வளர்க்கிலேன் மன்னவனே'.

—அரிச். புரா. நகர் நீங்கிய காண்டம் — 51

நல்ல கனிகள்தனை நாடிப்பார்த் தேயெடுத்துச்
சொல்லற் கரியபுகழ்ச் சுக்கிரன்முன் னாகவைத்து,
"கொண்டு பசிதணியும்; கோலமறை வேதியரே!"
என்றுமன்னன் சொல்லி இசைவாக நிற்கலுற்றான்;
நிற்குமன்ன னைப்பார்த்து நீண்டபுக ரோனுரைப்பான்—
"உட்குழிந்த கட்குரங்கும் உண்டலையுங் காய்கனியைக்
*கொண்டோ வழிநடப்பேன் கொத்தவனே! ஈதெனக்கு
வேண்டாம்" எனவுதறி மிக்கமன்ன னோடுரைப்பான்—
"தேனுங் கனியுந் திரட்டியபா காறுசுவை
ஆன கறியும் அமுர்தமுடன் நீகொடுத்தால்
தான்நடந்து வந்திடுவேன் தார்வேந்தா! இக்கனியால்
நான்நடக்க மாட்டேன்; நயமாக நீஏகும்;
போறேன்நான் வந்தவழி போர்வேந்தே!" என்றுரைத்தான்;
"வீறான மாமுனியே மேதினியில் உம்மையன்றி
நான்பொசிக்க வேறுளதோ? நாயகமே;" என்றுசொல்லித்
தேன்வாய்த்த சொல்லரசன் செப்பிமறுத் தேதுரைப்பான்—

## சுக்கிரனுக்கு அன்னம் பொருந்துதல்

"மாமுனிவன் நாட்டகத்தில் மண்டகம்ஈ என்றிரந்தால்
போமெனையே தூர்த்தனென்று பூவுலக மும்முரைக்கும்;
ஆகையால் சித்தம் அடியேனுக் காயிரங்கிப்
பாகாய்க் கனியைப் பருகுங்காண்" என்றுசொல்லி,
வெள்ளி மனங்குளிர வேண்டியதெல் லாமுரைத்தும்
எள்ளளவுஞ் சித்தம் இரங்கா திருக்கலுற்றான்;
"இரங்காத சித்தத்து) இசைமுனியே! உந்தனுக்கு
வரங்கள் தருங்காசி மாநகரி சென்றவுடன்

---

பாட வேறுபாடு

3128 : 1 சொல்லுக் 1574
3130 : 4 நிக்கலுத்தான் 1749
3138 : 4 நீர்கேளும் 1749
3148 : 4 திருக்கலுத்தான் 1749
3150 1, 2 வரங்கள்தருங் காசியெனும் 1749

* தானம் ஒன்றாத எதுகை

அன்றுபா லோடே அமுர்தம் உமக்களிப்பேன்;
இன்றுபொறுத் திந்த இனியகனி கொள்ளுமெ''ன்று,
பாதமலர் தன்னைப் பரியதொரு மன்னவனும்
சீத மதிவதனச் செய்யிழையும் போற்றிடவே
சோர மனமுடைய சுக்கிரனுங் கூறலுத்தான்—
''ஆரமுதுந் தேனும் அடவுகறி சோறுடனே
காசி நகர்அணுகுங் கால்நா ழிகைதனிலே
வாசியுடன் தாறனென்ற வார்த்தைமற வாதைமன்னா!
கொள்வேன் கனி''எனவுங் கொண்டான் கொடும்பளிங்கு;
நள்சேர் குழலணங்கும் நாயகனும் பாலகனும்
சத்திய கீர்த்தியுடன் தானுங் கனியருந்தி
வெத்தியுள்ள கானகத்தில் வீத்திருந்து கண் துயின்றார்;
கோசிகனார் என்னுங் கொடுமுனிவன் அந்நேரம்
வீசும்பனிக் காத்துடனே மிக்ககுளிர் வாடையையும்
மன்னன் இருக்குமந்த வன்காட்டில் செல்லுமென்று
உன்னி எழுப்பிவிட்டான் உண்மையுடன் அம்மானை!

வாடைக் குளிரடிக்க, வந்துபனி யுஞ்சொரியத்
தாடைஅல கோடுகிட்டித் தானும் நடுக்கெடுத்து,
மங்கை உடல்நடுங்க மைந்தனதி லும் நடுங்க,
வெங்கரட யானை விருதுமன்னன் மேல்நடுங்க,
மந்திரியும் உள்ளம் மயங்காமல் மேல்நடுங்க,
இந்தடவு வாடை இரைத்துப் பனிபொழிய,
அந்தஇர வெல்லாம் அறநடுங்கிச் சென்றபின்பு
வந்தான் குணதிசையில் வாய்த்தகதி ரோனெழுந்து;
கதிரோன் எழுந்தவுடன் காவலனும் பூவையரும்
மதிசேர் அமைச்சருடன் மைந்தனுட னேபெழுந்து,
பிரிவான வேதியரும் பின்தொடரச் செல்லலுத்தார்;
குறியான மாது குழவிமன்னன் மந்திரியும்

பாட வேறுபாடு

3155 : 4 கூறலுற்றான் 1574 1749
3171 : 4 மெய்நடுங்க 1749
3178 : 2 மாதுங் 1749

கால்கள் மிகவருந்தக் கைவருந்த, மெய்வருந்த,
மேலவர்க ளும்புகழ மிக்கவழி சென்றிடவே,
கோலமுள்ள சுக்கிரனுங் கூறுவான் **அம்மானை !**

"ஏலமுள்ள மன்னா! எனக்குவரக் கூடுதில்லை;
இங்கிருந்து கால்ஆறி ஏழெட்டு நாள்கழித்துச்
சங்கை யுடன்பயணந் தான்போவ தல்லாது
என்னால் நடக்க இனிக்கூடா(து)" என்றுசொல்லிப்
பொன்னான சுக்கிரனும் போந்துவன மீதிருந்தான்;
"மாபுரத்தைத் தீயெரித்த வள்ளலடி யார்க்குநிதி
தீபுரத்தில் வாங்கவந்த சீர்முனியே! நீர்தாமும்
இந்தடவு செய்தால் இனியடியேன் ஏதுசெய்வேன்?
சுந்தரஞ்சே ரும்பளிங்கே சொல்லுங்காண்!" என்றவுடன்,
"கொத்தவனே உன்னுடன்நான் கொள்கான கத்தில்வந்தால்
உத்தகறி அன்னமுண்டோ? உடல்முழுக எண்ணெயுண்டோ?
பெத்தவெறும் வென்னியுண்டோ? பிள்கும்இலை தானுமுண்டோ?
வித்தகமாய் நீயுரைத்த மீறுநிதி தான்குடுத்தால்
அந்தமுனி வன்பெறுவான்; யான்பெறுவ தொன்றுமில்லை;
தந்தால் எனக்கென்தான்? தாராத போதென்தான்?
வந்தால் எனக்கென்தான்? வாராத போதென்தான்?
பிந்திநாள் வந்தாலென் பேசியநாள் போனாலென்?"
என்றுவக்கி ரங்களுடன் ஏறுசுக்கி ரன்கிடந்து
நின்றுவுக்கி ரப்புரிய நீதிமன்னன் கூறலுற்றான்—

**கலிவிருத்தம்**

"உத்தம முனிவனே உரிய மாதவா!
இத்தனை ஆடலைப் பொய்மைக் காணுறீர்
சித்தமீ தூமக்குள சிறப்பைக் கூ(று)" என
வித்தகன் கேட்டிடப் புகர்வி ளம்புவான்— 96

---

பா. வே. *3186 : 3* பொங்குவன *1749*
*3195 : 1, 2* அந்த முனிபெறுவான் *1749*
*3198 : 1, 2* பிந்தித்தான் போனாலென் *1574*
*3198 : 4* வந்தாலென் *1574*
*3200 : 1* நின்றுவக்கி *1749* *3200 : 4* கூறலுற்றான் *1574*

''மாமுனி கவுசிகன் மாடை வாங்கநாம்
ஆமென உன்னிடம் அணுகி வந்திடத்
தாமெனக் கிதம்பரி தானம் மாநிதி
கோமக னேஅருள்'' என்று கூறினான். 97

## நடை

''உத்தமனே! உந்தன் உளத்திலுள்ள காரியத்தைச்
சித்தம் மிகத்திரும்பித் தேவரீர் சொல்லும்'' என்றான்;

## சுக்கிரனுக்குக் கூலி பொருந்தல்

''நல்லதொரு மன்னவனே! நானுமுன்னோ டேகிவந்து
வல்லமுனி பொன்வாங்கி வருகப் பரிதானம்
ஆயிரநூ றாயிரம்பொன் அம்புவியெல் லாமறியத்
தாயகமாய் நீயெனக்குத் தானுதவும் வாறன்'' என்றான்;
''அப்படியே உந்தனுக்கு ஆனபரி தானநிதி
செப்பமுடன் தாறன்'' என்று சீர்வேந்தன் சொன்னவுடன்,
உன்னி எழுந்தே உகந்தபுகழ்ச் சுக்கிரனும்
மன்னவற்கு முன்பாய் வலுவிசைகொண் டேகலுத்தான்;
காடும் பலவனமுங் கார்மலையும் சாரல்களும்
கூடும் பெருந்திடலுங் கொள்ளையற வேகடந்து
வெப்பாலை யானசுரம் மீறுவன மீதுவந்தார்;
அப்பாலைக் காட்டின் அதியபொடிச் சூடுபட்டுக்
கன்னியரும் பாலகனுங் கண்ணான மந்திரியும்
பன்னரிய மாலைமுடிப் பார்வேந்த னுங்கலங்கித்
தாமரையில் நீரெனவே தத்தளித்து மெத்தநொந்து
பூமலரை வெந்தழலில் போட்டுவிட்ட வாறெனவுங்
காஞ்சநெடுங் கொப்பரையில் காட்டிவிட்ட நீரெனவும்.
சாஞ்சுபட்டு வெய்யிலுறுந் தார்வாழைத் தண்டெனவும்,

---

பாட வேறுபாடு

3201 : 3 உளத்தில்வருங் 1749
3208 : 2 தாறமென்று 1749
3210 : 4 டேகலுற்றான் 1574 1749
3214 : 2 காட்டில் 1749

நாக்கோ டிதழ்வறண்டு, நன்மேனி யுங்கருகித்
தாக்குடைய மன்னவனார் தாம்நடந்து செல்லுகையில்
கோசிகனார் என்னுங் கொடுமுனிவன் ஓடிவந்து,
"வாசியுள்ள மன்னவனே! மைந்தனுடன் மங்கையரும்
கொடிய பெருங்காட்டில் கோதுபட்டு நொந்துநைந்து
கடிய நடையுடனே கால்வருந்த மேல்வருந்தச்
செல்லுகையால் எந்தனுட சிந்தைமிக நோகுதுகாண்;
வல்லமையால் நீகொடுத்த மாநிலமெல் லாமெனக்குத்
தந்ததுதான் இல்லைஎன்று தானுமொரு சொல்லுரைத்து
உந்தன்அர சாள உகந்தரசா! வாரும்"என்றான்
"தேசிகரே! எந்தடவு செப்பினீ ரானாலும்
பேசியசொல் இல்லையென்று பேசேன்;" எனவுரைத்தான்;
கூசி மனம்புழுங்கிக் கோசிகனும் மீண்டனன்காண்;
வாசியுள்ள மன்னவனும் வாகாக வேநடந்து
ஓங்கு வனத்தில் உசந்தமலைப் பக்கலிலே
பாங்குபெறும் ஆலடியில் பண்பாக வீத்திருந்து
மந்திரிகொண் டேகி வருங்கனிக ளும்மருந்திச்
சிந்தையுடன் கண்துயிலச் சென்றிருக்கும் வேளையிலே,
தூண்டுபுகழ் வேந்தனுக்குத் துன்பம் விளைக்கவென்று
மீண்டுவந்த கோசிகனும் மேகத்தை ஏவிவிட்டான்;

## வெள்ளம் வருதல்

ஏவிவிட்ட மேகம் எழுகடல்நீ ரைப்பருகித்
தாவிக் குமுறிச் சதகோடி மின்னலிட்டுச்
சுத்தெங்கு முள்ள சுகமலைகள் உச்சிதொறும்
பத்தி யிடிவிழுந்து பார்கிழியப் பெய்திடவே,

---

பாட வேறுபாடு :

3227 : 4 நொந்துதுகாண் 1574
3228 : 1 வல்லமையாய் 1749
3235 : 3 உகந்தமலைப் 1574
3236 : 4 வந்திருந்து 1749

கரைந்து மலைசிதறக் கண்டமர முற்பிடுங்கி
இரைந்துமத யானைபுலி யெல்லாத்தை யும்உருட்டி
வெள்ளப் பெருக்கம் மிகநாலு திக்கடந்து,
தெள்ளுந் திரைகொழித்துச் சீராக ஓடிவந்து
வேந்தன் இருக்கும் மிகுத்தபெரும் ஆலடியில்
சூழ்ந்துசுந்தி வெள்ளஞ் சுறுக்காய் இழுத்திடவே
அங்கமுடன் மேனிசிர(சு) எல்லாம நனைந்திடவே
பொங்குங் குளிரடிக்கப் போதவெள்ள மும்மிழுக்க
மைந்தன் பதறியழ மங்கையரும் மெய்யுருகத்
தந்திரிஅஞ் சாமலவர் தங்களுக்கெல் லாமுரைத்து
மேடைத் திடர்தேடி வித்திருக்கும் வேளையிலே
நீடரிய கோசிகனார் நேமித்து ஏவிவிட்ட
நட்டுவக் காலிகளும் நல்லபொல்லித் தேளுகளும்
அட்டையுடன் செய்யான் அரவம் புழுக்களுடன்
பார்த்தவிடந் தோறும் பரந்து கிடந்திடவே
மாத்தி யடிச்சுவடு வைக்கவிடங் காணாது;
நந்துமரு மட்டைகளும் நாடுமெரு மைத்தேளும்
சிந்தையுற வேகடிக்கச் சென்றுதொடர்ந் தோடிவரும்
மைந்தன் குறங்கினிலும் மங்கையுட அங்கையிலும்
வந்தடுக்க வேபதறி மன்னன்பால் சொல்லிடவே
வாயைப் பிளந்து வரும்கடிக்க வேநாகப்;
ஆயமுடன் இந்த அடவிரவி லும்முலைந்து
வாச முடனிருந்து வண்மையுட னேயெழுந்தார்;
வீசுங் கதிர்பரப்பி வெய்யோனுந் தானெழுந்தான்!
வெய்யோன் உதித்தவுடன் வேந்தர்பிரான் தன்னுடனே
தையலரும் புத்திரனும் தந்திரியும் சுக்கிரனும்
எய்தரிய காட்டின்வழி ஏகினார் **அம்மானை !**

வையகம்வா னம்புகழும் மாமுனிவன் அந்நேரம்

---

பாட வேறுபாடு

*3250 : 1* சூழ்ந்துசுற்றி *1749*
*3257 : 3* நல்லபொறித் *1749*

அக்கினியை வாவென் றருகழைத்துச் சேதிசொல்லித்
தக்கபுகழ் மன்னன் தனைமறியும் என்றுவிட்டான்;

### அக்கினி வளைதல்

அம்முனிவன் சொன்னபடி அக்கினிசென் றேயெழுந்து
செம்மையுட னேயெதிர்த்துச் செய்யநெடுங் கானகத்தில்
பாரமலை யைக்கருக்கிப் பண்டைவனத் தைப்பொசுக்கிச்
சாரமுடன் நாலுதிசை தன்னையெங்கு மேவளைந்து
மண்டுபுவி யும்மெரித்து வான்முட்ட நாவுவிட்டுக்
கொண்டுதழல் மண்டிக கொழுந்தடர்ந்து வந்திடவே
மைந்தனுடன் மங்கையரும் மன்னவனுங் கண்டுருகி,
"இந்தடவும் நம்மை எரியடர்ந்து சுத்தியதேன்?"
என்றுசுக்கி ரன்தனைப்பார்த் தின்பமன்னன் கேட்டவுடன்,
"நன்றியுள்ள மன்னவனே! நானுரைக்க நீகேளாய்;
இந்தச் சுடருக்(கு) இறைஓர் உயிர்கொடுத்தால்
வந்தவழி போகும் மறுத்துவே றேதுமில்லை;
சொன்னேன் கருமம்" என்று சுக்கிரனுஞ் சொல்லிடவே,
பொன்னேர் சலத்தரசன் போரமைச்ச னைப்பார்த்துச்
"செம்மல்தனைக் காத்திருந்து தேவியர்க்குப் புத்திசொல்லி
விம்மலின்றி நீங்களிரும்; மிக்கசுட ருக்கிரையாய்
நான்செல்வேன்" என்று நடந்தான் அரசர்பிரான்;
தேன்சொல் அமுதனைய தேவியரும் ஏதுரைப்பாள்—
"மன்னன் இறந்தபின்பு வையகத்தோர் தாமறியப்
பின்னை இறந்துவிட்டால் பேறெனக்குக் கிட்டாது;
ஈதல்லால் எம்மை எவருங் கவுந்திஎன்பார்;
ஆதலால் இப்போ தடியேனுங் கொள்வதில்லை"
என்றுசொல்லி மின்னாள் "எரியில்விழு வேனெ"னவே
வென்றியுள்ள பாலகனும் மிக்கவகை கூறலுற்றான்—
"மாதாவே! தாதையரே! மண்டுமெரிக் கேயிரையா
யேதாங்கள் ஏகி எரிந்துவிடக் காரியமென்?

---

பாட வேறுபாடு

3296 : 3 அடியேனுங் 1574

அன்னை பிதாவுக் கவத்தினைகள் வந்துதென்றால்
உன்னியதோர் பாலன் உதவுதற்கும் உள்ளமுறை
நானிருக்க நீங்களிந்த நாடும்எரிக் கேயிரையாய்த்
தானிறக்க ஞாயமில்லை; தாதையரே அன்னை!" என்று
அங்கவரைத் தானிருத்தி ஆனதொரு பாலகனும்
சங்கையுடன் அக்கினியில் தானேக நிற்குகையில்,
"அரசு நிலையழிய யான்பார்த் திருந்தனென்றால்
உரசமணி ஈசன் உறும்பதத்துக் கேறாது
நீங்கள் இறப்பதுவும் நீதியல்ல" என்றுசொல்லி
ஆங்கருமஞ் சொல்லும் அமைச்சன் அடக்கலுத்தான்.
செந்திருவைச் சேர்புயத்தான் சீர்வேந்தன் செப்பியதும்,
மைந்தன் உரைத்ததுவும், மந்திரிபின் சொன்னதுவும்
சந்திரமதி யென்னுமந்தத் தையலரும் தான்கேட்டு,
"இந்தடவு நீங்கள் இயப்புவது நன்மையல்ல
தூறிவரும் தீயில் துயரமறச் செல்வதற்கு
மீறிநான் போவன்" என்று மின்னாள் உரைபகர்ந்து
பூணுங் கலையிறுக்கிப் பொங்குமன முந்தெளிந்து
வாணுதலாள் அம்பிகையை வண்மையுடன் நெஞ்சில்வைத்து,
"அக்கினியே! கேளுமிந்த அப்புவியில் நீயறிய
மிக்கமனு உள்ளவர்க்கு மீறிடுத்தஞ் செய்தேனால்,
அறத்தைக் கெடுத்தேனால், அந்தணர்சொல் மீறினனால்,
வெறுத்துப் பசித்தோரை மீறியன்னங் கொண்டேனால்,
மாந்தர் தனைப்பழித்து மாறாட்டஞ் செய்தனென்றால்,
தாழ்ந்து கொழுநன் தனக்கஞ்சாப் பாவியென்றால்
அங்கவர்தம் ஆசைச்(கு) அழிவுசேர் கள்ளிஎன்றால்
பொங்குமெரி! என்னைஎரி போதஎரி" என்றுசொல்லி

பாட வேறுபாடு

3301 : 3 கவதிகளும் 1574
3301 : 4 உத்துதென்றால் 1749
3304 : 2 ஞாயமல்ல 1749
3310 : 4 அடக்கலுற்றான் 1574
3314 : 4 நீதியல்ல 1574
3315 : 4 செல்லுதற்கு 1749
3316 : 2 செல்வனென்று 1574
3319 : 3, 4 அம்புவிவா னம்மறிய 1574
3322 : 1, 2 வெறுத்துப்பசித்தோரிருக்க 1574

மங்கைசினத் தோடுரைத்து மண்டுமெரி மேல்நடந்தாள்;
நங்கையுட கற்பெனுந்தீ நாடும்எரி யைச்சீறிச்
சுட்டுப் பொசுக்கிவெகு தூளிதங்க ளாய்விரட்டித்
தட்டுக்கெட் டோடிவிடத் தான்அடித்த **தம்மானை!**

பாவைகற்புத் தீயால் பதறிநொந்து வெந்தலறித்
தாவக் கினிசிதறித் தானோடிக் கோசிகன்பால்,
"நல்லதவ மாமுனியே! நாடினேன் உன்மொழியால்,
வெல்லிகற்புத் தீயாலே வாடிநொந்தேன்;" என்றுசொல்லித்
தழலோன் உரைத்திடவுந் தார்முனிவன் கேட்டுருகி
அழலோன் தனையனுப்பி அன்பாக வீத்திருந்தான்;
அக்கினிசென் றேசிதறி ஆத்தாமல் போனதுவைச்
சுக்கிரன்கண் டுள்ளந் துணுக்கென் றுறப்பயந்து
மங்கைதனை யன்பாய் மனத்திலே கொண்டாடிச்
சங்கையுடன் நின்றாடித் தானே வழிநடந்து,
செச்சையுடன் காட்டில் சிறந்ததொரு சோலையிடம்
அச்சமில்லா தேயிருந்து ஆனகனி யும்மருந்தி
வீத்திருந்தார் அந்தநல்ல வேளையிலே கோசிகனார்
பூத்தமா காளிகோட்டம் பூந்துபல பேய்களைத்தான்
தேட்டமுட னேயழைத்துச் "சீர்வேந்தன் பாலனுகி
நாட்டமுற அச்சம் நடத்திநில்லும்;" என்றுவிட்டான்.

## பேய்கள் வரவு

அப்படியே நல்லதென்று அம்முனிவன் சொல்படியே
குப்பல்குப்ப லாகவெகு கூளியின முந்திரண்டு
வந்தரசன் தங்கும் வரைப்புனமெல் லாம்பரந்து
சிந்திவிழுந் தீசிதறத் திண்டாடி வாய்பிளக்கும்;

---

பாட வேறுபாடு

*3334 : 3, 4* வாட்டமுற்றேன் என்றுருகித் *1749*
*3338 : 1, 2* சுக்கிரனுங் கண்டு *1574*
*3338 : 3, 4* துணுக்கென் றுள் ளம்பயந்து *1574*
*3340 : 2* திண்டாடித் *1749*
*3343 : 1, 2* வீத்திருக்கும் போதில்நல்ல *1574*
*3344 : 4* பேய்கள்தன்னை *1574*
*3347 : 4* சொல்படிக்கே *1574*

சத்தமிட்டு வாயலறித் தாண்டிவளைந் துஞ்சிலபேய்
உத்தூளி கொண்டிருமி ஓடியா டித்திரியும்;
மைந்தன் விழிக்கெதிரே வந்துபல பேய்கதறிச்
சிந்தை மயக்கமுறச் சென்றுநெடும் பல்காட்டும்;
பார்த்ததிசை தோறும் பலபே யினங்களெல்லாம்
ஆர்த்துவிளை யாடி அலைந்துநிற்குஞ் சீருகண்டு,
மன்னவனும் மந்திரியும் மங்கைமகன் அஞ்சாமல்
உன்னரிய வேதத்(து) உகந்தபரா சத்தியுட
பஞ்சாட் சரஞ்செவித்துப் பார்த்ததிசை மீதிலுத்த
கொஞ்சப் பசாசினங்கள் கூட்டமுத்த நம்மானை!

மாய இருளும் வலுத்துவந்த பேய்இருளும்
தேயக் கதிர்பரப்பிச் செங்கதிரோன் வந்துதித்தான்;
நல்லதொரு மன்னவனும் நாரியரும் பாலகனும்
சொல்லரிய மந்திரியுஞ் சுக்கிரனுந் தான்எழுந்து
கானகத்தை நாடிக் கடுகிமிக வேநடந்தார்;
ஆனபுகழ்க் கோசிகனும் அங்கைவந்தும் ஏதுரைப்பான்—

## கலிவிருத்தம்

"வேத வேதியர் விண்ணவர் தம்முடன்
ஆதி நாதன் அகமகிழ் கோசலை
நீதி மாநகர் நீள்உல கண்ணலே
சேதி கேள்"எனச் செப்புவன் கோசிகன். 98

"பன்னும் பாதை படர்நெடுங் கானகம்
இன்னந் தூரம் மிகநடந் தேகவே;
என்ன மென்றிவை யெய்துவை? என்மொழி
தன்னைக் கேள்"எனச் சாத்துவன் துன்மொழி— 99

---

பாட வேறுபாடு

நடை 3359 : 4 மீதிலுற்ற 1574 1749

விருத்தம் 99. 3 : 2 மென்றினி 1749
4 : 3 சாற்றுவன் 1749

## நடை

### பாம்பு வளையுதல்

"அய்யோத்தி மன்னா! அரசர்பெருங் கோளரியே!
சய்யோத்தி யானமொழி தான்கூற வேகேளும்;
மன்னாஇக் கான வழிகொடிய பாதைஇன்னம்
உன்னால் நடந்திடவும் உன்தேவி வந்திடவும்
என்னமென்று கூடி இனிநடக்கப் போறாய்காண்?
நன்றுடைய வார்த்தை நயந்துகேள் ஓர்வசனம்;
பாத மலர்வருந்தப் பத்மமுகம் வேர்த்தொழுகக்
காதலுடன் நீநடக்கக் காரியம்என்? சொல்லரசா!
தந்த நகர்எனக்குத் தந்ததில்லை என்றொருசொல்
உந்தன்மொழி யால்உரைத்திட்(டு) உன்னரசை ஆளும்" என்றான்;
"சீராரும் மாமுனியே! சேதிபல சொன்னாலும்
பேறாக நான்மறுத்துப் பேசேன்" எனவுரைத்துச்
"செய்யபதந் தான்நோகத் தேவரீர் எய்தாமல்
வையகத்தில் செல்லும்" என்று மன்னன் மிகவுரைத்தான்;
மன்னன் உரைத்தவுடன் மாமுனிவன் கோபமிஞ்சி
உன்னியெழுந் தேகிவந்து ஊதுபெரு நாகமென்னும்
கார்க்கோ டகனைக் கனிந்தழைத்துச் சேதிசொல்லிப்
"போக்குரிய மன்னவனும் போகாமல் சென்றிருக்கச்
செல்லும் வழியைச் சிறந்துமறி" என்றுவிட்டான்;
வல்லமுனி சொல்லால் வகைஉரக மானதுதான்
உத்தஉடல் நீளம் ஒருபத்துக் காதவழி,
பத்து மலைஉயரம் பாரப் படம்எடுத்து.

---

பாட வேறுபாடு

நடை
3371 : 2 கூட்டி 1574
3376 : 4 யாண்டிரென்றான் 1749
3378 : 4 மறுவசனம் 1749 எனவுரைத்தான் 1574
3386 : 3 வகைநாக 1574
3387 : 1 ஓத்தவுடல் 1749
3388 : 2 மலைஉசரம் 1749

வாயைப் பிளந்து வலியதந்தம் ஈர்இரண்டும்
நேயச் சவளம்என நின்றாடித் தான்நாடிப்
பொறிஅக் கினிவிழியில் பொங்கியெழ வுஞ்சீறி
அறிவத்த நாகம் அடர்ந்துநின்ற(து) **அம்மானை !**

நாகம் படமெடுத்து நாடிநிற்கும் வாறுகண்டு,
தோகையரும் பாலகனும் துங்கமன்ன னும்பார்த்து,
"மாதவனே! சுக்கிரனே! மாநாகம் இப்படித்தான்
போதும் வழிமறுத்துப் போதநிற்கும் வாறேது?
சொல்லும்"என்ற போதுநெடுஞ் சுக்கிரனும் ஏதுரைப்பான்—
"வல்லெயிற்று நாகம்இது மாகொடுமை செய்துவிடும்;
போவோம்நாம் வந்தவழி; போர்வேந்தே!" என்றுமிக
மாவேகச் சுக்கிரனும் வன்மையுடன் செப்பினர்காண்;
அவ்வார்த்தை கேட்டு அரசன் திருமனையாள்,
"ஒவ்வாத வார்த்தை உரைக்கிறீர்" என்றுசொல்லிக்
கடிய நடையுடனே கன்னியரும் சென்றுவந்து
நெடியதொரு பாம்பை நிதானமுட னேபார்த்து,
"அனியாயம் பண்ணி அரசுபுரிந் தாண்டிருந்தால்
இனியதொரு ஏழைக் கிடைகூறு செய்திருந்தால்
மத்தோர் அரசழித்து மாநிலத்தில் ஆசைகொண்டால்,
சத்தியங்கள் தப்பித் தவறிநடந் தேயிருந்தால்,
கொலைகளவு காமம் குருநிந் தனைவிளைக்கும்
நிலைமனிதர் தாமிருக்கும் நீணிலத்தி லேஇருந்தால்,
தீண்(டு);அரவே" என்றுசொல்லித் தேவியரும் தான்கூறி,
ஆண்டரவின் வாயில் அறமிதித்துத் தான்நடந்தாள்;
மாது நடந்துவர மாநாகம் தன்விழிக்கே
ஓதுங் கருடன் உகந்துவந்தாப் போலேகண்டு,

---

பாட வேறுபாடு

3400 : 3 வன்மையுறச் 1749
3407 : 3, 4 மாநிலத்தை ஆண்டிருந்தால் 1574
3410 : 2 நாமிருந்த 1749
3411 : 4 தான்நடந்து 1574

அஞ்சிப் பதறி அறநடுங்கி மெய்சோர்ந்து.
வெஞ்சினவாய்ப் பல்லுரகம் மீண்டோடிக் கோசிகன்பால்
சேதிசொல்லித் தாம்இருக்குஞ் சீரிடத்தில் ஏகியதே;
நீதிமன்னன் பாலகனும் நேரிழையும் மந்திரியும்
மைப்பரவுங் கான வழிநடந்தார் **அம்மானை!**

அப்பெரிய கானத் தருநிழல்கண் டேஅரசன்
காலிற் பொடிசுடுமிக் காரணங்கள் தீரவென்றே
கோலிநொடி நேரம் குணமாக நிற்கலுற்றான்.
கண்டுசுக்கி ரன்சினந்து, "காவலனே! நீதுடர்ந்து
கொண்டுவர மாட்டை" என்று கோபமுடன் சொல்லிடவே,
சந்தவனம் பாராமல் தார்வேந் தனுமெழுந்து
அந்தநொடி தன்னில் அடர்ந்துவழி செல்லலுத்தான்.
முந்தி அரசன் முனிந்துநடக் கும்பொழுதில்
பிந்திநின்று சுக்கிரனும் பேதமுற ஏதுரைப்பான்—
"என்கால் கடுக்குதுகாண்; என்னுடம்பு நோகுதுகாண்;
வெங்கா னகத்தில் மிகநடக்கக் கூடாது;
எண்ணெய்த் தயிலம் இளவெந்நீர் மேலைவிட்டு
உண்ணக் கறியமுதும் உண்டானால் வந்திடுவேன்;
உள்ளபடி ஈது" என்(று) உரைத்துப் பளிங்கவனும்
தள்ளவிழும் மாமரம்போல் தான்வழியி லேகிடந்தான்;
"அறிவுக்கு மிச்சமுறும் அம்முனிவன் பொன்ஏற்கப்
பிறிவுக்கு வந்ததொரு பேர்முனியே! நீஅறிய
எந்தன் கரத்தில் இருப்பதுகண் டேகேளும்;
தந்திடுவேன் இல்லாது தான்குடுக்க ஏதுமுண்டோ?"
என்று மனங்குளிர ஏற்றபல வார்த்தைசொல்லி,
வென்றியுடன் கூட்டி மிகவே வனங்கடந்து

---

பாட வேறுபாடு

*3426 : 4* செல்லலுற்றான் *1574*
*3438 : 4* வேறுமுண்டோ *1749*
*3439 : 3* ஏத்தபல *1749*
*3440 : 2* கூடி *1574*
*3440 : 4* வழிநடந்து *1574*

சென்றோர் கிரியடியில் செப்பமுள்ள மாவடியில்
அன்றிரவு தங்கி அயல்நாள் எழுந்திருந்து
ஆரணியத் தேகி, அரியபுகழ்ப் பார்க்கவனும்
காரணமாய் வேந்தன் கடிந்துசென்றால் நின்றுகொண்டும்
மெள்ள நடந்தால் "மிகநடவும்" என்றுகொண்டும்
கள்ள மனதுடைய காரணமாய் பார்க்கவனும்
ஏறுக்கு மாறாய் இடர்உறுத்துத் தான்நடந்து
வீறுக்கு மாறாய் மிகநடக்குஞ் சுக்கிரனைத்
தேத்தி மிகத்தேத்திச் சீர்வேந்தன் நாடிவழி
மூர்த்தி துணைஎனவும் மூண்டுநடந் தேகினன்காண்;
அவ்வனத்தில் வாழும் அரியபுரு ஷாமிருகம்
செவ்வையுத்த மன்னவனைச் சென்றுகண்டங் கோடிவந்து,
"வீர சிகாமணியே! வேல்வேந்தர் கோளரியே!
சூரருட கண்மணியே! துங்கமன்னர் போரேறே!
இக்கா னகத்தில் இருபாத மும்வருந்த
மைக்கொடியும் பாலகனும் மந்திரியுஞ் சென்றுவந்தீர்;
இந்தவனந் தன்னில் இசைந்துவந்த தேஅருமை
நந்தமரும் மன்னவனே! நற்பதமும் நோகாமல்
எந்த னுடமுதுகில் ஏறிநடந் தேகும்" என்று
சந்துபுரு ஷாமிருகம் தான்வணங்கி நின்றிடவே,
போர்வேந்தன் அந்தப் புருஷா மிருகமுடன்
சீர்சார்ந்த சேதி சிறந்துரைப்பான் **அம்மானை!**

"நேசம் பரமசிவன் நீடுமுறை மைக்குகந்த
பூசனைசெய் தாளும் புருஷமிரு கேந்திரனே!
நீதியல்ல உன்முதுகில் நேசமுடன் நான்ஏறில்
ஆதிபரன் மால்பிரமன் அண்டருக்கும் ஏறாது;"
என்றுசொல்லி அந்த இயல்மிருகந் தன்னைவிட்டு
வென்றியுடன் காட்டுவழி மேவிநடந் தேகலுத்தான்;

---

பாட வேறுபாடு

*3452 : 1* செவ்வையுற்ற *1749*
*3462 : 2* செய்தி *1749*
*3468 : 4* தேகலுற்றான் *1574 1749*

நல்லவழி மன்னன் நடக்கப்புரு ஷாமிருகம்
சொல்லி நடந்திடவே சுக்கிரனும் அந்நேரம்
கோசிகனைத் தானினைந்தான்; கோசிகனும் ஓடிவந்து,
வாசிபெறு மன்னவனார் வாறவழி தான்முழுதும்
சாருமிடி கல்கரடு தங்குமுனைக் கல்லுகளும்,
ஈரும்வாளைப் போலே இசைபிளவைக் கல்லுகளும்
வன்கொடிய பாதை வழிமுழுதும் இட்டுவைத்தார்;
அன்புடைய மன்னன் அரியபத மும்வருந்த,
அந்தநெடும் பாதைவழி ஈரஞ்சு நாள்நடந்தார்;
அந்தநெடும் பாதைவழிக் கப்பால் வழிமுழுதும்
சின்ன நெருஞ்சிமுள்ளுஞ் சீரான காரைமுள்ளும்
பன்னும் இலந்தைமுள்ளும் பாதைஎங்குந் தாவிவைத்தார்;
செவ்வையுத்த மன்னவனுந் தேவியரும் பாலகனும்
அவ்வனத்தி லேதான் அறுமூன்று நாள்நடந்தார்;
இப்பெரிய கானத் திசைந்து வழிநடந்து,
அப்பால் அரசனுடன் ஆயிழையும் பாலகனும்
செல்லுந் தடம்முழுதுஞ் செம்பாறைக் காட்டுவழி,
கல்லும் பெருங்கரடுங் காரைமுள்ளுஞ் சேர்ந்ததிலே
அஞ்சாம லேநடந்தார் ஆறுநாள் ஆமளவும்;
இஞ்சலுடன் இவ்வா(று) இசைவாக வேநடந்து,
கொத்தலனும் பைந்தொடியுங் கோமகனும் மந்திரியும்
உத்தநகர் காசி ஒருகாதம் என்னவந்தார்;
வந்திருந்த மன்னனிடம் மண்டுசுக்கி ரன்னுரைப்பான் —
"செந்திரு(மின்) வாழும் திகழுமரிச் சந்திரனே!
நாளைத் தவணைஎங்கள் நன்முனிக்குப் பொன்னீய;
வேளைதப்பிப் போகாமல் வேண்டிநான் சொல்லுகிறேன்;"
என்றுசொல்லிச் சுக்கிரனும் எத்தமுடன் அங்கிருந்தான்.
அன்றிரவு சென்றுநெடும் ஆதித்த னும்முதித்தான்;

---

பாட வேறுபாடு

*3471 : 1, 2* கோசிகனைநினைந்தான் *1749*

*3473 : 3* தங்குமுளைக் *1749*

*3475 : 2* பாறை *1749*

*3495 : 3* ஏற்றமுடன் *1574*

ஆதித்தன் தோன்றியபின் ஆயிழையும் மன்னவனும்
காதிப் பயின்றெடுத்த காளையரும் மந்திரியும்
வந்தபுக ரோனும் வனிதமுட னேஎழுந்து
நந்தர்தொழுங் காசி நகரினுக்குச் செல்லலுற்றார்.
சுத்தும் நெடுங்காவுஞ் சூழ்ந்தநெடு வாவிகளும்
கொத்தலருஞ் செண்பகமுங் கூரிய தாமரையும்
நீராவி மண்டபமும் நீண்டநெடுங் கோபுரமும்
சீரான காசிவளஞ் சீர்வேந்தன் கண்டுகொண்டு,
"மின்னே!இவ் வூருவளம் மிக்கவளம் பாரும்"என்று
அன்னவருக் கெல்லாம் அரசன்மிக வேமகிழ்ந்து
கன்னல் இருக்குங் கதித்த நெடுவளமும்
சொன்னவர்ணப் பொற்குயிலுஞ் சொல்லுமுறை பாடியதும்
சித்திரமா மஞ்ஞை சிறகுவிரித் தாடுவதும்
தத்துகவி தாண்டுவதுந் தார்வேந்த னும்முரைத்தான்;
உள்ளங்களித் தெல்லவரும் உண்மையுடன் கொண்டாடித்
தெள்ளுதமிழ்க் காசிஎனுஞ் சீர்ப்பதியில் சென்றனர்காண்;
கோசிகனார் விட்ட கொடுமைவழி யுங்கடந்து
காசி நகரடைந்தான் காவலவன் அம்மானை!

வக்கிரங்கள் ஆகி வழிமுழுதுஞ் சென்றுவந்த
சுக்கிரனுக் கன்னஞ் சுகந்தளிக்க வேணுமென்று
மன்னனொரு வேதியனார் வாசல் தனையணுகி,
"அன்னையரே! இந்த அருமறையோன் மெய்குளிரப்
பாலமுர்த முங்கொடுத்துப் பண்பாய் அனுப்புமெ"ன்றார்;
சீலமுள்ள மன்னன் சிறந்துரைக்க வேதியர்மின்
மாவேந்தன் செய்ய மலர்முகத்தைக் கண்டவுடன்
"தேவேந் திரனோ? திருமால்தன் புத்திரனோ?
மூவேந்தர் தன்னிலொரு மூர்த்தியோ?" என்றுசொல்லிப்
பாவேந்தும் வேதகுலப் பார்ப்பனியாள் அந்நேரம்

---

பாட வேறுபாடு

3519 : 1 பாலமுத 1749

வாகனைய வெள்ளி மனங்குளிர்ந்து கொண்டாடப்
பாகுபழந் தேனும் பரிவாய் அறுசுவையும்
சேர்ந்தகறி வர்க்கஞ் சிறக்கநால் எட்டுடனே
ஆய்ந்தபடி நல்ல அமுதம் படைத்தனள்காண்.

### காசி விசுவநாதர் தெரிசனம்

இட்டகறி யன்னம் இசைந்துசுக்கி ரன்பருகிக்
கட்டாக வேயெழுந்து காவலவன் முன்புவந்தான்;
முன்புவந்து நின்று முறைமையுடன் ஏதுரைப்பான்—
''அன்புடைய மன்னா! அருநிதியம் நீசெலுத்த
நாழிகைமூ வஞ்சுளது; நாட்டமுடன் காணும்'' என்று
கோளனைய சுக்கிரனுங் கூறியே நின்றுவந்தான்;
வந்தவர்கள் துய்ய மகாகங்கை நீராடிச்
சிந்தையுற ஈசன் திருப்பாதம் போற்றிசெய்து,
விசுவநா தீசுரனார் மேவுதிருக் கோவில்நண்ணிப்
பசுமையுடன் ஈசனிரு பாதமல ரைப்போற்றி,
''வேதம்புக ழீசுரனே விஸ்வநா தப்பொருளே!
போதஉன்னை நம்பிவந்தேன் பொன்கொடுக்க மாமுனிக்கு;
மிக்கபுவி யாண்டருளும் வேதவிசா லாட்சியம்மா!
தக்கமுனி பொன்ஈயத் தானுமுன்னை நம்பிவந்தேன்;
கந்த மதமுடைய கற்பகமே! உன்சரணம்
சிந்தைதனில் எண்ணுகிறேன் சீர்முனிக்குப் பொன்கொடுக்க;
மாமயிலில் ஏறி வருமுருகா! வள்ளிபங்கா!
மாமுனிக்குப் பொன்ஈய வண்மைதர வேணுமய்யா!
ஆலிலையில் பள்ளிகொள்ளும் அச்சுதனே! மாயவனே!
சீலிலங்கு மாமுனிக்குச் செம்பொன்நிதி யான்கொடுக்க
எந்தவித முங்கிருபை ரட்சிக்க வேணுமய்யா!
விந்தரியே! அந்தரியே! மிக்கதொரு சுந்தரியே!
நேசிக்கும் உண்மை நிலைமைதவ றாதபடி
கோசிகர்க்குப் பொன்கொடுக்கக் கொள்கைதர வேணுமம்மா

---

பாட வேறுபாடு

3532 : 4 நீர்செலுத்த 1749

நீல வயிரவனே! நிர்வாண சித்திரனே!
கோலமுனி பொன்ஈயக் கூறீர் நலமெனக்கு;''
என்றுதொழு தேத்தி இசைமன்னன் கோயில்சுத்தி
வென்றியுள்ள மண்டபத்தில் மேவியே நிற்கலுற்றான்.

## கலிவிருத்தம்

நின்று மன்னவன் நெஞ்சகத் தெண்ணியே,
''இன்று செம்பொன் இயல்முனிக் கீவது
துன்று மாகுழல் தோகை! இதற்கிதுஞ்
சென்று கூறு''எனத் தேவியுங் கூறுவாள்— 100

''என்னை யன்றி இருநிதி ஏதுனக்(கு)?
உன்னை யன்றி உறுநிதி ஏதெனக்(கு)?
அன்ன மாதரு வாகிய அண்ணலே!
பொன்னுக் கென்னைப் புகழ்ந்துவித்(து)ஈ'' என்றாள். 101

## நடை

நிற்குகின்ற மன்னவனும் நேரிழையா ளைப்பார்த்து,
''மைக்கொடியீர்! இந்த மகாமுனிக்குப் பொன்கொடுக்க
ஏதுவகை செய்வோம்? எனக்கறியச் சொல்லும்''என்றான்.
சூதுநிக ரொத்தமுலைத் தோகைநல்லாள் ஏதுரைப்பாள்—
''மன்னவனே! உன்னையல்லால் மாநிதியர் ஏதெனக்கு?
என்னையல்லால் மாநிதியம் ஏதுமுண்டோ உந்தனுக்கு?
ஆகையால் மாமுனிவர்க்(கு) ஆனதொரு பொன்கொடுக்க
வாகுடைய மன்னா! வகையுனக்குச் சொல்லுகிறேன்;
நீடுபுகழ்க் காசி நிலமீதில் என்னைவித்துத்
தேடுபுகழ் மாமுனிக்குச் செம்பொன்நிதி ஈயும்;''என்றாள்;
இவ்வார்த்தை கேட்டு இயலரசன் மெய்கலங்கிச்
செவ்வரிசேர் கண்ணீருஞ் சிந்திவிழ ஏதுரைப்பான்—

---

பாட வேறுபாடு

**3555 : 3 இயல்மன்னன் 1749**
**3555 : 4 கோவில்சுற்றி 1574**

"மானே! குயிலே! மயிலே! மதிநயவேள்
தானே வெகுநாள் தவம்புரிந்து பெற்றெடுத்துப்
பொன்போல் வளர்த்ததுவும், பூவையரே! உன்னைவித்தால்
என்போலும் ஆருளர்காண்? ஏந்திழையே!" என்றுசொன்னான்;
"மன்னவனே நீர்விண் மயங்குவது நீதியல்ல;
சொன்ன தவணைதப்பிச் சோரனென்று போகாமல்,
என்னைவித்து மாமுனிபொன் ஈவதுவே யல்லாது
பின்னைமறுத் துண்டோ? பெருமானே!" என்றுசொல்லிச்
சந்திர மதியனைய தையலும்பின் ஏதுரைப்பாள்—
"தந்தைபிதா வுக்குதவாச் சந்ததியால் ஏதுபலன்?
ஆளுங் கொழுநனுடை ஆவத்துக் கில்லாமல்
வாழுந் தலைவியுடை வாழ்க்கையினால் ஏதுபலன்?
என்றுமறை யோதும்; இதையறிவீர் மன்னவனே!
வென்றியுள்ள வேந்தே!சொல் மெய்நிலைமை அல்லாது
அங்கம்பெண் பிள்ளைநிதி அல்லாம் நிலைமையல்ல;
துங்கமுனி பொன்ஈயச் சொல்தவணை தப்பாமல்
என்னைவித்து மாமுனிபொன் ஈந்தனுப்பும்" என்றனள்காண்!

## சந்திரமதியை விலை கூறுதல்

அன்ன தருவான் அரிச்சந் திரவேந்தன்
கன்னிமன ஞானக் கருத்தறிந்து கொண்டாடி,
அந்நேரந் தன்னில் அரிவைதனை விக்கவென்று,
கோலத் திலங்குமயில் கோதையரைத் தான்நடத்தி,
ஞாலம் புரக்கும் நரபாலன் கொண்டுசென்று
ஆவணங்கள் வீதி அருமறையோர் தன்தெருவும்,
பாவாணர் வீதிகளும் பார்மன்னர் வீதிகளும்,
இச்செல்லாங் கொண்டாடுஞ் சீர்வணிகர் வீதிகளும்,
தக்க புகழ்பெறும் சத்திரியர் வீதிகளும்,
எட்டெட்டுக் கோணம் இசைந்ததெரு வீதியுடன்
பட்டணத்தில் உள்ள பலகோடி வீதிதொறும்

பாட வேறுபாடு

3570 : 4 பெத்தெடுத்துப் 1749
3592 : 3 பார்வேந்தர் 1749

"பைந்தொடியைக் கொள்ளும்"என்று பார்வேந் தனுமுரைத்து,
"அந்தணரே! மன்னர்களே! ஆனவணி சேகர்களே!
கோதையரை அஞ்சுகத்தைக் கோகனக வல்லியரை
மாதைக் கனகமணி வஞ்சியரைக் கிஞ்சுகத்தைப்
பண்டை விதியாலே பார்முனிவன் பொன்னாலே
ஒண்டொடியை விக்குகிறேன்; உள்ளவரே! கொண்டிடுங்கள்.
மாவேந்தர் போற்றும் மதிதயனார் பெற்றெடுத்த
கோவை இதழாளைக் கோகிலத்தை விக்குகிறேன்;
வஞ்சி இடையாளை மான்போலுங் கண்ணாளைப்
பஞ்சனைய பாதமலர்ப் பாவையரை விக்குகிறேன்;
கோலமுள்ள நாட்டவரே! கொள்ளுங்கோ கொள்ளும்"என்று,
சீலமுள்ள வீதித் தெருவெங்குஞ் சுத்துகையில்,
"கொள்ளுங்கோள்" என்ற குரல்கேட்டு வந்தொரு
நள்ளிருளின் கூந்தலெழில் நாரியருங் காளையரும்
சந்திரோ தயவதனச் சந்திரமதி யைப்பார்த்துச்
சிந்தை மிகவெருவிச் செய்யிழையைக் கண்டவுடன்,
"பொன்மடந்தை பூமடந்தை பூவிலுறை யும்மடந்தை
நன்மடந்தை யென்றுசொல்லி நாம்முன்பு கேட்டிருப்போம்;
இம்மடந்தைக் கொப்பான ஏந்திழையைக் கண்டறியோம்;
அம்மா! இவள்கமலத்(து) ஆயிழையோ! ஆதிஅயன்
நாவிலுறை யுந்திருவோ! நார்ச்சசியோ! ஏர்ரதியோ!
பூவுலகு காணவந்த பொன்னார் அருந்ததியோ!
ஆரோ தெரியா(து) அதிசயமாய்க் காணுதுகாண்;
பேறாக நாமிவளைப் பேதமையால் கொள்ளஎன்றால்
மைக்கூந்த லுக்குவிலை வையகத்தில் ஆர்கொடுப்பார்?
மைக்கூந்த லுக்குவிலை வையகத்தோர் ஈந்தாலும்
இந்து நுதலுக்(கு) எவர்காண் விலைகொடுப்பார்?
இந்து நுதலுக்(கு) இருநிதியார் ஈந்தாலும்
சிந்தூரந் திட்டுமந்தச் சித்திரத்தை யார்மதிப்பார்?
சிந்தூரந் திட்டுமந்தச் சித்திரத்துக் கீந்தாலும்

---

பாட வேறுபாடு

*3613 : 3, 4 பூவி லுறைமடந்தை 1574*

*3620 : 3 பேதமையாய்க் 1749*

வள்ளையிலங் குங்குழைக்கு வாய்த்தவிலை யார்கொடுப்பார்?
வள்ளையிலங் குங்குழைக்கு வாய்த்தவிலை ஈந்தாலும்
வேல்போ லனைய விழிக்குவிலை யார்கொடுப்பார்?
வேல்போ லனைய விழிக்குவிலை ஈந்தாலும்
கருணையுள்ள பாவைதனைக் கண்டுவிலை யார்மதிப்பார்?
கருணையுள்ள பாவைநல்லாள் கஞ்சமலர் ஒத்திலங்குஞ்
செகமண்ட லோகஞ் செழுநிதியம் ஈந்தாலும்
முகமண்ட லந்தனக்கும் மொவ்வாது காணும்விலை;
இத்தனைக்குஞ் செம்பொன் இனிக்கொடுத்தார் ஆனாலும்
வித்தார மாமதனை மின்பூச வில்செயிக்கும்
முத்தார் நகையார் முருக்கிதழ்க்குப் பொன்னுளதோ?
முத்தார் நகையார் முருக்கிதழ்க்குப் பொன்கொடுத்தால்
ஓசைக் கிளிமொழிக்கும் உள்ளவிலை தான்வருமோ?
ஓசைக் கிளிமொழிக்கு உத்தவிலை ஈந்தாலும்
அன்ன நடைக்குவிலை யார்கொடுப்பார் அஞ்சுகமே?
அன்ன நடைக்குவிலை யார்தான் கொடுத்தாலும்,
கன்னியுட சாய்கைக் கதிமையறிந் தார்கொடுப்பார்?
இந்நிலத்தோர் தம்மால் இவளைவிலை கொள்ளரிது;"
என்றென்று பார்த்தோர் இயல்பாக வேயுரைத்தும்
நன்றியுடன் கண்டும் நடந்தார்கள் அல்லாமல்
கொள்ளவிலை கூறும் என்று கூறுவார் இல்லாமல்
உள்ளங் கலங்கி உருக்கலங்கி மன்னவனும்

---

பாட வேறுபாடு

3631 : 2 பார்வைதனைக் 1574 1749
3631 : 4 யார்கொடுப்பார் 1749
3632 : 2 பார்வைநல்லாள் 1749
3637 : 2 நகையாள் 1574
3642 : 3 யார்தாம் 1749
3644 : 1, 2 இந்நிலத்தில் நம்மால் 1574
3645 : 2 கண்டோர் 1749
3646 : 2 பார்த்து 1749

நெஞ்சம் மிகமயங்கி, ''நீள்காசி நாயகமே!
தஞ்சமுன்னை நம்பிவந்தேன்; தட்டழிய விட்டுவிட்டால்
எம்முயிருங் காளைஉயிர் ஏந்திழையாள் தம்முயிரும்
மும்முயிரும் உந்தனுக்கு மூண்டபழி நிச்சயங்காண்;
சொன்னேன் நிசமாகச் சொல்காசி நாயகமே!
பொன்னேற்கும் மாமுனிவன் பொல்லாங்கு பேசாமல்
காத்தருள வேணும்; கடனுமக்கே'' என்றுசொல்லி,
மாத்தலரைக் காத்தமன்னன் மங்கையரைக் கொண்டேகி
மத்தோர் தெருவீதி வாகுபெற வேநடந்து,
தத்தை மொழியணங்கைத் தானும்விலை கூறலுற்றான்.
சுக்கிரனும் அந்நேரம் சொல்வேந் தனைமறித்துச்
''சிக்கினீர்; சொன்ன செழுந்தவனை நாழிகையும்
வந்ததுகாண்; பொன்னையிங்கே வைத்துநடந் தேகுமெ''ன்று,
முந்தி மடிபிடித்து மூர்க்கமுடன் நிற்கலுற்றான்;
''பிரிவுச் செழுந்துவரும் பேர்பெரிய சுக்கிரனே!
அறிதியுடன் பொன்னுமக்கு யான்கொடுப்பேன் ஓர்நொடியில்;
விட்டு விடு,மறியல்; வேதியனே'' என்றாலும்
தொட்ட மடிப்பிடியைச் சுக்கிரனும் வாங்காமல்
மன்னன் உடனே மடிபிடித்தே ஏகலுத்தான்;
அந்நேரந் தன்னில் அரியமறை வேதியனார்
பொத்தகஞ்சேர் கையிலங்கப் பூணும்நூ லும்மிலங்க
உத்தரீகங் கள்மின்ன உண்மையுடன் வந்துநின்று
மைக்கொடிமின் னாள்தனையும் மைந்தனையுங் கண்டவரும்
'விக்கிறோம்' என்றவனை, ''மின்னைவிலை சொல்லுமெ''ன்றார்;
கொள்ளுவது நிச்சயமாய்க் கொள்ளுவீ ராமாகில்
உள்ளவிலை தன்னை உரைக்கிறேன் வேதியரே!

---

பாட வேறுபாடு

**3658 : 4 கூறலுற்றார் 1749**
**3664 : 2 பொன்னுனக்கு 1574**
**3667 : 4 ஏகலுற்றான் 1574 1749**
**3671 : 4 கண்டவுடன் 1574 1749**
**3672 : 2 என்றவனே 1574**

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

"மதகரி முதுகில் ஏறி,
வடிவுடன் கவண்கல் ஏந்தி,
விதமுடன் ஓங்கி வீசி,
மிகஎறி தூரங் கண்ட
இதவரை யளவு செம்பொன்
இசைவுடன் குவித்த பொன்னாம்
சுதைமதி வதனத் தோகை
விலை"என அரசன் சொன்னான். 102

"அவ்வள வதிய செம்பொன்
அருளுவேன் உலகம் மெய்க்கக்
கொவ்வைசேர் இதழா ளோடுங்
குழவியுங் கொடுத்தா யாகில்
கவ்வைசேர்" என்று வேதன்
காவலர்க் குரைத்த போது
மெவ்விய அரசன் ஒப்பி
மிகவுளம் பொருந்தி னானே. 103

## நடை

### முனிக்குப் பொன் கொடுத்தது

"ஆனைமேல் நின்றுகவண் கல்லெறிந்த அத்தூரம்
போன வரையளவு பொன்பூவைக்(கு) உற்றவிலை"
என்றரசன் சொன்னான்; இசைந்துமறை யோனுரைப்பான்—
"நன்றுகாண் அப்படியே நான்நிதிய முங்கொடுப்பேன்;
கோல மயிலனைய கொம்பனையாள் பெற்றெடுத்த
பாலகனை யுங்கொடுத்தால் பண்பாக உந்தனுக்கு
மின்பயிலும் விண்ணுலகும் மிக்கபுவி யும்மறியப்
பொன்தருவேன்" என்றுசொல்லிப் பூணிகுலத் தோனுரைத்தான்;

---

பாட வேறுபாடு

விருத்தம் 103. 4 : 1 மெவ்வியே 1574

நடை 3680. பாலனையும் எந்தனக்குப் பண்பாக வேகொடுத்தால் 1749

அந்தப் படியே அரிச்சந் திரன்இணங்கிச்
சுந்தரஞ்சேர் பாலனையும் தோகையரை யுங்கொடுத்தான்;
"மாமுனிவன் பொன்வேற்க வந்தபுகர் கையேற்கத்
தாமசமில் லாமல்நிதி தானருளு வேன்"எனவே
சொல்லி மறையவனுஞ் சுக்கிரனுக் கொப்பினர்காண்;
வல்லபடி வித்த மகாமன்னன் அந்நேரம்
கடிய நிதியுதவுங் காலமட்டுங் கன்னிமைந்தன்
அடிமை எனவெழுதி ஆனமுறி யுங்கொடுத்துத்
தக்கபுகழ் சேருமரிச் சந்திரனும் வாய்மலர்ந்து,
"சுக்கிரனே! உந்தனுடன் சொன்னதவ ணைப்படியே
மன்னும் உகைறிய வந்துதோ மாடை?"என்றான்;
"மன்னா! முனிவன்நிதி வந்ததுகாண் எந்தனுக்கு;
சாத்துபரி தானநிதி தான்வரவும் வேணும்"என்றான்;
"ஆத்தநிதி இன்னம் அருளுவோம்" என்றுசொல்லி,
முப்புரிநூல் மின்னும் முதுமறையோன் அந்நேரம்
செப்பனைய பூண்முலையாள் தேவிசந்திர மாமதியைப்
"பாங்குபெறும் என்மனையில் பண்வேலை மெத்தவுண்டு;
போங்கடுக" என்றே புறங்காட்டித் தள்ளிவிட்டுக்
காவலவன் தோளில் கனிந்திருக்கும் பாலகனை
ஆவலுடன் பார்ப்பான் அதட்டி இழுக்கலுத்தான்;
அஞ்சிப் பதறி, அருமைமகன் அந்நேரம்
கொஞ்சுமலர் வாய்திறந்து, கோவென் றறக்கலங்கி,
அய்யா வெனவே அழுதுகழுத் தோடுகட்டி,
மெய்யிறுக நின்று, மிகவாடித் தானழுதான்;
"மைந்தா உனையுமுந்தன் மாதாவை யும்மகத்தி
அந்தணர்க்கு வித்துவிட்டேன் அம்புவிவா னம்மறிய;
உந்தனுக்கு மாதாவும் உண்மையுள்ள தாதையரும்

---

பாடவேறுபாடு

3698 : 2 பூமுலையாள் 1574 1749
3701 : 4 பாலனையும் 1749
3702 : 4 இழுக்கலுற்றான் 1574 1749
3706 : 1 மெய்யுருக 1574
3707 : 4 யும்மகற்றி 1574

எந்தனையென் றெண்ணாதே; ஈஸ்வரன்காண் உந்தனுக்கு;
அய்யா'' எனவெடுத்து அம்மகனை யுங்கொடுத்துச்
செய்யாள் உருவனைய தேவிதனை யும்பார்த்து,
''மின்னேயென் கண்காண மீறியிழுக் கும்மறையோன்
இன்னமென்ன வாதை இயற்றுவா னோவறியேன்;
மின்னே மலங்கல்விடு; வேதனெழுத் தல்லாமல்
பின்னே அணுவளவும் யேதியா(து)'' என்றுசொல்லி,
வேந்தன் மனங்கலங்கி, மெல்லியரை யுந்தேற்றி,
''ஆய்ந்தபுகழ் ஈசன் அருள்நமக்குண் டாகவென்றும்,
நீதியரன் தஞ்சமென்றும் நேரிழையே நீயுமெண்ணி
வேதியனார் சொன்னபடி வீத்திரும்'' என் றோதிவிட்டார்;
ஓதிவிட்ட மன்னவனை ஒண்ணுதல்பார்த் தேதுரைப்பாள்—
''ஆதிமறை நீதி அரசே! எனைமீட்க
வாறநாள் எந்நாள்? வகைகூறும்'' என்றுரைத்தாள்;
''வாறநாள் ஈசன் வரத்தினால் அல்லாமல்
வேறுநாள் இல்லை'' என்று மெல்லியர்க்குத் தான்கூறித்
''தாறுமறை யோனைத் தொடர்ந்துபோம்'' என்றுவிட்டு
மன்னவனார் நின்ற வகையறிந்து மந்திரிதான்
தன்னுளமும் வாடிநொந்து தார்வேந்தன் பாலணுகிச்
செல்லு மளவில் செழும்புகரோன் ஓடிவந்து,
''நல்லபுகழ் மன்னவனே! நண்ணுபரி தானநிதி
தந்துபோம்'' என்றுசொல்லித் தக்கபுகழ் வீதியிலே
பந்தமுள்ள பார்க்கவனும் பார்வேந் தனையிழுத்தான்;
மந்திரியிவ் வாறுகண்டு மன்னவனோ டேதுரைப்பான்—
''எந்தனைவித் துப்பளிங்குக்(கு) ஈந்துவிடுஞ் செம்பொன்'' என்றான்.
''வேதமுறும் மாமுனிவன் விட்டுவந்த உன்னைவித்தால்
பூதலமுங் கொள்ளாது; பொன்னுலகுக் கேறாதுற்

---

பாட வேறுபாடு

*3714 : 3, 4 இயற்றுவனோ நானறியேன் 1356*

*3717 : 4 யுந்தேத்தி 1749*

*3718 : 4 டாகுமென்று 1574*

*3723 : 3, 4 வகையெனக்குச் சொல்லுமென்றாள் 1574*

வையகத்தை யாண்டருளும் மாமுனிக்கும் ஏற்காதுற்
எய்யாமல் என்னைவித்து ஈந்துவிடும்'' என்றரசன்
வில்லுமென்று மந்திரிக்கு வீறாகக் கூறலுற்றான்—
"தொல்லுலகை ஆண்டருளுந் துங்கமுடி மன்னவனே!
எப்படிக்(கு) உன்னை இனிநான் துணிந்துவிப்பேன்?
செப்பரிதே இவ்வசனம்! சீர்வேந்தே!'' என்றழுதான்;
"வாள்சேர் அமைச்சர்தொழும் மந்திரியே! நீகேளாய்;
கோள்சேர் பளிங்குநிதி கூறினதும் ஈந்துவிட்டால்
உண்டாகும் ஈசன் உரியபதம் எந்நாளும்;
கண்டறியும் மந்திரியே கண்கலக்கம் விட்டுவிடும்
என்னைவில்லு வில்லெ''ன்(று) இயலரசன் தானுரைக்கத்
தன்னைநொந்து நொந்து தளர்ந்தமைச்ச னுங்கலங்கிச்
சத்திசிவ காமிதன்னைத் தான்மனதில் எண்ணியெண்ணி
வெத்தி முடிதரித்த வேந்தர்திரு மாமுடிமேல்
தெர்ப்பை தனைமுடித்துச் சென்றுநெடும் வீதியிலே
விற்பதற்குச் சென்ற விறலமைச்சன் போதுகையில்.
கோமான் திருமொழிகள் கூறலுத்தார் **அம்மானை!**

"மாமன்னர்! வேதியரே! வாய்த்தவணி சேகர்களே!
துய்யபுவி மீதுறையுந் துங்கமுறும் மானிடரே!
செய்ய நிதியுடைய சீர்பெரிய வல்லவரே!
நீதி யுடையவரே! நிச்சய முள்ளவரே!
ஆதியரன் நீதிக் கரியபுகழ் வல்லவரே!
கய்யேத் திருக்கும் கனகநிதி மாந்தர்களே!
அய்யோத்தி மாநகரம் ஆண்டதிரி சங்குமைந்தன்

---

பாட வேறுபாடு

*3738 : 2 என்னைவிற்று 1574*

*3743 : 4 நீர்கேளீர் 1749*

*3750 : 3, 4 வேந்தன் திருமுடிமேல் 1749*

*3753 : 3 கூறலுத்தான் 1749 கூறலுற்றார் 1574*

*3758 : 4 வீரியரே 1749*

*3759 : 1, 2 கய்யேற் றிருக்கும் 1574*

நாடேத்த மாமுனிபொன் நானிலமெல் லாமேற்ற
நீடேத்த வெள்ளியர்க்கு நேர்ந்தநிதி ஈவதற்கே
என்னையான் விக்குகிறேன்; எவரேனும் வந்து,கொண்டு,
பொன்னருளும்'' என்றரசன் போந்துவிலை சொல்லிவர
வீதிக்கு வீதி மிகவுடைய மானிடர்கள்
நீதிக்குள் யாரும்விலை நீணிலத்தில் கொள்ளாமல்
மன்னவனும் மந்திரியும் மற்றோர் தெருவீதி
உன்னிமிக வேநடந்து உத்துவந்தார் **அம்மானை !**

## கலிவிருத்தம்

துன்னும் மேனிக் கறுப்பொடு தொந்தியும்
மன்னு கட்டும் மணிச்சிகைக் கொண்டையும்
மின்னும் வாசப் பொடிகவின் வீரபா(கு)
என்னும் நாமம் இசைந்தவன் எய்தியே. 104

மாண்ட குன்றொடு மண்டுபு யத்தினும்
நீண்ட காவடி நேரும்இ றைச்சியும்
தாண்டிக் கொண்டுத லைக்குடக் கள்ளுடன்
ஆண்ட நீசன் அரசன்முன் எய்தினான். 105

## நடை

கள்ளுக் குடமுங் கறிக்கா வடியுடனே,
துள்ளி மடிந்த சுரவிளரு மைக்குறளை
தோளில் இலங்கத் துடர்ந்துவழிக் கேஎதிராய்
நீளும் புலையன் நிசமாக வந்துநின்று,

---

பாட வேறுபாடு

**3761 : 2 மாமுனிவன் 1749**
**3761 : 3, 4 நானிலத்தில் வாங்கவந்த 1574**
**3761 : 4 லாமேத்த 1749**
**3762 : 4 ஈவதற்கு 1574**
**3766 : 4 கேளாமல் 1749**
**3767 : 3 மத்தோர் 1749**
**3768 : 4 அந்நேரம் 1749**
**3771 : 3, 4 துடர்ந்து விழிக்கெதிரே 1574**

"விக்கிறோம் என்றுவந்த வீரியரே! யான்கொள்வேன்;
தக்கவிலை கூறும்"என்று தான்வந்தான் அம்மானை!

கண்டு புலையனிவன் காணுமென்று மந்திரிதான்
மண்டுவிலை கூறாமல் வன்மையுடன் ஏகலுத்தான்.
"மந்திரியே! இவ்வசனம் வையகத்தில் பேசுவரோ?
எந்தடவும் பொன்பளிங்குக்(கு) ஈந்தனுப்ப வேணுமினி;
என்னவா னாலுமென்ன?" என்றுமிக வேயுரைத்து
அந்நேரந் தன்னில் அரசன் மிகப்பார்த்துக்,
"கொள்ளுவது நிச்சயமோ? கூறுவேன் என்னைவிலை;
தெள்ளுதமிழ் வல்ல செழும்புலைவீ ரா!விலைதான்
பாயிரனார் ஒப்பும் பணம்கொடுப்பீ ராமாகில்
ஆயிரம்நூ றாயிரம்பொன் யானும்விலை;" என்றுரைத்தான்;
ஆமெனவே ஒப்பி அடர்ந்தநிதி யத்தனையும்
தாமினிய வெள்ளிகையில் சாம்பானும் நல்கினன்காண்;
சாற்று முறியெழுதிச் சாம்பான் தனக்கேற்க
நாற்றிசைகள் போற்றும் நரபதியும் ஈந்தனன்காண்;
உத்தபுக ரோன்தனையும் ஓங்குமன்னன் தான்பார்த்துச்
"சித்த முறஉமக்குச் சென்றதோசெம் பொன்?"என்றான்,
"வந்ததுகாண் சொன்னபடி மாநிதியம்" என்றுசொல்லிச்
சிந்தை யுறமகிழ்ந்து சீர்ப்பளிங்கும் அந்நேரம்
"உன்னுபுகழ் மன்னா! உனக்குநிகர் ஆருமில்லை;
மன்னுபுகழ் ஈசுரனார் வண்மையுண்டு காணுனக்கு;"

---

பாட வேறுபாடு

3776 : 4 போகலுத்தான் 1749 நிற்கலுற்றான் 1574
3785 : 1 ஆமென்று 1749
3791 : 2, 3 சொன்ன வகைநிதிகள் 1749

என்றுமிக வோதி இறைவன் றனைமகிழ்ந்து,
வென்றியுள்ள வெள்ளி மிகநடந்தான் **அம்மானை!**

வெள்ளிசென்று சொன்ன விதங்கேட்டுக் கோசிகனும்
உள்ளங் கலங்கி உளம்புழுங்கி* வீத்திருந்தான்.
கோமானைக் கொண்ட கொடும்புலையன் அந்நேரம்
தாமெடுத்து வந்தகன்றும் தங்குகுட மும்மரசன்
பூமுடிதாங் கும்முடியில் போதச் சுமையேற்றித்
தாமிருக்கும் சேரி தனில்சென்றான் **அம்மானை!**

மன்னர்தொழும் மன்னன் மகாபுலையற் காளாகிப்
பின்னேகும் வாறுகண்டு, பேருலவு மந்திரியும்
வாட்டமுற்று நின்று மயக்கமுட னேயெழுந்து
கோட்டமுற்று நின்றுதெய்வக் கூறுமிதாம் என்றமைச்சன்
சேரிசென்ற சீர்வேந்தன் செங்கமலத் தாளிணையை
வீரியமற் றேதொழுது மீண்டனர்காண் **அம்மானை!**

மண்டுபறைச் சேரிதனில் வாள்வீர வாகுவந்து
தண்டுமணிக் கட்டுவடந் தான்பிணித்த கட்டிலிலே
சாய்ந்து கிடந்துகொண்டு "தாசா!நீ வா,"எனவே,
ஆய்ந்தபுகழ் மன்னவனை அன்பாக வேயழைத்து,
மேலுப் பிடிஎனவும், மென்பிடரி குத்தெனவும்,
காலுப் பிடிஎனவுங் கண்துயின்று தான்கிடந்து,
சாம மிரண்டுவரை தான்சென் றெழுந்திருந்து
நாமருவும் வீர நரபதியைப் பார்த்துரைப்பான்—

---

பாட வேறுபாடு

3795 : 3 இறையோன் 1749
3798 : 4 வீற்றிருந்தான் 1574
3810 : 4 கட்டிலின்மேல் 1574

* 3835 ஆம் அடியை இணைத்து நோக்குக.

## சுடலை காத்திருந்தது

"ஆளாக வந்தவனே! யாமுரைக்க நீகேளாய்!
தாளாத காசி தனில்சுடலை காப்பதுநாம்;
இப்பதியில் தானும் இறந்தபிணம் ஒன்றினுக்குச்
செப்பியதோர் கால்பணமுஞ் சீலைமுழம் வாய்க்கரிசி,
அட்டதிசை எல்லாம் அறியவரும் அவ்வரிசை
கட்டளைகாண்; உள்ளமுறை காணுமதில் உந்தனுக்கு
விட்டபடி வாய்க்கரிசி விறுபெற நீபொசித்துத்
திட்டமுள்ள கால்பணமுஞ் சீலைமுழந் தப்பாமல்,
நாத்திசைகொண் டாட நமக்கருளி நீசுடலை
காத்திருங்காண்" என்றுசொல்லிக் காவலனைக் கூட்டிவந்து,
பண்ணரிய நல்ல பரண்போட்டுக் காக்கவைத்தான்;
வண்ணமொழி சேர்வீர வாகுஉரை தப்பாமல்,
நாமத் திருவும் நரபதிகள் ஏத்தும்மன்னன்
ஈமத் தலங்காத்(து) இருந்தனன்காண் அம்மானை!

மன்னவனைத் தான்தேடி மந்திரிசித் தங்கலங்கித்
துன்னுமெரி சேருஞ் சுடலையிலே வந்துகண்டான்;

---

பாட வேறுபாடு

*3821 : 3, 4 அறிய வரும்வரிசை 1574*

ஒப்புமை: அடி எண். 3817 — 3827. அரிச்சந்திரனை விலைக்கு வாங்கிய வீரவாகு, அரிச்சந்திரனைச் சுடலை காக்க அனுப்புகையில் கூறிய மொழிகள்.

'தூங்கிருள் கடியும் செத்திச்
சுடலையிற் சுடும்பி ணத்துக்
கோங்கிய புலைப்பே றாடை
ஒன்றுண்டு பணம்கா லுண்டு
வாங்கியீ தெனக்கு வைத்து
வாய்க்கரி சியைநீ யட்டுண்
டாங்கிரு வென்று பின்னும்
அன்னணலுக் கவனு ரைப்பான்'

—அரிச். புரா. காசிக் காண்டம் — 61

கண்டவுட னேமயங்கிக் கண்ணான மந்திரியும்,
"மண்டலத்தில் நல்லபுகழ் மன்னவனே!" என்றழுது,
உள்ளங் கலங்கி, உடல்புழுங்கி ஏதுரைப்பான்—
"தெள்ளுதமிழ் சேருஞ் செகமன்னர் போரேறே!

### கலிவிருத்தம்

மன்னர் மன்னவர் மாமதி வல்லவர்
துன்னும் மாமறை சொல்லிசை மாதவர்
பன்னெ ருக்குறப் பாவையர் ஏவல்செய்(து)
அன்னு மாஅரி யாசனத் தண்ணலே. 106

பேய்இ ரைச்சல் பெருப்புலை யோர்மொழி
வாய்இ ரைச்சல் வலுப்பருந் தீக்களு
காய்இ ரைச்சல் கடுஞ்சுடு காட்டகம்
நீஇ ருக்க விதித்தது நித்தனோ? 107

### நடை

எண்ணரிய மன்னர் இயல்பாகப் போத்திநிற்கத்
திண்ணமுடன் ஒன்னலர்கள் சென்றுகப்பங் கட்டிநிற்கப்

---

பாட வேறுபாடு :

விருத்தம் 107. 4 : 3 விடுத்தது 1749

நடை 3837 : 4 போற்றிநிற்கத் 1574 1749

ஒப்புமை: அடி எண். 3837 — 3852. அரிச்சந்திரன் சுடலை காத்திருக்கின்ற நிலைகண்டு வருந்திய மந்திரி சத்தியகீர்த்தி, அரிச்சந்திரனை நோக்கிக் மொழிகள்.

'மன்னவர் இடம்பொ றாது
வந்துசூழ்ந் திறைஞ்சிப் போற்ற
அன்னமென் னடையார் ஆட
அரம்பையர் பாட வைகும்
பொன்னெடுங் கோயில் நீங்கிப்
பூதமும் பிசாசும் ஆடும்
இந்நெடுங் கோயி லோவந்
தெய்திய தைய வென்றான்'.

— அரிச். புரா. காசி காண்டம் - 67

பொன்னான மண்டபத்தில் பொன்னிரவி யைப்போலே
பன்னுமறை வேதமொழிப் பாவலர்க ளும்புகழக்
கன்னியருஞ் சூழ்ந்து கவரிபல வீசிடவே,
மின்னிச் சிறந்திலங்கும் மிக்ககுடை தானிழந்த,
எக்காள மோடுபதி னெட்டிசைக ளுங்குமுற,
மிக்கான கீர்த்தி விருதுசின்னம் ஊதிநிற்கச்
சிங்கா சனத்தில் சிறப்பாக வீற்றிருக்கும்
எங்கோவே அந்த இயல்புகண்ட கண்ணாலே
கூளி யினந்திரண்டு கூத்தாடிக் கொக்கரித்து,
ஞாளி யினமும் நரிகழுகுக் கூட்டமுடன்
வீசுங் கொடியரி(நி?)ணை மேவுபுகை வாசமுற
ஏசும் படி,கடிய ஈமவனங் காத்திருக்க
வந்தவினை எந்தவினை மன்னவனே'' என்றுசொல்லி,
மந்திரிதன் உள்ளம் மயங்கிப் புலம்பலுற்றான்;
மந்திரிதன் உள்ளம் மயங்குவது கண்டரசன்,
''தந்திரியே நீமயக்கந் தன்னைவிடு சொல்லுகிறேன்;
அக்கினியும் ஈசன் அமைத்தபடி யல்லாமல்
சிக்குமோ வேறுவகை? சிக்காது மந்திரியே;
வேதண்டந் தன்னைஇந்த மேதினிவிண் ணோர்அறியக்
கோதண்ட மாய்வளைத்த கூத்தனடிக் கேத்தமுனி
கோசிகர்க்குத் தான்உரைத்த கொள்கைமுறை தப்பாமல்
வாசியுடன் பொன்செலுத்தி வைத்த வளம்போதும்
ஈமத் திருந்தால்என்? இன்னமிதில் தாழ்ந்தால்என்?
நீமெத்த நொந்து நெடுங்கவலை கொள்ளாதே'';

---

பாட வேறுபாடு

3842 : 4 தானிழற்ற 1574
3845 : 4 வீத்திருக்கும் 1574
3851 : 1 வந்தவகை 1749
3853 : 3 மயங்குவதைக் 1749
3855 : 4 யல்லாது 1574
3858 : 4 கேற்றமுனி 1574 1749
3860 : 3, 4 வைத்தவள யேபோதும் 1574

என்றுசொல்லி மந்திரியை ஏத்தமுட னேதிருத்திச்
சென்றுசுடு காடுதனில் சீர்வேந்தன் காத்திருந்தான்.
காத்திருக்கும் மன்னனுட கட்டளைக்கு நித்தநித்தம்
ஏத்தமுடன் வெந்துவிழும் ஈமவரி வாய்க்கரிசி
தன்னை மிகவெடுத்துச் சத்திய கீர்த்தியவள்
நண்ணுபுகழ் சேர்விசுவ நாதனார் தம்முடைய
கோயில் பகவினுட கோசலத்தில் சுத்திபண்ணி,
ஆயுமதி கங்கை அரும்புனலி லேபிசைந்து,
சிங்கார மாய்உலர்த்திச் செய்யபுது மண்கலத்தில்
பொங்குகங்கை நீரிலன்னம் போதவடித் தேசமைத்து,
மன்னனரிச் சந்திரற்கு வாகுபெற வுங்கொடுத்துப்
பின்னமைச்ச னுர்மருந்திப் பேறாக வீத்திருந்தார்.
இப்படிக்கு மன்னன் இயல்பாய் இருக்குகையில்
மைப்படியுங் கண்ணி வளஞ்சொல்வேன் **அம்மானை!**

பாரறியப் பாலகனும் பாவையரும் வேதியற்கே
சீரறியத் தானடிமை சேர்ந்திருந்த நாள்முதலாய்
ஆளுமறை யோன்மொழிக்கும் அம்மனைவி சொல்லுரைக்கும்
நீளும் படிதான் நிரைவேலை யுள்ளதுகள்

---

பாட வேறுபாடு

3863 ; 3 ஏற்றமுட 1574
3864 . 2 காடுதனைச் 1574, 1749
3868 : 1 நன்றுபுகழ் 1574
3874 : 4 வீத்திருந்தான் 1749
3880 : 4 யுள்ளதுவும் 1574

ஒப்புமை : அடி எண். 3865 — 3874. வாய்க்கரிசியைத் தூய்மையுறச் செய்து, சமைத்து அரிச்சந்திரனும் சத்தியகீர்த்தியும் உண்ணுதல்.

'மண்டலத் திறைவ னுய்த்து
வைத்தவாய்க் கரிசி தன்னைக்
கொண்டுபோய்ச் சுரபிக் கீந்து
கோமயத் துடனே வீழ்ந்த
தண்டுலம் எடுத்துக் குத்திச்
சமைத்தினி துதவ வச்சோ
றுண்டவ னுறைந்தான் பின்னை
உற்றவா றெடுத்து ரைப்பாம்'.

— அரிச். புரா. காசி காண்டம் - 70

ஏவுங் கனவேலை எத்தனையுண் டத்தனையும்
தாழ்வு வராதபடி தான்செயவும் வேணுமென்று,
நெடிய சரிசனமும் நெஞ்சகத்தில் எண்ணியெண்ணி
விடியஒரு சாமமென மெல்லியருந் தானெழுந்து,
முத்தம்நடை சாவடியும் மூண்டதெரு வந்தொழுவும்
சுத்தும் புழக்கடையுஞ் சுத்திபண்ணி யேமெழுகிச்
செஞ்சாந்தின் கோலமுடன் செப்பியமாக் கோலமிட்டு
அஞ்சுபத்து மேதிஅறு பத்தாறு தேனுவுக்கும்
நீடுகொட்டம் ஊறலிட்டு நீரெடுத்துச் சாலூற்றிப்
போடுமெருச் சாணிதட்டிப் போதமலை போல்குவித்துக்
காயமுத்த வேதியனார் காதலுணர் வுக்கிதமாய்
நேயமுத்த நெல்லுநித்தம் நீண்டகலம் அஞ்சுலர்த்திச்
கட்டழகு கொண்டிலங்குங் கைவருந்த மெய்வருந்தத்
தொட்டுநெல்லுத் திட்டைகுத்தித் துய்யரிசி யும்மளுக்கிச்
செங்கமலக் கையில்ரத்தஞ் சென்றோடத் திண்டாட
அங்கமெல்லாம் புண்ணாய் அறஉளைய வேர்வொழுக,
வீசியநெல் தூளுடனே மிக்கதுக ளுந்தவிடும்
வாசமலர்க் கூந்தலிலே மண்டியடைந் தேயிருக்க,

---

ஒப்புமை: அடி எண். 3884. சந்திரமதி, தான் அடிமையாக இருக்கும் வேதியர் வீட்டுப் பணிகளை, இரவு விடிய இன்னும் ஒரு சாமம் உள்ளதென்னும் வேளையில் எழுந்திருந்து செய்யத் தொடங்குதல்.

'எல்லியோர் சாமம் என்ன
எழுந்திருந்து'

— அரிச். புரா. மயான காண்டம் — 1

அடி எண். 3893 — 3896. சந்திரமதி, வேதியர் வீட்டில் நெற்குத்தும் பணி செய்யும்பொழுது, படுகின்ற துன்பம்.

'கையினில் உலக்கை பற்றிக்
கரந்தனில் உதிரம் பாய
மெய்யினில் வெயர்நீர் சிந்த
விழியினில் அருவி பாய
நெய்யினின் முடித்த கூந்தல்
நெற்குத்தும் கொடுமை ...

— அரிச். புரா. மயான காண்டம் - 2

மைச்சாந்துங் குங்குமமும் வாசமுறும் மேனியெல்லாம்
துற்சாந்து வேர்வையெழத் துய்யமுகம் வேர்த்தொழுக,
மாமயிலாள் வேலைசெய்து, வாய்த்தபொழு தும்மடைந்து,
சாமமிரண் டானபின்பு, தங்குபழங் கூழ்எடுத்து,
வல்லியர்க்கும் மைந்தனுக்கும் மாமறையோன் தேவியவள்
அல்ல லுடனே அகங்கையிலே கூழ்வார்ப்பாள்;
மைந்தன் அனுதினமும் மாமறையோன் சொன்னபடி
சிந்தை மிகவெருவிச் சென்றிடவும் அஞ்சியஞ்சிக்
காலமே சென்றெழுந்து, காட்டகத்தி லேகிஅவன்
சீலத் துடன்விறகுஞ் செப்பியகல் லைக்கிலையும்
போந்தசமி தைதெர்ப்பைப் புல்லுநல்ல பூடுகளும்
வாந்தகங்க ளாகநித்தம் மாறாமல் கொண்டுவந்தும்
பாப்பானு மேசினப்பான்; பாவையதி லுங்கடுப்பாள்;
கோப்பான சந்திரமதிக் கோதையரும் பாலகனும்
எப்படிக்கு வேலை இசைந்துபல செய்தாலும்,
''தப்பறை;உன் வேலை''என்று தான்சினந்து பல்கடிப்பாள்;
இல்லகத்தில் வாழும் இசைவுடைய பார்ப்பினியும்
நல்லமொழி பேசாமல் நன்னுதலை யுங்கடுத்துப்
பாலனையுஞ் சீறிப் பதைபதைக்க வேசினப்பாள்;
கோலமுள்ள சந்திரமதிக் கோதையரும் அஞ்சிஅஞ்ச.

---

பாட வேறுபாடு

3914 : 3 தான்கடுத்துப் 1749

ஒப்புமை : அடி எண், 3905 — 3910. அரிச்சந்திரனின் மகன், வேதியர் சொற்படி, தினந்தோறும் காட்டிலிருந்து விறகு, இலை, சமிதை, தருப்பை முதலியன கொணர்தல்.

'அடியினால் அஞ்சி மைந்தன்
அனந்தலைப் பயமு ணர்த்த
விடியுமுன் னெழுந்தி ருந்து
விளைபுலங் களைப றித்துக்
கடிவனத் தடகு கொய்து
காட்டமும் சமிதை யும்பொன்
முடிபுனை தலையில் வைத்து
முறைமுறை வருமந் நாளில்'

— அரிச். புரா. மயான காண்டம் - 4

இவ்வாறு வேதியனும் இல்லகத்தில் பார்ப்பினியும்
எவ்வாறு செய்திடினும் ஏங்கிமனங் கோடாமல்
வல்லியரும் பாலகனும் வன்மையுட னேயிருந்து,
தில்லைநட நாதன் செயலென் றுளத்திருத்திப்
பஞ்சமெத்தை மேலே படுத்துறங்கும் பூமேனி
வஞ்சமறப் பூமியிலே மாறாம லேகிடந்து,
மாதளம்பூப் பட்டு வருந்துமந்தச் சித்திடையில்
கோதடைந்த பொல்லாத குப்பைத் துணிபுனைந்துஞ்
சித்தஞ் சலியாமல் தேவியுமை தஞ்சமென்று
தத்தை மொழியனைய தையலரும் வீத்திருந்தாள்.
இவ்வாறு செய்து இருந்துவரும் நாளையிலே,
மெவ்வும் ஒருநாள் விறகெடுக்கப் பாலகனார்
அன்னியர்கள் பிள்ளை அனேகம்பேர் தம்முடனே
பன்னரிய காட்டில் பலதூரஞ் சென்றணுகி,
வெங்கானந் தோறும் மிகுவிறகு தான்பொறுக்கிச்
சிங்கார மாகச் சிறந்துகட்டித் தானெடுத்து,

---

பாடவேறுபாடு

3923 : 2 மீதில் 1574 — 3925 : 4 சிற்றிடையில் 1749
3927 : 4 தஞ்சமென்றே 1749 — 3931 : 1 அன்னியர்தம் 1749
3828 : 4 வீற்றிருந்தாள் 1749

ஒப்புமை : அடி எண்: 3929– 3942. அரிச்சந்திரனின் மகன், வழக்கம்போலக் காட்டிற்குச் சென்று வருகையில் ஒருநாள், காட்டில் ஓரிடத்தில் தருப்பைப்புல் மிகுதியாக வளர்ந்திருப்பது கண்டு, தன் தலையிலிருந்த விறகுக் கட்டை ஆலமரத்தடியில் இறக்கி வைத்துவிட்டு, தருப்பைப் புல் பறிக்கச் செல்லுதல்.

'மைந்தனும் சிறாரோ டேகி
வனந்தனில் விறகு கட்டித்
தந்திடு வழியி னோர்பாற்
றருப்பைகண் டிதுவிட் டேகில்
அந்தணன் முனிவா னென்னா
அஞ்சியோர் வடத்தின் நீழல்
இந்தனம் இறக்கி யப்புல்
இருந்திடு புதர்க்கட் சென்றான்'

— அரிச். புரா. மயான காண்டம் — 5

மாமன்னர் போற்றும் மகாமன்னன் பெற்றமைந்தன்
பூமுடியில் அந்தப் புனவிறகைத் தான்சுமந்து,
தோழருடன் கூடித் துடர்ந்துமிக வேநடந்து,
காளையருந் தான்விறகுக் கட்டுவைத்த ஆலடியில்
பாரச் சுமையிறக்கிப் பாலகரை நீங்கிமைந்தன்
சார மறைக்குரிய தங்குபுகழ் வேதியனார்
நீடும் யாகம் நிரைக்குரிய தெர்ப்பைகண்டு
சாடுங் குசைபறிக்கத் தான்சென்றான் **அம்மானை !**

தெர்ப்பைகொய்ய வென்றே சிறுவன் வரவறிந்து,
சர்ப்பந் தனையழைத்துத் தங்குகுசைக் குள்ளேவைத்து,
மாமுனிவன் கோசிகனும் மாயமுடன் போயினன்காண்;
கோமகனுஞ் சென்று குசைபறித்தான் **அம்மானை !**

---

பா. வே. 3945 : 4 போகினன்காண் 1574

ஒப்புமை : அடி எண். 3943—3958. அரிச்சந்திரனின் மகன் காட்டில் தருப்பை பறிக்கையில், விசுவாமித்திரர் ஏவிய நாகம் வந்து தீண்டுதல்; அரிச்சந்திரனின் மகன், தன்னை நாகம் தீண்டிற்று எனத் தன்னுடன் வந்த தோழர்களிடம் சொல்லி மண்ணில் விழுதல்.

'பறித்தனன் குசையைப் பற்றிப்
பறித்தலும் முனிவன் ஏவக்
குறித்துவந் ததனுட் டங்குங்
கோளராச் சீறி யோங்கித்
தெறித்தழல் விழியாற் சிந்தத்
தீண்டிற்றுத் தீண்ட லோடும்
வெறித்தெழுந் தலறி யோடி
வெருவியே தரையில் வீழ்ந்தான். -6

வடத்தின்கீ ழிருந்த தோழர்
மறுகிப்போய் வள்ளல் வீழ்ந்த
இடத்தினை அணுகி யையோ
வென்னுற்ற துரையா வென்னப்
படத்தினாற் பெரிய நாகம்
கடித்தது பாரு மென்று
விடத்தினா லறிவு சோர்ந்தான்
விட்டுயி ரடங்கிற் றன்றே'

— அரிச். புரா. மயான காண்டம் - 7

## பாலகனைப் பாம்புக் கடித்தது

பத்திக் குசைபறிக்கும் பாலகனைக் கண்டரவம்
மெத்தப் படமெடுத்து, வெம்மூச்சை விட்டெறிந்து,
கண்கள் பொறிபறக்கக் காதலுட னேசினந்து,
தண்கமலக் கையரசன் தன்புதல்வன் தன்கையிலே
காளிகா ளாத்ரியமன் காலதூதன் என்றிலங்கும்
நீளியபல் நாலுசெந்தம் நேசமுற வும்பதிய
வாய்த்தமணி வாய்சாய்த்து, மாமுனிவன் சொற்படியே,
சீத்தமுடன் எட்டிச் சினந்துகடித் தேகியதே;
மாநாகம் எட்டி வலக்கையிலே கொத்தியபின்
தானாக வேயலறித் தான்பதறி யேகலங்கிக்
"கோளரவஞ் சீறிவதை கொண்டதே" என்றுசொல்லித்
தோழருடன் வந்தலறிச் சொல்லிமண்ணி லேவிழுந்தான்;
மண்ணில் விழுந்து மயக்கமுறும் வேளையிலே
கண்ணீர் ஒழுகக் கனிந்துருகிப் பாலகனார்
"மாதவங்கள் செய்து வருந்திஎன்னைப் பெற்றெடுத்த
தாதை,அன்னை இல்லாமல் தானுமிந்தக் காட்டகத்தில்
மாளக் கடனோ?! மகாதேவா!" என்று சொல்லி
ஆளழகன் என்னும் அரசனுட புத்திரனார்,

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

"சங்கரா நீல கண்டா!
சதாசிவா! சயில மாதர்
பங்கரா கிரிகோ தண்டா!
பராபரா! சருவ லோகா!
பொங்கரா பரண யோகி!
புராந்தகா! விசுவ நாதா!
இங்கரா! என்னை ஆளாய்!"
என்றுதா ளிணையைப் போற்றி, 108

---

பாட வேறுபாடு

3955 : 3 மலர்க்கையிலே 1574
3956 : 4 மெய்கலங்கி 1749

விருத்தம் 108. 4 : 3 யாள்வாய் 1574

"அரணகா ரணமாம் வல்லி
அமுர்தசீர் கெவுரி பத்ம
சரணமே சரணம்" என்று
தயவுடன் வழுத்தி ஏத்தி,
மரணசீ ரணத்துக் கின்ப
மகிழ்கதி உதவும் வேதப்
பிரணவப் பொருளுங் கூறிப்
பிரிந்தனன் ஆவி தானே. 209

## நடை

மைந்தன் உயிர்நீங்கி வானுலகத் தேகிடவே,
வந்தோர் இவையறிய மாட்டாம லேமயங்கி,
"ஏழைமகன் காண்;இவனுக்(கு) ஏதுவினை வந்த(து)"என்று
காளையரும் மைந்தன் கமலமுகத் தைப்பார்த்து,
மெய்யெல்லாம் வாடி மிகவே துயரணுகி
அய்யய்யோ என்றே அழுதழுது மேபுலம்பித்
தம்பியென்றும் அன்னையென்றுந் தானும்எங்கள் தன்னைஎல்லாம்
நம்பிவந்த தம்பிஎன்றும் நாழிகைரெண் டொன்றளவும்
கூப்பிட்டார்; பார்த்தார்; "குரல்காணோம்" என்றுடலை
ஏப்பிட்டுத் தான்பிரட்டி, "இல்லைஉயிர்" என்றேங்கி,
உள்ளங் கலங்கி, உருகிமிக வேஅழுங்கித்
தெள்ளுதமிழ்ப் பாலர் சிறந்தவிற கும்மெடுத்துக்
கன்னல் வயல்சூழுங் காசிநகர் வந்தடைந்தார்;
உன்னுங் கதிரோன் உகந்துகுட பாலடைந்தான்;
மாலைவந்தும் இன்னம் மகன்வந்தான் இல்லைஎன்று
சேலையொத்த கண்ணாள் திருவனைய சந்திரமதி
பார்ப்பான் தலைக்கடையில் பண்புகபா டத்தடியில்
தாப்பாகி வந்துவந்து தான்பதறிப் பார்த்துநின்றாள்;
ஆளுக்கு முன்னாக ஆலிலைக ளும்விறகும்
நீளுதெர்ப்பைப் புல்லும் நிரையாகக் கொண்டுவரும்
தன்மகனைக் காணாமல் தான்கண்டாள் பாலகரை;
"என்மகனும் உங்களுடன் இத்தனங்கள் கட்டிவர

பாட வேறுபாடு
நடை 3984 : 3 நிறையாகக் 1749

மக்களே! உங்களுடன் வந்தவனும் எங்கே?" என்றாள்;
"அக்கா!உன் பாலகனை ஆடரவந் தான்கடித்துச்
சிக்கா வனத்திடையே செத்துவிட்டான்" என்றுசொன்னார்;
தக்காமல் பின்னொருசொல் தையல்மரு கிவிழுந்தாள்.

## கலிவிருத்தம்

"இறந்தனன் காட்டிடை இளவல்" என்றிட
மறந்தனள் மனத்தையும் மாதி ரேகும்;
சிறந்தபே ரரிவையுஞ் சிதறி நாட்டமுந்
துறந்தனள்; எழுந்துபின் சோபந் தேறியே.

"எவ்வகை இறந்தனன் எங்கு தங்கினன்
செவ்வைசொல் சிறுவரே!" எனவுஞ் சேயரும்
"நவ்விசேர் விழிமட நாரி யே!எம(து)
அவ்வையே" எனவகை அறிந்து கூறினார். 111

## நடை

செத்தான் மகனென்னுஞ் சேதிகண்ட ஒல்லையிலே
இத்தாள் மனத்தோ(டு) இருதயமும் பேரறிவும்;
மெத்தவே மெய்கலங்கி மெய்ம்மூர்ச்சை யுந்தெளிந்து,
சத்தே மனந்தெளிந்து தானேது கேட்கலுற்றாள்—
"எவ்வாறு பட்டுவிட்டான்? எவ்விடத்தில் தங்கிவிட்டான்?
செவ்வான புத்திரரே! சென்றெனக்குக் கூறும்" என்றாள்.
"அம்மா!உன் பாலகனும் யாங்களுமே தான்நடந்து
செம்மையுட னேவிறகு சென்றெடுத்து வந்ததுதான்;
இப்பதிக்கு மேற்கே இசைந்திருக்கும் காதவழி
செப்பரிய காட்டகத்தில் சென்றிருக்கும் ஆலமரம்
அந்த வடமரத்துக்(கு) அப்பாலுந் தென்புறத்தில்
கொந்தாரும் நீளக் குசையடர்ந்த காட்டகத்தில்
உன்பா லகன்இறந்தான் ஓவியமே!" என்றுசொல்லி
அன்பான பாலகரும் அங்கவர்தம் வீடுசென்றார்!
பாலகரும் போனபின்பு, பாலகனைத் தானிழந்த
ஏலங் கருங்குழலாள் ஏங்கிவிம்மித் தான்அழுங்கி.

பாட வேறுபாடு

3994 ; 4 கேட்கலுற்றாள் 1574

"வேதியனார் பால்னுகி மெய்யுருகிச் சொன்னாலும்
நீதி யுடனனுப்பாள் நீலிஅவன் இல்லாளும்;
ஏதுசெய்வோம்" என்றுமனத்(து) எண்ணிஎண்ணி வேலைசெய்து,
ஓதுமறை வேதியன்பால் ஓவியம்போல் வந்துநின்று,
"அய்யரே! வேதியரே! அந்தணர்க்கெல் லாமதிய
மெய்யரே! கேளீர்! விறகெடுக்கப் போனமகன்
பாம்புகடிக் கப்பதறிப் பட்டுவிட்டான் காட்டகத்தில்;
நாம்போய் அறிந்துவர நாயகமே ஏவும்"என்றாள்.
அவ்வசனம் கேட்டவுடன் அந்தணனும் கண்சிவந்து,
"ஒவ்வா வசனமெனக் கோதவந்தாய் நீ"யெனவே
சீறிச் சினந்து, சினமுருகிப் பல்கடித்து
மாறிக் கடினமுடன் வார்த்தைஇடி யே(று)எனவே,
"வேலை பலதிருக்க வேளையது தானிருக்கச்
சோலி சிலதிருக்கத் தொந்தர்வும் இங்கிருக்க
மைந்தனிறந் தான்எனவே மார்க்கமுடன் போறனென்றாய்;
இந்தமா யங்கள்தனை என்னிடத்தில் பேசாதே!
எய்யாத செம்பொன் இனியதங்கப் பாளமெல்லாம்
பையலுக்கும் உந்தனுக்கும் பாராம வேகொடுத்தேன்;
அந்தப் பயல்இறந்தால் அம்புவியில் என்சேதம்!
உந்தனுக்குச் சேதமுண்டோ? ஓகோ விறல்வீணி!

---

பா. வே. 4007 : 3 மெய்கலங்கிச் 1749
4010 : 2 வேதியர்பால் 1749
4016 : 2, 3 வசனமென்முன் னோதவந்தாய் 1749
4019 : 2 பலவிருக்க 1749
4022 : யங்கள்தன்னை 1749

ஒப்புமை : அடி எண். 4025—4028. தான் விலைப்பட்ட வேதியரிடம், சந்திரமதி, மகன் இறந்து கிடக்கும் இடத்திற்குச் சென்றுவர அனுமதி கேட்க, வேதியர் சந்திரமதியைச் சினந்து கூறும் மொழிகள்:

' ... ... ... ... வீணி
எனக்குறு குறையே அன்றி
என்பொருட் கழிவு வந்தால்
உனக்குறு குறைதா னுண்டோ
உறுவிலைப் பட்ட பையல்
தனக்கொரு தாயும் உண்டோ?'

— அரிச். புரா. மயான காண்டம் -14

பண்டுவிலைப் பட்டசிறு பய்யலுக்குந் தாயுளதோ?
கண்டுவிலைப் பட்டுவந்த கன்னியர்க்கும் பிள்ளையுண்டோ?
வீணிலே நீபுலம்பி வேலையைவிட் டேகிவந்தாய்;
வாணுதலி!" என்றுசொல்லி மாவே தியனுரைக்கக்
கோபந் தனக்குமுந்துங் கோதையெனும் பார்ப்பனியாள்
தாபமுட னோடிவந்து, சந்திரமதி யைப்பார்த்து,
"வீட்டிலுள்ள வேலைஎல்லாம் விட்டுநீ போறனென்று
கோட்டி பலதுளறிக் கூறிநின்றாய்" தானெனவே.
வெங்கோபங் கொண்டு மிகக்கடுத்த சொல்லுரைத்து
"மங்காய்!செய் வேலை"என்று மாறிமறுத் தேதுரைப்பாள்-
"பிள்ளை இறந்துதென்றும் பேதமறப் போவனென்றும்
கள்ளம் பறையவந்த காரியமேன்? உந்தனுக்குக்
கொள்ளையத்தம் செம்பொன் கொடுத்திருக்கும் வேதியனார்
மெள்ளஒரு ஆளனுப்பி வேகவைக்க மாட்டாரோ?"
என்று பிராமணியாள் ஈரமற்றுக் கூறிடவே,
நின்று தயங்கி, நினையாதெல் லாம்நினைந்து.
பின்னுமறை வேதியனார் பின்சென் றடிதொழுது,
கன்னியரும் வாய்புதைத்துக் கல்லுருகச் சொல்லலுற்றார்;
"அடிமையுமக் கென்பதுநான் அல்லஎன்றாற் போய்விடுமோ?
கொடுமையுடன் கானகத்தில் கோளரவி னாலிறந்த
அம்மகனைப் பார்த்தங்(கு) அடவாய் எடுத்தடக்கி
உம்மருகு வந்திடுவேன்; உத்தமனே போகவிடீர்;
பாகுமொழிச் சொல்லனைய பாலகனைப் பெத்தெடுத்த
வாகுமன மும்வயறும் மண்டு(து) அழல்; அந்தணரே!

---

பா. வே. 4030 : 1 வாணுதலீர் 1749
4034 : 2 பலவார்த்தை 1749
4046 : 4 னால்மடிந்த 1574
4048 : 1 உம்மருகே 1574
4049 : 4 பெற்றெடுத்த 1749

ஒப்புமை: அடி எண். 4049, 4050. மகன் இறந்து கிடக்கும் இடத்திற்குச் சென்றுவர அனுமதி கேட்ட, சந்திரமதியை வேதியர் சினந்து மறுத்துரைக்க, சந்திரமதி பெற்ற வயிறு கொதிப்பதாகக்கூறுதல்.

'பெற்ற வயிறுதான் கொதித்தி டாதோ?'
—அரிச். புரா. மயான காண்டம் — 15

அங்கம் உருகுதெந்தன் ஆவிதடு மாறுதய்யா!
சங்கையுடன் நீயறியாத் தன்மையுண்டோ வேதியரே?
காட்டில் இறந்தாலுங் காணாமல் மாண்டாலும்
வீட்டில் மடிந்தாலும் வேணுமெடுத் தேயடக்க;
வேதியரே!" என்றுசொல்லி மின்னாள் உரைத்திடவே
ஆதிமறை வேதன் அருமையுட னேபார்த்துக்
கன்னியுரைக் குப்புதுமை கண்டுளஞ்சத் தேயிரங்கி
உன்னுமறை வேதியனார் ஒண்டொடியைப் பார்த்துரைப்பார்—
"வேலை பலவுளது; மெல்லியரே! நீவிடியச்
சோலிபல செய்துவெகு தொந்தரவு பண்ணாமல்,
காட்டகத்தில் சென்று, கடுகியெடுத் தே,சுடலை
மூட்டகத்தி லேத்திவிட்டு, மொய்குழலீர்! நீகடுக
வாவா;" எனஉரைத்து வாய்த்தபல சேதிசொல்லிப்
"போபோ" எனஉரைத்தான் பூணிகுலத் தோன்மிகவும்.
மாமறையோன் சொன்னவுடன் மங்கையரும் ஏகிவந்து
தாமினிய வாசல் தலைக்கடையும் விட்டகன்று
காசி நகர்கடந்து, காட்டகத்தில் சென்றணுகி,
நேச முடன்உயிரும் நீண்டமகன் தன்மேலும்
கூடும்நெடுங் காட்டுவழி, கோதைகொண்டு ஏகலுற்றாள்;
நீடுவன முள்ளடிக்க, நீள்கூரை முள்இழுக்க,
மாறா இலந்தைமுள்ளு வாகுடல மூங்கிழிக்கக்
கூறையையும் மூள்கிழிக்கக் கூந்தலையும் மாறுபத்த,

---

பாட வேறுபாடு

4057 : 3, 4 கண்டுளஞ்சற் றேயிரங்கி 1749

ஒப்புமை : அடி எண். 4071—4072. காட்டில் மகன் இறந்து கிடக்கும் இடத்தினைத் தேடிச் சந்திரமதி செல்கையில், வழியில் முள், மரக்கிளைகள் உடல், ஆடை, கூந்தல் ஆகிய வற்றைக் கிழித்தலும், இழுத்தலும்.

அரிவை சென்ற
சுவடெலாம் குருதி தொட்ட
மாறெலாம் கூந்தல் அன்று
வனமெலாந் துணிகள்'
—அரிச். புரா. மயானகாண்டம் - 18

ஏது(ம்)நினை வில்லாமல் ஏங்கிஓ டிக்கதறி
மோதுநெடுங் காட்டுவழி மொய்குழலாள் செல்லிடவே.
வந்துநெடுங் கோசிகனும் மாயஇருள் உண்டுபண்ணி,
அந்தரங்கள் பூமி அறியாமல் பண்ணிவைத்தான்;
கன்னியரும் அந்தஇருள் காரடர்ந்த காட்டகத்தில்
தன்னினைவும் இல்லாமல் தானே வழிநடந்து,
கானகத்தை நோக்கியிளங் கன்னியரும் ஏதுரைப்பாள்—
"ஆனபெருங் கானகமே! ஆய்ந்தஇரு ளே!செடியே!
நன்மையுள்ள மானே! நலஞ்சேர் கிளியினமே!
என்மகன்போய் மாண்ட இடமெனக்குச் சொல்லீரோ!
அன்னமே! தேனே! அழகொழுகுந் தாராவே!
என்னுடைய பாலன் இறந்ததலஞ் சொல்லீரோ!
குயிலே! வனப்பருந்தே! குக்கிலே! கொக்கினமே
மயிலேஎன் பாலகன்போய் மாண்டவிடஞ் சொல்லீரோ!
அன்றில்காள்! காடை! அரும்பிறா வின்னினமே!
நன்றியுள்ள பாலன் நசித்ததலஞ் சொல்லீரோ!"
என்றென்(று) உளத்தில் இருள்உறைந்த கானகத்தில்
வென்றியுள்ள மின்னாள் மிகநடக்கும் வேளையிலே,
கோத்தநெடுஞ் சோலைக் குளிர்வனத்தி லேஉறைந்து
காத்திருக்கும் கோடியன்னங் கன்னியுட சொல்கேட்டுத்
தங்களினம் என்றலறித் தானும்உன்னி யேபறந்து
மங்கையிவள் என்றுகண்டு, வாடிஅன்ன மானதெல்லாம்
உக்கிச் சிறகடித்து ஒண்டொடியைப் பார்த்தேங்கிப்
பக்கங்கள் தோறும் பறந்து பரந்திடவே
மைக்கொடியாள் ஏகி வருவதற்கு முன்னாகத்
தக்கபுகழ் சேர்உலக தாட்சணனார் தம்மருகே
கழுகும் பருந்தினமுங் காகமுடன் ஞாளிகளும்
ஒழுகும் நிணநரியும் உத்தடந்து மொய்த்துநிற்க,

---

பாட வேறுபாடு

*4077 : 4 கானகத்தே 1749*

*4086 : 3 மாண்டதலஞ் 1574*

*4096 : 3, 4 பறந்துபறந் தேகிடவே 1749*

மோகினிக ளும்பெரிய முண்டகொள்ளி வாய்ப்பேயும்
தாகமுட னும்பலபேய் தானுமிக வேதிரண்டு,
மைந்தன் அருகுதனில் வந்திருந்து கொண்டாடி,
"எந்தனுக்கு நல்ல இளஞ்சதைகாண்!" என்றுரைக்கும்;
பின்னுஞ் சிலபேய்கள் பேராசை கொண்டுகொண்டு
உன்னுந் தலையெனக்கென்(று) ஓடியோ டிக்குதிக்கும்;
"கையெனக்குக் காலெனக்குக் காணும்" என்கு மேசிலபேய்;
"மெய்யெனக்குக் காணும்" என்று மீறிவரு மேசிலபேய்;
"நல்லதசை மூளை நமக்கென்றோ டிப்,படிக்கும்
செல்லத் திருவாயுஞ் சென்னிமுகம் எந்தனுக்கு
அங்கையுட வீடுநரம் பாமெனக்கெ"ன் றுஞ்சிலபேய்
சங்கையுட னேயுரைத்துத் தானிருக்கும் வேளையிலே,
ஆவலுட னோடி அருங்கான முங்கடந்து,
கோவையித மாள்புலம்பிக் கோவென்று சத்தமிட்டு,
மைந்தன் கிடக்கும் வடமரத்துக் கேயருகாய்
இந்து நுதலாள் இரைந்துவரும் வாறுகண்டு,
காத்திருந்த பேய்ஞமலி காகநரி யுங்கழுகும்
நாத்திசைகள் தோறும் நடந்தேகிச் சென்றிடவே,
மங்கையரும் வந்து வடிவுடைய பாலகனார்
தங்கிக் கிடக்குந் தலங்கண்டாள் **அம்மானை!**

கண்டவுட னேமயங்கிக் கைகாலு மேநடுங்கி,
மண்டியவே சுத்துடனே மண்மேல் உறவிழுந்து
காரார் குழலைமலர்க் கையா லுறஅவிழ்த்துச்
சீரான அங்கைகொண்டு சென்னிமுக மீதறைந்து
அங்கம் மிகப்பதறி ஆவிநொந்து நைந்துருகிச்
செங்கையினால் பாலகனைச் சென்றுகட்டி யேயெடுத்துக்
கண்க ளிரண்டோடிக் கஞ்சமுக மீதிருக்கத்
தன்கரமும் மைந்தனிரு தாளிணையும் முடுகட்டிச்

---

பா. வே. 4103 : 2 அருகுதன்னில் 1749
4104 : 3 இளந்தசைகாண் 1574 இளந்தசைகள் 1749
4112 : 2 னேயறைந்து 1749
4126 : 2 புத்திரனைச் 1749
4126 : 3, 4 சென்றுகட்டித் தானெடுத்துக் 1749

"சீத்தமுள்ள நாகமுன்னைத் தீண்டிச்சோ" என்றுசொல்லி
வாய்த்தமடி மீதிலிள மைந்தன் தனைக்கிடத்திப்
பூத்தமலர் செம்பவளம் போலிலங்கும் வாய்திறந்து
ஏத்தமுள்ள சந்திரமதி யேந்திழையு மாற்றலுத்தாள்.*

## சந்திரமதி புலம்பல்

### எழுசீர்ச் சந்த விருத்தம்

தனதான தனதான தனதான தனதான தனதான
தான தனனா

"அரிதான தவமேசெய் திதமாகி வருநாளில்
அடர்சோதி ஆதி அருளால்
விரிவான வுலகாள அடியேனும் மகிழ்தாம
விபுதான ஆசை மகனே!
பெரிதான முதிர்வேத முனிஆள நகர்தாரை
பிரதாப மாக உதவும்
நரபாலன் மகன்நீஎன் றறியாமல் அடர்நாகம்
நசைவான தேது பகராய்! 112

எழுவாரி புடைசூழும் உலகாளும் எனதாசை
இறைநேச ராச வடிவே!
தொழுநாட தகலாகி வனமேவி இவைசேரல்
சொடிவாகி வாழ்வு மணுகி
வழுவான படிஏவல் உழைவாகி இளைவாகி
வளர்வேனும் ஆவி பதறக்
கழுகாடு வனமூடு கடுமாலின் உயிர்போன
கதைகூறு பாவி மகனே!" 113

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

"அய்யயோ மகனே!" என்று
அழுதழு துளமும் வாடி
மெய்யெலாம் புழுதி யாட
விழுந்தெழுந் துருகிச் செய்ய

* 'கூறலுத்தாள்' என்றிருக்க வேண்டும்.

கையினால் வதனத் தோடுங்
கனிந்துபா லகனை மோந்து
தையலாள் உருகி வாடித்
"தம்பிநீ விழியாய்!" என்பாள்! 114

அப்பனே குமரா என்பள்;
அய்யனே தவமே என்பள்,
இப்புரந் தனியா என்பள்;
எனதுடை உயிரே என்பள்;
வெப்புடன் அலறிப் பார்ப்பள்;
விழித்துவாய் பேசீர் என்பள்;
செப்பமுற் றினிய மங்கை
செம்மலே எனவுஞ் சோர்வாள். 115

நடை

"வீசுபனி யால்நனைந்தும் மிக்கவெயி லாலுலர்ந்தும்
தூசுகிடை யாதலைந்துஞ் சோறுகிடை யாதுலைந்தும்
தாணாக வேபுழுதி தன்னிலுருண் டேகிடந்தும்
மாநாகந் தீண்டிஇப்ப மாண்டுவிட்டாய் என்மகனே!

பாட வேறுபாடு

விருத்தம் 115. 4: 6 சொல்வாள் 1574

நடை 4133 ; 4 லாலுலைந்தும் 1356
4134 : 2 யாதுலைந்துஞ் 1574

ஒப்புமை : அடி எண். 4133—4136. இறந்து கிடக்கும் மகனைக் கண்டு சந்திரமதி புலம்புதல்.

'பனியால னைந்து வெயிலாலு லர்ந்து
பசியால லைந்து முலவா
அனியாய வெங்க ணரவாலி றந்த
அதிபாவ மென்கொ லறியேன்
தனியேகி டந்து விடநோய்செ றிந்து
தரைமீது ருண்ட மகனே'

— அரிச். புரா. மயான காண்டம் 21

ஆவியே! உன்னை அருந்தவமாய்ப் பெத்தெடுத்த
பாவியேன் நெஞ்சம் பதைக்குதே பாலகனே!
எத்தலமும் போற்றும் இறையோன் வரத்துதித்த
உத்தமனே உன்னை உயிரிழந்து நிற்பேனோ?
கண்ணே! மரகதமே! கற்பகமே! என்னுடைய
வண்ண மணிவிளக்கே! மங்கவந்த தேதுரையாய்?
எண்ணெண் திசைபுரக்கும் என்கோமான் கொண்டருளுந்
தண்ணமுத மேஉலக தாட்சணா! நித்திரையோ?
பேராரும் மாமுனிக்குப் பேதகங்கள் இல்லாமல்
சீராரும் வேந்தன் செழுநிதிய முஞ்செலுத்திப்
பத்தியுடன் மீட்கவந்து பாலகனும் எங்கைஎன்றால்
உத்தவகை யென்ன உரைப்பேன் இளங்குமரா!
அப்பாஎன் உள்ளத்(து) அருமைமக னேஉனக்கு
இப்பாடு வந்திடுமென்(று) ஏதும் அறிந்திலனே!

---

பாட வேறுபாடு

4137 : 4 பெற்றெடுத்த 1749

4142 : 4 தேதுரைப்பாய் 1574

4145 : 3, 4 பேருலகெல் லாமளித்துச் 1749

ஒப்புமை: அடி எண். 4145–4148 இறந்து கிடக்கும் மகனைக் கண்டு சந்திரமதி புலம்புதல்.

'செங்கோல நந்தின் முறையேசெ லுத்து
மிறலோனெ வர்க்கு முரவோன்
வெங்கோப யானை விறன்மன்ன னம்மை
விடுவிக்க வெண்ணி வருநாள்
பங்கேரு கத்து மலர்போல்வி ளங்கு
வதனாம கிழ்ந்த பரிவால்
எங்கேயெ னாசை மகனென்று ரைக்கில்
எதிரேது சொல்வன் மகனே.'

— அரிச். புரா. மயான காண்டம் - 24

அறிவுடைய மன்னன் அருளுகின்ற குஞ்சரமே!
பொறியடரும் அக்கினியில் பொன்றிவிழு வேன்எனவும்,
நெறிகள் பலவுரைத்து நீதியுடன் சென்றகண்ணே!
பிரியாத ஆசைப் பெருமுயிரே! என்மகனே!
ஆணிக் கனகம் அணிவயிர மானசிறு
மாணிக்கச் சுட்டி வலுசுமையா மாமுடிமேல்
பூணிக்கு நித்தம் புனத்தில் பலவுடனே
நாணிப் பலவிறகு நாட்டமுற்று நீசுமந்தாய்!
இப்படிக்குத் தானும் இருக்கப் பொறுக்காயல்
செப்பரிய நாகம்உன்னை தீண்டமடிந் தாய்மகனே!"
என்றழுத கண்ணீர் எழுமேக முந்திரண்டு,
ஒன்றுபடப் பெய்யும் உரியவெள்ளம் போல்பெருகி,
நண்ணுங் கனக நதிபோல் பரந்தோட,
எண்ணரிய தேவருடன் எல்லோருந் தானிரங்கக்
கல்லும் உருகிவிடக் கற்பகமுங் காயுதிர,
வல்லி அழுதழுது மாவேகங் கொண்டுகொண்டு,
"தப்பாத சொல்லுடைய தார்வேந்தன் பெத்தகண்ணே!
அப்பா எனஅழைத்தால் ஆயியென்றும் பேசாயோ?
ஓதுமறை நீதி உகந்தமன்னன் தன்பொருளே!
ஏதுமெனக் காதரவாய் இங்கொருத்தர் கண்டிலனே!
அன்னையல்லோ வந்துன் அருகிருந்து வாடுகிறேன்!
சன்னையுடன் நீஎழுந்து தானோடி வாராயோ?
ஆவலுடன் உன்னை அரியமுத்த மிட்டெடுக்கக்
காவலவன் பாலா கனிந்தெழுந்து வாராயோ?

---

பா. வே. 4153 : 1, 2 நெறிகள்பல வேயுரைத்து 1749
4158 : 3 நாட்டமுத்து 1749
4167 : 4 பெற்றகண்ணே 1749
4170 : 3 இங்கொருவர் 1749

ஒப்புமை : அடி எண் 4152—4158 இறந்துகிடக்கும் மகனைக் கண்டு சந்திரமதி புலம்புதல்.

'முன்னாயிலி ளைந்த கனன்மூழ்க வெம்மின்
மூதலேந டந்த மதலாய்'

— அரிச். புரா. மயான காண்டம் — 30

வன்னமுடன் உன்னை வருந்தியழைக் குந்தாய்க்கே
என்னவென்று நீயொருசொல் என்மகனே! பேசாயோ?
மெய்யுருகிப் பெத்து மிகவே உனைவளர்த்துப்
பையரவுக் கென்றனுப்பும் பாவிகாண் என்றுகண்டோ
எந்தன் தவப்பயனே! என்மகனே என்மேலே
சிந்தையுடன் சோபஞ் சிறந்தே கிடந்தனையோ?
மாறாத சொல்லுடைய மன்னவறகுச் சேதியொன்றுங்
கூறாமல் நீகிடந்த கோலமென்ன பாலகனே?
முத்தீனுஞ் சென்னல்வயல் மூண்டபதி யானதெல்லாம்
வித்தீனுஞ் செய்யதவ மேன்முனிவ னுக்களித்தோம்;
எங்கும் புகழ எமக்கருளுந் தாதைநகர்
அங்கவளக் கன்னோசி ஆர்ஆள்வார்? சொல்லுதம்பி!
நாடுவிட்டுக் காசி நகர்க்கு வரும்போது,
பாடுபட்டு வந்த பலனிதுவோ என்மகனே?
ஏதுவகை தம்பி எனக்கறியச் சொல்லாயோ?
ஓதுமுறை மாமுனிவன் ஓதிவிட்ட காரணமோ?
அந்தரியாள் பங்கன் அருளிவிட்ட சித்திரமோ?
எந்தவித மோதெரிய வில்லைகாண் என்மகனே!"

---

4177 : 2 பெற்று 1749
4179 : 4 என்மீதில் 1749
4180 : 2 கோபஞ் 1749
4181 : 4 செய்தியொன்றுங் 1749
4187 : 4 வரும்பொழுது 1749

ஒப்புமை : அடி எண். 4183 — 4186. இறந்து கிடக்கும் மகனைக் கண்டு சந்திரமதி புலம்புதல்.

'நீராள வாவி செறிநாட னைத்து
நிறைமாத வற்கு தவினும்
பாராளு நீர்மை தொடர்பற்ற தன்று
படியாளும் எந்தை முடியில்
காராள ரேர்கள் கடவோசை யோய்வில்
கன்னோசி நாட தனைமேல்
ஆராள வல்ல ரவமேவ னத்தி
லரவாலி றந்த மகனே!'

— அரிச். புரா. மயான காண்டம் - 25

என்பாள் திகைப்பாள்; இரைந்துபுலம் பிப்புலம்பி.
வெம்புருகி வாடிநொந்து 'மைந்தனே' என்றழுவாள்;
"நாலெட் டறம்வளர்த்த நாயகியே!" என்றழுவாள்;
"ஆலில் துயிலுமெங்கள் அச்சுதா!" என்றழுவாள்;
"வேலா" எனவுருகி "வேதனே!" என்றழுவாள்;
"நீலா விநோதநட நித்தனே!" என்றழுவாள்;
"ஆதித்தா!" என்றழுவாள்; "அம்புலியே!" என்றழுவாள்;
"நீதிக் குரியமன்னா! நேசனே!" என்றழுவாள்;
"நன்னாடும் நன்னகரும் நற்குலமும் விட்டகன்றேன்;
முந்நூலின் அந்தணற்கு மூண்டவிலைப் பட்டிருந்தேன்;
பாலகனார் தானிறக்கப் பார்த்திருக்க மாட்டேனே!
கோலமுள்ள ஈஸ்வரியே! கோதையே!" என்றுருகித்
தெள்ளுதமிழ் சேருகின்ற செம்மல்தனை யும்பார்த்து,
"வள்ளல்தருங் கற்பகமே! மைந்தனே! நீயுமிந்தக்
கானகத்தி லேமடிந்த காரியங்கண் டாலரசன்
தான்மயக்க மாகித் தயங்கிநொந்து வாடுவரே!
அய்யனே! என்மகனே! அன்புடைய பாலகனே!
வெய்யகொடுங் கானகத்தில் வெவ்வரவால் நீமடிந்த(து)
இவ்வாறு என்தாயும் எந்தையருங் கேட்டிருந்தால்
ஒவ்வாமல் அங்கவர்கள் உத்திறந்து மாளுவரே!
தாடாள னே!உலக தாட்சணா! என்குமரா!
வாடா முகமுனக்கு வாடவந்த காரணமென்?
தாயார் அருகிருந்து தம்பிதம்பி என்றாலும்
பேயாநீ பேசாத பேரறிவுக் கென்சொல்வேன்?
ஏராமல் உன்னைவிலைக்(கு) ஈந்ததாய் தந்தைமுகம்
பாராம லேகிடந்து பள்ளிகொண்டாய் பாலகனே!
பிள்ளைக் கிரங்காமல் பேதகங்க ளாய்நினைந்து
கள்ளமுறும் வஞ்சனைகள் காசினியில் செய்தேனோ!
அன்னியர்தன் பிள்ளைக்(கு) அவத்தினைகள் செய்தேனோ!
உன்னை இழந்து உருகுகிறேன் கண்மணியே!"

---

பா. வே. 4196 : 3 அச்சுதனே 1749
4215 : 4 என்றழைத்தும் 1749
4221 : 3 அவதிகளைச் 1574

என்றென்று பற்பலகால் ஏங்கியேங் கிக்கதறிக்
கன்றினிய சொல்லினிளங் கன்னிசந்திர மாமதிதான்
சிந்தைத் துயரமுடன் சென்றிறக்க வேணுமென்று
தந்தன் உளந்தனிலே தானிருத்திக் கொண்டுபின்னும்,

### கலிவிருத்தம்

"மாண்டபா லகனுடன் நாமும் மாண்டிடில்
ஆண்டசேய் தனையெடுத் தடக்க வார்இலை;
ஈண்டுநாம் அந்தரத்(து) இடைவ(து) ஏன்?"என
நீண்டமா குழலனம் நெஞ்சத் தெண்ணியே. 116

"வெம்மைசேர் மறையவன் விரைய வாஎன
எம்மையிங் கனுப்பினான்" என்று கண்டுமின்
தம்முளந் திடுக்கெனத் தளர்ந்து தோளின்மேல்
செம்மலை எடுத்தனள் சுடலை சேரவே. 117

### நடை

"மைந்தனுடன் நாமுமிப்ப மாண்டுவிட்டோ மாமாகில்
எந்தனையும் மைந்தனையு மேவடக்க யார்?"எனவே

---

பா. வே. 4226: 1, 2 தந்தன்னுள் ளந்தனிலே 1749

விருத்தம். 116. 4 : 2 அறற்குழல் 1749
117. 4 : 4 செல்லவே 1749

ஒப்புமை: விருத்தம் 116 & அடி எண். 4227—4236. மகன் இறந்து கிடப்பதைக் கண்டு புலம்பிய சந்திரமதி, தன்னை விலைக்கு வாங்கிய வேதியர், வேதியர் மனைவி ஆகியோரின் கடும் இயல்புகளை எண்ணி, விரைவில் வீடு திரும்ப வேண்டுமென மகனின் உடலை எடுத்துக் கொண்டு சுடுகாடு செல்லுதல்.

'எனமறுகி யிவனுடனாம் இறந்தே மாகில்
இவனைஎடுத் தெரித்தடக்க உரியா ரில்லை
மனமுருகா னம்மைவிலை கொண்டோன் சால
வன்கண்ணன் மனைவியவன் றனின்மா பாவி
சினமுடையார் விடியுமுதற் செல்லே னாகிற்
செறுவரிவன் றலைக்கருக்கிச் செல்வ னென்று
தனதுதிரு மகனைஎடுத் தணிதோள் வைத்துத்
தள்ளாடி மதிதயனார் தனையை மீண்டாள்.'

—அரிச். புரா. மயான காண்டம் — 33

கோல மயிலாள் குலாவியுள்ளத் தேநினைந்து,
"சாலவிலை கொண்டவனும் தையலரும் மாகோவி
மெத்தச் சினந்தவர்கள் மெய்நடுங்கப் பேசுவர்கள்;
உத்தகதி ரோன்எழுமுன் உண்மையுள்ள பாலகனைச்
சென்றெடுத்து நாமடக்கிச் செல்லுவோம்" என்றுசொல்லித்
துன்றுபுகழ் மைந்தனையுந் தோள்மேல் உறஎடுத்துத்
தள்ளாடி மெத்தத் தடுமாறி யேநடந்து,
முள்ளாடுங் காட்டுவழி மொய்குழலும் ஏகலுற்றாள்.
சாலப் பிணம்எடுத்துத் தையல்கொண்டு போறவகை
சீலத் துடனறிந்து தின்கழுகு மோதிவிழக்
காக்கை பறந்தடிக்கக் கண்டுபருந் தும்பறிக்கத்
தாக்குடைய சம்புகளுந் தானே அடைந்துலவ
நாய்கள் துடர்ந்துவர நாலுதிக்கெல் லாம்பரந்து
பேய்கள் துடர்ந்துவரப் பெண்பூத முந்தொடர
ஆடை யிடைக்கி அலர்தருமோ கினிப்பேயும்
சாடையுடன் ஓடிவந்து தான்களித்து நின்றாட,
நீடியிந்த வண்ணம் நெளிந்துலவும் பேய்தனக்கும்
நாடி மயங்காமல் நன்னுதலா ளும்நடந்து,
பாடுபட்டு மெத்தப் பரதவித்துத் தள்ளாடிக்
காடுபல வுங்கடந்து, கால்முழுதும் முள்ளாடச்

---

பா. வே 4236 : 4 ஏகலுத்தாள் 1749
4241 : 2 அடர்ந்துவர 1749 4241 : 4 லாம்பார்த்து 1749

ஒப்புமை: அடி எண். 4237—4250. சந்திரமதி, மகனின் பிணத்தைச் சுமந்துகொண்டு சுடுகாடு வந்து சேர்தல்.

'காடுமே டும்செறிந்த செந்நாய் முன்னே
கௌவிஇழுத் திடப்பறந்து கழுகு மோதப்
போடுபோ டெனப்பலபேய் தொடரக் கொண்டு
போகேனீ யெனக்கொடிய பூதம் சூழ
மாடுதோ றும்பறிக்க நரிக டாவ
வார்குழலும் சோர்துகிலும் வனந்தொட் டீர்க்க
ஈடுபா டித்தனையும் பட்டு நீண்முள்
இடுகாடு நீந்திநெடுஞ் சுடுகா டுற்றாள்,

— அரிச். புரா. மயான காண்டம் — 34

செவ்வையுறு முள்ளுஞ் சிறந்தபல காடுவிட்டுக்
கவ்வையுட னேசுடலைக் காட்டகத்தில் வந்தனள்காண்;
பந்தமுறுங் கூளி பலவிருக்கச் சாய்கைகளுப்,
வெந்ததலை மண்டை வெடிக்குமந்த வெண்டொலியும்,
பிணங்கள் சுடும்புலையர் பேசு மவத்தொனியும்,
நிணங்கருகி நாறும் நிறைந்தபுகை வாசனையும்,
பத்திபத்தி யாகப் பலபிணங்கள் சூழவைத்து,
முத்திளரி யும்எரியும் மூண்டவள மும்பார்த்து,
ஈதாம் சுடலை எனஅறிந்து கொம்பனையாள்
மீதான தோளில் மிகவிருந்த பாலகனை
ஈமத் துறையில் இறக்கிமிக வைத்துவிட்டுத்
தாமக் கருங்குழலாள் சந்திரமதி அந்நேரம்
சுத்துந் திசைமுழுதுஞ் சூழ்ந்தோடி ஆராய்ந்து
இத்துவெந்த கொள்ளி இசைந்ததொரு கட்டைகளும்

---

பாட வேறுபாடு

4253 : 3, 4 பேசுமர வத்தொனியும் 1749

ஒப்புமை : அடி எண். 4251 -- 4274. சுடுகாட்டை அடைந்த சந்திரமதி, கிடைத்த கட்டைகள் மேல் மகன் உடலைக் கிடத்திக் கொள்ளியிடல்.

'பிணங்கள்சுடும் கடும்புலையர் அரவத் தாலும்
பிளந்துதலை வெடித்திடுபே ரமலை யாலும்
நிணங்கருகிச் சுறுநாறு முடையி னாலும்
நெடுங்கனலின் கொழுந்தெழுந்த நிவப்பி னாலும்
கணங்கள்மிகக் களித்தாடுந் துழனி யாலும்
கனற்பொறியின் மலிவாலும் புகையி னாலும்
சுணங்குபல பிணங்குபெருங் குரைப்பி னாலும்
தோகைஅறிந் துணர்ந்துகொடுஞ் சுடலை சார்ந்தாள்' 35

'கண்டனளீ திமமெனக் கருத்தில் உன்னிக்
கடவுளர்தங் காவலிற்றன் மகனை வைத்துப்
பண்டுவெந்து கரிந்தகுறைக் கட்டை எல்லாம்
பலதிசையும் விரைந்தோடிப் பார்த்தெ டுத்துக்
கொண்டுவந்து பிணங்கள்சுடும் சுடலை நண்ணிக்
கொள்ளிஎடுத் தோடிஅனல் கூட்டி மூட்டி
மண்டுதழற் கட்டையின்மேல் மகனை வைத்தாள்.
வளர்ந்தெரியும் கனல்விளக்க மன்னன் கண்டான்'

— அரிச். புரா. மயான காண்டம் -36

தேடிப் பொறுக்கிவந்து, சேர்ந்தகட்டை தானடுக்கி,
நாடியதோர் பாலனையும் நல்லகட்டை மீதேத்தி-
"அய்யனே! உன்னை அரியதவந் தன்னாலே
வையகத்தில் பெத்தெடுத்த மாதாவுக் கன்பாக
உன்கையால் கொள்ளிபெற உண்மையுடன் சிக்காமல்
என்கையால் கொள்ளியிட ஏற்கவந்தா யோமகனே?"
என்றுசொல்லிக் கண்ணீர் இரண்டுவிழி மீதொழுக,
வென்றியுடன் கொள்ளிவைத்து, மெல்லியருஞ் சுத்திவந்து,
அக்கினியை மூட்டி அடர்ந்தெரித்தாள் அம்மானை!

அக்கினிகள் பத்தி அடர்ந்தே படர்ந்தெரிந்து
தோன்றும் வெளிச்சமதைத் தொல்புலைய னுக்கடிமை
பூண்டஅரிச் சந்திரனும் போந்துகண்டங் கந்நேரம்
மைந்தனை வங்கடித்து மாண்ட தறியாமல்
இந்த இரவில் எவர்வந்தார் என்றுசொல்லி,

---

பாடவேறுபாடு

4264 : 4 மீதேற்றி 1749
4266 : 2 பெற்றடுத்த 1749
4272 : 2 பற்றி 1749

ஒப்புமை : அடி எண். 4275 — 4288. புலையனுக்கு அடிமைப்பட்டுச் சுடலை காக்கும் அரிச்சந்திரன் தன் மகன் இறந்துவிட்டான் என்பதை அறியாமல், இரவில் மகன் உடலை எரிக்க வந்த சந்திரமதியைத் தன் மனைவி என உணராமல், பிணஞ்சுடுவதற்கான பணந்தராமல் பிறர் அறியாமல் பிணஞ்சுடமுயன்ற சந்திரமதியை நோக்கிக் கடுமொழி கூறி, மகன் உடலை எடுத்தெறிதல்.

'அரவுகடித் தரசிளங்கோ இறந்தா னென்ப
தறியாமல் வெகுண்டிறைவ னாரே யிந்த
இரவுதனிற் பிணஞ்சுடுவா ரறிவோ மென்னா
எழுந்திருந்து விரைந்தோடி யேடி முடி
தரவுரிய பொருளெனக்குத் தாரா தேநீ
தனியேயிப் பனிஇருளிற் சவங்கொ ணர்ந்து
கரவினழல் சுடுவதுனக் கடைவோ வென்னாக்
கால்வீசிக் கான்முளையை எடுத்தெ றிந்தான்'

— அரிச். புரா. மயான காண்டம் - 37

உன்னும் பரண்விட்(டு) உகந்திறங்கி ஓடிவந்து,
கன்னியரைக் கண்டு கடுங்கோப மாய்ச்சீறி,
“ஆர்மின்னே! என்வரிசை யல்லாங் கொடுக்காமல்,
ஊர்செய்யா ஞாயம் உனக்குவந்த தோ?”எனவே
நவ்வியந்த வேளையிலே நல்லஊ மத்துறையில்
சவ்வையுடன் வந்தாய் களவாய்ப் பிணஞ்சுடவே!
சங்கையல்ல பொற்கொடியே! தையலே! நீதானும்
எங்கையிருந் தேகிவந்தாய் எத்துடைய மங்கையரே;
பேச்சியோ? தான்கொடிய பிள்ளைதின்னும் ராட்சதையோ?
காட்சிக் கிரங்காத காராக்கிர வங்கிஷமோ?
சொல்லாய்” எனவெதிரிச் சூழ்சுடலை யைப்பிரித்துச்
சல்லாப மைந்தனையுந் தானே எடுத்தெறிந்தான்.
அந்நேரந் தன்னில் அரிவையரும் மெய்பதறி,
“என்னே!” எனவும் இடிந்தேக்கந் தானாகி,
“இந்நகரில் இவ்வூரில் இங்குள்ள சீரறியேன்;
உன்னியுங் கட்குள்ள உள்வரிசை நானறியேன்;”
என்றுநங்கை கூற, இசைவீர வாகுடியான்
கன்றிச் சினந்து கனிந்துமிக வேதுரைப்பான்—
“மானே! எனக்கு வரிசைபிணம் ஒன்றினுக்கு
ஆனபணங் காலுடனே ஆடைமுழம் வாய்க்கரிசி
உள்ளதுகாண்; இவ்வா(று) உதவிஉந்தன் பாலகனைத்
தெள்ளுநுதலீர் நீர்சுடுங்காண் செப்பமுடன்” என்றுரைத்தான்.
“உங்கள் தனக்குள்ள உள்வரிசை நல்கிடவே
என்கைதனில் ஏதுமில்லை; ஏழையெனக் காயிரங்கி
மாண்டமக னைச்சுடவும் வாஞ்சையுட னேசிறந்து
வேண்டிவிட வேணும்” எனவுரைத்தாள் **அம்மானை!**

---

ஒப்புமை: அடி எண். 4291, 4292. பணந்தராமல் பிணஞ்சுடமுயன்ற சந்திரமதியை நோக்கிக் கடுமொழி கூறி மகன் உடலை எடுத்தெறிந்த அரிச்சந்திரனிடம் (அரிச்சந்திரன் என அறியாமல்) சந்திரமதி, “இவ்வூரின் நடைமுறை எனக்குத் தெரியாது” எனத் தெரிவித்தல்.

‘அறிந்துமிலன் இவ்வூரில் வழங்கு நீதி’

—அரிச். புரா. மயான காண்டம் - 38

"தூண்டுபுகழ் மாதே! சுடுகாட்டுக் குள்வரிசை
ஆண்டபடி தந்துசுடுர்; யான்விடேன்;" என்றுரைத்தான்;
என்றுரைத்த போதில் இசைவுடைய மங்கையரும்
"நின்று சுடலையிலே நேசமுறுங் காவலனே!
உத்த தமரும், உறவுடையோ ரும்மிருந்தால்
பத்தியுடன் ஏதும் பணங்காசு தானிருந்தால்
மாண்டமகன் தன்னை மணித்தோளி லேயெடுத்துப்
பூண்டஇருள் வேளையிலே போந்துதனி யேநடந்து,
வெந்தகொள்ளிக் கட்டை மிகப்பார்த் தெடுத்தடக்கிச்
சந்ததியை யான்சுடவுந் தாரணியில் எய்துவனோ?
நீகருணை செய்தெனது நேசமுள்ள பாலகனை
ஆகம்உட னேசுடவும் ஆதரவு செய்யும்"என்று,

### மங்கிலியம் காணுதல்

கன்னியருங் கைதொழுது, காலடியி லேவிழுந்து,
"உன்னுடைய தஞ்சம்" எனவுரைத்துப் போத்திநின்றாள்.

---

பாட வேறுபாடு

*4303 : 3, 4* சுடுகாட் டுடவரிசை *1749*
*4305 : 2* போதே *1749*
*4305 : 4* நங்கையரும் *1749*
*4316 : 4* போற்றிநின்றார் *1749*

ஒப்புமை : அடி எண். *4307 — 4316.* சந்திரமதி, ஈமத்தலங் காத்திருக்கும் அரிச்சந்திரனிடம் (அவன் அரிச்சந்திரன் என அறியாமல்) இறந்த தன் மகனின் உடலைச் சுட உதவும்படி வேண்டிக் கூறிக் காலில் விழுதல்.

'பொருளுடையேன் றமருடையே னானா லிந்தப்
புத்திரனைத் தோண்மீது வைத்துப் போந்திவ்
விருளிடையிற் சுடலையில்வந் தெய்து வேனோ
எரிந்தகுறைக் கட்டையினி லேற்று வேனோ
தெருளுடையா யறமுடையாய் வினையே னீன்ற
சிறுவனையான் சுடக்கருணை செய்யாய் தேயா
அருளுடையா யாதார மற்றேற் குன்றன்
அடியிணையே தஞ்சமென வலறி வீழ்ந்தாள்.'

— அரிச். புரா. மயான காண்டம் — *39*

"மானே எனைத்தீண்ட வையகத்தில் ஆகாது;
ஆன புலையற் கடிமைநான் கண்டாயே;
இப்பனங்கால் சீலைமுழும் என்னையா ளும்மவற்கே;
செப்பியதோர் வாய்க்கரிசி செய்தபடி எந்தனுக்கு;
தந்தபடி உந்தனுக்குத் தானுதவி விட்டேன்காண்;
பந்தமுறுங் கால்பணமும், பண்புகலை ஓர்முழமும்,
ஆண்டான் வரிசை; அதுகொடுத்துப் பாலகனை
வேண்டிச் சுடுங்காணும் மெல்லியரே" என்றுரைத்தான்.
"காப்பணத்துக் காசுங் கலைமுழமும் ஈயவென்றால்
ஆப்பிடவும் என்னால் அவகாசம் ஏதுமில்லை;"
என்றென்றும் பின்னும் இளங்கொடியா ளும்முருகி
நின்றுரைக்கும் வேளையிலே நேரிழையாள் தன்கழுத்தில்
பொன்னனைய மங்கிலியம் போர்வேந்தன் கண்டனன்காண்.
உன்னியபொன் மங்கிலியம் உத்தமன்னன் கண்டவுடன்
"கன்னியரே! நீயுமிந்தக் காசியினில் உள்ளமின்னார்
தன்னில் அதியமுள்ள தையலே!நீ சுத்தமெல்லாம்

---

பாட வேறுபாடு

4327 : 2 இன்னும் 1749
4332 : 2 அதனமுள்ள 1749

ஒப்புமை : அடி எண். 4317 — 4324, சந்திரமதி காலில் விழுந்து அழுது வேண்டியதும்' ஈமத்தலங் காத்திருக்கும் அரிச்சந்திரன், தான் அடிமைதான் என்றும் தன்னை அடிமைகொண்ட புலையனுக்குத் தரவேண்டிய கால்பணம், ஆடை ஆகியவற்றைத் தந்து பின் சுடு என்றும் கூறல்.

'பொன்னனையாய் விடுவிடுயான் புலையனென்னிற்
புலையனும்அல் லேன்புலையற் கடிமை கண்டாய்
என்னடிநீ தீண்டுவது தகாது நீதான்
இப்பொருட்கியா னுரியனலே னென்னை யாள்வோன்
சொன்னபணங் காலுண்டு கொள்ளி ஆடைத்
துண்டமுமொன் றுண்டுதந்து சுடுதி யன்பால்
அன்னவன்றான் படியாக எனக்குத் தந்த
வாய்க்கரிசி யானுவிப்பே னறிதி என்றான்'.

— அரிச். புரா. மயான காண்டம் - 40

பத்தும் பலகளவும் பாசாங்கும் உள்ளவள்காண்;
செத்த பிணத்தைச் சிறந்திரவு கொண்டுவந்தாய்;
இத்தகொள்ளிக் கட்டை எடுத்தடக்கி மேவகவைத்தாய்;
உத்துதவக் கையில் ஒருகாசும் இல்லையென்றாய்;
வாய்க்கரிசி நல்க வகையேதும் இல்லையென்றாய் !
போக்கிடங்கள் ஏதுமில்லை என்றுசொன்னாய்: பூவையரே !
உந்த னுடகழுத்தில் உத்திலங்கும் மங்கிலியம்
அந்தரங்கள் பூமியுல கல்லாம் விலைகொளுமே!
இந்த நகையிருக்க ஏதுமில்லை யென்றாயே?
தந்துசுடும் என்வரிசை தையலே;'' என்றுரைத்தான்.

## கலிவிருத்தம்

மங்கலம் என்றசொல் வார்த்தை யானது
நங்கைதன் காதுற நடுங்கி நானிலத்(து)
அங்கமும் பதறிநொந் தயர்ந்து நெஞ்சமும்
நொங்கினள் அசங்கினள் நொறுங்கி வாடியே; 118

''அற்புத எழிலகம் ஆடை பூசணம்
பொற்புடன் இழந்தனம்; பூணிக்(கு) ஆளுமாய்ச்
சொற்பல பணிசெய்தோர் மகவைத் தோற்றனம்;
கற்பும்நான் இழப்பனோ?'' எனக்க லங்கினாள். 119

## நடை

மங்கிலியம் என்றுரைத்த வார்த்தை தனைக்கேட்டு,
அங்கம் மிகப்பதறி ஆவியெல்லாம் நொந்துருகி,
வானில் உயிர்போக மண்ணிலுடல் வீழ்வதுபோல்,
ஆன உயிர்குலைந்து அம்புவியி லேவிழுந்தாள்;

---

பாட வேறுபாடு

4335 : 1 இத்தகுறைக் 1749

அம்புவியி லேவிழுந்து அக்கினியி லேபிடித்து
வெம்பும் மெழுகெனவே மெய்யுருகி மாதுநல்லாள்—
"ஆசைபெறும் எந்தன் அரசன்விழிக் கல்லாது
காசினியி லேஒருவர் கண்காணா மங்கிலியம்
ஈமத் துறைகாக்கும் ஈனனுட கண்காண
நாமருங் காசியினில் நாடிவந்த காரணமோ?
மாநகரை யும்மிழந்தேன்; மன்னவனை யும்பிரிந்தேன்;
ஏனமுடன் காசுபணம் எல்லாத்தை யும்மிழந்தேன்;
வேதியனார் தம்முடைய வீட்டடிமை யாயிருந்தேன்;
காதலுள்ள பாலகனைக் காசினியி லேயிழந்தேன்;
எந்தனிறை கற்பை இழக்கவந்த காரணமென்?
அந்தரியே! சுந்தரியே! அம்பிகையே!" என்றுருகி
உள்ளங் கலங்கி உருக்கலங்கித் தானழுது
வெள்ளமெனக் கண்ணீர் மிகவோட ஏதுரைப்பாள்—
"முன்னாளென் தாதையர்க்கு முக்கண்ணர் சொன்னமொழி
இந்நாளில் பொய்யாய் இருந்ததோ?" என்றழுதாள்.

---

பாட வேறுபாடு

4357 : 4 காரியமென் 1749

ஒப்புமை: அடி எண். 4347—4352. சந்திரமதி, தன் கணவன் கண்களுக்கு மட்டுமே புலப்படும் தன் மங்கல நாண், சுடலை காக்கும் ஈனன் கண்களுக்குத் தெரிந்துவிட்டதே என வருந்திக் கூறுதல்.

"அலைவி லாஅரிச் சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோவெனா
உலையின் மீது மெழுகொத் துருகினாள்."

— அரிச். புரா. மயான காண்டம் -44

அடி எண். 4361, 4362. ஈமத்தலங் காத்திருந்த புலையனின் (அரிச்சந்திரனின்) (அரிச்சந்திரன் என அறியா நிலையில்) கண்களுக்குத் தன் மங்கல நாண் தெரிந்ததை அறிந்து வருந்திக் கூறுகையில் "சிவபெருமான் என் தந்தைக்குச் சொன்ன சொல் இன்று பொய்த்ததோ?" எனல்.

"இருள றுங்குணத் தெந்தைக்கு நல்வர
மருளும் காலத் தரவணி வேணியான்
திருவு ளம்செய்த திவ்விய மென்மொழிப்
பொருளு மித்தலம் புக்கபின் பொய்த்ததோ. 45

“நாடகன்று, சேயிழந்து, நான்நடந்து வந்து,சுடு
காடுகண்ட போதிலெந்தன் கற்பும் பறந்திடுமோ?
மாயமோ? ஈதுமந்த மாமுனிவன் சூத்திரமோ?
வாயமோ? தூவலிந்த வாறெனக்குத் தோணுதில்லை;
என்னையா ளுந்தலைவன் எந்தனையும் மைந்தனையும்
பன்னுமறை நூல்பயிலும் பார்ப்பார் குலத்தில்வித்தார்;
அங்கவர்சொல் மீறா(து) அருமையுடன் நான்நடந்தேன்;
இங்கெமது கற்புக்(கு) இடுத்தம்வரக் காரணம்என்?
கொடுமைசெய்து நாளுங் குவலயத்தை ஆண்டோமோ?
கெடுமையுறு மந்திரிசொல் கேட்டுநல்ல தென்றோமோ?
ஆளுமடி யாரை அறநெருக்கங் கொண்டேனோ?
சூழும் பெரியோரைத் தூசனமுஞ் செய்தேனோ?
தலைவனுட வார்த்தை தனைமறுத்து நின்றேனோ?
வலுகொடிய பாவம் வருங்கோபங் கொண்டேனோ?
தந்தைதாய் சொல்லைத் தவறி நடந்தேனோ?
முந்துமறை வேதம் மொழிபிரட்டாம் என்றேனோ?
ஆளுந் தலைவற்(கு) அரும்பாவஞ் செய்தேனோ?
வாழும் மடந்தையர்க்கு மாகொடுமை செய்தேனோ?
வைத்தார் பொருளை வயிறெரியக் கொண்டேனோ?
குத்தமிகச் செய்து குடிகெடுத்து வாழ்ந்தேனோ?
எப்பாவஞ் செய்தேன்? இசைவுகெட நான்நடந்தேன்?
இப்போதென் கற்புக்(கு) இடுத்தம்வந்த(து)” என்றுசொல்லி
வல்லியுள்ளம் வாடி வருந்திமிக வேபுலம்பிச்
சொல்லி யழுதழுது சோகம் பலவுடனே,

---

பாட வேறுபாடு

*4381 : 3, 4 வயிறெரியத் தொட்டேனோ 1749*
*4383 : 3 இசைகேடாய் 1749*

ஒப்புமை : முன்பக்கத் தொடர்ச்சி.

பனிம திச்சடைப் பாவைபங் காளனார்
இனிய வாசக மின்றொடும் தீர்ந்ததாற்
புனித னாரினும் பூவளந் தோனினும்
முனிவ னோமுதி யோனென வேங்கினான்.”

— அரிச். புரா. மயான காண்டம் — 46

"பாங்குபெறும் அய்யோத்திப் பாராளும் என்தலைவன்
ஆங்கரும வேந்தன் அடர்ந்திலங்குஞ் செங்கமலக்
கண்காணும் மங்கிலியங் காசியினி லேபுலையன்
கண்காண வந்ததொரு காரணமென்?" என்றழுது,
விள்ளுமந்த வாசகத்தை வேல்வேந் தனுங்கேட்டு,
உள்ளங் கவலைகொண்டு, உள்புழுங்கி விம்மிவிம்மிச்
"காளையரும் பாலகனார் கன்னியுமென் தேவி"யென்றே
ஆளழகன் உள்ளத் தறிந்துமுக மும்வாடி.
அங்கமுட னாக்கைபல வல்லாம் மிகக்குலைந்து,
பொங்குமுரை நாவறண்டு போய்ப்பொருமி யேவாடி,
விம்மி அழுங்கிஅந்த வேல்வேந்தன் நின்றிடவே
கொம்மை முலையனைய கோதையருந் தன்னுடைய
வேந்தன் எனவறிந்து மெல்லியருங் கைகுவித்துச்
சாந்தமலர்ப் பாதந் தனைவணங்கிக் கேட்கலுற்றாள்;
கேட்கும் மடந்தையுடன் கேசரியும் ஏதுரைப்பான்—
"வாட்குரிய கண்ணனைய வல்லியரே! உந்தனையும்
பாலனையும் வேதமொழிப் பார்ப்பானுக் காளாக்கி
ஏலுப்வெள்ளிப் பொன்னுதவ ஈனனுக்கும் ஆளானேன்;
என்று நடந்த இசைவெல்லாங் கூறிடவே
ஒண்டொடியுந் தன்வா(று) உரைத்தனள்காண் **அம்மானை!**

கண்டிருவர் தாமும் கவலைகொண்டு நின்றழுதார்;
வண்டார் குழலி மறுத்து மன்னர்க் கேதுரைப்பாள்—
"அஷ்டதிசை யாளும் அரசனே! அம்புவியில்
இஷ்டமுடன் வாழ்ந்துண் டிருந்தோம் பலகாலம்;
பண்டைவிதி யாலும் படர்ந்தெழுந்த தீவினையால்
எண்டிசையில் இவ்வாறும் எய்தினோம் காணரசே!
செம்மல் தனையுஞ் செகத்தில் இழந்தோமே!
விம்முங் கவலை மிகப்பெருகி மெய்யுருகி
மன்னவனே இந்த வகைகேடு வந்ததென்று
பன்னிக் கவலைகொண்டால் பார்வேந்தே வாறதுண்டோ?

---

பாட வேறுபாடு :

4411 : 3 படர்ந்தடர்ந்த 1749

மாதுடைமை விடு மகவுசெல்வம் இல்லைநிசம்;
நீதிநிசம் மன்னா! நினைவுமயங்கா தே"என்றாள்.
"நீதிநிசம் என்றுரைத்த நீலவிழி வல்லியரே!
ஆதி அரனறிய அப்புவியி லேநானும்
மைந்தனுக்கும் உந்தனுக்கும் மண்டிவிடுந் தீமைசெய்தேன்;
அந்தரங்கள் பூமிக்(கு) அதியதொரு வாய்மைசெய்தேன்"
என்றுபல சொல்லி இடைந்துநின்ற மாவேந்தன்
துன்று குழலனைய தோகையர்க்கும் ஏதுரைப்பான்—
"விந்தமகன் றன்னை மிகவெடுத்துத் தாமடக்க
ஆய்ந்தபடி எந்தனையும் ஆள்வீர வாகுவனார்

---

பாட வேறுபாடு

4422 : 4 வாண்மைசெய்தேன் 1749

ஒப்புமை: அடி எண். 4421, 4422. சுடலையில், சந்திரமதியை நோக்கி அரிச்சந்திரன், "உனக்கும் மகனுக்கும் நான் தீமை செய்தேன்; வானிற்கும் பூமிக்கும் வாய்மைசெய்தேன்" எனக் கூறுதல்.

'தீமை செய்த துனக்கும் சிறுவர்க்கும்
வாய்மை தானது மண்ணுக்கும் விண்ணுக்கும்' 60

அடி எண்: 4425 — 4432. அரிச்சந்திரன் சந்திரமதியிடம், "உன்னை விலைக்கு வாங்கிய மறையவனிடம் சென்று பிணத்தைச் சுடுவதற்கான கூலியைப் பெற்றுவந்து மகனைச் சுடு." என்று கூற, அது கேட்ட சந்திரமதி, "அம் மறையவன் பணம், ஆடை தந்து உதவ மாட்டானே!" எனக் கூறி வருந்துதல்.

'உன்னை யாளும் மறையவற் குற்றிது
சொன்ன காலந் தரின்அந்தத் தூசொடு
பொன்னை வாங்கி அளித்துநின் புத்திரன்
தன்னை நீசுடத் தக்க துனக்கென்றான்' 62

'அரக்கெ னச்சிவப் புற்றவ ழற்கணன்
இரக்க மற்பமும் இல்லவன் இப்பொருள்
தரக்க ருத்திலன் தந்திடிற் காண்பனென்(று)
உரைத்து வல்லி மகனைவைத் தோடினாள்'

— அரிச். புரா. மயான காண்டம் - 63

திட்டமிட்ட கால்பணமுஞ் சீலைமுழ மானதுவும்
கொட்டமிட்ட வேதியர்பால் கோதையரே நீவாங்கி
வந்துசுட வேணும்"என்று மன்னவனுங் கூறிடவே
அந்த உரைகேட்(டு) அரிவையரும் ஏதுரைப்பாள்—
"என்னையா ளும்மறையோன் ஈதுதவப் போறதில்லை
இந்நிலத்தில் ஈந்தால் இனிஅறிவேன்" என்றுசொல்லி,
"ஆதி பராபரையே! அந்தரி!மா நீலகண்டி!
நீதியுத்த மைந்தனுக்கு நீதுணைகாண்;" என்றுசொல்லி,
"ஈசன் விடும்வசனம் இன்னமென்ன வாறு"எனவே
நேசமுடன் எண்ணியந்த நீள்சுடலை விட்டகன்று,
மங்கையருஞ் சென்றனள்காண்; மன்னவனும் அந்நேரம்
தங்கு புகழ்பெருகுந் தன்பாலன் பாலணுகி
அங்கம் பதறி அறவுருகித் தான்வாடிச்
செங்கையினால் புத்திரனைச் சென்றுதொட வேநாணி,
வெண்கரடம் உண்ட விளாவின் கனியெனவே
நண்சடலம் நிற்க நயந்தவுள்ளங் கெட்டுநொந்து,
ஆத்தாக் கவலையுடன் அக்கினியில் காய்மலர்போல்
பூத்த மலர்வதனம் போதமிக வுங்கருகி

---

பாட வேறுபாடு

4431 : 3 ஈதுதரப் 1749

4437 : 2 சென்றாள்காண் 1749

ஒப்புமை : அடி எண். 4437 — 4442. மகனின் உடலை எரிப்பதற்குத் தேவையான பணம், ஆடை ஆகியவற்றை மறையவனிடம் இரந்து பெற்று வருவதற்காகச் சந்திரமதி சுடுகாட்டிலிருந்து சென்றதும், அரிச்சந்திரன் மகனின் உடலைக் கையால் தொட நாணி, வருந்தி நிற்றல்.

"மங்கைகடி தோடிடலும் மைந்தன்முகம் நோக்கி
அங்கைதொட நாணிமனம் அஞ்சிஅயல் நின்றே
கங்கைவள நாடன்இரு கண்கலுழி சிந்த
வெங்கயம் நுகர்ந்தவிள வின்கனியை ஒத்தான்."

—அரிச். புரா. மயான காண்டம் — 64

## மன்னன் புலம்பல்

### சந்தக் கலிவிருத்தம்

குறிப்பு : தனதத்த தனதத்த தனதத்த தனனா

"நெறியுத்த மறைபெத்த நிலையற்கு விலையாய்
முறியிட்டும் உனைவித்த முறைதொட்டு மிகவே
குறியிட்டும் உயிர்விட்ட குறைசெப்பு விளியா
ரறிவுத்த செயமிக்க வருமைப்பொன் மகனே. 120

தனதந்த தனதந்த தனதந்த தனனா

அனம்வந்து நடைகண்டு மருள்மங்கை யுடன்நீ
எனைநம்பி வழிவந்தும் இடர்தங்கும் வகையோ?
மனம்நொந்து மலைவுண்டு மறிகின்ற விதிதான்
இனியெந்த வகையென்றும் உரைஎந்தன் மகனே!" 121

### நடை

4445 "ஆசையுத்த பாலகனே! ஆதித்தன் மேனியனே!
நேசமுத்த குஞ்சரமே! நீடுலக தாட்சணனே!
எம்மோ டிணங்கிவந்தோ யிப்பாடு பட்டிறந்தாய்!
செம்மையுள்ள புத்திரனே! சீருடைய கண்மணியே!

---

பாட வேறுபாடு

விருத்தம் 120. 1 : 1, 2 நெறியுற்ற மறைகெட்டு 1749
4 : 1 ரறிவுற்ற 1749

நடை 4445 : 1 ஆசையுற்ற 1749

ஒப்புமை : அடி எண். 4447. மாண்ட மகனின் உடலை எரிக்கச் சந்திரமதி சுடலை வர, அங்கே சுடலை காத்திருந்த அரிச்சந்திரன் இறந்தது தன் மகனென அறிந்தபின், மகனின் உடலைப் பார்த்துப் புலம்புகையில், "என்னோடும் அன்னையோடும் நாடுநகர் துறந்து வந்தாய்; இன்றோ இப்படி மாண்டு கிடக்கின்றாய்", என வருந்திக் கூறுதல்.

'எந்த மோடுவந் திவ்வணம் பட்டனை'

— அரிச். புரா. மயான காண்டம் - 51.

அந்தணனும் உன்னை அடர்ந்திழுக்கும் அந்நேரம்
சிந்தையிரங் காதநெடுஞ் சீர்கேடன் என்றுசொல்லிப்
புத்தியுட னேயறிந்து பொன்றிவிட்டா யோமகனே!
உத்தமனே நீயும் உறுங்காட்டிற் சென்றணுகி,
இந்தனங்கள் கட்டி இசைந்துவர வும்அரவம்
சொந்தமுட னேகடித்துத் துஞ்ச,ஆ னார்செயலோ?
திக்கரசர் போற்றுமெழில் சிங்கா சனக்கொலுவில்
மைக்கொடியார் ஏந்திவரும் மாணிக்கச் செம்மணியே!
ஆருமத்த காட்டில் அரவத்தால் நீமடியப்
பேருடனே யுன்னைமுதல் பெத்ததா யுஞ்சுமந்து.
துள்ளும் பசாசுநிரை சூழ்சுடலைக் காட்டில்வந்து,
தள்ளுசிறு கொள்ளி தனையடுக்கி யேசுடவும்,
ஐந்துமுக நாதன் அமைத்த படியிதுவோ?
சுந்தரஞ்சே ரும்மழகுஞ் சொல்லுரைக்கும் என்மகனே!
நீளும் புவிதனிலே நீசனுக்குத் தொண்டுபட்டு
வாழுவார் தங்கள் வதைமிகப் பாரன்என்றோர்
மாநாகத் தாலே மடிந்தாய் எனதுயிரே!
தேனார் மொழியனைய செல்விதருங் கற்பகமே!

---

பாட வேறுபாடு

4450 : 1, 2 சிந்தை இரங்காத 1749
4458 : 3 பெற்றதா 1749
4465 : 4 எனதரசே 1749

ஒப்புமை : அடி எண். 4449 — 4451. மாண்ட மகனின் உடலை எரிக்கச் சந்திரமதி சுடலை வர, அங்கே சுடலை காத்திருந்த அரிச்சந்திரன் இறந்தது தன் மகன் என அறிந்தபின், மகனின் உடலைப் பார்த்துப் புலம்புகையில், மகனையும், மனைவி சந்திரமதியையும் அந்தணனிடம் விலைக்கு விற்ற நாளில் நடந்த நிகழ்ச்சியை நினைந்து வருந்திக் கூறுதல்.

'விற்ற நாளில்என் மேனி தழீஇயநிற்
பற்றி யந்தண னீர்த்ததும் பார்த்திருந்
திற்றை நாண்மட் டிரங்காத வெவ்வயின்
உற்ற பாவ மொழித்தனை யோஎன்றான்'

— அரிச். புரா. மயான காண்டம் — 53

மன்னுபுகழ்க் கன்னோசி மாநகரை யாளாமல்
என்னுடனே வந்து இறந்தாயோ என்னுயிரே !
அறிவுடைய கண்ணே! அதிசயமே எந்தவமே!
பொறிஅரவைக் கண்டறிப் போந்துவிழுந் தேதுரைத்தாய்?
அப்பா!'' எனவே அழுதுமன்னன் மெய்யுருகி,
வெப்பமுடன் வாடி மிகவே பலகதறி,
''ஆதியிலே வேதன் அமைத்தபடி அல்லாது
நீதியற வேறுபடி நிற்குமோ?'' என்றரசன்
சிந்தை உடன்தெளிந்து செப்பமுடன் நிற்கலுற்றான்.
அந்தணன்பால் காப்பணமும் ஆடைமுழம் வாங்கஎன்று
ஈமத் துறைவரிசைக்(கு) எய்துமந்த மானனையாள்
தாமெத்த வாடித் தயங்கிவரும் வேளையிலே,
கோசிகனார் ஏவக் கொடும்இயக்கர் மூவர்நண்ணிக்
காசிநகர் ஆளுமதிக் காவலனார் பெத்தெடுத்த
துன்னுமெழில் பாலகனைச் சோரமுடன் கொண்டுவந்து,
உன்னும் உயிர்செகுத்து ஒண்டொடியாள் செல்வழியில்

---

பாட வேறுபாடு

4468 : 3, 4 இறந்தாய் எனதுயிரே 1749
4469 : 4 என் தவமே 1749
4473 : 4 அல்லாமல் 1749
4480 : 1, 2 காசி நகராளுங் 1749
4480 : 4 பெற்றெடுத்த 1749

குறிப்பு: 4477 — 4484. இப் பகுதி அரிச்சந்திர புராணத்திலிருந்து வேறுபடுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

'கிள்ளைமொழி அம்மறுகு கிட்டுவதன் முன்னே
வள்ளையொலி மாடநிறை காசிநகர் மன்னன்
பிள்ளையை எடுத்தயல் பெயர்ந்துயிர்செ குத்தே
கள்ளர்சிலர் நல்லணி கவர்ந்துகொடு போனார்'

— அரிச். புரா. மயான காண்டம் -66

அரிச்சந்திரபுராணத்தில், கோசிகன் ஏவலின்றி இயல்பாகக் கள்வர் சிலர் நகைக்காகக் காசி மன்னன் மகனைக் கொல்வதாக உள்ளதை, அம்மானை, 'கோசிகன் ஏவலால் கொன்றதாகக்' கற்பித்துக் கதைப்போக்கை இன்னும் வலுப்படுத்துகின்றது.

அன்னவர்கள் தான்போட்(டு) அகன்றனர்காண் அம்மானை !

கன்னியரும் அவ்வழிக்கே காதலுடன் ஓடிவந்தாள்;
வந்தவளும் பாலகனை வண்மையுடன் கண்டவுடன்
சிந்தைமிக வேவெருவிச் சென்றுகிட்ட வேயணுகி,
"என்னுடைய பாலகன்தான் இங்குவரக் காரணமென்?
அன்னியர்தம் பிள்ளையிதோ? ஆர்மகனோ?" என்றுசுத்திச்
செர்மையுட னேகுறிப்புஞ் செய்யஅடை யாளமுடன்
தம்மதலை யாமெனவே தையலருந் தான்பார்த்துச்
சங்கையுள்ள பாலகனைத் தாங்கிமிக வேயெடுத்துச்
செங்கை தனிலேந்தித் தேவியரும் ஏதுரைப்பாள்—
"நீத்திருக்கும் மாசுடலை நீணிலத்தில் வைத்தமகன்
ஏத்தமுடன் இங்குவந்த தெந்தவகை? மாயமிதோ?
பூதகணங் கொண்டுவந்து போட்டுவிட்டுப் போயினதோ?
காதலுடன் நாய்நரிகள் கண்டெடுத்துப் போட்டதுவோ?
என்ன வங்கையோ? இதுமாயங் காண்!" எனவே
கன்னியரும் புத்திரனைக் காத்திருக்கும் வேளையிலே,
காசிநகர் ஆளுமதிக் காவலனார் புத்திரனை
நேசமுடன் காணாமல் நீண்டபெரு மன்னர்களும்
வண்மையுள்ள மந்திரிமார் வல்லதலை யாரிகளும்
எண்ணெண் திசைமுழுதும் எண்கோடி பேர்பறந்து.
நாடியதோர் இல்லிடமும் நற்காவும் வாவிகளும்
தேடிமிக வேயலுத்துச் செல்வனையுங் காணாமல்

---

பாட வேறுபாடு :

4486 : 2 வேபதறிச் 1749
4489 : 1, 2 செம்மை யுடன்குறிப்புஞ் 1749
4491 : 3 தாங்கிமெள்ள 1749

ஒப்புமை: அடி எண். 4495. சந்திரமதி, இறந்த மகனின் உடலைச் சுடலையில் விட்டு விட்டு, மறையவனிடம் பணம் பெறச் செல்லுகையில் வழியில் வேறொரு சிறுவனின் உடல் கிடக்கக்கண்டு, தன் மகனின் உடல் என்று மயங்கி, "பூதகணம் மகனின் உடலை இங்கே கொண்டு வந்து போட்டனவோ?" என ஐயுற்று உரைத்தல்.

'எம்மதலை யைக்கணம் எறிந்ததுகொல் ?'

— அரிச். புரா. மயான காண்டம் - 67

வாடி வரும்வழியில் மங்கையையும் மைந்தனையும்
நீடியதோர் காவலர்கள் நேசமுடன் வந்துகண்டார்.

## சந்திரமதி தலையாரிகிட்ட சிக்கினது

## கலிவிருத்தம்

தேடி வந்த செழுந்தலை யாரிகள்
நீடி மங்கை நிலையுறு மாடயில்
ஓடி வந்தழ கொண்ணுதல் பாலனைச்
சாடிக் கொன்றது தானென எண்ணியே. 122

மண்டு மேனியி லேவருஞ் சோரியைக்
கண்டு, கள்ளி இவளெனக் காவலர்
மென்று பல்லைக் கடித்தனர்; மேல்பல
துன்று காகமுஞ் சூழ் அனம் போலவே. 123

## நடை

கண்டவுடன் பார்த்துக் கடியதலை யாரிகள்தான்
ஒண்டொடியாள் மேனி உடல்முழுதுஞ் சோரிகண்டு,
''தெள்ளுதமிழ்க் காவலனார் செம்மல்தனைக் கொன்றதொரு
கள்ளிஇவள்'' என்றுசொல்லிக் கண்டவர்கள் எல்லோரும்
பத்தியத்த காகம் பலகூடித் தானுமொரு
சுத்தியுள்ள அன்னமதைச் சூழ்ந்துகொண்ட வாறெனவே,
அங்கவர்கள் எல்லாம் அரிவையரைச் சூழ்ந்துகொண்டு
செங்கைக் கழியாலுஞ் சீர்வளரிக் கம்பாலும்,
வில்லுக் குதையாலும், மிக்கதடிக் கம்பாலும்,
ஒல்லிச் சினந்தும் உறத்தடித்து வீசிடவே,
அங்கத்தில் அங்கம் அடைந்துமுறி பட்டுலைந்து,
மங்கைதிரு மேனி வடுக்களுற வுந்தடிக்க,
வாய்த்த முதுகுமுதல் வண்ணமணி மேனியெங்கும்
சீத்த முடனடிக்கச் செய்யதொரு மானனையாள்
சித்தமிக வேகலங்கிச் சீராக நொந்துநொந்து,
''உத்தபுகழ் ஈஸ்வரியே! உன்செயல்தான்'' என்றுநின்றாள்.
அந்நேரந் தன்னில் அவர்கள்தனி லேசிலபேர்
உன்னியடிப் போரை ஒருநொடிக்குத் தாளுமென்று.

பத்தியுட னேவிலக்கிப் பாவையரைத் தான்பார்த்து,
"உத்தபடி நீவதைத்த உண்மையென்ன?" சொல்லுமென்றார்.
அந்நேரந் தன்னில் அரியபுகழ்ச் சந்திரமதி,
"இன்னவர்க ளோடே இசைந்தபடி நாமுரைத்தால்
எம்மொழியை மெய்யென்(று) இவர்குறிப்ப தென்றுமில்லை;
செம்மலுட னேநாமுஞ் சென்றிறக்க வேணும்"என்று,
ஆக முடனிருத்தி ஆயிழையும் ஏதுரைப்பாள் —
"வாகுதலை யாரிகளே! வாய்த்தநெடுஞ் சேவகரே!
செல்லனைய பாலகனைச் சென்றுகொன்று போட்டதுநான்;
இல்லையென்று சொன்னால் இனிநீங்கள் ஏன்விடுவீர்?
அல்லவென்று சொல்ல அறியேன்காண்;" என்றுசொல்லி
வல்லி மிகவும் மகிழ்ந்துரைத்தாள் **அம்மானை !**

"கொண்டகள்ளி தானிவள்காண்; கொத்தவன்பால் செல்க"என்றே
மண்டலஞ்சூழ் காவலரும் மண்டுதலை யாரிகளும்,
மாண்டமகன் தன்னைஅந்த மங்கையுட கைக்கீந்து,
பூண்டிறுகச் சேர்த்துப் பொருங்கயத்து னால்கட்டி,
முன்நடத்தி மின்னாள் முதுகுபுறத் தேஇவர்கள்
பன்னிஅடித் தேவிரட்டப் பாவையரும் அஞ்சியஞ்சி,
நாய்கள் பலதொடர நண்ணிவெறித் தேநடக்கும்
தூயசெழு மானெனவே தோகைவெருண் டேகலுற்றாள்.
ஆனபுகழ்க் காசி அரசர்பிரான் அந்நேரம்
மானமுள்ள நீதி மகவிழந்த வாட்டமதாய்,
இந்திரவி யுந்தவழும் ஏகமணி மண்டபத்தில்
மந்திரிமார் சூழ்ந்துநிற்க, மன்னவருஞ் சூழ்ந்துநிற்க,

---

ஒப்புமை: அடி எண்: 4541 — 4544. காசிநகர் அரசனின் மகனைக் கொன்றதாகச் சந்திரமதியைக் காவலர்கள் அரசன் இருக்குமிடத்திற்குப் பிடித்துச் செல்லுதல். நாய்கள் பின் தொடர மான் அஞ்சி நடுங்கிச் செல்வது போலச் சந்திரமதி, வீதியில் காவலர் தொடரச் செல்லுதல்.

'குறித்ததி சினத்தொடு கொதித்தவர் அடிக்கத்
தெறித்தகுரு தித்துளி திசைத்திசையின் மொய்க்கப்
பிறித்திரு கயிற்றிடை பிடித்துவர நாய்மேல்
வெறித்தடர மானென வெருண்டுமுன் நடந்தாள்'.

— அரிச். புரா. மயான காண்டம் — 76

அந்தணருங் காத்துநிற்க, ஆனைபடை சூழ்ந்துநிற்க,
முந்துபல மேளமொடு மூதண்டங் காத்துநிற்க,
வெஞ்சா மரைகளிடும் மெல்லியருங் காத்துநிற்க,
இஞ்சொல்புகழ் மன்னன் இசைமகனைத் தானினைந்து,
சிந்தைநொந்து வாடித் தியக்கமுட னேயிருக்கும்
அந்தநெடும் வேளை அடர்ந்துநடந் தேகிவந்து,
தங்குபுகழ் சேருந் தலையாரி யானவர்கள்
மங்கைதனைக் கொண்டுவந்து, மன்னவனார் முன்னோக்கி,
"ஏத்தமுள்ள கேசரியே! எம்மையா ளும்மரசே!
பூத்தமலர் உந்தனுட புத்திரனைத் தான்வதைத்த
கள்ளிஇந்தப் பொல்லாக் கடுஞ்சூரி தான்!" எனவே,
ஒள்ளியமாய்ச் சொல்லி உகந்துசே வித்துநின்றார்.
மன்னனிடஞ் சென்றவுடன் மாதனைய சந்திரமதி
தன்னிலைமை யோடே தளஞ்சூழக் காத்துநின்றாள்.
தாலம் புகழரசன் தையலரைத் தானோக்கிப்
"பாலகனைக் கீழைவைத்துப் பாவையரே நீதானும்
வந்தவர லாறுதனை வாகாகக் கூறும்" என்றான்.
சந்திரமதி அந்நேரந் தன்கா லினைநோக்கி
மண்டலமெல் லாம்புரக்கும் மாவேந்த னோடுரைப்பாள்—
"எண்டிசைகள் தோறும் இரையெனக்குச் சிக்காமல்,
பேய்போல் அலைந்தேன்; பிணம்போல வுங்கிடந்து.
நாய்போல் உணவருந்தி. நல்நரிபோ லேதுயின்று,
பொறறியெரி யும்வயத்தில் போடஅன்னஞ் சிக்காமல்
இற்றை இரவிலப்பால் ஏத்தஉயிர் கொண்டுதின்ன,
மாய வெறியெடுத்து வந்தேன்காண்; இன்றிரவுன்
கோயிலெய்திப் பாலகனைக் கோலமுட னேஎடுத்து,
வாகும் உயிர்செகுத்து வன்பசிக்குப் போடவென்று,
ஆகமுடன் மெத்த அகமகிழும் அந்நேரம்,
காவ லுடையவர்கள் கண்டுகட்டிக் கொண்டுவந்தார்;
பூபாலா!" என்றுநெடும் பூவையருஞ் சொல்லலுற்றாள்.

---

பா. வே. 4571 : 2 யும்வயற்றில் 1749

4572 : 4 கொண்டுதிங்க 1749

கன்னி யுடநிலையுங் கட்டுரைத்த வாய்மொழியும்
மன்னன்மிக வுங்கேட்டு மங்கையரைத் தான்பார்த்து,
வண்ணமணிச் செங்கமல மங்கையிவள் ஆமெனவும்
நண்ணுமெழில் கற்புடைய நாரியிவள் ஆமெனவும்
சுந்தரஞ்சேர் ஒப்பினையுஞ் சொல்லழகுங் கண்டவுடன்
"எந்தநகர் ஆளும் இறையவனார் தேவியரோ?"
என்றுமன்னன் ஆராய்ந்து எண்ணியெண்ணிச் சிந்தையுத்து
வென்றியுள்ள காவலர்பால் வேல்வேந்தன் கூறலுற்றான்—
"பாலகனைக் கொன்றதிந்தப் பாவையல்ல கண்டீரே!
சீலமுடனேஇவளுஞ் சென்றுகொன்றேன் என்றவகை
மாறியுரை சேவகரும் எல்லதலை யாரிகளும்
மீறிச் சினந்து, மிகவடித்து விட்டதினால்
மாத்தமுத்துச் சிந்தை மனம்வெறுத்துச் சொன்னதுகாண்;
ஏத்தமுள்ள கன்னியிவள் ஏதுமிருங் கொல்லறியாள்;
கொல்லும் உயிரைஎன்று கூறிஆங் காரமுடன்
சொல்லும் வகைக்களவின் சூத்திரமுந் தானறியாள்;
வாழும் உயிரை வதைபுரிந்து தானிருந்தால்
நீளுங் குறிப்பு நிலைவிபரந் தன்னுடனே

---

ஒப்புமை: அடி எண். 4587 — 4592. காசிநகர் அரசன் மகனைத் தான் கொன்றதாகச் சந்திரமதி கூறக்கேட்ட காசிநகர் அரசன் காவலரிடம், "சேவகரும் தலையாரிகளும் இவளை மிகவும் அடித்துத் துன்புறுத்தியதால் மனம் வெறுத்து இவ்வாறு கூறுகின்றாள்; இவள் கொலை செய்திருக்க மாட்டாள்" எனக் கூறுதல்.

'இடர்ப்பல இவட்கிடர் இழைத்தமை நமக்குச்
சுடச்சுட உரைக்குமிவள் சொன்னமொழி என்றான்' 84

அடி எண். 4595 — 4598. தன் மகனைக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப் பட்ட சந்திரமதியைப் பார்த்த காசிநகர் அரசன், "இவள் கொலை செய்ததாகத் தெரியவில்லை; கொலைபுரிந்தவளாயின் இவள் முகத்திலும் கண்ணிலும் கொலைக்குறி தெரியும்; இவள் முகத்திலும் கண்களிலும் அவ்வாறான குறிப்பெதுவும் தோன்றவில்லை." எனக் காவலரிடம் உரைத்தல்.

'உயிர்க்கொலை புரிந்தவர் முகக்குறிஉ ரைக்கும்
கையிற்குறி உரைக்கும்இரு கட்குறிஉ ரைக்கும்'

— அரிச். புரா. மயான காண்டம் — 85

முகத்தில் குறிதெரியும்; முண்டகப்பூங் கைதெரியும்;
செகத்திலிரு கட்குறியுஞ் செப்பமுட னேதெரியும்;"
என்றரசன் சொல்ல இசைகா வலருரைப்பார்—
"நன்றிநடு வீதியிலே, நல்லபெரும் பாதையிலே,
மாவேந்தே உந்தனுட மைந்தன்கத றக்கதறத்
தாமேந்தி ஊட்டி தனைஅரிந்து சோரியுண்டு
மாறா வெறியெடுத்து வாடுகையில் சென்று,கண்டு,
வீறாக நாம்பிடித்து வேந்தனே வந்தம்"என்றார்.
தூய்யபுகழ் வேந்தனிந்தச் சொல்கேட்டுப் பின்னொருகால்
"தையலே! என்னுடன்பொய் சாத்தாமல் கூறும்"என்றான்.
"அன்ன தருவே! அறிவுடைய கோளரியே!
உன்னுடனே நானும் உரைமறுத்துச் சொல்லுவனோ?
வேறுவகை இல்லை விபரமுடன் உள்ளபடி
வீறுங் குருதியுடன் மிக்க அடை யாளமுடன்
என்மேனி மீதிருக்க இக்கலைகளெல் லாம்இருக்க
நன்மையுள்ள காவலரும் நாட்டமுடன் கண்டிருக்கக்
கொண்டதில்லை என்றினிநான் கூறினே னாமாகில்
மண்டலத்தில் யாவருக்கும் வன்மையுடன் ஏறாது;
அய்யமில்லை காணரசே! ஆகமுள்ள பாலனையும்
வையகத்தில் கொன்றதுநான்; மத்தொருவ ரல்ல"என்றாள்.
கன்னி யிவையுரைக்கக் காசிநகர் மன்னவனார்
தன்னுளத்துக் கேறாமல் தானவனும் ஏதுரைப்பான்—
"தக்கபுகழ் சேருமிந்தத் தையலாள் கொன்றதென்றே
மிக்கதலை யாரிகள்சொல் மெய்யெனவும் நாம்குறித்து
நீண்டகுழல் மங்கையரை நீளுலகில் லேவதைத்தால்
மாண்டமக னுக்குயிரும் வாறதுகள் என்றுமில்லை;
பாவமிது பாவம்"என்று பார்வேந்தன் அந்நேரம்
"காவலரே! இப்புதுமை கண்டறியும்" என்றுரைத்தான்.
"வேந்தனே! நாங்கள் விழிகுளிரக் கண்டுவந்து
சேர்ந்த படியுரைக்கச் செய்யிழையும் தானுரைக்க,

---

பா' வே, 4606 : 3, 4 சாற்றாமற் சொல்லுமென்றான் 1749
4616 : 3 மற்றொருவ 1749
4618 : 3 தான்மறுத்தும் 1749

மாதுகொன்ற தில்லையென்று வையகத்தில் விட்டுவிட்டால்
ஓதுமனை தோறும் ஒருகுழவி இல்லாமல்
வந்துவந்து தானெடுத்து மாவதைகள் செய்திடுவார்;
சந்தேக மில்லை''என்று தானுரைத்தார் **அம்மானை!**

அந்நேரம் மன்னன் அவர்மனதுக் கேத்தவராய்த்
துன்னுங் குணமுடைய தூய்யவரைத் தானழைத்து,
''வாருங்காண் நம்முடைய மைந்தன் கிடந்திடத்தே
பாரும்;மங்கை காலடியோ? பண்புமெவர் காலடியோ?
ஆர்அடியோ என்று அறிந்துவந்து கூறும்''என்றான்.
சார்புடையார் தையலடி தானளந்து சென்றிடுமுன்,
வல்லாளன் கோசிகனும் வாகுபெற முன்னோடிச்
சல்லாப மாகத் தடங்கள்பல உள்ளதெல்லாம்
ஓடி அழித்தான் ஒருநொடியில்; **அம்மானை!**

நீடியதோர் காவலரும் நேர்ந்தவடி பார்க்கலுற்றார்;
காதம் ஒருவழிக்குக் கன்னிஅடி யல்லாமல்
ஏதும்அடி வேறொன்றும் இல்லையென்று கண்டுவந்து,
''ஐந்தருவே! நாங்களடி ஆராய்ந்து தான்பார்த்து
வந்தோங்காண்; இந்த மடமான் அடியொழிய
வேத்தடிகள் இல்லை''யென்று வேந்தனுட னேயுரைத்தார்.
வேத்தடிகள் இல்லையென்ற வீரியத்தைக் கேட்டரசன்,
''இந்தக் கொடுமைதனக்(கு) ஏதுசெய்வேன் ஈஸ்வரியே!
பைந்தொடியைப் பார்த்தால் பழுதுவே றேதுமில்லை;
பாலனுயி ரைச்செகுத்த பாவியென்றே சொல்லுகிறார்;
காலடியைப் பார்த்துவந்தோர் கன்னிஅடி என்றுசொன்னார்;
என்னவகை மாயமிதோ? என்மனதுக் கேற்குதில்லை;
கன்னிபழு தில்லாத காரிகைகாண்; உள்ளபடி

---

பாட வேறுபாடு

*4631 : 4 கேற்றவராய்த் 1749*
*4641 : 4 யல்லாது 1749*
*4645, 4646 : 1 வேற்றடிகள் 1749*
*4651 : 4 கேற்கவில்லை 1574 1749*

இவ்வா றுடையவளை இங்குநாம் வெட்டிவைத்தால்
எவ்வாறு தோசம்நமக்(கு) எய்துமோ என்றறியேன்;
முன்னைவிதி தான்இவள்மேல் மூடியதோ? சாடியதோ?
அன்னையரே!'' என்றுதிரி யம்பிகையைப் போற்றி,மன்னன்,
''வாழுமிந்த நாட்டில் மடமானுக் குத்தவர்கள்
நீளும்படி உண்டெனவே நேர்பார்த்து வாரும்'' என்றும்
''நங்கையரைத் தானும் நடத்தியே செல்லும்'' என்றும்
துங்கமுனைச் சேவுகர்பால் சொல்வேந்தன் விட்டவுடன்,
திக்கிலுள்ள வீதி திசையும் பலதெருவும்
''மைக்கொடியார்க் குத்த மனிதருண்டோ? காணும்'' என்று,
காவலருந் தான்அலைந்து, காணோம் எனநடந்து,
பூபாலன் கிட்டவந்து போந்நுரைத்தார் அம்மானை!

உல்லாச நீதியுடன் உத்திலங்கு வாழ்வுபெறும்
வல்லாளன் காசிநகர் மாவேந்தன் அந்நேரம்
வள்ளலரிச் சந்திரற்கும் மங்கையர்க்கும் மைந்தனுக்கும்
தெள்ளுமதி மந்திரிக்குஞ் சீரகனுக வேணுமென்று,
பண்டைவிதி முத்திப் படர்ந்திருந்த சீராலே
ஒண்டொடியை வெட்ட உளமீதில் எண்ணலுற்றான்;
எண்ணுகின்ற மன்னன் இசைமறையோ ரைப்பார்த்து,
''நன்னுதலுக் கெந்த நடக்கையிட வேணும்?'' என்றான்.

---

பா. வே 4654 : 4 நானறியேன் 1749
4655 : 1 முன்னைவினை 1574
4657 : 4 குற்றவர்கள் 1574 1749
4663 : 2 தான்நடந்து 1574

ஒப்புமை : அடி எண். 4667 — 4670. பண்டைவிதி முற்றி வந்ததன் விளைவால், காசிநகர் அரசன், பாலனைக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப் பட்ட சந்திரமதிக்குக் கொலைத் தண்டனை விதிக்க எண்ணுதல்.

'முன்னைவிதி யாலும்வினை முற்றுமத னாலும்
என்னைஇவள் தன்னை னவிடல் என்பதுநி னைந்தே
கன்னல்செறி காசிபதி கன்னபுரி மன்னன்
மின்னைவதை செய்வதுவி ரும்பியொரு மித்தான்'

— அரிச். புரா. மயான காண்டம் - 95

அப்போ கவுசிகனும் ஆதிமறை வேதியனாய்ச்
செப்பமுடன் வந்துநின்று, "சீர்வேந்தா! கேளுமிந்தக்
கன்னிதனைக் கட்டுங் கயற்றுடனே கொண்டுசென்று
உன்னிச் சிரசை உகந்துவெட்ட வேணும்" என்றான்.
வேதன் மொழிகேட்டு வேந்தர்பிரான் அந்நேரம்
மாதுதனை வெட்டிவிட வாள்வீர வாகுதன்னை
ஓடி அழையுமென்றே உத்தாள்கள் தன்னைவிட்டான்.
நீடியதோர் சேரிநண்ணி நீண்டதொரு காவலர்கள்,
"வேந்தனரு ளிப்பாடு வீரவா(கு)" என்றுரைத்தார்.
ஆய்ந்தமொழி கேட்டவுடன் அவ்வீர வாகுவனும்
வாளெடுத்துக் கச்சைகட்டி வாகுசமு தாடுடனே,
நீளமுட னேஇலங்கும் நீண்டவுறு மாலைகட்டிக்
கார்மேனி எங்குங் கதம்பப் பொடிமணக்கச்
சீரான அங்கையிலே திண்கிலுக்குத் தண்டேந்தி
மத்தமதங் கொண்ட மதகளிறு போலெழுந்து
கொத்தவனார் வீற்றிருக்கும் கோவிற்கால் மண்டபத்தில்
ஆசார மேடைக் கதியபல தூரநின்று,
பேசுமணி வாய்புதைத்துப் பெம்மானைத் தான்நோக்கித்
"தேசமெல்லாம் போற்றும் திகழ்வேந்தே! இப்பொழுது
ஆசமுட னென்னை அழைத்தபணி சொல்லும்" என்றான்.

---

பாட வேறுபாடு

*4679 : 1, 2 ஓடியழை யும்மெனவே 1574 1749*
*4684 : 3 நீலவுரு 1749*
*4688 : 2 தாமிருக்குங் 1749*

ஒப்புமை : அடி எண். 4689, 4690. புலையன் வீரவாகுவைக் காசிநகர் அரசன் ஆளனுப்பி அழைத்ததும், வீரவாகு, மன்னன் வீற்றிருக்கும் இடத்திலிருந்து தொலைவான இடத்தில் வந்து வாய்புதைத்து நிற்றல்.

'தூரநின்று வாய்புதைத்து'

—அரிச். புரா. மயான காண்டம் — 102

## காசிராசன் சந்திரமதியை வெட்டக்கொடுத்தல்

"வாகுபுகழ் சேர்வீர வாகுவே! நீகேளாய்;
கோகிலத்தை யொத்தமொழிக் கோதையிந்த மாதுநல்லாள்
துட்டியாம்; பாலகனின் துய்யஉயிர் கொண்டனளாம்;
திட்டியா (லே)இவர்கள் சென்றுகண்டோம் என்றுசொல்லிக்
கூட்டிவந்தார்; நீயுமிந்தக் கட்டோடே கொண்டுசென்று,
வெட்டிவையும்!" என்றுசொல்லி வேந்தன் கொடுத்தனன்காண்.
மன்னன் உரைத்தவுடன் வாள்வீர வாகுவந்து
அன்ன நடைமயிலை ஆரணங்கை ஓவியத்தை
மெல்ல நடவுமென வீரமுடன் கொண்டுவந்து,
சொல்லுந் தனக்கடிமைத் தொண்டான காவலனை,
"வாடா! அடியவனே! வல்லாளா!" என்றுரைத்து
வீ[illegible]ரு வேயழைத்த வீரவா கின்னெதிரே
வந்தஅரிச் சந்திரனும் வா[illegible]பெற நிற்கலுற்றான்.
சிந்தை களிகூர்ந்து சீர்வீர வாகுரைப்பான்—
"சுந்தரஞ்சேர் காசிநகர் சொல்வேந்தன் பெத்தெடுத்த
மைந்தனுயிர் தன்னை வதைபுரிந்த கள்ளிஇவள்;
ஓராமல் நீகொடுபோய் உத்தகளந் தன்னில்வைத்து,
வீரமுள்ள வாளாலே வெட்டும்"என்று தானுரைத்துக்

---

பா. வே. 4699 : 4 வாகுவனும் 1749
4701 : 2 நடவுமென்று 1749
4703 : 4 என்றுசொல்லி 1749
4706 : 2 களிகூரச் 1749
4708 : 4 கன்னி இவள் 1749

ஒப்புமை: அடி எண். 4693-4698. காசிநகர் வேந்தன், வீரவாகுவை அழைத்து அவனிடம், சந்திரமதியை ஒப்படைத்து, "இவள், மகனைக் கொன்றதாகவும் அதனைத் தாங்கள் கண்களாற் பார்த்தோம் என்றும் சிலர் இவளைப் பிடித்துக் கட்டி வந்தனர்; நீ இவளைக்கொண்டு சென்று வெட்டுவித்திடு" எனல்.

'துட்டி யாமிவள் குழவியைத் துணித்தனள் என்னாத்
திட்டி யாற்கண்டேம் எனச்சிலர் அரிவையைப் பிடித்துக்
கட்டி வந்தனர் கட்டொடுங் கொண்டுபோய்க் களத்தில்
வெட்டு வித்திடென் றீந்தனன் காசியர் வேந்தன்'.

— அரிச். புரா. மயான காண்டம்-103

கட்டியகட் டோடே இளங் கன்னியரை யுங்கொடுத்துத்
திட்டமுள்ள வாளுஞ் சிறப்பாக வேகொடுத்தான்.
வாளையுந்தன் மங்கையையும் மன்னவனார் தான்வாங்கிக்
கோளையற வேநடத்திக் கொண்டுவந்தான் அம்மானை!

கொண்டுவரும் வேளையிலே கோதைஎனும் சந்திரமதி
கண்டு கயறுபற்றும் காவலனைக் கேள்வனென்றே
உள்ளந் தனிலறிந்து உச்சா டனமிகுந்து,
"வள்ளலுட கைவாள் மணிக்கழுத்தி லேபடவும்
பண்டுநான் செய்த பலன்கிடைத்து தல்லாது
மண்டலத்தில் ஆர்க்கும் வருமோ?" எனமகிழ்ந்து,
ஓசைக் கிளிமொழியாள் உள்ளமெல்லாம் அன்புமிகுந்(து)
ஆசைக் கொழுநனுடன் ஆயிழையும் ஏதுரைப்பாள்—
"மன்னர்தொழு மன்னா! மருவலர்தம் போரேறே!
உன்னும் பதிபொன் உடைமைபடை தான்இழந்தும்,
ஆரணியம் நண்ணி அடர்ந்துமுறி பட்டுலைந்தும்,
காரணமாய்ப் பாலகனைக் காசினியி லேயிழந்தும்
பிள்ளைகொன்று சோரியுண்ட பேயரக்கி நீலிஎன்றும்
கள்ளியென்றும் பேரெடுத்துக் கட்டுவெட்டும் வந்ததுகாண்;
இத்தனையும் ஈசன் இசைத்தபடி அல்லாமல்
வித்தகனே வேறு விதியுண்டோ மேதினியில்?

---

ஒப்புமை: அடி எண்: 4711 — 4714. வீரவாகு தன்னிடம் விலைப்பட்ட அரிச்சந்திரனை அழைத்து, "இவள் காசிநகர் வேந்தன் மகனைக் கொன்ற கொலைகாரி. இவளைக் கொலைக்களத்திற்குக் கொண்டுசென்று கொன்றுவிடு" என்று சொல்லிச் சந்திரமதியையும் தன் வாளையும் தருதலும், சந்திரமதியையும் வாளையும் அரிச்சந்திரன் பெறுதலும்.

'... ... ... ... தோகையைக் கொடுத்து
வள்ளி யோன்கையில் தன்கையின் வாளையும் கொடுத்தான்' 105

'வாளை வாங்கித்தன் மாதையும்
வாங்கினன் வந்தான்.'

— அரிச். புரா. மயான காண்டம் - 106

இந்தச் சடலம் எலும்புசதை பல்நரம்பு
பொருந்தும் இறைச்சி முடிந்திருக்கும் துட்பாண்டம்;
நாலுமுழத் துண்டம் நவமான வன்பிறல்
ஏலம் புழுக்கூ(டு) இதுவெகுநாள் நில்லாது;
தங்கள் நிலைமைகளும் தன்புகழுந் தன்கீர்த்தி
எங்குமழி யாதிருக்குங் காண எனநாளும்
நெஞ்சகத்தில் வேறு நினையாமல் எண்ணாமல்,
வஞ்சமுடன் எந்தனுக்கு வாட்டமுற்று நில்லாமல்,
காசி நகராளுங் காவலனார் சொல்படியே
வாசிபெருஞ் சீர்வீர வாகுமொழி தப்பாமல்
வெட்டுமென்ற சொல்படியே வெட்டுவதே யல்லாமல்
இட்டமுடன் வேறு,மன்னா! சிந்தையிலும் எண்ணுவரோ?"
என்றுசொல்லி மின்னாள் இயம்ப,மன்னன் தான்கேட்டு
ஒன்றும்உரை யாமல் உருகிநெடும் வீதிசென்றான்.
சென்றுவரும் போது செழுங்காசி நாட்டகத்தார்
துன்றுகுழல் சந்திரமதித் தோகையைப்பார்த்(து) ஏதுரைப்பார்-

கலிவிருத்தம்

"ஓதும் அன்ன நடையுறும் உத்தம
மாது காணும்; மயில்எழிற் சாய்கையாள்;
சூது மாதனத் தோகையின் னாள்தனக்(கு)
ஏது கேடுவந்(து) எய்த(து)"என்(று) ஏங்குவார். 124

"எந்த நாட்டில் இருந்திடும் மங்கையோ ?
எந்த மன்னன் இசைபெருந் தேவியோ ?
எந்த வண்ணம்இந் நாட்டில்வந் தெய்தியோ
இந்த வண்ணம் இழுத்து(து);"என் றேங்குவார். 125

---

பாட வேறுபாடு

4731 : 3 எலும்புதசை 1749
4735 : 2 நிலைமையுடன் 1749
4739 : 3 காவலவன் 1749
4741 : 4 யல்லாது 1749

## நடை

காரார் குழலழகுங் கண்ணழகும் மூக்கழகும்,
சீரார் முகத்தழகுஞ் செங்கமலக் கையழகும்,
இந்து நுதலழகும், ஏத்தகனி வாயழகும்,
சிந்தையுற நோக்கிச் சிறப்பாகக் கண்டவர்தான்
"துட்டமுத்த கள்ளியென்றும் சொல்லவுந்தான் நாஎழுமோ?
கட்டவுந்தான் கைஎழுமோ? கடிந்துசொல்ல வாய்எழுமோ?
வெட்டெனவுஞ் சொல்வருமோ? விதியோ? விதியிதுவோ?
மட்டவிழுங் கோதைபங்கா! மாயமிதோ?" என்றிடுவார்.
"இம்மாதும் எவ்வூரின் ராசனுட மங்கையரோ?
அம்மாஇவ் வூரில் அறியாமல் எய்திவந்தோ
இப்பாட்டுக் காளாய் இவளானாள்" என்றுசொல்லி
வெப்ப முடனழுது மெய்கலங்கி வீழ்வார்கள்.
"சுந்தரஞ்சே ரும்வடிவுந் தோகைமயில் சாய்கையுடன்
விந்தைப் பெருநடையும் மின்னுமிடை யும்முடைய
தையலருக் கிந்தவினை தாரணியி லேவரவும்
வெய்யவனே எய்தும் வினையே(து)"என் றேயழுவார்.
செப்பனைய பூண்முலையுஞ் சிங்கார வாள்விழியும்
உற்பலம்போல் மேனி உடலுருவுங் கண்டு, மின்னார்
நவ்விக்(கு) இரங்கி, நடுநடுங்கிக் கைநெரித்து,
"இவ்வா(று) இவட்குவினை எய்துமோ?" என்றழுவார்.
"காவலவன் புத்திரனைக் காதலுட னேஎடுத்து
ஏவர் கொலைசெய்(து) இவள்தலையில் வைத்தாரோ?

---

பாட வேறுபாடு

4752 : 4 நாஎழுமோ 1749
4762 : 3 விதமே(து) என் 1749
4763 : 2 பூமுலையுஞ் 1749
4765 : 4 கைநெரித்திட்(டு) 1749

இப்பாவை பேதை; இவள்கொலைகள் செய்தறியாள்;
எப்பாவ தோசம் இவள்தலைக்கு வந்ததுகாண்!
பெண்பாவி ஆசையினால் பேதைமதி தன்னாலே
கண்பாரா திப்பதியில் கண்டிறக்க வந்துவிட்டாள்''
என்றுசொல்லி ஏங்கி இரங்கியழு வார்சிலபேர்.
மன்றுதொறு வீதி வருமாதர் ஓடிவந்து,
''கூத்துனைச் கொல்லுங் கொடிய விழிமருட்டும்
சூத்திரங்கள் தான்மிகுத்த துய்யநெடும் பாவியிவள்:
அய்யோ!நம் மாதி அரசனுட புத்திரனை
வெய்யசின மாயெடுத்து மீறுங் கொலைபுரிந்த
பாவியிவள்'' என்று பகர்ந்துவரு வார்சிலபேர்;
''தாவிவிளை யாடும் தனயன் றனக்கிவள்தான்
பண்டுபழி காரியெனப் பாருலகில் வந்தாளோ ?
தண்டி சுராவெனவே தான்மயங்கு வார்சிலர்தாம்.
''நெஞ்சிரக்கம் இல்லாமல் நேரனைய பாலகனை
வஞ்சமுறக் கொன்றதொரு வல்லரக்கி காணும்''என்பார்.
''சுத்திலுள்ளோர் காணாமல் சொல் வேந்தன் கோவிலிலே
எத்துடனே தாளேகி ஏந்தல் தனையெடுத்துக்
கொன்று கொலைபுரிந்த கோதையிந்த வம்பி!''என்றும்
மென்றுபல்லை யுங்கடித்து வெஞ்சினங்கூ றுஞ்சிலர்தான்
''அம்மா! இவளரகசி யானதுணி வுள்ளகள்ளி;
செம்மல் தனைப்பார்த்துத் தின்றிடுவாள்'' என்றுசொல்லி
ஒக்கலையில் பிள்ளை ஒளித்துமொளித் தேவிலகிப்
பக்கங்கள் தோறும் பரந்துவரு வார்சிலர்தான்;

---

பா. வே. 4771 : 3, 4 பேதை மதியாலே 1749
4788 : 4 றுஞ்சிலர்தாம் 1749
4790 : 2 தனைப்பறித்துத் 1574 1749

ஒப்புமை : அடி எண். 4769, 4770. சந்திரமதியைக் கொலைக்களத்திற்கு அரிச்சந்திரன் அழைத்து வருகையில், வழியில் நின்றோரில் சிலர், ''மன்னன் மகனைக் கொன்று அப்பழியை இவள் தலையில் வைத்தது யாரோ?'' என்று கூறுதல்.

'... ... யார்கொன் றதோதெய் வமே
இப்பாவி தன்தலையில் வைத்தாய்'

— அரிச். புரா. மயான காண்டம் 116

"பூதலத்தை யாளும் புரவலனார் இப்பொழுது
சேதி யறியச் சிறைமாதைப் போட்டுவைத்து,
நீண்ட வெளமை நிலைமையுடன் பாராமல்
கொண்டுவெட்ட வேதுணிந்த கோபம்வெகு பாவம்"என்பார்.
"சீராய்ந்த மாதுடைய சேதிகண்டு வெட்டிடவும்
ஆராய்ந்து பாரா(த) அரசனுக்குக் கேடுவரும்"
என்றுசொல்லி மெத்த இரங்கிஅழு தேவிழுந்து,
மன்றில் கிடந்து,நொந்து, வாடியழு வார்சிலர்தாம்.
மத்துஞ் சிலதோகை மாதுநல்லா ரும்பார்த்து,
உத்தநிறை சேர்ந்திலங்கும் ஒண்ணுதலாய் இந்தமின்னாள்
அற்ப நடையும் அனநடையுஞ் சித்திரமும்
கற்பில் அருந்ததிகாண் காரிகையாள் தன்னுடைய
பொற்பொளிரும் மேனியுடன் பூரணசந் திரமுகமும்
பற்பசர ணத்தழகும் பாருலகி லேபார்த்துக்

---

பாட வேறுபாடு

4796 : 3 கோலமிகு 1749
4801 : 1 மற்றுஞ் 1749
4802 : 1 உற்றநிரை 1749
4804 : 3 காரிழையாள் 1749

ஒப்புமை: அடி எண்: 4793 — 4796. சந்திரமதியைக் கொலைக்களத்திற்கு அரிச்சந்திரன் அழைத்து வருகையில், வழியில் நின்றோரில் சிலர், "இவளைச் சிறையில் வைத்திருந்து இவள் மன்னன் மகனைக் கொன்றது உண்மையா ? என ஆராயாமல், இவ்வாறு கொல்ல அழைத்துச் செல்லுதல் பாவம்" என உரைத்தல்.

'... ... ... இவள்கொன் றவா(று)
இல்லாத போதிவளை வறிதேவ தைத்தபழி
யார்பால தென்று பகர்வார்
கொல்லாது வன்சிறையில் வைத்தே விளங்கினிவள்
கொலைதான் வதைத்திடு தலாம்
அல்லாது விட்டிடலும் அறமாகும் என்னஅவர்
அவரோ(டு) உரைத்துழ லுவார்.'

— அரிச். புரா. மயான காண்டம் - 119

கண்டால் கலிதீரும்; காசினியில் செல்வமெய்தும்;
உண்டாகுங் கற்பும் உகந்தநிறை யுங்குணமும்;"
என்றென்று பேசி இசைந்துமிக ஓடிவந்து
நன்றிபெருஞ் சந்திரமதி நன்முகத்தைப் பார்த்திடுவார்.
மறுத்துஞ் சிலதோகை மங்கையர்கள் ஓடிவந்து,
"உறுத்துங் கயத்துவடம் உன்கை நெகிழாதே
பெலத்துப் பிடித்துநட; பேர்ச்சுடலைக் காவலனே!
சிலத்தைநுனி ஏக்கதியஞ் சீருமுண்டு காணும்" என்று
சொல்லிப் பலவுரைக்குந் தோகையர்கள் தான்சிலபேர்;
"செல்விதனைக் கட்டுஞ் சிறந்தவடங் கொண்டேகும்
நல்ல புலையன் நளினமுக மும்விழியும்,
பல்லழகும், மூக்கும், பரந்தநெற்றிச் சீரழகும்,
வெற்றியணி கும்புயமும், மிக்கவுறி வும்மொயிலும்
பத்தியுள்ளார்க் கன்புதவும் பச்சைநெடு மாலவனோ?
கொச்சைக் குறத்திதெய்வ குஞ்சரியங் குத்தமனோ?
அச்சமுறும் பாணத்(து) அனங்கனோ? இந்திரனோ?"
என்பார்; மிகவும் இசைந்துநின்று பார்த்திடுவார்.
அன்பாக வஞ்சிறிது ஆயிழைமார் ஏதுரைப்பார்—
"மைக்கொடியாள் கூட மகனையுந்தா னேநடத்தி
விக்கிறோம் என்றுவந்த வீரியன்காண்" என்றுரைப்பார்.
"விக்கிறோம் என்றுவந்த வீரியனே யாமாகில்
தக்க மடந்தையரைத் தான்கடத்த மாட்டானோ?

---

பா. வே. 4815 : 3 தோகையருந் 1749
4825 : 3, 4 மகனையுந் தானடத்தி 1749
4826 : 2 என்றுரைத்த 1749

ஒப்புமை: அடி எண். 4827, 4828. சந்திரமதியைக் கொலைக்களத்திற்கு அரிச்சந்திரன் அழைத்துச் செல்கையில், வழியில் நின்ற பெண்கள் சிலர் "முன்பு இவளை விலை கூறிவிற்றவன் இவன் என்றால் இவளை விட்டு விடக்கூடும். இதுவரை விட்டுவிடாததால் இவளை முன்பு விற்றவன் இவன் அல்லன்" என்றும், சிலர் "இவன்தான்" என்றும் கூறுதல்.

'விலைகூறி விற்றவனும் இவனாகில் விட்டிடுவன்
விடவீர் எனத்தொடருவார்'
— அரிச். புரா. மயான காண்டம் - 117

அங்கவனும் அல்ல''என்பார்; ''ஆம்''என்பார்; ''இல்லை''என்பார்.
''துங்கமுறும் வல்லவனே! சொல்சுடலைக் காவலனே!
வேந்தனுட பாலகனை வீறழித்த மங்கையரைப்
போந்திரண்டு துண்டாய்ப் பொறிவாளால் வீசும்''என்பார்.
''தீரவிசா ரித்துமிந்தச் செய்யிழையை வெட்டாமல்
பாரப் பழிசுமக்கும் பார்வேந்தன் நாடுதனில்
வாழுவது நீதியல்ல; வாய்த்தநலங் கெட்டுவிடும்;
நீளும் புவியழியும்; நீதி இது;'' என்றுசொல்வார்.
இப்படிக்கு நாட்டகத்தார் ஏந்திழையை மன்னவனைச்
செப்பமுடன் கண்டுரைக்கச் செய்யவரிச் சந்திரனும்
மாதுதனைக் கட்டும் மணிக்கயறு தன்னுடனே
ஓதும் வெளிப்புறத்தில் உண்மையுடன் வந்தனர்காண்.
அந்நேரந் தன்னில் அரியபுகழ் மந்திரிதான்
மன்னனையும் மங்கையையும் வந்துகண்டு நொந்துருகி,
இந்நாளில் ஈசனருள் எய்துமிவர்க்(கு) என்றறிந்து,
துன்னும் புகழமைச்சன் தூரநடந் தேகிவரத்,
துள்ளுங் கவந்தம் துடிக்குஞ்சுடு காட்டருகில்
வள்ளலரிச் சந்திரனும் மங்கையரைக் கொண்டுவந்தான்.
அக்களத்தில் கோசிகனும் அன்பாக ஓடிவந்து,
தக்கபுகழ் வேந்தனுடன் தானுரைப்பான் அம்மானை!

### கோசிகன் மீட்கிறேன் என்றது

''மன்னுபுகழ் அய்யோத்தி மன்னனரிச் சந்திரனே!
என்னுடைய வார்த்தை இயம்பக்கேள் கேசரியே!
உந்தன்மனை யாள்தன் உயிர்மீட்பேன் வெட்டாமல்;
மைந்தன் உயிரும் வரவழைத்து நான்கொடுப்பேன்;
அடிமைப் படும்முறியை யான்வாங்கி யேகிழித்து
நெடிய பதிதனக்கு நேசமுடன் ஏகவைப்பேன்;
எந்தன்மக ளான இருவரையுஞ் சேரும்;அல்லால்
தந்த நகர்எனக்குத் தந்ததில்லை என்றுசொல்லும்;

பாட வேறுபாடு

4837 : 1, 2 இப்படிஅந் நாட்டகத்தோர் 1749

பூபாலா!'' என்று புனிதமுனி கேட்டிடவே,
''கோபாலா!'' என்றுசொல்லிக் கொத்தவனும் ஏதுரைப்பான்—
''தொண்ணூறத் தறுவர் தொகுநிலைமை கண்டுதள்ளிப்
பண்ணூறத்தும் ஈசன் பதமறிந்து கொண்டாடி,
ஏவருக்கும் மேலாய் இருக்குந் தவமுனியே!
தேவருக்குந் தேவே! தெரியாதோ எந்தனுள்ளம்?
மண்ணாசைக் காக மகிழ்ந்துமதி மங்குவனோ?
பெண்ணாசைக் காகப் பிழைகேடு சூடுவனோ?
ஆடகத்துக் காக அருநரகில் எய்துவனோ?
சூடகத்தோர் பாண்டத் துடக்குக்(கு) உருகுவனோ?
வேண்டாம்;இவ் வாறு விளம்புவதை விட்டுவிடும்;
தாண்டவங்க ளாடுஞ் சதாசிவனார் தாமறியச்
சொல்லேன் மறுவசனம்; துய்யபுகழ் மாதவனே!
எல்லாம் இழந்தேன் இனிஉயிருக் கேங்குவனோ?
நில்லாதீர்;'' என்று நெடுங்கா வலன்உரைத்தான்.
வல்லமுனி வன்கேட்டு மன்னன் செயம்எனவே
எண்ணிக் கவுசிகனும் எய்துதற்கு முன்பாக
விண்ணில் புரந்தரனும் வேதவசிட் டர்முனியும்
எண்ணரிய தேவருடன் எல்லோரும் தானெழுந்து,
நண்ணிமிகு சோதனையின் நாள்முகிவென் றேயறிந்து,
பார்த்திருந்தார் கண்டார் பகர்கோசி கன்மொழியும்,
ஏத்தமுள்ள மன்னன் இசைவுரைத்த காரியமும்;
உள்ளத் திருத்தி உகந்திருந்தார் **அம்மானை!**

எள்ளிளம்பூ நாசி இலங்குசந்திர மாமதியைக்
கட்டவிழ்த்து வேந்தன், ''கனிந்துகிழக் கேமுகமாய்த்
திட்ட முடனே சிறந்திருங்காண்'' என்றுரைத்தான்.
இவ்வாறு தன்னை இயலரசன் கூறிடவே
ஒவ்வுங் கதிரோன் உகமையுட னேயறிந்து,

---

பாட வேறுபாடு

*4858 : 3* கொற்றவனும் *1749*
*4864 : 3* பிழைகேட்டைச் *1749*
*4869 ; 3* துய்யதொரு *1749*
*4875 : 1* எண்ணிறந்த *1749*

தேட்டமுள்ள மன்னவனைச் சேர்ந்தகொடு மையிருளும்,
நாட்டில் பரந்திருந்த நல்லதொரு வல்லிருளும்,
ஏகக், கதிர்பரப்பி இப்புவிவா னம்புகழத்
தாகமுள்ள மன்னன் தவம்பெறவும் வந்துதித்தான்.
கிழக்குமுக மாயிருந்த கிள்ளைமொழி மங்கைநல்லாள்
வழக்கமுடன் கைகுவித்து மார்த்தாண் டனைத்தொழுது,
ஈசன் தனைத்தொழுது ஈஸ்வரியை நெஞ்சில்வைத்துப்
பாச மறநெடிய பச்சைமா லைப்பணிந்து,
தந்தி முகனைச் சகோதரவே லாயுதனைச்
சிந்தை யுறவே சிறப்பாக வுந்தொழுது.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

"கன்னோசி வள்ள லுடசெம்ம லென்றும்
கனிவுத்த நீதி வளமை
மன்னோசை தங்கு மகனாசை கொண்டு
வருநாரி என்ப ததுபோய்
முன்னோது காசி மறையோன கத்தில்
முனைதொண்டி வம்பி எனவே
இந்நாளி சைத்தும் எனைவெட்ட வேந்தன்
இறையோனை விட்ட பரனே. 126

மூதான வண்ட மனலவாரி மன்றில்
முளைசீவ னுக்கும் இதமாம்
மாதாசு சுந்த கவுமாரி பங்கில்
வழுவாது றைந்து வளர்சீர்
வேதாக மங்க ளநுதேட எங்கும்
விரிவாயி ருந்த விசுவ
நாதாவெ னக்குன் னருளேபு ரிந்துன்
நளினப்ப தத்தை யருள்வாய்." 127

---

பாட வேறுபாடு :

4891 : 2 தனைவழுத்தி 1749
4894 ; 4 வேதொழுது 1749

## நடை

"வேதப் பொருளே விசுவசங்க ரா!பரனே!
நாதப் பொருளே நமோநமசி வாயநம!
இன்றிறக்கும் நாயேன் இனிமேல் பிறந்தாலும்
வென்றிபெறுங் கன்னோசி வேந்தனுட புத்திரியாய்,
என்தலைவன் தானே எனக்குக் கொழுநனுமாய்ப்
பொன்பயிலும் எந்தன் புதல்வன் புதல்வனுமாய்,
மந்திரிஎன் மந்திரியாய் வதிட்டர்குரு தேசிகனாய்
வந்திடவே வேணும் மகாதேவா!" என்றுசொல்லி
மங்கையருங் கைதொழுது, வானகத்தை யும்பார்த்து,
"அங்கண்மா ஞாலத் தரசர் மிகவாழ,
நீதி தழைக்க, நிறையாக மும்பெருக,
வேத மறைவிளங்க விண்ணோர் மிகவாழ
மாரி மிகப்பொழிய, வையகமெல் லாந்தழைக்கக்
காரிகையார் கற்புங் கனிவாய் மிகவளர
வேணும்"என்று வாழ்த்தி மிகவே புகழ்ந்துரைத்துத்
தாணுவென வேதுதித்துத் தையலரும் வீத்திருந்தாள்,

## சந்திரமதியை வெட்டினது

வீத்திருந்த மங்கையரை வெட்டவென்று வேலரசன்
சேர்த்ததிருக் கைவாள் சிறப்பாய் உறைகழத்தி,
ஆதித்தன் ஈசன் அரிஅயன்மா வல்லியரைக்
காதிப் பெரிய கணபதியைக் காங்கயனை
நெஞ்சகத்தி லேயிருத்தி, நேசம் மயங்காமல்
பஞ்சாட் சரம்ஓதிப் பார்மகளை யும்பணிந்து,
"நீதி ஒழிந்து நெடுந்தவமும் பொய்த்துவிட்டால்,
ஆதியரன் சொல்லும் அருமறையும் பொய்யானால்,

---

பாட வேறுபாடு

*4895 : 4 ரா ! பரமா ! 1574*
*4901 : 3 வசிட்டர்குரு 1749*
*4910 : 1, 2 தாணு செயலெனவே 1749*

தருமம் நிலைகுலைந்து தாரணியி லேமறைந்தால்
அரியபொருள் மெய்ஞ்ஞானம் அல்லாம் அவத்தமென்றால்
மங்கை சிரசறுந்து மண்ணில்விழ வேணும்"என்று
வெங்கோபங் கொண்டோங்கி வெட்டினன்காண் அம்மானை !

வெட்டியவாள் அந்தமட மெல்லிதிருப் பொன்கழுத்தில்
மட்டலருஞ் செண்பகப்பூ மாலையாய் வீழ்ந்ததுவே!
வாள்மாலை யாகிவிழ மன்னன்பிர மித்(து),இரண்டு
தோள்பூரித் தே,சிவனைத் தோத்திரங்கொண் டேத்திடவே.
"மையிட்ட கண்ணி வளம்அரசன் சொன்ன(து)"என்றே
கைகொட்டி யேமகிழ்ந்து காசிநக ரோர்துதிக்க,
விண்ணில் புரந்தரன்முன் வீத்திருந்த மாவதிஷ்டர்
மண்ணிலரிச் சந்திரன்முன் வந்துநின்று கொண்டாடி,
ஆரமணி மார்புடனே ஆலிங்க னம்புனைந்து,
வீரமுள்ள வேந்தன் எனவே மிகப்புகழ்ந்து,
"தேடியஎன் சீசன் தெளிவுடையான்" என்றுசொல்லிப்
பாடினான் வேதம்மிக; பாதுமிரண் டும்பதியச்
சத்தமுடன் தித்திமித்தி தான்செயஞ்செ யங்கஎன்று
நிர்த்தமிட்டான் விண்ணுலகும் நீள்உலக முங்கேட்க.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

இந்த வாறுந டந்த நீதிஇ
லங்கு காரண காரியஞ்
சிந்தை கூரஅ றிந்து தான்திரி
யம்ப கன்தி றல்நல்கவே
தந்தி ரத்துடன் எண்ணி யேதய
வாகி யேசிவ காமிதன்
பந்த னத்தொடு கூறி யேபரி
வாக வாஎன வோதியே. 128

பாட வேறுபாடு

4929 : 3, 4 வீற்றிருந்த மாவசிட்டர் 1749

## சிவன் வந்தது

மின்னு கோசலை மேவு கேசரி
வீர மும்பிர தாபமும்
பன்னு சிந்தைவ ளப்ப மும்பத
மோது சாரிவி கற்பமும்
துன்னு மின்பவி னோத மானதுக்
கங்க ளுங்குண நேசமும்
தன்னு ளேயித மாய றிந்துச
தாசி வம்வெளி யானதே. 129

### நடை

இவ்வா றுலாவி இலங்குமந்த ஒல்லையிலே
வெவ்வா லமுதருந்தும் வித்தகனார் தாமறிந்து.
மன்றுபுகழ் ஈஸ்வரியை வாவென் றருகழைத்து
வென்றிபெறும் நல்ல விடைவாக னத்தேறி
நீதியுடன் கையில் நிறைமான் மழுவிலங்கச்
சோதிப் பிறையிலங்கத் துய்யசடை தானிலங்கக்
கொக்கிறகு மின்னக் குளிர்கங்கை யும்மிலங்க,
அக்குவடம் மின்ன அழகுவிழி மூன்றிலங்கப்
பூதியணி மேனியுடன் போர்த்தபுலித் தோலிலங்க,
மோதிப் பலநாகம் மூண்டபணி தானுமின்னத்
தோடுங் குழைக்காதுந் துன்னிச் சிறந்திலங்க,
ஆடும் பதமிலங்க, ஆதிமறை வேதமுடன்
தூயதொரு நாரதருந் தும்புருவும் வீணைசெய்ய,
ஆயிரங்கை வாணன் அரியதுந் துமிமுழங்க
நீதியரிச் சந்திரனார் நேசமுடன் காத்திருந்த
ஆதிதலந் தேடி அரன்வந்தார் **அம்மானை !**

மங்கை உமையவளும் வாஞ்சைமிக வேபெருகிச்
செங்கைக் கிளியிலங்கச் சிங்காரப் பூவிலங்க
எண்ணரிய வேள்நின் றிலங்கும் எழிலுடனே
வண்ணமணிப் பொன்னும் மரகதமே னிச்சிறப்பும்

தோன்றிப் புகழ்ந்து சுகமாக வேயெழுந்த
துன்று* மதனவெழில் தோகையெனுஞ் சந்திரமதி
மெய்க்கு மயானம் விளக்கமுள்ள காட்டகத்தில்
நிக்கு மிடந்தனிலே நீதியுடன் வந்தனள்காண்.
மெய்குன்றார் சிந்தையிலும் வேலைவட வாலிலிலும்
வைகுண்ட மீதுறையும் மாயவினோ தத்திருமால்
பைந்துழாய் மாலைமின்னப் பாணியிற்கோ தண்டமுடன்
செந்திருவாழ் மார்பும் திகிரிநெடுஞ் சங்கிலங்கப்,
பச்சைநிறம் மின்னப் பவளவா யும்மிலங்க,
மெச்சுமுந்தித் தாமரையும் மிக்கமுகத் தாமரையும்
செங்கமலத் தாளுஞ் சிறந்துமிக வேயிலங்கப்
பொங்குங் கருட நிலை போதமிகுந் தேறிவந்தார்.
முப்புரிநூல் மின்ன முகங்களொரு நாலிலங்கச்
செப்புந் திருக்குடுமிச் சிண்டுசிறந் தேசுமழப்
பாவும் இதமும் பதமும் பகர்ந்தருள
நாவில் இலங்கும் நயமான தேவியுடன்
உன்னிய வேதம் உரையனந்தந் தன்னுடனே
அன்னமிசை ஏறி அயன்வந்தார் **அம்மானை!**

மண்டலமெல் லாந்துதிக்க வானகமெல் லாம்வழுத்த
அண்டரண்ட கோளவரைக்(கு) அப்புறமெல் லாம்பறக்கும்
வீறுதுதிக் கையிலங்க, மெய்ப்பணிநூ லும்மிலங்கப்
பேறுதவுஞ் செய்ய பெருங்கமலத் தாளிலங்க,
ஆனந்த ஞானத்(து) அரியமத முப்பொழிந்து
தானந்த மானதொரு தந்திமுகத் தெந்தையர்தாம்
ஆகுதனி லேறி அமர்ந்துவந்தார் **அம்மானை!**

வாகுடைய வேலவனார் வள்ளிதெய்வ யானையுடன்
ஆறுமுகம் ஈராறு மாணபுய மும்மிலங்கக்
கூறுமயில் கோழிக் கொடியும் மிகஇலங்க

---

பாட வேறுபாடு

*4963 : 1 பைந்துளப 1749*
*4974 : 1 அன்னமதில் 1574*

* தானம் ஒன்றாத எதுகை.

வாய்த்தமணிக் குண்டலமும் மார்பணிக ளும்மிலங்கச்
சேர்த்ததிருக் கைவேலுஞ் சிங்கார மும்மிலங்க,
அட்டதிசை எல்லாம் அரைநொடியில் சுத்திவந்து
வட்டமிடும் பச்சை மயில்வாக னத்தில்வந்தார்.
எட்டுத் திசையின் இசைபால கர்தாமும்
திட்டமுடன் தங்கள் செயவா கனத்தில்வந்தார்.
முப்பத்து முக்கோடி முண்டபெருந் தேவர்களும்
நாற்பத்தெண் கோடி நளின ரிசியோரும்
அட்ட வசுக்களுடன் ஆனரிசி தன்னுடனே
சட்டம் மிகவுடைய சந்திரரும் சூரியரும்
எத்தேசத் தேவர்களும் எங்குமுள்ள மாதவரும்
வித்தாரக் காசிதனில் வேந்தனரிச் சந்திரன்பால்
பார்நிறைய அந்தப் பகவான் பதிநிறையச்
சீரருள வேண்டிச் சிறந்துவந்தார் **அம்மானை!**

தேவசுர மின்னார் செயமங்க ளம்பாடி
ஆவலுடன் பூமாரி அன்புடனே தூவிநின்றார்.
கண்டேத்தி ஏத்திக் கனிந்துபுகழ்ந் தேபுகழ்ந்து,
கொண்டேத்தி ஏத்திக் குணமாக வேபணிந்து,
நீதிஅரிச் சந்திரனும் நேசமெல்லாம் அன்புமிஞ்சிப்
போதவா னந்தம் பொதிந்தபே ரின்பமெய்தி.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

அத்தனே அரனே என்பன்;
அய்யனே சிவனே என்பன்;
பித்தனே விமலா என்பன்;
பிறையணி முடியா என்பன்;

---

**பாடவேறுபாடு**

*4987 : 1, 2 அட்டகிரி லோகம் 1749*
*4993 : 3, 4 ஆன ரிஷியோரும் 1749*
*4998 : 2 என்று 1749*

சத்தனே பரையாள் பங்கில்
    காரணப் பொருளே என்பன்;
மூத்தனே முதல்வா என்பன்;
    முக்கண்ணா தஞ்சம் என்பான். 130

எண்ணரும் பிறவி தோன்றி
    இசைபல மாதர் யோனிக்
குண்ணிடை புகுதா வண்ணம்
    குலவிய பதத்தை நல்க
மண்ணுல கினில்என் முன்பு
    மயானகாட் டகத்தில் வந்து
அண்ணலே துணைஎன் றோதி
    அடிக்கடி பணிந்து நின்றே. 131

### கலிவிருத்தம்

திங்க ளும்புன லும்புனை வாய்செயம்!
பொங்கு தீமழுப் புண்ணிய னேசெயம்!
சங்கு அரிஅயன் தேடரி யாய்செயம்!
இங்கு நீதரும் என்செயம் உன்செயம்! 132

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

கரியுரி உடையாய் போற்றி!
    கடுவிடம் உகந்தாய் போற்றி!
திரிபுராந் தகனே போற்றி!
    செழும்பரை இடத்தாய் போற்றி!
விரிபட உரகம் பூண்ட
    விமலனே அரனே போற்றி!
நரிபரி யாக்குஞ் சொக்க
    நாதனே போற்றி போற்றி! 133

### நடை

தேவருக்கும் யாவருக்கும் சிக்கா தரும்பொருளே!
மூவருங்கொண் டேத்தும் முழுமுதலே போற்றியென்று

---

பா. வே. விருத்தம் 130, 3 : 2 உமையாள் 1749

பாத மலரைப் பரிவாகப் போற்றிசெய்து
வேதப் பராபரைதன் மெய்ப்பதத்தை யும்வணங்கி
மாயோன் சரணம் வழுத்திமிக வுந்தொழுது,
சேயோன் குமரன் சிறந்தபத முந்தொழுது,
முந்தி விநாயகனார் முண்டகத்தா ளும்வழுத்தி
அந்தரத்தில் உள்ளோர் அனைவோரை யும்பணிந்தான்.
எல்லையில்லா வாஞ்சையுடன் ஏத்திப் பணிந்திடுங்கால்
வல்லபுகழ் ஈசன் மனமகிழ்ந்து கொண்டாடிச்
செம்மலரிச் சந்திரனைச் சென்றுவா என்றுரைத்தார்.
அம்மொழியைக் கேட்டு அதிகபலம் பெற்றிலங்கி,
மெய்ப்புலமை அய்யோத்தி வேந்தன் பணிந்துநின்றான்.
மைப்பொலியுங் கண்ணியெனும் மங்கைசந்திர மாமதிதான்
வையமெல்லாம் பெத்தருளும் வல்லிசிவ காமியுட
செய்ய பதமிரண்டும் சென்னியுற வேபணிந்து,

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

அம்பிகை கெவுரி நீலி
ஆதிகோ மளைமா வீரி
கும்பமா தனஒய் யாரக்
குண்டலி நீல கண்டி
வெம்புதா ருகனைக் காய்ந்த
வித்தகி வயிரி சத்தி
நம்பினேன் உனது பாதம்
நம்பினேன் நம்பி னேனே. 134

காத்தருள் காந்த சித்தி
கமலைகா கதிலி சார
சூத்திர தாரை மோதுஞ்
சுந்தரி விந்தை பாரி

---

பா. வே. 5012 : 1, 2 அந்தரத்துள் ளோர்கள் 1749
5017 : 1 மெய்ப்புலவும் 1749
5018 : 3, 4 மாமங்கை சந்திரமதி 1749
5019 : 2 பெற்றருளும் 1749
விருத்தம் 134: 3 : 4 வித்தகச் 1749

ஆர்த்திடு மறைகொண் டேத்தும்
அரும்பொருள் ஆயி நேசி
பாத்திர கபாலி தஞ்சம்
பதமலர் எனப்ப ணிந்தே. 135

## நடை

ஆதி உமையே அபிராம நாயகியே
சோதியே தஞ்சம் துணையென் றுறப்பணிந்து
மன்னன் துதித்தபடி மங்கையரும் மந்திரியும்
அந்நிலத்தில் உள்ளோர் அடியிணையைப் போத்திநின்றார்.
அப்பொழுது ஈசன் அரிச்சந் திரன்தனக்குச்
செப்பமுடன் நல்ல சிறந்தவர முங்கொடுத்து,
மந்திரியை யும்மழைத்து வள்ளலரன் கொண்டாடி
நந்தா வரங்கள்மிக நல்கினார் **அம்மானை!**

செங்கமல (மா)வதனச் செய்யிழைசந் திரமதியை
மங்கை உமையவளும் வாவென் றருகழைத்து,
வாழ்த்திப் புகழ்ந்து வரங்கொடுத்துக் கொண்டாடி,
"நேர்த்தியுள்ள சந்திரமதி நேரிழையே! பத்தினியே!
மெத்தவெகு வாதைபட்டு மெய்யுருகி நொந்தனையே!
சித்தங்கலங் காதை"யென்று தேவிஉமை சொல்லிடவே,
பட்டதுயர் எல்லாம் பராபரையோ டேயுரைத்துத்
திட்டமிகுஞ் சந்திரமதி சென்றுகண்ணீ ரோடநின்றாள்.
அறம்வளர்த்த கையால் அழுதகண்ணீ ரைத்துடைத்துத்
திறமுடனே மெய்தழுவித் தேவிஉமை கொண்டாடி

---

பா. வே. 5024 : 4 போற்றிநின்றார் 1574 1749
5033 : 1 மெத்தவே 1574
5038 : 2 மெய்தடவித் 1574

ஒப்புமை: அடி எண்: 5037, 5038. பட்ட துயரத்தை உரைத்துச் சந்திரமதி அழுதுநிற்க, உமையம்மை தன் அறம் வளர்த்த கையால் சந்திரமதியின் கண்ணீரைத் துடைத்தல்.

'துய்ய முப்பதிற் றிரண்டறம்
வளர்த்தகை தொடலும்'

— அரிச். புரா. மீட்சிக்காண்டம் - 19

ஆனந்தக் கண்ணால் அதியமுட னேபார்த்து
ஞானந்தத் தேவி நயந்துபின்னும் ஏதுரைப்பாள்—
"அன்னமே! தேனே! அழகுசந்திர மாமதியே!
உன்னுடைய பாலகனை ஓடி அழை யும்"மெனவே,
தேவிஉமை கூறத் திருவனைய சந்திரமதி
ஆவி மகவாசை ஆவல்கொண்டு தானெழுந்து,
மாண்டு கிடந்ததொரு மைந்தனிடந் தானேகி
ஆண்டபுகழ்ச் சந்திரமதி ஆரணங்கும் ஏதுரைப்பாள்-
"எந்தன் தவப்பயனே! என்மகனே! கண்மணியே!
சிந்தையுடன் உன்னைச் சிறந்தழைத்து வாவெனவே
ஆதிசிவ காமி அருளினாள் நல்லவரம்;
சோதி முகமுடைய துய்யநறும் புத்திரனே!
செம்மலே! என்னுயிரே! சென்றுவா" என்றிடவே
"அம்மா" எனவே அடர்ந்துரைத்துத் தானெழுந்து,

### லோகதாட்சணன் உயிர்வந்தது

நித்திரைகள் நீங்கி நெளிந்தெழுந்த மானிடர்போல்
புத்திரனுந் தானெழுந்தான் பூவுலகில் அம்மானை!

எழுந்ததொரு செம்மல் இசைவுடைய சீராகச்
செழுங்கவுரி ஆதிஉமை செய்யபத மாமலரும்
ஆதியரன் மால்பதமும் ஆறுமுகன் தாளிணையும்
காதிப் பெரிய கணபதிசெம் பொற்பதமும்,
தேவர் பதமுஞ் சிறப்பாக வேவழுத்தி
ஏவர் பதமும் இயல்பாகப் போத்திநின்றான்;

---

பாட வேறுபாடு

5057 : 1 ஆதிபரன் 1749
5058 : 2 புகழ்சேர் 1749
5060 : 4 போற்றிநின்றான் 1749

ஒப்புமை: அடி எண். 5053, 5054. மாண்ட மகனை அழைக்குமாறு உமை சந்திரமதியிடம் கூற, சந்திரமதி அழைக்க, மகன் நித்திரையிலிருந்து எழுபவன் போல் உயிர்பெற்று எழுதல்.

'அரசிளங் குமரன்
துயிலு ணர்ந்தவர் போற்புகுந்
திணையடி தொழுதான்'.

— அரிச். புரா. மீட்சிக் காண்டம் 20

போத்திநின்ற புத்திரற்குப் போதவர மானதுதான்
நேர்த்தியுடன் வேலவனார் நேசமுட னேகொடுத்தார்.
மைந்தன் தனைஎழுப்பி வந்ததொரு சந்திரமதி
விந்தைபெருந் தேவியுமை மிக்கபதம் போற்றிநின்றாள்.
போற்றிநின்ற மங்கையரைப் போந்துமிக வேபார்த்து,
'ஏற்றவரங் கேளும்' எனவுரைத்தாள் அம்மானை!

"தாயே! எனக்குவரம் தாரணியில் உள்ளதொரு
நேயமிகு மானிடர்கள் நீதியுடன் எந்நாளும்
என்னாமம் பேசி இசைநடந்த காரணத்தை
முன்னோதி ஆராய்ந்து மகிழ்த்தமுடன் கேட்போர்கள்
அட்ட பவுசாய் அதியபுக ழும்பெருகித்
திட்டமுடன் செல்வஞ் சிறப்புமிக வுண்டாகி,
மேலான வீடு மிகுவாழ்வு பெற்றிடவும்
சீலமுடன் நல்லவரஞ் சென்றருளும்" என்றுரைத்தாள்.
அப்படியே நல்லவரம் ஆதிஉமை யுங்கொடுத்தாள்.
செப்பமுள்ள மன்னவனைச் சீர்ப்பரமர் தான்நோக்கி,
"வாருமரிச் சந்திரனே! வையகத்தை ஆண்டிருந்து
பேறு மிகப்பெருகிப் பேராகி நாமிருக்கும்
நேமக் கயிலைதனில் நீவருவாய்" என்றுசொல்லிக்
காமக் கடவுள் கனிந்துரைத்தார் அம்மானை!

அந்தமொழி தான்கேட் டரியமன்னன் ஏதுரைப்பான்—
"எந்தைபக வானே! இனிப்புவிஏன் எந்தனுக்கு?
முந்தமுனி வற்களித்தேன்; முறிபுலையற் காளானேன்;
பைந்தொடியைப் பாலகனைப் பார்ப்பான் தனக்குவித்தேன்;
ஈனப் புலையன் இசைத்தபடி தான்கேட்டு
மான மறச்சுடலை வையகத்தில் காத்திருந்தேன்;
நானிலத்தில் வேந்தர் நகைக்கநான் ஆளானேன்;
ஆனபடி உர்தாள் அடையக் கிருபைசெய்யும்;
தேவனே!" என்றுசொல்லிச் சீர்வேந்தன் கூறிடவே,
பாவையுமை பங்கன் பகரலுத்தார் அம்மானை!

---

பா. வே. 5069 : 4 காரியத்தை 1574
5075 : 1 அப்படிக்கு 1749
5081 : 1, 2 அந்தமொழிகேட் 1574 1749
5090 : 3 பகரலுற்றார் 1574

"சிக்கமுடன் நீயிருந்து சென்றுகாத்த (இச்)சுடலை
மிக்கமுடன் வேதம் விளைந்தெழுந்த பூமியது;
சிந்தைகளி கூரச் சிறப்பாக எந்நாளும்
எந்தன் மனம்உகக்க ஏத்தமல ரொத்ததலம்;
ஈம எரிபோல் இசைந்தெழுந்த தத்தனையும்
ஓமஎரி காணும் உறுதியுள்ள காவலனே!
சூழ்ந்திருந்த கூளியெல்லாந் துய்யதொரு தெய்வகணம்;
தாழ்ந்திருந்த ஈனர்மொழி தானுமெந்தன் வேதஉரை;
இக்காட் டகத்தில் இசைந்தவிற கத்தனையும்
தக்கமுடன் நல்ல சமிதைகாண்; மன்னவனே!
கண்டறியும்;" என்றுசொல்லிக் காமனைக்காய்ந் தோனுரைத்துச்
சண்டனையுங் கோபத் தழலோனை யும்பார்த்து,
"வேந்தனுக்குச் சேதி விளம்பென்(று) அரனுரைத்தார்.
அந்தகனும் அப்போ(து) அடர்ந்துகிடா மிதேறிக்

---

பாட வேறுபாடு

5097 : 4 தேவகணம் 1749

ஒப்புமை : அடி எண். 5091 — 5101. சிவபெருமான் அரிச்சந்திரனை நோக்கி, "நீ காத்திருந்த இச்சுடலை, உண்மையில் சுடலையன்று; வேதம் விளைந்த பூமி; எனக்கு உகந்த தலம்." எனக் கூறுதல்.

'அரிச்சந்திர புராணத்தில்' இச்செய்தி இயமன் கூற்றாக அமைந்துள்ளது. இயமன் கூறி முடித்ததும் சுடலை யாகசாலை யாகப் பொலிந்தது என அரிச்சந்திர புராணத்தில் உள்ளது.

'இலைகுலாந் தொடையாய் இருந்துநீ காத்த
ஈமமும் யாகசா லைகள்காண்
தொலைவிலா வடுவென் றுணரின்நீ இகழ்ந்த
சுடலையைப் பாரென உரைத்தான்' 37

'வாயெலாம் யாக பரமெலாம் யூபம்
வானெலாம் ஆகுதித் தூமம்
தீயெலாம் முத்தீ திசையெலாம் தருப்பை
தீப்படு விறகெலாஞ் சமிதை
பேயெலாம் முனிவோர் பேச்செலாம் வேதம்
பிணமெலாம் அதற்கமை பசுக்கள்
ஆயவா றெல்லாம் நோக்கினான் தொல்லை
அமைந்ததே ஈதென அமைந்தான்.'

— அரிச். புரா. மீட்சிக் காண்டம் — 39

கரிய நிறமுங் கதிர்மகுட மும்மிலங்க,
அரிய எயிறிலங்க, ஆனதளை மோடெழுந்து,
மன்னவனை நோக்கி மகாமறலி ஏதுரைப்பான்—
"துன்னுபுகழ் வேந்தா! சுகமாய் ஒருகாலம்
ஈசன் தனக்கே இசைந்ததவ நேசனுமாய்
வாச முடனிருந்த மார்க்கண் டனைப்பிடிக்கச்
சென்றேன்; அவன்வயது சென்றுதென்று கொண்டாடி
அன்றே மிகுந்து அரன்பூசை செய்திருந்தான்;
கண்டுகொண்டும் நானும் கடும்பாசம் விட்டெறிந்தேன்;
மண்டும்மார்க் கண்டன் மகாதேவர் தஞ்சமென்று
பூசைபண்ணும் லிங்கமதைப் போந்துகட்டிக் கொண்டிடவே,
ரோசமுடன் நானும் நுடங்காம லேஇழுத்தேன்;
அங்கிருந்து முக்கண் அரனார் மிகத்தோன்றித்
'தங்கும் எனதடியான் தன்னைவந்து தீண்டுவையோ?
போடா!' எனவுரைத்துப் 'பூணும்புலை யாகு'எனவே
தோடாரும் ஈசன் தொகுத்துரைத்தார் அம்மானை!

'அய்யா இச் சாபம் அகத்துவதும் எப்பொழுது?
மெய்யா!' எனவும் மிகத்தொழுது நின்றிடவே,
ஆதி பகவான் அருமையுடன் சொன்னமொழி—
'பூதலத்தில் ஓர்கால் புவியரச னாகவுந்தான்
அய்யோத்தி நாடன் அரிச்சந் திரன்உதிப்பான்;
செய்யுமந்த மன்னன் செழுங்கோ சிகன்பொருட்டால்
காசி நகரில் கனிந்துவிலை யாய்ப்படுவான்;
நேசமுடன் காசிதனில் நீயிருந்து தான்அவனை,
ஆளடிமை கொண்டு அருஞ்சுடலை காக்கவைத்து
வாழுமந்த நாளில் வருவேன் வரம்உதவ;
சாபம் தவிரும்' என்று சங்கரனார் சொன்னபடி
மேவிவந்து(து)" என்று மிகுமறலி தானுரைத்துக்
கொண்டமுறி யும்மெடுத்துக் கோமானுக் கேகாட்டிச்
சண்டன் அகன்றான்; தழவோனும் வந்துரைப்பான்-
"பானு குலத்தாய்! பகரும் பெருந்தவத்தாய்!
ஊனுந் தவத்தோர் உரியதொரு முப்புரத்தோர்

பா. வே. 5121 : 4 எக்காலம் 1749

பண்ணுங் கொடுமை பரன் அடக்க வேணும்என்று
அண்ணல் நகைத்தார்; அதில்பிறந் தேநானும்
அங்கவரைச் சுட்டுவிட்டேன்; அந்தத்தோ சந்திரச்
சங்கரனார் எந்தனையுந் 'தாலத்(து) அதியமுள்ள
காசி நகரில் கனிந்தகுலத் தந்தணனாய்
வாசியுட னேபிறந்து மா தவஞ்செய் தேயிருங்காண்;
அந்நாளில் கோசிகனார் ஆனபெருஞ் சோதினையால்
மன்னனரிச் சந்திரனார் வாழ்மனைவி தன்னைவிற்பான்;
துன்னு புகழுடைய சொன்னம் பலவருளி
அன்னவளை வீட்டுக்(கு) அடுமைசெயக் கொண்டிடுவாய்;
வென்றியுடன் அப்போ மிகவருவோம் காட்சிநல்க;
அன்றுனக்கு நன்மை அருளுவோம்' என்றுரைத்தார்;
அந்தப் படியே அருள்பெத்தேன்.'' என்றுசொல்லிப்
பைந்தொடியைச் சேயைப் பரிவாகக் கொண்டமுறி
காட்டி அகன்று கனலோன் மகிழ்ந்திடவே,
தாட்டிமைசேர் மன்னன் தயவாக வேபார்த்து,
இப்புதுமை யெல்லாம் இயலரசன் கண்டுகண்டு
செப்பமுடன் ஈசுரனைத் தெண்டனிட்டும் ஏதுரைப்பான்—
''நாதாந்தத் துட்பொருளே! நாயகா! நாயடியேன்
வேதாந்த மாமுனிக்கு மெய்யாக வேகொடுத்த
நாட்டகமும், நீட்டகமும் நான்ஏற்ப தில்லை!'என்று
தேட்டமுள்ள மன்னன் சிறந்துரைத்தார் அம்மானை!

அவ்வசனங் கேட்டு, அரனார் மிகமகிழ்ந்து,
செவ்வையுட னேநடந்த சேதியெல்லாம் கூறுமென்று,
நாரதனைக் கோசிகனை நல்வதிஷ்டர் இந்திரனைச்
சாரமுடன் ஈசுரனார் தான்கேட்டார் அம்மானை!

அங்கவர்க்கு முன்னே அருங்கோ சிகனெழுந்து
''சங்கரனே! கேளும்''எனத் தானுமிக வேயுரைப்பான்;

---

பாட வேறுபாடு

5154 : 2 ஈஸ்வரரைத் 1574

5162 : 2 ஈஸ்வரனார் 1574

## கவுசிகன் சாபந் தீர்த்தது

தேவர் சபையில் சிறந்துமகா பேறுடனே
ஏவர்களும் பூசுரரும் இன்பமுள்ள மாதவரும்
அண்டர்கோன் தன்கொலுவில் அங்கமர்ந்தி ருந்ததுவும்,
வண்டமருந் தோளுடைய வாசவர்கோ னும்பார்த்துப்
"பூலோகந் தன்னில், புகழரசர் தங்களிலே
மேலான நீதி மிகுவளமை யாளனுமாய்
மனைவி யொருத்தியன்றி மத்தோர்க்குப் புத்திரனாய்
அனையபரன் நீதிக் கருமையுள்ள வொகனுமாய்
உண்டோ இலையோ ? உரையும்" என வேமகிழ்ந்து
அண்டர்கோன் கேட்டதுவும், அதிவதிஷ்டர் ஓதினதும்,
மிண்டுதான் பேசி மிகவுரைத்து நின்றதுவும்,
கண்டு சினந்து கனவதிஷ்டர் கோபமுடன்
காவலவ னைப்புகழ்ந்து காசினியில் சொன்னதுவும்,
தூவிமிக வேளரிந்து தூசனித்த காரியமும்,
மிக்கசினங் கொண்டு மிகஇருவர் நின்றதுவும்,
சிக்கமுடன் நாரதனார் சென்றமர்த்தி விட்டதுவும்,
சார முடன்சபதம் தான்என்ன என்றுசொல்லி,
வீரமுடன் மெய்பொய் விளர்பவுரை என்றிடவே,
வசிட்டர் உரைத்த மகாசபத மானதையும்
கசிட்டமுடன் தான்தவசில் சொன்னவகை யும்பாதி
ஆமென்(று) உலகில் அரசனைச்சோ திக்கவென்று
தாமன்று வேந்தன் தனிடத்தில் உந்றதுவும்
வாய்த்த நிதியம் மகம்நடத்தக் கேட்டதுவும்,
ஏத்த முடன்தருவேன் என்றுரைத்த காரியமும்,

---

பாட வேறுபாடு :

5171 : 3 மற்றோர்க்குப் 1749
5178 : 3 தூஷணித்த 1749
5184 : 3, 4 சொன்ன வகைபாதி 1749
5186 : 4 உத்ததுவும் 1749
5188 : 3 என்றுசொன்ன 1749

அந்நிதியம் உன்பால் அமைந்திருக்கட் டென்றுசொல்லி
உன்னிதங்க ளாக உகந்துதான் போனதுவும்,
பறவைவிலங் கூர்வைவிட்டுப் பாரைப்பா ழாக்கினதும்,
அறவே வராகனைவிட் டானைபடை தேய்த்ததுவும்,
மங்கையரை உண்டுபண்ணி மாகொடுமை பேசியதும்.
அங்கண்மா ஞாலம் அருந்தாரை கொண்டதுவும்,
நாடுவிட்டுப் போஎனவும் நன்னிதியம் தாஎனவும்
ஈடழித்துப் பொன்னுக்(கு) இசைபளிங்கை விட்டதுவும்,
துக்கமுடன் காட்டில் துயர்பலவும் செய்ததுவும்,
நக்கர்புகழ் காசி நகரில்விலை யாக்கினதும்,
பாலகனைக் கொல்லப் படநாகம் விட்டதுவும்,
சாலமுடன் காசிமன்னன் சந்ததியைக் கொன்றதுவும்,
கள்ளி யெனப்படுத்திக் கடிந்துவெட்டப் பண்ணியதும்
உள்ளபடி ஈச னுடனுரைத்துக் கோசிகனார்
நல்ல தொருவசனம் நாதனுட னேதுரைப்பார்—
"எல்லையில்லா நீதி இலங்கும் பலனுடைய
மாடேறும் ஈசா! மகாதேவா! நாரிபங்கா!
தாடாண்மை யுள்ள தயவன் அரிச் சந்திரன்காண்;
எந்தஎந்த நீதி இசைதப்பிப் போனாலும்
தந்தநிறை நீதிதனைத் தப்பாத மாவேந்தன்;
ஞானக் கருத்தன்; நயந்தபெரும் மாவரசன்;
மோனமிகும் நல்ல மொழிவா சகன்"எனவே
சித்த முறமகிழ்ந்து, சீராக உள்ளபடி
உத்தவகை யெல்லாம் உரைத்தான் மகாமுனிவன்.
ஆதியரன் கேட்டு அகமகிழும் அந்நேரம்
நீதி யுடைய நிறைவதிஷ்ட மாமுனியை,

---

பாட வேறுபாடு

5189 : 1 அந்நிதி 1749
5191 : 4 ழாக்கியதும் 1749
5193 : 4 செய்ததுவும் 1749
5201 : 2 யெனப்பிடித்துக் 1749
5207 : 3 இசைவுதப்பிப் 1749
5208 : 2, 3 நீதி தனைத்தப்பா 1749

ஆன கவுசிகனை அன்பாக வேயழைத்து,
மோனமுடன் பார்த்து முனிந்துமிக ஏதுரைப்பார்—
''மாமுனிவ ரே!நீங்கள் வண்மையுடன் இன்றுமுதல்
நாமறியச் சொல்லுகுறோம் நானிலம்வா னம்மறிய
நீங்களிரு வோரும் நிறையரசன் வண்மையினால்
பாங்கான நல்லமனம் பத்தியுட னேயுறவாய்த்
தானிருங்காண்'' என்றுசொல்லிச் ''சாத்தும் படிநீரும்
கோனிதயங் கூரக் கொடும்பாதி யுன்தவசை''
என்றீ சுரனுரைக்க, இன்பமுடன் கோசிகனும்.
''நன்றுகாண்'' என்றுசொல்லி நாதன் தனைப்பணிந்து,

## எழுசீர் ஆசிரிய விருத்தம்

''வெள்ளை நீறணி மேனி யா!நெடும்
    மெல்லி பங்கினில் வித்தகா!
பிள்ளை யின்தசை ஆசை கொண்டதோர்
    பெரிய மாவிருந் தண்ணலே!
தெள்ளு முத்தமிழ்த் தெரிவு காரணச்
    சிந்தை மன்னவன் சீர்பெற
உள்ள மாதவம் தன்னி லேபகம்
    உத்த ளித்தம(து) அன்றியே. 136

தாரை என்(று)எனக்(கு) அரிய மன்னவன்
    தான்அ ளித்திடும் நன்னகர்
பூரை பூரையென் றருளி னோம்இன்னம்
    பூத லங்களும் புகழவே
சாரை வானவர் உலக முந்தொழச்
    சத்தி யத்திறல் மன்னவன்
ஓரை ஓரையென் றோது நாமமும்
    உத்து நல்கினோம் உண்மையே.'' 137

## நடை

கோதில்லா மாமுனிவன் கோசிகனும் அந்நேரம்
தீதில்லா மாவதிட்டர் சென்றறிய வேதுரைப்பார்—

---

பா. வே. 5221 : 3 சாற்றும் 1749.

"மாதவனே! உன்சீசன் வாய்த்தநெறி யாளனென்று
போதவறிந் தேன்"எனவே பூண்ட நிறை தானுரைத்து
மன்னனரிச் சந்திரன்பால் மாகோ சிகன்அணுகி,
"நண்ணுபுகழ் மன்னவனே! நானிலத்தில் உந்தனுட
மெய்நிலைமை காண மிகவந்தோம் அல்லாது
செய்நிலைமை நாடு சிறந்தாள வந்ததில்லை;
வீறுக்குத் தாரை மிகவேத்தோங் காணரசே!
பேறுக் குடையவனே! பேதகம்நீ எண்ணாதே;
ஆளுமுந்தன் நாட்டை அரிச்சந்தி ரா"எனவே
சூழும் படியுரைத்துத் தொல்லைமகு டப்புனைந்து,
"எந்தவத்தில் பாதி இசைவாக உந்தனுக்குத்
தந்தோம்நாம்" என்றுசொல்லித் தார்முனிவன் கூறிடவே,
வேத வதிஷ்டரந்த வேந்தனுக்கும் ஏதுரைப்பார்—
"நீதமுள்ள மன்னா!உன் நேசவள நீதிஎல்லாம்
மாமுனிவன் கோசிகனால் வையகம்வா னம்மறிய
ஆமெனவும் நீதி அடர்ந்ததுகாண்" என்றுரைத்தார்.
அவ்வா றுரைத்த அருள்வதிஷ்ட கோசிகரைச்
செவ்வியதோர் மன்னன் சிறப்பாய்த் துதித்துநின்றான்.
ஆலவிடம் உண்டதொரு ஆதியரன் அப்பொழுது
கோலமுள்ள இந்திரனைக் கூப்பிட்டும் ஏதுரைப்பார்—
"உத்த வசிட்டருடன் ஓங்குமுனி வோருடனே
சித்தமுற நீநடந்து சீரும்அரிச் சந்திரனை
நாடு புகழ்அயோத்தி நாட்டகத்தில் வைத்துவிட்டு,
நீடும்அம ராபதிக்கு நீவா" எனவுரைத்தார்.

## காசிராசன் புத்திரனுக்கு உயிர்வந்தது

அவ்வேளை காசி அரசன் தளமுடனே
செவ்வி உயிரிழந்த செம்மல்தனைத் தான்அடக்க
வீறு மயானமதில் மேவிவந்தார் **அம்மானை!**

வீறு மயானமதில் மேவிவந்த போதினிலே
சீரான பாலன் சிவனார் அருள்பெருகிப்
பேறாய் உயிர்வந்து, பேசி,மிக வேஎழுந்து,

ஈசன் தனையும் இயல்பாகப் போற்றலுற்றான்.
ஆசைகொண்டு காசி அரசனுமே அந்நேரம்
மிஞ்சுங் கருணைகொண்டு மிக்கபர னைத்துதித்து
அஞ்சுகையன் ஆறுமுகன் ஆயன்உமை வேதனுடன்
பின்னுமற்றும் உள்ளவர்கள் பேரறிந்து தான்வணங்கி,
மன்னுமன்ன னைத்துதித்து, மாவேந்தன் நின்றிடவே,
சீராய் அருள்புரிந்து, தேவிஉமை தன்னுடனே
பேறாய் இடபமிசைப் பெம்மான் எழுந்தருளி,
வெள்ளி மலைதனிலே வீத்திருந்தார் **அம்மானை !**

ஒள்ளியதோர் மாயவரும் ஓதுகரு டாழ்வார்மேல்
சித்தமுற நல்லதிரு வைகுண்டஞ் சேர்ந்திருந்தார்.
பத்தியுள்ள நான்முகனும் பண்புஅன்ன மீதெழுந்து
சத்தியலோ கந்தனக்குத் தான்சென்றார் **அம்மானை !**

வெத்தி விநாயகனும் வேலவனுந் தாமெழுந்து,
மயில்வாக னந்தனிலும் வாகுபெருச் சாளியிலும்
செயலாக வேயெழுந்து சென்றனர்காண் **அம்மானை!**

எங்குமுள்ள தேவர்களும் எல்லோருந் தாமெழுந்து
தங்களுட சாய்கை தனில்சென்றார் **அம்மானை !**

வாகுபுகழ்க் கோசிகனார் மாதவங்கள் செய்யவென்று
பாகுமலைச் சார்புவனம் பண்புடன்சென் றேயிருந்தார்.
எல்லாரும் போனவுடன் இந்திரனுஞ் சுந்தரியும்
வல்லாளர் மத்துமுள்ள மாவேந்த ரும்வசிஷ்டர்

---

பாட வேறுபாடு

5268 : 2 வேதியனும் *1749*
5268 : 4 மீதேறி 1749
5277 : 2 போனபின்பு 1574
5278 : 2 மற்றுமுன்ன 1574 1749

நேசமகிழ் அய்யோத்தி நீள்பதிக்குச் செல்கவென்று
வாசனரிச் சந்திரனை வாசவர்கோ னும்மெடுத்து
மாணிக்கத் தேர்தனிலே வைத்தனர்காண் அம்மானை !

ஆணிப்பொன் சந்திரமதி ஆரணங்கைத் தீண்டவஞ்சி,
இந்திராணி தானும் எடுத்துரத மீதில்வைத்தாள்.
சுந்திரஞ்சேர் மந்திரியுஞ் சொல்வேந்தன் புத்திரனும்,
நல்லமணித் தேரில் நயந்துமிக வேஏறி
வல்லவிரு தோடே வழிநடக்கச் செல்லுகையில்
காசிப் பதியாளுங் காவலனார் அந்நேரம்
வாசவனைத் தேவர்களை மன்னனரிச் சந்திரனைச்
சுந்தரியை மத்துமுள்ள தோகைதெய்வ கன்னியரைச்
சந்திரமதி யைமகனைத் தானமைச்ச கேசரியை
வாரும் எனமகிழ்ந்து வாஞ்சைபல வேயுரைத்துப்
பாரும் புகழ்ந்திலங்கும் பண்பகத்தில் கொண்டுசென்று,
வெல்வேல் அரசருக்கும் மிக்கபல தேவருக்கும்
சொல்சேர் பரிசுடனே துய்யவளை மும்புனைந்து,

---

பாட வேறுபாடு

5279 : 3, 4 நீள்பதிக்குப் போகவென்று 1749
5281 : 2 தேரினிலே 1749
5286 : 2 தோடும் 1749
5287 : 3 காவலவன் 1749
5289 : 2 மற்றுமுள்ள 1574 1749
5291 : 1, 2 வாருமென வேமகிழ்ந்து 1749

ஒப்புமை: அடி எண். 5279 — 5284. இந்திரனும் இந்திராணியும், அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் 'அயோத்திக்குச் செல்க'வென்று தேரில் ஏற்றி வைத்தல்.

'வானவர் எடுத்துச் செம்பொன்
மணிநெடுந் தேரில் வைத்தார்' 48

'இந்திரன் தேவி யென்னும்
இளமுலைக் குதலைச் செஞ்சொல்
சுந்தரி திருக்கை பற்றிச்
சுடர்மணித் தேரில் வைத்தாள்.'

— அரிச். புரா. மீட்சிக் காண்டம் - 49

செய்யும் வரிசையுடன் செய்தூமிக வேதுதித்து,
வையம் புகழ மகிழ்ந்திருந்தார் **அம்மானை!**

இருக்குமரிச் சந்திரனை இன்பசந்திர மாமதியை
உருக்கமுடன் காசிநகர் உத்தமனும் போத்திடவே
மன்னவனுந் தேவியரும் மாவேந் தனைப்புகழ்ந்(து)
உன்னியிருந் தன்பாய் உலகதாட்ச ணன்னுடனே
காசிநகர் வேந்தனுட காதல்மக னும்மிருந்து,
வாசியுடன் நாளை வழிநடப்போம் என்றிருந்தார்,
தேசம் புகழுந் திசைமா மதிதயவேள்,
"ஆசைமகள் சந்திரமதி ஆரணங்கும் புத்திரனும்
மன்னனரிச் சந்திரனும் மாமுனிவன் சோதினையால்
தன்னகரை யும்மிழந்து, தான்காட் டகமலைந்து,
பன்னுமுனிக்(கு) அன்று பகர்ந்தநிதி ஈவதற்காய்
உன்னுநிதி சேரமட்டும் ஒத்தவிலை என்றுசொல்லித்
தானடுமை வேதியற்குந் தக்கபுலை யன்தனக்கும்
மேனடுமை யாகி மிகவிருக்கி றார்"எனவே,
சீரமைச்சன் செப்பிவிட்ட சேதிகண்டு தானெழுந்து,
பேர்மிகுத்த காசிப் பெருப்பதியைத் தான்நோக்கி
மானமுடன் சந்திரமதி வளர்சீத னப்பொருளில்
ஆனைமேல் நின்றுகவண் கல்லெறிந்த தூரம்நிதி
பத்தியுடன் கொண்டு பலசேனை தன்னுடனே
சுத்தி மதிதயனுந் தோகையரும் வந்தனர்காண்.
முத்திதருங் காசி முதுபதியில் மன்னவனார்
வெத்தி மதிதயனை வீறாக வந்தழைத்துத்
தன்னகரில் வைகுமரிச் சந்திரன்பால் கூறிடவே,
மின்னாளும் மன்னவனும் மிக்கதொரு புத்திரனும்
மன்னன் மதிதயனை வந்துகண்டு, தெண்டனிட்டு,
உன்னும்புக ழாகி உயர்ந்தகுணச் சந்திரமதி
பட்ட துயரும் பதியிழந்த வாறுகளும்,
இட்டமுடன் காட்டகத்தில் எய்திவந்த காரணமும்,

---

பாட வேறுபாடு

5298 : 4 போற்றிடவே 1749

அந்தணற்கும் நீசனுக்கும் ஆனவிலைப் பட்டதுவும்,
மைந்தன் இறந்ததுவும், மாவாளைதப் பட்டதுவும்,
எள்ளளவுந் தப்பாமல் ஈரஞ்சு நாள்வரைக்கும்
கள்ளவிழுங் கோதைநல்லாள் காதலுள்ள தாயுடனே
பெத்தபிதா வும்மறியப் பேசிச் சலிப்பகன்றாள்.
பெத்த பிதாவும் பெருமகளைக் கொண்டாடி,

## அய்யோத்திப் பதிக்கு ஏகுதல்

இவ்வாறு காசிதனில் ஈரஞ்சு நாளிருந்(து)
ஒவ்வுங் கதிரோன் உதித்தவுடனேஎழுந்து
குலிசா யுதன்படையுங் கோடிவிரு தானதுடன்,
சலியாத காசிமன்னன் தன்சேனை யாளருடன்,
வேந்தன் மதிதயனார் மிக்கபடை தானையுடன்
ஆய்ந்தமனு நீதி அரிச்சந் திரவேந்தன்
பாலகனும் பைந்தொடியும் பண்பான மந்திரியும்
சாலமணித் தேரில் சதுர பலத்துடனே,
தேவர் விருதுந் திருச்சின்னந் துந்துமியும்
மேவுங் கனமேளம் மிக்கதொரு பூரிகையும்
எக்காளந் தூரி இசைசங்கு மல்லாரி
பக்கமெங்கும் மின்னிப் பலவாத் தியம்முழங்கப்
பார்மகளுங் கொண்டாடப் பார்வேந்த ருந்துதிக்கச்
சீர்மகளும் நீதி சிறந்து கனிந்துவர,
விருதுக் குடைகள்பல வெஞ்சா மரைகளுடன்
அரியபுகழ்க் காசி அதிகநகர் விட்டெழுந்து,
நீடரிய காடும் நெடுமலையுஞ் சாரல்களும்
ஓடைநெடும் வாவி உயர்சோலை யுங்கடந்து,
சிவமா முனிவருறை சிராம் வனப்பலவும்
தவமா முனிவருறை தங்குவன முங்கடந்து,
உல்லாச மாக ஒளியா தெழுந்துவருஞ்
சல்லாப மான சரசுநதி வந்தடைந்தார்.

---

பா. வே. 5345 : 3 வெண்சா 1749
5349 : 2 முனிவர்லைகும் 1749
5349 : 4 பலவனமும் 1574

அந்தநதி மன்னன் அயோத்திவிட்ட நாள்முதலாய்ச்
சிந்தைமிக வாடிச் சிறந்து கிடந்தநதி
மன்னவன்வந் தானெனவும் வாஞ்சையுட னேமகிழ்ந்து,
அன்னவனைக் காண அடர்ந்துமிக வேபெருகிச்
சண்பகப்பூ வின்மரமுஞ் சாதிக்கா யின்மரமும்,
நண்பாம் வருக்கைமரம் நல்லகுங்கி லிமரமும்,
பந்திபந்தி யாகப் பலதருவுங் கொண்டுவந்து
தந்தி உழுவைசிங்கந் தான்கரடி மான்மரைகள்
வாகுமுய லோடுடும்பு மண்டமுங்கு வானதுவும்
ஆகு இனப்பலதும் ஆக்கரித்துக் கொண்டுவந்து,
முல்லையுடன் செண்பகமும் முண்டகமும் மல்லிகையும்
அல்லி யுடன்பன்னீர் ஆனசெவ் வந்திமலர்
எல்லையில்லா மாமலர்கொண் டெய்திச் சிறந்துவந்து,
சொல்லரிய முத்துந் துகைபெற்ற பொன்மணியும்,
பச்சைமணி ரத்தினம் பவளவயி டூரியமும்,
மெச்சுபற்ப ராகமுடன் மேவியகோ மேதகமும்,
வர்க்கம் பலதுகொண்டு வந்துவந்து தான்பெருகி,
மிக்கஅரிச் சந்திரனை மெய்ப்பாகக் கண்டதுவே.
சீராய் நதிபெருகிச் சேர்ந்துவரும் வாறுகண்டு,
பேரான மன்னவனும் பேதையரும் பாலகனும்
இந்திரனுஞ் சுந்தரியும் இயல்காசி மன்னவனும்
வந்தவர்கள் சேர மகாசந்தோ சம்பெருகி,
நீராடிச் சிந்தை நிறைந்துமலர் கொண்டுகொண்டு
சீராடல் செய்து சிவபூசை யும்புரிந்து,
அந்த இராமுழுதும் அங்கிருந்து தானெழுந்து,
கந்தமுறும் அய்யோத்தி காதவழி என்னவந்தார்.
மன்னவனார் வாற வகைகேட்டு நாட்டவர்கள்
தன்னுளங்க ளும்மகிழ்ந்து தானானந் தம்பெருகி,
உற்சாக மீறி உடலம்பூ ரித்துவிம்மிச்
செச்சையுட னேசிறந்து சீராக வோடிவந்து,

---

பா. வே. 5360 : 4 மாமரைகள் 1749
5381 : 2 மாகி 1749
5382 : 1, 2, 3 செச்சை யுடனே சிறந்தெழுந்து 1749

மன்னவனைக் கண்டவுடன் வாய்த்தமனு உள்ளதெல்லாம்
பன்னிக் கிருபை பலவாகி, அந்நேரம்
வாடும் பயிரு மழைகண்ட சீரெனவே,
தேடுங் குழவி சிறந்தஅன்னை கண்டதுபோல்,
ஆதுலர்கள் செம்பொன் அதியமுடன் கண்டதுபோல்,
ஓதுங் கமலம் உறுங்கதிரைக் கண்டதுபோல்,
மெத்தமெத்தச் சிந்தை மிகுந்த களிகூர்ந்து,
சித்திரங்க ளாகச் சிறந்துகண்டார் அம்மானை!

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

மன்னவன் அயோத்தி நாடன்
வருகிறான் என்று கேட்ட
கன்னியர் காளை ஏந்தல்
காசினி வளங்க ளேறி,
நன்னிலம் நீதி அன்பு
நயமுடன் வளர்ந்து, தானே
உன்னியே சிறந்து நன்றாய்
உகந்தினி திருந்தார் அம்மா! 138

வஞ்சகம், களவு, பொய்கள்,
வலுப்பிரட் டுருட்டு, கேடு,
நெஞ்சகக் கொடுமை, தீமை
நீள்நிலங் கடந்து தூரம்
மிஞ்சும்அக் கினிகள் தாவ
மிகவெரிந் தகன்று வந்த
பஞ்சுபோல் பறந்து தூளாய்ப்
பார்கடந் தொளித்த தம்மா! 139

### நடை

செல்வம் பெருகுந் திருவயோத் திப்பதியில்
வல்வும் மனிதர் மகாமகிழ்ச்சி தன்னுடனே
மாநகரி யெல்லாம் வளமாய் அலங்கரித்து,
ஆனதெரு வீதிபல(து) அங்கங்கெல் லாமிலங்க,

---

பா. வே. 5386 : 3 சிறந்தன்னை 1749

நேருங் கதலி நிறைகமுகு மஞ்சளிஞ்சித்
தோரணங்கள் தானுஞ் சுகமாக வேநிரைத்(து)
அஞ்சனவேற் கண்ணாரும் அன்புடைய மாந்தர்களும்
கொஞ்சுங் குழந்தைகளும் கோலமத யானையுடன்
வன்னப் பரித்திரளும் வாகனைய தேருகளும்,
மன்னவனைக் கண்டு வணங்கித் துடந்துவந்து,
மங்கையெனுஞ் சந்திரமதி மாதுதனைப் பாலகனைச்
சங்கைபெற்ற மந்திரியெனும் சத்திய கீர்த்தியையும்
இங்கிதமாய்ப் போத்தி இசைவாய் மிகநடக்க,
அங்கவரை நோக்கி அரசன் மிகப்புகழ்ந்து,
துங்கமுடி மன்னருடன் சூழ்ந்தபடை வீரருடன்
சிங்கம் எனவுஞ் சிறந்தரத மீதில்வர,
விருதுக் குடைநிழற்ற மிக்கவிரு தும்புகல
அருமறையோர் வேதமொழி அன்புமிகுந் தோதிவரப்
புரந்தரனுஞ் சுந்தரியும் பூண்டகுரு மாதவரும்
வரம்புகளும் ஆதி மதிதயனார் தம்முடனே,
வீறுபுகழ் அய்யோத்தி மீதுவந்தார் அம்மானை!

கூறும்பல் வீதிக் குலமெங்குஞ் சுத்திவந்து,
வங்கார முத்து மணிவயிரத் தூணிலங்கும்
சிங்கார மண்டபத்தில் சென்றிருந்தார் அம்மானை!

வையகமெல் லாம்புகழும் மாநகரில் பத்திமிகும்
செய்யபளிங் கானதொரு சீரிலங்கு மாளிகையில்,
இந்திராணி கூட இலங்குசந்திர மாமதியும்
சுந்தரியும் பற்பலமா தோழியுடன் வீத்திருந்தார்.

## பட்டாபிசேகம் சூட்டுதல்

அந்தநல்ல வேளை அதியதின மென்றுகண்டு,
சிந்தை யுறும்வதிஷ்டர் சீசனரிச் சந்திரற்கு

பா. வே. 5397 : 4 வேந்தர்களும் 1749
5402 : 2 புத்தியுள்ள 1749
5403 : 2 போற்றி 1749
5407 : 2 குடைநிழத்த 1749

மாமகுடஞ் சூட்ட மகாவேள்வி யும்வளர்த்துச்
சாமவே தம்பறைந்து தார்வேந்தை நீராட்டி
ஆயும் படிசீர் அதியதுக ளும்முடித்துச்
செய்யும்* பலவகையுஞ் செய்துசிறப் பாக்கிவைத்து,
வானோர் புகழ்ந்துசில மங்களங்க ளும்புகல,
மேனான துந்துமங்கள் வீறுபெற வேமுழங்க,
தேவேந் திரனும் செழும்வதிஷ்ட மாமுனியும்
மாவேந் தனுக்கு மகுட முடிதரித்தார்.
மகுட முடிதரித்து மாவதிஷ்டர் அந்நேரம்
நகுமா வதனஎழில் நல்லமன்னர்க் கேதுரைப்பார்—
"நீதிவழு வாமல் நிலைமையுட னேயிருந்து
ஓதுங் குருவுக்(கு) உகந்தசெயந் தந்தமன்னா!
தாலந் தனிலையுந்தன் தாதையைப்போல் மூன்றுசங்கம்
ஆலமுண்ட நாதன் அருளால் புவியிருந்து
மந்திரியும் மங்கையரும் மைந்தனுமிவ் வாறிருந்து
சிந்தைகளி கூரும்"என்று சீர்வதிஷ்ட ரும்முரைத்துப்
பாலனையும் வாழ்த்தியந்தப் பாவையரை யும்வாழ்த்தி,
ஏலமுள்ள மந்திரியை இன்பமுட னேவாழ்த்தித்
தேசிகனார் சென்றிடவுந் தேவேந் திரன்மிகுந்து
வாசியுள்ள மன்னனுக்கு வச்சிரா யுதமருளி,
"ஆளும் புவி"என்(று) அகமகிழ்ந்து தான்வாழ்த்தி,
நீளும் ரதந்தனிலே நேசமுடன் சென்றனர்காண்.
மாதுஅயி ராணியந்த மங்கைசந்திர மாமதிக்கும்
மேதினியில் கிட்டாத மின்தூசும் ஒன்றுதவிப்
புத்திரனைப் பூவையரைப் போதமிக வேவாழ்த்திச்
சித்திரங்க ளாகச் சிறந்துசென்றார் **அம்மானை!**

வண்ணமுடி மன்னன் மதிதயனுஞ் சேனைகளும்,
நண்ணுபுகழ்க் காசி நரபால னுந்தளமும்,

---

பாடவேறுபாடு

*5424 : 1* சேயும் *1749*

*5434 : 4* புவிபுரந்து *1749*

தானம் ஒன்றாத எதுகை.

சீரார் அயோத்தியிலே சென்றுசில நாளிருந்து
வீரமுடன் தங்களுட மிக்கபதி வந்தடைந்தார்.
தேசம் புகழச் சிவமயமெல் லாம்விளங்க
வாசம்புகழ் மந்திரியும் மன்னவனும் நீதியுடன்
எண்டிசையெல் லாம்புகழ இயல்சக் கரங்களுடன்
மண்டலத்தை ஆண்டிருந்தான் வன்மையுடன் **அம்மானை!**

வாழி! மிகவாழி! வானுலகெல் லாம்வாழி!
ஆழி உலகில் அனைவோரும் தான்வாழி!
மறையோர்கள் வாழி!மணி மந்திரங்கள் தான்வாழி!
இறையோர்கள் வாழி! இகம்பரம்இன் னோர்வாழி!
சந்திரருஞ் சூரியருந் தானவரும் வானவரும்
இந்திரருந் தேவர்களும் எல்லோரும் வாழியதே!
அம்புவியில் இந்த அரிச்சந் திரன்கதையை
இம்ப முடனே இதமாய்ப் படித்தவரும்
எழுதிமிக வைத்தவரும் இன்பமுடன் கேட்போரும்
பழுதில்லா ஈசன் பதம்பெற் றிருந்திடுவார்.

## கலி விருத்தம்

ஆதி வாழி! அருமறை வாழி! மன்
நீதி வாழி! நிரைவளம் வாழி! பொன்
மாது வாழி! மறையவர் வாழி! கண்(டு)
ஓது சாதியில் உள்ளவர் வாழியே! 140

உரைப்பவர் செவிப்புறத் தூகந்து கேட்பவர்
விருப்பமுத் தெழுதியே மிகவும் வைத்தவர்
திருப்பெருங் கடவுளார் பதத்தைச் சேர்ந்தினி(து)
இருப்பரெந் நாளுமின் னிதையங் கூரவே. 141

---

பாட வேறுபாடு

5450 : 4 சென்றடைந்தார் 1749

5462 : 1 இன்ப 1749

5463 : 3 இசைவாகக் 1749

**மூன்றாம் பகுதி :**

பிற்சேர்க்கைகள்

விருத்தங்களின் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

அருஞ்சொல் அகரவரிசை

துணை நூற்பட்டியல்

பிற்சேர்க்கை—1

# ஒப்புமைப் பகுதிகள்

## அரிச்சந்திரன் அம்மானை-அரிச்சந்திர வெண்பா

1. சந்திரமதியின் சுயம்வரத்தில் கலந்துகொள்ள அரிச்சந்திரன் செல்லுகையில் வழியில் இருந்த காளிகோயிலுட் சென்று காளியை வணங்கும்பொழுது, அங்கிருந்த கற்றேர், கற்கணை முதலியன பொற்றேர், பொற்சிலை முதலியனவாகக் காட்சிதர அரிச்சந்திரன் அவை பற்றிக் காளியிடம் கேட்டல்; காளிதேவி அவற்றின் வரலாறு கூறி அவற்றை அரிச்சந்திரனுக்கு வழங்குதல்.

அரிச்சந்திரன் அம்மானை

பாடல் அடி எண் : 850 — 883

விருத்தம் : 27, 28.

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

[ உரைப்பாட்டு ]

......... இ(ர)தஞ் செகதலைத்தி லே(றும்)படி
யாவராலும் தரிக்கவொண்ணா தென்கின்ற வெண்ணா...
(க)ல்லாகச் சாபித்தென் கரங்காட்டிக் கொடுக்கா நின்ற
மல்லாருந் தடந்தோளா(னு)ம் ஒருவரத்தைக் கூறினன்;
சத்தியத்தாலும் தன்மத்தாலும் தானத்தாலும் வீரத்தாலும்
உத்தமனா யிருக்கின்றான் யாவனொருவன் சந்தித்தால்
சிவனருளால் சாபம் நீங்கித் திவ்வியரூப மவைகூடின்
அவனருளால் அவன்றனக்கே அருள்கநீயே வரனென்று.

பின்னும் யாது சொன்னாள் கற்பகாளி

ஆர்க்குங் கழலாய்(நீ) அவ்வரைக ளப்படியே
பார்க்கவிவை சாபம் பறிந்தவால் — போர்க்குத்
தெருளாத தேருஞ் சிலைகணைக ளாமென்
றருளா லளித்தா ளவள்.

என்பது

[ உரைப்பாட்டு ]

சிலைபோலும் நெடுஞ்சிலையும் தேரும்திவ் யாஸ்திரமும்
நிலவேந்தே ! உன்னைக்கண்டபின் நெடுஞ்சாபம் நீங்கிற்றாதலின்
அருணவண்ணன் வரப்படியே ஆள்கையுனக் காகுமென்று
பெருநடஞ்செய் பெண்கொடுப்பப் பெற்றுநின்ற அரிச்சந்திரன்.

2. சந்திரமதி மதனவிசாரம். அரிச்சந்திரனையே எண்ணித் துயிலாதிருக்கும் சந்திரமதி, "இந்த இரவு இப்படி நெடிதாயிருக்கின்றதே! எத்தனை யுகங்கள் சேர்ந்தது இந்த இரவு?" எனல்.

அரிச்சந்திரன் அம்மானை

"எத்தனை கோடியுகம் இந்தஇர வென்றுரைப்பாள்"

(அடி எண். 1021)

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

" ஊழிவாய் கூடி ஒருகங்கு லானதோ "

(சுயம்வர காண்டம்—18)

3. சுயம்வரம் நிகழ்ந்ததும், அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் திருமணம் நடைபெறுதல்.

அரிச்சந்திரன் அம்மானை

பாடல் அடி எண்: 1288—1305

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

நெல்லும் பொரியும் நிறையும் நறுநெய்யும்
புல்லும் சமித்தும் பொலிவெய்த — மல்லலணி
பூமறையோர் தாமென்னப் பொங்குமணி மண்டபத்தே
மாமறையோர் வந்தார் மகிழ்ந்து. 30

என்பது

[ உரைப்பாட்டு ]

விரத ச(மிதை)களும் முன்கொணர்ந்து
விப்பிரசனம் மிகக்கூடி
விவாகயக்ஞும் (எங்ஙனம்) செய்தாரோவெனில்

மாதும் அரசும் வலமுமிட முஞ்சிறப்ப
வேதநெறி யெல்லாம் மிகச்செய்து — போதில்
அருந்துதியுங் காட்டி அருமறைநூல் தன்னால்
இருந்துதியு மிட்டார் எடுத்து. 31

என்பது

[ உரைப்பாட்டு ]

விப்பிரசமயம் மிகத்திரண்டு
வேதபுருஷன் சொன்னபடியே
கருமமான தொழிலெல்லாம்
கடவாத படியாக
அக்கினிதேவனை மிகவளர்த்து
ஆகுதிகள் பலகொடுத்துப்
பத்தினியுடன் பர்த்தாவுக்குப்
பாணிக்கிறாணஞ் செய்துகொடுத்துச்
[சத்த]தானம் மிகநடத்தித்
தாரகையை மிகக்காட்டி
உத்தமமான மந்திரத்தை
ஒளிபெறவே கொடுத்தார்
மகாசனங்க ளென்றவாறு.

4. திருமணமானதும், அரிச்சந்திரனும் சந்திரமதியும் இன்பம் நுகர்தல்.

அரிச்சந்திரன் அம்மானை

பாடல் அடி எண் : *1338 — 1347*

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

**கோயில் புகுந்து குலவு நவரத்ன**
**வாயில் அமைத்த மணியறையில்—நேயம்**
**கரையழிய இன்பக் கடல்வீழ்ந்தார் வீழ்ந்தார்**
**விரைகமழ்ந்த மெல்லமளி மேல்.**

*(சுயம்வர காண்டம்—33)*

5. சந்திரமதி கருப்பமுறுதலும் குழந்தை பெறுதலும்.

அரிச்சந்திரன் அம்மானை

விருத்தம் : 55

அடி எண் ; 1439 — 1450

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

பொற்புடைய கோயில் புகுந்து பொலிவாகச்
சொற்புடைய தானத் தொழில்புரிந்து—சுற்றம்
மருவிளங்கு தாரானும் வாணுதலும் வாழ்ந்தார்
திருவிளங்க இன்பஞ் சிறந்து. 44

என்பது

[ உரைப்பாட்டு ]

மிகலரிய கோயில்புக்கு
வேண்டுந்தானத் தொழில்முடித்துச்
சகலசுகமும் அனுபவித்துச்
சகிருதயராய் நடந்தகாலத்துச்
சந்திரமதி வயிறுவாய்த்தாள்
அது எவ்வகையோவெனில்

கொங்கை [முகம்]கருகக் கோல நிறம்வெளுப்பத்
தங்குமிடை ஈதென்று தானறிய—அங்கே
உருவுயர உந்தி உரோமநெறி காட்டத்
திருவயிறு வாய்த்தாளத் தேன். 45

என்பது

[ உரைப்பாட்டு ]

மன்களபக் கொங்கை
முகங்கறுத்து மடைவிரியப்
பொன்புனையுந் திருமேனி
நிறம்வெளுத்துப் பொலிவெய்தக்

கார்ணவொண்ணா இடைகாணக
கடைஅல்குல் மிகப்பெருகப்
பூணரிய திருவயிறு
உரோமத்தாற் பொலிவெய்த
மருவிரியும் தடங்குழலாள்
வயாநோய் மயக்குற்றுத்
திருவயிறு வாய்த்தாள்
ஒரு சிரீகுமாரனை, எ-று.

6. தேவேந்திரன் அவையில் வீற்றிருந்த முனிவர்கள் :

அரிச்சந்திரன் அம்மானை

அடி எண் : 1528 — 1542

அரிச்சந்திர வெண்பாவில் இதனை ஒத்த பகுதி:

சனக சனந்த சனற்குமா ரீசன்
[அனக] முனிக ளமர்ந்தார்—வினவியசீர்
காசி முனிவன் கவுசிகன் நாரதன்
வாசவன்முன் னேயிருந்தார் வந்து. 54

என்பது

[ உரைப்பாட்டு ]

சனக சனந்த சனற்குமா ரீசன்
அனகமுனி சமதக்நி பிருகு நகுஷன்
அத்திரி வான்மீகி ஜைமிநி வசிஷ்டன் விசுவா
மித்திரன் பரத்துவாசன் உரோமரிஷி நாரதன்
கௌதமன் இரணியகேசி கவுணியன் அகத்தியன்
புலத்தியன் க[ா]திமார்க்கண்டன் புதன் போதாதிபன் முதலாயுள்ள
மகரிஷிகளும் புடைசூழ இருந்த தேவேந்திரன்

(சலம்வரு காண்டம்—7)

7. தேவலோகத்தில் தேவேந்திரன் முன்னிலையில், தேவேந்திரனின் வினாவுக்கு விடையாக, 'மண்ணுலகில் சத்திய நெறிப்படி விளங்கும் மன்னன் அரிச்சந்திரனே' என வசிட்டர் உரைக்க, அதனை மறுத்து விசுவாமித்திரர், 'அரிச்சந்திரன் சத்திய நெறிப்படி விளங்கும் மன்னன் அல்லன்' எனக் கூற, அதன் தொடர்பாய் எழுந்த வாதத்தால் இருவரும் சொல்லும் சபதம்:

அரிச்சந்திரன் அம்மானை :

அடி எண் : 1593 — 1612

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

நன்னெறியை விட்டு நரர்தங் கபாலத்தே
துன்னிய கள்ளைச் சுவைகொண்டு — புன்னெறியே
தெற்காகப் போவன் திறலோன்பாற் பொய்யென்னுஞ்
சொற்காணில் என்றான் துணிந்து. 71

என்பது

[ உரைப்பாட்டு ]

அரிச்சந்திரன் மறந்தாகிலும்
அசத்தியம்சொன்னா னாமாகில்
தரித்தசுருதி குலஞ்சார்ந்த
தன்மமார்க்கந் தனைத்துறந்து
மனித்தர்தம் கபாலத்தில்
வார்த்தசுரை தன்னையள்ளித்
தெரிபடவே மிகக்குடித்துத்
தெற்குநோக்கிப் போவன்என்று
அதிபாஷை வசிட்டன் கொடுக்கையில்......

(சலப்பரு காண்டம் — 24)

காமமதங் கோபம் கடிந்த[ஞ்சு மோதி]யே
தாமரையின் ஆசனத்தே தானிருந்து — நாமச்
சிவன்றனக்கா யானிருந்து செய்தவத்தே பாதி
அவன்றனக்கா கென்றான் அவண். 78

என்பது

[உரைப்பாட்டு]

காமக்குரோத லோபமோக
மதமாற்சரியந் தனைக்கடிந்து
சேமமிகு அஞ்செழுத்தையுஞ்
சிக்கெனச் சிந்தையில் உறவழுத்திப்

பஞ்சாக்கினி மத்தியத்திலே
பத்மாசனத் துடனிருந்து
நெஞ்சாரவே நான்செய்த
நிலையுடைய மகாதபசின்
ஒன்றுபாதி யான்கொடுப்பன்
உண்மைமார்க்கத்து அரிச்சந்திரன்
நின்றானாகில் எனஉரைத்த
விசுவாமித்திரன் ..........

(சலம்வரு காண்டம்—31)

8. அரிச்சந்திரனிடம், முனிவர்களை அனுப்பி வேள்விக்குப் பொன் கேட்ட விசுவாமித்திரர், தானே நேரில் சென்று அளவுகுறித்துக் கூறிப் பொன் கேட்டல்:

அரிச்சந்திரன் அம்மானை :

அடி எண் : 1709 — 1726

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

தவமுனிவீர் வேண்டுமது சாற்றுமெனத் தானும்
இவுளிமத யானைமேல் ஏறிக்—கவணை
எடுத்தெறிந்த தூரத் திருநெதியுஞ் சேரக்
கொடுத்துவிடு கென்றான் குறித்து. 101

என்பது

[உரைப்பாட்டு]

மாமுனி[நீர்] வேண்டியதை வகுத்துரையும் எனமுனியும்
காமமத யானையேறிக் கடுங்கவணைமிக விடைபோக்கி
எடுத்தெறிந்த தூரம்வத்து ராசிஎனக்கு அளிக்களன்று
திவ்வியவேத முனியுரைக்கத் தேர்வேந்தன் யாதுசொன்னான்

(யாக காண்டம்—13)

அந்தப் படியே அருள்வன்பொன் கொள்கென்று
முந்தச் சொரிய முனிதானும்—செந்தேன்
வருக்கை சொரியும் வளநாட நின்பால்
இருக்கவெனச் சொன்னான் எடுத்து. 102

9. விசுவாமித்திரர், அரிச்சந்திரனை உதைத்துப் பின் சாபமும் இடும்போது, அரிச்சந்திரன் பணிந்து கூறும் மொழிகளில் இடம்பெறும் உவமைகள்:

அரிச்சந்திரன் அம்மானை :

பாலமுர்தம் ஊட்டிப் பரிவாய் வளர்த்திடும்தாய்
ஆலமிட்டால் பிள்ளை அறிந்துதள்ளிப் போறதுண்டோ?
வாரி கொதித்தெழுந்தால் வையகத்தில் வாழுமவர்
நேருங்கரை கட்டி நிறுத்திவிடக் கூடுமோதான்?
வானத்(து) இடிவிழுந்தால் மானிடவர் கைக்குடையால்
ஆனபடி தாங்கி அதைவிலக்க வல்லவரோ

(அடி எண் 2609—2614)

அரிச்சந்திர வெண்பாவில் இந்த உவமைகளில் முதல் உவமை இடம் பெற்றுள்ள ஒத்த பகுதி :

கடல்கொதித்தால் வேறு கலக்கநீர் உண்டோ
உடல்பகைத்தால் வேறுதுணை உண்டோ — படிமீது
தாய்பகைத்தால் வேறு தமருண்டோ தாழ்சடையாய்!
நீபகைத்தால் உண்டோ நிலை. 192

(விசுவாமித்திரப் பிரவேச காண்டம் — 12)

ஈன்றாள்நஞ் சிட்டால் எவர்பிழைப்பார் இவ்விடமே
சான்றோய்! விழுங்கிற் றரிப்பவர்யார் — ஊன்றவெனை
என்றுங்காப் பாய்நீ இடர்செய்வை யாகிலினி
ஒன்றியெனைக் காப்பவரார் ஓது. 216

(விசுவாமித்திரப் பிரவேச காண்டம் — 37)

மற்ற இரண்டு உவமைகளும் அரிச்சந்திர வெண்பாவில் வேறு இடம் வேறு சூழலில் இடம்பெற்றுள்ளன.

தேவலோகத்தில், தேவேந்திரன் முன்னிலையில், வசிட்டரும் விசுவாமித்திரரும் அரிச்சந்திரனின் வாய்மை குறித்து வாதிட்டுக்கொண்டிருக்கையில் விசுவாமித்திரர் கூற்றாக அவ்விரு உவமைகளும் காணப்படுகின்றன.

இடிவிழும்போ[ழ்] கைக்குடைதான் ஏந்துமோ நேர்
படிவிழும்போ[ழ்] தாங்கப் படுமோ — கடுவினையாற்
சாதிக்க என்று தொடங்கினாற் றப்பாதுன்
போதி[ப்பா]ல் என்னாம் புகல். 82

என்பது

[ உரைப்பாட்டு ]

காரிடிதான் விழும்போது
கைக்குடைதான் காத்துநிற்குமோ
பாரிடந்தான் விழும்போது
பலரும்ஓடித் தாங்கவல்லரோ
விசும்புமேலே விழும்போது
வெற்பிடைதான் தடுத்துநிற்குமோ
அசும்படைய வாரிபொங்கினால்
அணைகள்கட்டி ஆவதுண்டோ
யானேசென்று அரிச்சந்திரனை
இரண்டுசொல்வா னாக்கும்போதில்
நீயேதான் போதித்தாலும்
நிறுத்தவல்லையோ முனியே என்று சொல்ல ...

சலம்வரு காண்டம் — 35

10. விசுவாமித்திரர், அரிச்சந்திரனின் நாட்டை விலங்கு, பறவைகளை அனுப்பிப் பாழாக்கத் திட்டமிடுதல்.

அரிச்சந்திரன் அம்மானை
பாடல் அடி எண்: 1727—1737

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

மிருகம் விடுத்தால் விரை .. யால்
வருவன் இறைவேட்டை வந்தால் — ஒருவழியே
என்வனத்தே கூட்டி இடர்செய்வன் என்றெண்ணித்
தன்வனத்தே போனான் தவன். 18

என்பது

[ உரைப்பாட்டு ]

ககமிருக[ங்களா]ல் லோகமெல்லாங்
கட்டழித்தால் காராளர்
மிகவுஞ்சென்று வேந்தனுக்கு
முறையிடுவர் வேல்வேந்தனும்
தன்நிலத்தோர் முறைகேட்டுத்
தரியானாகி மிருகயாத்திரை
புன்வனத்தினி டைப்போதுவன்
போந்தவனை உபாயத்தினால்
என்னுடைய தபோவனத்தில்
எய்துவித்திடர் செய்குவன் என்று
தன்னுடைய ஆசிரமந்
தனிற்புகுந்தான் விசுவாமித்திரன் எ—று.

(யாக காண்டம்)

**11.** அரிச்சந்திரனுடைய நாட்டின் பயிர் முதலானவற்றை விசுவாமித்திரர் ஏவிய விலங்குகளும், பறவைகளும் அழித்தல்.

அரிச்சந்திரன் அம்மானை

அடி எண் : 1781 — 1804

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

முளைஉழுவை தின்னும் முளைதப்பி வந்தால்
கிளையிரலை நேரே கெடுக்கும் — விளை[வைக்]
கிளிமயில்கள் தின்னும் கிழங்குகளைக் கேழல்
வெளியுருவ வாங்கி விடும். 4

என்பது

[ உரைப்பாட்டு ]

விதையடங்க எறும்பிழுத்தும்
மிகுந்ததனை உழுவைகொண்டும்
முளையடங்கப் பறிபோயும்
முகிழ்த்ததனைக் கலைமான்தின்றும்

கதிரடங்கக் கிளிதின்றும்
மயில்பறித்தும் காயடங்க
மதியடங்கிய குரங்குதின்றும்
வளர்கிழங்குகளை வராகம்தின்றும்
இராச்சியத்துள்ளார் பீடையெய்த
மற்றும் எவ்வண்ணம் அழிவுசெய்தவோவெனில்

தோப்படங்க வேழம் துவைத்தெடுக்கும் சூழ்போகிக்
காப்பவரை நாகம் கடித்துயிர்க்கும் — மாப்போய்
வழித்ததேன் தாரான் வளநாடு தன்னை
அழித்ததே சென்றங் கவை.

என்பது

[ உரைப்பாட்டு ]

பொழிலடங்கக் கரியொடித்தும்
புனலடங்க முதலைபாய்ந்தும்
வழியடங்கப் புலிகரடி
நலிவுசெய்து மாடுகொன்றும்
ஆங்கவற்றைக் காப்பவரை
அரையிருள்வாய் அரவுதீண்டியும்
ஆங்கொருவர் இயங்கவின்றிப்
போகவின்றி அழிவுசெய்தலும்... ... ...

(மிருக யாத்திரைக் காண்டம்)

12. வேட்டை நாய்களின் உருவத்தோற்றம்.

அரிச்சந்திரன் அம்மானை

விருத்தம் : 71

பாடல் அடி எண் : 1905, 1906

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

வாலுஞ் செவியும் மருங்குலையி றுஞ்சிறுத்து
மேலும் உரமும் மிகப்பெருத்துக்—காலும்
நிறைந்த உடம்பும் நெடியகடு நாய்கள்
சிறந்தவே எங்கும் திரிந்து.

(மிருகயாத்திரைக் காண்டம் — 13)

13. அரிச்சந்திரனின் வேட்டைப் படையை அழிக்க விசுவாமித்திரர் படைத்த பன்றியின் உருவத்தோற்றம்.

அரிச்சந்திரன் அம்மானை

கண்கள் பவளநிறம்; காலுவெள்ளை; வாலுவெள்ளை;
பொங்குகுளம் பொன்னிறமாய்; போற்றியயெய் நீலநிறம்;
பச்சைநிறந் தான்முதுகு; பாரமுகம் அப்படியே;
வச்சிரநிறங் கொம்பிலங்கும் வன்மையுள்ள பன்றிகண்டீர்!

(2121 — 2124)

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

தன்னிறம் பொன்னிறம் தாளின் குளம்நீலம்
முன்னுரம் வெள்ளை முகம்பச்சை — செந்நிறம்
கண்கொம்பு வச்சிரமாங் காட்டேனம் கண்டுகந்தார்
திண்கொம்பின் வேடர் திரள்.

(மிருக யாத்திரைக் காண்டம் — 23)

14. தன்னை விழுந்து பணிந்து வணங்கும் அரிச்சந்திரனை விசுவாமித்திரர் காலால் உதைக்க, அரிச்சந்திரன் உதைத்த விசுவாமித்திரரின் பாதம் நோகுமே எனக் கவன்றுரைத்தல்.

அரிச்சந்திரன் அம்மானை

அடி எண் : 2485 — 2493

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

வணங்காமுடியான் வணங்கி ......... .........
பாதம் மிகநொந்ததேயென்னக்கைய ......... .........
வருகின்ற கோபாக்கினியைப் பார்த்து
வேந்தர்வேந்தன் ............ யைக் கையில்வாங்கி
நடந்துமிக எதிர்சென்று .........ணாக மண்ணிடையில்
உடம்புவைத்து ......... மணிமுடிமேற் கவுசிகனும்
உதைக்க ............ வேந்தன்றானும் பதைத்துப்
பாதம்பிடித்து தாளிணை உதைத்தால்
கன்றுமோ நொந்தென்று ... ...... .........

(விசுவாமித்திரப் பிரவேச காண்டம்
6-ஆம் பாடலை அடுத்த உரைநடை)

15. அரிச்சந்திரனை நோக்கி விசுவாமித்திரர், "நான் அனுப்பிய இரு கன்னியரையும் புலைச்சியர் என இழித்துப் பேசிய நீயே புலையனுக்கு அடிமையாவாய்" எனச் சபித்தல்.

அரிச்சந்திரன் அம்மானை

அடி எண்: 2604—2606

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

மங்கையையும் மைந்தனையும் மாறுவித்து மந்திரியை
அங்கங்கு நீக்கி அரிவையர்கள்—தங்களைச்
சண்டா ளியரென்ற உன்னையுமச் சண்டாளன்
கொண்டாள வைப்பேன் குறித்து. (215)

என்பது

[உரைப்பாட்டு]

சந்திரமதியையும் லோகிதாக்ஷனையும்
தரிப்பின்றியே விலைப்படுத்தி
மந்திரியாகிய சத்தியகீர்த்தியை
மனைதொறும் இரக்கவைப்பேன்
என்னுடைய மக்கள் தம்மை
இகழ்ந்துபுலை மாதரென்ற
உன்னையும்அச் சண்டாளனுக்கு
ஆளாக ஒருப்படுத்துவேன்
என்றுமுனி கூறுதலும்..........

(விசுவாமித்திரப் பிரவேச காண்டம்)

16. விசுவாமித்திரர், அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் அவர்தம் மகனையும் நோக்கி, 'அணிந்துள்ள ஆடை, ஆபரணங்களைக் கழற்றிக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்' என்றுரைக்க, அரிச்சந்திரன், "உடுத்துவதற்கு ஆடை யாரிடம் சென்று இரப்போம்" என, விசுவாமித்திரர் பழைய துகிலினைக் கிழித்துக் கட்டிக்கொள்ளத் தருதல்.

அரிச்சந்திரன் அம்மானை

அடி எண்: 2734 — 2757

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

நில்லாது தேரிவர்ந்து சென்றானை நீள்தவத்தோன்
எல்லா நிதியும் எனக்கென்று—சொல்லி
அளித்தாய் உனக்குண்டோ ஆபரணம் என்ன
ஒளித்தாரான் ஈந்தான் உடன். 227

என்பது

[ உரைப்பாட்டு ]

கவுசிகர்கோன் தொடர்ந்தழைப்பக்
கண்டவேந்தன் தேரிழிந்து
தவமுனிவன் பாலணைந்து
சாற்றுகநீ அழைத்ததுஎன்றலும்
மற்றவனை முகம்நோக்கி
மகாமுனிவன் அருளிச்செய்வான்
பூணாரம் தருகவென்று
போர்வேலான் றனக்குரைப்ப
மன்னவனும் தன்னுடைய
வயங்கொளிசேர் பூணாரமும்
மின்னிடையாள் பூணாரமும்
இளங்குமரன் பூணாரமும்
மந்திரிதன் பூணாரமும்
வாங்கிஅவன் கைக்கொடுத்துத்
தந்தேன் இனிப் போகின்றேனெனத்
தடுத்து முனிவன் யாதுசொன்னான்.

மாடை அணிகலங்கள் வாங்கிக் கொடுத்ததற்பின்
ஆடைதனைத் தாரீர் அழித்தென்றான் — ஆடை
வழங்குவகை எப்படியோ மாமறையோய்! என்ன
முழங்குநகை செய்தான் முனி. 228

என்பது

[ உரைப்பாட்டு ]

[ ஆபரணங் கொடுத்ததற்பின் ]
அரிச்சந்திரா ஈண்டுடுத்த
வத்திரங்களும் தாவென்ன
மானவேந்தனும் உரைசெய்வான்

உடுத்தபுடவை முதலாக
அதனைநாங்கள் கொடுத்தக்கால்
உடுக்கவேறுண் டோஎன்ன
... ... ... ... ...
தடுப்பரியதாய் மிகநகைத்துத்
தவமுனிவன் யாதுசொன்னான்

மன்னர் அறிவில்லார் மற்றறிந்தோம் இன்றென்று
துன்னம் பொதிந்த துகிலொன்றை — உன்னாமல்
நாலாகத் தான்கிழித்து நாடாது வீசினான்
மேலாகப் போவார்கள் மேல். 229

என்பது

[உரைப்பாட்டு]

பொற்புடைய வேந்தர்சற்றும்
புத்தியில்லா ரென்கின்றதை
அற்புதமே அரிச்சந்திரன்பா
லறிந்துவிட்டோ மெனநகைத்து
மாலாகியோர் விருத்தப்பிராமணன்
உடுத்தபீறற்சீலையை விரைந்துவாங்கி
நாலாகத் தான்கிழித்து
ஞாலங்காவலன் மேலெறிதலும்
சத்தியசந்தன் யாதுசெய்தானோவெனில்

'அடுத்த பழமுறியை ஆங்கவர்கள் வாங்கி
உடுத்த[கலை] நின்றகலை யோற்குக்—கொடுக்க' 230

என்பது

[உரைப்பாட்டு]

நிலையில்லாத பழஞ்சீலையை
நிலங்காவலன் சென்றுடுத்து
விலையுடைய வஸ்திரத்தை
விசுவாமித்திரன் முன்கொடுத்தலும்

17. அரிச்சந்திரன் தன்நாட்டை விசுவாமித்திரருக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு நாட்டினின்று நீங்குவது கண்ட நாட்டு மக்கள், "அரிச்சந்திரன் அரசாண்ட இடத்தில் இருந்து விசுவாமித்திரர் ஆள்வதா?" எனக்கேட்கும் பகுதியில் இடம்பெறும் உவமை.

அரிச்சந்திரன் அம்மானை

வலியசிங் கேறுறை மலைமு ழுஞ்சியில்
ஓலியிடு நரிவள ரொத்த தென்பரே!"

விருத்தம்—89

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி:

அரியிருந்து வாழிடத்தே யஞ்சாமற் சென்று
நரியிருந்து வாழுமோ நாட்டீர்—விரிசடை
பற்றீ ரெனவுரைத்தார் பக்கத்தே போதுகின்ற
ஒற்றாளன் கேட்டான் உழன்று. 282

(காசி யாத்திரைக் காண்டம்)

18. நாட்டினின்று நீங்கும் அரிச்சந்திரனிடம் மக்கள் சென்று, 'விசுவாமித்திர முனிவரை நாட்டைவிட்டு விரட்டியடிக்கின்றோம்' என்று சொல்லி வசவு மொழிய, அரிச்சந்திரன் மக்களை நோக்கி அவ்வாறு உரைக்கக் கூடாது என அறிவுறுத்த, அப்பொழுது அங்குவந்த விசுவாமித்திரர், 'உன் நாட்டு மக்களைத் தூண்டிவிட்டு என்னை வைதுதள்ள முயலுகின்றாய். உன் நாடு நகர் முதலியன எனக்குவேண்டாம். நீயே வைத்துக்கொள்' என அரிச்சந்திரனிடம் மறுத்துரைத்தல்; அரிச்சந்திரன் அதற்கு மறுமொழி கூறல்.

அரிச்சந்திரன் அம்மானை:

'நாட்டில் புகழுடைய நல்லமன்னா! நீயுமிப்ப
கூட்டமுடன் இந்தக் குவலயத்தார் தன்னைவிட்டுப்
போட்டி பலவுரைத்துப் போதவைது தள்ளவென்றாய்;
உன்னாடும் உன்னரசும் ஒப்புதில்லை எந்தனுக்கு
மன்னாநீ! தந்ததில்லை என்னுமொரு வார்த்தைசொல்லி
அரசு நிலையிலிரு; யான்போறேன்;" என்றுமுனி
விரசிச் சினம்பெருகி வேந்தனுடன் கூறினன்காண்;

கூறுமொழி தான்கேட்டுக் கொத்தவனுஞ் சொல்லலுற்றான்—
"பேருடைய மாமுனியே! பேறாய் உனக்களித்த
நாடுதந்த தில்லையென்று நானுரைப்ப தென்றுமில்லை;
நீடு நிலையறியா நிர்மோடர் சொன்னதெல்லாம்
தாண்டவங்க ளாடுஞ் சதாசிவனார் தம்மருளை
வேண்டும்பெரி யோர்பொறுக்க வேணுமய்யா" என்றுசொல்லி

(அடி எண்: *2918 — 2930*)

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

என்வனத்தைக் கட்டழித்தாய் ஏனந் தனைக்கொன்றாய்
நின்மனத்துக் கானாற்போல் நீவைதாய் — உன்மனித்தர்
நின்றாரை வைவித்தாய் நீகொடுத்த பேரரசைப்
பொன்றாமற் கைக்கொள்வாய் போந்து. 13

என்பது

[ உரைப்பாட்டு ]

முன்னம்நீயென் வனந்தன்னை
முறித்தெறிந்தங் கழிவுசெய்தாய்
பின்னையந்த வனந்தன்னில்
மிருகமெல்லாம் பிடித்துக்கொன்றாய்
நின்மனத்துக் கானாற்போல்
நீயிழிவாகப் பரிபவித்தாய்
இப்படி ... ... ச்சாதி
இவரைக்கொண்டு சொல்விப்பரோ
அப்பொழுதே நீவேண்டினால்
அரசடங்க யான்கொடேனோ
ஒப்புக்கொள்ளாய் உன்னுடைய
இராச்சியத்தை எனஉடன்ற
விசுவாமித்திரன் மொழிகேட்டு
வேந்தர்வேந்தன் யாதுசொன்னான்.

வெறுக்கக் கடவ வி[னயமி]லார் சொல்லைப்
பொறுக்கை பெரியோர் புகழ்காண் — ஒறுக்கை
ஒழியாய் எனவே உருத்தமுனி நெஞ்சம்
அழியாமல் ஆற்றினான் ஆங்கு.

(காசியாத்திரைக் காண்டம் — 15)

**19.** விசுவாமித்திரர் சுக்கிரனிடம், அரிச்சந்திரனுடன் காட்டில் செல்கையில் நடந்துகொள்ள வேண்டிய முறையினைக் கூறுதல்.

அரிச்சந்திரன் அம்மானை

விருத்தம் : 92, 93.

அடி எண் : 2887 — 2891

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

சற்றுநாட் காட்டித் தகைவாக்கித் தானசனம்
பெற்றநாட் கொண்டு பிணக்காகி — மற்றைநாள்
மன்னுடம்பு நோவ வழிமாற்றி மாறாதே
உன்னுடம்பு நோவென் றொழி. 18

வகைந்த பொருள்வருகை வாராது போகத்
தகைந்து பலநாள் தவிர்த்துப் — பகர்ந்த
மொழிக்குப் பழுதா[ய்] முயல்பயண மெல்லாம்
கழிக்குமதே கண்டாய் கடன். 19

(காசியாத்திரைக் காண்டம்)

**20.** நாடுதுறந்து அரிச்சந்திரன், சந்திரமதி, லோகதாட்சணன் ஆகியோர் வெங்கானக வழியாக நடந்து செல்கையில், சந்திரமதி தன்வருத்தம் எண்ணாமல் அரிச்சந்திரனின் வருத்தத்தையே எண்ணுதல்.

அரிச்சந்திரன் அம்மானை

"வெங்கா னகத்தில்வழி பேவுமடி கொப்பளிக்கப்
பொங்கிவெகு சோரி புனல்கசிந்துப் ஓடிடவே
தன்கால் வருத்தமது தன்வருத்தம் எண்ணாமல்
மன்கால் வருத்த மனவருத்தந் தானாகிக்
கண்டுகண்டு சந்திரமதி" (3079—3083)

அரிச்சந்திர வெண்பாவில் உள்ள இதனை ஒத்த பகுதி :

" வெந்தழற் கானம் " (32)

' கால்களெல்லாங் கொப்புளங் கொள்ளத்
தினகரன்றன் கிரணத்தால் ' (உரை)

"தன்வருத்தம் பாராள் தனியே வருந்துகின்ற
மன்வருத்தம் கண்டு மனந்தளர்வாள்" (33)

(காசியாத்திரைக் காண்டம்)

# ஒத்த உவமைகள்

## அரிச்சந்திரன் அம்மானை-அரிச்சந்திர வெண்பா

1 "வானத்(து) இடிவிழுந்தால் மானிடவர் கைக்குடையால்
ஆனபடி தாங்கி அதைவிலக்க வல்லவரோ?"*

அரிச்சந்திரன் அம்மானை—2613, 2614

"இடிவிழும்போ[ழ்] கைக்குடைதான் ஏந்துமோ நேரே"
"காரிடிதான் விழும்போது கைக்குடைதான் காத்துநிற்குமோ"

அரிச்சந்திர வெண்பா
சலம்வரு காண்டம்—35,
உரைப்பாட்டு

2 "பாலமுர்தம் ஊட்டிப் பரிவாய் வளர்த்திடும்தாய்
ஆலமிட்டால் பிள்ளை அறிந்துதள்ளிப் போறதுண்டோ?
வாரி கொதித்தெழுந்தால் வையகத்தில் வாழுமவர்
நேருங்கரை கட்டி நிறுத்திவிடக் கூடுமோதான்?"

அரிச்சந்திரன் அம்மானை—2609—2612

"கடல்கொதித்தால் வேறு கலக்கநீர் உண்டோ
உடல்பகைத்தால் வேறுதுணை உண்டோ—படிமீது
தாய்பகைத்தால் வேறு தமருண்டோ தாழ்சடையாய்!
நீபகைத்தால் உண்டோ நிலை."

அரிச்சந்திர வெண்பா
விசுவாமித்திரப் பிரவேச காண்டம்—12

"ஈன்றாள் நஞ் சிட்டால் எவர்பிழைப்பார் இல்லிடமே
சான்றோய்! விழுங்கிற் றரிப்பவர்யார்—ஊன்றவெனை
என்றுங்காப் பாய்நீ இடர்செய்வை யாகிலினி
ஒன்றியெனைக் காப்பரார் ஓது."

அரிச்சந்திர வெண்பா
விசுவாமித்திரப் பிரவேச காண்டம்—37

---

* இவ்வுவமை 'அரிச்சந்திர புராணத்'தில் இடம்பெறாமை குறிப்பிடத் தக்கது.

"அசும்புடைய வாரிபொங்கினால்
அணைகள்கட்டி ஆவதுண்டோ?"

அரிச்சந்திர வெண்பா
சலம்வரு காண்டம்—35ஆம்
வெண்பாவின் உரைப்பாட்டு

3 "திண்ணமுற் றரசனைத் தியக்கும் மாமுனி
மண்ணுல காண்டமைக் காக்க வல்லனோ?" வி—88
"வலியசிங் கேறுறை மலைமு ழஞ்சியில்
ஒலியிடு நரிவள ரொத்த தென்பரே."

அரிச்சந்திரன் அம்மானை வி—89

"அரியிருந்து வாழிடத்தே யஞ்சாமற் சென்று
நரியிருந்து வாழுமோ நாட்டீர்—விரிசடை
பற்றீ ரெனவுரைத்தார் பக்கத்தே போதுகின்ற
ஒற்றாளன் கேட்டான் உழன்று."

அரிச்சந்திர வெண்பா
காசியாத்திரைக் காண்டம்—12

# குறிப்பிடத்தக்க வேறுபாடுகள்

# அரிச்சந்திரன் அம்மானை-அரிச்சந்திர வெண்பா

1. அரிச்சந்திரன் அம்மானையில் சந்திரமதியின் தோழி (தாதியரில் முதன்மையானவள்) பெயர் ''சுந்தரி''

அரிச்சந்திர வெண்பாவில் சந்திரமதியின் தோழி பெயர் 'வசந்தமதி'.

2. அரிச்சந்திரன் அம்மானையில், சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களின் வடிவங்களை ஓவியமாகத் தீட்டியும் அவர்தம் பெயர், நாடு ஆகியவற்றைப் படத்தில் குறித்தும் சுந்தரி சந்திரமதியிடம் அளிப்பதாகவும், அவற்றிலிருந்து சந்திரமதி அரிச்சந்திரனின் படத்தைத் தேர்ந்தெடுத்து ஆசைகொண்டு மகிழ்வதாகவும் உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவில், சுயம்வரத்திற்கு வந்த அரிச்சந்திரனைக் கண்ட வசந்தமதி, அரிச்சந்திரனின் வனப்பையும் சிறப்பையும் சந்திரமதியிடம் சொல்ல, சந்திரமதி அரிச்சந்திரன்மேல் ஆசைகொள்வதாக உள்ளது.

3. அரிச்சந்திர வெண்பாவில், அரிச்சந்திரன்மேல் காதல் கொண்ட சந்திரமதி தன் கழுத்தின் மங்கலநாண் அரிச்சந்திரன் கண்ணுக்குத் தெரியுமோ எனக் கவன்றிருக்கையில், ''சிவபெருமான் அருளால் மங்கலநாண் அரிச்சந்திரனின் கண்ணுக்குப் புலப்படும்'' என அசரீரி உரைப்பதாகவும் சந்திரமதி அதனைக்கேட்டு மகிழ்வதாகவும் உள்ளது.

அரிச்சந்திரன் அம்மானையில் அவ்வாறு இல்லை.

சுயம்வரத்தில் சந்திரமதியின் கழுத்தில் தாலி திகழ்வதை அரிச்சந்திரன் காணுகின்ற அதே நேரத்தில் சந்திரமதியும் தன் கழுத்தின் தாலியைப் படிமக்கலத்தில் (கண்ணாடியில்) காண்பதாக அரிச்சந்திர வெண்பாவில் உள்ளது.

சுயம்வரத்தில், சந்திரமதி தன் கழுத்தின் தாலியைப் படிமக்கலத்திலோ வேறு வகையிலோ காண்பதாக அரிச்சந்திரன் அம்மானையில் இல்லை.

4. அரிச்சந்திரன் அம்மானையில், சுயம்வரத்தில் சந்திரமதியின் கழுத்தில் மாங்கல்யம் இருக்கக் கண்ட அரிச்சந்திரன், "முன்பே திருமணமான பெண்ணுக்கு மறுமணம் செய்யவா இச்சுயம்வரம்? இப்பெண்ணின் கழுத்தில் தாலி உள்ளதே!" எனக்கூற, சந்திரமதியின் தந்தை வந்திருந்த மன்னர்களை நோக்கி, "அரிச்சந்திரன் சொல்வது உண்மையா?" எனக்கேட்க, அவர்கள், "அரிச்சந்திரன் சொல்வது பொய்! சந்திரமதியின் கழுத்தில் தாலி காணப் படவில்லை!" எனக் கூற, பின் சந்திரமதியின் தந்தை சிவபெருமானின் வரத்தை அனைவருக்கும் எடுத்துரைத்து, "சந்திரமதியின் கழுத்தில் தாலி உள்ளது; அது அவளுக்குக் கணவனாக வர இருப்பவனின் கண்களுக்கு மட்டுமே தெரியும்" என்னும் உண்மையை உரைக்க, அதன் பின்னரே அரிச்சந்திரன் ஐயம் நீங்கிச், சந்திரமதியின் சுயம்வர மாலை கழுத்தில் விழத் திருமணம் செய்துகொள்வதாக உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவில், சுயம்வரத்தின்பொழுது சந்திரமதியின் கழுத்தில் மாங்கல்யத்தை அரிச்சந்திரன் காண்பதாகவும், மகிழ்ந்து உடன் திருமணம் செய்துகொள்வதாகவும் உள்ளது. (மங்கலநாண் கண்டு மயங்கி நின்ற அரிச்சந்திரனுக்கு, "இவள் கன்னியே. தெய்வ அருளால் மங்கலநாணுடன் பிறந்தனள்!" என அசரீரி கூறியதாக வடமொழி ஸ்காந்தபுராணப் பகுதியான அரிச்சந்திர உபாக்கியானம் கூறும். முன்னர்ச் சந்திரமதிக்கு அசரீரி கூறியதாக அரிச்சந்திர வெண்பாவில் உள்ளதால், இங்கு அரிச்சந்திரனுக்கும் முன்கூட்டியே அசரீரி கூறும் பாடல் இருந்து அழிந்திருக்கக்கூடும்.)

5. அரிச்சந்திரன் அம்மானையில், அரிச்சந்திரனின் மகன் பெயர் "லோகதாட்சன்", "லோகதாட்சணன்".

அரிச்சந்திர வெண்பாவில், அரிச்சந்திரனின் மகன் பெயர் "லோகிதாக்ஷன்".

6. அரிச்சந்திரன் அம்மானையில், தேவேந்திரன் தன் அவையில் இருந்த முனிவர்களை நோக்கிப் "புவியில் உள்ள அரசருள் சிறந்தவன் யார் எனக் கூறுங்கள்!" என வினவுவதாகவும், வசிஷ்ட முனிவர் "அரிச்சந்திரனே சிறந்தவன்" என விடையளிப்பதாகவும், விசுவாமித்திரர் வசிஷ்டரின் கூற்றை மறுத்து, "அரிச்சந்திரன் சிறந்தவன் அல்லன்" எனக் கூறுவதாகவும் உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவில், தேவேந்திரன் தன் அவையில் இருந்த முனிவருள் வசிஷ்ட முனிவரை நோக்கிச் "சூரியகுல மன்னருள் சிறந்தவன் யார்?" என வினவுவதாகவும், வசிஷ்டர், "அரிச்சந்திரனே சிறந்தவன்" எனக் கூறுவதாகவும், "தன்னை முதல் வினவாத் தாபத்தாலும் தான்வசிட்டன்

சொன்ன மொழியழிக்கும் சூதினாலும்" வசிஷ்டரின் கூற்றை மறுத்து விசுவாமித்திரர், "அரிச்சந்திரன் சிறந்தவன் அல்லன்" எனக் கூறுவதாகவும் உள்ளது.

7. அரிச்சந்திரன் அம்மானையில், கோபங்கொண்ட வசிஷ்டரையும் விசுவாமித்திரரையும் நோக்கி நாரதர், "அரிச்சந்திரன் சத்தியவான்—சத்திய வான் அல்லன் எனும் வாதத்தால் எழுந்த போட்டியின் வெற்றி தோல்விகளுக் கேற்ப எதனை இழப்பது என இருவரும் பந்தயம் கூறுங்கள்" என்று கூறுவதாகவும்,

அரிச்சந்திரனை விசுவாமித்திரர் சோதிக்கின்ற முயற்சி முற்றுப் பெறுகின்றவரை, வசிஷ்டர் பூமிக்குச் செல்லாமல் தேவலோகத்திலேயே இருக்கவேண்டும் என நாரதர் உரைக்க அதன்படியே வசிஷ்டர் இருப்பதாக வும் உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவில், நாரதர் இருவரையும் பந்தயம் சொல்க என்பதாகவோ வசிஷ்ட முனிவர் பூமிக்குச் செல்லக்கூடாது எனக் கூறுவ தாகவோ இல்லை. வசிஷ்ட முனிவர் பூவுலகம் செல்வதாகவே உள்ளது.

8. அரிச்சந்திரன் அம்மானையில், விசுவாமித்திரர் தான் பெருவேள்வி செய்யப் பொன் வேண்டும் எனக்கேட்டு அரிச்சந்திரனிடம் முனிவர்களை அனுப்பி வைப்பதாகவும், முனிவர்கள் அரிச்சந்திரன் பொன் தர இசைந்ததும் விசுவாமித்திரரே நேரில் வந்து பெற்றுக்கொள்வார் எனச் சொல்வதாகவும், விசுவாமித்திரர் நேரில் சென்று, அரிச்சந்திரன் தந்த பொன்னை அரிச்சந்திர னிடமே தந்து பாதுகாப்பாக வைத்திருந்து தான் மீண்டும் வந்து கேட்கையில் தருமாறு கூறுவதாகவும் உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவில், விசுவாமித்திரர் முனிவர்களை அனுப்பி அரிச்சந்திரனைப் பெருவேள்வியொன்று செய்ய வைப்பதாகவும், வேள்வி நடப்பதை முனிவர்களால் அறிந்து வசிஷ்டர் இல்லாத நேரத்தில் சென்று பொன்கேட்டுப் பெற்று அதனை அவனிடமே கொடுத்துப் "பாதுகாப்பாக வைத்திருந்து" பின்னர்த் தருக எனச் சொல்வதாகவும், கேட்ட பொன்னை அரிச்சந்திரன் தயங்காமல் கொடுத்தது கண்டு "இவனுடைய வண்மையினை எண்ணாமல் விண்ணோர் அவைநடுவே யாதுரைத்தோம்' என விசுவாமித்திரர் சிறிதுநேரம் வருந்தி மீண்டும் பழைய கோபத்தை அடைவதாகவும், விசுவாமித்திரர் வந்துசென்ற செய்தியை அறிந்த வசிஷ்டர் வருந்தி, "விசுவாமித்திரன் தபோவனத்தில் தேர்வேந்தன் மறந்தும் போகாதிருக்க என்று மறைபொருளால் அருள்செய்து" செல்வதாகவும் உள்ளது.

9. அரிச்சந்திரன் அம்மானையில், விசுவாமித்திரர் ஏவிய விலங்கு பறவைகளால் வயல்கள் தோட்டம் முதலானவை அழியக்கண்ட குடியானவர்கள் ஆறு ஆண்டுகள் கோசிகன் செய்த மதிமயக்கத்தால் அலைந்து திரிந்து பின் அரிச்சந்திர மன்னனிடம் வந்து முறையிடுவதாகவும், அரிச்சந்திரன் குடியானவருக்கு வரியை நீக்கி உதவிகள் செய்து, பறவை விலங்குகளை வேடர் துணையுடன் வேட்டையாடச் செல்வதாகவும் உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவில், குடியானவர்கள் உடனே வந்து முறையிடுவதாகவும், அரிச்சந்திரன் வேடர் துணையுடன் பறவை விலங்குகளை வேட்டையாடப் புறப்பட்டுச் செல்வதாகவும் உள்ளது.

10. அரிச்சந்திரன் விசுவாமித்திரர் ஏவிய விலங்கு பறவைகளை வேட்டையாடியதும், விசுவாமித்திரர் ஏவிய பன்றி எதிர்ப்பட அதனையும் அம்பெய்து காயப்படுத்தி விரட்டியபின், சோலையில் இளைப்பாறுகையில் அங்கு வந்த மாதவத்தோர் பிள்ளைகளை நோக்கி வினவியறிந்து ''விசுவாமித்திரருக்குச் சொந்தமான நந்தவனத்தில் தங்கியுள்ளோமே! வசிஷ்ட முனிவர் உரைப்படி நில்லாமல் போனோமே!'' என வருந்தி அவ்விடத்திலேயே களைப்பினால் துயிலுவதாக அரிச்சந்திர வெண்பாவில் உள்ளது.

விசுவாமித்திரர் விடுத்த பன்றியை அம்பெய்து விரட்டியபின் அரிச்சந்திரன் சோலையொன்றில் தங்கியிருந்ததாக மட்டுமே அரிச்சந்திரன் அம்மானையில் குறிப்பிடப்பெற்றுள்ளது

11. அரிச்சந்திரன் அம்மானையில், பன்றியை விரட்டியபின் விசுவாமித்திரர் படைத்து அனுப்பிய இரு புலைப்பெண்கள் அரிச்சந்திரன் இருக்குமிடம் வந்து தங்கள் நோக்கம் நிறைவேறாமல் திரும்பியதும், சோலையில் அனைவரும் தங்கியிருக்கையில் சந்திரமதி கனவு காணுவதாகவும் (கனவில் அரிச்சந்திரனை நான்கு பெண்கள் சூழ்ந்திருந்ததாகவும் அவர்களில் மூவர் மன்னனின் மகுடம் வாள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு மன்னனை விட்டு நீங்கி விடுவதாகவும் உள்ளது.), கண்ட கனவை அரிச்சந்திரனிடம் சொல்வதாகவும், அரிச்சந்திரன் மந்திரியிடம் சொல்வோம் எனச்சொல்லி விடிந்ததும் மந்திரியிடம் கனவின் பொருள் கேட்டறிவதாகவும் உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவில், விசுவாமித்திரருக்குச் சொந்தமான சோலையில் உறங்குகையில் அரிச்சந்திரன் கனவு காணுவதாகவும், (கனவில் அரிச்சந்திரனை ஒரு மறையோன் ஆசனத்திலிருந்து தள்ளி, அவனே உலகாளத் தொடங்கி, அரிச்சந்திரனை வெற்பேற்றுவதாக உள்ளது.) கண்ட கனவினை

அரிச்சந்திரன் சந்திரமதியிடம் சொல்வதாகவும், சந்திரமதி, "கனவில் ஆசனத்திலிருந்து தள்ளி விட்டவன் விசுவாமித்திரரே! இறுதியில் நாமே வெற்றி பெறுவோம்" எனக் கனவின் பொருள் கூறுவதாகவும், அதன் பின்னரே விசுவாமித்திரர் படைத்தனுப்பிய இரு புலைப்பெண்கள் வந்து தங்கள் நோக்கம் நிறைவேறாமல் திரும்புவதாகவும் உள்ளது.

12. அரிச்சந்திரன் அம்மானை, விசுவாமித்திரரின் கோபத்தில் தோன்றிய இரு பெண்களையும் 'புலைச்சியர்', 'புலை மாதர்', 'புலைப்பெண்' 'புலை மாது' என்று பல இடங்களில் குறிப்பிடுகின்றது. முதன்முறையாகக் குறிப்பிடும்போது 'கோபப் புலைமாதர்' என்று சுட்டுகின்றது. அவ்விரு பெண்களும் 'புலைமாதர்' என்று குறிக்கப்படுவதற்கான காரணத்தை அரிச்சந்திரன் அம்மானை தெளிவாக எடுத்துரைக்கவில்லை.

அரிச்சந்திர வெண்பா, அரிச்சந்திர புராணத்தைப் போன்றே 'புலைமாதர்' என்று குறிக்கப்படுவதற்கான காரணத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்ற பகுதி நோக்கத்தக்கது.

"தவமுனிக்குக் கோபம் சண்டாளன் என்ற
புவியுரைக்கு மேற்ற பொருளே—குவியும்
முலைமாதர் தாமும் முனிகோபம் தோன்றிப்
புலைமாதர் ஆனார்கள் போய். 160

[ உரைப்பாட்டு ]

காணரிய கோபமுடன்
கவுசிகர்கோன் மேலுரைத்தலின்
வினையுடன் இரண்டு மாதர்முனி
விட்டமூச்சி னிடைத்தோன்றிக்
கோபமெனும் சண்டாளனிற்
கூடியதனாற் புலைச்சியராய்"

13. அரிச்சந்திரன் அம்மானையில், விசுவாமித்திரர் படைத்து அனுப்பிய இரு புலைப்பெண்களும் அரிச்சந்திரனிடம் தங்கள் வித்தைகளைக் காட்டி, அவன் அளித்த பரிசுகளை ஏற்கமறுத்து, மகுடத்தை அல்லது தங்களுடன் கூடி இன்பத்தை அல்லது தங்களை மணந்துகொள்ளும் பரிசைக் கொடுக்குமாறு கேட்க, அரிச்சந்திரன் நீதி கூறி மறுத்தும் கேளாமல் வற்புறுத்த, அரிச்சந்திரன் வாசல் காவலரிடம் அப்பெண்களை அகற்றச் சொல்ல, காவல்காரர் அப்பெண்களைத் தள்ளிவிட, அப்பெண்கள் அழுது கொண்டே சென்று விசுவாமித்திரரிடம் நிகழ்ந்ததைக் கூறுவதாக உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவிலோ, அரிச்சந்திரன் நீதி கூறி மறுத்துக் கோபிக்க, அப்பெண்கள், "அரிச்சந்திரன் வனத்திடையில் எமைப்புணர்ந்து இப்பொழுது தள்ளிவிட்டான் என்று முறையிடுவோம்" எனப் பொய்கூறி மிரட்டுவதாகவும், அரிச்சந்திரன் சினமடைந்து மணிக்கசையினால் அவர்களை அடித்து விரட்டுவதாகவும், அப்பெண்கள் விசுவாமித்திரரிடம் சென்று அழுது நடந்தவற்றைக் கூறுகையில்,

"மன்னியஉன் புகழெல்லாம் மாமுனிவே பாடியபின்
கன்னியர்நீர் ஆரென்னக் கவுசிகன்றன் மக்களென்றோம்.
என்றதுவே தப்பாக இவுளிபூட்டிய வடம்வாங்கிக்
கொண்டெம்மைப் புடைத்திழுத்தான்"

என்று கூறுவதாகவும் உள்ளது. இதன் தொடர்ச்சியாய்ப் பின்னர் நடக்கும் செயல்களிலும் அம்மானையிலும் வெண்பாவிலும் சிறு சிறு மாற்றங்கள் காணப்படுகின்றன.

**14.** அரிச்சந்திரன் அம்மானையில், விசுவாமித்திரர் அரிச்சந்திரனை நோக்கி, "என் மக்களைப் புலைச்சியர் என்ற நீயே புலையனுக்குத் தொண்டு பண்ணித் திரிவாய்!" என்று மட்டுமே சாபமிடுவதாக உள்ளது. அம்மானையில் எந்த இடத்திலும் மந்திரி சத்தியகீர்த்தியும் துன்புறுவான் என விசுவாமித்திரர் சொல்வதாக இல்லை.

அரிச்சந்திர வெண்பாவில், "சந்திரமதியையும் லோகிதாக்ஷனையும் தரிப்பின்றியே விலைப்படுத்தி மந்திரியாகிய சத்தியகீர்த்தியை மனைதோறும் இரக்கவைப்பேன். என்னுடைய மக்கள்தம்மை இகழ்ந்து புலைமாதரென்ற உன்னையும் அச்சண்டாளனுக்கு ஆளாக ஒருப்படுத்துவேன்" என விசுவாமித்திரர் கூறுவதாக உள்ளது.

**15.** அரிச்சந்திரன் அம்மானையில், முதலில் அமைச்சர் சத்தியகீர்த்தி அரிச்சந்திரனுடன் நாட்டை நீங்கிச் செல்வதாக இல்லை. அரிச்சந்திரன் சந்திரமதி, லோகதாட்சன் ஆகியோர் நாட்டின் எல்லையை நீங்குகையில் சத்தியகீர்த்தி அரிச்சந்திரனிடம் வேண்டிக் கேட்டுக்கொண்டு, விசுவாமித்திரரிடமும் வேண்டிக் கேட்டுக்கொண்டு அரிச்சந்திரனோடு செல்வதாக உள்ளது. அரிச்சந்திரன், சந்திரமதி, லோகதாட்சன் ஆகிய மூவரின் ஆடை ஆபரணத்தை விசுவாமித்திரர் கழற்றிக்கொடுக்கச்சொல்லி வாங்கிக்கொள்வதாக மட்டுமே உள்ளது. சத்தியகீர்த்தியின் ஆடை, ஆபரணத்தைக் கழற்றிக் கொடுத்துச் செல்லுமாறு விசுவாமித்திரர் கூறுவதாக இல்லை.

அரிச்சந்திர வெண்பாவிலோ அரிச்சந்திரன், சந்திரமதி, லோகதாட்சன் சத்தியகீர்த்தி ஆகிய நால்வரையும் ஆடை ஆபரணத்தைக் கழற்றிக் கொடுத்துச் செல்லுமாறு சொல்லி விசுவாமித்திரர் வாங்கிக் கொள்வதாகவும் நால்வரும் ஒன்றாகவே நாடு துறந்து செல்வதாகவும் உள்ளது.

அம்மானையில் மூவரும் உடுத்திக்கொள்ளப் பழைய துகிலினை மூன்றாகக் கிழித்து விசுவாமித்திரர் அளிப்பதாகவும், வெண்பாவில் நால்வரும் உடுத்திக்கொள்ளப் பழைய துகிலினை நான்காகக் கிழித்து அளிப்பதாகவும் உள்ளது.

16. அரிச்சந்திரன் அம்மானையில், நாடு துறந்துசெல்லும் அரிச்சந்திரனை நோக்கி விசுவாமித்திரர், "முன்னர் நான் வேள்விசெய்ய நீ கொடுத்த பொன்னை உன்னிடமே கொடுத்து வைத்திருந்தேனே! அதனைத்தா" எனக் கேட்கும் பகுதியில், அரிச்சந்திரன் பொன்னைக் காசிநகர் சென்று அங்கு எங்காகிலும் பெற்றுத் திருப்பித்தர நாற்பதுநாள் கால அவகாசம் விசுவாமித்திரரிடம் கேட்டுப் பெறுவதாக உள்ளது.

அரிச்சந்திர வெண்பாவில், நாடு துறந்துசெல்லும் அரிச்சந்திரனை நோக்கி விசுவாமித்திரர், "முன்னர் நீ வேள்வி செய்யுங் காலத்தில் எனக்களித்த பொன்னை உன்னிடம் கொடுத்து வைத்திருந்தேனே! அதனைத்தா" எனக் கேட்கும் பகுதியில், அரிச்சந்திரன் பொன்னைக் காசிநகர் சென்று அங்கு எங்காகிலும் பெற்றுத் திருப்பித்தர நாற்பத்தெட்டு நாள் கால அவகாசம் விசுவாமித்திரரிடம் கேட்டுப் பெறுவதாக உள்ளது.

17. அரிச்சந்திரன் வேள்விசெய்கையில் தான் கேட்ட பொன்னைத் தயக்கமின்றித் தருகின்ற காலத்திலும், நாட்டைத் துறந்து உயர் ஆடை ஆபரணங்களைத் துறந்து காசிநகர் சென்றதும் தனக்குத் தரவேண்டிய பொன்னைத் தந்துவிடுகிறேன் என அரிச்சந்திரன் கூறுகின்ற காலத்திலும் விசுவாமித்திரர், "அரிச்சந்திரனின் இத்தகைய உயர் பண்புகளை எண்ணாமல் தேவேந்திரன் அவையில் வசிஷ்டருடன் வாது செய்தோமே!" எனச் சிறிது நேரம், தேவேந்திரன் அவையில் பேசியதை எண்ணி வருந்துவதாகவும், பின்னர்ச், சொன்ன வாதப்படி வெற்றிபெற அடுத்த முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் அரிச்சந்திர வெண்பாவில் உள்ளது.

அப்பகுதிகள் :

"இவனுடைய வண்மையினை எண்ணாமல் விண்ணோர்
அவைநடுவே யாதுரைத்தோம் ஐயோ—சிவசிவா
என்றுரைத்து (நெஞ்சம்) இளைத்தான் இளைப்பளவில்
நின்றுரைத்த சின்னம் நெறி. 103

என்பது

[உரைப்பாட்டு]

சத்தியகீர்த்தி அரிச்சந்திரனைச்
சருவதா பேதித்தாலும்
உத்தமமான குணந்தவிரான்
உரைதவ றான்அதனால்
மேதகுசாந்தி வர்க்கத்திலே
விண்ணவர்கோன் திருமுன்பே
ஏதோபிரதிஞ்ஞை சொன்னோம்
வசிட்டனுட னெனநினைந்து
செகத்.........ய விசுவாமித்திரன்
சோபமெய்தி அழியுமெல்லையில்
பொற்சின்னமே ரிஷிகேட்டுப்
புகழ்முனியும் மனந்தேறினான்."

(யாக காண்டம்)

"இவனிலைமை இப்படியே எண்ணாமல் விண்ணோர்
அவைநடுவே ஏதுரைத்தோம் ஐயோ--சிவசிவா
என்னாவல் அற்றா லினியே தெனவேறே
உன்னா வழைத்தான் உடன்று. 246

என்பது

[ உரைப்பாட்டு ]

கற்றதெல்லாம் விசுவாமித்திரன்
கடுவினையாற் சோதித்தாலும்
மற்றும்நிலை தவறாதே
மன்னர்பிரான் நின்றசெய்தியைக்

கண்டுபின்னை விசுவாமித்திரன்
கனக்கஉள்ளே பிரீதனாகிக்
கொண்டவினைக் கொடுமையினால்
கோடிகோடி சோதித்தாலும்
தப்பும்வகை யறியாத
தைரியவான்என் றறியாது
அப்பொழுதே வசிட்டனுடன்
அமரர்கோமான் திருமுன்பே
எண்ணாத பாஷையினைக்
கொடுத்தோமே என்றறிந்து
புண்ணார்ந்த நெஞ்சனாகிப்
புலம்பியுட னேதெளிந்து
மற்றுமொரு நினைவுகண்டு
மன்னர்மன்னனை வரவழைப்ப.''

(இராச்சியதான காண்டம்)

அரிச்சந்திரன் அம்மானையில், அவ்வாறு விசுவாமித்திரர் வருந்துவதாக எந்த இடத்திலும் இல்லை.

18. அரிச்சந்திரன் அம்மானையில், அரிச்சந்திரனுடன் காசிக்குச்சென்று அவன் தரவேண்டிய பொன்னைப் பெற்றுவர விசுவாமித்திரரால் அனுப்பப் பெறுபவர் "சுக்கிரன்" ஆவார். (சுக்கிரனின் வேறு பெயர்கள் பளிங்கு, பளிங்கவன், வெள்ளி, புகர், பார்க்கவன்)

அரிச்சந்திர வெண்பாவில், அரிச்சந்திரனுடன் காசிக்குச் சென்று அவன் தரவேண்டிய பொன்னைப் பெற்றுவர விசுவாமித்திரரால் அனுப்பப்பெறுபவர் பெயர் "நட்சத்திரன்", (நக்ஷத்திரன், நக்ஷத்திரேயன்)

பிற்சேர்க்கை—2

# ஒத்த உவமைகள்

## அரிச்சந்திரன் அம்மானை-அரிச்சந்திர புராணம்

1. "கோவிமன்னன் நீதிக் குணம்போல எந்நாளும்;
சாலிப் பயிரோங்கித் தானே கதிர்முதிர்ந்து
கற்பனைய மின்னார் கனிந்துநிற்கும் வாறெனவே
நெற்பயிர்கள் நின்றிலங்கும்; ......... .........''

அரிச்சந்திரன் அம்மானை 121—124

"......... ......... ......... பழுத்தசெஞ்
சாலி கற்பினர் போற்றலை சாய்த்தவே,''

அரிச்சந்திர புராணம்
நாட்டுச் சிறப்பு 44

2. "காமன் இரதியெனக் காவலனும் மங்கையரும்
நேமமுடன் வாழ்ந்திருந்தார் நேசமுடன் அம்மானை!''

அரிச்சந்திரன் அம்மானை 1437, 1438

"இளைத்த நுண்ணிடை இரதியும் காமனும் எனத்தாம்
விளைத்தநல் இன்ப வெள்ளத்து வேந்தனும் மயிலும்
திளைத்தி ளைத்தருள் பொழிந்திடக் கழிந்தன சிலநாள்.''

அரிச்சந்திர புராணம்
விவாக காண்டம் 285

3. "பாலமுர்தம் ஊட்டிப் பரிவாய் வளர்த்திடும்தாய்
ஆலமிட்டால் பிள்ளை அறிந்துதள்ளிப் போறதுண்டோ?
வாரி கொதித்தெழுந்தால் வையகத்தில் வாழுமவர்
நேருங்கரை கட்டி நிறுத்திவிடக் கூடுமோதான்?''

அரிச்சந்திரன் அம்மானை 2609—2612

"கொஞ்சிப் பேசும் குழவிசொற் குற்றத்தாள்
வஞ்சித் தன்னை வனமுலைப் பாலினில்
நஞ்சிட் டாலதை நாடிவி லக்குநன்
நெஞ்சத் தாருள ரோஇந் நிலத்திலே.

வாரி காய்ந்து கொதித்திடில் மாற்றத்தண்
ணீரி யாவர் தருவரந் நீதியிற்
சீரி யாயெனை நீமிகச் சீறிடின்
யாரி யாரஞ்ச லென்பவ ரென்றனன்."

அரிச்சந்திர புராணம்
சூழ்வினைக் காண்டம்—72

4. "கையிழந்த யானையைப்போல், ......... .........
... ...... ......... பட்சிசிற கத்ததுபோல்.
நாடிழந்தும் ஊரிழந்தும் நன்னிதியம் உள்ளதெல்லாம்
ஈடிழிந்தும் வாடி இருகாலு மேவருந்தக்
கானகத்தை நாடிநெடுங் காவலனும் செல்லலுத்தான்."

அரிச்சந்திரன் அம்மானை 3029—3033

"மயிரோடும் சிறைஇழந்த போகில்போல் .........
........... ...........
......... கரமிழந்த கரியேபோற் .........
......... தளர்ந்தலைந்து தத்தமக்கு நிகழ்ந்தவெலாம்
சாற்ற லுற்றார்."

அரிச்சந்திர புராணம்
நகர் நீங்கிய காண்டம்—3

5. "மங்கிலியம் என்றுரைத்த வார்த்தை தனைக்கேட்டு
அங்கம் மிகப்பதறி ஆவியெல்லாம் நொந்துருகி
வானில் உயிர்போக மண்ணிலுடல் வீழ்வதுபோல்,
ஆன உயிர்குலைந்து அம்புவியி லேவிழுந்தாள்;
அம்புவியி லேவிழுந்து அக்கினியி லேபிடித்து
வெம்பும் மெழுகெனவே மெய்யுருகி மாதுநல்லாள்"

அரிச்சந்திரன் அம்மானை 4343—4348

"அலைவி லாஅரிச் சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோவெனா
உலையின் மீது மெழுகொத் துருகினாள்."

அரிச்சந்திர புராணம்
மயான காண்டம் 49

5. "செங்கையினால் புத்திரனைச் சென்றுதொட வேநாணி,
வெண்கரடம் உண்ட விளாவின் கனியெனவே,
நண்சடலம் நிற்க நயந்தவுள்ளங் கெட்டுநொந்து"

அரிச்சந்திரன் அம்மானை 4440—4443

"மங்கைகடி தோடிடலும் மைந்தன்முகம் நோக்கி
அங்கைதொட நாணிமனம் அஞ்சிஅயல் நின்றே
கங்கைவள நாடன்இரு கண்கலுழி சிந்த
வெங்கயம் நுகர்ந்தவிள வின்கனியை ஒத்தான்."

அரிச்சந்திர புராணம்
மயான காண்டம்—64

"முன்நடத்தி மின்னாள் முதுகுபுறத் தேஇவர்கள்
பன்னிஅடித் தேவிரட்டப் பாவையரும் அஞ்சியஞ்சி
நாய்கள் பலதொடர நண்ணிவெறித் தேநடக்கும்
தூயசெழு மானெனவே தோகைவெருண் டேகலுற்றாள்."

அரிச்சந்திரன் அம்மானை 4541—4544

"குறித்ததி சினத்தொடு கொதித்தவர் அடிக்கத்
தெறித்தகுரு தித்துளி திசைத்திசையின் மொய்க்கப்
பிறித்திரு கயிற்றிடை பிடித்துவர நாய்மேல்
வெறித்தடர மானென வெருண்டுமுன் நடந்தாள்."

அரிச்சந்திர புராணம்
மயான காண்டம்—76

"நித்திரைகள் நீங்கி நெளிந்தெழுந்த மாணிடர்போல்
புத்திரனுந் தானெழுந்தான் பூவுலகில் அம்மானை!"

அரிச்சந்திரன் அம்மானை 5053, 5054

"……… ……… ……… அரசிளங் குமரன்
துயிலு ணர்ந்தவர் போற்புகுந் திணையடி தொழுதான்."

அரிச்சந்திர புராணம்
மீட்சிக் காண்டம்—20

# குறிப்பிடத்தக்க வேறுபாடுகள்

## அரிச்சந்திரன் அம்மானை-அரிச்சந்திர புராணம்

**1. அரிச்சந்திரன் அம்மானை**

ஓடை மணலில் கூடல் இழைத்திருக்கின்ற கோசல நாட்டு மள்ளியரின் மடியில் அன்னப்பறவை முட்டையிட்டு நேசமுடன் பறந்து செல்லும்.

**அரிச்சந்திர புராணம்**

நெடிய நெய்தலின் வண்டலில் கூடல் இழைத்திருக்கின்ற கோசல நாட்டு நுளைச்சியரின் மடியில் சங்கு முத்தை ஈனும்.

**2. அரிச்சந்திரன் அம்மானை**

திருமண ஏற்பாடுகளைச் செய்கையில் சந்திரமதிக்கு அகவை பன்னிரண்டு ஆகின்றது.

**அரிச்சந்திர புராணம்**

அவ்வாறான குறிப்பு எதுவும் இல்லை.

**3. அரிச்சந்திரன் அம்மானை**

அரிச்சந்திரன் அவைக்கு வந்த முனிவர்கள் தாங்கள் பல புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி வந்ததாகக் கூறுகின்றனர்,

**அரிச்சந்திர புராணம்**

முனிவர்கள், கன்னோசி நாட்டின் 'கண்டகி' என்னும் புண்ணிய தீர்த்தமாடித் தாங்கள் வந்ததாகக் கூறுகின்றனர்.

**4. அரிச்சந்திரன் அம்மானை**

கோசல நாட்டில் ஓடுகின்ற தெய்வநதியின் பெயர் "சரசுநதி".

**அரிச்சந்திர புராணம்**

"சரயுநதி"

5. அரிச்சந்திரன் அம்மானை

சந்திரமதியின் சுயம்வரத்தில் கலந்துகொள்ள அயோத்தியை விட்டுப் புறப்பட்டுச் செல்கின்ற அரிச்சந்திரன் இடையில் ஒரே ஓர் ஆற்றை மட்டும் (சரசுநதி) கடந்து செல்கிறான்.

அரிச்சந்திர புராணம்

முதலில் சரயு நதியையும் அடுத்துக் கோமதியாற்றையுமாக இரண்டு ஆறுகளை இடையில் கடந்து செல்கின்றான்.

6. அரிச்சந்திரன் அம்மானை

சுயம்வரத்திற்குச் செல்கின்ற அரிச்சந்திரன் ஆற்றைக் கடந்தபின் வசிட்ட முனிவர் வீற்றிருக்கும் சோலைக்குச் சென்று அவரை வணங்கி ஆசி பெறுகின்றான். அரிச்சந்திரனுக்கும் அவன் படைகளுக்கும் வசிட்ட முனிவர் காமதேனுவை அழைத்து விருந்து அளிக்கின்றார். பின்னர் வசிட்ட முனிவரும் அரிச்சந்திரனுடன் கன்னோசிக்குப் புறப்படுகின்றார்.

அரிச்சந்திர புராணம்

ஆறுகளைக் கடப்பதற்கு முன், அரிச்சந்திரனும் அமைச்சர்களும் வணங்கும்படியாக வசிட்ட முனிவர் பல்லக்கில் வருகின்றார்.

7. அரிச்சந்திரன் அம்மானை

சுயம்வரத்திற்குச் செல்லும் வழியில் இருந்த காளிகோயிலில் கற்றேர், கற்சிலை இருக்கின்றன; அரிச்சந்திரனின் கண்பார்வை பட்டுப் பொன்னாக மாறுகின்றன.

(கற்றேர் என்பதால் அதில் பூட்டக் கற்குதிரையும் கற்சிலை என்பதால் அதில் பூட்டக் கற்கணையும் அங்கே இருக்கின்றன என நாம் குறிப்பால்தான் உணர்ந்துகொள்ள வேண்டும்.)

அரிச்சந்திர புராணம்

காளிகோயிலில் கற்றேர், கற்குதிரை, கற்சிலை (வில்), கற்கணை இருக்கின்றன; அரிச்சந்திரனின் கண்பார்வை பட்டுப் பொன்னாக மாறுகின்றன.

8. அரிச்சந்திரன் அம்மானை

`காட்சியளித்த பொற்றேரும் பொற்சிலையும் அங்கு இருப்பதற்கான காரணத்தைக் காளியிடம் அரிச்சந்திரன் கேட்கின்றான். வருணன் அவற்றைக்

கல்லாக்கி அங்கு நிறுத்திவைத்து எவர் கண்களுக்குப் பொன்னாலானவை யாகத் தெரிகின்றனவோ அவர்க்குக் கொடுக்குமாறு சொல்லிச்சென்றான் எனக் காளி அரிச்சந்திரனிடம் கூறுகின்றாள்.

அரிச்சந்திர புராணம்

அவை அங்கு இருப்பதற்கான காரணத்தைக் கேட்கும் அரிச்சந்திரனிடம் காளி, 'உவராழி மண்ணாசை ஒழித்துச் செல்கையில்' வருணன் அவற்றைக் கல்லாக்கிப் பொன்னாலானவையாய்த் தெரிவோர்க்குக் கொடுக்கச் சொல்லிச் சென்றான் எனக் கூறுகின்றாள்.

9. அரிச்சந்திரன் அம்மானை

சந்திரமதியின் நெருங்கிய தோழியின் பெயர் "சுந்தரி".

அரிச்சந்திர புராணம்

பெயர் எதுவும் குறிப்பிடப்பெறவில்லை.

10. அரிச்சந்திரன் அம்மானை

சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களின் படங்களை வரைந்து அவற்றில் அம்மன்னர்களின் பெயர், நாடு, சிறப்புகளை எழுதிச் சுந்தரி சந்திரமதியிடம் அளிக்கின்றாள். அவற்றைப் பார்த்த சந்திரமதி மற்ற மன்னர்களின் படங்களை வேண்டாமென விலக்கிவிட்டு அரிச்சந்திரன் படத்தைத் தேர்ந்தெடுத்து அவன்மேல் ஆசைகொண்டு மயங்குகின்றாள்,

அரிச்சந்திர புராணம்

சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களைப் பார்த்துவிட்டுத் தோழியொருத்தி ஓடிவந்து சந்திரமதியிடம் அரிச்சந்திரனின் அழகையும் சிறப்பையும் எடுத்துரைக்கின்றாள். அதனைக்கேட்ட சந்திரமதி அவன்மேல் ஆசைகொண்டு மயங்குகின்றாள்.

11. அரிச்சந்திரன் அம்மானை

சுயம்வர மண்டபத்திற்கு வந்த சந்திரமதியின் காதோலை, கண்கள், காலின் பரிபுரங்கள், அரிச்சந்திரனை 'வா'வென்றும் மற்ற மன்னரைப் 'போம்' என்றும் சொல்வது போல அசைந்தனவாம்.

அரிச்சந்திர புராணம்

சுயம்வர மண்டபத்திற்கு வந்த சந்திரமதியின் கலாபம் (அரைநாண் மாலை), அரிச்சந்திரனை 'வா' வென்றும் மற்ற மன்னர்களை 'அப்புறம் போம்' என்றும் சொல்வது போல ஒலித்ததாம்.

## 12 அரிச்சந்திரன் அம்மானை

காவலர்கள் சந்திரமதியின் கழுத்தில் மாங்கல்யம் இருக்கக்கண்டு ஐயமுறும் அரிச்சந்திரனிடம், மதிதயன், சிவபெருமானின் அருளால் பிறந்த சந்திரமதியின் கழுத்திலிருக்கும் மாங்கல்யத்தைக் குறித்துச் சிவபெருமான், "சந்திரமதியின் கழுத்து மாங்கல்யம் அவளின் கைக்குச் சிக்காது. தாய், தந்தை, பிறரின் விழிக்கும் தோன்றாது. மணந்துகொள்ள உள்ளவனுக்கு மட்டுமே காட்சியளிக்கும்" என்று கூறியதை எடுத்துரைக்கின்றான்.

### அரிச்சந்திர புராணம்

ஐயமுறும் அரிச்சந்திரனிடம், மதிதயன், சிவபெருமான் அருளால் பிறந்த சந்திரமதியின் கழுத்திலிருக்கும் மாங்கல்யத்தைக் குறித்துச் சிவபெருமான், "மாங்கல்யம் அவளின் கைக்கும் சிக்காது. தாய், தந்தை, பிறரின் விழிக்கும் தோன்றாது. அவளுக்கு மட்டும் கண்ணாடி நிழலில் காட்சியளிக்கும். மணந்துகொள்ள உள்ளவனுக்கு மட்டும் கண்ணுக்குக் காட்சிதரும்." என்று கூறியதை எடுத்துரைக்கின்றான்.

## 13. அரிச்சந்திரன் அம்மானை

சுயம்வரத்தில் சந்திரமதி வீசிய மாலை அரிச்சந்திரன் கழுத்தில் விழுந்ததும் முறைப்படி வதுவைச் சடங்குகள் நிகழ்கின்றன. மதிதயன் சந்திரமதியை அரிச்சந்திரனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கின்றான். சீதனங்கள் அளிக்கின்றான். அதன்பின் அரிச்சந்திரனும் சந்திரமதியும் மாளிகையுள் கூடலில் ஈடுபடுகின்றனர். (கூடல் குறித்துச் சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளது)

### அரிச்சந்திர புராணம்

சுயம்வரத்தில் சந்திரமதி வீசிய மாலை அரிச்சந்திரன் கழுத்தில் விழுந்ததும் மாதர், வானவர், கீதர், கேளிர், சூதர், துறவர், வேதர் ஆர்க்க, நூலறி நாவலர் பாடப் பல்லியமும் பல பாடலும் ஆர்ப்ப அரிச்சந்திரனும் சந்திரமதியும் மாளிகை புகுந்து கூடி மகிழுகின்றனர். (புணர்ச்சி விளையாட்டுகள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.)

## 14. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரனின் மகன் பெயர் 'லோகதாட்சணன்'. (லோகதாட்சன்)

### அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரனின் மகன் பெயர் "தேவதாசன்."

**15.** அரிச்சந்திரன் அம்மானை

லோகிதாட்சன் ஐந்து வயதை அடைந்ததைக் குறிப்பிட்டதன்பின், தேவேந்திரன் பதிவளா, நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன.

அரிச்சந்திர புராணம்

தேவதாசன் ஏழு ஆண்டுகள் அடைந்ததைக் குறிப்பிட்டதன்பின் இந்திர லோக நிகழ்ச்சிகள் 'இந்திர காண்டம்' எனும் தலைப்பில் கூறப்பட்டுள்ளன.

**16.** அரிச்சந்திரன் அம்மானை

இந்திரன் அவையில் அரிச்சந்திரன் தொடர்பாக வசிட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் வாக்குவாதம் முற்றுகின்றது. நாரதர் இருவரையும் சமாதானப்படுத்தித் தோற்றவர் எதனை இழப்பதெனக் கூறுங்கள் எனக் கேட்கின்றார். இழப்பது பற்றி இருவரும் கூறுகின்றனர். நாரதர், வசிட்டர் பூவுலகம் செல்லாமல் விசுவாமித்திரர் அரிச்சந்திரனைச் சோதிக்கும் முயற்சி முற்றுப்பெறும்வரை தேவருலகிலேயே இருக்கவேண்டும் எனக் கூறுகின்றார்.

அரிச்சந்திர புராணம்

இந்திரன் இருவரையும் சமாதானப்படுத்தித் தோற்றவர் இழப்பது பற்றிக் கேட்கின்றார். இழப்பது பற்றி இருவரும் கூறுகின்றனர். நாரதர், விசுவாமித்திரர் அரிச்சந்திரனைச் சோதிக்கும் முயற்சி முற்றுப்பெறும் வரையில் தாமும் தேவர் காவலில் இருப்பதாகக் கூறுகின்றார்.

**17.** அரிச்சந்திரன் அம்மானை

விசுவாமித்திரர் கேட்டனுப்பிய வேள்விக்கான பொன்னை அரிச்சந்திரன் தர இசைந்ததை முனிவர்கள் விசுவாமித்திரரிடம் வந்து தெரிவிக்கின்றனர். உடன் விசுவாமித்திரர் அரிச்சந்திரனைக் காணப் புறப்பட்டுச் செல்கின்றார்.

அரிச்சந்திர புராணம்

முனிவர்கள் வந்து தெரிவித்தபின் 'சிற்சில திங்கள்' கழித்து அரிச்சந்திரனைக் காண விசுவாமித்திரர் புறப்பட்டுச் செல்கின்றார்.

**18.** அரிச்சந்திரன் அம்மானை

முனிவர்கள் வந்துசொன்னதும் விசுவாமித்திரர் அரிச்சந்திரனைக் காணப் புறப்பட்டுச் செல்கின்றார். அரிச்சந்திரனைக் கெடுக்கும் நோக்கத்

துடன் அவர் புறப்பட்டு வருவதை உணர்ந்து காட்டிலுள்ள விலங்கு பறவைகள் மரஞ்செடி கொடிகள் நடுங்கியதாக, வருந்தியதாகக் கற்பித்துக் கூறப்பட்டுள்ளது.

### அரிச்சந்திர புராணம்

விசுவாமித்திரர் வருவதன் நோக்கத்தை உணர்ந்து காட்டு விலங்கு பறவைகள், மரஞ்செடி கொடிகள் நடுங்கியதாகவும், ஆனால் அவற்றில் எடுப்பார் கைப்பிள்ளையாகி எள்ளளவுகூட அறிவின்றிச் சொன்னதையே சொல்லும் இயல்புடைய கிளியும், மயிலும், கள்ளுண்ட மயக்கத்தால் அறிவு மயங்கும் வண்டும் மட்டும் விசுவாமித்திரர் வருவதன் தீய நோக்கத்தை உணராமல் களித்திருந்தன எனவும் நயமுறக் கற்பித்துக் கூறப்பட்டுள்ளது.

## 19. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரன் நாட்டைப் பாழ்படுத்த விசுவாமித்திரர் விலங்குகள் பறவைகள், ஊர்வன ஆகியவற்றை அழைக்கின்றார். அவை உடனே தாங்கள் மேற்கொண்டிருந்த செயல்களை அப்படியே பாதியில் விட்டுவிட்டு வருகின்றன. அச்செய்கை, "கவ்விய தீன்விட்டுக் காதற் புணர்ச்சிவிட்டு நித்திரைகள் விட்டு" அவை வருகின்றன எனக் கூறப்பெற்றுள்ளமை அழகாக உள்ளது.

### அரிச்சந்திர புராணம்

விசுவாமித்திரர் அழைத்ததும் விலங்கு பறவைகள் உடன் 'கௌவிய தீன்விட்டு' வந்தன என மட்டும் கூறப்பட்டுள்ளது.

## 20. அரிச்சந்திரன் அம்மானை

விசுவாமித்திரர் ஏவிய விலங்குகள் பறவைகள் முதலியன அரிச்சந்திரன் நாட்டு வயல்கள், தோட்டங்கள், முதலியவற்றைப் பாழ்படுத்தியதால் வருந்திய குடியானவர்கள், விசுவாமித்திரர் ஏற்படுத்திய மதிமயக்கத்தால் ஆறாண்டுகள் அலைந்து திரிகின்றனர். அதன்பின் மன்னன் அரிச்சந்திரனைக் கண்டு, நடந்த துன்பத்தைச் சொல்லி முறையிடுகின்றனர். அவர்களின் துன்பத்தை அறிந்த அரிச்சந்திரன் அவர்களுக்கு வெகுமானங்களை அளித்து மூன்றாண்டிற்கான வரியை நீக்கி உதவுகின்றான்.

### அரிச்சந்திர புராணம்

வயல்கள், தோட்டங்கள் பாழ்பட்டதால் வருந்திய குடியானவர்கள் உடனே சென்று அரிச்சந்திரனைக்கண்டு முறையிடுகின்றனர். அரிச்சந்திரன் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு வரியை நீக்கிக் குறைவிலா நிதி, ஆடை அளித்து அனுப்புகின்றான்.

## 21. அரிச்சந்திர புராணம்

விசுவாமித்திரர் அனுப்பிய பன்றியை அரிச்சந்திரன் அம்பெய்து காயப் படுத்தி விடுத்தபின் ஒரு சோலையில் படையினருடன் தங்கியிருக்கின்றான். அப்போது அங்குவந்த முனிவர்கள் அரிச்சந்திரனையும் படையினரையும் கண்டு கோபமுற்றுக் கோசிகன் கண்டால் சாபம் இட்டு எரிப்பன், இங்குச் சார்ந்தது தகாது எனக் கூறுகின்றனர். அதைக்கேட்ட அரிச்சந்திரன் கோசிகர்க்குத் தாங்கள் அடிமைகளென்றும் அவர் தங்கள்மேல் சினங் கொள்ளக் காரணமில்லையென்றும் கூறுகின்றான். முனிவர்கள் அரிச்சந்திர னிடம் இனி நடக்கப்போவதை விரைவில் காண்பாய் என உரைத்துச் செல்கின் றனர். சென்ற முனிவர்கள் விசுவாமித்திரரிடம் அரிச்சந்திரன் சோலையில் தங்கியிருப்பதை எடுத்துரைக்கின்றனர்.

### அரிச்சந்திரன் அம்மானை

இத்தகைய பகுதி எதுவும் இல்லை.

## 22. அரிச்சந்திரன் அம்மானை

கோசிகனால் படைக்கப்பெற்ற இரு பெண்களும் அரிச்சந்திரனை அடைந்து கேட்கத் தகாததைக் கேட்டு அவனால் வெளியேற்றப்படும் பகுதிக்குப் பிறகே (சந்திரமதி) கனவுகாணும் பகுதி இடம்பெற்றுள்ளது.

### அரிச்சந்திர புராணம்

இரு பெண்களும் கோசிகனால் படைக்கப்பெறுவதற்கு முன்னரே (அரிச்சந்திரன்) கனவு காணும் பகுதி இடம்பெற்றுள்ளது.

## 23 அரிச்சந்திரன் அம்மானை

சந்திரமதி கனவு காணுகின்றாள் கனவில், கொலுவீற்றிருக்கும் அரிச்சந்திரனை நான்கு பெண்கள் சூழ்ந்திருக்கின்றனர். அவர்களுள் ஒரு பெண்ணைத்தவிர மற்ற மூவரும் அவனைவிட்டு நீங்குகின்றனர். அவ்வாறு நீங்குகையில் அரசனுடைய மகுடம், ஆபரணம், வாள் ஆகியவற்றையும் வாங்கிக்கொண்டு செல்கின்றனர். இக்கனவினைச் சந்திரமதி அரிச்சந்திரனி டம் சொல்லுகிறாள். அவன் விடிந்ததும் மந்திரியிடம் சொல்லிப் பொருள் கேட்டறிகின்றான்.

### அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரன் கனவு காணுகின்றான். கனவில், அரிச்சந்திரன் ஐந்து பெண்களுடன் கூடி மகிழ்ந்திருக்கின்றான்; அவர்களுள் ஒருத்தியை அவனே முனிவருக்குக் கொடுக்கின்றான்; மற்றொருத்தி முனிவரிடம் தானே போய்ச்

சேர்கின்றாள்; ஒருத்தி உணவின்றி நீங்குகின்றாள்; ஒருத்தி கண்ணை இழக்கின்றாள்; ஒருத்தி மட்டும் அவனை நீங்காமல் துணையாகி இம்மை மறுமைக்கு வேண்டிய கடமைகளைச் செய்கின்றாள்.

இக்கனவினை அரிச்சந்திரன் சந்திரமதிக்கும் அமைச்சருக்கும் சொல்லி, அமைச்சரிடம் பொருள் கேட்டறிகின்றான்.

## 24. அரிச்சந்திரன் அம்மானை

விசுவாமித்திரரின் கோபத்தில் தோன்றிய இரு பெண்களும் 'கோபப் புலைமாதர்' என ஓரிடத்திலும், 'புலைச்சியர்' 'புலைமாதர்', 'புலைப்பெண்கள்' எனப் பல இடத்திலும் குறிப்பிடப்படுகின்றனர். இவ்வாறு குறிப்பிடப் படுவதற்கான தெளிவான காரணம் கூறப்படவில்லை. அப்பெண்கள், அரிச்சந்திரன்முன் இக்காட்டில் வாழும் புலைச்சாதியினர் எனத் தங்களைச் சொல்லிக் கொள்ளவும் இல்லை.

### அரிச்சந்திர புராணம்

'தவத்தில் சிறந்த பெரியோர்களுக்குக் கோபம் சண்டாளம் என்பதால் விசுவாமித்திர முனிவரின் கோபத்தில் பிறந்த அப்பெண்கள் புலைப்பெண்கள் ஆயினார்' எனக் காரணம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் அப் பெண்கள் இருவரும் தங்களை அரிச்சந்திரனிடம்,

"அல்லியந் தொடையல் மார்ப
இவ்வனத் தகத்து வாழ்வோம்
புல்லிய சாதி ஈனப்
புலைச்சியர் யாங்கள் ஐயா!"

என அறிமுகப்படுத்திக்கொள்வதாகவும் உள்ளது.

## 25. அரிச்சந்திரன் அம்மானை

கோசிகன் தான் படைத்த இரு பெண்களையும் அரிச்சந்திரனிடம் அனுப்புகையில், "உங்கள் வித்தைகளால் அரிச்சந்திரன் உள்ளங்கவர்ந்து அவனுடைய சாமரை, குடை, மகுடம் ஆகியவற்றைப் பரிசாகக் கேளுங்கள். அவற்றைத்தர அவன் மறுத்தால் உங்களை மணந்துகொள்ளுமாறு கேளுங்கள். அதனையும் அவன் மறுத்தால் ஓர் பொழுது உங்களுடன் மேவியணைந்திருக்கக் கேளுங்கள்" என்று சொல்லுகின்றான். அவ்விரு பெண்களும் அவ்வாறே அரிச்சந்திரனிடம் கேட்கின்றனர்.

### அரிச்சந்திர புராணம்

கோசிகன், "உங்கள் வித்தைகளால் அவனை மயக்கிப் பரிசாக வெண்கொற்றக் குடையைக் கேளுங்கள். அதனைத்தர மறுத்தால் அவனுடன் கலந்து மகிழ்ந்து கலவியைக் கேளுங்கள்." என்று தான் படைத்த இரு பெண்களிடமும் சொல்லி அரிச்சந்திரனிடம் அனுப்புகின்றான். அவ்விரு பெண்களும் அரிச்சந்திரனிடம் அவ்வாறே கேட்கின்றனர்.

## 26. அரிச்சந்திரன் அம்மானை

விசுவாமித்திரர் அரிச்சந்திரனை நோக்கி, "என் மக்களாகிய இரு பெண்களை ஏன் துரத்தினாய்?" என்று கேட்கிறார். அதற்கு அரிச்சந்திரன் "கொடுத்த பரிசுகளை மறுத்துவிட்டு மகுடம், வாள், கவிகை, சாமரை ஆகியவற்றை அவர்கள் கேட்டனர். தர இயலாது என்றதும் அவர்கள் 'தம்மைப் புல்கும்' என்றனர். அதனால் முடியாது என்று சொல்லித் தள்ளி விட்டேன்" எனப் பதில் கூறுகின்றான்.

### அரிச்சந்திர புராணம்

விசுவாமித்திரரின் இக்கேள்விக்கு அரிச்சந்திரன், "அப்பெண்களை நின் மக்கள் என அறியேன்! அவர்கள் தக்கவாறு உரையாமையால் தள்ளித் துரத்தினேன்" எனப் பதில் கூறுகின்றான்.

## 27. அரிச்சந்திரன் அம்மானை

கோசிகன் தானனுப்பிய இரு பெண்களையும் மணந்துகொள்ளச் சொல்லி அரிச்சந்திரனை வற்புறுத்துகையில், அரிச்சந்திரனின் தந்தை திரிசங்குவின் கதையை—நடந்த நிகழ்ச்சிகளை (முழுமையாக) விரிவாக அரிச்சந்திரனுக்கு எடுத்துரைக்கின்றான்.

### அரிச்சந்திர புராணம்

இந்த இடத்தில் அரிச்சந்திரனும் விசுவாமித்திரரும் உரையாடிக் கொள்கையில், வசிட்டன் 'புலையனாகுவாய்' எனத் திரிசங்குவிற்குச் சாபங் கொடுத்ததை அரிச்சந்திரனும், அப்புலைச் சாபத்தைத் தான் அகற்றியதை விசுவாமித்திரரும் (மிகமிகச் சுருக்கமாக 4 அடிகளில்) எடுத்துரைக்கின்றனர்.

## 28. அரிச்சந்திரன் அம்மானை

விசுவாமித்திரர் அனுப்பிய பெண்களை அரிச்சந்திரன் மணக்க மறுப்பதற்கு, சந்திரமதியைத்தவிர வேறு தாரத்தை—இன்னொரு பெண்ணை மணந்துகொள்ள விரும்பாதமையே முதன்மையான காரணமாகின்றது.

அரிச்சந்திர புராணம்

மணக்க மறுப்பதற்கு, அப்பெண்கள் புலைப்பெண்கள் என்பதே முதன்மையான காரணமாகின்றது.

## 29. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரன், "செல்வம் போனாலும் ஆளும் புவியும் அரசும் இழந்து போனாலும் வேறு தாரம் கொள்ளமாட்டேன்" என்று கூறுகின்றான். 'நாட்டைத் தருவேன்' என நேரடியாகச் சொல்லவில்லை.

அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரன், "பறைக்குலப் பெண்ணை வேண்டிலன். கண்ணை வேண்டுமாயினும் காக்கின்ற மண்ணை வேண்டுமாயினும் ஈகுவன்" என நேரடியாகச் சொல்கின்றான்.

## 30. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரன் கோசிகனுக்கு நாட்டைத் தாரைவார்த்துத் தந்ததும், கோசிகன், "இவ்வுலகை ஆள நின் அடையாளம் தா" எனக்கேட்பதாகவோ அரிச்சந்திரன் கொடுப்பதாகவோ இல்லை.

அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரன் கோசிகனுக்கு நாட்டைத் தாரை வார்த்துத் தந்ததும் கோசிகன், "இவ்வுலகெலாம் நான் ஆள நின் அடையாளந் தந்திடு" என்று கேட்கின்றான். அரிச்சந்திரன் உடன் தன் முத்திரை மோதிரத்தை அளிக்கின்றான்.

## 31. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரனிடமிருந்து நாட்டைத் தாரை வார்த்துப் பெற்றபின் விசுவாமித்திரர், அரிச்சந்திரன் சந்திரமதி லோகதாட்சணன் ஆகியோர் அணிந்திருந்த ஆபரணங்களையும் ஆடைகளையும் அவர்களிடமிருந்து கழற்றி வாங்கிக்கொள்கின்றார். தன் பழைய ஆடையைக் கிழித்துக் கொடுத்து அவர்களை உடுத்தச் செய்கின்றார். பின் அரிச்சந்திரனை நோக்கி" நீ நேரில் வந்து அரண்மனை முதலான இடங்களைக் காட்டி அனைவரின் கண்முன் நாட்டை எனக்குத் தந்து செல்" என்று சொல்கின்றார். அவ்வாறே இடங்களைக்காட்டி நாட்டை அனைவரின் கண்முன் அரிச்சந்திரன் விசுவாமித்திரருக்கு அளிக்கின்றான், அதன்பின் விசுவாமித்திரர், "முன்னர் வேள்விக்குத் தருவதாய்ச் சொன்ன பொன்னைத் தா" என அரிச்சந்திரனிடம் கேட்கின்றார்.

அரிச்சந்திர புராணம்

நாட்டைத் தாரை வார்த்துப் பெற்றபின், ஆடை ஆபரணங்களைப் பெற்றபின், தான் அளித்த பழைய ஆடைகளை அவர்களை உடுத்தச்செய்த பின் விசுவாமித்திரர், அரிச்சந்திரன் முதலியோர் புறப்படுகையில் அவர்களை நிறுத்தி அரிச்சந்திரனை நோக்கி, "நீ எனக்கு வேள்விக்குத் தருவதாய் முன்னர் சொன்ன பொன்னைத் தா" என்று கேட்கின்றார். அரிச்சந்திரன் வருந்திப் பின் காசிநகர் சென்றதும் தருவதாக உறுதி கூறுகின்றான். அதன் பின் விசுவாமித்திரர், 'நீ நேரில் நாட்டிற்கு வந்து அரண்மனை முதலான வற்றைக் காட்டி அனைவரின் கண்முன் நாட்டை எனக்குத் தந்துசெல்" என்று அரிச்சந்திரனிடம் கூறுகின்றார்.

## 32. அரிச்சந்திரன் அம்மானை

நாட்டைத் துறந்துசெல்லும் அரிச்சந்திரனிடம் விசுவாமித்திரர் முன்னர் வேள்விசெய்யத் தருவதாக ஒப்புக்கொண்ட பொன்னைத் தந்துசெல் எனக் கூற, அரிச்சந்திரன் அப்பொன்னைக் காசிநகர் சென்றபின் எங்காகிலும் முயன்று பெற்றுத்தரக் கால அவகாசம்—நாள்தவணை கேட்கின்றான். விசுவாமித்திரர் முதலில் மூன்றுநாள் தவணை தருகின்றார். அது போதாது என அரிச்சந்திரன் காசிநகர் சென்றபின் பொன்தர நாற்பதுநாள் கால அவகாசம்—தவணை வேண்டுமெனக் கேட்கின்றான். விசுவாமித்திரரும் நாற்பதுநாள் தவணைக்கு ஒப்புக்கொள்கின்றார்.

அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரன் அப்பொன்னைக் காசிநகர் சென்றதும் தரக் கால அவகாசம் கேட்கின்றான். விசுவாமித்திரர் முதலில் இருபதுநாள் கால அவகாசம் அளிக்கின்றார். அரிச்சந்திரன், "காசிநகர் செல்வதற்கே நாற்பது நாள் ஆகும்; அதன்பின் பொன்பெற முயலவேண்டும்!" எனக்கூற, விசுவாமித்திரர் நாற்பத்தெட்டு நாள் கால அவகாசத்தை—தவணையை அரிச்சந்திரனுக்கு அளிக்கின்றார்.

## 33. அரிச்சந்திரன் அம்மானை

"அறநெறியிலும் பண்புகளிலும் சிறந்த இவ்வரிச்சந்திரனை இந்திரன் சபையில் குறைசொன்னோமே!" என விசுவாமித்திரர் நினைந்து வருந்துவ தாக எங்கும் இல்லை.

அரிச்சந்திர புராணம்

விசுவாமித்திரர், "அறநெறியிலும் பண்புகளிலும் சிறந்த இவ்வரிச் சந்திரனைத் தவறாக இந்திரன் சபையில் குறை கூறினோமே!" என இரு இடங் களில் வருந்திநிற்கின்றார்.

## 34 அரிச்சந்திரன் அம்மானை

விசுவாமித்திரருக்குச் சேரவேண்டிய பொன்னைப் பெற்றுவர அரிச்சந்திரனுடன் காசிக்குச் செல்லும் சுக்கிரன், உடன் வருவதற்கான கூலியை —பரிகாரத்தைத் தனக்குத் தரவேண்டும் எனத் தானே வழியில் கேட்கின்றான். அரிச்சந்திரன் அதனையும் தர இசைகின்றான்.

### அரிச்சந்திர புராணம்

பொன்னைப் பெற்றுவர அரிச்சந்திரனுடன் சுக்கிரனை அனுப்பும் போதே விசுவாமித்திரர், "நீ பின்போன கூலியையும் பெறுதி" என்று சொல்லி அனுப்புகின்றார்.

## 35. அரிச்சந்திரன் அம்மானை

நாட்டை விட்டு நீங்கும் அரிச்சந்திரனை நோக்கிச் சத்தியகீர்த்தி, "நானும் உடன் வருகின்றேன்" எனக் கூறுகின்றான். அதற்கு அரிச்சந்திரன், "நாட்டுடன் உன்னையும் விசுவாமித்திரனுக்கு அளித்துவிட்டேன்; நாடு காத்திரு; முனிக்கு உதவியிரு" என்று சொல்கின்றான். சத்தியகீர்த்தி கண் கலங்கி "நானும் வருகிறேன். இன்றேல் உயிரை விட்டுவிடுவேன்" என வற்புறுத்தி மீண்டும் வேண்டுகின்றான். அது கண்ட அரிச்சந்திரன், "கோசிகனிடம் போய் அனுமதி பெற்று முனி ஆளாய் வந்துவிடு" என்று சொல்கின்றான். பின் கோசிகனிடம் சென்று அனுமதி பெற்றுச் சத்தியகீர்த்தி அரிச்சந்திரனுடன் செல்கின்றான்.

### அரிச்சந்திர புராணம்

சத்தியகீர்த்தி, "நானும் உன்னோடு வருவேன்" எனக் கூறிக் கதறி நிற்க, அரிச்சந்திரன், 'இவனைத் தனியே விட்டுவரின் உயிர்விட்டு விடுவான்' என்று கருதித் தானே தன்னுடன் 'வருதி' என்று சொல்லி அழைத்துச் செல்கின்றான்.

## 36. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரன், சந்திரமதி, லோகதாட்சணன், சத்தியகீர்த்தி, சுக்கிரன் ஆகியோர் காசி நோக்கிக் காட்டு வழியில் செல்கையில், அரிச்சந்திரன் சுக்கிரனுக்குக் கனிகளை உண்பதற்கு அளிக்கின்றான். சுக்கிரன் அவற்றை உண்ண மறுத்துப் 'பாலடிசில் தா' எனக் கேட்கின்றான். தன்னிலைமையை அரிச்சந்திரன் சொல்லியும் மனமிரங்காச் சுக்கிரனுக்குக் 'காசி நகர் சென்றதும் பாலோடு அமுர்தம் தருகிறேன்' என அரிச்சந்திரன் கூறுகின்றான். அதன் பிறகே சுக்கிரன் கனிகளை உண்கின்றான்.

அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரன் அளித்த கனிகளைச் சிறிது சுவைபார்த்த சுக்கிரன், "நான் இவற்றை உண்ணேன்" எனக் கூறிச் சினக்கின்றான். அதுகண்ட அரிச்சந்திரன், "காட்டில் பாலடிசில் நான் தேடல் இயலுமோ?" என்று கேட்கின்றான். சந்திரமதி, "கல்நெஞ்சராகிய கௌசிகர் நெஞ்சம்போல் உன் நெஞ்சமும் வன்னெஞ்சமோ?" எனக் கேட்கின்றாள். அதன் பின்பே சுக்கிரன் தன் நெஞ்சுருகிச் சிறிதளவு அருள்கொண்டு கனிகளை உண்கின்றான்.

## 37. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரன், சந்திரமதி, லோகதாட்சணன், சத்தியகீர்த்தி, சுக்கிரன் ஆகியோர் நாடுவிட்டுக் காசிநோக்கிக் காட்டுவழியாகச் செல்லுகையில் விசுவாமித்திரர்,

1. குளிர் வாடையையும் பனிக்காற்றையும் அவர்கள் படுத்துறங்கும் இடத்திற்கு அனுப்பிவைத்துத் துன்புறுத்தல்.

2. அவர்கள் துயில்கின்ற நேரத்தில் மேகங்களை ஏவிவிட்டு மழை பொழிந்து வெள்ளம் வரச்செய்து துன்புறுத்தல்.

3. ஏவிவிட்ட மேகங்கள் மழைபொழிய, வெள்ளம்வர, வெள்ளத்தில் சிக்குண்டு தப்பி அவர்கள் மேட்டுப்பகுதியை நாடி ஏறி இருக்கையில் நட்டுவக்காலி, தேள், அட்டை, செய்யான், அரவம், புழுக்கள் முதலியனவற்றை ஏவிவிட்டு அவர்களைத் துன்புறுத்தல்.

4. அக்கினிதேவனை அனுப்பித் துன்புறுத்தல்.

5. பேய், பிசாசுக் கூட்டத்தை அனுப்பித் துன்புறுத்தல்.

6. 'கார்க்கோடகன்' எனும் மாபெரும் பாம்பை அனுப்பி வழி மறிக்கச்செய்து துன்புறுத்தல். (சந்திரமதி சில மொழிகள் உரைத்து நாகத்தின் வாயை மிதித்துச்செல்ல முயல, நாகத்திற்குச் சந்திரமதி வருவது பெருங்கருடன் வருவதாகத் தோன்ற, அலறி ஓடுகின்றது.)

7. பாறை, கல்கரடுகளை வழிமுழுதும் இட்டுவைத்துக் கால்கள் வருந்துமாறு செய்தல்.

8. வழிமுழுதும் நெருஞ்சிமுள், இலந்தை முள், காரை முள் ஆகியவற்றைத் தூவிவைத்துத் துன்புறுத்தல்.

ஆகிய இடையூறுகளை ஏற்படுத்தியதாக உள்ளது.

அரிச்சந்திர புராணம்

நாடுவிட்டுக் காசிநோக்கிக் காட்டு வழியாகச் செல்கையில் விசுவாமித்திரர் முதலில் தேள், கட்டெறும்பு, பாம்பு, கருங்குளவி, பூரான் முதலியவற்றை அனுப்பித் துன்புறுத்துவதாகவும், அதன் பிறகே மேகங்களை அனுப்பி மழை பொழியச்செய்து துன்புறுத்துவதாகவும், பேய் பிசாசுகளை அனுப்பித் துன்புறுத்துவதாகவும், அக்கினியை அனுப்பித் துன்புறுத்துவதாகவும் உள்ளது.

குளிர்வாடையையும் பனிக்காற்றையும் அனுப்பித் துன்புறுத்துவதாகவோ 'கார்க்கோடகன்' எனும் மாபெரும் பாம்பை அனுப்பித் துன்புறுத்துவதாகவோ, பாறை, கல் கரடுகளை வழியில் இட்டுவைத்துத் துன்புறுத்துவதாகவோ, வழிமுழுதும் நெருஞ்சி முள், இலந்தை முள், காரை முள் ஆகியவற்றைத் தூவி வைத்துத் துன்புறுத்துவதாகவோ அரிச்சந்திர புராணத்தில் இல்லை.

கோசிகன் ஏவலால் கொடிய விலங்குகள் வந்து பயமுறுத்துகின்ற இடையூறும் உள்ளது. (அரிச்சந்திரன் அம்மானையில் இது இடம்பெறவில்லை.)

## 38. அரிச்சந்திரன் அம்மானை

நாடு துறந்து அரிச்சந்திரன், சந்திரமதி, லோகதாட்சணன், சத்தியகீர்த்தி, சுக்கிரன் ஆகியோர் காட்டு வழியாகக் காசிக்குச் செல்லும்போது வழியில் புருஷாமிருகம் எதிர்ப்படுகின்றது. அவர்களைத் தன் மேல் ஏறிக் கொண்டு காட்டைக் கடந்து செல்லுமாறு அரிச்சந்திரனிடம் சொல்கின்றது. அரிச்சந்திரன், "உன் முதுகில் நாங்கள் ஏறிச்செல்லல் சிவன், திருமால், பிரமன், அண்டர் ஆகியோருக்கும் ஏற்காது; வேண்டாம்" எனக் கூறுகின்றான். புருஷாமிருகத்தை அனுப்பிவைத்துவிட்டுத் தொடர்ந்து அரிச்சந்திரன் முதலியோர் நடக்கின்றனர்.

அரிச்சந்திர புராணம்

புருஷாமிருகத்தின் வருகை எந்த இடத்திலும் இடம்பெறவில்லை.

## 39. அரிச்சந்திரன் அம்மானை

மனைவியையும் மகனையும் விலைகூறி விற்க அரிச்சந்திரன், அவர்களின் தலையில் புல் வைத்து அழைத்துச் செல்வதாக இல்லை.

அரிச்சந்திர புராணம்

மனைவியையும் மகனையும் விலை கூறி விற்க அரிச்சந்திரன், அவர்களின் தலைமேல் புல் வைத்து அழைத்துச் செல்கின்றான்.

## 40. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரனை விலைகூறி விற்கச் சத்தியகீர்த்தி, அரிச்சந்திரனின் தலைமேல் தெர்ப்பை வைத்து அழைத்துச் செல்கின்றான்.

### அரிச்சந்திர புராணம்

சத்தியகீர்த்தி, அரிச்சந்திரனின் தலைமேல் புல் வைத்து அழைத்துச் செல்கின்றான்.

## 41. அரிச்சந்திரன் அம்மானை

மயானம் காத்திருக்கும் அரிச்சந்திரன், தனக்குக் கூலியாக வந்துவிழும் ஈமவரி வாய்க்கரிசியை எடுத்துச் சத்தியகீர்த்தியிடம் அளிக்கின்றான். சத்தியகீர்த்தி அவ்வரிசியை விசுவநாதர் கோயில் பசுவினுடைய கோசலத்தில் (மூத்திரத்தில்) தூய்மைசெய்து கங்கை நீரில் பிசைந்து உலர்த்திப் புது மண் கலத்தில் கங்கை நீரிலிட்டுச் சமைக்கின்றான். சமைத்த சோற்றை அரிச்சந்திரனை உண்ணச் செய்து தானும் உண்கின்றான்.

### அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரன் அளித்த வாய்க்கரிசியைக் கொண்டுபோய்ப் பசுவுக்கு உண்ணக்கொடுத்துச் சாணத்துடன் வந்துவீழ்ந்த அரிசியை எடுத்துக் குத்திச் சத்தியகீர்த்தி சோறு சமைக்கின்றான். சமைத்த சோற்றை அரிச்சந்திரனை உண்ணச்செய்து தானும் உண்கின்றான்.

## 42. அரிச்சந்திரன் அம்மானை

இறந்து கிடக்கும் மகனைத் தேடிச் சந்திரமதி செல்லும் வழியில், விசுவாமித்திரர் வந்து 'மாய இருள் உண்டுபண்ணி அந்தரங்கள் பூமி அறியாமல் பண்ணி'ச் சந்திரமதியைத் திகைக்க, தடுமாற வைக்கின்றார்.

### அரிச்சந்திர புராணம்

அவ்வாறு கூறுகின்ற பகுதி எதுவும் இல்லை.

## 43. அரிச்சந்திரன் அம்மானை

இறந்து கிடக்கும் அரிச்சந்திரனின் மகனைப் பல பேய்கள் சூழ்ந்து நின்று, "இளஞ்சதை எனக்கு, கைச்சதை உனக்கு, கால்சதை எனக்கு" எனப் பங்குபோடப் பேசிக்கொள்கின்றன.

### அரிச்சந்திர புராணம்

அவ்வாறு பேசிக் கொள்ளும் பகுதி எதுவும் இல்லை.

44. அரிச்சந்திரன் அம்மானை

கொடியவர் மூவர் விசுவாமித்திரரின் ஏவலால் காசிமன்னன் மகனைத் தூக்கிக்கொண்டுவந்து கொல்கின்றனர். மாண்ட மகனின் பிணத்தை எரிக்க மறையவரிடம் பணம் கேட்பதற்காக மயானத்திலிருந்து திருப்பிச் சந்திரமதி வரும் வழியில், காசிமன்னன் மகனின் உடலை அவர்கள் (விசுவாமித்திரர் சொல்படி) போட்டுவைத்துச் செல்கின்றனர். தன் மகன் பிணம்தான் இங்கு வந்ததோ என ஐயுற்று எடுத்துப் பார்க்கின்ற சந்திரமதியின்மேல் காசி மன்னன் மகனைக் கொன்றதாகப் பழி வந்து சேருகின்றது.

அரிச்சந்திர புராணம்

இச்செயல் விசுவாமித்திரர் ஏவலால் நடப்பதாகக் குறிப்பு எதுவும் இல்லை. இயல்பாகக் கள்வர் சிலர் நகைக்காகக் காசிமன்னன் மகனைக் கொன்று உடலைச் செல்லும் வழியில் போட்டுச் செல்வதாகவே உள்ளது. சந்திரமதி வரும் வழியில் அவ்வுடல் கிடக்க, சந்திரமதி அதனை ஐயத்தால் எடுக்கக் கொலைப்பழி வந்து சேருகின்றது.

45. அரிச்சந்திரன் அம்மானை

காவலர்களால் கொண்டுவரப் பெற்ற சந்திரமதி தன்முன் நிறுத்தப் படுகின்ற நேரத்தில் (தன் மகனைக் காணாததால்) காசிமன்னன் 'சிந்தை நொந்து வாடி' 'மகனை நினைந்து' வருந்தியிருந்ததாக அறிமுகப்படுத்தப் படுகின்றான்.

அரிச்சந்திர புராணம்

(தன் மகனைக் காணவில்லை எனும் சூழலிலும்) காசிமன்னன் தன்முன் காவலர்களால் கொணர்ந்து நிறுத்தப்படுகின்ற சந்திரமதியைப் பார்த்து, 'நிகழ்ந்த பிழை என்கொல் என்று அதிசயித்து' 'இஃது இறக்கு' என உரைப்பதாக அறிமுகப்படுத்தப்படுகின்றான்.

46. அரிச்சந்திரன் அம்மானை

சந்திரமதியைக் கொல்ல ('ஒண்டொடியை வெட்ட') மனத்தில் எண்ணிய காசிமன்னன், தன் அவையிலிருந்த மறையோரை நோக்கி "இவளுக்கு என்ன தண்டனை விதிக்கவேண்டும்?" எனக் கேட்கின்றான். அப்பொழுது விசுவாமித்திரர் அங்கே 'ஆதிமறை வேதியனாய் வந்துநின்று' 'சிரசை வெட்டவேணும்' என உரைக்கின்றான். அதுகேட்ட மன்னன் சந்திரமதியை வெட்ட வீரவாகுவை அழைத்துவருமாறு ஆள் அனுப்புகின்றான்.

அரிச்சந்திர புராணம்

முதல்நாள் மாலை சந்திரமதியைத் தண்டிக்க மனத்தில் எண்ணிய காசிமன்னன், மறுநாள் காலை வீரவாகுவை அழைத்து உரைச்சொல்லிச் சந்திரமதியைக் (வெட்டிக்) கொல்லுமாறு ஆணையிடுகின்றான். (காசிமன்னன் மறையோர்களை நோக்கிக் கேட்பதாகவோ விசுவாமித்திரர் மறையோனாக வந்துநின்று 'வெட்டிக்கொல்ல வேண்டும்' எனச் சொல்வதாகவோ இல்லை.)

## 47. அரிச்சந்திரன் அம்மானை

காசிமன்னன் இட்ட ஆணையை வீரவாகு சொல்ல, அரிச்சந்திரன் சந்திரமதியைக் கொண்டுசென்று வெட்ட முனைகின்றான். அவ்வேளையில் சந்திரமதி 'வழக்கமுடன் கைகுவித்து' மார்த்தாண்டனை, ஈசனை, ஈஸ்வரியை மாலினை, விநாயகனை, முருகனை வணங்கித் தண்டனையை ஏற்றுக் கொள்வதற்கு வீற்றிருக்கின்றாள்.

அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரன் காசிமன்னன் ஆணைப்படி சந்திரமதியை வெட்ட முனையும் வேளையில் சந்திரமதியை நோக்கி, ''வழக்கமாக நீ வழிபடும் தெய்வத்தை வணங்கியிரு'' என்று சொல்கின்றான். சந்திரமதி அரிச்சந்திரனையே வணங்கியிருக்கின்றாள். (கொழுநனே தெய்வம்)

## 48. அரிச்சந்திரன் அம்மானை

அரிச்சந்திரன் சந்திரமதியை வாளால் வெட்டுகின்றான். அவ்வாள் ''செண்பகப்பூ மாலையாய்ச்'' சந்திரமதியின் கழுத்தில் விழுகின்றது.

அரிச்சந்திர புராணம்

வெட்டிய வாள், ''மாலை''யாய்ச் (மறுமணத்து இடும் மாலையாய்ச்) சந்திரமதியின் கழுத்தில் விழுகின்றது.

## 49. அரிச்சந்திரன் அம்மானை

இறுதியில் சிவன், உமை, திருமால், பிரமன், முருகன், விநாயகன் முதலியோர் காட்சி தருகின்ற வேளையில், உமை சந்திரமதியை நோக்கி, ''உன் மகன் லோகதாட்சணனை அழை!'' என்று சொல்கின்றாள். அதன்படி மாண்ட தன் மகனைச் சந்திரமதி அழைக்க அவன் உயிர்பெற்று எழுகின்றான்.

அரிச்சந்திர புராணம்

மாண்டுகிடந்த சந்திரமதியின் மகன் தேவதாசனை முருகன் 'வருக' என அழைக்கத் தேவதாசன் உயிர்பெற்று எழுகின்றான்.

**50.** அரிச்சந்திரன் அம்மானை

இறந்து மயானத்திற்கு எடுத்துவரப்பெற்ற காசிமன்னனின் மகன் சிவபெருமானின் அருளால் உயிர்பெற்று எழுகின்றான்.

அரிச்சந்திர புராணம்

அவன் வேலன் அழைக்க உயிர்பெற்று எழுகின்றான்.

**51.** அரிச்சந்திரன் அம்மானை

எமன் அரிச்சந்திரனிடம் தான் புலையனாக வந்து அவனை அடிமை கொண்டிருந்ததை எடுத்துரைக்கையில், முன்னர்த் தான் சிவனிடம் புலையனாகச் சாபம்பெற்ற கதையைச் சொல்லுகின்றான்.

அரிச்சந்திர புராணம்

எமன், தான் புலையனாக வந்து அரிச்சந்திரனை அடிமை கொண்டிருந்ததை மட்டுமே எடுத்துரைக்கின்றான்.

தான் முன்னர்ச் சிவனிடம் புலையனாகச் சாபம் பெற்றதாகவோ கதையெதையுமோ கூறவில்லை.

**52.** அரிச்சந்திரன் அம்மானை

அக்கினிதேவன் அரிச்சந்திரனிடம் தான் அந்தணனாய் வந்து சந்திரமதியையும் மகனையும் அடிமை கொண்டிருந்ததை எடுத்துரைக்கையில், முன்னர்த் தான் சிவபெருமானைச் சுட்ட தோசந்தீர அவர் ஆணைப்படி அந்தணனாகக் காசியில் வாழ்ந்திருந்த கதையைச் சொல்லுகின்றான்.

அரிச்சந்திர புராணம்

அக்கினிதேவன், தான் அந்தணனாக வந்து அரிச்சந்திரனின் மனைவியையும் மகனையும் அடிமைகொண்டிருந்ததை மட்டுமே எடுத்துரைக்கின்றான்.

முன்னர்த் தான் சிவபெருமானைச் சுட்டதாகவோ, அத்தோசம் தீரச் சிவபெருமான் காசியில் அந்தணனாக இருக்க ஆணையிட்டதாகவோ எக் கதையையும் அக்கினிதேவன் கூறவில்லை.

**53.** அரிச்சந்திரன் அம்மானை

துன்பங்களெல்லாம் நீங்கி அரிச்சந்திரன் சந்திரமதி முதலானோர் காசியிலிருந்து அயோத்திக்கு மீள்கையில், அரிச்சந்திரனை இந்திரனும், சந்திரமதியை இந்திராணியும் தேர்மீது ஏற்றிவைக்கின்றனர்.

அரிச்சந்திர புராணம்

அயோத்தியிலிருந்து மீள்கையில் அரிச்சந்திரன் தேரில் ஏறாமல் கால் நடையாக நடக்கத் தொடங்க, காசிமன்னன் தேரின் மேல் ஏறி வருமாறு கூறுகின்றான். தேரில் ஏற அரிச்சந்திரன் மறுக்கின்றான். முனிவர்கள் யாவரும் வேண்டிக்கொள்ள, வானவர் அரிச்சந்திரனைத் தேரில் ஏற்றி வைக்கின்றனர்.

சந்திரமதியைத் தொடத் தேவர், மாந்தர் அனைவரும் அஞ்சி நிற்க இந்திராணி சந்திரமதியைத் தேரில் ஏற்றி வைக்கின்றாள்.

## 54. அரிச்சந்திரன் அம்மானை

துன்பங்களெல்லாம் நீங்கித் தெய்வங்களின் அருள்பெற்ற அரிச்சந்திரன் முதலானோர் மறுநாள் அயோத்திக்குப் புறப்படலாம் என எண்ணிக் காசி மன்னனின் விருந்தினராகத் தங்கியிருக்கின்றனர்.

அப்போது அங்கு, "அரிச்சந்திரனும் சந்திரமதியும் லோகதாட்சணனும் விசுவாமித்திரரின் சோதனையால் நாட்டையிழந்து காட்டில் அலைந்து துன்ப முற்று, விசுவாமித்திரருக்கு முன்பு சொன்ன பொன்னை அளிப்பதற்காக மறையவனிடமும் புலையனிடமும் அடிமைப்பட்டு அடிமையராகக் காசியில் இருக்கின்றனர்" என அமைச்சர் சத்தியகீர்த்தி சொல்லிவிட்ட செய்தியை அறிந்த சந்திரமதியின் தந்தை மதிதயன், உடன் புறப்பட்டு, சந்திரமதிக்குச் சீதனமாகக் கொடுத்த வயல்கள் முதலியவற்றிலிருந்து வந்துகொண்டிருக்கும் வருவாயை 'ஆனைமேல் நின்று கவண் கல்லெறிந்த தூர நிதி' யளவுக்கு எடுத்துக்கொண்டு வந்துசேருகின்றான்; அவர்களை மீட்டு அழைத்துச் செல்வதற்காக.

மதிதயன் வரக்கண்ட காசிமன்னன் அவரை வரவேற்று, அரிச்சந்திர னிடம் சொல்ல, அனைவரும் கூடி மகிழுகின்றனர். நடந்த நிகழ்ச்சிகளைச் சந்திரமதி தாய்தந்தையரிடம் எடுத்துரைக்கின்றாள்.

அரிச்சந்திர புராணம்

இத்தகைய பகுதி எதுவும் இல்லை.

பிற்சேர்க்கை—3

# ஸ்ரீ தேவீபாகவதத்தில் இடம்பெற்றுள்ள அரிச்சந்திரன் கதை

[அரிச்சந்திர உபாக்கியானம், ஸ்ரீ வேதவியாச பகவான் அருளிய ஸ்ரீ தேவீபாகவதத்தின் ஆறாம் ஸ்கந்தத்தில் மிகச் சுருக்கமாகவும் ஏழாம் ஸ்கந்தத்தில் விரிவாகவும் இடம் பெற்றுள்ளது.

சூத முனிவர் சவுனகாதியருக்கு எடுத்துரைப்பதாக அமைந்த ஸ்ரீ தேவீபாகவதத்தில், ஜனமேஜயன் வினவ வியாசர் அரிச்சந்திர உபாக்கியானத்தை ஜனமேஜயருக்குச் சொல்வதாக உள்ளது.

அவ்வரிச்சந்திர உபாக்கியானம், திருவனந்தபுரம் திரு. டி. எஸ். கிருஷ்ண ஐயர் தொகுத்ததாக உள்ள (ஸ்ரீ தேவீபாகவதம்) தமிழ் நூலினை அடிப்படையாகக் கொண்டு இங்குச் சுருக்கி அளிக்கப்பெறுகின்றது.]

அரிச்சந்திரன் சூரியகுலத்தில் திரிசங்குவிற்கு மகனாகத் தோன்றியவன். அயோத்தியை (கோசலநாடு) ஆண்ட அரசன். அவன் தனக்குப் புத்திர பாக்கியம் இல்லாததை எண்ணி மிகவும் வருந்தி, வசிஷ்ட முனிவரின் சொற்படி வருணபகவானை நோக்கித் தவமிருந்தான்.

அரிச்சந்திரனின் தவத்தால் மகிழ்ந்த வருணன் அவனுக்குக் காட்சியளித்து, "பிறக்கும் புதல்வனை எனக்கு யாகத்தில் பசுவாகக்கட்டிப் பலி கொடுக்க இசைந்தால் உனக்கு நான் புத்திரப்பேறு கிட்டும் வரத்தை அளிக்கிறேன்" என்றான். அரிச்சந்திரனும் தனக்கு உலகில் அபுத்திரவான் எனும் பெயரொழிந்து புத்திரவான் எனும் நற்பெயர் கிட்டுமேயென எண்ணி வருணனின் நிபந்தனைக்கு இசைந்தான்.

அரிச்சந்திரன் தன் தருமபத்தினியிடமும் ஏனைய நூறு மனைவிகளிடத்தும் வருணன் அளித்த வரப்பிரசாதத்தைச் சொல்லி மகிழ்ந்தான். சிலகாலங் கழித்து தருமபத்தினி கர்ப்பவதியாயினாள். குழந்தை பிறந்தது. அரிச்சந்திரன் மகிழ்ந்திருந்தான்.

புத்திரோற்சவத்தினால் அரசனுடைய இல்லம் விளங்கும்போது வருணன் ஒரு பிராமணன்போல் வந்து, "நான் வருணன். எனது வரதானத்தால் உனது புத்திரதானம் கனிந்துவிட்டதல்லவா? நீ எனக்கு முன் சொல்லிய சத்திய வசனப்படி யாகஞ்செய்!" என்றார்.

அரிச்சந்திரன் தாமரை மலர்போன்ற குழந்தையைக்கொல்ல மனமின்றி, வருணனைப் பணிந்து, "பிள்ளை பிறந்த பத்து நாளைக்குள் தந்தை யாககர்மம் செய்யத்தக்கவன் அல்லன் என்றும் தாய் ஒரு மாதத்திற்குள் சுத்தி யாகாளென்றும் யாகத்திற்குத் தம்பதிகளாக இருத்தல் வேண்டுமென்றும் தருமசாஸ்திரம் கூறுவதால் ஒரு மாதம் கழித்து யாகஞ் செய்கிறேன்" என்றான். வருணனும் ஒரு மாதங்கழித்து வருகிறேன் என்று கூறிச்சென்றார். அரிச்சந்திரன் மகன்முகங்கண்டு மகிழ்ந்திருந்தான். 'லோகிதன்' என்று பெயரிட்டான்.

மாத முடிவில் வருணன் முன்போல் வந்து 'யாகஞ்செய்' என்றார் அவரைப் பார்த்து வருந்திய அரிச்சந்திரன் அவரை வணங்கி, "வேதமுணர்ந்த பெரியோர் பல்லிழந்த பசுவினால் யாகஞ்செய்தல் கூடாதென்கின்றனர். பல் முளைத்த பிறகு யாகஞ்செய்துவிடுகிறேன்" என்றான். சரியென்று சென்ற வருணன், பல்முளைத்த செய்தியுணர்ந்து வந்து 'யாகஞ்செய்' என்றார்.

அரிச்சந்திரன் அவரிடம் பணிவான மொழிகளால் "குழந்தைக்குச் சௌளகர்மம் நடக்கவில்லை. அந்தச் சடங்கு முடிந்ததும் யாகத்தைச் செய்துவிடுகிறேன்" என்றான், அதுகேட்ட வருணன், "நான் வரும்போதெல்லாம் நியாயம்போல் ஒவ்வொன்றைச் சொல்லி என்னை வஞ்சித்து விடுகின்றாய். பிள்ளையினிடம் உனக்கிருக்கும் ஆசையால் என்னை வஞ்சித்து வருகிறாய். சௌளகர்மம் செய்தவுடன் யாகஞ் செய்யாமலிருப்பாயாகில் யான் கோபத்துடன் மிக்க பயங்கரமான சாபமொன்று உனக்குக் கொடுத்துவிடுவேன். இக்ஷ்வாகு குலத்திற் பிறந்த நீ பொய்சொல்லலாகாது" எனச் சினந்து சொல்லிப் போனார். 'இனி வருணன் வரும்போது பார்த்துக்கொள்ளலாம்' என எண்ணி அரிச்சந்திரன் பிள்ளையுடன் விளையாடி மகிழ்ந்து வாழ்ந்திருந்தான்.

பின் சௌளகர்மம் நடத்திவருகின்ற காலத்தில் வருணன் மீண்டும்வந்து "யாகஞ்செய்! யாகஞ்செய்!" எனக் கர்ஜித்தார். அவரைக் கண்டதும் துயரங்கொண்டு நடுங்கிப் பயந்து வணங்கி அரிச்சந்திரன், "யாகத்தை உடனே செய்துவிடுகிறேன். ஆனால் இன்னும் இவனுக்கு உபநயனம் ஆகவில்லையே, உபநயனமாகாத இவன் யாகத்திற்கு உரியவனாக மாட்டானே! இவனுக்கு உபநயனஞ் செய்வதெனில் (அரச குலத்தவர்க்குப் பதினொரு வயதில் உபநயனம் செய்யவேண்டுமென்பது விதி) இன்னும் சிலகாலம் ஆகுமே! என் மகனுக்கு உபநயனஞ் செய்வித்த பின்னர் உத்தமயான அந்த யாகத்தைச்

செய்து முடிக்கிறேன். அதுவரை பொறுத்துக்கொள்ள வேண்டுகிறேன்" என்றான் அரிச்சந்திரன் அதிக வினயத்துடன் பலமுறை சொல்ல வருண பகவான் மிக்க தயவுகாட்டிச் சரியென்று சென்றார்.

சிலகாலம் கழிந்தது. அரிச்சந்திரன் தன் மகனுக்கு உபநயனம் செய்ய ஏற்பாடுகள் செய்தான். உபநயன வேளையில் வருணன் வந்து 'யாகஞ்செய்' என்றார். அரிச்சந்திரன் அவரை வணங்கி "உபநயனம் செய்ததும் சமாவர்த்தன கருமம் செய்யவேண்டுமென்றும் அதனைச் செய்யாவிடில் உபநயனம் செய்தும் பயனில்லை என்றும் பெரியோர் கூறுகின்றனர். அதனை யும் செய்து முடித்ததும் யாகத்தைச் செய்துவிடுகிறேன். இந்த ஒரு சடங்கு முடியும்வரை மட்டும் பொறுத்தருளுங்கள்" என வேண்ட, வருணன் "சாமர்த்தியமாக நான் வரும்போதெல்லாம் தகுந்த நியாயங்காட்டி ஒவ்வொரு வார்த்தையினால் என்னை ஏமாற்றி வஞ்சித்து வருகின்றாய் இப்போது நீ கூறிய வார்த்தைப்படி சமாவர்த்தனம் முடிந்ததும் வேறொன்றும் சொல்லாமல் எனது யாகத்தை முடித்துவிடு" என்று சொல்லிச் சென்றார். அரிச்சந்திரனும் மேலே செய்யவேண்டிய கருமங்களைச் செய்து முடித்தான்.

அரிச்சந்திரனின் மகன், வருண பகவான் வந்து யாகஞ்செய்ய வற்புறுத்தி யதையும், தந்தை நடுங்கியதையும் கண்டு, யாகத்தில் தான் சாகவேண்டுமே என வருந்தியிருந்தான். மகன் வருந்துவதை அறிந்து அரிச்சந்திரன் துக்க மடைந்தான். அரிச்சந்திரனின் மகன் தந்தையின் துயர்கண்டு அவரை எதுவும் கேட்காமல் மற்றவர்களிடம் நடந்தவற்றைக் கேட்டறிந்து "இனி நானிங் கிருந்தால் தந்தையும் வருணனும் இவ்வுலகில் வாழவிடார்" என எண்ணி மந்திரிகுமாரருடன் ஆலோசித்து நாட்டைவிட்டு ஓடிப்போய்க் காட்டை யடைந்தான்.

அச் செய்தியறிந்து அரிச்சந்திரன் கவலைகொண்டு மகனைத் தேடி யழைத்துவரக் காட்டிற்குத் தூதரை அனுப்பினான். அவ்வேளையில் வருணன் வந்து, "நீ இதுவரை சொல்லி வந்ததெல்லாம் முடிந்துவிட்டது. யாகத்தை உடன் செய்" என்று கூற அரிச்சந்திரன் அவரடி பணிந்து, "நீங்கள் அடிக்கடி வந்துபோனதன் காரணத்தையறிந்து உமக்குப் பயந்து என் மகன் ஓடிப்போய்விட்டான். அவனைத் தேடியழைத்துவர ஆள் அனுப்பியுள்ளேன். இதுவரை பலனில்லை. என் செய்வேன்! யாகத்தைச் சிறப்பாக நடத்த நினைத்தேனே!" என்று கூற, அரிச்சந்திரனின் வார்த்தையினால் அடிக்கடி வஞ்சிக்கப்பட்ட வருணன் மிக்க கோபங்கொண்டு, "ஜலோதரமென்னும் வியாதி உன்னைத் தொடர்ந்து பீடிக்கக்கடவது" எனச் சபித்துப் போனார். அரிச்சந்திரன் அச்சாபத்தால் வியாதிக்குள்ளாகித் துன்புற்றிருந்தான்.

காட்டில் மறைந்து வாழ்ந்த லோகிதன் தன்தந்தை வருணனின் சாபத்தால் நோயுற்று வருந்துவதை அறிந்து அவரைப்பார்க்க எண்ணினான். ஆயினும் பயத்தால் ஓராண்டு நாடு செல்லாமல் இருந்தான். பின் துணிந்து புறப்பட்டதும் இந்திரன் அவனை வஞ்சிக்க எண்ணிப் பிராமணனாய்த் தோன்றிச், சென்றால் அவன் சாக நேரிடும் என்பதைச் சொல்லித் தடுத்துவிட்டான். இரண்டாம் முறை லோகிதன் புறப்பட்டபோதும் இந்திரன் முன்போலவே சொல்லித்தடுத்துவிட்டான்.

அரிச்சந்திரன் நோயிலிருந்து விடுபட வசிஷ்டரை உபாயம் கேட்க, அவர், ஒரு புத்திரனை விலைக்கு வாங்கி லோகிதனுக்குப் பதிலாக வருணனுக்கு யாகத்தில் பலியிட்டால் நோய்நீங்கும் என்றார். அவர், "வேதமறிந்த பிராமணர்கள், புத்திரர்கள் பத்துவிதப்படுவார் என்பார்கள்; விலைக்கு வாங்கப்பெறுபவரும் அவருள் அடங்குவர். ஆதலால் நீ நாட்டில் தேடிப் பார்த்துப் பொருளாசையுடைய ஏழைப் பிராமணன் ஒருவனின் மகனை விலைக்கு வாங்கப்பார்" என்றும் கூறினார்.

அரிச்சந்திரன், நாடெங்கும் தேடி, அஜிகர்த்தன் எனும் ஏழை பிராமணனுக்கு நூறு பசுக்களை அளித்து அவனுடைய மூன்று பிள்ளைகளுள் நடுவில் உள்ள சுனச்சேபனை விலைக்கு வாங்கினான். விலைக்கு வாங்கிய புத்திரனான சுனச்சேபனை (லோகிதனுக்குப் பதிலாக) நடபசுவாக யூபஸ்தம்பத்தில் அரிச்சந்திரன் கட்டி வைத்தான். யூபஸ்தம்பத்தில் கட்டப்பெற்ற சுனச்சேபன் ஐயோவென வருந்தியழத் தொடங்கினான். அவன் நிலை கண்டு அங்கிருந்த முனிவரும் பிறரும் வருந்தினர். யாகப்பசுவைக் கொல்லும் சாமித்திரனும் இவன் அழுவதைக் கண்டு கொலை செய்வதற்கான கத்தியை வைத்துவிட்டு அரசனை நோக்கி அழுதுகொண்டிருக்கிற பிராமணப் பிள்ளையை என் பிழைப்புக்காகக் கொல்லமாட்டேன் என்றான். இனி என்ன செய்வதென யாகசாலையிலிருந்த அந்தணர்களை அரிச்சந்திரன் வினவ அவர்களும் ஓவென அழத்தொடங்கினர். அதுகண்டு அரிச்சந்திரன் திகைத்து மனங்கலங்கியிருக்க, அவ்வேளையில் சுனச்சேபனின் தந்தையாகிய அஜிகர்த்தன். இன்னும் நூறு பசுக்களை அளித்தால் தன் மகனாகிய யாகப்பசுவைத் தானே கொன்று விடுவதாகக் கூறினான். அவ்வார்த்தை கேட்டுச் சந்தோஷித்து அரிச்சந்திரன் அப்படியே ஆகட்டும் என்றான். அச்சபையிலிருந்த யாவரும், தன் பிள்ளையைத் தானே தனத்துக்காக அஜிகர்த்தன் கொல்லத்துணிந்ததைக் கண்டு பெருங்குரலில் பலவிதமாகப் பேசியிருந்தனர்.

அச்சமயம் விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம், "அரசனே! யூபஸ்தம்பத்தில் கட்டுண்டழுகின்ற சுனச்சேபனை விட்டுவிடுவையாயின் உனது யாகமும் நிறைவடையும்; உனது நோயும் நீங்கிவிடும்." தன்னுடலைக் காத்துக்

கொள்ளப் பிறர் உடலை நாசஞ்செய்தல் சரியா? நீ இவ்வாறு செய்தல் பெரும் பாவம்! இந்த யாகத்தில் யார் எதைக் கேட்டாலும் அதைக் கொடுக்கவேண்டுமல்லவா? இந்த யாகத்தில் நான் இந்தப் பிள்ளையை விடுவதாகிய யாசகப்பொருளையே உன்னிடம் கேட்கிறேன். அளிப்பாயாக" எனப் பல நல்லுரைகளைக் கூறினார்.

அது கேட்ட அரிச்சந்திரன், "முனிவரே! ஜலோதரபாதையில் மிகவும் துன்புறும் யான் இந்தப் பிராமணப் பிள்ளையை விட்டுவிட்டு யாகத்தை எப்படி முடிப்பேன்? வேறேதேனும் ஒன்றைக் கேளும், தருகிறேன். இந்த யாக காரியத்தைத் தடைசெய்தல் முறையன்று." என்றான்

விசுவாமித்திரர் அரிச்சந்திரன்மேல் சினமும் பிராமணப் பிள்ளையின்மேல் இரக்கமும் கொண்டவரானார். அருட்கடலாகிய விசுவாமித்திரர் யூபஸ்தம்பத்திற் கட்டுண்டு மரணத்தையெண்ணிப் புலம்புகின்ற சிறுவனருகிற் சென்று, "குழந்தாய்! உனக்கு வருண மந்திரத்தை நான் உபதேசிக்கின்றேன். அதை என் சொற்படி ஜபித்துக்கொண்டேயிருப்பையாயின் உனக்கு இப்போது உண்டாகியிருக்கும் துன்பம் நீங்கிச் சுகமுண்டாகும்" என்றார். அவனும் அவர் உபதேசித்த வருணமந்திரத்தை மனத்துள் ஜபித்துவர, வருணபகவான் மகிழ்ந்து அவன் முன்னே தோன்ற, அவரை அங்கிருந்த அனைவரும் கண்டு ஆச்சரியமடைந்து வணங்கிநின்றனர்.

அரசனும் ஆச்சரியமுற்று நோயினால் வருந்தும் வருத்தத்தோடு அவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கிக் கைகூப்பி நின்று, "கருணைக் கடலே! நான் பாவி! என் பிள்ளைமேல் கொண்ட ஆசையால் உம்மை ஏமாற்றிவிட்டேன். என் பிள்ளையும் என்னை வஞ்சித்துப் போனான். அவன் போனவிடமும் தெரியவில்லை. என் மகன் மரணத்துக்கஞ்சி என்னைவிட்டுப் போனபின்னர் ஒருவனைப் பணத்துக்கு வாங்கித் தங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும் வண்ணம் யாகத்தைத் தொடங்கினேன். நீங்களும் காட்சி தந்தீர்கள். என் துக்கமும் நோயும் நீங்கின" என்றான்.

வருணபகவான், "அரசனே! புலம்பிக்கொண்டே என்னை மனத்தில் தியானிக்கின்ற இந்தப் பிள்ளையை யூபஸ்தம்பத்தினின்றும் அவிழ்த்துவிடு. இந்த யாகம் நிறைவடைந்துவிட்டது" எனச்சொல்லித் தானே அப்பிள்ளையை அவிழ்த்துவிட்டான். சபையோர் அதுகண்டு மகிழ்ந்தனர். அரிச்சந்திரனும் மிக்க மகிழ்ச்சியடைந்து யாகத்தை நிறைவு செய்தான்.

அப்போது, யாகப்பசுவாய் வந்து அலறிய சுனச்சேபன் சபையோரைக் கைகூப்பி வணங்கி, "பெரியீர்! உங்களிடம் நானொரு விண்ணப்பம் செய்கிறேன். அதற்குரிய தருமத்தை வேதசாஸ்திரத்துக்கு விரோதமில்லாமல்

கூறுங்கள். இப்போது நான் யாருடைய பிள்ளை? என் முதன்மையான தந்தை யாரெனச் சொன்னால் நான் அவர்களைச் சரணடைந்து வாழ்வேன்' என்றான்.

அதுகேட்ட சபையோரில் சிலர், 'இவன் அஜிகர்த்தன் மகன்தானே! வேறு யாருக்கு மகன் ஆவான்?' என்றும், வாமதேவரென்பவர், "அஜிகர்த்தன் திரவிய ஆசையால் பிள்ளையை விற்றவனாயிருக்க அவன் எப்படித் தந்தையாவான்? தனத்தைக் கொடுத்துப்பெற்ற அரசனே தந்தையாவான்" என்றும், சிலர், "பயத்தை நீக்கியவன் தந்தையாவான் என்று பெரியோர் சொல்வர். ஆதலால் இவனைப் பயத்தினின்றும் நீக்கிக் காத்த வருணபகவானே இவனின் தந்தையாவார்" என்றும் கூறினர். யாவரும் ஐயமுறக் கூறினரேயல்லாமல் 'இவன்தான் இவனுக்குத் தந்தையாவான்' எனத் திடமாகக் கூறினாரில்லை.

அவ்வேளையில் எல்லாமறிந்தவரான வசிஷ்ட முனிவர், வேத சம்மதமாகிய நிச்சயத்தைச் சொல்கின்றேன். கேளுங்கள். மகனே தான் பெறும் பொருளாக எண்ணி அவனிடத்தில் இரக்கங்கொண்டவனே தந்தையாவான். அஜிகர்த்தனோ இச்சுனச்சேபனிடத்தில் ஆசையை விட்டுத் தனத்தில் ஆசை வைத்து இவனை விற்றான்; மேலும் கத்தியால் வெட்டவுந் துணிந்தான். ஆகவே அஜிகர்த்தன் இவனுக்குத் தந்தையாகான். விலைக்கு வாங்கிய அரசனோ தன் நோய் நீங்கவேண்டும் என்பதற்காக இவன்பாலிரக்கமின்றி யூபஸ்தம்பத்திற் கட்டினானாகையால் அவனும் தந்தையாகான். வருண பகவானோ இரக்கத்தின் காரணமாக இல்லாமல் தன்னை இவன் தோத்திரஞ் செய்ததால் மகிழ்ச்சியடைந்து அவிழ்த்துவிட்டானாகையால் அவனும் இவனுக்குத் தந்தையாகான். இவனுக்குத் தந்தை வேறு யாரேயெனில் தற்பிரயோசனம் கருதாது இவனது துயரத்தைக்கண்டு மனமிரங்கி மந்திரோபதேசம் செய்து இவனைத் துன்பத்தினின்று காப்பாற்றிய விசுவாமித்திரரே இவனுக்குத் தந்தையாவார்" என்றுரைத்தார்.

சபையோரனைவரும் இதுவே சரியென ஒப்புக்கொண்டனர். அப்பொழுது விசுவாமித்திரர் அந்தப் பிள்ளையை வலது கையால் பிடித்துக் கொண்டு தனதில்லத்திற்கு அன்புடன் அழைத்துச்சென்றார்.

அரிச்சந்திரன் மகிழ்ச்சியுடன் அரண்மனைக்குப் போய்ச்சேர்ந்தான். இச்செய்திகள் யாவும் அறிந்து அரிச்சந்திரனின் மகன் காட்டிலிருந்து நகரத்திற்கு வந்து சேர்ந்தான். இருவரும் ஒன்றுசேர்ந்து மகிழ்ந்தனர்.

o o o o o o o o o o o o o

சின்னாள் கழித்து வசிஷ்டரைப் பிரார்த்தித்து அவரை ஹோதாவாக வைத்து ராஜசூய யாகத்தைச் சிறப்பாக அரிச்சந்திரன் செய்துமுடித்தான். வசிஷ்டருக்கு அதிகச் சிறப்புடன் மரியாதைகள் செய்து அனுப்பிவைத்தான்.

அம்மரியாதைகளுடன் அவர் இந்திரனுடைய சபைக்குச் சென்றார். அப்போது விசுவாமித்திரரும் அங்கு வந்துசேர்ந்தார். அவர் வசிஷ்ட முனிவரைப் பார்த்து ஆச்சரியமடைந்து, "முனிவர் பெருமானே! இச்சிறந்த சன்மானம் உமக்கு யார் செய்தது? உண்மையைச் சொல்லும்" என்றார்.

அதற்கு வசிஷ்டர், "என்னுடைய எஜமானனும் மகா பராக்கிரமசாலியுமான அரிச்சந்திரன் மிக்க தட்சணையோடு செய்த இராஜசூய யாகத்தில் அவன் எனக்குச் செய்த சன்மானமே இவை" என்று சொல்லி, மேலும் "முனிவரே! ஹோதாவாக நான் இருந்தேன். அவனைப்போலும் அரசன் எவனிருக்கின்றான்? மிக்க சத்தியவாதி; கொடையாளி; தர்மசீலன்; உயிர்களைப் காப்பாற்றுவதில் ஆவலுள்ளவன்; தானம் செய்வதே சுபாவமாகக் கொண்டவன்." என்றெல்லாம் அரிச்சந்திரனை ஓயாமல் புகழ்ந்து சொன்னார்.

இப்படி ஓயாமல் அரிச்சந்திரனை வசிஷ்டர் புகழ்வதைக்கேட்டு அதிக கோபங்கொண்டு, வசிஷ்டரை நோக்கி, "முனிவர் பெருமானே! யாகஞ் செய்கிறேனென்று வருணனை வஞ்சித்தவனும் கபடத்தில் ஆவலுள்ளவனும் பொய் சொல்லுவதில் சலிப்பில்லாதவனுமான அந்த அரிச்சந்திரனை அளவு கடந்து புகழ்கின்றீரே! நீங்கள் அவனுக்குள்ளனவாகக் கூறிய குணங்கள் எல்லாம் உண்மையாயின் நான் அவற்றைக் காண்கின்றேன். என் தவத்தையும் புண்ணியத்தையும் பந்தயமாய் வைக்கின்றேன். நீங்களும் உங்களுடைய தவத்தையெல்லாம் பந்தயமாக வையுங்கள். அரிச்சந்திரனை இப்பொழுதே பொய் சொல்பவனாகவும் தானஞ் செய்யாதவனாகவும் மகா துஷ்டனாகவும் நான் செய்யாமற் போவேனேயாயின் என்னுடைய பந்தயத்தை இழந்துவிடுகிறேன். நான் சொல்லியபடியே செய்வேனாயின் உம்முடைய புண்ணியத்தை நீங்கள் இழக்கவேண்டும்" என்று கோபத்துடன் கூறிவிட்டு இந்திரசபையிலிருந்து தன் ஆச்சிரமத்திற்கு வந்துசேர்ந்தார்.

ஒரு காலத்தில் அரிச்சந்திரன் வேட்டையாடுவதற்குக் காட்டுக்குச் செல்லும்போது அவ்விடத்தில் ஒரு பெண் அழுதுகொண்டிருக்கக் கண்டான். அவன் அப்பெண்ணை நோக்கி, "நீ அழுவதற்கான காரணம் என்ன? உனக்கு எவராவது தீங்கு இழைத்தார்களெனில் சொல், தீங்கிழைப்பவரைத் தண்டிக்கிறேன். நீ வருந்தாமல் என் நகரத்தில் வந்து வசிப்பாயாக" என்றான். அப்பெண், "விசுவாமித்திரர் என்னைக் குறித்துக் கொடூரமான தவஞ்செய்கிறார். அதனால்தான் அழுகிறேன்" என்றுசொல்ல, அரிச்சந்திரன், "பெண்ணே! நீ இனி வருந்தற்க. விசுவாமித்திரர் செய்யும் தவத்தை நான் தடை செய்கிறேன்" என்றுசொல்லி விசுவாமித்திரரைக் காணச்சென்றான். கண்டு வணங்கி, "யாது கருதி ஒரு பெண்ணின் தேகத்தைத் தவத்தால் வருத்துகின்றீர், உண்மையைச் சொன்னால் உம் கோரிக்கையை நிறைவேற்றுவேன்.

இத்தகைய, பிறருக்குத் துன்பம் தரும் தவத்தை எனது எல்லையில் நீங்கள் செய்யக்கூடாது'' என்றுகூறித் தவத்தைத் தடைசெய்துசென்றான்.

விசுவாமித்திரர் இந்திரசபையில் வசிஷ்டருடன் நடந்த உரையாடலையும் இப்பொழுது தவத்தை அரிச்சந்திரன் தடை செய்ததையும் எண்ணி நியாய விரோதமாயும் பயங்கரமாயுமுள்ள சில செயல்களைச் செய்ய நினைத்து ஓரரக்கனைப் பன்றியுருவாகத் தவத்தாற் படைத்து ஏவினார்.

அப்பன்றி அரிச்சந்திரனுடைய தோட்டத்தை அடியோடு நாசஞ் செய்தது. தன்னை விரட்டவும் கொல்லவும் வந்த வீரரையும் அழித்தது. பன்றி அட்டகாசம் செய்யும் செய்தி அறிந்த அரிச்சந்திரன் படையுடன் வந்து அதனைக் கொல்ல முயன்றான். பன்றியோ போக்குக் காட்டியபடி மனித நடமாட்டமற்ற வேறொரு காட்டுக்குப் போயிற்று. அரிச்சந்திரன் தன் படையினரை விட்டுப் பிரிந்து பன்றியைப் பின்தொடர்ந்துவந்து காட்டில் வழிதப்பி நின்றான். உச்சிப்போதான நேரமாதலால் பசிதாகமுற்றிருந்த அவன் அங்கே காணப்பட்ட ஒரு நதியில் குதிரைக்குத் தண்ணீர் காட்டித் தானும் அருந்தி வழியறியாமல் திகைத்து நிற்கும்போது விசுவாமித்திரர் முதிய பிராமண வேடங்கொண்டு எதிரில் வந்துநின்றார். அவரைக்கண்டு மகிழ்ந்த அவன், வணங்கினான். அவர், ''இக்காட்டிற்கு யாது கருதி வந்தாய்? வந்த வரலாற்றைக் கூறு'' என்று கேட்க, அரிச்சந்திரன் நடந்தவற்றைக் கூறித் தான் நகரும் செல்ல வழிகாட்டுமாறு வேண்டி, ''நான் ராஜசூயயாகம் செய்தவன். அவரவர் வேண்டுகோளின்படி வேண்டியவற்றைக் கொடுப்பவன். உமக்கு யாகம் செய்யப் பொருள் வேண்டுமாயின் அயோத்திக்கு வாருங்கள் தருகிறேன்'' என்று கூறினான்.

விருத்த பிராமண வடிவிலிருந்த விசுவாமித்திரர், ''அரசனே! இப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பித்ருக்களுக்குத் தானஞ்செய்ய இது நல்ல சுபகாலம். நீ ஸ்நானமுஞ்செய்து உன்சக்திக்கேற்ப ஏதேனும் தானமுஞ் செய். பின்னர் நானே உன்னை நகரத்திற்கு வழிகாட்டி அழைத்து வந்து விடுகிறேன்'' என்றார். அவர் சொற்படி ஸ்நானம் முதலியவற்றை நிகழ்த்தி, ''தங்களுக்கு எது வேண்டுமோ கேளுங்கள் தருகிறேன்'' என்றான்.

விசுவாமித்திரர், ''அரசனே! நீ தானஞ் செய்வதில் நிகரிலாதவன் என வசிஷ்டர் கூறக் கேட்டிருக்கிறேன். நீ சொல்வதும் அதற்கேற்பவே உள்ளது. என் மகனுக்குத் திருமணம் செய்யும் காலமாதலால் அதற்குத் தேவையான பொருள் மட்டும் அளித்தால் போதும்'' என்றார். தவவலிமையால் கந்தருவ மாயையால் ஒரு பிள்ளையையும் பெண்ணையும் காட்டி, அவர்களே தம்பதிகளாகப் போகின்றவர்கள்'' என்றார். அரிச்சந்திரன், ''ஏற்பாடுகளைச் செய்யுங்கள் தருகிறேன்'' எனச் சொன்னான். பின் அவனை விசுவா

மித்திரர் நகரத்திற்குக் கொண்டுசென்று விட்டு வந்தார், சிலநாள் சென்றபின் அவர்களுக்குத் திருமணம் முடித்துவிட்டு அரிச்சந்திரனை நோக்கி "இப்போது மணமேடையில் இருக்கும் வரனுக்கு, உனக்குத் தோன்றும் தானத்தைச் செய்வாயாக!" என்றார்.

அரிச்சந்திரன், "இச்சமயத்தில் நீர் எதை விரும்பிக்கேட்டாலும் கேட்கத் தகாததைக் கேட்டாலும் தருகிறேன். இப்போது நான் கீர்த்தி பெறும் எண்ணமே உடையேன்" என்றான். முதிய பிராமண வடிவிலிருந்த விசுவாமித்திரர். "நீ விரும்பியது கீர்த்தியையேயாயின் இம்மணமேடையில் சகல செல்வங்கள் நிறைந்த நாட்டைப் படையுடன் தானஞ்செய். அது எனக்குச் சந்தோஷம்" என்றார். விசுவாமித்திரரின் மாயையில் மயங்கிய அவன் சிறிதும் யோசிக்காமல் 'அப்படியே தந்தேன்' என்றான். முனிவரும் தான் பெற்றுக்கொண்டதாக ஒப்புக்கொண்டார். மேலும் தானத்துக்குரிய தட்சணை தரவேண்டுமென்றும் தட்சணையின்றிச் செய்யப்படும் தானம் பயனற்றதென்றும் கூறினார். அரிச்சந்திரன் ஆச்சரியமுற்று, "தட்சணை எவ்வளவு என நீரே கூறினால், அதனையும் தருகிறேன்" என்றான். முனிவர் இரண்டரைப் பாரம் பொன் கொடுக்க வேண்டுமென்று சொல்ல அவனும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டான். பின்னர்க் கொடுப்பதிலுள்ள நன்மை தீமைகளை நினைத்துத் திகைத்து நின்றான். சிந்தித்துக் கவலைகொண்ட மனத்தனாய் அந்தபுரத்திற்குச் சென்றான்.

அரிச்சந்திரன், "திருடன்போல் காட்டில் இப்பார்ப்பான் வஞ்சித்து விட்டானே! நாட்டைக் கொடுத்ததும் அன்றி இரண்டரைப்பாரம் பொன்னுங் கொடுக்க ஒப்புக்கொண்டோமே! அந்தப் பொன்னுக்கு என்னசெய்வேன்?" என வருந்தியிருக்கையில், அவன் மனைவி அங்குவந்து, "தாங்கள் கவலையுறக் காரணம் என்ன? காட்டிலிருந்த பிள்ளையும் வந்துசேர்ந்தான்; ராஜசூய யாகமும் சிறப்புற நடந்துவிட்டது; நரமேதம் செய் செய்யென்று அடிக்கடி வந்த வருணனும் மகிழ்ச்சியுடன் சென்றுவிட்டான்! இந்நிலையில் ஏன் வருந்துகிறீர்கள்?" எனக் கேட்க அவன் கவலைக்கான காரணத்தைச் சொல்லி வருந்தியிருந்தான். இரவு கழிந்தது.

காலையில் விசுவாமித்திரர் அவனைக்கண்டு, "அரசினை எனக்களித்ததாகச் சொல்லிவிட்டு இன்னும் ஏன் இதனை விடாதிருக்கின்றாய்? இரண்டரைப்பாரம் பொன்னை எப்போது கொடுப்பாய்?" என்றார். அரிச்சந்திரன், "நாட்டை விட்டு இப்பொழுதே சென்று விடுகிறோம். ஒப்புக்கொண்ட தட்சணையைக் கொடுக்க இப்போது சக்தியில்லை. எப்பொழுது கிடைக்கிறதோ அப்போது தந்துவிடுகிறன்" என்று சொல்லித் தன் மனைவி மாதவி, தன் மகன் லோகிதன் (லோகிதாசன்) ஆகியோரை அழைத்துக்கொண்டு நாட்டை விட்டுச்

சொல்லத் தொடங்கினான். நடந்தவற்றை அறிந்த மக்கள் வருந்தினர்; பதறினர்; அழுதனர். விசுவாமித்திரரை வைது பேசினர்.

அப்போது விசுவாமித்திரர்—அரிச்சந்திரனை வழிமடக்கி, "தட்சணையாகத் தருகிறேன் என்ற பொன்னைத் தராமல் போகின்றாயே! இல்லையென்று சொல்லிவிடேன்! நாட்டை எனக்குக் கொடுத்துவிட்டது குறித்து உனக்கு வருத்தமிருந்தால் சொல். திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்றார்.

அது கேட்ட அரிச்சந்திரன், "உமக்குப் பொன்னைக் கொடுக்காமல் நான் போஜனமும் செய்யமாட்டேன். சொன்ன சொல் மாறமாட்டேன். எனக்குப் பணம் வருமளவும் பொறுத்திருக்க வேண்டுகின்றேன்" என்று சொல்லக்கேட்டு விசுவாமித்திரர், "உனக்குப் பணம் வரும்வழி என்ன? இப்போதாவது கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிடு! பொய் சொல்லாமலிருக்க ஆசை மட்டும் இருக்கிறது. சொன்னதை நிறைவேற்ற வழியைக் காணோம்" என்றுரைத்தார்.

அரிச்சந்திரன், "காசிசென்று எங்களை ஏவலாட்களாக எவருக்காயினும் விற்றாயினும் எங்கள் கடனைத் தீர்க்கிறோம்" என்று கூறிக் காசி நகருக்குத் தன் மனைவி மகனுடன் சென்றுசேர்ந்தான். விசுவநாதர்கோயில் சென்று இறைவனை வணங்கிக் காசிநகர் அழகை வியந்துநின்ற அவர்களை நோக்கி, "தந்துவிடுகிறேன் தந்துவிடுகிறேன் என்று சொல்கிறாயே தவிர இன்னும் பொன்னைக் கொடுத்தபாடில்லை. முன்பு நீ பொன்னை ஒரு மாதத்தில் தருகிறேன் என்று சொன்னாய். அக்கெடுவும் முடிய இன்னும் ஒன்றரை நாள்தானிருக்கிறது. அதற்குள் பொன்தரத் தவறினால் சபித்துவிடுவேன்" என்று சொல்லி விசுவாமித்திரர் எச்சரித்துச் சென்றார்.

விசுவாமித்திரர் எச்சரித்துச் சென்றதும் வருந்தியிருந்த அரிச்சந்திரன், "நாம் விலைப்பட்டு நமது கடனைப் போக்கிக்கொள்வதே சரி" என எண்ணினான். அவனை அவன் மனைவி அழுதுகொண்டே தேற்றி, "உண்மையற்றவன் பிணத்திற்கொப்பான். சத்தியத்தைக் காப்பாற்றுவதிலும் ஒருவனுக்குச் சிறந்த தருமம் வேறெதுவுமில்லை. என்னை விற்றுவரும் பணத்தில் பிராமணனுக்குத் தட்சணையைக் கொடுத்து விடுங்கள்" என்று சொன்னாள். "மனைவியை விற்பது" என்பதை நினைத்து வருந்தி, துடித்து அரிச்சந்திரன் மூர்ச்சையுற்றான். அவன்நிலை கண்டு வருந்தி அவளும் மூர்ச்சையுற்றாள். இவர்களுடனிருந்த பிள்ளையோ பசியால் வருந்தி அழுதிருந்தான்.

அப்பொழுது அங்குவந்த விசுவாமித்திரர் இருவரும் மயங்கிக் கிடப்பதைக்கண்டு கோபமுற்று நீர் தெளித்து எழுப்பிப் பொன்னுக்கு வழியென்னவெனக் கேட்க, வந்திருப்பது அப்பிராமணன் என அறிந்து மீண்டும்

மூர்ச்சையடைந்தான். விசுவாமித்திரர் அவனை மீண்டும் மூர்ச்சை தெளிவித்து, "சூரியன் அஸ்தமனமாவதற்குள் என் தட்சணையைத் தந்துவிடு. இன்றேல் சபித்துவிடுவேன்" என்று சொல்லிப்போனார்.

அந்திக்குள் தட்சணைப் பொன்னைத் தரவேண்டுமே என அரிச்சந்திரன் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், சகல சாஸ்திர சம்பந்நனான பிராமணன் ஒருவன் ஒரு வீட்டிலிருந்து வெளியே வந்தான். அப்பிராமணனைக் கண்ட சந்திரமதி, (இந்த இடத்தில் இப்படித்தான் உள்ளது. முன்பு மாதவி எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது), "மூன்று வருணங்களுக்கும் பிராமணன் தந்தையென்று சொல்லப்படுவதால் இப்பிராமணனிடம் பணம் கேட்டுப் பெறுவோமே" என்று சொல்ல, அரிச்சந்திரன் "அரச குலத்தினனான எனக்குக் கொடுத்தலேயன்றிப் பிறரிடம் கேட்டுப் பெறுதல் தகாது" என்று சொல்லச் சந்திரமதி, "அப்படியானால் உம்பொருளான என்னை யாருக்காவது விற்றுப் பிராமணனுக்குக் கொடுக்கவேண்டிய தட்சணையைக் கொடுத்துவிடுங்கள்" என்று கூறினாள். மனைவி அவ்வாறு கூறிப் பலமுறை அவனை வற்புறுத்த, "நீ என் பொருள் என்பது சரியே. ஆனால் மனைவியை விற்பது கணவனுக்கு அழகா ?" என்றெல்லாம் வருந்திக் கூறிப் பின் தேறி, நகருள் கடைவீதியில் சென்று மக்களை நோக்கி, "என் மனைவியாகிய இவளை நான் இப்பொழுது விற்கிறேன். எவராவது இவளை வேலையாளாகக் கொள்ளக் கருதினால் விலைக்கு வாங்கிக்கொள்ளுங்கள்" என்று கூவினான்.

அப்போது விசுவாமித்திரர் விருத்த பிராமண வேடத்தில் வந்து, "என் மனைவி மெலிந்த தேகம் கொண்டிருப்பதால் அவளால் வீட்டு வேலைகள் செய்ய முடியவில்லை. இவள் என் வீட்டு வேலைகளைச் செய்ய ஏற்றவளாகத் தோன்றுகிறாள். இவளை எனக்கு வேலைக்காரியாக விற்றுவிடுவதானால் நான் இவளை வாங்கிக் கொள்கின்றேன். உனக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் ?" என்று கேட்டார்.

ஒன்றுமே பேசாது நின்ற அரிச்சந்திரனின் நிலைகண்ட அப்பிராமணர், "உன் மனைவியின் செயல் திறன், வயது, வடிவு, அழகு முதலியவற்றையறிந்து நானே விலைமதித்துக் கொடுக்கிறேன். தருமசாத்திரத்தில், பெண்ணொருத்தி முப்பத்திரண்டு இலக்கணத்திற் குறையில்லாதவளாய் நல்லொழுக்கமும் நற்குணமும் உடையவளாயிருப்பின் அவளைக் கோடிப் பொற்காசுக்கு மதிக்கலாமென்றும், அதுபோன்ற ஆடவனைப் பத்து கோடிக்கு மதிக்கலாமென்றும் பெரியோர் கூறுவர்" என்று சொல்லிவிட்டு, அரிச்சந்திரனின் வஸ்திரத்தில் பொன்னைக்கொட்டிவிட்டு அவன் அனுமதியை எதிர்பாராமல் சந்திரமதியின் தலைமயிரைப் பிடித்திழுத்தார்.

அந்நிலையில் சந்திரமதி பிரியப்போவதை எண்ணிக் குழந்தையின்மேல் பாசம் மிகுந்து பிராமணரிடம் கேட்டுக்கொண்டு மகனுடன் தன் நிலையைச்

சொல்லி நின்றாள். 'அம்மா' வென்றழுது மகன் ஓடிவந்து தாயின் ஆடையை இழுத்து இடறி வீழ்ந்தான். இடறி வீழ்ந்தவனைப் பிராமணர் மிகக் கோபித்து அடித்தார். அடிபட்டும் அவன் 'அம்மா அம்மா' என்று கூவிக் கொண்டு தாயைத் தொடர்ந்து வந்தான்.

அதுகண்டு வருந்திய சந்திரமதி, "அய்யா! என்மேல் சிறிது அருள் கொண்டு இந்தக் குழந்தையையும் விலைக்கு வாங்கிக்கொள்ளுங்கள். இவன் இல்லாமல் என்னை நீங்கள் வாங்கிக்கொண்டாலும் உமது காரியத்திற்கு உபயோகமில்லை." என்று அப்பிராமணரை வேண்டினாள்.

அந்தப் பிராம்மணர் மீண்டும் பத்து கோடிப் பொன்னை அரிச்சந்திரன் மடியிற் கொட்டிவிட்டுச் சந்திரமதியுடன் பாலகனையும் சேர்த்துக்கட்டிச் சிறிதும் இரக்கமின்றி அழைத்துக்கொண்டு போகத் தொடங்கினார்.

போகத் தொடங்குகையில் சந்திரமதி தன் கணவனைச் சுற்றிவந்து வணங்கிநின்று கண்ணீர்விட்டு, "மறுபிறப்பிலும் இவரே எனக்குக் கணவனாக வாய்க்கவேண்டும்" என்று சொன்னாள். மனைவியும் மகனும் விலைப் பட்டுப் பிரிந்துசெல்வது கண்டு அரிச்சந்திரன் சொல்லொணாத் துயருடன் புலம்பி நின்றான். அவன் கண்ணெதிரிலேயே சந்திரமதியை அவர் சாட்டை யால் அடித்து அழைத்துக்கொண்டு சென்றார்.

சிறிது நேரத்தில் விசுவாமித்திரர் தன் சீடருடன் அங்குவந்து, "நீ சத்தியந் தப்பாதவனென்றால் முன் கொடுக்கிறேனென்று சொன்ன தட்சணை யைக் கொடு" எனக்கேட்க, அரிச்சந்திரன். "இந்தத் தட்சணையை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிப் பதினொரு கோடிப் பொன்னை அளித்தான். "இப்பொன் நல்வழியில் கிடைத்ததுதானா? எவ்வழியில் நீ இப்பொன்னைச் சம்பாதித்தாய்? நல்வழியில் ஈட்டியதானால்தான் பெறுவேன்" என அவர் வினவ. அவன் தன் மனைவியையும் மகனையும் விற்றதைக் கூறினான்.

விசுவாமித்திரர் அப்பொன்னைப் பெற்றுக்கொண்டு, "இப்பொன் நீ கூறிய தட்சணைக்குத் தக்கதா? விரைவில் சொன்னபடி முழுத்தொகையையும் கொடு! இன்னம் பகற்பொழுது முடிய ஒரு ஜாமம் உள்ளது. அதற்குள் ஏற்பாடு செய்துகொடு" என்று சினத்துடன் கூறி அவ்விடத்தினின்று அகன்றார்.

பின்னர் அரிச்சந்திரன் பெருந்துயரத்தால் வருந்தியிருந்து யாவரும் கேட்கும்படியாக. "என்னை விலைக்கு வாங்கிக்கொண்டு என் துயரத்தை எவன் ஒழிப்பானோ அவன் விரைவில் சொல்லக்கடவன்" என்று கூவினான்.

அவன் இவ்வாறு கூறிநின்றதும், யமதருமராஜன், ரோமங்களால் விகாரமாய்க் காணப்படும் மார்பும் பெருத்த மீசையும் கருத்துத் தொங்கிய வயிறும் புலால்நாற்றம் வீசும் முரட்டு உடலும் உடையவனாய்ச் சவமாலையை அலங்காரமாகக் கையில் பிடித்துக்கொண்டு சண்டாள உருவங்கொண்டு வந்து "உன்னை நான் வாங்கிக்கொள்ளுகின்றேன். வேண்டிய பணம் எவ்வளவு?" என்று கேட்டான்.

அவனை நீ யாரென அரிச்சந்திரன் கேட்க, அவன் "நானொரு சண்டாளன். நீ செய்யவேண்டிய வேலை என் ஆணையின்படி பிணத்துக்குக் கட்டிய ஆடையை அவிழ்த்து வைக்க வேண்டியதாகும்" என்றான்.

அதுகேட்ட அரிச்சந்திரன், "சண்டாளனே! பிராமணனாவது சத்திரியனாவது என்னை வாங்கிக்கொள்ள வேண்டுமேயன்றி வேறொருவர் என்னை வாங்குதல் கூடாது. உத்தமனை உத்தமனும் மத்திமனை மத்திமனும் அதமனை அதமனும் வாங்கிக்கொள்ள வேண்டுமெனப் பண்டிதர் கூறுவர்" என மொழிந்தான்.

எதிரில் நின்ற அச்சண்டாளன், "இத்தருமம் அறிந்த நீ விலை கூறும் போதே என்னை உத்தமன்தான் வாங்கவேண்டுமென்று கூறியிருக்கவேண்டும். பொதுவாக முன் கூறிவிட்டு இப்போது சாதி பேதம் பார்த்து நீ தருமம் பேசுதல் முறையன்று. சத்தியம் ஒன்றையே எண்ணுபவனுக்கு நீ சொன்ன தருமம் வேண்டுவதில்லை" என்று கூறிக்கொண்டிருக்கும் போதே விசுவாமித்திரர் அங்கு வந்து சேர்ந்தார்.

அவர் சினத்துடன் அரிச்சந்திரனை நோக்கி, "இச்சண்டாளன் நீ கேட்கும் பணத்தைத் தரத் தயாராக இருக்கையில் நீ அதனை வாங்கி எனக்கு முன் சொன்னபடி தட்சணை முழுவதையும் கொடாமல் இருக்கக் காரணம் என்ன?" எனக் கேட்க, அரிச்சந்திரன், "முனிவரே! சூரிய குலத்திற் பிறந்த அரசனான நான் இந்தப் பணத்திற்காக எப்படிச் சண்டாளனுக்கு அடிமை யாவது? இந்நினைவே என் மனத்தை வாட்டுகின்றது" என்றான்.

விசுவாமித்திரர், "நீ சண்டாளனுக்கு அடிமையாவையோ, பிராமண னுக்கு அடிமையாவையோ எனக்குத்தெரியாது. இன்னும் அரை நாழிகைப் பொழுதுள் எனக்குக் கொடுக்கவேண்டியதை நீ கொடுத்துவிட வேண்டும். சண்டாளன் தவிர வேறு யாரும் உனக்கிப்போது பணம் தருவதாகத் தெரிய வில்லை" என்றார்.

அரிச்சந்திரன் துயரத்துடன் விசுவாமித்திரர் பாதத்தில் விழுந்து, "அய்யா! நான் உங்களுக்கு அடிமையாளாக இருக்கின்றேன். சண்டாளனுக்கு

அடிமையாக மனம் வருந்துகின்றது. உங்கள் விருப்பப்படி நீங்கள் கட்டளையிடுவதைச் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்" என்று கூற, விசுவாமித்திரர் "அரசனே! உன்னை அடிமையாக ஏற்கிறேன்" என்றார். அரிச்சந்திரன் மகிழ்ச்சியுடன் மறுமுறை தாய்வயிற்றில் பிறந்ததாக எண்ணிக்கொண்டு அவரை நோக்கி, "நான் சொன்னது சொன்னதுதான். அதில் ஐயம் வேண்டாம், சத்தியம். இப்போது என்ன செய்யவேண்டும்" என்றான்

வஞ்சகத்துடன் அவர், "சண்டாளனே! இங்கே வா! நீ என் அடிமையாளுக்கு எவ்வளவு பணம் கொடுக்கிறாய்? நான் இவனை உனக்கு விற்றுவிடுகிறேன். இப்போது எனக்கு வேலையாள் தேவையில்லை. எனக்குப் பணத்துக்கு அவசரமாக இருக்கிறது. என்ன சொல்லுகின்றாய்?" என்று சண்டாளனைக் கேட்க, சண்டாளன் மகிழ்ச்சியுடன், "பிரயாகையில் பத்து காதத்துக்குக் பத்துகாதம் ரத்தினம் நிறைந்துள்ள பூமியை உமக்கு நான் கொடுத்துவிடுகிறேன். இவனை விற்றுவிடும். இவனும் பணத்துக்கு மிகவும் அவதிப்படுகின்றான். அதனை நீரே தீர்த்தவராவீர்" என்று சொல்லி அப்பொழுதே ஆயிரம் ரத்தினங்களையும் ஆயிரம் பொன் காசுகளையுங் கொடுக்க முனிவர் வாங்கிக்கொண்டார்.

அரிச்சந்திரன் முன்போல் வருந்தாமல், "நமக்கு விசுவாமித்திர முனிவர் பிரபு. அவர் எந்தெந்த வேலையை நம்மால் செய்வித்துக் கொள்ளுகின்றாரோ அவையெல்லாம் நாம் செய்யவேண்டிய கடமைதானே!" என எண்ணும்போது "ஓ! மஹானுபாவனே! நீ கடனிலிருந்து நீங்கிவிட்டனை! விசுவாமித்திரருக்குச் சொன்னபடி தட்சணை கொடுத்துவிட்டனை!" என்று ஆகாயத்தில் அசரீரி வாக்குண்டாயிற்று. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். அரிச்சந்திரனும் விசுவாமித்திரரைப் பார்த்து, "முனிவரே! எனக்குத் தாயும் தந்தையும் நீர்தாம்! என் விஷயத்தில் என்னவெண்ணியோ ஒருபொழுதில் மோசஞ் செய்துவிட்டீர்! மறுபொழுதில் கடனில்லாதவனாகவுஞ் செய்துவிட்டீர்! எனக்கு மிகவும் மகிழ்ச்சியாயிற்று. இனி நான் என்ன செய்யவேண்டும்? உங்கள் வார்த்தை எனக்கு நன்மையே செய்யுமென்று எண்ணுகின்றேன்" என்று கூற விசுவாமித்திரர், "அரசனே! இது முதல் சண்டாளன் என்ன சொல்லுகின்றானோ அதனை நீ செய்யவேண்டும்". என்று கூறி 'உனக்குச் சுகமுண்டாகுக' என்று ஆசீர்வதித்துப் பொன்னை எடுத்துக்கொண்டுபோய் விட்டார்.

விசுவாமித்திரர் சென்றபின் சண்டாளன் மகிழ்ந்த மனத்துடன் அரிச்சந்திரனின் பக்கத்தில் வந்து, 'என்னிடத்தில் இருக்க மனமில்லாமல் நீ அசத்தியனாக ஓடிப்போவாயோ? என்ன சொல்கிறாய்' எனத் தடியினால் மோதியடித்தான்.

அதனால் மனங்கலங்கி நின்ற அரிச்சந்திரனை அச்சண்டாளன் தனது சேரிக்கு அழைத்துக்கொண்டு போய்க் கைகால்களுக்கு விலங்கு பூட்டி ஒரு சிறைச்சாலையில் தள்ளிவிட்டுத் தான் யாதொரு கவலையுமில்லாமல் படுத்துறங்கினான்.

அரிச்சந்திரன் நான்கு நாள்கள் சோறும் தண்ணீரும் இன்றி அச்சிறையில் அடைபட்டு வருந்திக்கிடந்தான்.

ஐந்தாம் நாள் அச்சண்டாளன் அவனின் விலங்கைத் தெரித்துக் கோபத்துடன் அவன் தலையில் குட்டிக் காசிக்குத் தென்பாகத்தில் உள்ள பெரிய மயானத்தில் பிணத்துணியை வாங்கிவரும் வேலைக்கு அனுப்பிவைத்தான். அனுப்பிவைக்கையில் அச்சண்டாளன், "மயானத்தில் காவலிருந்து இரவும் பகலும் ஓயாமல் கண்டோர் அஞ்சத்தக்க இப்பெருந்தடியைக் கையில் தூக்கிக்கொண்டு 'இதோ வீரவாகுவின் தடியிருக்கின்றது' என்று பெருங்கூச்சலிட்டுக்கொண்டிருக்க வேண்டும்" என்று சொல்லி அனுப்பினான்.

அவன் (வீரவாகு) சொன்னபடி அரிச்சந்திரன் சுடுகாட்டுக்குச் சென்று, சுடுகாட்டின் தோற்றத்தைக்கண்டு, தன் நிலைமையை எண்ணி ஆற்றொணாத் துயருடன் இருந்தான். சுடுகாட்டுப் பணிக்கு வந்தவுடனேயே அவன் தேகம் அழுக்கடைந்த தோற்றங்கொண்டதைக் கண்டு 'உத்தியோகத்துக்குத் தக்கபடி உடம்பும் அமைந்தது' என நினைத்திருந்தான். பின் வீரவாகுவின் சொற்படி மயானத்தைக் காவல் காத்துச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து வந்தான்.

கந்தைத்துணியை அரையிலுடுத்திக்கொண்டு பிணத்துக்கு வரும் வாய்க்கரிசியை உணவாகக்கொண்டு, இரவும் பகலும் தூக்கமின்றி மயானத்தைக் காவல் புரிந்துவந்தான். இவ்வாறு ஓராண்டும் கழிந்தது.

அந்தணருக்கு விலைப்பட்டுச் சென்ற சந்திரமதியும் லோகிதாசனும் அந்தணரிட்ட பணிகளைச் செய்து காலங்கழித்து வந்தனர். ஒரு நாள் லோகிதாசன் விளையாடச் சென்றுவிட்டுப் பின்னர்த் தருப்பையும் சமித்தும் கொண்டுவருவதற்காகப் பிராமணச் சிறுவருடன் நகரத்தைவிட்டுச் சென்றான். தருப்பையை அறுத்துக் கட்டிக்கொண்டு சமித்துகளைச் சேகரித்துக்கொண்டு தலையில் அவற்றைச் சுமந்து வருகையில், தாகத்திற்குத் தண்ணீர் அருந்தும் பொருட்டு ஒரு தடாகத்தினருகில் சுமையையிறக்கி, நீர் அருந்திவந்து சுமையை மீண்டும் எடுக்கையில் விசுவாமித்திரரின் ஆணையால் கருநாகமொன்று அவனைத் தீண்டியது.

விஷம் தலைக்கேற உடன் அவன் இறந்தான். அவனுடன் வந்த சிறுவர்கள் அதுகண்டு பயந்தோடி அவனது தாயிடத்திற் சென்று, "பிராமண

னுடைய வேலைக்காரியே! விளையாடுவதற்கு எங்களுடன் வந்த உன் மகன் பின்னர் எங்களுடனேயே தருப்பை, சமித்து சேகரிக்கவும் வந்தான். அப்போது அவன் பாம்பு கடித்து இறந்தான். அவன் உடல் புற்றடியில் கிடக்கின்றது. போய்ப் பார்த்துக்கொள்'' என்று சொல்லிவிட்டு ஓடிப்போயினர்.

மகன் இறந்தானெனும் செய்திகேட்டதும் சந்திரமதி அலறித்துடித்து அழுது மயங்கி விழுந்தாள். பின் தேறி, மகன் இறந்ததைச் சொல்லிச் சென்று, பார்த்துவர அந்தணரிடம் அனுமதி கேட்டாள். விலைக்கு வாங்கிய அந்தணரோ இரக்கமின்றி அவளை வைது, "உன் மகன் இறந்தால் உனக்கென்ன நஷ்டம்? எனக்குத்தான் நஷ்டம்! போய் எல்லா வேலைகளையும் செய்" என்று கண்டித்துக் கூறிவிட்டார்.

அவளும் அந்தணருக்கு அஞ்சி அழுதுகொண்டே ஆற்றமுடியாத் துயரத்துடன் எல்லா வேலைகளையும் செய்துவிட்டு, அந்தணர் படுத்த பிறகு அவர் காலுக்கு எண்ணெய் தேய்த்துக் காலைப் பிடிக்கும்போது பாதி இரவாயிற்று. அப்பொழுது, புத்திர சோகத்தால் அவள் மயங்குவதுகண்டு சிறிது இரக்கம் கொண்ட அந்தணர், "நீ விரைந்து போய் உன் மகனைக் கொளுத்திவிட்டு விடிவதற்குள் இங்கு வந்து உன் வேலையைப்பார்!'' என்று சொல்லி அவளை அனுப்பினார்.

அந்தணர் சென்றுவர அனுமதிகொடுத்ததும் அழுதுகொண்டே ஓடிய சந்திரமதி புற்றுகள்தோறும் தேடி ஒரு புற்றடியில் இறந்துகிடக்கும் மகனைக் கண்டாள். கண்டதும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுது கதறினாள். மகனை நினைந்துநினைந்து புலம்பித் துடித்தாள்; கூக்குரலிட்டு அழுதாள்.

அப்பொழுது நகர்ச்சோதனைக்காரர் அக்கூச்சலைக்கேட்டு அவளருகில் வந்து, "நீ யார்? இக்குழந்தை யாருடையது? உன் கணவன் எங்குளான்?" என்றெல்லாம் வினவ, அவள் ஒன்றும் சொல்லாமல் அழுதுகொண்டேயிருந்தாள். அதனைக் கண்டு ஐயமுற்ற அவர்கள் தங்களுக்குள் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். "எது கேட்டாலும் பதில் சொல்லாமலிருக்கும் இவளைப் பார்த்தால் நல்ல பெண்ணாகத் தோன்றவில்லை. இக் குழந்தையை இவள் தான் கொன்றிருக்க வேண்டும். இவள் நல்ல குலமதியாயிருந்தால் இரவில் நகரத்தை விட்டு வெளியில் வந்திருப்பாளா? இவள், தான் தின்னுவதற்காக யாருடைய குழந்தையையோ கொன்றுவிட்டு இப்பொழுது யாதுகருதியோ அழுகின்றாள். இவ்வழுகையை நாம் நம்பக்கூடாது. இவளை நாம் எவ்வித முயற்சியிலாவது கொன்றுவிடவேண்டும்" என்று சொல்லிச் சந்திரமதியை அவர்கள் பிடித்திழுத்துக் கொண்டு போயினர்.

கொண்டுபோய்ச் சண்டாளனான வீரவாகுவிடத்தில் அவளை ஒப்படைத்து, "இவள் ஊருக்குப் புறம்பாக உள்ள பகுதியில் ஒரு குழந்தையைக் கொன்று விட்டுக் கொல்லாதவள் போல் கூக்குரலிட்டிருந்தாள்; நாங்கள் கண்டுபிடித்து இழுத்து வந்தோம். நீ இவளைக் கொலை செய்துவிட வேண்டும்" என்று அவர்கள் கூறினர்.

அதனைக் கேட்ட அச்சண்டாளன் உடன், "காவலரே! இவள் கொடியவள்! இவளை நீங்கள் பிடித்துவந்ததால் உங்களுக்குப் புண்ணியம் உண்டாகும். பெண் கொலை புரியக்கூடாது ஆயினும் இப்படிப்பட்ட கொடிய பாவியைக் கொல்லுதல் பாவமன்று; சரியென்றே சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது இவளை நான் கொன்றுவிடுகிறேன். இது எனக்கும் மகாபுண்ணியம்" என்று அவர்களிடம் சொல்லிவிட்டுச் சந்திரமதியை வலிய கயிற்றால் கட்டித் தலைமயிரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, நல்ல மணிக்கயிற்றை மடித்துத் தனது கை சலிக்க அடித்தான்.

பின்பு அச் சண்டாளன் அரிச்சந்திரனைப் பார்த்து, "அடா! வேலைக்காரனே! நீ யாதொரு ஆலோசனையும் செய்யாமல் இவளைக் கொலை செய்ய வேண்டும்" என்று கூற, அரிச்சந்திரன், "வேறு எந்த வேலையைச் சொன்னாலும் நான் தயக்கமின்றிச் செய்வேன், ஆனால் இவ்வேலையை மட்டும் என்னால் செய்ய முடியாது. தரும சாஸ்திரமறிந்த முனிவர்கள் எவ்விதமான குற்றஞ் செய்தாலும் பெண்களைக் கொல்லக் கூடாதென்றும் அவர்களைக் காப்பாற்றவே வேண்டுமென்றும், அறிந்தோ அறியாமலோ பெண்களைக் கொல்வோர் கொடிய நரகத்தை அடைவரென்றும் கூறுவர். அவ்வுரையே இப்போது என்னைத் தடுக்கின்றது" என்று சொன்னான்.

அது கேட்ட அச் சண்டாளன், "அட மூடா! பல குழந்தைகளைக் கொன்று அதனால் பல பெற்றோரைச் சாகுமளவும் துக்கத்தில் மூழ்கியிருக்கச் செய்த இவளுக்கு அத்தருமம் பொருந்தாது. நான் சொன்னபடி நீ இவளைக் கொல்" என்று கூற, அரிச்சந்திரன் அதனை மறுத்து, "எனது பிரபுவே! நான் சாகுமளவும் பெண்களைக் கொல்வதில்லை எனும் விரதத்தை ஜன்ம விரதமாகக் கொண்டிருப்பதால் நான் இவளைக் கொலை செய்யேன்" என்று கூற, அதுகேட்டு மிகுந்த சினங்கொண்ட சண்டாளன் அவனைநோக்கிக் கடுமையான மொழிகளைச் சொல்லி வைது, "நான் சொல்லும் வேலையைச் செய்யவேண்டியது உன் கடமை" என்று கையில் கத்தியைக் கொடுத்து அவளைக் கொல்லக் கட்டளையிட்டான்.

அதற்குமேல் மறுக்கமுடியாத அரிச்சந்திரன், சண்டாளன் கட்டாயப் படுத்திக் கொடுத்த கத்தியைப்பெற்றுக்கொண்டு, தலைவணங்கி நிற்கும்

சந்திரமதியைப் பார்த்து, "பெண்களைக் கொலை செய்வதில்லை எனும் விரதத்தைக் கொண்டிருந்த என்னைக் கெடுக்கவந்த பெண்ணே! அங்கே உட்கார்! உன் தலையை வெட்ட என் கைக்குச் சக்தியிருக்குமானால் வெட்டுகிறேன்" என்று சொல்லிக் கத்தியை உயரத்தூக்கி அவளை வெட்டப் போனான்.

அப்போது, தன் மரணத்தை விரும்பி எதிர்பார்த்திருந்த சந்திரமதி இறந்து கிடக்கும் தன் மகனை எண்ணி, அரிச்சந்திரனை நோக்கி, "நீ பெண் கொலை புரிய அஞ்சுவது உண்மையாயின் எனக்கோர் உதவிசெய். இந் நகருக்கு அருகில் என் பிள்ளை இறந்துகிடக்கிறான். அவனை இங்கு எடுத்து வந்து கொளுத்திவிடுகிறேன். அதுவரை பொறுத்திருந்து பின் என்னை வெட்டிவிடு" என்று வேண்ட, அவன் "அப்படியே போய்வா" என்று அனுப்பி வைத்தான்.

சந்திரமதி அழுதுகொண்டே சென்று, இறந்து கிடக்கும் மகனை மயானத்திற்கு எடுத்துவந்தாள். அழுகுரல் கேட்டு அருகில்வந்த அரிச்சந்திரன் சவத்தின் மீதிருந்த வஸ்திரத்தை இழுத்தான். வஸ்திரத்தை இழுத்ததும் தெரிந்த அந்தப் பிள்ளையின் உடல்அழகைக் கண்டு "இவன் யாரோ ராச குமாரன்போலக் காட்சியளிக்கின்றானே!" என மனத்திலெண்ணி ஐயமுற்றான். "நமது லோகிதாசன் சந்திரமதியின் மடியிலிருக்கும்போது இவனைப் போல்தான் காணப்பட்டான்" என்று எண்ணி வருந்தினான். "இவன் நம் மகன்தானோ? அவன் இறந்துவிட்டானோ?" என்றெண்ணிக் கண்ணீர்விட்டு ஓவென்றலறிக் கூச்சலிட்டு நின்றான்.

அப்போது அழுது புலம்பிக்கொண்டிருந்த சந்திரமதி, "மகாராஜாவான என் கணவரே! நீர் எங்கிருக்கின்றீர்? பிரம்மாவே! அரிச்சந்திர மகாராஜாவுக்குச் சகல பரிஜனங்களோடு ராஜ்ய நாசமும் மனைவி மகன் விக்கிரயமுமாகிய மகாதுக்க பரம்பரையை எப்படி நீ செய்யத் துணிந்தனையோ?" என்று சொல்லியழுததைக் கேட்டு, அரிச்சந்திரன், அவள் தன் மனைவியேயென்றும் இறந்து கிடக்கும் பிள்ளை தன் மகனேயென்றும் அறிந்து பெருந்துயரத்துடன் மயங்கிக் கீழே விழுந்தான். அதனைக்கண்ட சந்திரமதி "இவர் நமது கணவரே" என்று தெரிந்துகொண்டு உடன் மயங்கி விழுந்தாள். சிறிதுநேரங் கழித்து மயக்கந்தெளிந்து இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு வருந்தியிருந்தனர்.

அடங்காத் துயரால் அரிச்சந்திரன் மகன் உடலையெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு அழுது புலம்பினான். மீண்டும் மயங்கி விழுந்தான்.

இச்செய்கைகளைக் கண்ட சந்திரமதி, "இவர் நம் கணவர் என்பது உறுதி. அப்படியானால் இவர் மயானகாத்துக்கு வரவேண்டிய காரணமென்ன?" என்று எண்ணி, மகன் இறந்ததால் ஏற்பட்ட துன்பத்துடன் கணவன் இந்நிலைமை அடைந்ததால் ஏற்பட்ட துன்பமுஞ்சேர அரிச்சந்திரனை நோக்கி என்ன நடந்தது என்பதை அழுதுகொண்டே கேட்டாள். அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதிருந்தாள்.

சந்திரமதியின் வார்த்தையைக் கேட்ட அரிச்சந்திரன் பெருமூச்செறிந்து வாய்குழறிக்கொண்டே தான் சண்டாளனான வரலாற்றை அவளுக்குச் சொன்னான். அதுகேட்ட அவள் மனம்வெதும்பி நெடுமூச்சுவிட்டு மகன் இறந்த வரலாற்றைச் சொன்னாள். அரிச்சந்திரன் அதுகேட்டு மயங்கிப் பின் தெளிந்து மகன் உடலையெடுத்து முத்தமிடும்போது, சந்திரமதி அரிச்சந்திரனை நோக்கி, "இப்பொழுது மகனை வைத்துக்கொண்டு நீர் புலம்புவது தருமமன்று. எழுந்து என் தலையை வெட்டி உமது பிரபுவின் உத்தரவை நிறைவேற்றிவிடும். எஜமானத் துரோகம் உமக்குண்டாகக் கூடாது. உமக்கு எந்தவிதமான கெடுதி வந்தாலும் நீர் சத்தியவாதியாயிருத்தல் வேண்டும்" என்றாள்.

அதுகேட்ட அரிச்சந்திரன், "இக்கொடிய வார்த்தையை நீ எப்படிச் சொன்னாய். நீ சொன்னாலும் அதனை நானெப்படிச் செய்யக்கூடும்?" எனக் கேட்க, அதற்கு அவள், "நான் செய்துள்ள பூஜைகளின் பலனாய், உம்மால் நான் இப்போது வெட்டப்பட்டாலும் மறுபிறப்பில் நீரே எனக்குக் கணவராகப் போகின்றீர். அதனால் நான் சொன்னபடி செய்யும்" என்றாள்.

சந்திரமதியின் அம்மொழிகளைக் கேட்டு மூர்ச்சித்துப் பூமியில் விழுந்து பின்னர்த் தெளிந்து அரிச்சந்திரன், "மகனையும் இழந்து, உன்னையும் இழந்து விட்டேனானால் நான் பூமியிலிருக்கும்வரை துன்பத்தையன்றி வேறென்ன அனுபவிப்பேன்? அது எனக்கு விருப்பமில்லை. நான் தீயில் விழுந்துவிடுகின்றேன். ஆனால் அதனையும் எஜமானனான சண்டாளன் உத்தரவின்றிச் செய்யும் உரிமை எனக்கில்லையே! சண்டாளனின் அனுமதியின்றிச் செய்தால் மறுபிறப்பிலும் சண்டாளதாசனாக இருந்து, பின்னர் இறந்து நரகத்திற்குச் செல்லவேண்டுமே! சரி! எப்படியிருந்தாலும் நான் துன்பத்தை எவ்விதத்திலாயினும் அனுபவித்துத்தான் தீரவேண்டும். அதற்குப் புத்திரசோகம் தாங்காமல் வாழ்வதினும் உயிர்விடுதலே சிறந்தது. இப்பிள்ளையின் உடலைக்கொள்ளும் நின்ற நெருப்பில் நானும் குதித்து விடுகிறேன். இதற்குமேல் நீ மறுத்தெதுவும் சொல்ல வேண்டாம். என் செயலை நீ பொறுத்துக்கொள். நீ அந்தணர் இல்லஞ்சென்று சேர்வாயாக. மேலுலகில் நாம் ஒன்றுசேர்வோம். நாமிருவரும் முன் கூடிக் கலந்திருந்த காலத்தில் அந்தரங்கத்தில் உன்னை ஏதாவது வருத்தப்படுத்தியிருந்தால் அவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

உன் எஜமானரான அந்தணரின் சொல்லை மறுக்காமல் பணி செய்திரு!" என்று அவளுக்குக் கூற வேண்டியவற்றையெல்லாம் விரிவாகக் கூறி முடித்தான்.

சந்திரமதி, "நானும் இந்த அக்கினியில் விழுந்துவிடுகிறேன். நீங்களிருவருமின்றி நான் மட்டும் இங்கு உயிர் வாழ்தல் இயலாது. இப்பொழுதே நானும் உம்முடன் வருகிறேன். சுவர்க்கத்தையாயினும் நரகத்தையாயினும் உம்முடனே அனுபவிக்கின்றேன்" என்றாள். அந்த வார்த்தையைக்கேட்டு அப்படியே ஆகட்டுமென அவன் ஒப்புக்கொண்டான்.

அரிச்சந்திரன் காஷ்டத்தையடுக்கி அதன்மேல் தன் பிள்ளையைக் கிடத்தித் தன் மனைவியும் தானுமாகக் கைகூப்பிக்கொண்டு 'சதாக்ஷி' என்னும் பரமேஸ்வரியைத் தியானஞ் செய்தான்.

அச்சமயத்தில் இந்திரன் சகலதேவர்களுடனும் அங்குவந்து, "மகாராஜனே! உன் பொருட்டு எல்லாத் தேவர்களும் கடவுளரும் விசுவாமித்திரர் முதலான முனிவர்களும் உங்கள் மூவருடனும் உறவாட விரும்பி வந்துள்ளனர். உன்னாலும் உன் மனைவி மகனாலும் அநாதியான புண்ணியலோகம் ஜயிக்கப் பட்டது. அதனால் நீ மனைவி மகனுடன் சுவர்க்கத்திற்கு வருவாய். சாதாரண மனிதரால் அடைய முடியாத புண்ணியலோகம் உனது நன்னடக்கையால் நீ அடையப்பெற்றாய்!" என்று சொல்லிக் காஷ்டத்தின் நடுவிலிருந்த பிள்ளையின் மேல் அமிர்தத்தைப் பொழிந்தான். பூமாரியும் பொழிந்தது. துந்துபி வாத்தியமும் முழங்கிற்று. இறந்துபோன மகன் உயிர்பெற்று எழுந்து உட்கார்ந்தான். அரிச்சந்திரனும் சந்திரமதியும் அவனைக் கட்டிக்கொண்டு மகிழ்ந்தனர்.

அப்போது இந்திரன் அரிச்சந்திரனை நோக்கி, "உன்னுடைய புண்ணிய கர்மங்களுக்குப் பலனான சுவர்க்கலோகத்திற்கு நீ வரவேண்டும்" என்றான். அதற்கு அரிச்சந்திரன், "இந்திரனே! எனக்குப் பிரபுவான சண்டாளனின் உத்தரவு இல்லாமலும் அவனுடைய கடனைத் தீர்க்காமலும் நான் வர இயலாது" என்று கூறினான். உடன் அருகிலிருந்த யமதருமன், "உன்னை விலைக்கு வாங்கிய சண்டாளப் பிரபு நானே! உனக்கு வரப்போகின்ற துக்கத்தைத் தெரிந்துகொண்டு நானே சண்டாளனாக வந்து உன்னை விலைக்கு வாங்கினேன். நீ சிறிதும் ஐயமுறவேண்டாம்" என்றுகூறி நின்றான்.

அரிச்சந்திரனை இந்திரன் மீண்டும் சுவர்க்கலோகத்திற்கு வருகவென்று அழைக்க, அவன், "அயோத்தி மக்களனைவரும் என் துன்பத்தில் மூழ்கியிருக்கின்றனர். என்னை நம்பியிருப்பவர்களான அவர்களை விட்டுவிட்டு நான் மட்டும் சுவர்க்கத்திற்கு எப்படி வருவது? அவர்களோடு சுவர்க்கம்வர அனுமதியளித்தால் வருகிறேன். நான் நரகத்துக்குப் போனாலும் அவர்க

னுடன்தான் போவேன்'' என்று சொல்ல, இந்திரன்,'' உனது நகரிலுள்ளவர்களுடைய பாவபுண்ணியங்கள் வெவ்வேறுவிதமாக இருக்கும்போது அவர்களுடன் நீ வரவேண்டுமென்று எப்படி விரும்புகின்றாய்?'' என்றான்.

அதற்கு ''அரிச்சந்திரன், அரசனானவன் நாடு, தனக்குக் கிடைத்திருக்கும் செல்வ மகிமையினாலன்றோ வேள்வி முதலான புண்ணிய கருமங்கள் செய்கிறான். அவையெல்லாம் குடிமக்களின் செல்வ வரவாலல்லவா? ஆகலான் எனக்குக் காணிக்கை கொடுத்து மகிழ்ச்சியையும் புண்ணியத்தையுங் கொடுத்த அந்த நகரத்தாரைவிட்டு நான் சுவர்க்கத்திற்கு வரமாட்டேன். நான் சுவர்க்கத்தில் நீண்டகாலம் புண்ணியகர்மானுபவம் அனுபவிக்கும்படியாக இருக்கின்றதோ அப்புண்ணியகர்மானுபவம் உமது தயவினால் நகரத்தாருடன் ஒரு நாள் அனுபவிக்க வந்தாலும் போதும்'' என்றான்.

இந்திரன், அப்படியே ஆகட்டுமென்று மகிழ்ச்சியுடன் சொல்லிய எமதருமராஜன், விசுவாமித்திரர், அரிச்சந்திரன் ஆகியோரை அழைத்துக் கொண்டு அயோத்தி நகருக்கு வந்து, அரிச்சந்திரனை நோக்கி, ''தருமராஜாவின் தயவினால் உனது நகர மக்களெல்லாம் சுவர்க்கலோகத்திற்கு வரலாம்'' என்றான்.

நகர மக்கள், இந்திரனிடத்தில் தங்கள் அரசன் சொன்ன உறுதி மொழியையும், அதற்கு இந்திரன் சொன்ன இன்னுரையையும் அறிந்து அளவில்லாத மகிழ்ச்சியடைந்தவர்களாய், அவருள் எவரெவர் சம்சாரத்தில் ஆசையில்லாதவராய் இருந்தனரோ அவர்களெல்லாம் தங்கள் தங்கள் புத்திரருக்கு அதிகாரங் கொடுத்துவிட்டு மகிழ்ச்சியுடன் தனித்தனி விமானத்தில் ஏறிக்கொண்டு பொன்னிற உடம்புடன் சுவர்க்கத்திற்குச் செல்லத் தயாராயினர்.

அரிச்சந்திரனும் அயோத்திக்கு மன்னனாகத் தன் மகனுக்கு முடிசூட்டி வைத்துவிட்டு, ஏனையோரையும் மகிழ்ச்சியுறச் செய்து, தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய கீர்த்தியை நிலைநாட்டி திவ்வியமாகிய விமானத்தில் ஏறினான்.

அப்பொழுது சர்வ சாஸ்திரங்களும் உணரப்பெற்ற சுக்கிராச்சாரியார் அரிச்சந்திரனை நோக்கி, ''அரசனே! நீ பொறுமையிற் சிறந்தவன். நீ செய்த தானபலமானது மிக ஆச்சரியமுடையது. இவற்றாலன்றோ இந்திரனோடு சமமாகவிருக்கும் பதத்தை அடையப்பெற்றனை!'' எனப் புகழ்ந்தார்.

# தமிழிலக்கியங்கள் சிலவற்றில் இடம்பெற்றுள்ள அரிச்சந்திரன் கதைக்குறிப்புகள்

**1. குமரேச சதகம்**

"என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன
தென்னகாண் வல்லமை யினால்
எண்ணத்தி னாலொன்றும் வாராது பரமசிவன்
எத்தனப் படிமுடியு மாம்" 44

"சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
செய்தவன் அரிச்சந் திரன்" 45

**2. திருவேங்கட சதகம்**

"தந்தைதாய் வாக்யபரி பாலனம் புரிவதுந்
தான்சொன்ன படிசெய்வதுந்
தவறாத விரதமும் பொய்யாத வசனமும்
தானமுங் கனபொறுமையும்
சிந்தைமகிழ் மரபினோர் செய்தொழில் முடிப்பதுந்
தேவதா விசுவாச முஞ்
செய்தபோர் பரசுரா மன்கவச குண்டலன்
செயராம னொடுவீடுமன்
அந்தமிகு சொல்லரிச் சந்திரன்" 11

**3. பஞ்சதந்திரப் பாடல்**

"பொன்னிழந்தும் நாடிழந்தும்
பொருவில்குமா ரனையிழந்தும்
பன்னருந்தே வியையிழந்தும்
பறையனுக்கா ழியஞ்செய்தும்
தன்னுடம்பு தான்விற்றும்
சத்யஅரிச் சந்திரனும்
மன்னியதீ வினையாலே
மாழ்கினன்அன் றோ?" என்றும் 155

"ஆகையினால், வினைப்பயனை
ஆர்கடந்தார் ?" 156

—சந்தி விக்கிரகம்

4. இரங்கேச வெண்பா என்னும் நீதிசூடாமணி

"வேந்தை வதிட்டன் வியத்தல்பழு தென்றமுனி
ஏந்துதவந் தோற்றான் இரங்கேசா — ஆய்ந்தக்கால்
சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்."

பயனில சொல்லாமை - 20

"மூவரரிச் சந்திரற்கு முன்னின்ற காட்சிபோல்
ஏவர்பெற்றார் மேனா ளிரங்கேசா ! — பூவில்
மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை."

வாய்மை-30

"விற்ற மனையாளை வெட்டுதலு முற்றதுயர்
இற்றது மன்னற் கிரங்கேசா — அற்றுலகில்
இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு."

இடுக்கணழியாமை - 63

5. ஆத்திசூடி வெண்பா

"இந்துமதி விற்றுமனலந் தீனனுக்கா ளாகியரிச்
சந்திரனே தன்னிலமை தப்பாதான் — அந்த
மனுநெறிதேர் புன்னை வனநாதா பூமி
பினிலியல் வதுகர வேல்." 3

"இந்திரன்முன் கோசிகன்வ திட்டருடன் வாதிலரிச்
சந்திரனைப் பொய்யனென்ற தப்பிதத்தால் — வந்ததுபார்
மாதவனே புன்னை வனநாதா வாயிடும்பால்
ஏதெனினும் வாதுமுற்கூ றேல்." 99

6. செயங்கொண்டார் வழக்கம்

"தாப்பாய்வா மனன்கையிலே மாவலிதண்
ணீர்விட்டுத் தரணி யேதான்
வாய்ப்பாய்க்கோ சிகர்க்குமுன்னா லரிச்சந்திரன்
ஆசைசொல்லி மனைவீ விற்றான்

தீப்போலே விழிகாட்டி மதனுடலை
யெரித்துவிட்ட செயங்கொண் டாரே
பார்ப்பார்க்கு வாய்ப்போக்கா ஆண்டிக்கு
அதுதானும் பகரொண் ணாதே." 12

"செப்புமரிச் சந்திரன்தான் நீசனுக்கு
விலையாகச் சென்றே நெஞ்சம்
ஒப்பிமயா னமும்காத்த நிமித்தியத்தால்
இழுக்கவனுக் கொருபோ துண்டோ
மைப்படியுங் குழலிசவுந் தரிபாகர்
செயங்கொண்டார் வளஞ்சேர் நாட்டில்
குப்பையிலே போட்டாலும் குன்றிமணி
நிறத்திலொன்றும் குறைவ ராதே." 26

"புகழரிச்சந் திரன்நிசவா னெனவசிட்டன்
சொல்லதனைப் பொய்ய னாக்க
மிகவெகுண்டு சபதமைத்து ஆனமட்டும்
பார்த்தயர்ந்து விசுவா மித்ரர்
செகமறிய வரக்கன்பட் டிறந்ததையா
வருமறிவார் செயங்கொண் டாரே
முகடுமுட்ட வருங்கோபம் துரும்புகுத்த
வேர்க்குமென மொழிந்த வாறே!" 32

## 7. திருவாரூர்ப் புராணம் — அரிச்சந்திரச் சருக்கம்

வரிவண்டு புடைமி ழற்று மணங்கமழ் அலங்கல் மௌலித்
திரிசங்கு நாம வேந்தன் திருமைந்தன் திருவா ரூரிற்
பரமன்றாள் மனத்தி ருத்திப் பகாருந் தவம்பு ரிந்தோர்
அருமந்த மகனைப் பெற்ற அருங்கதை அறைதும் அன்றே. 1

மதியிரண் டெனச்சி றந்த கவிகைமன் னன்வா னுலாங்
கதிரிரண் டெனச்சி றந்த திகிரிமீளி கங்கை மா
நதியிரண் டெனச்சி றந்த நவைதவிர்ந் த புனி தன்மா
விதியிரண் டெனச்சி றந்த மேன்மைநீ டு வாய் மையான். 3

விதிமுறை தாபித் தன்பால் விமலனை விதிவ ழாமற்
புதுமலர் தூவிப் பூசை புரிந்துநல் விரதம் பூண்டு
கதிர்பரந் திமைக்குஞ் செவ்வேற் காவலன் கணிப்பில் கால
மதலைதன் பொருட்டு மாயா மாதவம் புரிந்தான் மாதோ. 16

அரசனை அருளின் நோக்கி ஆலமர் கடவுள் யாது
கருதினை கழறு கென்னக் கருதிய திசைத்தான் எந்தை
வரமது தந்தான் ஆங்கு மலைமகள் முனிந்தீ தென்னைப்
பரவுதல் செய்தி டாத பகரரும் பாவந் தன்னால் 24

அருள்புரி மதலை வெவ்வாய் அரவினான் முடிக வென்னா
உரைபகர்ந் தீச னோடும் ஒல்லையின் மறைந்தா ளாங்குப்
பெரிதுசெய் தவத்தா னோக்கம் பெற்றுடன் இழந்தோன் என்னப்
புரவலன் எரிதோய்ந் தன்ன துன்பத்திற் புழுங்கி னானே. 25

*[மீண்டும் பார்வதியை வேண்டி வணங்க, பார்வதி காட்சி தருகிறாள். அரிச்சந்திரன் பார்வதியிடம வேண்டிக் கூறுகின்றான்.]*

மின்றிகழ் சடையா னோடும் விமலைநீ விடையிற் றோன்றி
நின்றதோர் கோலங் கண்டு நிறைந்தெழு களிப்பி னாலே
ஒன்றையு முணரா தீசன் ஒண்புகழ் போற்றி நின்றே
உன்றனை இகழ்ந்தேன் அல்லேன் ஓங்கருள் உததி யொப்பாய். 34

அகிலவா ருயிர்கட் கெல்லாம் அன்னைநீ முனிந்தால் யார்க்கும்
புகல்பிறி துண்டோ தேறாப் புத்திரர் பிழைசெய் தாலுந்
தகுமருள் புரிவ தின்றோர் தங்கடன் அன்றோ தாவா
இகபரம் இரண்டு நல்கும் இமயமேல் உதித்த பாவாய். 35

தந்தருள் மதலை ஊறு தணந்துநின் கருணை தன்னால்
உய்ந்திட அளித்தி யென்னா உரவுநீ ருலக மன்னன்
வந்தனை செய்த லோடு மகிழ்ந்துபே ரருள்சு ரந்து
செந்திரு முதலோர் போற்றுந் தேவிமற் றினைய சொல்வாள். 36

யாம்பகர் சாபம் பொய்யா தீற்றினை யெய்தி உய்ந்து
மேம்படு திருவின் மல்கி மேதினி முழுதுங் காக்குந்
தேம்பொழி தாரோய் நின்னோர் சேயெனத் தேவி செப்ப
வாம்பரி வெய்ய தானை மன்னவன் மகிழ்ச்சி பூத்தான். 37

ஓங்கருள் உததி யன்ன உமையொடு மகேசன் றன்னைத்
தேங்கமழ் மலராற் பூசை செய்தநற் றிறத்தி னாலே
வாங்குநீ ருலக மன்னன் மாமுதல் தடிந்த வைவேல்
பூங்கழல் முருக னன்ன புதல்வனைப் பயந்தான் மன்னோ. 40

மாதிரம் விசயங் கொண்டு மா நிதி மழைபொ ழிந்து
மேதகு மிராச சூய வேள்வியும் விதியி னாற்றிப்
பூதலம் புரந்து சாலப் புகழொடு பொலிந்து மல்கி
ஆதியங் கடவுள் ஈசன் அடிநிழல் அமர்ந்தான் அன்றே. 41

[அரிச்சந்திரச் சருக்கத்தில் மொத்தம் 43 பாடல்கள் இடம்பெற்றுள்ளன]

8. திருவாப்பனூர்ப் புராணம்—அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்

செயிரில் கோசல நாட்டினும் பதியினுஞ் செறிந்து
துயரினால் வகைப்படை யினும மைச்சினுந் துளங்குற்
றயர்வில் கற்புடை மனையினுஞ் சேயினு மாகத்
துயரி னும்புகல் சத்தியம் புரப்பதொன் றுடையோன். 7

இவர் தருந் திருப்பெய ரரிச்சந்திர னென்போன்
அவனிருந் தரசியற்று நாளலை கடல்குடித்த
தவனவ ணடைதலுங் கடைபுரப் பவன்சார்ந்தங்
கவனிகா வலற்குணர்த் தினன்விரைவி னாங்கெழுந்தான். 8

நடந்தருக் கியமா தியநன் புரோகிதர்கொண்
டடைந்திடத் தமிழ்முனி வனைப்பூ சனையாற்றித்
தொடர்ந்தமெய்த் தவந்தீர்த்த நந்தனந் தருச்சூழல்
படர்ந்த புன்முதல் வினவலு மருளொடும் பாரா 9

இனிய நாடுநன் குடியும் பங்காறி லொன்றீந்த
துனியில் செம்பொருட் கோசமு மாண்படைத் தொகையுங்
கனியு மென்மொழி மகார்முதல் வினவியுட் கரவின்
முனியும் வேந்துடன் முகமனன் கிருந்தெதிர் மொழிய 10

இருகை கூப்பிநின் றிற்றைநாட் காறும்யா னிழைத்த
பரவு பூசனை விரதநற் புண்ணியப் பயன்போற்
றெரிச னங்கொடுத் தெழுந்தரு ளினையி வண்சேர்ந்த
பரிச தென்னவை செயுங்கருத் தெனக்கெனப் பகர்ந்தான். 11

இனன்குலத் தவகேண் மதியெம் மிருக்கை யில்யாங்
கனிதவத் தியானத் திருந்த ருளுமங் காலை
நினது சன்ம நாளிராகு மேவவு நெடும்பீடை
உனைவருத் தவுங்கண் டவையு ரைப்பவீங் குற்றேம். 12

திருத்த யாத்திரை நீசெயில் தீருநற் றினமும்
பொருத்த முற்றநல் லோரையும் புகுந்ததிப் பொழுதே
விருப்பி னாற்கடி தேகுதி யெய்துநின் வேட்கை
யிருத்தி யேற்புகுந் துயரென வேகினன் முனிவன். 13

விரைந்து வேந்தனும் யாத்திரை போய்வர விக்கம்
பொருந்து றாதுநங் குரிபுக விமலனைப் பூசித்
தருந்து வித்துயர்ந் தோர்க்குத் தக்கணை யொடுமடைகாய்
திருந்துறக் கொடுத்தாசி பெற்றனுக் கையிற் சென்றான். 14

பெருந்தவத் தனிவசிட் டனுமள லில்விப் பிரரும்
பரிந்து முன்செல நிதியொடுந் தொடர்ந்துபின் படர்ந்து
பொருந்தி நீடுகே தாரத் தின்நறும்புனல் தோய்ந்தங்
கிருந்த சங்கரற் கண்டடி வணங்கினை லேகி. 15

[பின் வடதேசத்தில் உள்ள தலங்கள், தென்தேசத் தலங்கள் பலவற்றையும் சென்று வணங்கிப்பின் திருவாப்பனூரில் கோயில் கொண்டுள்ள இறைவனை அரிச்சந்திரன் வணங்குகின்றான்.]

பின்னராப் புடையபிரான் மலர்க்குரவங்
கமழ்குழலெம் பிராட்டி பாதந்
தன்னையா தரத்திறைஞ்சி வசிட்டனொடு
மயோத்திநகர் சார்ந்து துந்து
என்னுமோ ரவுணனுடல் தடிந்தகுடு
சரவேந்த னிருந்தா னப்பால்
துன்னியோங்க சத்தியதோ டத்தினுறா
தரசியற்றிச் சுவர்க்கஞ் சேர்ந்தான். 38

[அரிச்சந்திரன் தீர்த்த யாத்திரைச் சருக்கத்தில் 41 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.]

பிற்சேர்க்கை—5

# அரிச்சந்திரன் கதைகூறும் நூல்களின் பட்டியல்

*[இயன்றவரை, குறிப்பிடத்தக்க நூல்கள் தொகுத்தளிக்கப்பெறுகின்றன. வரும் பதிப்புகளில் விரிவுபெறுதற்குரிய பட்டியல்.]*

அரிச்சந்திர நாடகம், சிவசாமி இயற்றியது, சுந்தர விலாச அச்சுக்கூடம் பூவிருந்தவல்லி, (309 பக்கம்) ஆண்டு 1897.

அரிச்சந்திர நாடகம், எஸ். பவானந்தம் பிள்ளை இயற்றியது. டி. ராமகிருஷ்ணனின் ஆங்கில முகவுரையுடன் (தலைப்புப் பக்கம் இல்லை) (361 பக்கம்) எஸ். பி. சி. கே. பிரஸ், 1910.

அரிச்சந்திர நாடகம், வீரைலிங்கபாரதி இயற்றியது, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1985.

அரிச்சந்திர நாடகம், வி. வரதராஜுலு நாயுடு, (374 பக்கம்) சற்குணாநிதி அச்சுக்கூடம், 1875.

அரிச்சந்திர நாடகம், முத்துக்கிருஷ்ண உபாத்தியாயர், (248 பக்கம்), பாரதி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1893.

அரிச்சந்திர புராணம், வீரகவிராயர் இயற்றியது, கழகப் பதிப்பு (மேலும் பல பதிப்புகள்), சென்னை.

அரிச்சந்திர மகாராஜா கீர்த்தனம், வெங்கடாசல ஆச்சாரியார், கலாரத்னாகர அச்சுக்கூடம், சென்னை, 1870.

அரிச்சந்திர மகாராஜன் பேரில் மனோன்மணிக் கும்மி, நரசிம்மையர், அருட்பிரகாச அச்சுக்கூடம், 1880.

அரிச்சந்திர வண்ணம், பூ. ஆறுமுகம்பிள்ளை. கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை, 1899.

அரிச்சந்திர விலாசம், பழவேற்காடு இரங்கப்பிள்ளை கவிராயர் இயற்றியது, கல்விவிளக்க அச்சுக்கூடம், (358 பக்கம்), 1870.

அரிச்சந்திர விலாசம், பரசுராமக் கவிராயர், (254 பக்கம்), இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம், காஞ்சிபுரம், 1873.

அரிச்சந்திர விலாசம், பி. வெங்கட்ராம உபாத்யாயர், (402 பக்கம்) விவேக சந்திரோதயம் பிரஸ், சென்னை, 1874.

அரிச்சந்திர வெண்பா, பதிப்பாசிரியர் மு. இராகவ அய்யங்கார், திருவனந்தபுரம் பல்கலைக்கழக வெளியீடு, திருவனந்தபுரம், 1949.

அரிச்சந்திர வெண்பா, முதுகுளத்தூர் ஆறுமுகம் பிள்ளை இயற்றியது, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, அச்சானது.

அரிச்சந்திரன் அம்மானை, மிதிலைப்பட்டி, சண்முக கவிராஜர் இயற்றியது, (72 பக்கம்) ஸ்ரீ பத்மவிலாச அச்சுக்கூடம், சென்னை, 1912.

இங்குப் பதிப்பிக்கப்பெறுகின்ற 'அரிச்சந்திரன் அம்மானை'யிலிருந்து வேறுபட்ட நூலாகும் இது.

அரிச்சந்திரன் கும்மி, வைரவ நாடார் கே, சின்னைய நாடார் பிரஸ் திருப்புத்தூர், 1888.

அரிச்சந்திரன் கொம்மி, வயிரவன் கோயில் சிறுகுளத்தூர் சுப்பிரமணிய செட்டியார் இயற்றியது, இட்டா குப்புசாமி நாயுடுவின் சென்னை குவலய ரஞ்சனி அச்சுக் கூடத்தில் கோகுலாபுரம் எல்லப் பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது. 1888. (மிகச் சிறிய நூல்)

அரிச்சந்திரன் சரிதை, மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டவர் திருவல்லிக்கேணி சுதர்சனம் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார்.

[இத்தமிழ் நூல் வேதவியாசரின் ஸ்காந்த புராணத்தில் உள்ள அரிச்சந்திர உபாக்கியானத்திலிருந்து பெரும்பாலும் மொழிபெயர்க்கப் பட்டதாம். மு. இராகவையங்கார் 'அரிச்சந்திர வெண்பா'வில் மேற் கோளாகக் காட்டிய நூல்.]

அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச் சிந்து. விரகாலூரர் சுப்பையா பிள்ளை இயற்றியது. (24 பக்கம்) சக்கரவர்த்தி அச்சுக்கூடம், சென்னை, 1926.

அரிச்சந்திரோபாக்கியான நாடக அலங்காரம் என்னும் கீர்த்தனை. நரசிம்ம அய்யர் அவர்கள் இயற்றியது, (404 பக்கம்) பிரபாகர அச்சுக்கூடம், சிந்தாதிரிப்பேட்டை, 1876.

எல்லார்க்கும் பார்க்கத் தகுந்த எட்டு கிரிமினல் கேஸ், சதாவதானி கா. ப. செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் இயற்றியது, (சூர்ப்பனகை பங்கம், வாலி வதம், அரம்பை பலவந்தப் புணர்ச்சி, கோபிகா ஸ்திரீகள் வஸ்திரா பஹரணம், துரோபதை வஸ்திராபஹரணம், அரிச்சந்திர சரித்திரம், இலங்கா தகனம் முதலியன) (263 பக்கம்) கோல்டன் அச்சியந்திர சாலை, சூளை, 1907.

சத்தியபாஷ அரிச்சந்திர விலாசம், அப்பாவுப் பிள்ளை எனும் இயற் பெயருடைய முத்துசாமி இயற்றியது. (799 பக்கம் ஐதிகப் படங்களுடன்) தொம்முகா நித்திண்ணை அச்சுக்கூடம், புதுவை, 1894.

சத்திய வாக்கு அரிச்சந்திர நாடகம், முத்தன் ஆச்சாரி, சென்னை, 1905.

சத்திய விஜயம், வாழ்குடை வெங்கடராம சாஸ்திரிகள் இயற்றியது, (187 பக்கம்) பி. என். பிரஸ், மதராஸ், 1940.

நவரச சங்கீத அலங்கார அரிச்சந்திர நாடகம், ல. முத்தழக பாரதி, சிற்றம்பல விலாசம் பிரஸ், சென்னை, 1900.

நீதிநெறி அரிச்சந்திர நாடகம், சங்கிலியா பிள்ளை அவர்கள் இயற்றியது, (சுமார் 20—30 முழுப்பக்கப் படங்களுடன்) (497 பக்கம்) நிரஞ்சனி விலாச அச்சியந்திர சாலை, சூளை, 1900.

மெய்யரிச்சந்திர நாடகம், மு. எ. கல்யாணசுந்தரம்பிள்ளை இயற்றியது (20-30 முழுப்பக்கப் படங்களுடன்) (773 பக்கம்) நிரஞ்சனி விலாச அச்சியந்திர சாலை, சூளை, 1905.

ஸம்பூர்ண அரிச்சந்திரா (பாட்டும் வசனமும் கலந்த நடித்தற்கான நாடக நூல்), மதுரை குற்றாலம் பிள்ளை இயற்றியது. B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை.

ஹரிச்சந்திரன், பம்மல் சம்பந்த முதலியார் இயற்றியது, (109 பக்கம்), சென்னை இந்தியா அச்சுக்கூடம், இரண்டாம் பதிப்பு, 1930.

ஹரிச்சந்திரன் நாடகம், சுவாமி சித்பவானந்தர் இயற்றியது, (105 பக்கம்), தபோவன அச்சகம், திருப்பராய்த்துறை, 1964.

ஆங்கிலம்

Arichandra, The Martyr of Truth, A Tamil Drama, Authorship attributed to Rangapillay of Palavercadu, Translated into English by Mut'u Coomara Swa'my Mudeliar, London, Smith Elder and Co., 65, Cornhill, 1863.

Harischandra, Rao Bahadur P. Sambandam, 1900.

வடமொழி

ரிக் வேதத்தின் ஐதரேய பிராமணம்.

மகாபாரதம் (மிகச் சுருக்கமாக)

ஸ்காந்த புராணம்.

மார்க்கண்டேய புராணம்.

ஸ்ரீதேவீ பாகவதம். (பிற புராணங்களில் மிகச்சிறு குறிப்புகள் மட்டும்)

சண்டகௌசிகம், (நாடக நூல்), க்ஷேமீச்வரன், 10 ஆம் நூற்றாண்டு.

ஸத்யஹரிச்சந்திரம், (நாடக நூல்), ராமசந்த்ரசூரி, 12 ஆம் நூற்றாண்டு.

# ஸ்ரீ மானையில் இடம்பெற்றுள்ள விருத்தங்களின் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை



| | விருத்த முதற்குறிப்பு | பாடல் எண் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | அடிபட் டிடுமங் | 4 | 10 |
| 2. | அண்ணலோ டெதிர்த்தாய் | 33 | 67 |
| 3. | அத்தனே அரனே | 130 | 285 |
| 4. | அந்தநாள் ஈசன் | 55 | 95 |
| 5. | அந்நகர் ஆளும் | 11 | 24 |
| 6. | அப்பனே குமரா | 115 | 241 |
| 7. | அம்பகமி லங்குருளை | 19 | 44 |
| 8. | அம்பிகை கௌரி | 134 | 287 |
| 9. | அம்புவி யதனில் | 1 | 5 |
| 10. | அம்மட மயிலுக் | 18 | 43 |
| 11. | அய்யயோ மகனே | 114 | 240 |
| 12. | அய்யரே ! நீருஞ் | 74 | 140 |
| 13. | அரணகா ரணமாம் | 109 | 233 |
| 14. | அரிதான தவமேசெய் | 112 | 240 |
| 15. | அருமறை கவுசிகன் | 60 | 114 |
| 16. | அவ்வள வதிய | 103 | 217 |
| 17. | அவயவந் தனக்குப் | 38 | 71 |
| 18. | அற்புத எழிலகம் | 119 | 253 |
| 19. | அறிவுடன் பொறுமை | 2 | 6 |
| 20. | அனம்வந்து நடைகண்டு | 121 | 259 |
| 21. | ஆதி வாழி | 140 | 306 |
| 22. | ஆய்ந்த மந்திரி | 86 | 173 |
| 23. | ஆனைபரி தேர்களுடன் | 9 | 20 |
| 24. | ஆனையிர தங்குதிரை | 25 | 55 |
| 25. | இட்டதொரு மாரனனல் | 16 | 37 |
| 26. | இந்த வாறுந | 128 | 282 |
| 27. | இப்படி அரசர் | 54 | 95 |
| 28. | இலங்கிய கவிகையும் | 59 | 110 |
| 29. | இவ்வகைவ னத்திடைஏ | 94 | 192 |
| 30. | இறந்தனன் காட்டிடை | 110 | 234 |
| 31. | உண்ணியோ டட்டை | 64 | 119 |
| 32. | உத்தம முனிவனே | 96 | 197 |
| 33. | உரைப்பவர் செவிப்புறத் | 141 | 306 |

| | விருத்த முதற்குறிப்பு | பாடல் எண் | பக்க எண் |
|---|---|---|---|
| 34. | ஊரும் நாடும் | 85 | 173 |
| 35. | எங்கும் உன்னை | 31 | 65 |
| 36. | எண்ணரிய கன்னியர்இ | 53 | 91 |
| 37. | எண்ணரும் பிறவி | 131 | 286 |
| 38. | எண்ணுவர் கவலைகொண் | 88 | 177 |
| 39. | எண்ணெழுசெ ழும்பதியின் | 30 | 61 |
| 40. | எந்த நாட்டில் | 125 | 273 |
| 41. | எம்மிருத னங்குழைய | 81 | 157 |
| 42. | எவ்வகை இறந்தனன் | 111 | 234 |
| 43. | எழுவாரி புடைசூழும் | 113 | 240 |
| 44. | எறிந்தகை மாலையும் | 50 | 86 |
| 45. | என்னை யன்றி | 101 | 212 |
| 46. | ஓதும் அன்ன | 124 | 273 |
| 47. | கங்குல்மத மாவுமொய | 15 | 36 |
| 48. | கச்சை கட்டி இ | 67 | 127 |
| 49. | கரியுரி உடையாய் | 133 | 286 |
| 50. | கவுசிக மாமுனி | 58 | 109 |
| 51. | கழுகொடு குரண்டங் | 63 | 119 |
| 52. | கற்பகத் தருவனங் | 87 | 177 |
| 53. | கன்னலொடு வாழைகமு | 35 | 69 |
| 54. | கன்னிமா னன்னயாள் | 48 | 82 |
| 55. | கன்னோசி வள்ள | 126 | 280 |
| 56. | காக மோடு | 22 | 51 |
| 57. | காத்தருள் காந்த | 135 | 287 |
| 58. | காதிலிடு தோட்டொடுக | 41 | 74 |
| 59. | காய்கி ழங்கு | 98 | 184 |
| 60. | காரை வீரை | 21 | 51 |
| 61. | காவல னோடு | 92 | 188 |
| 62. | குழைதொட்ட விழிவட்ட | 43 | 77 |
| 63. | கொச்சை நீகொடும் | 34 | 67 |
| 64. | கோடிகதி ருக்கதிய | 23 | 53 |
| 65. | கோலமத னாடற்கு | 82 | 157 |
| 66. | சங்கரா நீல | 108 | 232 |
| 67. | சித்திரம்மி குத்ததெரு | 36 | 70 |
| 68. | சீர்கொண்ட தவமுனிவன் | 0 | 1 |
| 69. | செண்பகம லர்களொடு | 5 | 13 |
| 70. | செல்லு மன்னவ | 90 | 181 |

| | விருத்த முதற்குறிப்பு | பாடல் எண் | பக்க எண் |
|---|---|---|---|
| 71. | சேனை யென்னும் | 79 | 154 |
| 72. | தகுட திகு டத்தகுட | 27 | 57 |
| 73 | தரணிதொரு முத்தரசர் | 28 | 58 |
| 74 | தவமுனி கவுசிகன் | 73 | 140 |
| 75. | தாரை என்(று) | 137 | 296 |
| 76. | திங்களு டன்புன | 75 | 144 |
| 77. | திங்க ளும்புன | 132 | 286 |
| 78. | திண்டெ னும்புய | 68 | 128 |
| 79. | திருமகள் கொழுநனும் | 66 | 125 |
| 80. | துங்கமுடி பூமியுற | 10 | 21 |
| 81. | துன் னும் மேனிக் | 104 | 221 |
| 82. | தெத்தி சைப்பொடு | 57 | 100 |
| 83. | தேடி வந்த | 122 | 263 |
| 84. | நம்முலகம் எங்குமுறை | 8 | 19 |
| 85. | நின்று மன்னவன் | 100 | 212 |
| 86. | நீடு சக்கரம் | 69 | 128 |
| 87. | நீடுலவு சோலையில்நெ | 46 | 80 |
| 88. | நீதிபுகழ் மன்னவர்நெ | 29 | 61 |
| 89. | நெறியுத்த மறைபெத்த | 120 | 259 |
| 90. | நேம மாதவர் | 56 | 100 |
| 91. | பந்தமு டன்புவி | 77 | 147 |
| 92. | பல்லியம்இ யம்பவிரு | 20 | 45 |
| 93. | பன் னும் பாதை | 99 | 204 |
| 94. | புத்திரன் இல்லை | 12 | 25 |
| 95. | புலியிருந் திடுமிடம் | 89 | 177 |
| 96. | பூங்காவ லோங்காமல் | 45 | 77 |
| 97. | பூமுடி தாளுறப் | 61 | 114 |
| 98. | பேய்இ ரைச்சல் | 107 | 225 |
| 99. | மங்கலம் என்றசொல் | 118 | 253 |
| 100. | மங்கையடி கண்டுளம்ம | 95 | 192 |
| 101. | மங்கையொடு மன்னவனும் | 52 | 91 |
| 102. | மட்டி லாத | 32 | 66 |
| 103. | மண்டல முஞ்சுமை | 76 | 144 |
| 104. | மண்டலம திக்கவரு | 39 | 74 |
| 105. | மண்டு மேனியி | 123 | 263 |
| 106. | மணங்கமழ் தைலஞ் | 37 | 71 |
| 107. | மணிமுத்து நிரைகச்சு | 44 | 77 |

| | விருத்த முதற்குறிப்பு | பாடல் எண் | பக்க எண் |
|---|---|---|---|
| 108. | மதகரி முதுகில் | 102 | 217 |
| 109. | மதிதய வேந்தன் | 13 | 33 |
| 110. | மல்லிகைம லர்க்குவரு | 6 | 13 |
| 111. | மன்னர் மன்னவர் | 106 | 225 |
| 112. | மன்னர்மன் னவரே | 49 | 83 |
| 113. | மன்னவன் அயோத்தி | 138 | 303 |
| 114. | மாண்ட குன்றொடு | 105 | 221 |
| 115. | மாண்டபா லகனுடன் | 116 | 246 |
| 116. | மாதுசந் திரமதி | 51 | 86 |
| 117. | மாமுனி கவுசிகன் | 97 | 198 |
| 118. | மாமுனி வோர்பெண் | 14 | 33 |
| 119. | மானினம் வேங்கை | 62 | 118 |
| 120. | மின்னிடைம டந்தையர் | 47 | 81 |
| 121. | மின்னு கோசலை | 129 | 283 |
| 122. | முத்துமணி யாபரண | 24 | 53 |
| 123. | முதிருங் கதிர்கொய் | 3 | 10 |
| 124. | மூதான வண்ட | 127 | 280 |
| 125. | மேருமலைந்திட | 78 | 147 |
| 126. | மைந்தனும் மைந்தனை | 84 | 161 |
| 127. | மைந்தனை வேண்டி | 17 | 42 |
| 128. | வஞ்சகம் களவு | 139 | 303 |
| 129. | வட்டமுக முந்திலத | 40 | 74 |
| 130. | வந்தமட மானெழிலை | 42 | 75 |
| 131. | வலப்ப கத்திசை | 70 | 128 |
| 132. | வளமைசேர் கவுசிகன் | 83 | 161 |
| 133. | வாகு கேசரி ! | 91 | 181 |
| 134. | வாட்டமுத் திடர்முகம் | 65 | 124 |
| 135. | வால்சு ருண்டு ம | 71 | 129 |
| 136. | வெத்தி மீறும் | 80 | 154 |
| 137. | வெம்புதழல் மிஞ்சுவனம் | 26 | 55 |
| 138. | வெம்மைசேர் மறையவன் | 117 | 246 |
| 139. | வெள்ளை நீறணி | 136 | 296 |
| 140. | வெள்ளை போருடல் | 72 | 130 |
| 141. | வேத வேதியர் | 98 | 204 |
| 142. | வேதமறை யாளர்கவி | 7 | 19 |

# அருஞ்சொல் அகராதி

[எண் : அம்மானை அடி எண்  வி : விருத்தம்]

அக்கணியும் மாமுனி - உருத்திராக்கம் அணியும் மாமுனிவன்
அக்கம் — துணை
அக்கதை — அட்சதை
அக்கினி — தீ
அக்கு — உருத்திராக்கம்
அக்குவடம் — உருத்திராக்க மாலை
அகம் — மனம்
அகலம் — மார்பு
அங்கண்மாஞாலம் — அழகிய இடமகன்ற பெரிய உலகம்
அங்கணம் — இருதாண் நடுவிடம், முற்றம்
அங்கம் — உடல் உறுப்பு, உடல்.
அங்குலி — விரல்
அங்கை — உள்ளங்கை, அழகிய கை
அச்சுதன் — திருமால்
அசங்குதல் — அசைதல், நடுங்குதல்
அசலத்தம்பம் 2340
அசலம் — மலை
அசுரர் — பதினெண் கணத்தாருள் ஒருவர்; தேவர்க்குப்பகைவர்
அஞ்சனம் — மை
அஞ்சிரட்டி — பத்து
அஞ்சு — ஐந்து
அஞ்சுகம் - அழகிய கிளி, கிளி போன்ற மொழி பேசும் பெண்
அஞ்சுமலர் அம்பு — மன்மதனின் மலரம்பு
அட்டகிரி - எட்டு மலைகள் (இமயம் மந்தரம், கயிலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் ஆகியன)
அட்டதிசை எட்டுத் திசைகள்
அட்டபவிசு வி 40
அட்டபவுசு 5071
அட்ட வசுக்கள் தேவதைகளுள் ஒரு பிரிவினரான எட்டு வசுக்கள்
அட்டாங்க வாசல் 275
அட்டிகை — மகளிர் கழுத்தணி வகை
அட்டை - நீர்வாழ் உயிர்களுள் ஒன்று
அடல் — வலிமை, வெற்றி
அடவு 2188
அடி — பாதம்
அடியான் — அடிமை, தொண்டன், வேலையாள்
அடுமை — அடிமை
அண்டர் — தேவர்
அண்ணல் - பெருமையிற் சிறந்தவர், தலைவர், அரசர், சிவபெருமான்
அணங்கு - பெண், தீண்டி வருத்தும் தெய்வப்பெண்
அத்தம் — பொன், பொருள்
அத்தன் — தலைவன், சிவபெருமான்
அத்திப்பொரி - 821 (கண்ணில் ஓடும் ஒரு நாடி)
அதிபன் — தலைவன், அரசன்
அதியம் — அதிகம்
அந்தகன் — எமன்
அந்தரம் — வானம், இடை.
அந்தரி — பார்வதி, கொற்றவை
அந்தரியாள் பங்கன் — சிவன்
அப்பணியுஞ் செஞ்சடை — (கங்கை) நீர்தங்கிய சிவந்த சடைமுடி
அப்பு — நீர்
அம்பறாத் தூணி — அம்புக் கூடு

அம்பிகை — பார்வதி, துர்க்கை
அம்புலி — சந்திரன்
அம்புவி — அழகிய பூமி
அம்மானை - ஒருவித மகளிர் விளை யாட்டு, ஒருவகைப்பாடல், அம்மானை எனும் கதைப்பாடல் இலக்கிய வகை, பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் ஒரு பருவம்.
அமரர் — தேவர்
அமராபதி—இந்திரனின் நகரம்
அமுது — அமிர்தம்
அய்யர்—இரப்போர் கலம் 3018
அய்யோத்தி—அயோத்தி நகரம்
அயன்—பிரமன்
அயிராணி—இந்திரனின் மனைவி; இந்திராணி
அயிராணி கேள்வன்—இந்திரன்
அயிராவதப் பாகன்—இந்திரன்
அயிராவதம்—இந்திரனின் பட்டத்து யானை
அரசரணசிங்கம்—போரில் மற்ற அரசர்களையெல்லாம் வெல்லும் சிங்கம் போன்ற அரசன்
அரசிலை 1077
அரணம்—அரண்
அரப்பு - எண்ணெய்க் குளியலுக்குத் தேய்த்துக்கொள்ளும் சிகைக்காய் முதலியன
அரவம்—பாம்பு
அரவு—பாம்பு
அரன்—சிவன்
அரா—பாம்பு
அரி—திருமால், சிங்கம், கண்வரி, அழகு, நிறம், ஒளி, ஆயுதம்
அரிச்சந்திரன்-அயோத்தியின் அரசன்; சத்தியநெறி தவறாத வேந்தன்
அரியாசனம்—சிங்காசனம்
அரிவை-பெண், இருபது முதல் இருபத்தைந்து ஆண்டு வரையுள்ள பெண்ணின் பருவப் பெயர்
அருகாண்மை-அருகில்
அருந்ததி-வசிட்டரின் மனைவி; கற்பு மேம்பாட்டிற்கு எடுத்துக் காட்டாகக் காட்டப்பெறும் நங்கை
அருளிப்பாடு-அருளப்பட்ட ஆணை, கட்டளை
அரை-இடை, இடுப்பு
அரைஞாண்-இடுப்பில் கட்டும் கயிறு
அல்-இரவு
அல்குல்-அரை, பெண்குறி, நிதம்பம்
அல்லல்-துன்பம்
அல்லாம்-எல்லாம்
அலகை-பேய்
அலங்கல்-பூமாலை
அவ்வியம், வஞ்சகம், பொறாமை
அவ்வை-அம்மை, அன்னை
அவகாசம்-சமயம், திராணி. உரிமை
அவத்தம்-பயனற்றது, கேடு
அவத்திணை-கேடு, துன்பம்
அவத்தொனி-அமங்கல ஒலி 4253
அவயவம்-உடலின் உறுப்பு, அங்கம்
அவுக்கம் 2657
அழலோன்-அக்கினிதேவன்
அழுங்கு—விலங்கு வகை
அளுங்கு—அழுங்கு
அளை-வெண்ணெய்
அறிக்கை 1826
அறிதி-அறுதி-முடிவு
அறுமுன்று-பதினெட்டு
அன்பத்தாறு-ஐம்பத்தாறு
அன்றில்—இணைபிரியாது வாழும் ஒருவகைப் பறவை

அன்னம்-சோறு, பறவை, அன்னப் பறவை வாகனம்
அன்னை-தாய்
அனங்கராயன்—மன்மதன்
அனங்கன்—மன்மதன்
அனந்தம்—அளவற்றது
அனம்—அன்னம்—அன்னப்பறவை
அனல்—நெருப்பு
அனவரதம்—எப்பொழுதும்
அனுகூலன்—இதமாக நடப்பவன், உதவுவோன்
ஆக்கை—யாக்கை, உடம்பு
ஆகம்—உடம்பு
ஆகு—பெருச்சாளி
ஆங்காரம்—செருக்கு, அகந்தை
ஆசம் 4692
ஆசனம்—இருக்கை
ஆசார மேடை—அரசர் வீற்றிருக்கும் மேடை. 4689
ஆடகம் - சிறந்த பொன், நால்வகைப் பொன்னுள் ஒன்று
ஆடலைப்பு - துன்பப்படுத்துதல் வி 96
ஆண்டான்—எஜமானன்
ஆணிக்கனகம்—ஆணிப்பொன்
ஆணிப்பொன் - உயர்மாற்றுப்பொன்
ஆத்தா—ஆற்றா
ஆதவர்—சூரியன்
ஆதவர் கோன்—சூரிய குலத்தில் தோன்றிய மன்னன்
ஆதி—தொடக்கம்
ஆதிசேடன்—பூமியைத் தாங்கிக் கொண்டிருப்பதாகவும் திருமாலின் பள்ளியணையாக உள்ளதாகவும் கூறப்படுகின்ற பாம்பு
ஆதித்தர் பன்னிருவர்-பன்னிரு சூரியர்
ஆதித்தன்—சூரியன்
ஆதுலர்—வறியோர், ஏழை
ஆப்பிடவும் [ஆப்பிடுதல் - அகப்படுதல்] 4326
அரி-99
ஆயன்—திருமால்
ஆயி—தாய், பார்வதி
ஆயிழை - ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்த பெண்
ஆயிழைமார்—பெண்கள்
ஆரணங்கு - தெய்வப்பெண், பேரழகி
ஆரணம்—வேதம்
ஆரணியம்—காடு
ஆராருங் கேட்க-யார் யாரும் கேட்க-எல்லாருங் கேட்க
ஆல்-ஆலமரம்
ஆலடி-ஆல மரத்தடி
ஆலபத்திரம்-ஆல இலை
ஆலம்-நஞ்சு
ஆலமுண்ட நாதன்-சிவன்
ஆலவட்டம்-பெருவிசிறி
ஆலவிடம்-பாற்கடலில் தோன்றிய நஞ்சு
ஆலாத்தி-ஆலத்தி-ஆரத்தி
ஆலிங்கனம்-தழுவல்
ஆலித்தல்-ஒலித்தல்
ஆலிலை-ஆல மரத்தின் இலை
ஆலைப்பால்-கருப்பஞ்சாறு, கரும்புச்சாறு
ஆவணம்-கடைவீதி
ஆவத்து-ஆபத்து
ஆவி-உயிர்
ஆழி-கடல், மோதிரம்
ஆறுசுவை-கைப்பு, இனிப்பு, புளிப்பு துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு என்னும் ஆறுவகையான சுவைகள்
ஆனந்தம்-மகிழ்ச்சி
ஆனைமுகவன்-விநாயகன்
இகம்-இம்மை
இகம்பரம்-இம்மை மறுமை
இங்கிதம்—இனிமை, குறிப்பு, கருத்து சமயோசித நடை
இங்கிதன் 1018
இச்சை-விருப்பம்

இஞ்சலுடன்-286, 1476
இட்டம்-இஷ்டம்-விருப்பம்
இடபம்-ஏறு-காளைமாடு
இடர்-துன்பம்
இடுக்கண்-துன்பம்
இடுத்தம்-துன்பம்
இடைகூறு-இடையூறு
இடைந்து நின்ற-சோர்ந்து நின்ற, மனந்தளர்ந்து நின்ற
இத்தாள்(வி)-இற்றாள் (மனம் இற்றாள்)
இதழ்-உதடு
இதையம்-இதயம்
இந்தனம்-விறகு
இந்திரகோபம்-தம்பலப்பூச்சி
இந்திர சூத்திரமா சித்தி 2280
இந்திரதனு-இந்திர வில்-வானவில்
இந்திரன்-தேவேந்திரன், தேவருலகத்து வேந்தன்
இந்திரனுஞ் சுந்தரியும்-இந்திரனும் இந்திராணியும்
இந்திராணி-இந்திரனின் மனைவி
இந்து-சந்திரன்
இம்பம்-இன்பம்
இயக்கர்-பதினெண் கணத்துள் ஒரு கணத்தார்
இரம்பை-தேவருலகத்து நடனமகள்-ரம்பை
இரவி-சூரியன்
இருநிதி-பெரியநிதி, சங்கநிதி; பதுமநிதி
இருவாச்சி-ஒரு பூ வகை
இரை-உணவு
இல்லாள்-மனைவி
இலங்குதல்-விளங்குதல்
இலவு-இலவ மரம்
இளவல்-தம்பி, இளையவன்
இறுங்கு-சோளவகை
இறையோன்-மன்னன்
இறைவன்-அரசன், கடவுள்

ஈசன்-இறைவன், சிவன்
ஈசுரன்-சிவன்
ஈசுவரி-பார்வதி
ஈண்டு-இங்கு
ஈது-இஃது-இது
ஈமத்தலம்-சுடுகாடு
ஈமத்துறை சுடுகாடு
ஈமம்-சுடுகாடு
ஈமவரி-சுடுகாட்டில் பிணத்தை எரிக்கக் கொடுக்கவேண்டிய வரி (பணம், ஆடை, அரிசி முதலியன)
ஈமவனம்-சுடுகாடு
ஈர்-பேன்முட்டை
ஈரம்—இரக்கம்
ஈரிரண்டு—நான்கு
ஈழம் - பொன்
ஈனன் - இழிந்தோன், சுடுகாட்டில் வேலைசெய்பவன்
ஈனுதல்—கருவுயிர்த்தல்
உக்கி(வி) - மெலிந்து, இற்றுப்போய்
உக்கிரம்-சினம், கொடுமை
உக்கிரமம்-ஊக்கமிகுதி,சுடர்
உக்குதல்-இற்றுப்போதல்
உகப்பு-மகிழ்ச்சி, விருப்பம்
உகமை 630, 2760
உகிர்-நகம்
உச்சாடனம் 4717
உடலம்-உடல்
உடுக்கை-ஆடை
உடுபதி-நட்சத்திரங்கள் உள்ள இடம்
உண்ணி-விலங்குகளின் உடலில் இருப்பதொரு பூச்சிவகை
உத்த—உற்ற
உத்தமன்-நற்குணமுடையவன்
உத்தரீகம்-உத்தரியம்-மேற்போர்வை மேலாடை
உத்தாள்கள்-உற்றாள்கள்-உற்ற, நெருங்கிய வேலையாள்கள்
உத்தூளி 3352

உந்தி-கொப்பூழ்-தொப்புள்
உம்பர்-தேவர்
உமை-பார்வதி
உமைபங்கன்-சிவன்
உமையவள்-பார்வதி
உமையாள்-பார்வதி
உய்தமுடன் 2581
உரகம்-பாம்பு
உரம்-மார்பு
உருமாலை-உறுமாலை-உறுமால், தலைச்சீலை, தலைப்பாகை மேல்வேட்டி
உருவசி-தேவருலகத்து நடனமகள்-ஊர்வசி
உலகதாட்சணன்-அரிச்சந்திரனின் மகன்
உவய-உபய-இரண்டு
உழுவை-புலி
உழை-மான், பக்கம்
உள்ளம்-மனம்
உளைதல்-மனம் வருந்தல்
உற்பலம்-செங்கழுநீர்ப்பூ 4764
உற்பனன்-உயர்ந்தவன் 1576
உறுமாலை-உருமாலை

உன்னிதம்-உன்னதம்-உயர்ச்சி, மேன்மை
உன்னுதல்-கருதுதல், நினைத்தல்
ஊகம்-குரங்கு
ஊக 2674
ஊட்டி-குரல்வளை
ஊடல்-தலைவன் தலைவியருள் உண்டாகும் சிறுபிணக்கு
ஊர்வை-ஊர்வன
ஊழை-ஊளை-தீநாற்றம், ஊத்தை
ஊறல்-ஊறுதல் 3889
எக்காளம்-மகிழ்ச்சி ஆரவாரம், ஓர் ஊதுகுழல்

எச்சோம் 2658 (எய்த்தல்-மெய் வருந்தல்)
எட்பூ-எள்ளின் பூ
எண்டிசை-எட்டுத் திசை
எத்தனம்-முயற்சி
எத்து-வஞ்சகம், உபாயம்
எந்தை-எம் தந்தை, எம் தலைவன்
எயில்-மதில்
எயிறு-பல், யானைத் தந்தம்
எரி-நெருப்பு
எருமைக் குறளை-எருமைக் குருளை-எருமைக் கன்று
எல்லவர்க்கும்-எல்லார்க்கும்
எல்லவரும்-எல்லாரும்
எழுகடல்-ஏழு வகையான கடல்கள்
என்பு-எலும்பு
ஏகம் 1131
ஏத்தம்-ஏற்றம்
ஏந்தல்-பெருமையிற் சிறந்தோன் அரசன்
ஏந்திழை-அழகிய அணிகலன்களை அணிந்த பெண்
ஏமக்கூடம்-ஏமகூடம்-எண்வகை மலைகளுள் ஒன்றாகிய பொன்மலை மேருமலை
ஏமன்-எமன்
ஏர்ரதி-அழகிய ரதி
ஏராமல்-ஏற்காமல்
ஏரும்-ஏற்கும், ஏற்றுக்கொள்ளும்
ஏலமுடன் 365
ஏலிச் 2226 (ஏலுதல்-பொருந்துதல்)
ஏவர்-எவர்
ஏவருக்கும்-எவருக்கும்
ஏழை-அறிவில்லாதவள், வறியவன் பெண்
ஏறு-விலங்கின் ஆண்
ஏனம்-பன்றி, அணிகலன்

ஏனாதி-ஒரு பட்டப் பெயர், மந்திரி
படைத்தலைவன், நாவிதன்
சாணாரில் ஒரு வகுப்பு
ஐங்கணை-மன்மதனுக்குரிய ஐந்து
மலரம்புகள்
ஐங்கணைவேள்-மன்மதன்
ஐங்கரன்-ஐந்து கரங்களுடைய
விநாயகன்
ஐந்தரு-தேவலோகத்து ஐந்து
மரங்கள்: சந்தனம். தேவதாரம்
கற்பகம், மந்தாரம், பாரிசாதம்,
ஆயினும் இச்சொல் அரசனை
விளிக்கும் சொல்லாகவே நூலில்
வழங்குகின்றது. 2334, 4643
ஐந்துமுகநாதன்-சிவன்
ஒக்கரை-விலா (ஒக்கலை-இடுப்பு)
ஒட்சை 2106
ஒண்டொடி-ஒளி வீசும் தொடியை
யணிந்த பெண்
ஒண்ணான 1444
ஒண்ணுதல்-ஒளி பொருந்திய நெற்றி,
ஒளியொருந்திய நெற்றியையுடைய
பெண்
ஒப்பிணை-ஒப்பனை-அலங்காரம்,
ஒப்பு+இன்+ஐ (ஒப்பு-சாயல்)
4583
ஒம்பது-ஒன்பது
ஒயில்-அலங்காரம்
ஒல்லையில்-விரைவில், விரைவாக
சீக்கிரத்தில்
ஒழுக்கம்-ஒழுங்கு
ஒள்ளியமாய் 1464
ஒன்னலர்-பகைவர்
ஓந்தி-ஓணான்
ஓம எரி-வேள்வி நெருப்பு
ஓமம்-ஹோமம்-வேள்வி வகை
ஓராமல்-சிந்திக்காமல், ஆராயாமல்
ஓரி-நரி

ஓரை வி 137
ஓலம் 2791 (சபை, மண்டபம்)
கங்கணம்-காப்பு நாண், கைவளை
கங்குல்-இரவு, இருள்
கங்கை-கங்கைநதி
கச்சு-மார்புக் கச்சு (பெண்கள்
அணிவது)
கச்சை-அரைக் கச்சு (ஆண்கள்
அணிவது)
கஞ்சம்-தாமரை
கஞ்சமலர்-தாமரை மலர், தாமரை
மலர் போன்ற முகம்
கட்குறி-கண்ணால் வெளிப்படும்
குறிப்பு
கடகம்-கங்கணம்
கடமை-வரி, குடிமக்கள் அரசர்க்குச்
செய்யும் உரிமை
கடன்-கடமை, கடப்பாடு (கடமைப்
பட்டிருத்தல்)
கடா-எருமைக்கடா
கடிகை-நாழிகை, உண்கலம்
கடுகி(வி)-விரைந்து
கடு-பாம்பு, நஞ்சு
கடைசியர்-மருதநிலப்பெண்டிர்
கண்டம்-கழுத்து
கண்டசித்தி-ஆசுகவி சொல்லும்
வல்லமை
கண்டிகை-கழுத்தணி வி 77
கண்ணி-பெண், வலை
கண்ணுதல்-நுதற்கண்-நெற்றியில்
கண்ணையுடைய சிவபெருமான்
கண்பகம் 2346
கணபதி-விநாயகன்
கணம்-கூட்டம்
கணை-அம்பு
கத்தறிந்து-கற்றறிந்து
கத்தன்-கர்த்தன்-சிவன்
கத்திலங்கும்-கற்றிலங்கும்

கத்தூரி-கத்தூரி விலங்கு, மான்மதம்
கதம்பப் பொடி-நறுமணப்பொடி
கதலி-கதலி வாழை
கதலித் தண்டு-வாழைத்தண்டு
கதனம்-கடுமை, வேகம், போர்
கதிமை-நிலை, ஆற்றல், கனம் 3643
கதிர்-ஒளி
கதை-பெரிய சரிதம், பெருங் கதை,
தண்டாயுதம்
கந்தம்-மணம்

கந்தமூலங்கள்-கிழங்கு வேர் கனிகள்
கந்தரம்-கழுத்து
கப்பம்-திறை, குறுநில மன்னர்
செலுத்தும் காணிக்கை
கபடம்-வஞ்சகம்
கபாடம்-கதவு
கபாலி-கபாலத்தையுடைய சிவன்
கபோலம்-கன்னம்
கம்பக் கடகளிறு-விநாயகன்
கமண்டலம்-முனிவர்கள் நீர் வைத்
திருக்கும் ஒருவகைப் பாத்திரம்
கமலம்-தாமரை
கமலை வி 135
கமுகு-பாக்குமரம்
கய்யேத்திருக்கும்-கையேற்றிருக்கும்
கயல்-மீன்
கயற்கண்ணி-மீனாட்சி
கயிலை-கயிலாய மலை
கர்ணன்-கொடையளித்தலில் பெயர்
பெற்ற அரசன்
கரகம்-கமண்டலம்
கரங்கள்-கைகள்
கரடம்-யானையின் மதம், யானை
கரண சாதினை-கலவி வி 81
கரம்-கை
கரவு-வஞ்சனை
கரி-யானை
அ.ரி-100

கரிச்சான்-கரிக்குருவி
கரிசனம்—அன்பு, அக்கறை, பரிவு
கரியின் கோடு—யானைத் தந்தம்
கரியுரி—யானைத்தோல்
கருதலர்—பகைவர்
கருப்பம்—கருக்கொண்டிருத்தல்
கருமம்—செயல், வினைப்பயன்
கல்கரடு 3473
கல்யாணி—நற்குணமுடையவள்
கல்லை—இலையாற் செய்த
உண்கலம், தொன்னை
கலம்— அணிகலன், உண்கலம், ஒரு
முகத்தலளவை
கலவி—புணர்ச்சி
கலி—துன்பம், வறுமை, கலியுகம்
கலியுகம்—நான்கு யுகங்களுள்
கடைசி யுகம்
கலை—மான், ஆடை, மேகலை
என்னும் அணி, (அறுபத்துநான்கு)
கலை
கலைக்கோட்டு மாமுனி 1531
கவ்வை—ஒலி, துன்பம்.
கவண்—கல்லெறியும் கருவி
கவந்தம்—தலையற்ற உடல், பேய்
கவரி—சாமரை
கவளம்—வாயளவு கொண்ட உணவு,
யானைக்கு அளிக்கும் உணவு
கவி—குரங்கு, கவிதை
கவிகை—குடை—வெண் கொற்றக்
குடை
கவின்—அழகு
கவுசிகன்—விசுவாமித்திரன்
கவுதமர் 1533
கவுந்தி 3295
கவுமாரி—பார்வதி, சத்தியின் ஓர்
அவதாரம்
கழத்தி (வி)—கழற்றி
கழி—மரக்கொம்பு, ஆயுதக் காம்பு

கழைத்தொழில்—மூங்கிற் கழியை நட்டு அதன்மேல் நின்றாடும் தொழில்
கள்—தேன், வண்டு
கள்ளி—கள்ளச்செயல் புரியும் பெண்
களபம்—கலவைச் சாந்து, மணப் பொருள்
களவின் சூத்திரம்—திருட்டுத் தொழிலின் நுட்பம்
களவு—திருட்டு
களி—மகிழ்ச்சி
களிறு—ஆண் யானை
கற்பகம்—தேவருலகத்து ஐந்து தருக்களுள் ஒன்று, நினைத்ததை, வேண்டியதையெல்லாம் தரும் மரம்
கற்பணிதி—கல் பணிதி. பணிதி—வேலை, அலங்கரிப்பு. கற்பணிதி—கல்லால் செய்யப்பட்டது
கற்புடைய மானார்—கற்புடைய பெண்கள்
கறவு—கறவைப்பசு
கறி—மரக்கறி
கறிக்காவடி—இறைச்சியை எடுத்துச் செல்லும் காவுதடி
கன்றினிய—கண்டினிய—கற்கண்டின் இனிய
கன்னல்—கரும்பு
கன்னோசி—சந்திரமதியின் தந்தை மதிதயன் ஆளும் நாடு
கனகம்—பொன்
கனலோன்— அக்கினிதேவன்
கா—காடு, சோலை
காங்கயன்—காங்கேயன்—முருகன்
காசலை 2824
காசி மகாரிசி 1531
காசினி—பூமி
காசு—பொன்
காஞ்ச—காய்ந்த
காடை—ஒரு வகைப் பறவை, குறும்பூழ்
காத்து—காற்று
காதர்—ஏழரை நாழிகை வழித் தொலைவு
காதல் மகன்—அன்பு மகன்
காதிப் பயின்றெடுத்த 3498
காதோலை—மகளிர் காதணி
காந்தள் மலர்—சிவந்த மலர்
காப்பு—தெய்வ வணக்கம், நூல் இனிது முடியத் தெய்வம் காக்க வேண்டும் எனப்பாடுதல்
காம கலாபக் குயில் 1290
காமதேனு—தேவலோகப் பசு, வேண்டியது நல்கும் பசு
காமன்—மன்மதன்
காமனைக் காய்ந்தோன்—சிவன்
காமாக்கினி ருத்திரன் 2203
காமுகவேள்—மன்மதன்
காமுகன்—காம இச்சை மிகுந்தவன், மன்மதன்
காயம்—உடல், அடிபட்டதனால் உண்டான புண்
காயா—காசா மரம் 363
கார்—கருநிறம். மேகம்
கார்க்கோடகன்—எட்டு நாகங்களுள் ஒன்றான கடவுட் பாம்பு
காராக்கிர வங்கிஷம் 4286
காரிகை—பெண்
காரிகையார்—பெண்கள்
காரும்—காப்பாற்றும்
காரை—காட்டுச்செடி வகை
காலதூதன்—பாம்பின் நான்கு பற்களுள் ஒன்று
காலன்—எமன்
காலாழி—கால்விரல் மோதிரம்
காலாக்கினி—காலத் தீ
காலி—பசு, பூனைக்காலி

காலிகறவு 3019
காவடி—பொருளை எடுத்துச் செல்லப் பயன்படும் காவுதடி
காவணம்—மண்டபம், சோலை
காவலவன்—அரசன்
காவலன்—அரசன்
காவி—ஆடையிலேறும் பழுப்பு, காவி நிறம்
காவுகனி—சோலையும், கனியும்
காளம்—ஊதுகொம்பு
காளாத்திரி—பாம்பின் நான்கு பற்களுள் ஒன்று
காளி—காளிதேவி பாம்பின் நான்கு பற்களுள் ஒன்று
காளி காளாத்திரி யமன் காலதூதன்-பாம்பின் நான்கு நச்சுப்பற்களின் பெயர்
காளையர்—இளைஞர்
காற்குர்—காக்கும்
காறை—மாதரும் குழந்தைகளும் அணியும் கழுத்தணி
கானகம்—காடு
கானவர்—காட்டில் வாழும் வேடர்
கிஞ்சுகம்—கிளி
கிடா—கடா—எருமைக் கடா
கிண்கிணி—சதங்கை
கிம்புரு 245
கிரணம்—ஒளி, கதிர்
கிரி—மலை
கிருபை—அருள்
கிலுக்குத் தண்டு 4686 (அஞ்சலெடுத்துச் செல்வோர் கையில் கொண்டு ஒலிசெய்யும் தடி)
கிலேசம்—துன்பம்
கிள்ளை—கிளி
கிள்ளைமொழி—கிளிப்பேச்சு
கின்னரம்—வீணை, கின்னரர்களால் இசைக்கப்படும் இசை
கீதம்—இசைப்பாட்டு, இன்னிசை
கீர்த்தி—புகழ்
குக்கல்—நாய்
குக்கில்—சகோரம், செம்போத்து (பறவை வகை)
குங்கிலி மரம்—குங்கிலிய மரம்
குச்சு—கொண்டையூசி, ஒரு காதணி, கழுத்தணி வகை, சீலையின் முன்மடி வி 67
குசை—தருப்பைப் புல்
குஞ்சரம்—யானை
குடதிசை—மேற்குத் திசை
குடர்—குடல்
குடை—வெண்கொற்றக் குடை
குண்டலி வி 134
குண்றி—குன்று 924
குணக்கு—கிழக்கு
குணதிசை—கிழக்குத் திசை
குணால விழி—குண+ஆல+விழி ஆலம்—நஞ்சு
குத்தம்—குற்றம்
குதை—அம்பு
குப்பல்—குவியல், கூட்டம்
கும்பம்—கலசம்
கும்ப மகம் 54
கும்மி—மகளிர் கைகொட்டிப் பாடியாடும் கூத்து, கும்மிப் பாட்டு
குமட்டி வி 69
குமாரசுவாமி 45
குமிழ்—குமிழ மலர்
குமிழ மலர்—ஒருவகை மலர்
குயில்பேடை—பெண் குயில்
குரண்டம்—கொக்கு வகை
குரவை—மகளிர் கைகோத்தாடும் கூத்து, மகிழ்ச்சி ஒலி
குரிசில்—பெருமையிற் சிறந்தோன், தலைவன்
குருதி—இரத்தம்

குருநிந்தனை—ஐம்பெருங் குற்றங்
களில் ஒன்றாகிய குருவைப்
பழித்தல்
குருளை—இளமை, ஒருசார்
விலங்கின் குட்டி
குலவை—குரவை, மாதர் வாயால்
செய்யும் ஒருவித மங்கல ஒலி
குலிசாயுதன் படை—வச்சிராயுதம்,
குலுக்கை—குதிர்
குலை—கொலை
குவலயத்தார்—பூமியில்
வாழ்பவர்கள்
குவலயம்—பூமி
குவளை—ஒருவகைப் பாண்டம்,
கருங்குவளைப்பூ 318
குழல்—கூந்தல்
குழவி-குழந்தை
குழை-மகளிர் காதணி, காது
குழைவு 2538
குளம்—நெற்றி
குறங்கு—தொடை
குறுமுனி அகத்தியர் 1536
குன்னி 1899
கூகை—கோட்டான், பேராந்தை
கூடல் இழைத்தல்—தலைவனைப்
பிரிந்த தலைவி அவன் வரும்
நிமித்தம் அறியத் தரையில்
சுழி வரைதல்
கூண்டபகல் 247
கூண்டபடி 134
கூண்டபல 1053
கூண்டபாரம் 1133
கூண்டுநாம் 2783
கூண்டுவெட்ட 4796
கூத்தன் 2274
கூத்துவன்—கூற்றுவன்—எமன்
கூழைக் கிடா—நீர்வாழ் பறவையுள்
ஒன்று
கூளி—பேய்
கூறை—ஆடை
கெங்கா நதி—கங்கை நதி
கெந்தம்—கந்தம்—மணம்
கெவுரி—கௌரி—பார்வதி
கெவுரி விலாசம் 2791
கெவுளி பாத்திரங்கள்—கௌளி
பாத்திரங்கள்—மஞ்சள் நிறத்
தேங்காய்கள்
கெளிறு—கெளிற்று மீன்
கெற்பம்—கர்ப்பம்
கேசகமின் 117
கேசகிரி 400
கேசரி-சிங்கம்
கேசவன்—கண்ணபிரான், திருமால்
கேள்வன்-கணவன
கைவிசித்து (வி) 2344
கொங்கு—பூந்தாது, மணம், தேன்
கொங்கை—மார்பகம்
கொச்சை—இழிந்தவன் வி 34
கொட்டை 2502
கொட்டம்-மாட்டுத்தொழுவம்
கொட்டி—நீர்க்கொடிவகை
கொடுங்கைமணி 706
கொடை—ஈகை, உதவிப்பொருள்
கொண்கன்—கணவன்
கொண்டை—மகளிர் கூந்தலைத் திர
ளாகச் சேர்த்துக் கட்டும் முடிவகை
கொத்தவன்-கொற்றவன்-அரசன்
கொந்தளப்பொன் 1076
கொந்து-பூக்கொத்து, கொத்து, திரள்
கொப்பரை-கருப்புச்சாறு, எண்ணெய்
முதலியவற்றைக் காய்ச்சும் பெரிய
கொப்பரை
கொப்பு—மாதர் காதணிவகை
கொம்மை-திரட்சி, மார்பு, இளமுலை,
கொலு—அரசசபை [வலிமை
கொவ்வை—கோவை[ப்பழம்]

கொழுநன்—கணவன்
கொள்கடமை—வரி, குடியிறை
கொறவர்—குறவர்
கோ—மன்னன்
கோகனகம்—தாமரை, செந்தாமரை
கோகிலம்—குயில்
கோகு—கழுதை
கோங்கு—மரவகை
கோசலம்-பசு மூத்திரம்
கோசிகன்-விசுவாமித்திர முனிவர்
கோட்டம்-மாறுபாடு, வளைவு
கோட்டான்-கூகை
கோட்டி-துன்பம், பைத்தியம், பேச்சு
கோடு-மரக்கொம்பு, விலங்கின்
கொம்பு
கோதண்டபாணி-கோதண்டத்தைக்
கையில் கொண்டவனான இராமன்
கோதண்டம்-வில்
கோது-குற்றம், பயனின்மை
கோதை-பெண்கள் தலைமயிர், பெண்
கோதைபங்கன்-சிவன்
கோந்தி-தூங்கு 1764
கோமகன்-அரசன்
கோமளை-பார்வதி வி 134
கோமான்-அரசன்
கோரம்—கொடுமை
கோலம்-எழில், அழகு, வாசலில்
போடும் கோலம்
கோவி-கோபி-கோபம் உடையவள்
கோழிக்கொடி-முருகனின் கொடி
கோள்-பாம்பு, நஞ்சு 3534, 3957
கோளரி-சிங்கம்
கோளை 2182, 4714
கோன்-அரசன்
சக்கரபத்தி-சக்கரவர்த்தி
சக்கரியான் 2245
சகடம்-வண்டி

சகடு-வண்டி
சகலாத்து-ஒரு கம்பளித் துணி
வகை 1907
சகாயம்-துணை, உதவி
சங்கரன்-சிவன்
சங்கரனார்-சிவன்
சங்கரி-பார்வதி
சங்கம் மூன்றுக்கரசு 8
சங்கை-எண்ணம், வழக்கம்
சசிகொழுநன்—இந்திரன்
சட்டை-உடம்பு
சடம்-உடம்பு
சடலம்-உடம்பு
சடிதி-சடுதி-விரைவு
சடிலம்-சடையாக அமைந்த
மயிர்முடி
சடுதி-விரைவு
சடைமுடியான்-சிவன்
சண்டன்-எமன்
சத்தகடல்-சப்தகடல்-ஏழுகடல்
சத்தகன்னிமார்-அபிராமி,
இந்திராணி, கௌமாரி, காளி,
நாராயணி, மயேசுவரி, வராகி
எனும் ஏழு மாதர்கள்
சத்தி-பார்வதி, ஆற்றல்

சத்தியகீர்த்தி-அரிச்சந்திரனின்
முதல் அமைச்சர்
சத்தியலோகம்-மேலேழு லோகத்
துள் பிரமன் வசிக்கும் உலகம்
சத்திரியர்-அரச வகுப்பினர்
சத்தே-சற்றே
சதகோடி-நூறுகோடி
சதந்தலை-நூறுதலை
சதுர்-நான்கு
சந்ததி-வழித்தோன்றல், மரபு, மகன்
சந்திரமதி-அரிச்சந்திரனின் மனைவி

சந்திரோதயம்-நிலவின் உதயம்
சப்பாணி-கை சேர்த்துக்கொட்டுதல், பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஒரு பருவம்
சப்ர மஞ்சனை-சப்ர மஞ்சம்-மேற் கட்டமைந்த அலங்காரக்கட்டில்
சபதம்-சூளுறவு, பந்தயம்
சம்ப்ரமம் வி 75
சம்பா -எலுமிச்சை
சம்பு-நரி
சமிதை-வேள்விக்குரிய சுள்ளி விறகு
சமுதாடு 4683
சய்யோத்தி-சையோத்தி-இணக்கம்
சயிலம்-சைலம்-மலை
சர்ச்சை-விவாதம், சொற்போர்
சர்ப்பம்-பாம்பு
சரசுநதி-சரயுநதி
சரசோதி-சரசுவதி
சரணம்-பாதம்
சரம்-மாலை
சரி-கைவளை
சரிகைவளை 1148
சருவாபரணம்-சர்வ ஆபரணம்
சருவி(வி)-பழகி, கொஞ்சிக் குலாவி
சல்லாபம்-சரசப் பேச்சு
சலதாரை-சாக்கடை, நீர்க்கால்
சலம்-தண்ணீர்
சவளம்-குந்தாயுதம்
சவாது-ஒருவகை மணப்பொருள்
சற்பனை-சர்ப்பனை-வஞ்சனை
சறாளிகை மண்டபம் வி 56
சன்னையுடன்-சமிக்கையுடன் 4172
சனகர் 1541
சாகை-ஜாகை-இருப்பிடம்
சாஞ்சு (வி)-சாய்ந்து
சாடை-சைகை, சாயல்
சாத்துமொழி-சாற்றுமொழி
சாத்துவார்-சாற்றுவார்
சாதுரங்கச்சாவடி 273 (சாதுரங்கம்-நால்வகைப்படை, மாணிக்கவகை)
சாதுரங்கச்சேனை-நால்வகைப்படை
சாதுவரிக் கல்வயிரம் 158
சாந்தம்-அமைதி
சாந்து-சந்தனம்
சாம்பான்-பறையர் பட்டப்பெயர், இங்கு அரிச்சந்திரனை விலைக்கு வாங்கிய புலையன்.
சாம்புனதப்பொன்-நால்வகைப் பொன்னுள் ஒன்று
சாமம்-ஏழரை நாழிகைகொண்ட காலம்
சாமரை-கவரிமான் மயிரால் அமைந்த அரசசின்னம்
சாமவேதம்-மூன்றாம் வேதம்
சாமுண்டி-துர்க்கை, காளி, பார்வதி
சாய்கை—ஜாகை—இருப்பிடம்
சாய்கை-சாயல்-அழகு, நிறம்
சாருங் கவுருந் தலைக்கரடி 2068 (கரடியைக் குறிக்கும் இன்னொரு சொல்-கவிழ்தலை)
சால்-நீர் நிரப்பும் பானை
சால-மிகவும்
சாலம்-கூட்டம், பெருமை
சாலி-செந்நெல், நெற்பயிர்
சாவடி-வழிப்போக்கர் தங்குமிடம் 3885
சாவம்-சாபம்-முனிவர்கள் சினந்து கூறும்மொழி
சிக்கம்-மெலிவு 5091
சிகை-குடுமி
சிங்காரம்-அலங்காரம்
சிட்ட பரிபாலனம்-நல்லோரைக் காத்தல்
சிண்டு-குடுமி
சித்தம்-மனம்
சித்தி-கைகூடுகை, அற்புதவன்மை

சித்திடை-சிற்றிடை
சித்திரம்-ஓவியம்
சித்தில்-சிற்றில்-பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பருவங்களுள் ஒன்று
சித்தெறுப்பு-சிற்றெறும்பு
சிந்தாக்கு-கழுத்தணி வகை
சிந்தூரம்-நெற்றியில் அணியும் ஒருவகைச் சிவப்புப்பொடி
சிந்தை-மனம்
சிரசு-தலை
சில்லான்-சிறு ஓணான், கறையான்
சிலத்தை 4814
சிலம்பம் 2053, 2235 [சிலம்பம்-கழி வீசுதல் முதலிய படைக்கலப் பயிற்சி, சூழ்ச்சித்திறன், சிலம்பங் காட்டுதல்-அச்சுறுத்துதல்]
சிலம்பு-காலில் அணியும் அணி
சிலை-வில், கல்லிற் செதுக்கிய உருவம்
சிலைவேள்-கரும்பு வில்லையுடைய மன்மதன்
சிவசங்கரி-பார்வதி
சிவிகை-பல்லக்கு
சிறுதேர்-பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பருவங்களுள் ஒன்று
சிறுபறை- ,,
சிறுமை-இழிவு, கயமைத்தனம்
சின்னம்-காளம்-ஊதுகொம்பு
சினை-கருப்பம்
சீசன்-சீடன் (சீஷன்-சீடன்)
சீத்தம்-சீற்றம்
சீதமதி-குளிர்ந்த நிலவு
சீதளம்-குளிர்ச்சி
சீதனம்-மணமகள் கொண்டுவரும் சீர்வரிசை
சீமை-நாடு
சீர்-சிறப்பு
சீலம்-நல்லொழுக்கம்
சீலை-துணி
சீவன்-ஜீவன்-உயிர்
சுக்கிரன்-வெள்ளிக்கோள், அசுரகுரு இங்கு, அரிச்சந்திரனுடன் சென்று பொன் வாங்கிவர விசுவாமித்திரரால் அனுப்பப்படுகின்றவர் இவர்.
சுகந்தம்-நறுமணம்
சுரிட்டம் 5184
சுட்டி-குழந்தைகளும் மகளிரும் நெற்றியிலணியும் அணி
சுடலை-சுடுகாடு
சுண்ணம்-நறுமணப்பொடி
சுணங்கன்-நாய்
சுணங்கு-நாய், அழகுத்தேமல்
சுதன்-மகன்
சுதைமதி-வெண்மதி [மதி-சந்திரன்]
சுந்தரம்-அழகு
சுந்தரி-சந்திரமதியின் தோழி; சந்திரமதியின் பணிப்பெண்களில் தலைமையானவள், இந்திராணி, அழகிய பெண், பார்வதி.
சுந்திரம்-சுந்தரம்
சுரக்காலம்-சரற்காலம்-மழைக் காலம் 2790
சுரபி-காமதேனு
சுரம்-பாலைநிலம், காடு
சுரவி-சுரபி-பசு-காமதேனு
சுரவிக் குறளை-சுரவிக் குருளை-பசுக்கன்று
சுருதி-வேதம்
சுருபம்-சுரூபம்-நல்லுருவம், வடிவம்
சுவறுதல்-வற்றுதல்
சுறுக்காய்-விரைவாக, வேகமாக 3250
சுனை-மலையூற்று, குகையிலுள்ள நீர்நிலை, நீர்நிலை
சூடகத்தோர் பாண்டம்-பெண்களின் உடல் (சூடகம்-கைவளை, சூடகத்தோர்-கைவளையணிந்த பெண்டிர்)

சூத்திரம்-தந்திரம்
சூத முனிவர் 1530
சூது-சூதாடு கருவி, தாமரை
சூதை-மாம்பூ
சூரர்-சூர்த்தனம் கொண்டோர்
சூரி-மாகாளி, கொடியவள்
சூரை-ஒரு செடி வகை
சூலம்-மூன்று முனைகளையுடைய ஆயுத வகை
சூலி-சூலப்படை தரித்த துர்க்கை
சூஷ்த்திரம்-நுண்ணியவேலை, தந்திரம்
செகம்-உலகம்
செகமண்டலோகம் 3633
செகமோகனம் 1093
செகுத்தல்-வெல்லுதல், கொல்லுதல்
செங்கமலத்தாள்-திருமகள்
செங்கமலம்-செந்தாமரை
செங்கீரை-பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பருவங்களுள் ஒன்று
செங்கை-சிவந்த கை
செச்சை 277, வி 67
செஞ்சாந்து-குங்குமம், சந்தனக் கலவை, காவி (கோலம் போடப் பயன்படுவது)
செந்திரு-இலக்குமி, திருமகள்
செந்து-ஊர்வன முதலிய உயிரி
செப்பு-செம்பு, சிமிழ், நீர் வைக்கும் குடுவை
செம்பியோன்-செம்பியன்-சிபியின் வழிவந்த சோழன்
செம்போத்து-ஒரு பறவை வகை
செம்மல்-பெருமையிற் சிறந்தோன், தலைவன்
செம்மி (வி) 1689
செய்ய-சிவந்த
செய்யாள்-திருமகள்
செய்யான்-ஒரு பூரான் வகை
செய்யிழை-பெண் 3612
செயங்கொண்டார் 1534
செயம்-வெற்றி
செயமாமுனி 1529
செல்வி-அருமைப்பெண் 4816
செல்வன்-சிறுவன், பிள்ளை, மகன்
செவ்வரி-கண்ணிலுள்ள சிவந்த கோடு
செவ்வேள்-முருகன்
செவ்வை-நேர்மை, சரியான நிலை
செவி-காது
செள்ளு-தெள்ளுப்பூச்சி, உண்ணி வகை
சென்னல்-செந்நெல்
சென்னி-தலை, உச்சி
சேட்டை-சேஷ்டை-குறும்பு
சேடன்-ஆதிசேடன்
சேடியர்-தோழியர், ஏவல் செய்யும் பெண்கள்
சேய்-குழந்தை, மகன்
சேயோன்-குமரன்-முருகன்
சேர்வை-மகளிர் காதணி வகை
சேரி-புலையர் வசிக்கும் இடம்
சேல்-மீன்
சேவல் அன்னம்-ஆண்-அன்னம்
சேவுகர்-சேவகர்
சேனை-(நாற்)படை
சைகை-சமிக்ஞை, சாடை
சையோகம்-புணர்ச்சி
சொக்கநாதன்-சிவன்
சொக்கர்-சிவன்
சொடிவு வி 113
சொப்பனம்-கனவு
சொர்ணம்-பொன்
சொல்பிரட்டு வஞ்சன் 1577
சொன்னம்-பொன்
சோகு 1701

சோடங்கிக் காது 1927
சோடினை-சோடனை-அலங்காரம்
சோதி-ஒளி, பெண்
சோதியிடப் பாகன்-சிவன்
சோதினை-சோதனை
சோபம்-துன்பம்
சோமன்-சந்திரன்
சோரம்-களவு, வஞ்சனை
சோரமனம்-வஞ்சமனம் 3155
சோரன்-திருடன், ஏமாற்றுவோன்
சோரி-இரத்தம்
சோலி-செயல், வேலை 4020
ஞமலி-நாய்
ஞாயிறு-சூரியன்
ஞாலம்-உலகம்
ஞாழமரம்-குங்கும மரம், கோங்கு மரம்
ஞாளி-நாய்
ஞானம்-அறிவு
டாகினி-காளியேவல் செய்வோள், சுடுகாட்டில் பிணங்களைத் தின்னும் பேய்
தக்கோலம்-தாம்பூலம்
தங்கச்செப்பு 425
தங்கப் பாளம்-தங்கக்கட்டி
தஞ்சம்-அடைக்கலப்பொருள்
தட்சணம்-தெற்கு
தட்டழிந்து (வி)-நிலைகுலைந்து
தடங்கள்-காலடிச் சுவடுகள்
தடம்-பாதை, பொய்கை (நீர்நிலை), காலடிச்சுவடு
தண்டி சுரா (தண்டி-யமன்) 4782
தண்டை-மகளிர் கால் அணியில் ஒன்று
தத்தை-கிளி
தந்தம்-பல்
தந்தி-யானை
தந்திமுகம்-யானைமுகம்
தந்திமுகன்-யானைமுகன், விநாயகன்
தந்திரி-மந்திரி
தப்பறை-(தவறு, கெட்ட சொல்) 3914
தமர்-உற்றார், தமக்கு வேண்டியவர்
தமரகம்-உடுக்கை (ஓசையெழுப்ப உதவும் கருவி)
தமனியம்-பொன்
தயவு-அன்பு, அருள்
தயாபரமன்-அருள்மிக்க பெரியோன், கடவுள்
தரணி-பூமி
தரளம்-முத்து
தரிசிமணி 1150
தரு-மரம்
தலம்-இடம்
தலைக்கடை-முதல் வாசல்
தலையாரி-ஊர்க்காவற்காரன்
தவசு-தவம்
தவணை-காலக்கெடு
தழல்-நெருப்பு
தழலோன்-அக்கினிதேவன்
தழுவணை-பக்கத்தில் அணைத்துக் கொள்ளும் பஞ்சணை, திண்டு
தளம்-படை
தன்மர்-தருமர்
தன்றுபன்றி 2018
தனம்-கொங்கை, செல்வம்
தனயன்-மகன்
தாசன்-அடிமை, பக்தன்
தாட்டிமை-பெருமிதம்
தாடாண்மை-மேன்மை 5206
தாடாளன்-மேன்மையுள்ளவன், பெருமுயற்சியுடையவன்
தாடு-வலிமை வி 69
தாடை அலகு 2156, 3168
தாண்டவம்-கூத்துவகை
தாணு-சிவன்

தாதியர்-பணிப்பெண்கள்
தாதை-தந்தை
தாப்பு 3982
தாபம்-தாகம், வெப்பம், துன்பம்
தாமசம்-தாமதம்
தாமம்-பூமாலை
தாயத்து-தாயிந்து-அணிவகை
தார்வேந்தன்-படைச்சிறப்புமிக்க வேந்தன்
தாரணி-பூமி
தாரம்-மனைவி
தாரா-நாரை வகை, வாத்து வகை
தாராட்டு-தாலாட்டு
தாருகனைக் காய்ந்த வித்தகி-பார்வதி, காளி
தாரைகொள்ளல்-நீர்வார்த்துக் கொடுக்கத் தானமாய்ப் பெறுதல்
தாரைவார்த்தல்-நீர்வார்த்துத் தானமாய்க் கொடுத்தல், நீர் வார்த்துக் கொடுத்து மகளை மணஞ்செய்து கொடுத்தல்
தாலம்-உலகம், பூமி
தாலாட்டு-குழந்தைகளை உறங்கச் செய்வதற்காகப் பாடல் பாடுகை, பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பருவங்களுள் ஒன்று
தாவடம்-தாழ்வடம்-கழுத்தணி
தாள்-பாதம்
தாளிணை-இரண்டு பாதங்கள்
தானம்-கொடை
தானவர்-தனு என்பவளின் வழிவந்த அசுரர், வித்தியாதரர்
தானை-படை
திக்கு-திசை
திகிரி-சக்கரப்படை, உருளை
திங்கள்-சந்திரன், மாதம்
திசை முகத்தன்-நான்முகனான பிரமன்
திட்டி-திருஷ்டி-பார்வை
திட்டை-உரல்
திடமுத்த-திடமுற்ற
திண்ணம்-உறுதி
திமிலை-ஒரு பறை வகை
தியக்கம்-அறிவுக் கலக்கம், மயக்கம்
தியங்கி (வி)-வருந்தி, மயங்கி
திரவியம்-பொருள், பொன்
திரிசங்கு-அரிச்சந்திரனின் தந்தை
திரிபுராந்தகன்-முப்புரம் எரித்த சிவன்
திரியம்பகன்-மூன்று கண்களை யுடைய சிவன்
திரியம்பிகை-திரியம்பகி-திரியம்பகன் மனைவியாகிய சக்தி
திரு-திருமகள், இலக்குமி
திருமங்கையூர் 56
திருமால்-விஷ்ணு
திரேகம்-தேகம்-உடல்
திரை-அலை
தில்லைநடநாதன்-சிவன்
தில்லையாட்டீசன்-சிவன் 1732
திலதம்-திலகம்
திறல்-வலிமை, வெற்றி
தீபுரம் 3188
துகில்-ஆடை
துகை-தொகை
துங்கம்-உயர்வு, பெருமை
துட்டம்-தீமை, கொடுமை
துட்டன்-தீயோன்
துட்டி-கெட்டவள்
துட்பாண்டம் — கெட்ட பாத்திரம், கொள்கலம் 4732
துடக்கு-சம்பந்தம் 4866
துடி-உடுக்கை (ஓசையெழுப்ப உதவும் கருவி)
துடை-தொடை
துந்துமம்-ஒரு வகைப் பறை

துந்துமி-பேரிகை
தும்புரு-ஒரு கந்தருவன்
தும்பைச் சடைமுடியான்-சிவன்
துய்ய-தூய
துய்யவர்-தூய எண்ணமுடையவர்
துருவாச மாமுனி 1535
துலை-தோட்டம், தூரப் பிரதேசம்
துழாய் மாலை-துளசி மாலை
துளபம்-துளசி
துற்சணங்கள்-தீய தன்மைகள் 1565
துன்மொழி-தீய மொழி
துன்று (வி)-நெருங்கு
துன்னிய-நெருங்கிய, அடர்ந்த
துன்னுதல்-நெருங்குதல்
தூங்கு(வி)-தொங்கு, வாடு
தூசனம்-நிந்தைச்சொல்
தூசு-ஆடை
தூத்தன்-தூர்த்தன்-வஞ்சகன், கொடியவன்
தூமகேது-வால்வெள்ளி, தீமைக்குறி
தூர்த்தன்-கொடியவன்
தூரி-தூரியம் என்னும் ஒரு வாத்திய வகை
தூவல் வி 92
தூளி-குதிரை 2054
தூளிதம்-புழுதி, பொடிக்கப்பட்டது
தெக்கு-தெற்கு
தெங்கு-தென்னைமரம்
தெண்டனிடல்-விழுந்து வணங்குதல்
தெண்டு-கோல்
தெய்வக்கூறு-தெய்வத்தின் சோதனை, செயல் 3806
தெய்வகுஞ்சரி-தெய்வானை, முருகனின் மனைவி
தெய்வயானை-முருகனின் மனைவி
தெய்வேந்திரன்-தேவேந்திரன்
தெரிவை-மகளிரின் எழுபருவ நிலைகளுள் ஒன்று, பெண்
தெள்ளுதலிர் 4298
தென்மலை 46
தேக்கிலை-தேக்கு மரத்தின் இலை
தேகம்-உடல்
தேசிகர்-குரு, ஆசான்
தேட்டம்-சம்பாத்தியப் பொருள், சேகரிப்பு
தேனார்-தேன் போன்ற இனிமை தரும் சொல் பேசும் பெண்கள்
தேனு-பசு
தையல்-பெண்
தைலம்-எண்ணெய் வி 37
தொங்கல்-அணிகலத் தொங்கல்
தொடை-மாலை
தொண்டி-தொண்டு செய்பவள், அடிமை
தொண்டை-ஆதொண்டைக்கொடி (யின் கனி)
தொப்புள்-கொப்பூழ்
தொல்லை மகுடம்-தொன்மை பொருந்திய மகுடம்
தொழு-மாட்டுக் கொட்டில்
தொனிப்பிரங்கள்-வி 72
தோகை-தோகையையுடைய மயில் போன்ற சாயலை உடைய பெண்
தோசம்-தோஷம்-குற்றம்
தோத்திரம்-புகழ்ச்சி, வணக்கமொழி, துதி
நக்கர்-[நக்கன்-சிவன்] 5198
நகர்-நகரம்
நகரி-நகர்
நங்கை-பெண்
நச்சு-நஞ்சு
நசை-ஆசை, குற்றம்
நஞ்சை பிஞ்சை-நன்செய் நிலம் புன்செய் நிலம்
நட்டுவக்காலி-நட்டுவாக்காலி-கவ்விக்கொட்டும் தன்மையுள்ள ஒரு சிற்றுயிரி வகை
நடக்கை-தண்டனை, தீர்ப்பு 4672

நடம்-நடனம்
நடை-வாசல், இடைகழி
நடைப்பரிச்சை வி 71
நணுறு-தல்—பொருந்துதல், கிட்டுதல்
நதி-ஆறு
நந்தர் 3500
நந்தா வரங்கள்-கெடா வரங்கள், மறையா வரங்கள்
நமா-நம-வணக்கம்
நயனம்-கண்
நரகம்-உயிர்கள் தீவினையின் பயனை நுகரும் இடம், பாதாள உலகம்
நரகு-நரகம்
நரபதி-அரசன்
நரர்-மாந்தர்
நலகிரி 1916
நவ்வி-பெண்மான், இளமை, அழகு
நவ்வு-தல்-முழுதும் நம்புதல்
நவம்-புதுமை, ஒன்பது
நள்-இரவு, இருள்
நள்ளி-நண்டு
நளபாக வர்க்கவிரை—உணவுக்குப் பயன்படும் தானியங்களின் விதை 96
நளினம்-தாமரை, அழகு, இங்கிதம்
நளின மலர்—தாமரை மலர்
நளின மலர்ப்பதம்—தாமரை மலர் போன்ற பாதம்
நற்றவரே!-நல்ல தவத்தை உடையவரே!
நன்னுதல்-அழகிய நெற்றியை உடைய பெண்
நாகச்சின்னம்—நாகசின்னம்-நாககரம்-துளைக்கருவிவகை, ஓர் இசைக்கருவி
நாகம்-பாம்பு
நாகரீகம்-நாகரிகம்-செப்பம் 1091
நாசி-மூக்கு
நாட்டமுத்து (வி)-நாட்டமுற்று
நாத்தம்-நாற்றம்
நாத்திசை-நாற்றிசை
நாதன்-தலைவன், இறைவன், சிவன்
நாமம்-பெயர்
நாமாது-கலைமகள், சரசுவதி
நாயகன்-தலைவன்
நாயாத்துக்கு-ஞாயிற்றுக்கு(?) 1091
நார்ச்சசி-அன்புமிகு இந்திராணி
நாரணி-துர்க்கை
நாரதர்-பிரமபுத்திரராகிய பெரு முனிவர்
நாராயணன்-திருமால்
நாரி-பெண்
நாரிபங்கன்-சிவன்
நாரை—ஒரு பறவை, கொக்கு வகை
நாலெட்டறம்-முப்பத்திரண்டு அறம்
நாவில் இலங்கும் நயமான தேவி-சரசுவதி
நாவு-நாக்கு
நாழிகை-அறுபது வினாடி கொண்ட கால அளவு
நான்முகன்-பிரம்மா
நானிலம்-உலகம், வையகம்
நிக்கிரகம்-அழிக்கை
நிக்குமிடம்-நிற்குமிடம்
நிச்சயம்-உறுதி
நிணம்-கொழுப்பு, ஊன்
நித்தம்-நாள்தோறும்
நித்தன்-சிவன்
நித்திய கர்மம்-சாத்திரங்களால் விதிக்கப்பட்ட தினசரி கருமங்கள்
நித்திரை-உறக்கம்
நிதம்பம்-அல்குல், பிருட்டம்
நிதானம்-உறுதி செய்தல், பொறுமை, தீர்மானம்

நிதி-செல்வம்
நிமலி – நிமலை—களங்கமற்ற
பார்வதி
நியமம்—விதி, கடைத்தெரு
நிர்த்தம்—நடனம்
நிர்ப்பாக்கியம்—பேறின்மை,
பாக்கியம் இல்லாமை
நிர்ப்பாக்கியன்—துரதிர்ஷ்டசாலி,
பாக்கியமற்றவன்
நிர்மோடர்—நிர்மூடர்—முழுமூடர்
நிர்வாண சித்திரன்—சிவன் 3553
நிரை—வரிசை, ஒழுங்கு
நிறை—உறுதி, சத்தியம், கற்பு
நீசன்—இழிந்தோன்
நீணிலம்—பூமி
நீதம்—நீதி, தகுதியானது, பாக்கியம்
நீர்—தண்ணீர்
நீலகண்டன்—சிவன்
நீலகண்டி—துர்க்கை
நீலா விநோத நடநித்தன்—சிவன்
4198
நீலி—துர்க்கை, பார்வதி
நீலி—கொடியவள்
நீறு—திருநீறு—விபூதி
நுங்கள்—உங்கள்
நுதல்—நெற்றி
நூபுரம்—பாத கிண்கிணி, சிலம்பு
நெட்டாந்திரம் 1578
நெட்டூரம்—வஞ்சகம்
நெடுங்குழலாள்—நெடிய கூந்தலை
உடைய பெண்
நெடுமாலவன்—திருமால்
நெத்தி—நெற்றி
நெத்திச்சுட்டி—நெற்றிச்சுட்டி—
மகளிரும் குழந்தைகளும் அணியும்
நெற்றியணி வகை
நெளி—வளைந்த விரலணி வகை

நேத்தி—நேர்த்தி
நேமித்து (வி) 379
நேயம்—அன்பு, நன்மை, பக்தி
நேரிசம்—எறிபடை, அம்புவகை
நேரிழை—பெண்
நொங்குதல்—மெலிதல்
நொறம்பம்—எளிமை, நுண்மை,
நுட்பம் 474
பக்கல்—பக்கம்
பகலவன்—சூரியன்
பச்சடம்-பச்சவடம்-மேற்போர்வை,
விரிப்பு திரை முதலியவற்றுக்குப்
பயன்படும் நீண்டசீலை 1955
பச்சி-பட்சி-பறவை
பச்சை நெடுமால்—திருமால்
பசாசு-பிசாசு-பேய்
பஞ்சாட்சரம்-நமசிவாய என்னும்
ஐந்தெழுத்துகளாலான சிவ
பிரானை அதிதெய்வமாகக்
கொண்ட மந்திரம்
பட்சி—பறவை
பண்டு-பழைமை, முற்காலம்
பண்ணி—பன்றி
பணி—பாம்பு, ஆபரணம்
பணிலம்—சங்கு வி 44
பத்தி-பக்தி-அன்பு
பத்மசரணம்-தாமரை மலர் போன்ற
பாதம்
பத்மர்–தாமரை
பத்மமுகம்-தாமரை போன்ற முகம்
பதக்கன்—பதக்கம்
பதம்-பாதம்
பதமை-மென்மை, அமைதி, இணக்கம்
பதி—இடம், நாடு, தலைவன்
பந்தம்-உறவு, தொடர்பு
பந்தனம் வி 128
பய்யல்—பையல்
பயத்தங்காய்—பயற்றங்காய்

பயின்ற—'பழகிய' எனும் பொருளிலும் 'பயந்த' (ஈன்ற, ஈந்த, நல்கிய) எனும் பொருளிலும் ஆளப் பெற்றுள்ளது
பரடு—கால்கரண்டை
பரதவித்தல்—பரிதவித்தல்
பரம்—மேலுலகம்
பரம்படித்தல்—பரம்புச் சட்டத்தால் நிலத்தைச் சமப்படுத்தல்
பரமன்—முதற்கடவுள்
பரவு-தல்—வழிபடுதல்
பரன்—கடவுள்
பராக்கு—எச்சரிக்கையைக் குறிக்கும் சொல் 2335
பராசரர் 1530
பராபரம்—பரம்பொருள், இறைவன்
பராபரை—சிவசக்தி
பரி—குதிரை
பரிதாபம்—துன்பம்
பரிதானம்—கைக்கூலி, இலஞ்சம்
பரிபாலனை—ஆளுகை, அருளுதல், பாதுகாத்தல்
பரிபுரம்—காற்சிலம்பு
பரிய—பெரிய (பரியதொரு—பெரியதொரு)
பரியாளர்—குதிரை வீரர்
பருசங்கு—பெரிய சங்கு
பருதி—சூரியன்
பறை—பார்வதி
பறையாள்—பார்வதி
பறையிடத்தாய்—'பார்வதியை இடப்பக்கம் கொண்ட சிவனே!' என விளித்தல்
பல்லியம்—பலவகை இசைக் கருவிகள்
பலாபலன்—ஊதியமும் இழப்பும், இலாப நட்டம்
பவிசு—மதிப்பு, செல்வம்
பள்ளிகொள்ளுதல்—துயிலுதல்
பளிங்கவன்—சுக்கிரன்
பளிங்கு—சுக்கிரன்
பற்பசரணம்—பத்மசரணம்—தாமரை மலர் போன்ற பாதம்

பறையவந்த—சொல்லவந்த 4038
பனிதம் 422
பனிநீர்—பன்னீர்—நறுமணநீர்
பாகர்—யானை, குதிரை, தேர் முதலியவற்றை நடத்துவோர்
பாங்கியர்—தோழியர்
பாசம்—பாசக்கயிறு—சுருக்குக்கயிறு
பாசாங்கு—போலி நடிப்பு, வஞ்சகம்
பாஷை—பாஷை, மொழி, பேச்சு, ஆணை
பாடகம்—மகளிர் பாத அணி
பாண்டி—பல்லாங்குழிப் பலகை, சிறுபிள்ளை விளையாட்டு
பாணம்—அம்பு
பாணி—தண்ணீர், கை
பாதகன்—பெரும்பாவஞ் செய்தோன்
பாம்பணிவோன்—சிவன்
பாயல்—படுக்கை
பாயிரனார் 3783
பார்—உலகம், நிலம், நாடு
பார்க்கவன்—பிருகுவின் வழித் தோன்றலான சுக்கிரன்
பார்ப்பினி—பார்ப்பனி—பார்ப்பன குலத்துப் பெண்
பார்மகள்—நிலமகள், பூமாதேவி
பாரி—மனைவி, பார்வதி
பாரிசம்—பக்கம், திசை
பாரியிடச்சொல்லி (வி)—பரக்கக் கூறச்சொல்லி, பரவலாகச் சொல்லச் சொல்லி
பாரூர்வ—தரையில் ஊர்வன 2105
பாலகன்—சிறுவன்
பாலர்—சிறுவர்

பாலன்—மகன்
பாலு—பால் 1943
பாவலர்—கவிஞர்
பாவினை—பாவனை—நடத்தை—நடிப்பு
பாவை—பெண், பொம்மை
பாளிதம்—சோறு, பாற்சோறு, சந்தனம்
பானு—சூரியன்
பானுகுலம்—சூரியகுலம்
பிங்கலை—பார்வதி
பிச்சி—சிறு செண்பகம், ஒரு பூ வகை
பிசகு—தவறு
பிஞ்சு (வி)—பிய்ந்து—கிழிந்து, பிரிந்து, சிதைந்து
பிஞ்ஞகனார்—அழிப்பவனான சிவன்
பிடரி—புறங்கழுத்து
பிடி—பெண் யானை
பிண்டி—அசோக மலர்
பிணி—நோய், கட்டு, துன்பம்
பித்தன்—சிவன்
பிதா—தந்தை
பிரசண்ட வாயு—கடுங்காற்று
பிரசம் 2780
பிரட்டி (வி)—புரட்டி
பிரட்டு—புரட்டு
பிரணவம்—ஓங்கார மந்திரம்
பிரதாபம்—வீரம், பெருமை
பிரவை—பிரபை—ஒளி
பிராமணியாள்—பிராமணப் பெண்
பிரான்—தலைவன், கடவுள்
பிலம்-பாதாளம், குகை
பிலம்—பலம் 2117
பிள்கும் இலை 3193
பிளவைக்கல்—பிளக்கப்பட்ட துண்டுக் கற்கள்
பிறங்குதல்—விளங்குதல்
பிறசண்ட வாயு—கடுங்காற்று, வேகமான காற்று
பிறா—புறா
பின்னை- பிறகு
பீலி—மயில்தோகை
பீறல்—கந்தை, கிழிசல்
புகர்—சுக்கிரன், ஒளி
புகர்நிறம்—கபில நிறம், கருமை கலந்த பொன்மை நிறம்
புகரோன்—சுக்கிரன்
புங்கவன்—சிறந்தோன், குரு, தேவன்
புண்டுவிழுதல் வி 75
புத்திரன்—மகன்
புத்திரி—மகள்
புயம்—தோள்
புரந்தரன்—இந்திரன்
புரம்—(சிவன் எரித்த) திரிபுரம்
புரவலனார்—அரசர்
புராந்தகன்—முப்புரமெரித்த சிவன்
புருஷாமிருகம்—மனிதமுகம் கொண்ட விலங்கு வகை
புல்குதல்—புணர்தல், அணைதல்
புல்லர்—கீழ்மக்கள்
புலவி—ஊடல்
புலித்தண்டு 2050
புலை—இழிவு, கீழ்மகன்

புலைச்சி—புலைப்பெண், கீழ்மகள்
புலையன்—கீழ்மகன்
புவனம்—உலகம், பூமி
புழக்கடை—புழைக்கடை, வீட்டின் பின் வாயிற்புறம் 3886
புழுகு—ஒரு மணப்பண்ட வகை
புள்—பறவை
புளகம்—மயிர்க்குச்செறிதல், மகிழ்ச்சி
புளை—பிழை 2533
புறவடி—பாதத்தின் மேற்புறம்

புன்மை—இழிவு, குற்றம், துன்பம்
புன்னை—புன்னைமரம்
புனம்—மலையைச்சார்ந்த கொல்லை
புனல்—தண்ணீர்
புனவிறகு—புனத்தில் கிடைக்கும் விறகு
பூசல்—போர், வருத்தம் 1242
பூசணம்—ஆபரணம்
பூசுரர்—பார்ப்பனர்
பூட்டை—சோளக்கதிர் 1791
பூடுகள்—பூண்டுகள், சிறு செடிகள்
பூண்-அணி
பூணி 4157 (பிராமணன்)
பூணிகுலத்தோன் 3682 (பிராமண குலத்தோன்)
பூதகணம்-பூதக் கூட்டம்
பூதலம்-பூமி
பூதி-திருநீறு
பூந்து (வி)-புகுந்து
பூபாலன்-அரசன்
பூமாது-பூமாதேவி-நிலமகள்
பூமாரி-மலர்மழை
பூரணசந்திரன்-முழுநிலவு
பூரணம்-முழுமை
பூராயம்-ஆராய்ச்சி
பூரிகை-ஊதுகுழல்
பூரைபூரை என்று-போதும்போதும் என்று வி 137
பூலோகம்-பூமி
பூவை-ஒரு பறவை வகை, நாகணவாய்ப்புள், பெண்
பெத்தருளும்-பெற்றருளும்
பெத்து-பெற்று
பெதும்பை-மகளிரின் எழுபருவ நிலைகளுள் ஒன்று. பெண். (எட்டு முதல் பதினொரு வயது வரையுள்ள பெண்)
பெம்மான்-பெருமான், கடவுள்
பெருமான்-அரசன், தலைவன், கடவுள், பெருமையிற் சிறந்தவர்
பேச்சி-பேய்ச்சி-பெண்பேய், பேய் பிடித்தவள்
பேடை-பறவையின் பெண்
பேதகம்-வஞ்சகம், மன வேறுபாடு
பேதை-அறிவிலி, பெண், மகளிரின் எழுபருவ நிலைகளுள் ஒன்று (ஐந்து வயது முதல் ஏழு வயது வரையுள்ள பெண்)
பேரிளம்பெண்-மகளிரின் எழுபருவ நிலைகளுள் ஒன்று (முப்பத்திரண்டு வயதுக்குமேல் நாற்பது வயது வரையுள்ள பெண்)
பைந்தொடி-பொன்வளையல் அணிந்த பெண், பெண்
பையரவு-படத்தையுடைய பாம்பு
பையல்-பையன்
பொக்கிசம்-கருவூலம், செல்வக் களஞ்சியம்
பொசித்தல்-புசித்தல் 3141
பொசித்து (வி)-புசித்து
பொட்டி-பெட்டி
பொத்தகம்-மயிலிறகு 468
பொய்கை-இயற்கையான நீர்நிலை
பொருப்பு-மலை
பொல்லித்தேள் 3257
பொழில்-சோலை
பொற்பு-அழகு, பொலிவு
போக போக்கியம்-அனுபவப் பொருள் 1469
போசனம்-உணவு, சாப்பாடு
போதகம்-நல்லுரை, சொல்லிக் கொடுத்த புத்தி
போதம்-அறிவு, ஞானம்
போது-மலர், மொட்டு, வேளை பொழுது
மகம்-யாகம்

மகவு-குழந்தை, பிள்ளை
மகாதேவர்-சிவன்
மங்கலநாண்-தாலி
மங்கலப்பூண்-தாலி
மங்கலியம்-தாலி
மங்கிலியம்-தாலி
மங்கை-பெண், மகளிரின் எழுபருவ நிலைகளுள் ஒன்று (பன்னிரண்டு முதல் பதின்மூன்று வயது வரையுள்ள பெண்)
மச்சம்-மீன்
மஞ்சு-மேகம்
மஞ்ஞை-மயில்
மட்டவிழுங் கோதைபங்கன்-சிவன்
மட்டு-தேன், மணம்
மட்பாவை 401
மடக்கன்னியர்-இளங்கன்னியர்
மடக்கொடி-இளம்பெண்
மடந்தை-பெண், மகளிரின் எழுபருவ நிலைகளுள் ஒன்று (பதினான்கு முதல் பத்தொன்பது வயது வரையுள்ள பெண்)
மடமயில்-இளமயில் போன்ற பெண்
மடவார்-பெண்டிர்
மடவியர்-பெண்கள்
மண்டகப் 3143
மண்டலம்-நாடு
மண்டலீகர்-அரசர்
மணச்சாவடி 2792
மணவாளர்-கணவர்
மத்த-மற்ற
மத்தகம்-யானையின் தலைநெற்றி, உச்சி
மத்தோர்-மற்றோர்-மற்று ஓர்
மதகளிறு-மத யானை
மதலை-குழந்தை
மதன்-மன்மதன்
மதி-நிலவு, அறிவு
மதிதயன்-சந்திரமதியின் தந்தை
மதுரை 48
மதையானை-மதயானை
மந்தி-பெண்குரங்கு
மந்திரகிரி-மந்தரமலை
மய்யல்-மையல்-காம மயக்கம், ஆசை
மயல்-மயக்கம்
மயானம்-சுடுகாடு
மயிடாசுரன்-மகிடாசுரன்
மயிராத்தி (வி)-கூந்தல் உலர்த்தி
மரு-மணம்
மருகன்-மருமகன்
மருங்கு-பெண்ணின் இடை
மருங்குல்-இடை, இடுப்பு
மருப்பு-யானைத் தந்தம், கொம்பு
மருவலர்-பகைவர்
மருவலர்தம் கேசரி-பகைவர்களைச் சிங்கம்போல அச்சுறுத்துபவன்
மருவு-தல்-கலந்திருத்தல், தழுவுதல், பொருந்துதல்
மருள்-மயக்கம்
மரை-தாமரை, ஒரு மான் வகை, காட்டுப்பசு
மல்லாரி-பறைவகை, பண்வகை 5341
மலங்கல்-மனங்கலங்கல், பிறழ்தல்
மலைப்பக்கல் 1883
(மலைப்பக்கம்-மலையின் சரிவான பாகம்)
மழவிடை அண்ணல்-சிவன்
மழு-கோடரி
மள்ளர்-உழவர்
மள்ளியர்-உழத்தியர்
மழுக்கி (வி)-மழுக்கி-நெல்லைக் குற்றியெடுத்து
மறலி-எமன்
மறி-மான்
மறை-வேதம்
மறையோன்-பார்ப்பனன்

மன்-மன்னன், தலைவன்
மன்மதவேள்-மன்மதன்
மன்று-மன்றம்
மன்னர்கேசரி-மன்னர்களுள் சிங்கம் போன்றவன்
மனவ-'மன்னவ' என்பதன் தொகுத்தல் விகாரம்
மனு-மனிதன்
மனையாள்-மனைவி
மா-பெரிய, மான், விலங்கு, மாமரம்
மாசூலி-பெரிய சூலாயுதத்தை உடைய காளி
மாடை-பொன்
மாணிக்கவாசகர் 47
மாத்தலர்-மாற்றலர்-பகைவர்
மாதவர்கள்-முனிவர்கள்
மாதளப்பூ-மாதுளம்பூ
மாதா-தாய்
மாது-பெண், பார்வதி
மாதுபங்கன்-சிவன்
மாயவன்-திருமால்
மாயன்-திருமால்
மாயோன்-திருமால்
மார்க்கண்டன் 5110
மார்க்கம்-வழி
மார்த்தாண்டன்-சூரியன்
மாரன்-மன்மதன்
மாராடி 1900
மாரி-மழை
மால்-திருமால், மயக்கம்
மாவுரி-விலங்கின் தோல்
மாளல்-இறத்தல்
மாறன்-பாண்டியன்
மாறாட்டம்-தடுமாற்றம்
மாறு-மிலாறு-வளார்-இளங்கொம்பு
மான் மழுச்கையாளன்-சிவன்
மானம்-வானம் 2131
மிசை-மேலிடம், உயர்ச்சி, மேடு 1815
மிண்டு-துடுக்கு, செருக்கிக் கூறும் மொழி, வலிமை, துணிவு, அறிந்து செய்யும் குற்றம்
மிருகம்-விலங்கு
மின்-மின்னல்
மின்னார்-பெண்கள்
மீன்-விண்மீன், நீரில் வாழும் உயிர்
முக்கண்ணர்-சிவபெருமான்
முகில்-மேகம்
முகிவு-முடிவு 4876
முகிழ்ந்தம்-முகூர்த்தம்-நல்லநேரம்
முகை-அரும்பு, மொட்டு
முண்டகம்-தாமரை
முத்தம்-பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பருவங்களுள் ஒன்று (குழந்தையை முத்தம் தரும்படி கேட்கும் பருவம்), முற்றம்
முத்தி-வீடுபேறு
முத்திரிக்கோல் 420
முந்நூல்-முப்புரிநூல், அந்தணர் முதலானோர் அணியும் பூணூல்
முப்புரத்தோர்-திரிபுரங்களில் இருந்த அரக்கர்
முப்புரம்-திரிபுரங்களான பொன், வெள்ளி இரும்பு இவற்றாலான கோட்டைகள்
முப்புரிநூல்-பூணூல்
மும்மாரி-மூன்று மழை
மும்முயிரும்-மூவுயிரும்
முயங்குதல்-தழுவுதல், புணர்தல்
முருக்கிதழ் 2934
முருகு-காதணிகளுள் ஒன்று
முழஞ்சி-முழைஞ்சு-மலைக்குகை
முளா-முள்ளம்பன்றி
முறி-பத்திரம், ஓலையில் எழுதிய பற்றுச்சீட்டு
முறைமை-ஒழுங்கு
முஞ்சி-விலங்கின் முகம்

பூதண்டம்-பிரம்மாண்டம், பிரம அண்டத்தின் முகடு 1550
மூப்பு-முதுமை
மூரி-வலிமை, பெருமை
மூவைஞ்சு-பதினைந்து
மெய்-உடல், உண்மை
மெய்ப்பவதி-மெய்ப்பு அவதி
அவதி-எல்லை, தவணை, காலம்
மெல்லி-காளி, பார்வதி, பெண்
மெல்லிகோட்டம்-காளிகோட்டம்
மெல்லியர்-பெண்டிர்
மெல்லியல்-பெண்
மெழுகி (வி)-தரையைச் சாணமிட்டுத் தூய்மை செய்து
மெழுகு-அரக்கு, மெழுகு(வர்த்தி)
மேகலை-மகளிர் இடையிலணியும் ஏழு கோவையுள்ள அணிவகை, ஆடை
மேதி-எருமை
மேதினி-பூமி
மேரு-மலை
மேருகிரி-மேருமலை
மேவி (வி)-பொருந்தி
மேனி-உடம்பு
மைந்தன்-மகன்
மையல்-காம மயக்கம், பித்து, ஆசை
மொய்குழல்-பெண்
மொழி-சொல்
மோகத்தானம் 2302
மோகம்-ஆசை, காமமயக்கம், விருப்பம், வேட்கை
மோகனகம் 1183
மோட்சம்-வீடு பேறு
யமன்-பாம்பின் நான்கு பற்களுள் ஒன்று, எமன்
யாகம்-வேள்வி
யுகம்-பெரிய கால அளவு, கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நால்வகைப்பட்ட யுகங்கள்
யூகம்-ஊகம்-கருங்குரங்கு, பெண் குரங்கு
யோனி-பெண்குறி
யோனிக்குண்ணிடை வி 131
ரட்சித்தல்-காப்பாற்றல்
ரணவீரன்-போர்வீரன்
ரத்தினச்சேர்வை-ரத்தினம் பதிப்பிக் கப்பெற்ற மகளிர் காதணிவகை
ரதபாகர்-தேர்ப்பாகர்
ரதி-மன்மதனின் மனைவி
ராட்சதை-அரக்கி
ரிசி-ரிஷி-முனிவர்
ரூபம்-உருவம்
ரோசம்-சினம்
ரோம மாரிசி 1532
லட்சணம்-ஒழுங்கு
லாகடம் 163
லெட்சிக்கும்-இரட்சிக்கும்-காப் பாற்றும்
லோகதாட்சணன்-அரிச்சந்திரனின் மகன் லோகதாட்சன்
வக்கிரம்-கொடுமை, கோணல்வழி, [வஞ்சனை
வங்கம் 1097
வங்காரக்கேடையம் 1318
வங்காரம்-பொன்
வங்கிசம்-வம்சம்
வசிட்டர்-வசிட்டர்-அரிச்சந்திரனின் குருநாதரான முனிவர்
வசுக்கள்-எண்வகை வசுக்கள்
வஞ்சிக்கொம்பு-ஒரு கொடி வகை
வடபத்திரம்-ஆலிலை
வடபாரிசம்-வடதிசை, வடக்குப் பக்கம்
வடம்-கனமான கயிறு, மணிவடம்
வடமரம்-ஆலமரம்
வண்டார் குழலியர்-பெண்கள்
வண்மை-வளப்பம், ஈகை, வாய்மை, வலிமை, அழகு

வணிகேசர்-பெருவணிகர், வணிகருள் செல்வத்தால் தலைமை வாய்ந்தோர்
வதனம்-முகம்
வதிட்டர்-வசிஷ்ட முனிவர்
வதுவை-திருமணம், திருமணச் சடங்கு
வந்தனை-வணக்கம்
வரம்பி-வம்பு புரியும் பெண்
வர்ணம்-நிறம், வண்ணம்
வராகம்-பன்றி
வராகன்-பன்றி
வரால்-ஒரு மீன் வகை
வரிசம்-வருடம், ஆண்டு
வரிசை-ஒழுங்கு, பாராட்டு, பரிசு, அரசர் முதலியோரால் பெறுஞ் சிறப்பு, ஊர் வரி வகை (சுடுகாட்டில் பிணமெரிக்கத் தரும் வரி)
வருக்கை-பலா
வருக்கைக் கனி-பலாப்பழம்
வருக்கை மரம்-பலாமரம்
வருணன்-மழைக்கடவுள்
வரை-மலை
வரைப்புனம்-மலையைச் சார்ந்த கொல்லை
வல்லபம்-வலிமை, திறமை, அருஞ் செயல்
வல்லாளன்-வலிமையுள்ளவன், திறமையுடையவன்
வல்லி-பெண்
வல்லியர்-பெண்கள்
வல்லையம்-ஈட்டிவகை
வலவீரர் 2021 (வலம்-வெற்றி)
வலாடர் வி 68
வலுமை-பலம்
வள்ளி-முருகனின் மனைவி
வள்ளிபங்கன்-முருகன்
வள்ளுகிர்-கூரிய நகம்
வள்ளை-ஒரு கொடி வகை 3627
வளரி 1893, 4514
வளரிக்கம்பு 4514
வளி-காற்று
வற்சம் 1900
வன்பு-வம்பு
வன்னம்-அழகு
வனம்-காடு
வனிதப்பெண்கள்-சிறந்த, அழகிய பெண்கள்
வனிதம்-சிறப்பு, மேன்மை
வஸ்திரம்-ஆடை
வாகனம்-ஊர்தி
வாகுகேசரி வி 91
வாசவர்கோன்-இந்திரன்
வாசவன்-இந்திரன்
வாசி-தகுதி, குணம், வேறுபாடு 1676
வாடை-குளிர்காற்று
வாடை தட்டி (வி) 1925
வாணுதலாள்-ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்
வாணுதலி-பெண்
வாதை-துன்பம்
வாய்க்கரிசி-பிணத்தைப் புதைக்கு முன் அல்லது எரிக்குமுன் அதன் வாயில் இடும் அரிசி
வாயம் 4366
வார்-தோல் வார் வி 67
வாரணம்-யானை
வாரானை—பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பருவங்களுள் ஒன்று (குழந்தையைத் தம்மிடம் வருக என்று தாய் முதலியோர் அழைப்பதைக் கூறும் பருவம்)
வாரி-கடல்
வாலப் பிறைநுதலார்-இளம்பிறை போன்ற நெற்றியையுடைய பெண்கள்.

வாலைக் கடைசியர்-இளைய
" முத்தியர்
வாவி-நீர்நிலை, குளம்
வாளரி-ஆயுத வகை வி 69
வாளி-அம்பு
வாளிதங்கள் 414
வாளை-ஒரு மீன் வகை
விகற்பம்-வேறுபாடு, மனமாறுபாடு
விச்சித்திரம்-விசித்திரம் 1063
விசாலாட்சி-காசி நகரில் இறைவ
னுடன் வீற்றிருக்கும் இறைவியின்
பெயர்
விசுவநாதனார்-காசி நகரில் கோயில்
கொண்டுள்ள இறைவனின்
(சிவனின்) பெயர்
விசுவாமித்திரன்-அரிச்சந்திரனைச்
சத்திய நெறியினின்று வழுவச்
செய்ய முயலும் முனிவர்
விசுவாமுத்திரன்-விசுவாமித்திரன்
விட்டை-விலங்குகளின் மலம்
விடம்-விஷம்
விடை-காளைமாடு
விடைதனில் ஏறும் அண்ணல்-சிவன்
விடை வாகனம்-ரிஷபவாகனம், இடப
வாகனம்
விண்-வானம்
விண்டு-விஷ்ணு, திருமால்
விண்டுலகம்-விஷ்ணுலோகம்,
வைகுண்டம்
விண்ணோர்-விண்ணுலகத்தோர்
வித்த-விற்ற
வித்தகம்-பெருமை, நன்மை, வியப்பு,
அறிவு, பொன்
வித்து-விதை
வித்தியதர முனிவன் 39
விந்தரி 3550
விந்தை-பார்வதி, அதிசயம்
விபுதானம் வி 112
விம்மல்-ஏக்கம், கலக்கம்
விமலன்-குற்றமற்றவன், கடவுள்
வியாசர் 1529
விரகம்-காதலர்க்குப் பிரிவாலுண்
டாகும் துன்பம், காமம்
விரசெறியும் 2586
விருது-பட்டம், வெற்றிச்சின்னம்
விரை-விதை
விரைக்கோட்டை-விதைப்பதற்குரிய
தானியத்தை உள்ளடக்கிச்
சுற்றிக்கட்டிய வைக்கோற் கட்டு
வில்லாளர்-வில்வீரர்
வில்லி-மன்மதன்
வில்லுக்குதை-விற்குதை-அம்பு
விலாளன்-விலாளம்-பூனை வி 62
விளா-விளாமரம்
விறல்-வெற்றி, வலிமை, வீரம்
விறல்விணி 4026
வீரகவிராயன்-'அரிச்சந்திர புராணம்'
நூலை இயற்றிய கவிஞரின் பெயர்
வீரசிகாமணி 3453
வீரபாகு,வீரவாகு-அரிச்சந்திரனை
அடிமைகொண்ட புலையனின்
பெயர்
வீரி-பார்வதி
வீலித்து (வி) 433
வெகுமானம்-வெகுமதி, நன்கொடை
வெண்கரடம்-மதயானை
வெண்டையம்-குதிரை முதலியவற்
றின் காற்சலங்கை
வெண்டொலி 4252
வெண்ணீறு-திருநீறு

வெத்தி-வெற்றி
வெப்பு-கொடுமை, ஆசை, சினம்
வெய்யவன்-சூரியன்
வெய்யோன்-சூரியன்
வெருவி (வி)-அஞ்சி
வெவ்வாலமுது-கொடிய ஆலமும் (நஞ்சு) அமுதும்
வெள்ளம்-தண்ணீர்ப் பெருக்கு, ஒரு பேரெண்
வெள்ளி-சுக்கிரன்
வெள்ளிமலை-கயிலை மலை
வெள்ளை நிறத்து அஞ்சுகம்-சரசுவதி
வெள்ளை நீறு-வெண்ணீறு-விபூதி
வெற்பு-மலை
வென்றி-வெற்றி
வென்னி-வெந்நீர்
வேங்கை-புலி
வேணி-கூந்தல், சடை
வேத்தடிகள்-வேற்றடிகள்-வேற்று அடிகள் (பாதச்சுவடுகள்)
வேத்து (வி)-வேர்த்து
வேதண்டம்-மலை
வேதம் பறைந்து (வி)-வேதம் சொல்லி **5422**
வேத வரதாப நாயகம் ***2491***
வேத வாதர் ***1596***
வேதன்-பிரமன், முனிவர், கடவுள், பார்ப்பனர்
வேதாகமங்கள்-வேதமும் ஆகமமும்
வேதியர்-மறையோர், பார்ப்பனர்
வேந்தன்-அரசன்
வேய்-மூங்கில்
வேலாயுதன்-முருகன்
வேலை-கடல்
வேழம்-யானை
வேள்-மன்மதன், முருகன்
வேள்வி-யாகம்
வைகுண்டம்-வைகுந்தம், திருமாலுக் குரிய உலகம்
வைப்பு-பாதுகாப்புநிதி ***1866***
வையகம்-பூமி
றாக்கன்-ராக்கன்-இவ்வம்மானையை இயற்றிய புலவரின் தந்தை பெயர் **43**

# துணைநூற் பட்டியல்


**அரிச்சந்திர புராணம்** — மூலமும் உரையும்,
கழக வெளியீடு, சென்னை, **1976.**

**அரிச்சந்திர விலாசம்,** பழவேற்காடு இரங்கப்பிள்ளை
கவிராயர் இயற்றியது, கல்வி விளக்க
அச்சுக்கூடம், சென்னை, **1870.**

**அரிச்சந்திர வெண்பா,** மு. இராகவையங்கார் பதிப்பித்தது,
திருவனந்தபுரம் பல்கலைக்கழக வெளியீடு,
திருவனந்தபுரம், **1949.**

**அரிச்சந்திரன் அம்மானை,** மிதிலைப்பட்டி
சண்முகக் கவிராஜர் இயற்றியது,
ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடம்
சென்னை, **1912.**

**அரிச்சந்திரா,** எஸ். பவானந்தம் பிள்ளை,
எஸ். பி. சி. கே. பிரஸ், **1910.**

**அறுவகை இலக்கணம்,** வண்ணச்சரபம்
தண்டபாணி சுவாமிகள் இயற்றியது,
புலவர் ப. வெ. நாகராஜனின் உரைப்பதிப்பு,
தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு,
தஞ்சாவூர், **1991.**

**ஆசிரிய நிகண்டு** (முதல் தொகுதி), ஆண்டிப் புலவர் இயற்றியது, புலவர் வி. சொக்கலிங்கம் பதிப்பித்தது, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1975.

**ஆத்திசூடி வெண்பா,** இராமபாரதியாரால் இயற்றப்பட்டது, கோன்னூர் மாணிக்க முதலியாரால் மனோன்மணி விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, சுபாநு ஆண்டு.

**இரங்கேச வெண்பா** என்னும் நீதிசூடாமணி, பிறைசைச் சாந்தக்கவிராயர் இயற்றியது, கழகவெளியீடு, சென்னை, 1966.

**கம்பராமாயணம்,** கம்பன் கழகம், சென்னை, 1976.

**குமரேச சதகம், பன்னிரு சதகத் திரட்டு,** B. இரத்தின நாயகர் ஸன்ஸ், சென்னை.

**சத்திய சோதனை,** மகாத்மா காந்தி, தமிழாக்கம்: ரா. வேங்கடராஜுலு காந்திய இலக்கியச் சங்கம், மதுரை, 8-ஆம் பதிப்பு, 1984.

**சதுரகராதி,** வீரமாமுனிவர் ,வேதவிநாயகர் அச்சியந்திர சாலை, சென்னை, 1894.

**சந்திரஹரி**, *ராவ்சாஹெப் பம்மல் சம்பந்த முதலியார், டௌடன் கம்பெனியாரின் 'பியர்லெஸ்' அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1923.*

**சூடாமணி நிகண்டு**, ஆறுமுக நாவலர் பரிசோதித்தது, வித்தியாநுபாலன யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது, சென்னை, 1957.

**செயங்கொண்டார் வழக்கம்**, *அரசுக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1955.*

**சேந்தன் திவாகரம்**, *திவாகர முனிவர் இயற்றியது, கழகம், சென்னை, 1958.*

**தமிழ் இலக்கிய வரலாறு — பதினைந்தாம் நூற்றாண்டு**, *மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், மாயூரம், 1969.*

**தமிழ் சினிமாவின் கதை**, *அறந்தை நாராயணன்,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1981.

**தமிழ்நூல் விவர அட்டவணை**, *முதல் தொகுதியின் ஐந்து பகுதிகளும் (1961 — 1964) இரண்டாம் தொகுதியின் முதற்பகுதியும் (1965), தமிழ்நாடு அரசினர் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற வெளியீடு, சென்னை.*

**தமிழ்ப் பழமொழிகள்**, தொகுப்பாசிரியர் *கி. வா. ஜகந்நாதன், காந்தமலை, சென்னை, 1988.*

**தமிழ்ப்புலவர் அகராதி (புலவர் அகரவரிசை)** *ந. சி. கந்தையா பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1952.*

**தமிழ்மொழியகராதி**, *தமிழ்-தமிழ் அகராதி, நா. கதிரைவேற்பிள்ளை,* காஞ்சி நாகலிங்க முதலியார் ஆறாம் பதிப்பு, **Asian Educational Services, New Delhi, Madras, 1990.**

**திருவாப்பனூர்ப் புராணம்**, திருப்பூவணம்
கந்தசாமிப் புலவர் இயற்றியது,
சென்னப்பட்டணம் வித்தியாநுபாலன
யந்திரசாலையில் அச்சிற்
பதிப்பிக்கப்பட்டது, 1877.

**திருவாரூர்ப் புராணம்**, சம்பந்த முனிவர்
மொழிபெயர்த்து அருளியது,
கலாரத்நாகர அச்சுக்கூடம்,
சென்னை, ஜய ஆண்டு.

**திருவேங்கட சதகம், பன்னிரு சதகத்திரட்டு,**
B. இரத்தின நாயகர் ஸன்ஸ், சென்னை.

**நாமதீபநிகண்டு**, கல்லிடை நகர்
சிவசுப்பிரமணியக் கவிராயர் இயற்றியது,
வையாபுரிப் பிள்ளையின் புத்துரையுடன் கூடிய பதிப்பு,
தமிழ்ப்பல்கலைக்கழக மறுபதிப்பு, தஞ்சாவூர், 1985.
மூலப்பதிப்பு 1930.

**பஞ்சதந்திரப்பாடல்**, வீரமார்த்தாண்டதேவர் இயற்றியது,
மே. வீ. வே. பதிப்பித்தது,
புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.,
சென்னை, 1958.

**பிங்கல நிகண்டு**, கழக வெளியீடு, சென்னை, 1968.

**பொதிகை நிகண்டு**, சாமிநாத கவிராயர் இயற்றியது,
வையாபுரிப்பிள்ளை பரிசோதித்துப் பதிப்பித்தது,
1934.

**மார்க்கண்டேய புராணம்**, தொழுவூர் வேலாயுத முதலியார்
மொழிபெயர்த்தது, சென்னை-சூளை
ஆயுர்வேத அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது,
இரண்டாம் பதிப்பு, 1909.

**வடமொழி நூல் வரலாறு**, பி. எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரி,
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு,
அண்ணாமலை நகர், 1946.

**வால்மீகி ராமாயணம்—பாலகாண்டம்,**
Text in Sanskrit with word for word Tamil Translation in Prose order by Late Rao Sahib P. S. Krishnaswami Iyer, Mylapore, Sri Ram Publishers, Madras, Fourth Edition. 1974.

**ஹரிச்சந்திரன்,** *ராவ்பஹதூர் ப. சம்பந்த முதலியார் இயற்றியது, சென்னை இந்தியா அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது, இரண்டாம் பதிப்பு, 1930.*

**ஸ்ரீதேவீபாகவத சாரம்,** *தமிழ் உரை : "அண்ணா", ஸ்ரீ ராமகிருஷ்ண மட வெளியீடு, சென்னை.*

**ஸ்ரீதேவீபாகவதம்,** (*தொகுதி 1, 2*)
*திருவனந்தபுரம் ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ண ஐயர் தொகுத்தது, ஸ்ரீ வாணி விலாஸ் பப்ளிஷிங் ஹவுஸ், புத்தன் சந்தை, திருவனந்தபுரம், 1953.*

**ஸ்ரீ மகாபாரதம் — ஸபாபர்வம்,**
*ஸ்ரீ உ. வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்றது. பதிப்பாசிரியர் : கும்பகோணம் ம. வீ. இராமானுஜாசாரியர், இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1924.*

**ஸ்ரீ மகாபாரதம் — வனபர்வம்** (*முதற்பாகம்*),
*ஸ்ரீ உ. வே. தட்டை V. ஸ்ரீநிவாஸாசார்யர் அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்றது, பதிப்பாசிரியர் : கும்பகோணம் ம. வீ. இராமானுஜாசாரியர், தி கேசரி பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை, 1930.*

**ஸ்ரீ ராமாயண தத்வார்த்த தீபிகை,**
*ஸ்ரீ உ. வே. C. R. ஸ்ரீநிவாஸய்யங்கார், தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை, 1963.*

**ஸ்ரீ விஷ்ணுபுராணம்,** *திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீநிவாசராகவாசாரியாரவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது, காலரத்நாகர அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, சென்னை.*

ஆங்கிலம்

**Arichandra,**
The Martyr of Truth, A Tamil Drama, Authorship attributed to Rangapillay of Palavercadu, Translated into English by Mut'u Coomara Swa'my Mudeliar, London, Smith Elder and co., 65, Cornhill, 1863.

**Rigveda Brahmanas,**
The Aitaraya and Kausitaki Brahmanas of the Rigveda, Translated from the original Sanskrit by Arthur Berriedale Keith, Motilal Banarasidass, Delhi, 1971.

**Siva Purana, Vol. 4,**
Translated by a Board of Scholars, Motilal Banarasidass, Delhi, First Edition, 1970.

**The Twentieth Century Tamil Dictionary,**
By P. Ramanathan (Two Volumes in one) Madras, 1909.

இதழ்

"வெளி" நாடக இதழ், மே—சூன் 1992,
கே. கே. நகர், சென்னை.
[கோட்டையூர் ரோஜா முத்தையா செட்டியார் அவர்கள் தயாரித்த நாடகநூற் பட்டியல் இடம்பெற்ற இதழ்]

**திரைப்படப் பாட்டுப்புத்தகம்,**
"**நீதிபதி**", சிவாஜி கொள்கைப் பாடல்கள்,
பிரண்ட்ஸ் ஆப்செட் காலண்டர்ஸ், சென்னை.

ஒலிநாடா

**அரிச்சந்திரா**, விரிவுரையாளர் :
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்,
ஆனந்தா கேசட்ஸ், சென்னை, 1994.